# Tamil Hymn No 1

## PRAISE THE LORD

பல்லவி

எப்போதும் நாதனை ஸ்தோத்திரி - நாள்
தப்பாமல் ஆண்டவன் பொற்பாதத்தைப் பணிந்து

அனுபல்லவி

தப்பான பாதைகளிற் சிக்காமல் நீ விலகி - எப்போ

சரணங்கள்

1. இப் பூதலத்தில் நீ மனுஜன்ம மாகினை
ஏதுக்கென் றுள்ளத்திலெண்ணிக்கையாய் நினை
அப்பா என்னப்பா வென்றழைக்கப் பிறந்தனை - எப்போ

2. சண்டாள னாகினை உன் தோஷம் நீங்கவே
சாயுச்ய வாழ்வுடன் சந்தோஷம் ஓங்கவே
மண்டல விண்டலன் உன்னைக் கைத் தாங்கவே - எப்போ

3. கிறிஸ்தேசு நாயகன் கிருபை உன் பூரணம்
கெம்பீரமாக நீ சொல் நாமோச்சாரணம்
பரிச்சேதம் ஜாலம் வேண்டாம் தாழ்மை முதற்காரணம் - எப்போ

4. வீட்டிலும், காட்டிலும், வெளியிலும், வழியிலும்,
பாட்டிலும், படிப்பிலும், தேட்டிலும், செழிப்பிலும்,
நாட்டிலும், நகரிலும், ஞான முயற்சியிலும் - எப்போ

5. தம்பூர், கின்னரங்கள், ஜாலர், வீணை, மிரு
தங்கம், தப்லாவுடன் சங்கீத நாதமாய்
அம்பல சித்தனை அன்போடு பாடி யாடி - எப்போ

6. துன்பங்கள் சூழினும் துக்கத்திலாழினும்
இன்பமறிந்திலேன் என்றே நீ தாழினும்
கண்பஞ்சடையச் சாவுக்கென்றே நீ வீழினும் - எப்போ

# Tamil Hymn No 2

## I WILL PRAISE HIM

பல்லவி

ஸ்தோத்திரிப்பேன் ஸ்தோத்திரிப்பேன் இயேசு தேவனை
என் ஜீவனுள்ள நாட்களெல்லாம் ஸ்தோத்திரிப்பேனே

சரணங்கள்

1. உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை
   இயேசுவின் நாமத்தினாலே செலுத்துகிறேன் யான் - ஸ்தோ

2. பாவக் கறை நீங்க என்னை முற்றிலுமாக – உம்
   சுத்தமுள்ள இரத்தத்திற்குள் தோய்த்ததினாலே - ஸ்தோ

3. என்னுடைய நோய்களை உம் காயங்களாலே
   என்றைக்குமாய்த் தீர்த்ததினால் ஸ்தோத்திரிப்பேன் யான் - ஸ்தோ

4. ஆகாயத்துப் பட்சிகளைப் போஷிக்கும் தேவன்
   தினமும் என்னைப் போஷிப்பதால் ஸ்தோத்திரிப்பேன் யான் -ஸ்தோ

5. நாளைத் தினம் ஊண் உடைக்காய் என் சிந்தைகளைக்
   கவலையற்ற தாக்கினதால் ஸ்தோத்திரிப்பேன் யான் - ஸ்தோ

6. சீக்கிரமாய் வந்திடுவேன் என்றுரைத்தோனை – அதி
   சீக்கிரமாய்க் காண்பதினால் ஸ்தோத்திரிப்பேன் யான் - ஸ்தோ

# Tamil Hymn No 3

## PRAISE HIM ALWAYS

பல்லவி
எந்நாளும் ஸ்துதிக்க வேணும் - நாதனை
எந்நாளும் ஸ்துதிக்க வேணும்

அனுபல்லவி
வந்தனம் பாடி மன்னன் முன் கூடி
மயக்கமகற்றி திரு முன்னில் - நன்றியுடனே - எந்

சரணங்கள்

1. ஆனந்தமாய்க் கூடுவோம் - பரனை வெகு
சத்தமாய்ப் பாடிடுவோம்
கீத கணம் தேடி நாதனை நாம் பாடி
நாதனாமவரின் திரு நாமமே கதியாய் நாடி - எந்

2. சர்வ வல்ல நாயகன் - அவர் நமது
நல்ல குண போதகன்
நிச்சயம் தாசர்க்குச் சித்தம் வெளியாக்கி
கஷ்டத்தில் நின்றவரை முற்றும் விடுவிப்பவரை - எந்

3. தம்மைப் போற்றித் துதிக்கும் - ஜனங்கள் பாரம்
தாமே சுமந்திடுவார்
ராஜாதி ராஜாவாய் என்றுமே வாழ்ந்திடுவார்
நன்றியோடே எல்லோர்களும் இயேசுவை வணங்கிடுவோம் -எந்

4. சிருஷ்டிகளின் நாதனே - ஜெயம் பெருகும்
தூதர்களின் ராஜனே
ஜீவனின் ஊற்றாமே ஜீவ லோக ஈசனே
ஜீவனளிக்கச் சொந்த ஜீவனைக் கொடுத்தவரை - எந்

5. தேவ மகிமைக்காய் நாம் - தொடர்ந்து செய்தால்
என்றும் திவ்யானந்தமாம்
உன்னதன் தன்னுடைய சந்நிதியில் நின்று நாம்
மன்னவனே புதுப்பாட்டு வந்தனங்களோடே நிற்போம் - எந்

# Tamil Hymn No 4

## PRAISES TO JESUS

பல்லவி

போற்றிடுவோம் போற்றிடுவோம் எங்கள் இரட்சகனை
வாழ்த்திடுவோம் வாழ்த்திடுவோம் நம்மை மீட்டவரை

சரணங்கள்

1. பாவ வேடம் பூண்டு வந்த பரலோக நாதனைப்
   பாவிகட்காய் ஜீவன் விட்ட பரிசுத்த ராஜனை - போற்

2. பாவ வினை தீர்க்கவென்று பாரில் வந்தவரைப்
   பாக்களாலும் நாதத்தாலும் ஏற்றிப் போற்றுவோமே - போற்

3. ஜீவ நதி ஒழுகுகின்ற ஜீவ நாயகனை
   ஜீவ நதிதனில் மூழ்கித் தரிசிப்போமே - போற்

4. சுத்த ஜலம் கொண்டு நம்மைச் சுத்திகரித்தோனைச்
   சுத்த கைகளை உயர்த்தி ஸ்தோத்திரிப்போமே - போற்

5. வாக்குத்தத்த ஆவியின் வல்லமை அளித்தோனை
   வானசேனையோடு சேர்த்து வாழ்த்திப் போற்றுவோமே

6. பரிசுத்தவான்களின் பரலோக வைத்யனைப்
   பரிசுத்த சபையதில் பாடித் துதிப்போமே - போற்

7. சரீர சுகங்கட்கெல்லாம் சக்தியளித்தோனைச்
   சர்வ நாளும் சாட்சியாக நின்றிலங்குவோனை - போற்

8. நீதியென்னும் பரிசுத்த ஆடையளித்தோனை
   நித்திய விவாகத்திற்காய் நியமித்தோனை - போற்

9. சுத்த பிரகாசமான ஆடையளித்தோனை
   சித்திரத் தையலாடையுடன் கெம்பீரிப்போமே - போற்

10. நினையாத நேரத்தில் வந்திடுவேன் என்றோனை
    நித்தமும் ஜெபத்துடன் விழித்து நோக்குவோமே - போற்

# Tamil Hymn No 5

## PRAISE GOD

கண்ணிகள்

1. தேவரீர்க்கு ஸ்தோத்திரம் தேவரீர்க்கு ஸ்தோத்திரம்
   தேவரீர்க்கு ஸ்தோத்திரம் இன்றுமென்றைக்கும்
   கல்வாரி மலையில் குருசினில் மரித்த
   இரட்சகர்க்கு ஸ்தோத்திரம் இன்றுமென்றைக்கும்

2. பாவ பாரத்தில் நின்று என்னை இரட்சித்தார்
   தேவரீர்க்கு ஸ்தோத்திரம் இன்றுமென்றைக்கும்
   ஆவியின் பெலத்தால் என்னுள்ளம் நிறைத்தார்
   தேவரீர்க்கு ஸ்தோத்திரம் இன்றுமென்றைக்கும்

3. ரோக வேளையிலென் கூடயிருக்கின்ற
   தேவரீர்க்கு ஸ்தோத்திரம் இன்றுமென்றைக்கும்
   பஞ்ச காலங்களிலும் பாதுகாக்கின்ற
   தேவரீர்க்கு ஸ்தோத்திரம் இன்றுமென்றைக்கும்

4. ஏழை யென்னை ஆசையோடு நோக்குகின்ற
   தேவரீர்க்கு ஸ்தோத்திரம் இன்றுமென்றைக்கும்
   என்றுமெந்தன் பாரமெல்லாம் சுமக்கின்ற
   தேவரீர்க்கு ஸ்தோத்திரம் இன்றுமென்றைக்கும்

5. சத்துருக்கள் முன்பு பந்தி ஆயத்தஞ்செய்த
   தேவரீர்க்கு ஸ்தோத்திரம் இன்றுமென்றைக்கும்
   வல்ல கிருபையால் இன்றும் காத்ததாலே
   தேவரீர்க்கு ஸ்தோத்திரம் இன்றுமென்றைக்கும

# Tamil Hymn No 6

## HIS LOVE

பல்லவி

ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் தேவா
உந்தன் அன்புக்காய் - ஸ்தோத்திரம்

சரணங்கள்

1. ஏகசுதன் ஏகராஜனைச்
சிநேகமோடே தந்ததால் - ஸ்தோத்திரம் - ஸ்தோ

2. நஷ்டப்பட்டுத் தூரம் போன என்னைத்
தேடி வந்த மீட்பரே - ஸ்தோத்திரம் - ஸ்தோ

3. பெந்தெகொஸ்தே தினமதில்
பலத்த காற்றாய் வந்தோனே - ஸ்தோத்திரம் - ஸ்தோ

4. லோகத்தின் பாவப் பாரமெல்லாம்
தேகத்தில் ஏற்ற நாதனே - ஸ்தோத்திரம் - ஸ்தோ

5. சத்துருவின் புத்திரனாகிய என்னைத்
தேவ புத்திரனாக்கியதால் - ஸ்தோத்திரம் - ஸ்தோ

6. எந்தன் நாமம் உந்தன் புஸ்தகத்தில்
சேர்த்ததை நினைத்ததால் - ஸ்தோத்திரம் - ஸ்தோ

7. உம்மைப் பின்பற்ற வேணுமென்று
சொல்லிப் போன நாதனே - ஸ்தோத்திரம் - ஸ்தோ

8. கர்த்தன் இயேசு கிறிஸ்து மூலம்
சத்துருவை ஜெயித்ததால் - ஸ்தோத்திரம் - ஸ்தோ

9. ஜீவனுள்ளோர் மத்தியிலென்னை
ஜீவனோட வைத்ததால் - ஸ்தோத்திரம் - ஸ்தோ

10. எந்தன் ஆவி ஆத்துமா சரீரம்
என்றைக்குமா யேற்றோனே - ஸ்தோத்திரம் - ஸ்தோ

## PRAISE HIM, O MY SOUL

பல்லவி

என் ஆத்துமாவே என் முழு உள்ளமே
உன்னதன் உத்தம நாமத்தை ஸ்தோத்திரி

அனுபல்லவி

வையகத்திலுனக்கு மெய்யன் மனதிரங்கிச்
செய்த உபகாரம் மறவாமல் - என்

சரணங்கள்

1. பாவத்திலமிழ்ந்திப் பிணியினால் வருந்திச்
சாபக் குழியில் வீழ்ந்து ஆபத்தில் நிற்கையில்
மீட்டுனக்கிரக்கம் கிருபை என்னும் முடியைச்
சூட்டிய கர்த்தனை நிதம் நினைத்து - என்

2. பெற்ற பிதாப்போல் பரிதபித்தணைப்பார்
பற்றிடும் அடியார் முற்றும் பயப்படில்
அக்கிரம மெல்லாம் கர்த்தன் கருணையால்
ஆக்கினையின்றி அகற்றிடுவார் - என்

3. மாமிச மெல்லாம் வாடும் புல்தானே
பூவில் வளர்ந்திடில் வயலின் பூவாமே
கர்த்தன் கருணைக்குக் கரையென்பதில்லையே
நித்தியமாக நிலைத்திடுமே - என்

4. துதித்திடுவீரே தூத கணங்களே
ஜோதியாயுள்ளவர் கோடி சேனைகளே
ராஜ்ஜியங்களிலவர் காட்டிய கிரியைக்காய்ச்
சாட்சிகள் நாம் துதி சாற்றிடுவோம் - என்

# Tamil Hymn No 8

## PRAISE HIM

பல்லவி

ஸ்தோத்திரம் இயேசு நாதா - உமக்கென்றும் ஸ்தோத்திரம் - இயேசு நாதா
ஸ்தோத்திரம் செய்கிறோம் நின்னடியார் - திரு
நாமத்தில் ஆதரவில்

1. வான தூத சேனைகள் - மனோகர கீதங்களால் எப்போதும்
   ஓய்வின்றிப் பாடித் துதிக்கப் பெறும்
   மன்னவனே உமக்கு - ஸ்தோ

2. இத்தனை மகத்வமுள்ள - பதவி இப்புழுக்களாம் எங்களுக்கு
   எத்தனை மாதயவு நின்கிருபை
   எத்தனை ஆச்சரியம் - ஸ்தோ

3. நின் உதிரமதினால் - திறந்த நின் ஜீவ புது வழியாய்
   நின்னடியார்க்குப் பிதாவின் சந்நிதி
   சேரவுமே சந்ததம் - ஸ்தோ

4. இன்றைத் தினமிதிலும் ஒருமித்துக் கூட நின் நாமத்தினால்
   தந்த நின் கிருபைக்காக உமக்கென்றும்
   ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே - ஸ்தோ

5. நீரல்லால் எங்களுக்கு - பூலோகத்தில் யாருண்டு ஜீவநாதா
   நீரேயன்றி பரத்தில் வேறே ஒரு
   தேட்டமில்லைப் பரனே - ஸ்தோ

# Tamil Hymn No 9

## INVITATION

1. வானபராபரனே இப்போ வாரும் எம் மத்தியிலே
   வந்து நின் திருக்கரத்தால் எம்மை ஆசீர்வதியுமையா
   எல்லா மகிமை கனமும் துதியும் ஏற்றிட வாருமையா

2. பக்தரின் மறைவிடமே ஏழை மக்களின் அதிபதியே
   பாதமே கூடும் பாவையர் எமக்கு பரிசுத்த மீயுமையா
   வாக்கு மாறா தேவா வாரும் வல்லமையால் நிறைக்க

3. கிருபாசனப் பதியே நின் கிருபையில் நிலைத்திடவே
   கஷ்டமதிலும் நஷ்டமதிலும் நின் கருணையில் நின்றிடவே
   நின் சக்தியோடு பக்தியில் நாம் பூரணராகிடவே

4. தாய் என்னை மறந்தாலும் ஐயா நீர் மறவாதிருக்க
   ஆவியினால் எம் உள்ளமதினில் அக்கினி பற்றிடவே
   யேகோவாவே எங்களின் ராஜா எழுந்து வாருமையா

5. நினைத்திரா தினமதினில் எம் கர்த்தரே வருவீரே
   ஆவி ஆத்துமா மாமிசம் முற்றும் மகிமையில் சேர்த்திடவே
   மாசில்லா பரிசுத்தராக மண்மீது துலங்கிடவே

6. வாதை பிணிதீர எம் வாய்த்த மருந்தே நீர்
   பாவ சாப ரோக முற்றும் மாற்றிடும் திரு ரத்தமே
   கல்வாரியண்டை பெற்றிட நாம் விரைந்து ஏகிடவே

7. ஆகாய மேகமீதில் எக்காளம் தொனித்திடவே
   அன்பின் தயாளன் ஆனந்த பூமான் வரவே இரண்டாம் முறையே
   ஆசையோடு காத்திருந்து ஜெபித்திட வல்லமையாய்

# Tamil Hymn No 10

## HIS SAFE - KEEPING

கண்ணிகள்

1. கிறிஸ்துவையே வாழ்த்துவேன்
   மேசியாவைப் போற்றுவேன்
   அன்பர் நெஞ்சில் சார்ந்து நான்
   அன்பரையே வாழ்த்துவேன்

2. அல் பகலும் நேர்த்தியாய்
   அனுதினமும் பத்திரம்
   பாதுகாக்கும் நேசரைப்
   பணிந்து குனிந்து வணங்குவேன்

3. நாவிற் துதி வைத்திடும்
   நல்வரங்கள் தந்திடும்
   நித்தம் நித்தம் இயேசுவை
   வாழ்த்துவேன் நித்திரையில்

4. நித்திரை விழிப்பிலும்
   இயேசு நீர் என் பக்கத்தில்
   சத்துரு சதிமோசம்
   செய்திடாமற் காக்கிறீர்

5. சதா காலங்கிளிலும்
   உன்னுடன் நானிருப்பேன்
   என்று வாக்குரைத்தவர்
   உம்மையே நான் வாழ்த்துவேன்

# Tamil Hymn No 11

## HAVE THINE OWN WAY, LORD

பல்லவி

என்னையுமக் கொப்புவித்தேன் நின் மனம் போல் நடத்தையா

சரணங்கள்

1. இன்பமுள்ள ஜீவியந்தான் ஏழை யான் விரும்பவில்லை
   துன்பமில்லா சொகுசுகளும் தொல்லுலகில் தேவையில்லை – என்
2. ஜீவனாலோ சாவினாலோ தேவ நாமம் சீரிலங்க
   பாவியெனக் காவியீந்து பாரில் வைத்தால் போதுமையா – என்
3. நேர்மையுறும் பாதையிலோ நெடுகவே முட்காடதிலோ
   நீடிய பொறுமையிலோ நித்தம் நித்தம் சாவினிலோ – என்
4. பஞ்சமதோ பட்டினியோ மிஞ்சிய கொடும் விபத்தோ
   சஞ்சலமோ வந்திடினும் ஸ்வாமி என்னைக் கைவிடீரே – என்
5. சொந்த ஜனம் மோசம் பல சூழ்ந்து என்மேல் வந்திடினும்
   சுந்தர மைந்தனுனைப்போல் சோர்ந்திடாதெனக் கருள்கூர் – என்

# Tamil Hymn No 12

## WHAT HE HAS DONE FOR US

சரணங்கள்

1. தேவாதி தேவனின் தானங்கட்காக
   ஆவலுடன் அடியாருமன்பாக
   பூவினிற் புவி நேசர் முன்பாக
   ஆவியிலும் அதிவணக்கமாக

பல்லவி

போற்றுவோம் - போற்றுவோம்
போற்றுவோம் பொற்பரனை

2. அற்புதம் அற்புதம் அரூபியான
   நற்பரன் சொற்படி சொரூபியானார்
   பற்பல பாதகர் பரனை நாடி
   நித்தியமாக நிர்மலனைச் சேர – போற்

3. இம்மானுவேல் அம்பரமேக
   இம்மானுவேலனும் மனுவாகி
   தம்மை வெறுத்துத் தரை மட்டும் தாழ்ந்து
   நம்மை யணைத்திடத் தம்முயிர் விட்டனர் – போற்

4. காசினியெங்கும் காணக்கிடைக்காத
   வாசஸ்தலமொன்று எங்களுக்காக
   ராஜனுடன் நாமிருப்பதற்காக
   ஆயத்தமாக்கி அழைப்பேனென்றாரே – போற்

5. துன்பங்கள் சூழினும் இன்பமதாக்கி
   அன்புடன் ஐயன் அடியாரைக் காத்து
   இன்றுவரை இறையின் பாதம் நாட
   ஈந்தக் கிருபை நினைந்து நட்போடு – போற்

6. பாத்திரமற்ற இப்பாவிகளிவ்வித
   காத்திராத கன தானங்களைப் பெற
   உத்தம மார்க்கமதான யென் இயேசுவின்
   சுத்தமுகம் கண்டு என்று களிக்கலாம் – போற்

# Tamil Hymn No 13

## CONSECRATION TO SERVE THE LORD AT THE REVELATION OF IS LOVE

பல்லவி

ஆனந்தக் கண்ணீர் பொழியுந் தேசமதில்
நான் அன்பர் இயேசுவின் பொன்முகம் காணுவேன்

அனுபல்லவி

சந்தோஷமே அது சந்தோஷமே எனக்
கானந்தமே பரமானந்தமே இயேசு — ஆன

சரணங்கள்

1. முன்னொரு நாளில் என் கண்ணீரைக் கண்டவர்
என்னிலிருந்து துயரை எடுத்தவர்
இந்நிலந்தன்னில் இவர்க்கு நிகரெவர்
என்னுள்ளில் தங்குமியேசு மாராஜன் போல் — ஆன

2. யுத்தக்களத்தில் என் சேனைத் தலைவரும்
யுத்தத்தில் யாதுமே தோல்வி வரவிடார்
ஆதி இடை கடை தோல்வி போற் தோன்றுகில்
ஆத்திரமாயன்பர் தாங்கி நடத்துவார் — ஆன

3. ஒவ்வொரு நாளிலும் இயேசு என்னுடனே
ஒவ்வொரு சோதனை தன்னிலு மிருப்பார்
சார்ந்து இளைப்பாற இயேசுவின் மார்புபோல்
பாரில் நினைத்திடில் வேறொன் றெனக்கில்லை — ஆன

4. தாயை மறந்து என் தந்தை இழந்து என்
வேலை இனம் ஜனம் யாவும் மறந்தேன் நான்
என்னுடன் தங்கிடும் இன்ப மகா ராஜன்
தன் பாதம் சரணம் எல்லாம் எனக்கவர் — ஆன

5. என்னை மறவாத காருண்ய பூமானே
உன்னை மறந்து யான் என்ன செய்வேன் ஐயா
என்றும் எனக்குள்ள தெல்லாம் மறந்து நான்
இன்றும் என்றும் உமக்கூழியம் செய்குவேன் — ஆன

# Tamil Hymn No 14

## PRAISE AND PRAYER FOR THE SANCTIFICATION OF THE SPIRIT

பல்லவி

இயேசு ராஜா உம்மையே நான்
ஸ்தோத்திரிக்கிறேன்

சரணங்கள்

1. யெகோவாவே உந்தன் ஆவி என்னிலுற்றிடும்
காத்திருக்கும் யாவர் மேலும் ஆவியை ஊற்றும் – இயேசு

2. சகல மனிதர் மேலும் ஆவியை ஊற்றும்
ஆவியின் மேல் பசிதாக முண்டாகச் செய்திடும் – இயேசு

3. பரிசுத்தராக நானிருப்பதினாலே
நீயும் பரிசுத்தமாகு என்றுரைத்த வல்லவா – இயேசு

4. உன்னாலொன்றும் செய்ய ஏலாதென்று சொன்னவா
தேவா நீரே வந்து என்னைப் பரிசுத்தமாக்கிடும் – இயேசு

5. உந்தன் வாக்கை நம்பி இப்போ வந்து நிற்கிறேன்
இப்போ நீரே வந்து என்னைப் பரிசுத்தமாக்கிடும் – இயேசு

6. கல்வாரியின் ஜீவ ஆறு ஓடுதே இன்று
ஊற்றாய் ஓடுதே இன்று எனக்காய் ஓடுதே இன்று – இயேசு

7. விசுவாசம் என்னிலே பெருகச் செய்திடும்
மறை பொருள்கள் யாவையும் வெளிப்படச் செய்திடும் – இயேசு

8. மறுரூப ஆவி என்னில் வைத்திடும் சுவாமி
என் மனதிலெல்லாம் சுத்தமான சிந்தையாக்கிடும் – இயேசு

9. குறைகளொன்றும் என்னிடத்தில் கண்டிடாதையா
இதோ நாள் முழுவதும் என்னையே நான் உம்மில் வைக்கிறேன்

# Tamil Hymn No 15

## SPEAK O LORD

பல்லவி

பேசும் தேவா உம்மாவியினால் - நீர்
பேசும் தேவா உம்மாவியினால்

சரணங்கள்

1. மரித்தோருந்தன் வார்த்தை கேட்டிடும் நேரமதில்
பிழைப்பார் தேவா உம்மாவியினால – அவர் – பேசும்

2. மரித்த லாசர் உந்தன் வாக்கு கேட்டவுடனே
எழுந்து வந்தான் உம்மாவியினால் - அவன் – பேசும்

3. பெந்தெகொஸ்தின் பண்டிகையில் மூவாயிரம் பேருக்கு
பேதுருவால் பேசியபோல் - நீர் – பேசும்

4. ஐந்தப்பம் இரண்டு மீனை ஆசிர்வதித்ததுபோல்
ஆசிர்வதித்தனுப்பும் தூதை நீர் – பேசும்

5. இப்பிரபஞ்சத்தின் தேவன் மூடிய மனக் கண்ணை
திறவுந் தேவா உம்மாவியினால் – பேசும்

6. அபிஷேகம் பண்ணும் தூதால் ஆத்துமாக்களுயிரடைய
ஊற்றும் தேவா உம்மாவியிப்போ – நீர் – பேசும்

# Tamil Hymn No 16

## SECOND COMING

பல்லவி

மகிமையுள்ள மா இயேசு ராஜன் வான தூதர் சேனைகளோடு
சீக்கிரம் வாறார் ஆனந்தமாமே

சரணங்கள்

1. பூமியுமதிசயிக்க வானோர்களார்ப்பரிக்க
தூதரொலியுடன் மேகமதில் வாறார்
ஏழைகள் நாங்கள் இயேசுவைச் சந்திக்க
ஆ ஆ ஆ ஆ ஆனந்தமாமே – மகி

2. எக்காளம் தான் தொனிக்க வாஞ்சைகள் யாவும் தீர
நண்பரின் பக்கத்தில் யாவரும் கூடியே
ஆனந்தம் பாடி நாம் இயேசுவைப் போற்றிட
ஆ ஆ ஆ ஆ ஆனந்தமாமே – மகி

3. பூமியின் ஜாதிகளும் தேசத்தின் ராஜாக்களும்
மனுவேல் ராஜனால் நியாயம் விதிபட
அன்பர்கள் நாங்கள் இயேசுவுடன் நிற்க
ஆ ஆ ஆ ஆ ஆதிசயமாமே – மகி

4. இயேசு மணாளனுடன் சுதந்தரம் பெற்றுக் கொள்ள
தேசமெங்கும் ஆண்ட தீதுகள் போய்விட
பரனின் துதியை யாவரும் பாடிட
ஆ ஆ ஆ ஆ ஆர்ப்பரிப்போமே – மகி

5. ஆயிரமாண்டுகளும் பூமியின் ஆட்சிகளும்
முற்றுமாய் தீர்ந்தபின் அன்பருடன் நாங்கள்
நித்தியம் ஜீவித்து ஆளுகை செய்திட
ஆ ஆ ஆ ஆ ஆனந்தமாமே – மகி

# Tamil Hymn No 17

## INVITATION

பல்லவி

வந்தாளும் இயேசுவே வாருமிதில் - தேவ
மைந்தர்கள் கூடு மிந்நேரமிதில்

சரணங்கள்

1. பத்மு தீவில் பரிசுத்த நாளில் வந்த வண்ணமே
சத்துருக்கள் கூட்டமெல்லாம் சக்தியற்றுச் சோரவே
இத்தினத்தில் இங்கு வந்திடும் - தேவா - வந்

2. நல்வழியை நாடிடாமல் ஓடும் நரர் யாவர்க்கும்
கல்வாரியின் அன்பை இன்று கர்த்தனே நீர் காட்டியே
நற்குணம் அவர்க்கு நல்கிடும் - தேவா - வந்

3. சக்தியில்லை எங்களுக்குச் சாம்பலும் தூசியும்
கர்த்தனே கருணை கூர்ந்து தந்திடும் சர்வாயுதம்
புத்தியாக யுத்தம் செய்திட – தேவா - வந்

4. என்னை நோக்கிக் கூப்பிடில் அளித்திடுவேன் உத்தரம்
பின்னும் நீ அறிந்திடாத வல்லமைகள் காட்டுவேன்
என்றவா இந்நேரம் வாருமேன் - தேவா - வந்

5. சதாகாலங்களிலும் இருப்பேன் உங்கள் கூடவே
சத்துருவின் வல்லமைகள் ஒன்றும் மேற்கொள்ளாதென்றீர்
ஆதலால் அநந்தம் ஸ்தோத்திரம் - தேவா - வந்

# Tamil Hymn No 18

## THE SHIP OF FAITH

கண்ணிகள்

1. பெலமுள்ள நகரமாம் இயேசுவண்டை
பயமின்றி ஓடி நீ வந்திடுவாய்
சஞ்சலத்திற் கொரு வழியில்லையே
சந்ததம் அவர் நம்மைக் - காத்துக்கொள்வார்

2. நிலையில்லா உலகத்தின் அலைகளாலே
அலைந்தடும் பயனென்ன புதல்வனே நீ
விசுவாசக் கப்பலில் ஷேமமாக
யாத்திரை செய்பவர்க்கு - லோகம் வேண்டாம்

3. கழுகு போல் பறந்து நீ உன்னதத்தில்
வாழ்கின்ற ஜீவியம் வாஞ்சித்துக்கொள்
காத்திருந்திடுகில் ஈந்திடுவார்
பெருக்கமுள்ள பெலன் - மக்களுக்கு

4. மரணம் தான் வருகிலும் பயப்படாதே
விரைந்துன்னைக் கர்த்தர் தான் காத்திடுவார்
யாதொன்றுமுன்னைப் பயப்படுத்த
எங்குமில்லை யென்று - விசுவாசிப்பாய்

5. ஆறுதலடையு மந்நாடு சென்று
இயேசுவின் மார்பில் நானானந்திப்பேன்
பரம சுகம் தரும் ஊற்றுகளில்
பரனோடு நித்தியம் - பானம் செய்வேன்

# Tamil Hymn No 19

## PRAYER OF CLEANSING

பல்லவி

இந்நேரம் வந்தென்னைச் சுத்தம் செய்யும்
சுத்தம் செய்யும் தேவா சுத்தம் செய்யும்

சரணங்கள்

1. பாவ துக்கமெல்லாம் நீங்கிடவே
நீங்கிடவே சுவாமி நீங்கிடவே - இந்

2. உள் வினை யாவையும் போக்கிடவே
போக்கிடவே சுவாமி போக்கிடவே - இந்

3. உம் வாக்கை நம்பி நான் இப்போ வாறேன்
இப்போ வாறேன் சுவாமி இப்போ வாறேன் - இந்

4. கல்வாரி ஜீவ ஆறு ஓடுதிப்போ
ஓடுதிப்போ எனக்காய் ஓடுதிப்போ - இந்

5. இயேசுவின் இரத்தத்தால் சுத்தம் செய்யும்
சுத்தம் செய்யும் தேவா சுத்தம் செய்யும் - இந்

# Tamil Hymn No 20

## PRAYER FOR SANCTIFICATION
## HOLY SPIRIT AND BLESSINGS

சரணங்கள்

1. சத்தியமும் கிருபையுமாய் நித்தமுமே வாழ்ந்திடும்
கர்த்தனே எங்கட்கு ஜீவன் தந்து என்றும் தாங்கிடும்
சுத்தமாய் நடப்பதற்கும் சுத்த ஆவி தந்திடும்
சித்தமோடு இந்தவேளை வந்திறங்கிடும்

பல்லவி

வானந்திறந்தருளும் பல - தானங்களையிந்நேரமிதில்
வானவனே ஞானமுள்ள வல்ல குரு நாதனே
தேனிலும் மதுரம் திவ்ய ஆசிர்வாதங்கள்

2. என்னை முற்றும் மாற்றிட உன்னத பெலனூற்றிடும்
இன்னும் இன்னும் ஈசனே உம் நல்வரங்களீந்திடும்
கண்ணிகளிற் சிக்கிடாமற் கண்மணிபோற் காத்திடும்
கன்மலையும் மீட்பருமென் காவலும் நீரே - வான

3. சுயமாடம்பரம் முற்றும் சுட்டெரிக்க வேணுமே
தயவு தாழ்மையினாவி தந்தருள வேணுமே
மாயமான யாவினின்றும் மனமதைப் பேணுமே
ஆயனே அடியார்களின் அடைக்கலமே - வான

4. ஆதிக அதிக அன்பில் அமிழ்ந்து அனுதினம்
புதிய நாவுகளாலும் புகழ்ந்தும்மைப் போற்றிட
அதிசயமே அகத்தின் குறைகளகற்றியே
இது சமய முன்னத பெலனீந்திடும் - வான

# Tamil Hymn No 21

## THE COMING OF THE LORD AND ETERNAL LIFE

சரணங்கள்

1. காலை ஒளி தோன்றவே
காரிருளும் நீங்கவே
கர்த்தன் வந்து கன்னியை - வீடு சேர்ப்பார்
தேவ வாசம் நம்முடன்
புது எருசலேமிலே
கண்ணீர் யாவும் துடைப்பார் - காலை வேளை

பல்லவி

அல்லேலூயா - அல்லேலூயா
முகா முகமாய்க் காணலாம்
பூவில் ஓடி முடிந்த பின்
அல்லேலூயா - அல்லேலூயா
காண்போம் அவர் கிருபையால் - அல்லேலூயா

2. கண்ணிமைப் பொழுதிலே
காசினிவிட் டேகுவோம்
காகளம் தொனிக்குமே - அல்லேலூயா
கரை சேர்வோம் கடைசியாய்
பயம் துக்கம் போகுமே
ஆளுவோம் இயேசுவுடன் - அல்லேலூயா - அல்லே

3. ஆட்டுக்குட்டி சீயோனில்
கூட்டர் பரிசுத்தர் தான்
நெற்றியி லிருப்பது - தேவ நாமம்
கூட்டமாகச் சேர்ந்தவர்
புதுப் பாட்டுப் பாடுவார்
முதற் பலனிவர்களே - அல்லேலூயா - அல்லே

4. சந்தோஷக் கீதங்களோடு
சந்தோஷப்போம் நாமெல்லோரும்
மைந்தன் மண நாளதில் - அல்லேலூயா
மகிமை ராஜ்ஜியங்களில்
தரித்து வெண்மை வஸ்திரம்
போரில் வென்றோர் வாழுவோம் - அல்லேலூயா - அல்லே

# Tamil Hymn No 22

## SPEAK AND I WILL OBEY

சரணங்கள்

1. என் ஆத்தும நேச மேய்ப்பரே
   என் உள்ளத்தின் ஆனந்தமே
   இன்னும் உம்மைக் கிட்டிச் சேர நான்
   வாஞ்சையோடு சமீபிக்கிறேன்

பல்லவி

பேசும்-பேசும் ஜெபம் செய்யும் போது
ஆண்டவா பிரியமானதை
இப்போ காட்டும் செய்ய ஆயத்தம்

2. மெய் மீட்பரைக் கீழ்ப்படிவோர்
   ஆத்துமத்தைத் தேற்றும் இடம்
   அடியேனும் பெற அருள்வீர்
   அப்பனே விண்ணப்பம் கேட்டிடும் - பேசும்

3. பாவிகட்கு உமது அன்பை
   என் நடையாற் காட்டச் செய்யும்
   கல்வாரி ஆவியாலென் உள்ளத்தைப்
   போரில் வெல்ல அபிஷேகியும் - பேசும்

4. என் ஜீவிய நாட்களெல்லாம்
   நீர் சென்ற பாதையில் செல்வேன்
   ஆசித்துத் தாறேன் எனதெல்லாம்
   மீட்பரே வல்லமை தந்திடும் - பேசும்

# Tamil Hymn No 23

## NONE ELSE BESIDE THEE

சரணங்கள்

1. வேத நூல் ஓதிடும் நல்ல மேய்ப்பர்
பாதையும் சத்தியமும் ஜீவன் நீரே
பேதையாம் ஏழை யான் பாதை செல்ல
நீர் அல்லால் யாருமில்லை

பல்லவி

இயேசு நாதா ஏழைக்கு நீர் அல்லால் யாருமில்லை
இயேசு நாதா நீர் அல்லால் யாருமில்லை

2. சாபத்தீடானதை வைத்த ஆகான்
கோபத்திற்காளாய் எதிர்த்த தாத்தான்
பாவத்தில் சாகாதுயிர் பிழைக்க
நீர் அல்லால் யாருமில்லை - இயேசு

3. சத்ய விஸ்வாசத்தைக் காத்திடவே
நித்தம் நின் கீர்த்தியைப் பாடிடவே
சத்துரு சேனையில் வெற்றி தர
நீர் அல்லால் யாருமில்லை - இயேசு

4. ஒரே பிதாவை அறிந்திடவே
பரிசுத்தாவியைப் பெற்றிடவே
வேறேது போக்கும் வழியுமில்லை
நீர் அல்லால் யாருமில்லை - இயேசு

5. சாத்தான் தலையைச் சிதைப்பதற்கும்
அவனை வெற்றி சிறப்பதற்கும்
சமாதான தேவன் கிருபை செய்ய
நீர் அல்லால் யாருமில்லை - இயேசு

6. நன்மை ஏதும் செய்ய அறிகிலேன்
தின்மையே யான் செய்ய திறனுள்ளேன்
நற்செய்கையாகும் உம் சித்தம் செய்ய
நீர் அல்லால் யாருமில்லை - இயேசு

7. தேவன் மகத்துவத்தில் மேல் வரவே
ஜீவ கிரீடத்தைத்தான் தரவே
அப்போதும் நாங்கள் பாடுவோமே
நீர் அல்லால் யாருமில்லை - இயேசு

# Tamil Hymn No 24

## JESUS, THE FOUNDATION

கண்ணிகள்

1. இயேசு என் அஸ்திபாரம் ஆசை எனக்கவரே
   நேசமுசிப் பாறுதல் இயேசுவில் கணடேன் யானும்

2. என்ன மதுரம் அவர் நன்னய நாமச்சுவை
   என்னகத்தில் நினைத்தால் இன்னல் பறந்திடுமே

3. பஞ்சம் பசியுடனே மிஞ்சும் துயர் வந்தாலும்
   அஞ்சிடேன் இவையை என் தஞ்சம் இயேசிருக்கையில்

4. வியாதியால் எந்தனது காயங் கெட்டுப் போயினும்
   மாய தோற்றத்தை இயேசு நாயகன் மாற்றிடுவார்

5. லோகம் என்னை எதிர்த்து போவென்று சொல்லிடினும்
   சோகம் அடைவேனோ என் ஏகன் எனக்கிருக்க

6. என்னென்ன மாய லோகக் கன்னல் என்மேல் வந்தாலும்
   முன்னும் பின்னுமாய் இயேசு என்னை நடத்திடுவார்

7. பாவத்தால் என்னில் வந்த சாபக் கறைகள் மாற்றி
   சோபித நீதியுடை ஆபரணமாய் ஈவார்

8. ஆசை என் மணவாட்டி ஆக்குவேன் உன்னை என்னும்
   நேச உறுதியுரை இயேசு எனக்களித்தார்

# Tamil Hymn No 25

## WANDERED AS A SINNER

### கண்ணிகள்

1. பாதகனாய் நானலைந்தேன்
பாவி யென் றுணராதிருந்தேன்
தத்தளிக்கும் ஏழை வந்தேன்
சத்தியரே யாவும் தந்தேன்

2. மன்னா உந்தன் விண்ணை விட்டு
மண்ணில் வந்து பாடுபட்டு
மரித் தடக்கம் பண்ணப்பட்டு
உயிர்த் தெழுந்தீர் என்னையிட்டு

3. உந்தன் பாடு கஸ்தி யாலாம்
வந்த தெந்தன் பாக்ய மெல்லாம்
இம்மை செல்வம் அற்பப் புல்லாம்
உம்மைப் பெற விட்டேனெல்லாம்

4. சிரசுக்கு முள்ளால் முடி
அரசன் கோல் நாணல் தடி
நீர் குடிக்கக் கேட்டாலோடி
ஓர் பாதகன் தந்தான் காடி

5. கெத்செமனே தோட்டத்திலே
கஸ்தி பட்ட என் அண்ணலே
அந்த ஆவி உள்ளத்திலே
வந்தால் வெல்வேன் யுத்தத்திலே

# Tamil Hymn No 26

## WHEN WILL I SEE THEE?

பல்லவி

எந்தன் பூமானைக்காண சிந்தை பெருகுதையோ
என்றைக்குக் காண்பேனோ - ஓ – ஓ

சரணங்கள்

1. சுந்தரத்தில் மிகுந்து அந்தரங்கத்திருக்கும் எந்தன்
பூமானைக் காண
அழகுடைய அண்ணலேசுவைக் காண - எந்

2. விண்ணிலிருந்தவர் மண்ணின்மேல் வந்தவர்
கன்னிகையிற் பிறந்தவர்
லாசருக்காக கண்ணீரை விட்டழுதவர் - எந்

3. இன்னும் வர என்ன தாமதம் செல்லுமோ சொன்ன
வாக்கை நினைந்து
அடியேன் உந்தன் பாதம் பணிந்து வந்தேன் - எந்

4. பொல்லாதோரை ரட்சிக்க வல்ல பராபரன் என்ன துயரடைந்தார்
அதை நினைத்தால் சொல்ல முடியுதில்லை - எந்

5. பாதகரின் அடி கன்னத்தில் படும்வேளை என்னை நினைத்தீரே நீர்
அதை நினைத்தால் உம்மை மறப்பேனோ நான்? - எந்

# Tamil Hymn No 27

## WHEN WILL I SEE THE FACE OF JESUS?

1. இயேசுவின் நேச முகம் ஏழைக் கண்டெப்போ மகிழ்வேன்
மோசமான இவ்வுலகில் ஆசை எனக்கவரே - இயேசு

2. பாரச் சுமையதினால் பாடுபடுவோரை மீட்க
பரலோக இன்பம் விட்டுப் பாருலகிற் தேடி வந்த - இயேசு

3. மண்ணில் மனத்துயரில் மாண்டு நான் மயங்குகையில்
கண்ணின் மணிபோல என்னை எண்ணி அணைத்த எந்தன் -இயேசு

4. துன்பம் துயரம் நீக்கி இன்பம் ஏழை எனக்களித்தார்
நண்பர் நற்பாத மென்றும் நாடி என் நாட்கழிப்பேன் - இயேசு

5. இவ்வண்ணமிவ்வுலகில் எண்ணிடவோ யாருமில்லை
எண்ணவும்மை எப்பொழுதும் ஏழை எனக்கருளும் - இயேசு

6. என்று மடியார் உம்மை ஏகமாய்ச் சேர்ந்தேற்றிடவே
அன்றன்று யாவருக்கும் அருளுமனுக்கிரகம் - இயேசு

7. இன்பமும் ஈசன் ஒளி வீசும் பிரகாசமுள்ள
பொன் நகர் ஏகி மன்னன் மார்பில் மகிழ்ந்திடுவேன் - இயேசு

# Tamil Hymn No 28

## GLORYING IN THE CROSS

கண்ணிகள்

1. குருசின்மேல் குருசின்மேல் காண்கின்ற தாரிவர்
   பிராண நாதன் பிராண நாதன் என் போ்க்காய்ச் சாகின்றாா்

2. பாவத்தின் காட்சியை ஆத்மாவே பாா்த்திடாய்
   தேவ குமாரன் மா சாபத்தி லாயினாா்

3. இந்த மா நேசத்தை நிந்தையாய்த் தள்ளினேன்
   இம்மகா பாவத்தை எந்தையே மன்னிப்பீா்

4. பாவத்தை நேசிக்க நான் இனிச் செல்வேனோ
   தேவனின் பிள்ளையாய் ஜீவிப்பேன் நானிதோ

5. கஷ்டங்கள் வந்தாலும் நஷ்டங்கள் நோ்ந்தாலும்
   குருசினின் காட்சியைத் தரிசித்துத் தேறுவேன்

6. சூறாவளியைப் போல் சூழ்ந்திடும் ஆபத்தில்
   சிலுவையின் நேசத்தைச் சிந்தித்து நோக்குவேன்

7. இம்மகா நேசத்தை ஆத்மமே சிந்திப்பாய்
   இம்மானுவேலே நீா் என்னையும் நேசித்தீா்

# Tamil Hymn No 29

## I DESIRE TO BE LIKE JESUS

சரணங்கள்

1. இயேசுவைப் போல ஆகவும் இயேசுவின் வார்த்தை கேட்கவும்
இயேசுவை நோக்கும் ஜீவியம் இவைகளை வாஞ்சிக்கிறேன்

பல்லவி

ஸ்திரப்படுத்துமென் நாதா நிறைவாய் ஆவியைத் தா தா
கிறிஸ்துவின் மகிமை யதினால் நிறைந்து நான் பிரகாசிக்க

2. செய்திட்ட தப்பிதங்களும் மற்றும் பல பெலவீனமும்
எல்லாம் நீக்கிடும் நாயகா முற்றும் பூரணமாக்கிடும் - இயேசு

3. பிரார்த்தனையில் எப்போதும் நான் உற்சாகமாய்ப் போராடிட
உந்தன் சகாயம் நல்கிடும் எந்தன் மத்தியஸ்தரே - இயேசு

4. வாக்குத்தத்தங்கள் யாவையும் நான் சொந்தமாக்கிக் கொள்ளவே
விசுவாசம் நிறைவாகவும் பிரகாசம் முற்றிலும் தா - இயேசு

5. உபத்திரவத்தால் பலர் முற்றும் பின்னே போகினும்
வல்லமை தந்தெனை இயேசுவை வல்ல சாட்சியாக்கிடும் - இயேசு

6. வாங்குவதல்ல உத்தமம் தாங்குவதே பரிசுத்தம்
ஞானம் தாரும் இவ்விதம் யானும் சிந்தை செய்திட - இயேசு

7. கஷ்டமதிலும் பாடவும் நஷ்டமதில் கொண்டாடவும்
சக்தியருளும் நாதனே பக்தியில் பூரணமாக்கிடும் - இயேசு

# Tamil Hymn No 30

## PRAYER FOR GOD'S MANIFESTATIONS

பல்லவி

ஆவியிற் சந்தோஷங் கொண்டானந்திக்க – இப்போ
ஆவியை மழைபோல் ஊற்றவேணும்

சரணங்கள்

1. தெய்வத்தின் மகிமை இவ்விடத்தினில் - இன்று
பிரகாசிக்கவேணும் வெளிச்சமாக
பாவத்தினுடைய அந்தகாரங்கள் - எல்லா
உள்ளங்களில் நின்றும் நீங்கிப் போகட்டும் - ஆவி

2. சொர்க்க சந்தோஷம் கொண்டானந்திக்க - பர
லோக சக்தியாலின்று நடத்தவேணும்
கற்கள் போலுள்ள எல்லா உள்ளங்களையும் -- தேவா
இன்று மெழுகு போல் உருக்கவேணும் - ஆவி

3. ஆத்ம நிலங்களைச் சரிப்படுத்தி - இன்று
சொர்க்க சீயோனிலே வித்துவிதைக்க
நல்ல நிலத்தின் பலன் போலாகி - தேவா
ஆவியின் மழையால் நனைக்க வேண்டும் - ஆவி

4. வெளிச்சங்கள் வீசுது அந்தகாரம் மாறுது - தெய்
வத்தின் அவி உள்ளில் வரும்பொழுது
மாய்கையான லோகத்தில் நான் சேர்ந்து நிற்காமல் - என்
இரட்சகனாம் இயேசுவில் நான் நம்பிக்கை வைப்பேன் - ஆவி

# Tamil Hymn No 31

## FOLLOWING JESUS

சரணங்கள்

1. இயேசுவின் பின்னாலே  மண்ணாசைகளும் மாய்த்து
நேசமுடன் - போவோம்

பல்லவி

ஜோதியுயர் நாதனுடன்
ஜோதிலோகம் நின்றிடலாம்  - போவோம்

2. பரலோகம் விட்டுப் பாவிகள் மீதன்புற்றார்
நரர் பரம் செல்ல நல்வழி திறந்திட்டார்
பரா பரன் - ஜோதி

3. பாவங்களை நீக்கிப் பரிகரிக்க என்னைப்
பாவக் கோலமாகிப் பரனின் சுதன் தன்னை
மாய்த்தனரே - ஜோதி

4. பரிசுத்தராகப் பாரிலும் ஒன்று கூடி
பரலோகம் செல்லப் பரிசுத்தாவி தந்தார்
மா அன்புதான் - ஜோதி

5. பொய்யுலகம் வேண்டாம் இயேசையனெனக் கெல்லாம்
தூயசாலேம் செல்வோம் இயேசை யனடி சென்றால்
ஐயமின்றி - ஜோதி

6. மனம் மாறிடாதோர் மரணமடைவாரே
தினந்தோறும் தீயிற்றியங்கி அழுவாரே
திரும்புவீர் - ஜோதி

7. இருதய சுத்தம் இருந்திடில் நித்தம்
வரும் நாளில் இயேசு நாம் வானிலொன்றுகூடி
வாழ்ந்திடலாம் - ஜோதி

# Tamil Hymn No 32

## LIFE, TRUSTING JESUS

### கண்ணிகள்

1. இயேசுவை நான் நம்பி ஜீவியஞ் செய்குவேன்
   இயேசுதான் என் தஞ்சம் வானிலும் பூவிலும்

2. பூமியின் பாரங்கள் யாதொன்றெனக்கில்லை
   போக்கிட மாகுவோன் என் இயேசு தானல்லோ

3. இராப் பகல் அன்பர்தம் கண்மணிபோல் என்னைக்
   காப்பதற்காகவே தூங்கிடேன் என்கிறார்

4. சாத்தானும் சேனையும் சண்டை செய்திடினும்
   சாவை வென்றுயிர்த்தோனால் ஜெயக்கொடி நாட்டுவேன்

5. பூலோக மாயையில் நான் வீழ்ந்திடாமலே
   மேலோகக் காட்சி என் கண்களில் வீசுதே

6. பாவம் பெருகுதே லோகம் உயருதே
   நீதியின் சூரியன் மங்கியெரியுதே

7. ஒவ்வொருவரும் தம் தம் காரியம் நோக்கவே
   இயேசுவின் காரியம் தேடிடார் யாருமே

8. மார்க்கம் தப்பிச் செல்லும் மானிடரை எல்லாம்
   வழிப்படுத்துவதில் என் வாணாளைப் போக்குவேன்

# Tamil Hymn No 33

## FORGIVENESS OF SINS

பல்லவி

பரனே கருணாக் கடலே - நம தாழ்ந்த சமுத்திரமே

அனுபல்லவி

ஜெயம் ஜெயம் அதிசயம் ஜெயம் - மன
பயமகன்று நாம் பாடுவோம்
ஆதி - ஜோதி - நீதியே - பரனே

சரணங்கள்

1. ஆதியா தாம் மாது ஏவை
செய்த தீதுகளுதியகற்ற
நீதி வேத மோதி ஜீவனுாதி ஆதரித்தீந்தாயே
ஆதி - ஜோதி – நீதியே - பரனே
2. பாவம் கோபம் சாபம் யாவும்
தேவா ஈவாய் மேவினார்
எவனோ நம்பினவனே ஜீவ னடைவா னெனவே கூவினார்
ஜீவ - தேவ – தேவனே - பரனே
3. பாவமில்லையென்றால் பொய்யாம்
பாவ அறிக்கை செய்தால் மெய்யாய்
பாவம் மன்னித்தனியாயத்தை நீக்கி துய்யதாகவே
நீதி - மோதி - உண்மையாம் - பரனே
4. பாவத்தை மறைப்போன் வாழ்வடையான்
பாவத்தை யுரைப்போன் தாழ்வடையான்
பாவ பாரம் தேவ கோபம் நீக்க மரித்தாரேசு
தேவ - கோப - மேற்றவர் - பரனே
5. சுத்த முகத்தை மறைத்த பாவத்தை
சுத்திகரித்து எரித்த தெய்வத்தின்
சுத்த புத்திர னேசு கிறிஸ்து சத்துரு பேயை ஜெயிதத்தால்
பாடி - பாடி - யேற்றுவோம் - பரனே
6. கனவால் நினைவால் மனதால் பின்னும்
தினமாய் செய்வினை பாவ மெல்லாம்
இனிமே லொரு காலம் நினையா தெனவே கடலி லெறிந்தாரே
ஞான - ரான - வானவ - பரனே
7. ஓடி நாடிச் செய்த பாவம்
கோடி கோடி யானாலும்
கடலி னடியில் கூடத் தேடியும் காணக்கூடா தொரு நாளும்
பாடிப் பாடிப் - போற்றுவோம் - பரனே

# Tamil Hymn No 34

## OH THE LOVE THAT SOUGHT ME

சரணங்கள்

1. காணாமற் போன என்னை
நல் மேய்ப்பர் தேடினார்
தன் தோளின் மேலில் போட்டுக்
கொண்டன்பாய் இரட்சித்தார்
மேலோக தூதர் கூடினார்
ஆனந்தம் பொங்கிப் பாடினார்

பல்லவி

நேசர் தேடி வந்தார்
இரத்தம் சிந்தி மீட்டார்
என்னைச் சொந்தமாகக் கொண்டனர்
பேரன்போடு சேர்த்துக் கொண்டனர்

2. என் பாவக் காயங் கட்டி
வீண் பயம் நீக்கினார்
என் சொந்தமாக உன்னைக்
கொண்டேனே பார் என்றார்
அவ்வின்ப சத்தங் கேட்கவே
என் உள்ளம் பூரிப்பாயிற்றே - நேசர்
3. பேரன்பராகத் தோன்றி
ஐங்காயம் காட்டினார்
முட்கிரீடம் சூடினோராய்
என்னோடு பேசினார்
இப்பாவியி னிமித்தமே
படாத பாடு பட்டாரே - நேசர்
4. இப்போது இன்பமாக
என் மீட்பர் பாதத்தில்
ஒப்பற்ற திவ்ய அன்பைத்
தியானஞ் செய்கையில்
ஆனந்தம் பொங்கிப் பூரிப்பேன்
மென் மேலும் பாடிப் போற்றுவேன் - நேசர்
5. ஆட்கொண்ட நாதர் பின்பு
பிரசன்னமாகுவார்
தம் ஞான மணவாட்டி
சேர்த்தென்றும் வாழ்விப்பார்
எம் மாசும் தீங்கும் நீங்கிப்போம்
பேரின்பம் பெற்று வாழுவோம் - நேசர்

# Tamil Hymn No 35

## I HAVE FOUND THE KING OF KINGS
## THE SAVIOUR

கண்ணிகள்

1. ஆணி முத்தைக் கண்டேனே நான்
   மகிழ்கொள் உள்ளமே
   இரட்சகா உம்மை நம்புவேன்
   இரட்சண்ய மூர்த்தியே

2. சர்வ சக்ராதிபதியே
   இராஜாதி இராஜாவே
   நேர் பாதை காட்டும் தீபமே
   நீதியின் ஜோதியே

3. தேவ சிங்கார வனத்தின்
   ஜீவ விருட்சமே
   பாவத்தை நீக்கும் இரட்சகன்
   சாரோன் ரோஜாப்பூவே

4. பூலோக தாகந்தீர்த்திடும்
   மேலோக நதியே
   காலாகாலம் மறைந்திருந்த
   ஞானமும் நீரே

5. சுவர்க்கத்தின் ஜோதி நாயகா
   என் திவ்யமிர்தமே
   என் ஆதியே என் அந்தமே
   என் ஜீவனும் நீரே

# Tamil Hymn No 36

## MY JESUS, I LOVE THEE

### கண்ணிகள்

1. என் இயேசுவே உம்மையே நான் நேசிக்கிறேன்
   வேறெந்த வீண் வாழ்வையும் நாடாதிருப்பேன்
   உம்மாலே மா நன்மையை நான் கண்டடைந்தேன்
   என் நாதா மென்மேலும் உம்மை நேசிக்கிறேன்

2. இப்பாவியின் பேரில் முந்தி நேசம் வைத்தீர்
   நீர் பிராணத் தியாகஞ் செய்து மீட்டுக்கொண்டீர்
   முட்கிரீடம் ஐங்காயமும் தியானிக்கிறேன்
   என் நாதா மென்மேலும் உம்மை நேசிக்கிறேன்

3. பேரன்பின் சொரூபி உம்மை போற்றுகிறேன்
   எப்போதும் உம்மண்டை தங்க வாஞ்சிக்கிறேன்
   என் ஜீவன் போனாலுங்கூட நீங்கமாட்டேன்
   என் நாதா மென்மேலும் உம்மை நேசிக்கிறேன்

4. பேரின்ப மேலோகத்தில் ஆனந்தங்கொள்வேன்
   நீடுழி உம்முகங்கண்டு ஸ்தோத்திரிப்பேன்
   எப்பாவ மில்லாமலும் நான் வாழ்த்தல் செய்வேன்
   என் நாதா மென்மேலும் உம்மை நேசிக்கிறேன்

# Tamil Hymn No 37

## FOLLOWING JESUS

### கண்ணிகள்

1. எப்போதும் இயேசு நாதா
   உம்மைப் பின்பற்றுவேன்
   என்றே தீர்மானமாக
   நான் வாக்களித்தேன்
   நீர் என்னைத் தாங்கிக் காப்பீர்
   அப்போது அஞ்சிடேன்
   முன் சென்று பாதை காட்டும்
   நான் வழிதவறேன்
   பாதை காட்டும் பாதை காட்டும் பாதை காட்டும் நான் தவறேன்

2. பூலோக இன்பம் செல்வம்
   வீண் ஆசாபாசத்தால்
   என் ஆத்மா மயங்காமல்
   தெய்வீக பலத்தால்
   நீர் துணை நின்று தாங்கும்
   என் அருள் நாயகா
   தீங்கணுகாமல் காரும்
   மாவல்ல இரட்சகா
   நின்று தாங்கும் நின்று தாங்கும்நின்று தாங்கும் அருள் நாதா

3. ஆங்காரம் சுயசித்தம்
   தகாத சிந்தையால்
   மா கலக்கம் உண்டாகி
   நுான் தடுமாறினால்
   நீர் பேசும் அருள் நாதா
   கொந்தளிப்படங்கும்
   உம் நேச சத்தம் கேட்டு
   என் ஆவி மகிழும்
   நீர் பேசும் நீர் பேசும் நீர் பேசும் என் இயேசுவே

4. பின் பற்றினால் விண் வீட்டில்
   பேரின்பம் பெறுவீர்
   என்று உம் சீஷர் நோக்கி
   நீர் வாக்களித்தீர்
   அவ்வருள் வாக்கை நம்பி
   இவ்வேழை அடியேன்
   முற்றுமாய் என்னைத் தத்தம்
   இவ்வேளை அளிப்பேன்
   வாக்கை நம்பி வாக்கை நம்பி வாக்கை நம்பி பின் செல்லுவேன்

5. ஓயாமல் பெலன் தாரும்
   உம்மடிச் சுவட்டில்
   கால் வைத்து நடந்தேகி
   பின்பற்றுகையில்
   நீர் வழி காட்டி என்னைக்
   கை தாங்கி வருவீர்
   அப்பாலே மோட்ச வீட்டில்
   பேர் வாழ்வை அருள்வீர்
   மோட்ச வீட்டில் மோட்ச வீட்டில் மோட்ச வீட்டில் வாழ்வருள்வீர்

# Tamil Hymn No 38

## PRAYER FOR THE FIRE

பல்லவி

வரவேணும் பரனாவியே! இறங்கும் தணலாய் தாவியே

அனுபல்லவி

மருளாம் பாவம் மருவிய என்னை
வானாக்கினியால் ஞானஸ்நானம் செய்ய

சரணங்கள்

1. பலமான எப்பாவமும் பாழக்கும் மா நோய்களும்
வலிய கொடும் ரோகமும. மாம்ச சிந்தையோடுமே
பலிபிடத்தில் என்னைப் பலியாக வைத்தேன்
எலியாவின் ஜெபத்துக்கு இறங்கிய வண்ணமே - வர

2. எந்தன் பாவம் யாவையும் எரிக்கும் வகை தேடியும்
எங்கும் இந்த லோகத்தில் எத்தீயுமே காண்கிலேன்
எந்தன் செயலால் யாதொன்றும் முடியா
தின்றே வானாக்கினி வரவேணுமே - வர

3. குடிகொள் எந்தப் பாவமும் அடியோடு தொலைத்திடும்
தடுத்தாட்கொள்ளும தோஷமும் சாம்பலாகச் செய்திடும்
படிமிசை காற்றுக்குப் பறந்தோடும் சாம்பல்போல்
அடியேன் இயேசுவுக்காய் ஓடி எங்கும் தொண்டு செய்ய - வர

4. புறம்பான எப்பாவமும்இ மறைவான எப்பாவமும்இ
சிறிதான எப்பாவமும்இ பெரிதான எப்பாவமும்.
அறவே முற்றிலும் வரவேணும் ஆவியே
அக்கினி மயமாய் அமர்ந்திடும் என்மேல் - வர

# Tamil Hymn No 39

## PRAYER FOR THE LATER RAIN

கண்ணிகள்

1. வந்து ஆளையா ஆவி தந்து ஆளையா
   வந்து உதிரம் சிந்தி மீட்டவல்ல இயேசு நாதனே
   வல்லமையாம் வாக்குத்தத்த
   ஆவி ஊற்றிடும் நாதனே

2. பெந்தெகொஸ்தே நாளில் உமதப்போஸ்தலர் மேல்
   பலத்த காற்று முழக்கம் போல வல்லமையாய் வந்தோனே
   பெலவீனர் யாவர்க்கும்
   பெலனளித்திடும் வல்லோனே

3. ஆதிச் சபையில் வல்ல ஆவி அளித்தோனே
   அற்புதங்கள் அடையாளங்கள் இயேசு நாமத்தில் வழங்கிட
   உந்தனாவி காத்திருக்கும்
   தாசர்கள் மேல் ஊற்றுமேன்

4. இன்றும் உந்தன் வாக்கை நம்பி வந்தோரை
   இன்றும் என்றும் மாறாதென்று வாக்குத்தத்த மீந்தோனே
   இன்பமாய் ஆவி ஊற்றிடும்
   காத்திருக்கும் அடியார்மேல்

5. பின்மாரியின் ஆவி வேண்டச் சொன்னோனே
   ஆவியின் மழை இல்லாததினால் ஆத்துமாக்கள் அலையுதே
   பின்மாரியும் முன்மாரியும்
   செழிப்பாய் பெய்திட அருளுமேன்

# Tamil Hymn No 40

## ARISE O LORD AND SEND A REVIVAL

பல்லவி

எழுந்து வாரும் ஐயனே நசரேயன் இயேசுவே
எழுந்து வாரும் ஐயனே

சரணங்கள்

1. விண்ணவர் போற்றவே மண்ணவர் பாடவே
   மாட்சிமை இயேசுவைச் சொல்லிக் கொண்டாடவே - எழு

2. விஸ்வாசக் கேடகம் கையில் தந்திடவே
   பண்டையர் அடைந்த வெற்றிகள் தந்திட - எழு

3. எலியாவின் ஆவியை எல்லோர்க்கும் ஈந்துமே
   பெலமான ஆவியை நிறைவாக ஈந்திட - எழு

4. ஜெபத்தினால் வல்லமை விமலா நீர் கண்டிட
   ஓயாத ஜெபசிந்தை எல்லோர்க்கும் ஈந்திட - எழு

5. மாட்சிமை மாட்சிமை மாட்சிமை என்றுமே
   மகுடா அபிஷேகம் பெற்றவரைப் போற்ற - எழு

6. தீவட்டியிலெண்ணெய் ஊற்றாகப் பாய்ந்திட
   அட்ட பக்கமெல்லாம் பற்றியே எரிந்திட - எழு

7. வெளிச்சத்தின் காட்சிகள் கண்களிற் பட்டுமே
   திறவாத கண்களும் திறந்துமே பார்த்திட - எழு

# Tamil Hymn No 41

## PRAYER FOR THE HOLY SPIRIT

கண்ணிகள்

1. ஊற்றும் ஊற்றும் ஆவியையே ஊற்றும் ஜயனே
   பெந்தெகொஸ்தின் ஆவியையே ஊற்றும் ஜயனே

2. வல்லமையாய்ப் பேசும் ஆவி ஊற்றும் ஜயனே
   வழுவாமல் நிற்கும் ஆவி ஊற்றும் ஜயனே

3. இன்று யுத்தம் செய்ய ஆவி தாரும் ஜயனே
   சோர்ந்திடாத யுத்த வீரனாக்கும் ஜயனே

4. வாலிபத்தின் ஆவி தாரும் பாலருக்கெல்லாம்
   பார்த்த விடமெல்லாம் துதி ஆக்கும் தெய்வமே

5. பாவியை இழுக்கும் ஆவிஊற்றும் என்னிலே
   மாண்டு போகும் மானிடரைக் காரும் ஜயனே

6. சத்ருவை நேசிக்கும் ஆவி தந்திடும் தேவே
   அட்ட பக்கம் அனல் மூள அக்கினி தாரும்

7. மித்துருவை மீட்கும் ஆவி ஈயும் ஜயனே
   யுத்தத்திலே முன்னில் நிற்க ஊற்றும் ஆவியை

8. உள்ளம் முற்றும் கள்ளமற ஊற்றும் ஆவியை
   வெள்ளமாய் அன்பு பாய்ந்தோட ஊற்றும் ஆவியை

9. ஆழ நீள அன்பைக் காணக் கண்ணைத் தந்திடும்
   மாயை இன்பம் பாராமலே கலிக்கமிட்டிடும்

10. உந்தன் சத்தம் கேட்கக் காதைத் தந்திடும் தேவா
    உந்தன் வார்த்தை பேச அக்னி நாவைத் தந்திடும்

# Tamil Hymn No 42

## COMFORT IN TRIALS

பல்லவி

இன்ப துன்ப நேரத்திலும்
உன் அன்புள்ள இயேசுவைப் பார்

சரணங்கள்

1. இன்பத்தினால் அக மகிழ்ந்து
கிலேசத்தினால் துக்கித்து
சிற்றின்பப் பேரு உலகில்
சிக்கிக் கொண்டு இருக்கும் போதும் - இன்ப
2. சோதனையால் பிடிபட்டு
இடுக்கணில் இருக்கும் போதும்
சாத்தான் உன்னை மேற்கொள்ளும் போதும்
அக்கினியாஸ்திரம் எறியும்போதும் - இன்ப
3. தோழரால் பகைக்கப்பட்டு
மனக்கிலேசம்அடையும் போதும்
உலகம் உன்னை இகழ்ச்சி செய்து
தங்கள் இடத்தை விட்டோட்டும் போதும் - இன்ப
4. அவர் தாமே சோதிக்கப்பட்டு
பாடு நமக்காய்ப் பட்டதினால்
அவர் சோதிக்கப்படும் நமக்கு
உதவி செய்ய வல்லவராம் - இன்ப
5. வறுமையினால் யாசித்து
பாடு மிகப் படும் போதும்
சாத்தான் உன்னைப் பகடி பண்ணி
உன் விசுவாசத்தைக் குறைக்கும்போதும் - இன்ப
6. கடு நோயால் பெலன் குன்றி
பெலவீனத்தால் தள்ளாடி
ஜீவன் உனக்குக் கசப்பாகி
சாவை நீ விரும்பும் போதும் - இன்ப
7. பகைஞரால் கல்லெறியுண்டு
மரண நேரம் கிட்டும்போதும்
பக்தன் ஸ்தேவானைப்போல
தைரியமாய் உன் இயேசுவைப் பார் - இன்ப
8. நான் என் இயேசுவின் தரிசனத்தை
நிமிஷந்தோறும் காண்கிறதால்
நான் தான் பயப்படாதிருங்கள்
என்றவர் என்னைத் தேற்றுகிறார் - இன்ப

# Tamil Hymn No 43

## JESUS, MY ALL IN ALL

### கண்ணிகள்

1. எந்தன் இயேசு உன்னதத்தில் அன்புள்ளோனாய் வாழும்போது
   ஏழையேன் கலங்கிறேன் இப்பூமியில் - அதால்
   என்றும் அவர் கிருபை மட்டும் போதுமே

2. இன்னல்களாம் குன்றுதனிற் பின்னிடாமல் ஏறுதற்கு
   இயேசு என் கால் தன்னை மான்கால் போலாக்கி – என்னை
   இன்பமாய் என் பாதையோடச் செய்குவார்

3. யாரும் துணையில்லையென்றோ ஏகனாய் நான் ஆனேன் என்றோ
   என் மனதில் எண்ணிடேன் ஓர் நாளுமே – யேசு
   என்னுடன் இல்லாமல் எங்கு போயினார்

4. என்னருமை தோழரன்றோ தெய்வ தூதர் சங்கமெல்லாம்
   இப்போதவர் என் பிதா முன் நிற்கிறார் – பின்னால்
   என்னையும் தம் ஊழியத்தால் தேற்றுவார்

5. வியாகுலம் என் வீட்டை விட்டுக் காட்டிலோடப் பண்ணிடினும்
   அங்கே யொரு தூதன் என்னைச் சந்தித்து - சூடாம்
   அப்பமும் ஜலமும் தந்து தேற்றுவான்

6. வரும் நாளுக்காக வீணாய் என் மனம் நொந்தென்ன புண்யம்
   என்னைத் தினம் போஷிப்பவர் இல்லையோ - இன்னும்
   ஏழை யான் அவரை மட்டும் நம்புவேன்

7. கவனிப்பாய் காகத்தை நீ விதைப்புண்டோ அறுப்புண்டோ
   விலையின்றிப் போற்றவில்லையோ நாதன் - லீலிப்
   புஷ்பங்களில் வன்மையைத்தான் வைத்தார்

8. பத்மு தீவில் ஏகனாய் நான் தங்கிடினும் பயப்படேன்
   வானந் திறந்தேசு நாதர் ஜோதியாய் - என்னைப்
   பரதீசில் ஆவிக்குள் எடுப்பரே

9. ஹா மகேசா கருணேசா பொன்னு நாதா நீரெனக்காய்
   வேண்டியதெல்லாம் தயவாய் தந்ததால் - நான் என்
   வாணாளெல்லாம் உம்மைப் போற்றிப் பாடுவேன்

# Tamil Hymn No 44

## COMFORT IN SORROW

பல்லவி

ஆனந்தமே பரமானந்தமே - இயேசு
அண்ணலை அண்டினோர்க் கானந்தமே

சரணங்கள்

1. இந்தப் புவி ஒரு சொந்தமல்லவென்று
   இயேசு என் நேசர் மொழிந்தனரே
   இக்கட்டுத் துன்பமும் இயேசுவின் தொண்டர்க்கு
   இங்கேயே பங்காய்க் கிடைத்திடினும் - ஆன

2. கர்த்தாவே நீர் எந்தன் காருண்யக் கோட்டையே
   காரணமின்றிக் கலங்கினேனே
   விஸ்வாசப் பேழையில் மேலோகம் வந்திட
   மேவியே சுக்கான் பிடித்திடுமே - ஆன

3. என் உள்ளமே உன்னில் சஞ்சலம் ஏன் வீணாய்க்
   கண்ணீரின் பள்ளத்தாக்கல்லோ இது
   சீயோன் நகரத்தில் சீக்கிரம் சென்று நாம்
   ஜெய கீதம் பாடி மகிழ்ந்திடலாம் - ஆன

4. கூடார வாசிகளாகும் நமக்கிங்கு
   வீடென்றும் நாடென்றும் சொல்லலாமோ
   கை வேலையல்லாத வீடொன்றை மேலேதான்
   செய்வேன் எனச் சொல்லிப் போகலையோ - ஆன

5. துன்பங்கள் தொல்லை இடுக்கண் இடர் இவை
   தொண்டர் எமை அண்டி வந்திடினும்
   சொல்லி முடியாத ஆறுதல் கிருபையைத்
   துன்பத்தினூடே அனுப்பிடுவார் - ஆன

6. இயேசுவே சீக்கிரம் இத்தரை வாருமேன்
   ஏழை வெகுவாய்க் கலங்குகிறேன்
   என் நேசர் தன் முக ஜோதியதேயல்லால்
   இன்பம் தரும் பொருள் ஏதுமில்லை - ஆன

# Tamil Hymn No 45

## THE LORD, YOUR HELPER

### கண்ணிகள்

1. கலங்காதே தவிக்காதே
கர்த்தர் தாமே உன் மேய்ப்பர்
உறங்காமல் தூங்காமலே
அவர் உன்னைக் காக்கிறார்

2. திகையாதே பதையாதே
இயேசு தாமே உன் மேய்ப்பர்
இராப் பகலாய் உனக்காக
வேண்டுதல்கள் செய்கிறார்

3. காக்கும் வல்ல மீட்பருண்டு
சிந்தை ஏதும் வேண்டாமே
உன் துயரம் யாவும் முற்றாய்
அறிந்தவர் அவரே

4. சிங்கக் குட்டி பட்டினியாம்
தேவ மக்கள் பூர்த்தியாம்
திடமாய் அவர் கரத்துள்
அடங்கிப் பொறுத்துப்பார்

5. தன் மகனைத் தந்த தெய்வம்
தருவாரே யாவையும்
கேடு ஒன்றும் வந்திடாமல்
காத்திடுவார் நிறைவாய்

6. கவலை வேண்டாம் கண்ணீர் வேண்டாம்
கர்த்தரையே நம்பிக்கொள்
நம்பினோரைக் கைவிடேன் நான்
என்று அவர் சொல்கிறார்

7. அல்லேலூயா அல்லேலூயா
நன்மைக் கர்த்தர் நமக்கு
நல்ல கர்த்தர் நமக்குண்டு
அல்லேலூயா ஆமென்

# Tamil Hymn No 46

## REJOICE, THOU CHURCH

சரணங்கள்

1. ஜெய கீதம் பாடிடுவோம்
மீட்பின் நாள் இதோ வருவதால்
துன்பத்தைச் சகிக்கும் சபை
இன்ப வீட்டில் சேர்க்க மணாளன் வாறார்

பல்லவி

ஆனந்தங் கொள்ளு இயேசு சபையே
அதி வேகம் வாறார் மணவாளன்

2. அதிக துன்பம் அனுபவிப்பாய்
சீக்கிரம் உன் துன்பம் ஒழிந்திடுமே
சோர்ந்திடாய் அவர் சபையே
மேகமதில் அவர் உயர்த்திடுவார் - ஆன

3. அதிக கஷ்டம் உண்டுனக்கு
இருதய வேதனை உன்பங்கு
அன்புள்ள அவர் கரத்தால்
உன் கண்ணீர் யாவையும் அவர் துடைப்பார் - ஆன

4. நேச மீட்டர் நீர் வருவீர்
அந்நாளில் என் உள்ளம் பொங்கிடுமே
அழகுள்ள உம் முகத்தை
ஆனந்தக் களிப்புடன் தரிசிபிபேன் - ஆன

5. வா என்று அவர் அழைப்பார்
அவருடன் செல்ல நீ ஆயத்தமா?
ஆவியும் மணவாட்டியும்
வாரும் வாரும் என்றழைப்பார் - ஆன

6. அல்லேலூயா அல்லேலூயா
திருத்துவ மூவரையும் வாழ்த்துவோமே
அல்லேலூயா அல்லேலூயா
சதா காலமும் பாடிடுவோம் - ஆன

# Tamil Hymn No 47

## WILL, YOU BE THERE?

### கண்ணிகள்

1. பரிசுத்தர் கூட்டம் இயேசுவைப் போற்றி
   பாடி மகிழ்ந்தோடி அங்கே கூடிடப்
   பரமானந்த கீதமங்கெழும்ப
   நீ அங்கிருப்பாயோ - சொல் என் மனமே

2. ஆட்டுக்குட்டியும் அரசாட்சி செய்ய
   அண்டினோர் எவரும் அவரைச் சேர
   அன்பர் அன்றெல்லார் கண்ணீரும் துடைக்க
   நீ அங்கிருப்பாயோ - சொல் என் மனமே

3. பேதுரு பவுலும் யோவானும் அங்கே
   பின்னும் முற்பிதாக்கள் அப்போஸ்தலரும்
   இரத்த சாட்சிகளும் திரளாய்க்கூட
   நீ அங்கிருப்பாயோ - சொல் என் மனமே

4. ஜெகத்தில் சிலுவை சுமந்தோரெல்லாம்
   திருமுடியணிந்திலங்கிடவும்
   தேவ சேயர்களாய் எல்லோரும் மாற
   நீ அங்கிருப்பாயோ - சொல் என் மனமே

5. சோதனைகளை வென்றவர் எவரும்
   துன்பம் தொல்லைகளை சகித்தவரும்
   ஜோதி ரூபமாய்ச் சொர்க்கத்தில் ஜொலிக்க
   நீ அங்கிருப்பாயோ - சொல் என் மனமே

6. கன்னிகையைப் போல் கர்த்தர் சபை அன்று
   மன்னர் மணாளன் ஏசுவை மணந்து
   பின்னும் சொல்லரிதாம் நிலை ருசிக்க
   நீ அங்கிருப்பாயோ - சொல் என் மனமே

# Tamil Hymn No 48

## ARE YOU READY TO MEET GOD?

பல்லவி

உன் தேவனைச் சந்திக்க நீ ஆயத்தமா?

அனுபல்லவி

சீக்கிரமாய் வருவாரே - உன்

சரணங்கள்

1. மேகங்களுடன் வருவேன் என்று சொன்னவர்
   இப்போ மேகந்தனில் வரும் நேரம் கிட்டிச் சேருதே - உன்

2. தேவ தூதரோடும் பெரும் எக்காளத்தோடும்
   தம் பக்தரைச் சந்திக்கும் நேரம் கிட்டிச் சேருதே - உன்

3. பரிசுத்தமாக்கப்பட்டோர் பறந்திடுவார்
   பாவங்களில் ஜீவப்பவர் பதைத்திடுவார் - உன்

4. பூவில் இயேசு வரும்போது பொல்லாரோடிடுவார்
   அந்த விதம் நீயிருந்தால் என்ன செய்திடுவாய் ? - உன்

5. அவபக்தர் அக்காலத்தில் அழுதிடுவார்
   அவர் வரும்போது ரட்சிப்படைய மாட்டார் - உன்

6. பரனை ஏற்றுக்கொள்ளாதோர் அந்த நாளிலே
   பதுங்கி நித்தியமாகப் பரிதபிப்பார் - உன்

7. இரக்கமுள்ள இந்நாளில் மனந்திரும்பு
   இந்நிமிஷம் ஏற்றுக் கொள்ளு மன்னிப்புப் பெற - உன்

8. உனக்காய் மரித்த இயேசு காத்து நிற்கிறார்
   இயேசு உன்னைப் பட்சமாக ஏற்றுக்கொள்ளுவார் - உன்

# Tamil Hymn No 49

## HEAVENLY CANAAN

கண்ணிகள்

1. இன்பக் கானானுக்குள் ஏழை செல்ல
   இயேசுவின் மார்பில் நான் ஆனந்திப்பேன்

2. பரம சுகங்களின் இனிய ரசம்
   பரமேசனோடு யான் பானம் செய்வேன்

3. பரம பிதாவெந்தன் கண்ணினின்று
   அழுகையின் கண்ணீரைத் துடைத்திடுவார்

4. சத்துரு சேனைகள் அங்கேயில்லை
   இயேசுவின் புத்திரர் மாத்திரமே

5. தேவாட்டுக் குட்டியின் திருமனைவி
   சிறப்புட னிலங்கிடும் தேசமது

6. கேருபீன் சேராபீன் பாடிடவே
   மூப்பரும் சாஷ்டாங்கம் பணிகிறாரே

7. சொல்லுக்கும் நினைவுக்கும் எட்டிடாத
   சொர்க்கீய நாட்டுக்கோர் இணை இல்லையே

8. பரிசுத்த ஆவியின் பளிங்கு நதி
   பளபளென் றொழுகிடும் தேசமது

9. ஜீவ விருட்சமங்காற்றருகில்
   மாதந் தோறும் புதுக் கனி தருமே

10. நவ இரத்தின நிர்மிதப் பட்டணத்தில்
    இராப் பகல் சூரியன் இயேசு தாமே

# Tamil Hymn No 50

## HEAVEN

கண்ணிகள்

1. உன்னத வீட்டைச் சீக்கிரம் சென்று அன்பரைச் சேர்ந்திடுவேன்
   இயேசு ரட்சகர் ஏழையின் வாஞ்சை யாவையும் தீர்த்துவிட்டார்

2. தூதரின் மத்தியில் மகிழ் கொண்டாடிட தேவனைப் போற்றிடுவேன்
   கமழ் வாசனை வீசும் பூக்களின் மத்தியில் இன்பமாய் அயர்ந்திடுவேன்

3. வானோர்கள் பலபல ஊழியஞ்செய்ய ஏழையும் சேர்ந்து கொள்வேன்
   என் ஏசுவின் துதியை நாவினால் பாடி நேசரால் அகமகிழ்வேன்

4. பளிங்கு நதியின் ஓரங்களில் நான் ஓடியுலாவிடுவேன்
   பொன் வீதியில் நானும் அன்பருடனே கவியுடனே அடியெடுப்பேன்

5. பேதுரு யோவான் பவுலும் கூட அங்கே ஓய்ந்திருப்பார்
   என் நேசரின் வீட்டில் மகா பெருமின்பம் ஆ ஆ ஆனந்தமே

# Tamil Hymn No 51

## MORNING HYMN

### கண்ணிகள்

1. அருணோதயம் எழுந்திடுவோம்
   பரனேசுவை ஸ்துதிப்போம்
   அருணோதயம் பரமானந்தம்
   பரனோடுறவாடவும்

2. இதைப் போன்றொரு அருணோதயம்
   எமைச் சந்திக்கும் மனமே
   ஆ என்னானந்தம் ஜோதிச் சூர்யனாம்
   எந்தன் நேசரெழும்பும் நாள்

3. நன்றியாலுள்ளம் பூரித்திடுதே
   அன்னையாமேசு காருண்யம்
   ஒவ்வொன்றாயிதைத் தியானஞ் செய்யவும்
   எவ்வாறு மேற்ற சந்தர்ப்பம்

4. போன ராவினில் ஜீவித்தோர் பலர்
   பூமி விட்டுமே போய்விட்டார்
   என்றாலும் நமக்கிந்த நாளையும்
   தந்த நேசரை ஸ்துதிப்போம்

5. நான் நிர்வாணியாய் வந்த வண்ணம்
   நிர்வாணியாகவே போகின்றேன்
   கூடச் செல்லவும் பூவிலொன்றுண்டோ
   நாடிப்போமந்த நாட்டிற்கே

6. ஆ என் நேசரின் அன்பை எண்ணவும்
   ஆனந்தம் பரமானந்தம்
   ஆ என் நேசரோர் நவ வான் புவி
   தானஞ் செய்ததே ஆனந்தம்

7. பார் தன் நேசரின் மார்பில் சாய்ந்தேகும்
   யாரிவள் கானகந்தனில்
   எந்தன் நேசரின் கூடச் செல்கின்றேன்
   சொந்த ராஜ்யத்தில் சேரவும்

8. கொண்டல் மோதும் வறண்ட நாடிதில்
   நண்பரே கைவிடாதேயும்
   ஆசையோடு நான் வாறேனென் துக்கம்
   பாசமாயங்கு தீர்த்திடும்

# Tamil Hymn No 52

## WEDDING HYMN

பல்லவி

எழுந்து வாருமையனே – நசரேயனேசுவே
எழுந்து வாருமையனே

சரணங்கள்

1. மங்கள மித்தினம் - எங்கும் முழங்கிட
சங்கை பெரும் திரு – திங்களொளி தேவா - எழு

2. மங்கை மரிமகன் - எங்களேசையனே
இங்கு பரிவுடன் - தங்கிடுமையனே - எழு

3. அன்று கானான் கலி – யாணத்தில் நின்றீரே
இன்றும் இந்தமண - வீடதில் வந்திடும் - எழு

4. தோழர் தோழிகளும் - சூழயிவ்வாழிகள்
வாழவே நீடூழி - காலமொழுங்காக - எழு

5. மங்களம் மங்களம் - மங்களமென்றுமே
எங்கள் மணவாள - னேசுவுக்கென்றுமே - எழு

# Tamil Hymn No 53

## PILGRIM TO ZION, REJOICING IN THE OPE BEFORE HIM

கண்ணிகள்

1. தேவாட்டின் திரு ரத்தத்தால்
நான் சுத்தமாகினேன்
அவரின் சுத்தரத்தத்தால்
நான் ஜெயம் பாடுவேன்
மகிமை ரட்சகா துதி உமக்கென்றும்
சேற்றில் நின்றென்னை நீர் மீட்டெடுத்ததினால்
துதிப்பேன் உம்மை நான் ஆயுள் முழுவதும்
நன்றியோடடி பணிந்து

2. சந்தோஷித்தும்மைப் பாடுவேன்
சீயோன் யாத்திரையில்
பந்தயப் பொருள் பெற்றிட
நான் முந்தி ஏகிறேன்
கிடைக்கும் நிச்சயம் கிரீடமெனக்கு
சத்துருக்களதைக் கொண்டு போவதில்லை
கர்த்தன் கையில் நின்று அன்று நான் பெறுவேன்
தூதர் கூட்டத்தின் மத்தியில்

3. என் பாக்கியம் நினைக்கையில்
என் உள்ளம் துள்ளுதே
பூலோக சுகம் தள்ளினேன்
மெய்ப் பாக்கியம் கண்டு
நித்திய நகரில் சேர்ந்து நான் பாடுவேன்
ராஜன் முகங்கண்டு என்றும் சந்தோஷிப்பேன்
இரத்தத்தின் பலனால் வாழுவேன் சொர்க்கத்தில்
கோடி கோடி யுகங்களாக

4. மனோகரமாம் சீயோனில்
நான் வேகம் சேருவேன்
கிலேசம் முற்றும் நீங்கிப்போம்
அவ்விடமேகவே
நித்திய சந்தோஷம் பெற்றிடுவேனங்கே
சத்துரு வந்ததைக் கொண்டு போவதில்லை
ஆனந்தம் கூடுமே கீதங்கள் பாடுவேன்
ராஜன் இயேசுவின் சமுகம்

# Tamil Hymn No 54

## WALKING WITH JESUS

சரணங்கள்

1. இயேசுவே நானும்முடன்
   வாழ்விலும் மா தாழ்விலும்
   இருளிலும் ஒளியிலும் ஏகுவேன்
   பூவிலும் நீர் மாத்திரம்
   வானில் வேறு இல்லையே
   இனிமேல் நீரே துணை என்றைக்கும்

பல்லவி

என்றைனக்கும் என்றைனக்கும்
ஈசன் இயேசுவோடு நிற்பேன் என்றும் என்றைனக்கும்
போர் செய்வேன் ஜெபத்தினால்
பாடுவேன் சந்தோஷத்தில்
போற்றுவேன் என் கஷ்டத்தில் என்றைனக்கும்

2. இயேசு பூவில் வந்தாரே
   தாழ்மையாய் நடந்தாரே
   பாடு பட்டுயிர்த்தாரே எனக்காய்
   ஜெயம் பெற்றெழுந்தாரே
   பிதாவின் பக்கம் நிற்கிறார்
   பரிந்து பேசுகின்றாரே எனக்காய் - என்

3. புண்ணியனே பூமியில்
   புறாவைப் போலச் சாந்தமும்
   சுத்தம் உண்மை தாழ்மை யாய் ஜீவித்து
   அன்பிலே அமிழ்ந்து நான்
   என்னைப் பலியாக்கியே
   மண்ணில் பரன் இயேசு போல் மாற்றிடும் - என்

4. இத்தரையின் ஓட்டம் பின்
   நித்தியர் முகம் கண்டு
   சுத்தரோடு அப்போது போற்றுவேன்
   வீணை விளையாடலாம்
   வெண்மை வஸ்திரத்துடன்
   மன்னர் இயேசுவோடு நான் அரசாளுவேன் - என்

# Tamil Hymn No 55

## LONGING TO SEE THE FACE OF CHRIST

பல்லவி

இயேசுவின் முகம் என்று கண்டு கொண்டாடுவேன் - 2
ஆசை யதேயல்லால் வேறெனக்கில்லையே - 2

சரணங்கள்

1 நீரெனை நேசித்த நேசம் நினைக்கையில் - 2
இதற்கிணையாக நான் என்ன செய்திடலாம் - 2 - இயேசு

2 பரம பிதாவண்டை பரத்திலுட்கார்ந்திட
பாரில் கழிப்பதின் நாட்களதிகமோ? - இயேசு

3 என் கிரீடம் வேறு யாரும் எடுக்காமல்
உம் சித்தம் போலென்னை ஓடச்செய்திடுமே - இயேசு

4 நல்ல போர் செய்தெந்தன் வேலை முடித்திட
வல்லவனே தினம் சக்தி நீர் நல்கிடும் - இயேசு

5 இவ்வன லோகத்தில் நீரெனக் காறுதல்
தந்தையும் தாயாரும் நீர் தானென் தெய்வமே - இயேசு

6 கண்மணியே எந்தன் கண்ணீர்களெல்லாம் நீர்
பொற்கரத்தால் முகம் தொட்டுத் துடைப்பீரே - இயேசு

# Tamil Hymn No 56

## CHRISTIAN'S HAPPINESS

பல்லவி

ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே - அதி
சந்தோஷமே இது சந்தோஷமே

அனுபல்லவி

தந்தை தாயோனோரும் சொந்தமானோர்களும்
தந்திடாத பரமானந்தமே - ஆன

சரணங்கள்

1. எப்போதும் சந்தோஷம் சந்தோஷமே - இது
ஒப்பில்லாத பரமானந்தமே
அந்நியர்களையும் ஏகமானோரையும்
ஒன்றாகச் சேர்க்கின்ற தானந்தமே - ஆன

2. கிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்டெடுத்த - மக்கள்
ஆனந்தங் கொண்டிங்கு பாடுகிறார்
இப் பூவிலுள்ளதை ஒப்பிடிலொவ்வாத
ஆனந்தங் கொண்டவர் பாடுகிறார் - ஆன

3. இப்பூவி லானந்தம் இவ்விதமுண்டெனில்
சொர்க்கத்தின் ஆனந்தம் சொல்லலாமோ
என் ஆத்துமாவே நீ காண்பாயே வேகத்தில்
ஆனந்தக் கூட்டத்தை மோட்சத்திலே - ஆன

4. மண்ணான சரீரம் மாறிடும் நேரத்தில்
விண் சரீரம் நமக்கீந்திடுவார்
சற்று நேர மின்னும் தாமதித்திடுகில்
பொன் நேசரை முத்தம் செய்திடலாம் - ஆன

5. இப்போது காணாமல் நேசிப்பதென்றாலும்
சீக்கிரம் சென்று நீ கண்டிடுவாய்
அப்போதென் நேசரின் காயங்களும் கண்டு
ஒவ்வொன்றாய் முத்தங்கள் செய்திடலாம் - ஆன

# Tamil Hymn No 57

## HEAVEN

சரணங்கள்

1. சுத்தர் துதிக்கும் வீடே தெய்வ மக்களின் ஆறுதலே
   ஒளி மினுங்கும் பொற் தெரு வீதியினில்
   அகமகிழ் வோடென்று நான் சேர்ந்திடுவேன்

பல்லவி

வானவரின் துதிகளெல்லாம் தொனித்திடுமச்
நானென்று சேர்ந்திடுவேன் - பரிசுத்தரை
என்று நான் சேர்ந்திடுவேன்

2. முத்துக்கள் முற்றுமுள்ள வாசல்கள் பன்னிரண்டங்கேயுண்டு
   கர்த்தரின் மகிமை கண்டானந்திக்க
   கண்களெல்லாம் எப்போவென்றாசிக்குதே - சுத்

3. இருளில்லா இன்ப நாடே தெய்வ அருளுள்ள நல்ல வீடே
   ஒளி கொடுப்பார் தேவாட்டுக்குட்டியங்கே
   அளவின்றிப் பாடித் துதித்திடுவேன் - சுத்

4. கஷ்டங்களில்லா நாடே தெய்வ பக்தரின் ஆறுதலே
   புகழ் பெருகும் புதிய எருசலேமே
   திரு மார்பில் என்று நான் சார்ந்திடுவேன் - சுத்

5. களங்கமில்லாத் தெளிந்த சுத்த ஜீவ ஜல நதியின்
   கரைகளதில் ஜீவ விருட்சக்கனி
   பிரபையுள்ள தெய்வத்தின் தோட்டமது - சுத்

6. சுத்தர் சிங்காசனத்தைச் சுற்றிவரச் சுரமண்டலக்காரரே
   நதி போன்ற ஆசையுண்டாகு தென்னில்
   தூதரோடு சேர்ந்தங்கு பாடிடவே - சுத்

# Tamil Hymn No 58

## HOLY SPIRIT

பல்லவி

எரியு மக்கினி போலுமதாவி – நீர்
சொரிந்திடும் பரனே – தினந்தினமாய்

அனுபல்லவி

உரைத்திட நாவால் உயிருடன் மொழிகள்
சொரிந்திடும் வரங்கள் நிறைந்தொழுக - இப்போ - எரி

சரணங்கள்

1. சிநேக அக்கினி யென்னில் எரிந்தெழும்பி - பெரும்
   தாகமாத்துமாக்கள் மேலோங்கிடவே
   அன்பினுரைகளால் கடினவுள்ளமிளகி
   வேகம் மரண பாதை விட்டு விலக – அவர் - எரி

2. பலிபீடத்தின் திரு அக்கினியால் - என்
   அதரத்தின் குறைகளகன்றிடவும்
   பலவித நூதன வசனங்களுரைக்கப்
   பலமான கிருபை பெற்றிடவும்- வாரும் - எரி

3. உம்மி லடியேன் பிரகாசித்திட - நான்
   என்னை முழுதுமாக வெறுத்துவிட்டேன்
   மன்னவா எந்தனில் வந்து அவதரித்து
   வானாக்கினியால் முற்றும் கழுவி விடும் - வந்து - எரி

4. தேசமெல்லாம் பற்றியெரிந்திடவே - உம்
   தாசரிலக்கினி மூண்டெரிந்து
   நாச உலகந்தனிலக்கினிபோல் உப
   தேசிக்கத் திரு நல் வார்த்தைகளை – உப - எரி

5. அக்கினி பூவிலிட வந்தவரே - மிக
   விக்கினம் பெருகுதே பாருமதை
   அக்கினியாயுமதடியார்க் ளெரிந்திட
   அக்கினி அபிஷேகம் அளித்திவிடும் - இப்போ - எரி

# Tamil Hymn No 59

## THE SPIRITUAL RACE

சரணங்கள்

1. ஜீவ பாதையில் வீசும் பிரகாசத்தில்
   தீவிரம் நடப்பதே எனதாத்திரம்
   பாவ உலகத்துடன் நான் சேர்ந்திடேன்
   தேவாட்டுக் குட்டி பின்னே போகத் துணிந்தேன்

பல்லவி

நான் போகிறேன் நான் போகிறேன்
இன்னலென்னும் குன்று கண்டு நான் அஞ்சிடேன்
நிந்தை படும் சில தேவ மைந்தர்களுடன்
நான் போகிறேன் - இயேசுவே நான் போகிறேன்

2. ஓட்டம் தொடங்கின பேர் அதிகம்
   மீட்பருடன் போனார் மெத்த மெதுவாய்
   கூட்டம் புதியதென்று சிலர் கூடினார்
   நாட்கள் போனதால் பலர் வாட்டமடைந்தார் - நான்

3. கெட்ட உலத்தின் கட்டுகளில் நான்
   பட்டுப் பரம பாதை விட்டு விலகேன்
   கற்களை என் தலையின் அணையாக்கினும்
   வெட்கமடையேன் மீட்டர் பின் செல்லுவேன் - நான்

4. நித்திய சந்தோஷங்களின் ராஜ்ஜியம்
   நிச்சயம் சேரில் கஷ்ட பாதை நடப்பீர்
   அட்சயனழைத்த சிறு மந்தையைச் சேர்த்து
   இரட்சகருடன் போவோம் முற்று முடிய - நான்

# Tamil Hymn No 60

## TRUST IN THE LORD

பல்லவி

இயேசுவேயென் நம்பிக்கை – ஏகிடுவாரென் பக்கம்
நாசமணுகாமலே – நேசமாய் நடத்துவார்

அனுபல்லவி

காசினி மீதெனக்கு – ஆசை வேறு இல்லையே - இயேசு

சரணங்கள்

1. கடைசி பரியந்தமும் - கூடயிருப்பேனென்றார்
   அதை நான் நம்புவேன் - இடைவிடாமலே
   பதைக்காமல் நிற்பேன் - இயேசு

2. எந்தனின்பம் விரும்பி - துன்பந்துயருற்றாரே
   சொந்த ரத்தத்தைச் - சொரிந்து எந்தனைத்
   தம் சொந்தமாக்கினார் - இயேசு

3. கஷ்டம் என்மேல் வீழ்ந்தாலும் - துஷ்ட ரெதிர் நின்றாலும்
   நஷ்டமடையேன் - என் ரட்சகனெனை
   கட்டியணைப்பார் - இயேசு

4. தேகம் மெத்த வருந்தி - சாகும் வேளை வந்தாலும்
   ஜெகத்தினுதவி - இகழ்ச்சி வந்தாலும்
   சோர்ந்திடமாட்டேன் - இயேசு

5. வேதனைகள் வந்தாலும் - சோதனைகள் சூழ்ந்தாலும்
   காதலன் இயேசு - பாதுகாத்தென்னை
   ஆதரிப்பாரே - இயேசு

6. துன்பம் துயர் வந்தாலும் - நண்பர் வழி நடப்பேன்
   அன்பரெந்தனை - இன்ப வீடதில்
   கொண்டு சேர்ப்பாரே - இயேசு

# Tamil Hymn No 61

## THE NARROW WAY ENDS IN ETERNAL GLORY

சரணங்கள்

1. இவ்வழி மெத்த இடுக்கம் நெருக்கம்
   யார் இது கடந்தடுவார் ?
   சிநேகிதர் சுருக்கம் சகாயிகள் சுருக்கம்
   ஆ! இதல்லோ மோட்ச வழி

பல்லவி

கஷ்டங்களும் தீர்ந்திடுவார் சுத்தரையும் சேர்த்திடுவார்
சட்டென்றேசு வந்திடுவார்
கஷ்டங்கள் தீர்த்திடுவார் கண்ணின் நீர் துடைப்பார்
துக்கமெல்லாம் தீர்ந்தடுமே

2. யாருண்டு சாருதற்கு மணவாளனொழிய
   நெருக்கமுள்ள இவ்வழியில்
   அவசியம் மெத்தந்தான் வாக்குத்தத்தம் உண்டல்லோ
   ஆ! இதெல்லாம் சத்தியமல்லோ - இயேசு

3. முன்னே பல சுத்தர்கள் விட்டதை நினைக்கையில்
   நானும் அதை வெறுத்திடுவேன்
   லோக சுகமதிலே மோட்ச பாக்கியம் இல்லையே
   என் நிச்சயம் மோட்சத்தில் - இயேசு

4. கூட்டாளிகள் தூஷிக்கட்டும் நாட்டிலுள்ளோர் பழிக்கட்டும்
   இயேசு இன்றும் ஜீவிக்கிறார்
   விட்டதும் விற்றதும் இயேசுவில் ஆதாயம்
   கீழ்ப்படிந்தேன் அல்லோ நான் - இயேசு

5. நான் குறையும் போதல்லோ இயேசு என்னில் வளர்வார்
   மகிமை அவருக்காகட்டும்
   நானவர்க்காய்ச் சாகவோ எப்படித்தான் நேர்ந்தாலும்
   ஆயிரங்கள் ஜீவிக்கட்டும் - இயேசு

6. கண்ணீரோ வெள்ளம் போல் நிந்தைக்குக் குறைவில்லை
   என்றாலும் ஆறுதலுண்டு
   இயேசுவின் சாட்சியாலும் சத்திய வசனத்தாலும்
   நிந்தைகள் பெருகிடுதே - இயேசு

7. கூலிக்காரன் அல்ல நான் இயேசுவின் ஸ்தானாபதி
   தெரிந்தெடுக்கப்பட்டவன் நான்
   ராஜரீக புரோகிதன் சுத்த வம்சத்தான் நான்
   சொந்தக்காரனல்லோ நான் - இயேசு

8. மரணம் வரையும் திரு இரத்தத்தாலும்
   திரு வசனம் வழியும்
   பரிசுத்த ஆவியானலும் பரிசுத்த மாக்கவேணும்
   கறை திரையில்லாமல் - இயேசு

# Tamil Hymn No 62

## JESUS DIED FOR THE SINNER

சரணங்கள்

1. நான் செய்த பாதகம் எப்படிப்போம் - பாவ
நாசகர் எவ்விட முண்டு
ஸ்ரீ இயேசு இரட்சகர் பாவிகட்காய் - குருசில்
பிராணனை விட்டதுண்டு

பல்லவி

கொடும் பாவி என்னை இரட்சிக்க இரட்சிக்க (2)
திரு சிரசில் அவர் முள் முடி தரித்தார்
கொடும்பாவி என்னை இரட்சிக்க

2. உலகத்தின் பாவிகள் மோட்சம் சேர - அவர்
கண்ணின் நீர் விட்டாரல்லோ
தாகமுள்ளவர்கள் ஜீவ ஆற்றில் - தாகம்
தீர்ப்பதற்காய் வரட்டும் - கொடும்

3. பாவியா மென்னுடைய பாவமேற்று
மனஸ்தாபமோட வந்தபோது
கல்லுள்ளம் நீக்கித் தன் ஆவியினால்
என் உள்ளம் திருப் பாதை சேர்த்தார் - கொடும்

4. எந்தப் பாவிகட்கும் இரட்சகர் தான்
அவர் சத்திய கர்த்தனல்லோ
பாவத்தை வெறுத்து கர்த்தரில் நீ - நம்பு
மோட்சத்தில் சேர்ப்பார் உன்னை - கொடும்

5. இந்தப் பாக்கியம் தந்த இயேசுவுக்குப் பதில்
நான் என்ன கொடுக்கவேண்டும்
என் பூர்ண சக்தியோடு அவர் நாமத்தை
என்றும் வாழ்த்தி புகழ்ந்திடுவேன் - கொடும்

# Tamil Hymn No 63

## PRAYER FOR DIVINE GRACE

பல்லவி

கிருபை வேண்டும் நாதா இயேசுவே உம் திவ்விய
கிருபை வேண்டும் நாதா இவ்வாராதனையில்

சரணங்கள்

1. உம் கிருபை தான் வேண்டும் சொர்க்கீய ராஜாவே
   உம் கிருபையல்லாது எங்களால் ஆகாது - கிருபை

2. ஏழு பிசாசுகள் ஓட்டியே இயேசுவே
   மரியாளை நேசித்து அன்பால் நிரப்பிய - கிருபை

3. இருவராம் சீஷரின் சஞ்சலங்கள் நீக்கி
   இருதயம் குளிர்ந்திட இனிமையாய்ப் பேசின - கிருபை

4. பாவத்தை இனிமேல் செய்யாதே என்றுமே
   பாவியாம் ஸ்திரீக்கு நேசமாய்க் கூறின - கிருபை

5. பெந்தெகொஸ்தின் நாளில் அன்பராம் சீஷர்மேல்
   உந்தன் வரங்களை மாரிபோல் பொழிந்த - கிருபை

6. தாசனாம் ஸ்தேவானின் சாயலை மாற்றின
   நேசமாம் கிருபையை எம்மேலும் ஊற்றிடும் - கிருபை

7. வருகிறேன் சீக்கிரம் என்றுரைத்த நேசா
   தருகிறேன் என்னையே ஆசீர்வதித்திட - கிருபை

8. அடியாராம் ஏழைகள் உம்மை சந்தித்திட
   முடிவு வரைக்குமே காத்திடும் கிருபையால் - கிருபை

# Tamil Hymn No 64

## THE HEAVENLY CITY

கண்ணிகள்

1. மாஷி மிகும் மோட்ச நகர் மகிமை என் சொல்வேன்
   அந்த மங்களம் சேர் மாளிகைக்குள் என்று சேருவேன்

2. நாமெல்லாரும் நாடுகின்ற பட்டணமது
   நமது நாதரேசு வீற்றிருக்கும் பட்டணமது

3. பட்டணத்து வீதியெல்லாம் சுத்தப் பொன்னாமே - அங்கே
   பாடுவோரும் ஆடுவோரும் கோடாகோடியே

4. முத்து மயமாயிலெங்கும் பட்டணமது நமது
   முன்னோர் பலர் போயிருக்கும் பட்டணமது

5. ஜீவ நதி ஒடுகின்ற பட்டணமது - வெகு
   சித்திரமுடனிலங்கும் பட்டணமது

6. சாவு துக்கமேயில்லாத பட்டணமது - நிதம்
   சங்கீதங்கள்தான் முழங்கும் பட்டணமது

7. எண்ணிறந்த துாதர் போற்றும் பட்டணமது - அங்கே
   ஓயாமல் கீதம் பாடும் பட்டணமது

# Tamil Hymn No 65

## ETERNAL JOY IN HEAVEN

சரணங்கள்

1. ஜீவ நதியின் ஓரமாய் சீயோன் பட்டணம் காணுது
   சீக்கிரமாய் சேருதற்கு என் உள்ளம் வாஞ்சிக்குது

பல்லவி

நித்தியம் நித்தியம் நித்தியமாக
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தங் கொள்ளலாம்

2. பாவம் நிறைந்த உலகமே உன் பாக்கியம் எனக்கு வேண்டாமே
   கண்ணீர் நிறைந்த உலகமே உன் கஸ்தி எனக்கு வேண்டாமே

3. கெத்செமனே தோட்டத்தில் என் நேசர் சத்தம் கேட்குதே
   பெந்தெகொஸ்தின் ஆவியால் என் இதயம் நிரம்பி வழியுதே

4. பேயின் கோட்டை தகர்த்த வீரன் போன பாதை தோணுதே
   சீயோன் மலையில் நேசரோடு வாழக் காலம் நெருங்குதே

5. ஆட்டுக்குட்டியின் மகிமை காண ஆனந்தம் பரமானந்தம்
   மீட்கப்பட்டவர் கூட்டம் சேர ஆ அது மிகப்பேரின்பம்

# Tamil Hymn No 66

## PRAISE HIM

பல்லவி

எந்நாளுமே துதிப்பேன் - என் நேச ரேசுவை

அனுபல்லவி

காலையும் மாலையும் மற்றெல்லா வேளையும்
கையையும் நெஞ்சையும் மேலேயுயர்த்தி நான் - எந்

சரணங்கள்

1. பாவங்கள் நீக்கி விட்டார்-தம் இரத்தத்தைச் சிந்தி
காணாமற் போயினேன் கண்டு பிடித்தனர்
தூக்கிச் சுமந்து தம் மந்தையிற் சேர்த்தனர் - எந்

2. அன்பின் சொரூபி அவர் - அவ்வன்பைக் காட்டினார்
மாட்டுத் தொழு முதல் தூக்கு மரம் வரை
ஈனக் கோலம் பூண்டு நிந்தையும் சகித்தார் - எந்

3. சாவின் நிழலதிலும் - பிசாசினால் வரும்
நானே உன் பரிகாரி விலக்குவேன் வியாதியை
நோக்கிப் பார் என்னை இரட்சிப்பேன் என்பதால் - எந்

4. அளிக்கிறார் நன்மையெல்லாம் - ஒவ்வொருநாளிலும்
ஊணும் உடையையும் வேண்டும் பொருளெல்லாம்
குறைவின்றி நிறைவாகத் தந்திடுவதால் நான் - எந்

5. பரிசுத்த ஜீவயத்தை - இப்பார்தலத்திலே
தேவ பயத்தோடு ஊக்கமாய்ச் செய்யவே
ஆவியின் ஈவையும் எனக்களித்ததால் - எந்

6. வந்திடுவாரே அவர் - வெகு சீக்கிரமாக
காண்பேன் அவரை நான் சேர்வேன் அவரிடம்
அல்லேலூயா பாடிப் பாடிப் போற்றியே - எந்

7. வாழுவேன் என்றைக்குமே - என் நேசர் பக்கத்தில்
புதிய எருசலேம் என் சுய தேசமாம்
வானவருடன் நான் ஆனந்தங்கொள்ளுவேன் - எந்

# Tamil Hymn No 67

## PRAISE HIM FOR THIS CONVENTION

பல்லவி

துதிப்போம் துதிப்போம் சபையோரை- இந்த
இரட்சிப்பை தந்த இயேசுவையே

அனுபல்லவி

நம் வாழ்நாளில் இதுவே கொண்டாட்டம்- பூவில்
எங்கும் கிடையாப் பெரும் பாக்கியம் - பாடி - துதி

சரணங்கள்

1. சுத்தப் பரிசுத்தரவரே-எங்கும்
சுத்தமாய் நிற்கும் மெய்பொருளே
தூயதாம் தூதர் பாடிப் போற்ற - அவர்
துதிக்குள்ளே வாசஞ் செய்வதாலே – பாடி - துதி

2. புறஜாதியாகவே ஜீவித்தோம் - முன்பு
முறையீனமாக கெட்டுப் போனோம்
திறமாக இயேசு வந்துதித்து - தம்
திரு இரத்தம் சிந்தி உயிர் தந்தார் - பாடி - துதி

3. எரிகோவின் கோட்டை விழுந்ததே - இந்த
துதியாகும் ஆயுத மதினால்
ஆஹா போற்றிக் களித்துத் துதிப்போமே- தீய
சாத்தானின் கோட்டைகள் விழவே – பாடி - துதி

4. ஆறு இருப தாசாரியர் - துதி
செய்தார் சாலொமோன் ஆலயத்தில்
தேவன் மகிமையாய் வந்திறங்கினாரே- இன்றும்
மகிமையால் மத்தியில் வரவே – பாடி - துதி

5. இரண்டாம் வருகையும் சமீபம் - பல
ஆண்டாக எச்சரித்தும் வாறார்
ஆண்டாம் இதிலே இயேசு வந்தால் - நாம்
ஆயத்தமாக இருக்கவே – பாடி - துதி

# Tamil Hymn No 68

## THE LOVE OF JESUS

பல்லவி

தேவா உம் பாதம் தேடியே வந்தேன்
காவா உம் அன்பதினால்

அனுபல்லவி

மூவா உன்னை இப்போது பணிந்தேன்
நாடியே தேடியே கூடியே வந்தேன் நான் தேவா - தேவா

சரணங்கள்

1. பாவத்தில் மாளும் பாவியை மீட்க அன்பு வடிவம் கொண்டீர்
   இன்பமாக என்னை ஏற்றுக்கொள்ள நீர்
   தாவியே மேவியே கூவியே வந்தேன் நான் - தேவா

2. அச்சம் பயம் நீங்க அன்போடெனைத் தாங்க அன்பு மயமாய் வந்தீர்
   வம்பு செய்யும் கொடும் பாதகரைக் காக்க
   அன்னையே உன்னையே தன்னையே கொடுத்தீர் - தேவா

3. சிலுவையில் தொங்கிய கிறிஸ்தேசு நாதன் உன் அன்பை எவ்விதம் சொல்வேன்
   தூஷித்த வர்க்கல்லோ நேசித்து ஜெபித்து நீர்
   நேராயே வாறாயே மாறாயே என்றென்றும் - தேவா

4. சகலமும் தாங்கும் சகலமும் சகிக்கும் அன்பு ஒழிந்திடாதே
   பூரண அனபு பயத்தை நீக்கும்
   புண்ணியனே உன்னை நண்ணியே வந்தேன் நான் - தேவா

5. சீஷர்கட்கு நீர் போதித்த அன்பை தாசர்கட்கு ஈயுமே
   அன்பாலே நாங்கள் ஊழியம் செய்திட
   கிருபையே தருவாயே அருள்வாயே இப்போது - தேவா

# Tamil Hymn No 69

## THE UNSEARCHABLE RICHES OF CHRIST

பல்லவி

ஆனந்தங் கொண்டுள்ளந்தான் பொங்குதே – எந்தன்
ஆத்தும நேசரவர் அன்பினால்

சரணங்கள்

1. பாவஙகளில் போன என்னை மேவி தேடினாரன்றோ
   சாபங்களில் நின்று என்னைத் தூக்கி விடுத்தாரன்றோ
   பாவியில் பெரும் படு பாவியாகுமென்
   பாவதேவ கோபம் யாவும் போக்கியே கை தூக்கியதால் - ஆன

2. கிறிஸ்துவையும் சேராமலே தூரமே நின்றேனன்றோ
   இஸ்ரவேலின் காணியாட்சி தூரமாய் நின்றதன்றோ
   வாக்குத்தத்தங்கள் யாவும் போக்கியே நின்றேன்
   காணியாட்சி வாக்குத்தத்தம் கிறிஸ்துவுக்குள் எனதாட்சி - ஆன

3. இயேசுவுடன் சுதந்திரமே எந்தன் பங்குமானதே
   இயேசுவின் சரீரத்திலோர் அவயமானதால்
   தேவ இரகசியம் ஓகோ பெரிய பொக்கிஷம்
   தலைமுறை தலைமுறை மறைந்திருந்தும் வெளியானதால் - ஆன

4. காலங்களும் செல்லச் செல்ல இயேசுவும் சமீபமே
   மேலானதை நாடி நாடி உள்ளமும் கதறுதே
   இயேசுவே வாரும் என்னைப் பாசமாய் சேரும்
   ஆசையோடு நேசரையே பார்த்துப் பார்த்து வாஞ்சிக்கிறேன் - ஆன

5. மேகமதில் இயேசு வெகு வேகமாக வருகிறார்
   கூட்டுங்கள் என்னிடமாக எந்தன் சுத்தரை என்பார்
   மண்ணின் சாயல் போய் மெய் விண்ணின் சாயலாம்
   விண் சரீரம் சொந்தமாக்கி விண்டலம் பறந்து போவேன் - ஆன

6. அப்போஸ்தலன் செப்பிய இரகசியமும் இதுவே
   எவ்வுலகும் காணக்கிட்டா மேலான இரகசியம்
   ஓர் நிமிஷமாம் ஓர் இமைப் பொழுதுமே
   எக்காளம் முழங்கிடவே ஜீவன் சாவை விழுங்கிடுமே - ஆன

7. ஜெபத்துடனாயத்தமாக மேலே நோக்கிப் பார்த்துமே
   ஜெயங்கொண்ட நல்ஜீவியத்தை ஜோதியாக செய்துமே
   ஜொலித்துமே நிற்கும் தம் மணவாட்டி சபை
   ஜோதியாம் சபையாகத் தமக்கு முன் நிறுத்துவாரே - ஆன

# Tamil Hymn No 70

## COMING OF JESUS

1. மேகமீதில் தூதரோடிதோ இதோ
   மேசையா கிறிஸ்தேசையா எனதாசை நேசையா
   வாறார் வாறார் மகிழ் கெம்பீரமாய்

2. தேகத்தோடு போனவர் இவர் இவர்
   திரும்பவும் பதினாயிரம் கணுதூதர் சூழ்ந்திட
   சீக்கிரம் வாறார் ஜெகத்தை நோக்கியே

3. மணவாளன் இயேசு வருகிறார் இதோஇதோ
   மணவாட்டி சேர்த்திட மரித்தவர் எழ மகிமையோங்கவே
   மாதேவ தூதன் முழங்கவே

4. ஆரவாரம் கேட்குதே அதோ அதோ
   ஆட்டுக்குட்டியின் பாட்டோடெக்காளம் அதிர்ந்தொலிக்கவே
   அல்லேலூயா வென்றார்ப்பரிப்போமே

5. ஜீவமுடி சூடி நாமங்கே அங்கே
   தேவ சாயலாகி அவரோடு வாழ்வோமே
   ராஜ ராஜராக ஆள்வோமே

# Tamil Hymn No 71

## THANKFULNESS TO GOD

பல்லவி

தேவரீருக்கே மிக ஸ்தோத்திரம் மிக ஸ்தோத்திரம்

சரணங்கள்

1. ஜீவனோடெம்மைப் புதிய வாரம் புதிய வருடம்
சேர்த்துக் காத்தனையே - நின்
செட்டையின் மீதடியார்களை வைத்தே
சுமந்து சேர்த்தனையே - தேவ

2. எய்திடும் துன்பம் எத்தனையுண்டதற்
கெல்லாம் விலக்கினையே
இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலெங்கள்
ஏதம் போக்கினையே - தேவ

3. எங்களின் தேகம் எங்களின் ஆவியும்
எல்லாம் உமதன்றோ - இவை
எல்லாம் படைத்தேன் ஏற்றுக்கொள்ளுமேன்
எல்லாம் உமக்கென்றே - தேவ

4. உந்தன் நாமம் பரிசுத்தப்படுக
உம் ராஜ்யம் வருக
உம் சித்தம் பரலோகம் போல
உலகில் செய்யப்படுக - தேவ

5. இராஜ்யம் வல்லமை மகிமையும் கனமும்
உமக்கே யுடைமையே இவ்
வெளியார்க் குந்தன் அருளைத் தந்து
ஆசீர்வதித்தருளும் - தேவ

# Tamil Hymn No 72

## MORNING DEVOTION

பல்லவி

வாழ்த்துகிறேன் இயேசு சுவாமி வாழ்த்துகிறேன் இக்காலையிலே

அனுபல்லவி

அற்புதமாய் இராமுழுவதும் அடியேனைக் காத்தீரே - வாழ்

சரணங்கள்

1. உமது செட்டை நிழலதிலே படுத்திருந்தேன் இராமுழுவதும்
உமது கரம் அணைத்திடவே ஆறுதலாம் நித்திரையும் - வாழ்

2. நித்திரையை இன்பமாக்கிப் பத்திரமாய் இருதயத்தைச்
சுத்தமான இரத்தத்திற்குள் சுத்தமாக வைத்திருந்தீர் - வாழ்

3. பலவிதமாம் சோதனைகள் எமைச் சூழ வந்திருந்தும்
ஒன்றும் எமை அணுகாமல் அன்புடனே பாதுகாத்தீர் - வாழ்

4. சந்திப்பீரே இக்காலைதனில் தந்திடவே திருவரங்கள்
சந்தோஷமாய்ப் பகல் முழுவதும் ஆவிக்குள் யான் பிழைக்க -வாழ்

5. தந்திடுவீர் அபிஷேகம் புதிதாக இப்புது நாளில்
நடத்திடுவீர் ஆவியினால் உமது திருச்சித்தமதில் - வாழ்

6. பாவம் ஒன்றும் அணுகிடாமல் பரிசுத்தமாய்ப் பாதை செல்ல
தேவையான சர்வாயுதங்கள் தாரும் ஜெப ஆவியுடன் - வாழ்

7. படைக்கிறேன் என் இருதயத்தை பலிபீடத்தில் முற்றுமாக
கண்களுடன் செவியோடு வாயும் கை காலுமாக - வாழ்

8. செய்வேன் யான் எப்போதும் உம் சித்தமே ஆசையுடன்
ஒழித்திடுவேன் வீண் வார்த்தை பேசிடுவேன் உம் வாக்கை- வாழ்

9. எனைக் காண்போர் உமைக் காண உம் சாயல் எனில் வேண்டும்
தந்திடுவீர் தாழ்மையையும் பொறுமையுடன் அன்புமாக - வாழ்

10. நேசரே உம் திருவாக்கை இந்நாளில் இருந்திடினும்
ஆசையுடன் சந்திக்கவே ஆயத்தமாய் வைத்துக் கொள்ளும்- வாழ்

# Tamil Hymn No 73

## CONSECRATION

பல்லவி

நேச இயேசு சுவாமி உம்மிடம் வாறேன் சந்தித்திடும்

அனுபல்லவி

நேசரே என்னை இரத்தத்திற்குள் தத்தம் செய்தேன்
சுத்தம் செய்ய

சரணங்கள்

1. உம்மைப் போல ஜீவிக்கவே என்னைச் சுத்தமாக
   உம்மைப் போல மாற்றிடுமே மண் ஒளியை விண்ணொளியாய்

2. ஜீவிக்கட்டும் உம்மோடு நான் நோவா பக்தன் போல
   ஜீவித்தானே ஏனோக்கும் ஏற்றுக்கொண்டீர் சேர்த்துக்கொண்டீர்

3. லோக மேன்மை ஒன்றும் வேண்டாம் என்றும் இயேசு போதும்
   இச்சையும் லோகமும் ஒழிந்து போம் உம்மைச் சேர்வேன் என்றும்
   நிற்பேன்

4. ஆவி ஆத்மா காயத்தை தத்தம் செய்கிறேனே
   மேவியே உம் சாயல் என்னில் தாரும் என்னைக் காண்போர்
   உம்மைக் காண

5. எந்த வேளை நீர் வந்தாலும் சொந்தமாய்ச் சந்திக்கவே
   என்னை முற்றும் சுத்தமாய் வைத்துப் பரத்திற் சேர்த்துக்
   கொள்ளும்

6. ஆசிக்கிறேன் சீக்கிரமாய்ச் சேர மேகத்திலே
   நேசிக்கின்ற உம்வரவில் மாறிடுவேன் வேறுருவாய்

# Tamil Hymn No 74

## WARNING THE SINNER

பல்லவி

கிருபைக் காலம் ஓடியே போகுது நரரே
கிருபை பெற்றிட ஓடியே வாரும் நீர் விரைவாய்

சரணங்கள்

1. பகல் சென்று போயிற்று இரவு வந்து கிட்டிற்று
சொந்தமாக இயேசுவைச் சந்தோஷமாய்ச் சேர்ந்திட - கிருபை

2. லோக நேசம் வெறுத்துப் பாவ ஆசை அறுத்துப்
பாவ மன்னிப்படைந்து ஜீவ வழி சேர்ந்திட - கிருபை

3. சொந்தக் கிரியை முன்னே அந்தகாரம் பின்னே
அந்த வழி செல்வாயோ உன் அந்தம் அக்கினிக்கடலில் - கிருபை

4. நாளை உன் நாளாகுமோ மரிக்கும் வேளை தெரியுமோ
நாதர் இயேசு வேகம் வாறார் வேளை தெரியாததாகையால்-கிருபை

5. அந்திக்கிறிஸ்து வந்திட மானிடரைச் சேர்த்திட
தேவ சிநேகம் குறைந்துபோம் பாவம் ஏராளமாம் - கிருபை

6. கபட பக்தி தள்ளியே கபட்டு வாய் அடைத்துமே
ஆக்கினை அடையுமுன் தண்டனைக்குத் தப்பவே - கிருபை

7. எந்த தூது கேட்டுமே மாறிடாத மானிடர்
ஏழை என்னை இரட்சியும் என்று கெஞ்சிக் கேட்கவே - கிருபை

8. நோவு துன்பம் மரணமோ வேறு எந்தக் கஷ்டமோ
நெருங்கி உன்னைச் சேருமுன் இயேசுவண்டை ஓடிவா - கிருபை

9. கர்த்தர் உன்னைத் தள்ளுமுன் நரகத்தை நீ செருமுன்
தேவ கிருபை பெற்றிட இயேசுவின் பாதம் சேர - கிருபை

10. ஆதி அன்பு குளிர்ந்து அலைந்தலைந்து ஜீவிக்கும்
மானிடரைப் பாராமல் இயேசுவை நீ பார்த்துவா - கிருபை

# Tamil Hymn No 75

## ETERNAL JOY

1. என்ன என் ஆனந்தம் என்ன என் பேரின்பம்
   விண் தூயரோடு சேர்ந்து நானும் அன்பரைப் பாடிடுவேன்

2. இத்தரை யாத்திரையில் முற்றிலும் போராட்டமே
   முற்றும் வெற்றி பெற்றவர்க்கு நித்திய மகிமையே

3. ஈலோக ஜீவனே புல்லுக்கு ஒப்பானதே
   வாடிப் போகும் பூவைப்போல மாய்ந்து போகுமே

4. இப்பாழுலகத்தில் ஆசை ஒன்றுண்டோ
   பஞ்சு போல் பறந்திடும் இப்பாழுலகமே

5. மண்ணான இந்த உடல் மண்ணாகப் போய்விடினும்
   எக்காளம் முழங்கும் போது மகிமையே டெழும்பும்

6. வீணை சத்தமும் தம்புரு முழக்கமும்
   என் நேசர் சமுகம் என்ன இன்பம் சொல்லரியாதே

7. பொற்தளமாம் வீதி இங்கிதசாலேமிலே
   பொன்னேசரோடு நின்று நானும் ஓடியுலாவிடுவேன்

8. சுத்தர் யாவரும் விண் ஜோதியிலென்றும்
   கர்த்தாவின் சமுகந்தனில் மகிழ்ந்து பூரிப்பார்

9. என் நேசர் மார்பினில் நான் சாரும் நேரமே
   ஆ என்ன இன்பம் என்ன மதுரம் சொல்லரியாதே

# Tamil Hymn No 76

## INVITATION TO A SINNER

சரணங்கள்

1. பாவத்தின் பலன் நரகம் நரகம்
ஓ பாவி நடுங்கிடாயோ ?
கண் காண்பதெல்லாம் அழியும் அழியும்
காணாததல்லோ நித்தியம்

பல்லவி
இயேசு ராஜன் வருவார்
இன்னும் கொஞ்ச நேரந்தான்
மோட்ச லோகம் சேர்ந்திடுவோம்

2. உலக இன்பம் நம்பாதே நம்பாதே
அதின் இச்சை யாவும் அழியும்
உன் ஜீவன் போகும் நாளிலே நாளிலே
ஓர் காசும் கூடவராதே - இயேசு

3. உன் காலம் எல்லாம் போகுதே போகுதே
உலக மாயையிலே
ஓ தேவ கோபம் வருமுன் வருமுன்
உன் மீட்பரண்டை வாராயோ? - இயேசு

4. தேவன்பின் வெள்ளம் ஓடுதே ஓடுதே
கல்வாரி மலைதனிலே
உன் பாவம் நீங்கிப் போகுமே போகுமே
அதில் ஸ்நானம் செய்வதாலே - இயேசு

5. மா பாவியான என்னையும் என்னையும்
என் நேசர் ஏற்றுக் கொண்டாரே
ஓ பாவி நீயும் ஓடிவா ஓடிவா
தேவாசீர்வாதம் பெறுவாய் - இயேசு

# Tamil Hymn No 77

## WORSHIP

பல்லவி

அன்பின் சொரூபியே - அருள் நிறை வள்ளலே
இன்பமாய்ப் போற்றுவோம் - இந்நேரமிதிலே

அனுபல்லவி

உன்னத அன்பே - ஒளிதரும் இன்பே
உமதடி பணிந்து - போற்றுவோம் போற்றுவோம் - அன்

சரணங்கள்

1. வந்திடுவீரே - வல்லமையாக
வானவர் தூத - கணங்களுடனே
பெந்தெகொஸ்தின் பெரும் - பேரான மாரியை
பொழிந்திடுவீரே - இக்கூட்டமிதிலே - அன்

2. மகிழ்திடுவோமே - மணவாளனோடு
மணவாட்டியாம் திருச் - சபையோரெல்லோரும்
ஆனந்தித்திடுவோம் - ஆர்ப்பரிப்போடு
ஆகமகிழ்வோடு - ஆராதித்திடுவோம் - அன்

3. கட்டிக் கரும்பே - கருணைக் கடலே
காருண்ய தேவனே - காத்திருக்கிறோம்
ஊற்றும் அருள்மாரி - உம்திரு நாமம்
மகிமையாய்ப் பிரகாசிக்க - மானிடர் மத்தியில் - அன்

4. அழைக்கிறோமே நாம் - அகமகிழ்வுடனே
அன்புடனே வாரும் - ஆசீர்வதிக்க
இன்புற்று நாமும் - இராஜனுடனே
இராப்பகல் ஓய்வின்றிப் - பாடித் துதிப்போம் - அன்

# Tamil Hymn No 78

## A PRAYER

பல்லவி

ஆண்டவனே உமது எண்ணம்
போலச் செய்வதடியேன் திண்ணம்

அனுபல்லவி

ஆதரை மீதில் நின் பாதாரம்
தானே எனக்குமே ஆதாரம் - ஆண்

சரணங்கள்

1. சொன்னபடியே செய்வேன் நாதா
என் அன்பு நிறைந்த திருப் பொற்பாதா
மன்னவா என்ன வந்தாலுமே
மாறேன் ஆணை ஒருக்காலுமே - ஆண்

2. கூறும் அடியேன் நான் கேட்டிட
பாரி லும்மைத் தினம் போற்றிட
வாரி புவி யாவும் படைத்தோனே
வாரிதியே எம் கிருபா நிதியே - ஆண்

3. வாரும் இரண்டாவது முறையே
தருவாய் அருள்மாரி இறையே
கிருபை அன்பு நிறைந்த துரையே
அறச் செய்யும் எமது குறையே - ஆண்

# Tamil Hymn No 79

## REJOICE IN THE LORD

பல்லவி

அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா என்றென்றும்
ஆனந்தமாய் ஆனந்தமாய் ஆர்ப்பரிப்போம் என்றென்றும்

சரணங்கள்

1. பாவத்தில் ஜீவித்தோர் பாவிகளாம் எங்களின்
   பாவத்தின் சாபத்தைத் தீர்த்துமே ரட்சித்தார் - அல்

2. பரிசுத்த ஜீவியம் பார்தலத்தில் நாம் செய்ய
   பரிசுத்த ஆவியின் முத்திரையும் தந்ததால் - அல்

3. நோய்களைக் கல்வாரிச் சிலுவையிலே சுமந்தவர்
   அடியாரின் நோய்களைக் கல்வாரியில் தீர்த்தவர் - அல்

4. மேகத்தில் மன்னவர் மகிமையாய் வரும்போது
   மணவாட்டிக் கூட்டத்தில் நம்மையும் சேர்த்ததால் - அல்

5. ஆயிரம் வருஷத்தில் ஆனந்தமாய் வாழ்கையில்
   ராஜராய் நாமுமே ஆளுகையும் செய்வதால் - அல்

6. சாத்தானின் கூட்டத்தின் நியாயத்தை விசாரிக்க
   நியாயாதிபதியாய் நம்மையும் நிறுத்துவார் - அல்

# Tamil Hymn No 80

## QUENCH OUR THIRST O, LORD

பல்லவி

தாகத்தைத் தீருமையா - அபி
ஷேகத்தைத் தாருமையா - எங்கள்

சரணங்கள்

1. ஆகம முன்னே அறிவித்த வண்ணம்
ஆவியாலடியாரை நிறைத்தீரல்லோ!
ஏக கர்த்தாவே ஏழையின் மீதே
இறங்கிடும் இப்போதே - எம்மில் - தாக

2. சத்துருவாலே சகிக்காவொண்ணாத
எத்தனையோ துன்பம் வந்திடினும்
அத்தனே உமது அருட் பெலத்தாலே
நித்தமும் ஜெயங்கொள்ளுவோம் - நாங்கள் - தாக

3. வேதத்தின் பொருளை விளக்கிட வல்ல
போதகரா மாவியானவரே!
பாதத்தில் வீழ்ந்து பணிந்திடுவோமே
பரிசுத்த மாவோமே - நாங்கள் - தாக

4. சுத்த ஜீவியமும் தூய ஊழியமும்
கர்த்தனே உமக்கு நல் காணிக்கையாம்
சித்தங்கொண்டெமை நீர் பாவிப்பாதாலே
மெத்தவும் பலன் காண்போம் - நாங்கள் - தாக

# Tamil Hymn No 81

## CALVARY

பல்லவி

கல்வாரி மலையில் - எந்தன் பாவங்களைப் போக்க
தாவி உயிர் விடுத்த - கல்வாரி மலையில்

அனுபல்லவி

பாவி நானுந்தன் - பாதம் குனிந்து
பரிவுடனே இப்போ – தாவிப்பணிந்து - கல்

சரணங்கள்

1. தேடி வந்த மேய்ப்பா - பாதம் குனிந்து வரும்
   அலைந்து போன ஆட்டைத் - தேடி வந்த மேய்ப்பா
   ஆடுகளுக்குந்தன் - உயிர்தனைக் கொடுத்து
   நானே நல்ல மேய்ப்பன் - என்று உரைத்து - கல்

2. பாரச் சிலுவை எடுத்து - எந்தன் பாவங்களைத் தடுக்க
   மேவி உயிர் விடுத்து - பாரச் சிலுவை எடுத்து
   கோரமாகவே - காயங்கள் பட்டு
   குரிசினிலே நீர் - முள் முடி தரித்து - கல்

3. எத்தனையோ துன்பம் - இந்த ஏழைகளை மீட்க
   அத்தனையும் சகித்து - எத்தனையோ துன்பம்
   பக்தி நெறியில் என்னை - நடத்திட வேதா
   பாடுகளை நீர் - சகித்த மெய்த் தேவா - கல்

4. குத்திடச் சேவகனும் - உந்தன் விலாவிலே
   குருதியும் வடிய - குத்திடச் சேவகனும்
   வடிந்த உன் உதிரத்தின் - வல்லமை தந்த
   புண்ணியனே உம்மைப் - போற்றியே வந்தேன் - கல்

5. தோத்திரம் மெய்த் தேவா - என்னைப் பாத்திரமாக மீட்ட
   தாவீதின் கோத்திரனே - தோத்திரம் மெய்த் தேவா
   குரிசினில் தொங்கி நீர் - குருதியும் விட்டீர்
   பாரனிலே என்னைப் - பரிவுடன் வைத்தீர் - கல்

# Tamil Hymn No 82

## INVITING THE LORD

பல்லவி

அன்பின் ரூபி இயேசு தேவா - அளித்திடும் திருக் கிருபையால்

அனுபல்லவி

இவ்வாரதனை மீதில் வந்தருள் மழை பொழிந்திடும் - அன்

சரணங்கள்

1. பாவிகள் மனதுருக வந்துரை மொழிந்திடும்
பாதகர் உம்மண்டை வந்து பாவ மன்னிப்படைய - அன்

2. கானலைக் கண்ட மானைப் போல காதலுள்ளோர் தேடிட
கானாவூர் கற்சாடி ஆறும் - திராட்சரசத்தால் நிறைந்தாற்போல்

3. ஆறிருபது தாசர்கள் ஆர்ப்பரித்து அன்றுமே
ஆவ்வாறோர் முறை நாங்களும் - திருவன்பினால் நிரம்பவே -அன்

4. சங்கை துலங்க கீதம் எழும்ப உம்பரர் துதித்திட
எங்கும் பிரகாசமாகும் எம்பரா நீர் வந்திடும் - அன்

5. இங்கெழுந் தெழும்பதலடையச் செய்யும் இயேசுவே
இன்றென்றும் அல்லேலூயா - ஓசான்னா புகழ் - அன்

# Tamil Hymn No 83

## INVITING THE LORD

கண்ணிகள்

1. மகிமையுள்ள பரமராஜா மகிமையோடின்று உந்தன்
   மகத்வமுள்ள ஆலயத்தின் எழுந்தருளுமேன்

2. கறை திரைகள் குறைகள் ஒன்றும் எம்மில் இல்லாதே நாதா
   சபையை முற்றும் சுத்திகரித்தாசீர்வதிப்பீர்

3. புதிய தூது சபையில் இன்று வெளிப்படுத்தவே உந்தன்
   புதிய சக்தி பேசும் தாசர்க்களித்தருளுமே

4. ஆதிச் சபையில் நடந்த அற்புதங்களே - இன்று
   இச்சபையிலே நடக்க அருள் புரியுமே

5. சபை கூடும்போதுள்ள வல்ல கிருபை வரங்களை - இன்றே
   சபையிலுள்ள தாசர் மேலே ஈந்திடுவீரே

6. அற்புதங்கள் அடையாளங்கள் ரோக சௌக்யங்கள்- சபையில்
   பிரத்தியட்சமாய்க் கண்டிட வாஞ்சிக்கிறோம் நாம்

7. சுத்தர் கூட்டம் சபையிற் கூடி ஐக்கியமாகவே - பரி
   சுத்தரோடு ஒன்றாய்க்கூட வாஞ்சிக்கிறோம் நாம்

8. ஸ்தோத்திர சத்தம் சபையிலுள்ளோர் ஆர்ப்பரிக்கவே - தேவா
   ஸ்தோத்திரம் செய்ய பாத்திரராகப் பாதம் வீழ்கிறோம்

# Tamil Hymn No 84

## BESTOW THY LOVE

பல்லவி

ஈயுமையா உம்மேலான அன்பெனக்கு

அனுபல்லவி

உள்ளமுருகுதே ஆவி தியங்குதே
தேவா நீர் பாராட்டும் மேலான அன்பாலே - ஈயு

சரணங்கள்

1. வாறேனையா கல்வாரியின் அன்பைக் கண்டு – வாறேனையா
ஐயா அறிந்திலேன் வழியும் தெரிந்திலேன்
தேவா நானேழையும் பாதம் பின்வாறேன் நான் - ஈயு

2. வைக்க ஐயா என் ஜீவனைப் பலியாக - வைக்க ஐயா
உலகமழியுதே அன்பு குறையுதே
தேவா உமக்காய் ஜனத்தை நான் காணேனே - ஈயு

3. தாறேனையா எந்தன் ஆவியாத்மா சரீரம் - தாறேனையா
ஐயா நீரேற்றிடும் துய்யா கண்ணோக்கிடும்
பரனே உம்மன்பை இப்பேதைக்கு ஈந்திடும் - ஈயு

4. போகிறாரையா நரக பாதையில் ஜனம் - போகிறாரையா
பாவம் பெருகுதே உலக முயருதே
தேவா உம்மன்பை நரருக்குக் கூறவே - ஈயு

5. இல்லையென்றீர் உம்மன்புக்குத் தீமையொன்றும் இல்லையென்றீர்
சகலமும் தாங்குமே சகலமும் சகிக்குமே
தேவா உம்மன்பை என் உள்ளம் கவருதே - ஈயு

# Tamil Hymn No 85

## INVITING THE LORD

சரணங்கள்

1. துதி பெருக இயேசு நாதா கதிதரவே இங்குமது
திருமுக அருள் வடிவின் இரகசியம் துலங்கிடவே

பல்லவி

வந்தருளும் இயேசுநாதா தந்தருள ஆசிர்வாதம்
பெந்தெகொஸ்தே வல்லமையால் இங்கெழுப்புதல் அடைய -வந்

2. உதித்திடவே யேகோவாவே அதிபதிகள் ஆத்துமாவில்
உயிரடைந்து புதிய தினமிது தனிலுணர்ந்திடவே - வந்

3. பாவிகள் மேலன்பு கூர்ந்து தாழ்வரமிறங்கியோனே
ஈஸ்வரா இப்பாவிகளின் முழு மனம் திரும்பிடவே - வந்

4. தாசர்களினாறுதலே தாழ்மையுள்ளோர் தேறுதலே
ஆறுதலிவ்வேழைகட்கு ஆவியால் புரிந்திடவே - வந்

5. அல்லேலூயா பிதா சுதன் ஆவி திரியேகருக்கே
என்றென்றைக்கும் பாடிடுவோம் அல்லேலூயா ஓசன்னாவே - வந்

# Tamil Hymn No 86

## PRAYER

பல்லவி

வாரும் தேவா தேவ சேயா காத்திடுவாய் கிருபை கூர்ந்து

அனுபல்லவி

காரும் தேவா கருணை கூர்ந்து
கருதினேனே திருப்பாதத்தை
வருந்தினேனே பதம் பாடவே - வாரும்

சரணங்கள்

1. பாவியாய்த் திரிந்தலைந்தேன் பாரினிலே வெகுகாலமாய்
ஆவி தந்துணர்த்தித் திருப்
பாதம் சேர்த்த இயேசு நாதா
பதம் பாடுவேன் திருவருளால் - வாரும்

2. இஸ்ரவேலின் காணியாட்சி எனைப் பிரிந்து நின்றதை
யேகோவா எனக்களித்து
இணைத்த பெரும் நன்றியாலே
இசைத்திடுவேன் என்றென்றுமே - வாரும்

3. ஒருவரும் சேரக்கூடாத உம்பரமே என் பரமாய்
பிரியமுடன் எனக்களித்த
பேசும் மறு பாஷையாலே
உரிமையுடன் பாடிடுவேன் - வாரும்

4. அப்பாவே தேவப் பிதாவே அளித்திடுவாய் நல்வரங்கள்
இப்பாரிலே உம் வரவில்
ஏகிடவே மனமகிழ்வாய்
பாடிடுவேன் அதை நினைந்து - வாரும்

5. வாரும் தேவாட்டுக்குட்டியே வாரும் சீயோன் மலைச்சிகரில்
காரும்தேவ தாசர் நூற்று
நாற்பத்தினாலாயிரம் பேருள்
ஆடிப் பாடி மகிழ்ந்திட நான் - வாரும்

6. சாட்சியாய் மொழிந்த தேவா தரணிதனில் நீர் எப்போ வருவீர்
மாட்சியோடு மகிமையில் நான்
ஆட்சி பெற்று ஆர்ப்பரித்து
ஆமெனாமென் என்று பாட - வாரும்

# Tamil Hymn No 87

## INVITING THE LORD

கண்ணிகள்

1. வல்லமைச் சுருதியே வல்லமைச் சுருதியே
வாருமிந்தப் புதுத்தினத்தில்
தந்தை தாயானோர்களும் சொந்தமான பேர்களும்
இங்கு உமக்கு ஸ்தோத்திரம்

2. காருண்யக் கர்த்தனே காருண்யக் கர்த்தனே
காரு மிந்தப் புதுத்தினத்தில்
அந்தகாரம் நீங்கவே துங்கனரு ளோங்கவே
உந்தனருள் ஊற்றிடுவாயே
தங்கமேயுமக்கு ஸ்தோத்திரம்

3. சாந்தத் திரு வடிவே சாந்தத் திரு வடிவே
சோர்ந்திடாதிப் புதுத்தினத்தில்
பெந்தெகொஸ்தின் வாசனே அந்த ஆவி நீளவே
எங்களக மீந்திடுவாயே
தந்தையே உமக்கு ஸ்தோத்திரம்

4. ஆருயிர்ச் சொரூபியே ஆருயிர்ச் சொரூபியே
ஆதரிக்கப் புதுத்தினத்தில்
வந்த தேவ மைந்தர்கள் உந்தனைப் பிரிந்திடா
துகந்திடு மெங்கள் பரனே
வேந்தனே யுமக்கு ஸ்தோத்திரம்

5. உத்தம நற் போதனே உத்தம நற் போதனே
உண்மையாயிப் புதுத்தினத்தில்
போதகத்தி னூழியர் சாதனை யடைந்திட
நாதனே உம் காதலீந்திடும்
அன்பரே யுமக்கு ஸ்தோத்திரம்

# Tamil Hymn No 88

## PRAISES

பல்லவி

ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம் இயேசு தேவா
பாத்திரமாக இம்மாத்திரம் கருணை வைத்த தேவ தேவனே

சரணங்கள்

1. கந்தை பொதிந்தோனே மந்தையர்க் கானந்தனே
வந்தோனே புவியில் தன்னையே தந்தோனே மானிடர்க்காய் -ஸ்தோ

2. பொன் முடி வெண்ணங்கி ஜோதியாய் நானணிய
முள் முடி சூடியே செவ்வங்கி தரித்த – மன்னவனே - ஸ்தோ

3. பாதகன் நான் செய்த பாவங்கள் யாவும் தீர்க்க
காதலனே சென்றீர் கஸ்திகளடைய – கல்வாரியில் - ஸ்தோ

4. பாவ நிவாரண பலியான ஆட்டுக்குட்டி
பாவத்தில் மாளும் மானிடரை மீட்க – ஜீவன் தந்தீர் - ஸ்தோ

5. சாத்தானை ஜெயித்திட சக்தியளித்த தேவா
புத்தியாய் நடந்து யுத்தத்தில் ஜெயிக்க – ஞானந் தாரும் - ஸ்தோ

6. இவ்வித அன்பை நான் எவ்விதம் சொல்லிடுவேன்
செவ்வைபாதை சென்று ஜீவ வழி நடப்பேன் - அவர் பெலத்தால்

7. வானோர்கள் போற்றிடும் ஞானமுள்ள பிதாவே
தானங்களை யிப்போ தந்திடும் தயவாய் - தயாள பிதாவே - ஸ்தோ

# Tamil Hymn No 89

## JESUS IS COMING SOON

பல்லவி

மேகமீதில் இயேசு ராஜன்
வேகம் வாராரே

அனுபல்லவி

ஆயத்தமுள்ளோரை ஆகாயஞ் சேர்க்க
அவரே வாராரே - மேக

சரணங்கள்

1. ஆண்டவர் தாமே ஆகாயமீதில்
ஆர்ப்புடன் வாராரே
மீண்டவரோ மேலோகமே செல்ல
மேதினியை விடுவார் - மேக

2. கிறிஸ்துவுக்குள்ளே மரித்தோரெல்லாம்
கிளம்பியே எழும்பிடுவார்
மரிக்காதிருக்கும் பரிசுத்தரெல்லாம்
மறுரூபமாவாரே - மேக

3. பாடுபட்டோர்க்குப் பலனளிப்பாரே
பாடுபட்டவர் தாமே
கூடும் நமக்கோகுறைவில்லாப் பலனையே
கூவியே கொடுத்திடுவார் - மேக

4. அவருரைத்த அடையாளங்களெல்லாம்
தவராமல் நிறைவேறுதே
அவர் வரும் வேளையை எவருமறியார்
ஆண்டவரே யறிவார் - மேக

5. ஆயிர வருஷ ஆளுகை செய்வோம்
ஆசை என் நேசருடன்
நீதி சமாதானம் நிறைந்தேயிருக்கும்
அவனியின் மீதினிலே - மேக

6. அல்லேலூயா கீதமே பாடி
அகமகிழ்ந் தாடிடுவோம்
வல்லவர் வரும் வேளையுமிதோ
வேகமே நெருங்கிற்றே - மேக

# Tamil Hymn No 90

## DEVOTION

பல்லவி

துதி என் மனமே இறையோனை இன்றே

அனுபல்லவி

கர்த்தருனக்காகச் செய்ததை நினைந்தே - துதி

சரணங்கள்

1. மின்னொளி தூதரில் சௌந்தர்ய முள்ளோர்
மானிடர் மத்தியில் அன்பிலே சிறந்தோர் - துதி

2. பாரஞ் சுமப்போரை வா வென்றழைத்த
வல்ல கரத்தையுடைய உன் கோனை - துதி

3. எழுந்திப்போ போ இனிப் பாவஞ் செய்யாதே
அன்பா யிதைக் கூறி ஜெயத்தை ஈந்தாரே - துதி

4. துன்பச் சமயத்தில் ஆறுதல் செய்வோர்
வியாகுல நேரத்தில் இன்பத்தை அளிப்போர் - துதி

5. கொந்தளிப்பால் அலை படகில் வந்தாலும்
கர்த்தருள்ளானதால் திகைக்காதே நெஞ்சே - துதி

# Tamil Hymn No 91

## PRAYER FOR DIVINE GRACE

பல்லவி

கிருபை புரிந்தருளும் இந்த வேளையே

அனுபல்லவி

திருவடிவே இரட்சகா ஆ ஆ - கிரு

சரணங்கள்

1. பாதகன் நான் பாரில் பாவத்தால் நிறைந்து
   வெந்தழிந்து போகாது சிந்தினாய் ரத்தம் - கிரு

2. பாவமும் நோய் இல்லாச் சோபனக் கண்ணாளா
   காயங் கொடுத்தாயே நோயென்னை விட்டேக - கிரு

3. கெத்செமனேப் பாடே அச்சயனின் ஈடே
   எச்சணமும் சேர வச்சிரக் காதலா - கிரு

4. பாத்திரமற்ற இத்தூசி யானென் செய்வேன்
   தோத்திரமே செய்வேன் நேத்திரப் பூமானே - கிரு

5. என்ன எந்தன் நீதி சொன்னால் அருவருப்பே
   எத்தனை யானாலும் சித்தம் வைத்தாளும் - கிரு

6. குருச் சித்தம் செய்தால் பரிசுத்த மென்றீர்
   திருச் சித்தப்படியே பரிசுத்தம் தாரும் - கிரு

# Tamil Hymn No 92

## SECOND COMING

### கண்ணிகள்

1. சாலேமின் நகரதிபதி வருகை - இந்தப்
   பூலோகத் தஞ்சத்தோர்க்கு தவித்தழுகை

2. கர்த்தராம் இயேசு வேகம் வரும்போது - எல்லா
   சுத்தரும் அவரிடம் பறந்திடுவார்

3. நாதரேசு வருகையின் அடையாளங்கள் - எல்லாம்
   நானிலத்தில் நிறைவேறி நெருங்கிட்டதே

4. எப்போ எப்போ வருவார் என்று ஏங்குதே உள்ளம் - என்
   அப்பன் முகம் காண அங்கலாய்க்குதே உள்ளம்

5. ஆணி பாய்ச்சப்பட்ட கரம் கண்டிடுவேன் - என்
   அங்கலாய்ப்புத் தீர முத்தம் கொடுத்திடுவேன்

6. வாரடிப்பட்ட முதுகைப் பார்த்திடுவோன் - என
   தாவல் கண்ணீரோடு அக மகிழ்ந்திடுவேன்

7. முள்ளின் முடி தரித்த ராஜன் தலையில் - நான்
   பொன்னின் முடி தரித்துப் போற்றுவேன்

# Tamil Hymn No 93

## VICTORY

பல்லவி

சத்துரு சேனைகள் மத்தியில் ஜெய கீதம் பாடுவேன்

சரணங்கள்

1. ஆழத்தில் என்னைத் தள்ளி விட்டாலும்
அலைகள் என்னை மூடிக்கொண்டாலும் - சத்

2. வேதம் வாசித்தும் கீதம் பாடியும்
வல்ல தேவனால் வல்லமைப்படுவேன் - சத்

3. வியாதிகள் வரினும் துக்கமுமில்லை
மரணம் வந்தாலும் பயமுமில்லை - சத்

4. சட்டெனக் கேட்டிடும் வானிலெக்காளம்
பொட்டெனப் பிள்ளைகள் போய்விடும் பூமியின் பாரம் - சத்

5. சாத்தானும் சேனையும் ஓடியே போகும்
தேவனின் பிள்ளைகள் ஆனந்தித்திடுவார் - சத்

6. ஊண் உடை ஒன்றும் இல்லை யென்றாலும்
உத்தம புத்திர ருள்ளம் மகிழ்வர் - சத்

7. மித்திர ரெல்லாம் சத்துரு வென்றாலும்
மட்டற்ற மகிபர் மாறிடா ரென்றென்றும் - சத்

# Tamil Hymn No 94

## CHRIST

பல்லவி

தேவா ஜீவனுள்ளோர் தேடும் - தேவா

அனுபல்லவி

வாரும் நேசா வானவர் மேலா
வருவீரென் மனமே தினம் மகிழ்ந்திடவே – தேவா

சரணங்கள்

1. பூவும் நீரே மணமும் நீரே
ஜீவன் கொடுத்த ஒளியும் நீரே – தான்
ஜீவனுள்ளோர் தேடும் - தேவா
என் காதலனே உந்தன் சோபையே நான்
சோகமடைந்தேன் உந்தன் நேசத்தினால் - தேவா

2. அன்பும் நீரே அரணும் நீரே
அவனியி லெனக் குயிர் கொடுத்தோனும் நீரே – தான்
ஜீவனுள்ளோர் தேடும் - தேவா
பின் மாரியின் மழை இப்போ தந்திடுமே
இவ்வேழைகள் ஜெபத்துக்கு இரங்கிடுமே - தேவா

3. அல்பாவும் நீரே ஓமெகாவும் நீரே
அடியோர்க்குப் பரிபூரணம் நீரே – தான்
ஜீவனுள்ளோர் தேடும் - தேவா
உம் மகிமையின் ஆவியால் சுத்தி செய்யும்
நின் வருகையில் பரிசுத்தமாகக் காண - தேவா

# Tamil Hymn No 95

## MORNING HYMN

கண்ணிகள்

1. அதிகாலையில் விழித்தெழும்பி மகிபனேசைப் போற்றுவோம்
ஆவியில் உற்சாகமாக அன்பர் பாதம் வணங்கியே
ஆத்தும நல் நேசரையே புகழ்ந்து போற்றுவோம்

2. காலை தோறும் புதியதான கிருபை இன்று பெற்றிட
களித்துமே இம்மேதினியில் ஜீவ பாதை ஓடிட
காட்சியாய் மிக மாட்சியாய் நாம் துதித்துப் போற்றுவோம்

3. மரியாளைப் போல் உள்ளம் கனிந்து அதிகாலையில் தேடினால்
பிரியமாகக் காட்சி தந்து அக மகிழச் செய்வாரே
புகழ்ந்துமே அகமகிழ்ந்துமே எம் நேசரென்போமே

4. கண்டிடுவோம் காலை தனில் கருத்துடனே தேடினால்
கண்டனரே காலையிலெம் முன்னோர்களும் தேடியே
மகிழ்ந்தனர் அவர் புகழ்ந்தனர் பரன் பாதம் பணிந்தனர்

5. வழி இதுவே நடவும் இதில் எனவே அன்பர் பேசிடும்
இன்பமான வாக்கைக் கேட்டு இன்பக் கானான் செல்லவே
விழித்துமே உள்ளம் மகிழ்ந்துமே யாம் துதித்துப் போற்றுவோம்

6. தூதர்களாம் கேருபீகளும் சேராபீகளும் சேர்ந்துமே
தூயர் தூயர் தூயர் என்று துதித்துப் புகழ்ந் தேற்றியே
தூயரே நல் நேயமாகப் பணிந்து நிற்கவே

7. துதித்திடுவோம் நேசரையே துதித்தலின்ப மானதால்
துதியில் அவர் வாசம் செய்து துதியில் பிரியம் கொள்ளவே
ஸ்தோத்திர நற்பாத்திரரைத் துதித்துப் போற்றுவோம்

# Tamil Hymn No 96

## SECOND COMING

பல்லவி

விழித்திடும் விழித்திடுமேன் - உம் நேசருக்காய்
விழித்திடும் விழித்திடுமேன்

சரணங்கள்

1. போனபடி மீண்டும் வாறேன் என்று சொல்லிப்போனாரே
வான சேனையோடு விண்ணில் வரும் காலமாயிற்றே
காத்திரு ஜெபத்துடன் விழித்திடு ஓ! பாவியே
எந்த வேளை வருவாரோ அறிவதில்லையே - விழி

2. கள்ளனைப்போல் வரும்போது துக்கிப்பார் துன்மார்க்கரே
கண்ணீரோடு தேடினாலும் கிடைக்காதே இன்பமே
கன்மலையே மூடு என்னை என்றழுதிட்டாலுமே
இவ்வுலகில் மீட்பில்லையே வந்து சேரு பாவியே - விழி

3. எக்காளத் தொனிகள் கேட்கும் நேரம் ஆ! பேரின்பமே
அத்தொனி கேட்டு பக்தர்கள் ஆர்ப்பரிப்பார் அன்றுமே
அன்பருரை மாறிடாதே ஆதி அன்பை விட்டிடாதே
அவருன்னை அணைத்துமே ஆர்ப்பரிப்பார் ஓடிவா - விழி

4. அந்தோ, அந்தோ, மேகமதில் என் மணாளன் வாறாரே
அவனிதனில் அவரை நீ தேடிடாமல் போறாயோ
அந்த நாளில் ஏங்கிடாதே அன்பரை நீ ஏற்றுக்கொள்
ஐயையோ நீ என்ன செய்வாய் அவரண்டை ஓடிவா - விழி

5. நோவாவின் காலம் போலவே பாவத்திலே நில்லாதே
நேயனுன்னை ஏற்றுக்கொள்வார் கிட்டிவா மகனே உன்
நெஞ்சைத் தா நான் சுத்தி செய்வேன் என்று வாக்குரைத்தாரே
தோஷமொடு சேர் இந்நேரம் உன்னை மீட்டுக் கொள்வாரே - விழி

6. உத்தமியே! நேசமே! உன் அங்கி பழுதாக்காதே
பிரிவாய் இப்பொழுதே மற்றொன்றையும் நீ நாடாதே
கறையுன்னில் காணாது உன் அழகை நீ காத்திடு
வேகமாய் மேகத்திலன்பர் வருவார் தூதருமாய் - விழி

# Tamil Hymn No 97

PRAISE

பல்லவி

துதிப்பேன் இயேசுவின் பாதம் துதிக்கப் பெறுமற்புதரானதால்

அனுபல்லவி

வணங்குவேன் வணங்குவேன் வணங்குவேனவர்
பாதம் வீழ்ந்து நான் - துதி

சரணங்கள்

1. பேயின் தலை மிதித்தவர் நோயின் பெலனழித்தவர்
போற்றுவேன் போற்றுவேன் போற்றுவேனேசு தேவசுதனை - துதி

2. வானம் பூமியுமடங்கா வல்ல அற்புதரானதால்
அற்புதர் அற்புதர் அற்புதர் அவர் நாமமே அதை - துதி

3. ஜே!ஜே! ஜெயகுமாரனும் ஜெயம் பெற்று விளங்கினார்
ஜொலிப்பரே ஜொலிப்பரே ஜொலிப்பரே அவர் தாசர் என்றைக்கும்-துதி

4. தூதர் கூட்டங்கள் போற்றும் தூய சுந்தரராமிவர்
மகத்வமே மகத்வமே மகத்வமே அவர் ராஜ்யமென்றைக்கும் - துதி

5. செல்வேன் இயேசுவின் பாதம் சொல்வேன் உள்ளத்தின் பாரம்
மகிழுவேன் மகிழுவேன் மகிழுவேன் அவர் வார்த்தையிலென்றும் - துதி

# Tamil Hymn No 98

## JESUS

பல்லவி

இயேசு கிறிஸ்து இவரே – என்னை மீட்ட
இயேசு கிறிஸ்து இவரே

அனுபல்லவி

இவரே! இவரே
இயேசு கிறிஸ்து இவரே - இயேசு

சரணங்கள்

1. சங்கீத நாதமாய்ப் புகழ்வேன் - நேசரை
மங்களத் தொனியோடு துதிப்பேன்
துதியே, துதியே
மங்கள நாதமாய்த் துதிப்பேன் - இயேசு

2. மேன்மையா மின்பத்தை விட்டார் - தேவசுதன்
ஏழைக்காய் மனுக்கோலம் பூண்டார்
அன்பே அன்பே
ஏழைக்காய் மனுக்கோலம் பூண்டார் - இயேசு

3. விண் தூதர்த் தொனியுடன் வருவார் - தன் மங்கையை
மண்ணில் நின்றுயர்த்திட வருவார்
வருவார் வருவார்
மண்ணில் நின்றுயர்த்திட வருவார் - இயேசு

4. தாசர்கள் பலனீயும் நாதன் - தேவமக்கள்
போற்றிக் களித்திடும் நேசர்
நேசர், நேசர்
போற்றிக் களித்திடும் நேசர் - இயேசு

# Tamil Hymn No 99

## SELF SACRIFICE

பல்லவி

மற்றோர்க்காய் வைக்க ஐயா – என் ஜீவனை

சரணங்கள்

1. அற்பன் நான் ஆயினும் சொற்படி செய்யவே
தற்பரா வாறேனையா - இந்நேரமே - மற்

2. அங்கம் முழுவதும் தங்கமே உமக்காய்
எங்கும் பலியாகவே – என்னை - மற்

3. உப்பைப் போலாகவே எப்போதும் சாகவே
தப்பாமல் வைத்திடுமேன் - அப்பனே - மற்

4. அஞ்சிடுமிந்நேரம் கெஞ்சுதலைக் கேளும்
தஞ்சமும் நீர் தானையா – தாசனின் - மற்

5. நன்மையைப் பெறும் நான் தின்மையும் உமக்காய்
அன்பாகத் தாங்கிடேனோ? – அன்னையே - மற்

6. தியாகா என் பலியே திவ்யா நின் அடியே
மெய்யாய் நான் பின் செல்லவே – துய்யனே - மற்

# Tamil Hymn No 100

## NEW JERUSALEM

பல்லவி

பரம ராஜன் தங்கும் மகிமை – பரலோக தூதர்
பாத செவை செய்யும் மாளிகை

அனுபல்லவி

பாரினிலே பார்க்கொணாத பண்புடனிலங்கிடுதே
பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், என்றொலியே - பரம

சரணங்கள்

1. சாவு பசி துக்கமோயில்லை அம்மாளிகையில்
வாழுவோரில் வஞ்சனையில்லை
நாதரேசின் சேவை செய்தோர் நானிலத்தின் இன்பம் அற்றோர்
ஆனந்தமாய் ஆர்ப்பரிப்பார் அன்பர்முகம் கண்டிடுவார் - பரம

2. பக்தர் பரன் சாயலணிந்து – மகிழ்ந்து பாடி
நற்சுதனின் பின்னே நடந்து
பொன் மயமாய் விளங்கிடும் பொற்றளமாம் வீதிதனில்
போற்றி, ஏற்றி ஆர்ப்பரிப்போம் பொன்னின் முடி நாம் தரித்து - பரம

3. சுற்றிவரச் சிங்காசனங்கள் - சுதந்தரரின்
சாற்றவொண்ணாச் சொர்க்க இன்பங்கள்
ஜோதிலோகம் சேர்ந்திடலாம் ஜோதிமயமாகிடலாம்
ஜெயகீதம் பாடிடலாம் ஜெயம் பெற்றோர் ஏகிடலாம் - பரம

4. ஜீவ நதி ஓடும் நாடது - இரவு பகல்
இரண்டுமொன்றாய் தோன்றிடு மங்கு
இருளில்லா இன்ப நாடு அருளொளி வீசுமங்கு
இன்பலோகம், இன்பலோகம் இன்னலில்லா இன்பமது - பரம

5. முத்து வாசல் பன்னிரண்டங்கே பிரபையுள்ள
இரத்தின பொன் மண்டபங்களே
இயேசு நாதர் ஜோதியல்லால் வேறிலங்கும் ஏதுமில்லை
நாமெல்லோரும் ஆர்ப்பரிப்போம் அல்லேலூயா அல்லேலூயா - பரம

# Tamil Hymn No 101

## ACROSS JORDAN

பல்லவி

யோர்தான் நதியோரம் திகையாதே மனமே
யோசனையாலுன்னைக் கலக்காதே உள்ளமே

சரணங்கள்

1. வெள்ளம் பெருதினும் வல்லமை குன்றாதே
   வல்லவன் இயேசு வாக்கொன்றும் மாறிப் போகாதே - யோர்

2. வைப்பாயுன் காலடி தற்பரன் சொற்படி
   வானவன் இயேசு தம் வாக்கு மாறாரே - யோர்

3. உன்னத மன்னனே உண்டு முன்னணியில்
   துன்பமணுகாமல் துணை யருள்வாரே - யோர்

4. கானானினோரமே காதலன் நாடதே
   காணுவேன் தேசம் ஆ! என்ன இன்பமே - யோர்

5. பால் தேனுமோடுதே பூரண அன்பதே
   பாட்டினடாலே அதைப் பகரலாகாதே - யோர்

6. ஜெபத்தினால் வல்லமை ஜெயம் பெற்றோர் நாடதே
   ஜோதியின் வஸ்திரம் தரித்திடலாமே - யோர்

# Tamil Hymn No 102

## JOY OF SALVATION

பல்லவி

ஆனந்தம் கொண்டு அகமகிழ்வுடனே
அன்பரைப் பாடிடுவோம்

அனுபல்லவி

அவர் அன்பின் பாதத்தை அனுதினம் தேடி
ஆவியில் நிறைந்திடுவோம் - ஆன

சரணங்கள்

1. பாவத்தில் மாண்ட பாவிகளெம்மைப்
பரிவுடன் இரட்சித்தாரே – அவர்
கிருபையை நாடி ஓடிவா பாவி
உன்னையும் இரட்சிப்பாரே - ஆன

2. சுத்த ஜீவியம் கொடுத்திட இயேசு
சிலுவையில் மரித்தாரே – அவர்
சுத்த ரத்தமே சுத்திகரிக்கும்
பாவத்தை முற்றுமாக - ஆன

3. தேவன்பில் வளர தேவாவி தந்தார்
தேவன் கிருபையாக – அவர்
கிருபையை நாடி ஓடியே வந்து
ஆவியைப் பெற்றிடுமேன் - ஆன

4. துக்கமுமில்லை துன்பமுமில்லை
இயேசுவின் தொண்டருக்கு – அவர்
எல்லாவற்றிற்கும் எல்லாமயிருந்து
ஆற்றியே தேற்றிடுவார் - ஆன

# Tamil Hymn No 103

## INVITATION

பல்லவி

வாரும் தேவா வானவ ராஜா
காருண்ய அதிபதியே ஸ்தோத்திரம்

சரணங்கள்

1. வல்லமை ஞானம் நிறைந்தோர் – தேவரீர்
எல்லா மகிமை கனம் துதி பெலனானோர்
ஸ்தோத்திர பாத்திரா (2) ஓயாமல் ஆர்ப்பரிக்க ஆண்டவனார் - வாரு

2. வாழ்க நீர் ராஜாதி ராஜா – தேவரீர்
வாழ்க நீர் கர்த்தாதி கர்த்தா எம் நேசா
வாழ்க நீர் என்றுமே (2) தாழ்த்தினோம் எம்மையே உம் பாதம் வீழ்ந்து

3. பரிசுத்த நாமத்தில் நாங்கள – தேவரீர்
தரிசிக்கவே வந்தோம் தயாபர தந்தையே
கரிசனையோடுமை (2) கருத்தோடும் ஆவியாலே ஆராதிக்க - வாரு

4. தந்தையே வாரும் நீர் தயவாய் – தேவரீர்
மைந்தர்கள் கூடிடும் மத்தியில் விரைவாய்
ஈந்திடும் அருளைத் (2) தந்திடும் ஆசீர்வாதம் ஏராளமாக - வாரு

5. மகிமையால் மதிலாகச் சூழும் – தேவரீர்
தகித்திடும் அக்கினியால் சத்துருவும் மாளும்
வகித்திடும் ஆசனம் (2) போதித்திடும் வசனம் உம் வாக்குடனே-வாரு

6. அபிஷேகம் செய்திடும் தூதை – தேவரீர்
சுவிதேஷம் விளங்கிடத் திறந்திடும் மனதை
தவித்திடும் மனதில் (2) உதித்திட சத்தியமே சாட்சியாக - வாரு

7. கொண்டிடவே உந்தன் மீட்பை – ஜாதிகள்
வேண்டிட அபிஷேகம் வேகம் உன்னன்பை
அண்டிட உம்மையே (2) ஆதரவாகப் பரிகாரியாக - வாரு

# Tamil Hymn No 104

## COMING OF JESUS

பல்லவி

இயேசு ராஜன் வருவார் தூதரோடும் வருவார்
பக்தரை வானத்தில் சேர்த்திடவே – நான்

அனுபல்லவி

ஜோதியாய் அவர் முகம் கண்டிடுவேன் - பின்னும்
ஜெயகெம்பீரம் கொண்டுளம் பொங்கிடுமே - இயேசு

சரணங்கள்

1. மணவாளனோடு மணவாட்டியாம் சபை
மங்களமாய்க் கவி சாற்றிடுமே - அப்போ
மாட்சிமையோடு நாம் பாடிடுவோம் - அவர்
நேசத்தின் ஆழத்தை ருசித்திடுவோம் - இயேசு

2. முத்திரையிட்ட சுத்தர்கள் வெள்ளையங்கி தரித்து
கர்த்தர் சமுகத்தில் நின்றிடுவார் - அதில்
சேர்ந்திடுவேன் நானும் பாடிடுவேன் - அன்று
பொற் கிரீடம் தரித்தாடிடுவேன் - இயேசு

3. காதலித்தேன் நான் காசினியின்பம் விட்டு
கர்த்தரோ டென்றுமுறவாடிட – அங்கு
கனக மணவறை ஜொலித்திடுமே – அப்போ
கர்த்தராம் இயேசுவில் சுகிப்போமே - இயேசு

4. வானத்தில் எக்காளம் தொனித்திடும் சமயத்தில்
சுத்தர்கள் யாவரும் பறந்திடுவார் - அப்போ
அத்தனின் திருமணவாட்டியாய் நாம் - நித்தம்
நித்தம் அவரோடு ஆர்ப்பரிப்போம் - இயேசு

# Tamil Hymn No 105

## THE LORD, MY HELP

பல்லவி

துதியில் தேவா வருவாய் - நான்
துதித்துத் துதித்து உம்மைப் பாடி மகிழ்ந்திடவே

அனுபல்லவி

தூயவர் கோனே துணைபுரி மானே
தூய்மை கிடைக்குமென்று துதிக்கிறேன் நானே - துதி

சரணங்கள்

1. துன்பம் இந்நேரம் - உம்மைத்
தொடரத் தொடரப் பேயின் கோபம் மிகுந்திடுதே
இன்பம் மிகுமே தம்பிரான் பாதம்
கெம்பீரம் பாடி அம்பரம் ஏக - துதி

2. கங்குலே இந்நேரம் - என்
கலமும் துலக்கமின்றி மயங்கித் தியங்குகிறேன்
காடிதான் தேனோ கல்வாரி மலையில்
கருதுவோர் பருகும் கானாவூர் இரசமே - துதி

3. அகமே வரத் தருவாய் - நான்
அல்லும் பகலுமும்மைப் பாடி மகிழ்ந்திடவே
தியாகஞ் செய்யவே யேகோவா பாதம்
தாகம் மிகுந்தேன் ஏழை யிந்நேரம் - துதி

4. ஆறு லட்சம் பேரில் - நடு
உதித்து உதித்துச் சென்ற அதிரூப சொரூபா
கூறினீ ரல்லோ கூடியிருக்க
கொற்றவர் சேவை குறைவின்றி ஒழுக - துதி

5. மகிபன் இயேசு துரையே – நான்
மகிழ்ந்து மகிழ்ந்து தினம் பாடித் துதித்து வரும்
மங்கையர் கானம் மாசில்லாதல்லோ
தங்கப் பொன்னேசு சர்வதிகாரா - துதி

# Tamil Hymn No 106

## HIS CONQUERING LOVE

பல்லவி

அன்பனே மகா அன்பனே - உந்தன்
அன்பாலே என்னை வென்றாயே

அனுபல்லவி

அன்பாலே முற்றும் நிறைந்தோனே
அன்பே, அன்பே, அன்பனே நீர் - அன்

சரணங்கள்

1. உம்மைக் கண்டவன் விட்டுப் போவானோ - இந்த
மண்டலம் பின்னால் செல்வானோ
உம்மாலல்லா திருப்பானோ
அருளே, அருளே, அருள் நிறைவே நீர் - அன்

2. விட்டவரே, விண்ணை விட்டவரே – என்னை
மீட்டுக் கொள்ளவே விட்டவரே
மட்டற்ற தூதர்கள் துதித்தோனே
துதியே, துதியே, துதியுமக்கே - அன்

3. வருவீரே, இன்னும் வருவீரே - என்னை
அணைத்துக் கொள்ளவே வருவீரே
வான தூதத் தொனியோடே
செல்வேன், செல்வேன், மேகத்திலே - அன்

4. தொல்லைகள், வெகு துக்கங்கள் - எந்தன்
அல்லல்கள் முற்றுமறிந்தோனே
அற்புத மாயென்னைச் சுமந்தோனே
அல்லும் பகலும் துதிப்பேனே - அன்

# Tamil Hymn No 107

## HUMILITY

பல்லவி

பாலகன் போல் தன்னைத் தாழ்த்திடுவது யார் ? – சிறு

அனுபல்லவி

பார்தனில் தன்னை மறந்தவன் மாட்சியி லுத்தமனேயவன் - பால

சரணங்கள்

1. தந்திடும் தாசனுக்குந்தன் தாழ்மை யிச்சணமே
   வந்திடும் எந்தனைக் கேளும் கண்டிடும் கறைகள் தீரும் - பால

2. கொந்தளிப்பாகும் வேளை சொரிந்திடும் கிருபை
   உந்தன் ஒத்தாசை ஈந்து உள்ளத்தில் ஊற்றும் தாழ்மை - பால

3. பாதகர் பகடி செய்தும் மௌனமானவா
   நாதா உன் வழியில் நடக்க நாள் தோறும் கருணைதாரும் - பால

4. தாழ்மையால் நீதியும்மைக் கடந்து போனதே
   தாழ்மையிலமிழ்ந்து நிற்க தாகிக்குதென முழு உள்ளமே - பால

5. ஆவியிலெளிமையுள்ளவன் இராச்சிய மடைவான்
   தாவியுன் பாதமடைந்தேன் ஆவியில் நடத்திக் காரும் - பால

# Tamil Hymn No 108

## ATONEMENT

கண்ணிகள்

1. தன் ஜீவனைத் தந்தென்னை மீட்டவரே
தாரணியில் நாட்களை நான் கழித்து
பாரமின்றி வாழ்கின்ற மாட்சியிலே
மாசற்ற முகம்காண வாஞ்சிக்கிறேன்

2. சாபம் ரோகம் பாவங்கள் பரிகரிக்க
மானிலத்தில் வந்த என் நற்பரனே
பாவத்தை இரத்தத்தால் தீர்த்ததினால்
மோட்சத்திலும்மோடு நான் வாழ்ந்திடுவேன்

3. கஷ்டங்கள் அடிக்கடி அதிகரிக்க
அவபாதம் பழிகளுமே தொனிக்க
அசையாது சீயோனின் அரண்களைப் போல்
தவறாது வாழ்ந்திடத் தயவருள்வாய்

4. பாரினில் பகைவர்கள் பலுகின்றனர்
பக்தர்கள் தேசத்தில் அருகின்றனர்
விசுவாசம் பூவில் நின்றகலு முன்பே
பக்தரைத் தேசங்களில் பெருகச் செய்யும்

5. கர்த்தாவே நின் வரவைக் காத்திருந்து
பார்தலத்தில் எம்மட்டும் பார்த்திருப்பேன்
மா தாகமதால் தண்ணீர் தேடும் மான் போல்
நின் வரவை எண்ணி யான் காத்திருப்பேன்

# Tamil Hymn No 109

## HE CARES

பல்லவி

அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா பாடிடுவோம்

அனுபல்லவி

அல் பகல் ஆர்ப்பரித்து
அன்பரோடக மகிழ்வோம் - அல்

சரணங்கள்

1. கண்ணே! மணிப்புறாவே! காதல் சீயோனின் மகளே!
கையில் பதித்தேனுனைக்
கானக லீலிப் புஷ்பமே - அல்

2. தாய் மறந்தாலும் சேயே நான் மறவேன் என்றவரே
தற்பரா உந்தன் வாக்கால்
நற்பரனின் பாதம் வந்தேன் - அல்

3. சுரர் வணங்கும் நிதி சுத்தருக்கே நிதமும் துதி
நரரூபமான நிதி
நம்மை மீட்ட புண்ணிய நதி - அல்

4. தூதர்கள் ஆர்ப்பரிக்க, சேராபீன்கள் ஸ்தோத்திரிக்க
பாவலர்கள் துதிக்க
பரிசுத்தரின் மனங்களிக்க - அல்

5. மாமிசமடங்கி நிற்க, வல்ல சர்ப்பம் ஒடுங்கி நிற்க
நியமிக்கப்பட்டோர்களை
நிறுத்திடுவார் இமைப் பொழுதில் - அல்

6. கண்ணீர் கவலையில்லை நண்ணிவரும் நோயுமில்லை
கன்னியர் அருந்திடுவார்
மாதம் ஒரு புதுக்கனியை - அல்

7. வெற்றிக் கொடி பிடித்து வெண்ணங்கி தான் தரித்து
சுற்றி நின்று பாடிடுவார்
நெற்றியிற் புது நாமமுள்ளோர் - அல்

# Tamil Hymn No 110

## INVITATION TO THE UNSAVED

பல்லவி

வந்திடுமே இயேசுவண்டை சேர்ந்திடுமே
பாவப் பாரம் தீர்ந்திடுமே

அனுபல்லவி

வரும் பாவியை அணைப்பேனென்று
வாக்கு அன்பாய் அளித்தனரே - வந்

சரணங்கள்

1. பாவத்தில் மாண்ட உனைப் பங்கமின்றி
விடுவிப்பேனென்கிறாரே
அன்பரின் சத்தம் கேட்கும் நாளில்
அன்பாய்ப் பாதம் அண்டிக்கொள்வீர் - வந்

2. செல்வத்தை நாடி ஓடிச் செல்வாயோ?
சேர்த்திடுமே நரகில்
எல்லாம் விழல் என்று எண்ணி
நேகர் பாதம் அண்டிக்கொள்வீர் - வந்

3. மாயமே மண்ணுலகில் யாவதுமே
மனக்கவலை தருமே
மயங்காமலே மனதில் தினம்
மகிபரன்பில் அமிழ்ந்து நட - வந்

4. மரணமே நினையா நேரமதில்
வந்துனைச் சந்திக்குமே
மரணவழி விட்டுப் பரன்
மாட்சி வழி நடந்திடுமே - வந்

5. மறப்பாயோ மாட்சிமை தான் மறந்து
மானிடர்க்காய் மாண்டவரை
மாறாப் பரிசுத்தமீந்து
மன்னன் மார்பிலணைத்திடுவார் - வந்

# Tamil Hymn No 111

## INVITATION

பல்லவி

வாரும் வாரும் மகத்துவ தேவனே
வல்லமையாக இப்போ வந்திடும்

சரணங்கள்

1. மகிமைச் சொரூபனே! மா வல்ல தேவனே!
மன்னா வந்தாசீர்வாதம் தாருமே - வாரு

2. தாய் தந்தை நீர் தானே! தற்பரா எங்கட்கு
தரணியில் வேறோர் துணை இல்லையே - வாரு

3. பாவத்தை வெறுத்துப் பாவியை நேசிக்கும்
பரிசுத்த ராஜனே நீர் வாருமே - வாரு

4. பக்தரும் முக்தரும் பாடித் துதிக்கின்ற
பரலோக ராஜனே நீர் வாருமே - வாரு

5. காருண்ய தேவனே கதியுமை அண்டினோம்
கடைசி வரையும் காத்து இரட்சியும் - வாரு

6. மன்னா நின் வரவை எண்ணியாம் ஜீவிக்க
ஏவுதல் தினம் தாரும் ஏகனே - வாரு

7. விழிப்புள்ள ஜீவியம் விமலா நீர் ஈந்துமே
வெற்றியடையக் கிருபை தாருமே - வாரு

8. இவ்வித பாக்கியம் ஏழைகளெங்கட்கு
ஈந்ததா லுமக்கென்றும் ஸ்தோத்திரம் - வாரு

# Tamil Hymn No 112

## INVITATION

பல்லவி

திரியேசு நாதா! வந்திடுமே
தீபமே ஆவி தந்திடுமே – திரி

அனுபல்லவி

திரிலோக தியாகனே தீன தயாளனே
தினம் தினம் ஏழையேன் தேவப்பண் சாற்றவே - திரி

சரணங்கள்

1. மின்னொளி மா சௌந்தரியனே
மின்னலில்லா மழையுண்டுமோ?
மென்மேலு மூற்றுமே மின்னலின் மா மழை
மின்னும் பிரஜோதியாய்க் கன்னல்கள் தீரவே - திரி

2. மங்கிடா நித்திய சூரியனே
மா பாவி என்மேல் அன்பு கொண்டீர்
மானுஷ்யவதாரா மாறாத பூஷணா
மன்னவா என்னையும் தம்மைப் போலாக்கவே - திரி

3. தூங்கிடா நித்திய காவல்காரா
தூங்கிய என்னை மீட்பதற்காய்
தொங்கினீர் கல்வாரி மூன்றாணி மீதிலே
தூயனே காயனே நேயன் நான் ஆகவே - திரி

4. யாருண்டு சாரப் பூவுலகில்
நாதன் நீரல்லால் வேறாருண்டு?
காருண்ய காந்தனே கண்ணே என் கண்ணாளா
காணவும் ஏங்கிறேன் காதலனே சுவை - திரி

5. என்ன நான் செய்வேன், பிராண நாதா!
எந்தனை மீட்ட திருவன்புக்காய்?
ஏதேனின் வாசனே என் மணவாளனே
என்றென்றும் ஏழையேன் தொண்டு செய்வேனையா - திரி

# Tamil Hymn No 113

## WORSHIP

பல்லவி

ஆதிபரன் இயேசுவைப் பார்
அதி ரூபமானவரின் திருமுகத்தைப் பார்

சரணங்கள்

1. ஜோதியே வருணா துலங்கிய கருணா
நீதி நெறி தவறாத நிர்மல நீதா - ஆதி

2. தினமுமன்றாடி துதிகளைப் பாடி
இன்பமுற்ற ஜீவியத்தை இகமதில் நாடி - ஆதி

3. காலையில் எழுந்து கர்த்தரைப் பணிந்து
கருணையுள்ள காதலனைக் கனிவுடன் குனிந்து - ஆதி

4. பரகதி துறந்து பாரினில் பிறந்து
நரர் வேடம் பூண்ட இயேசு நாதனைப் புகழ்ந்து - ஆதி

5. அமரர்கள் போற்றும் அழகுள்ள கோமான்
அருள் பெற்றோர் அனுதினம் தரிசிக்கும் அரூபன் - ஆதி

# Tamil Hymn No 114

## JOY UNTOLD

பல்லவி

என்ன சந்தோஷம், என்ன சந்தோஷம்
என்ன சந்தோஷம், என்ன சந்தோஷம்
மணவாட்டியின் பாட்டைக் கேட்டால்
என்ன சந்தோஷமே

சரணங்கள்

1. என்ன இவ்விநோதமே, அண்டி வந்து பாருமே
அண்ணலுக்குகந்த ஓர் கன்னிகையின் ரூபமே
மின்னல்போல் இலங்கிடுதே விண்ணிலழகுடனே - என்ன

2. மன்னனோடு வாழுவோம், மணவறையில் மகிழுவோம்
கன்னியர்கள் யாவரும் காதலனைக் காணுவோம்
அன்னையோடு அனந்த காலம் அழிவில்லாதிருப்போம் - என்ன

3. பெருகுதே பேரின்பமே, பேதைகட்கு இன்றுமே
பேருலகில் யாவுமே வீணதாகத் தோணுதே
வேறுலகம் உண்டெமக்கு என்ன பேரின்பமே - என்ன

4. ஆஹா! இது அதிசயம், அளவில்லாத பரவசம்
சாவில்லாத நித்தியம் நாமுமரசாளுவோம்
பாவமணுகாத பரன் சாயலணிந்திடுவோம் - என்ன

# Tamil Hymn No 115

## SHOWERS OF BLESSINGS

பல்லவி

இயேசு நாதனே! ஆசியருளும் மாரியாகவே

சரணங்கள்

1. வருவீர், தருவீர் அருள் மழையே
பருகிப் பலரும் பரனடியே
மருவி மனமகிழ - இயேசு

2. வல்லவா! வந்திடும் வல்லமையாக
புல்லரின் தொல்லைகள் துள்ளியேகிட
ஜல்தியாய் க்ஷணப்பொழுதில் - இயேசு

3. கர்த்தனே! சக்தியை நமக்கருளும்
சித்தமே முற்றிலும் படைத்துவிடும்
புத்திரர் புகலிடமே - இயேசு

4. அன்பனே! மைந்தரை அபிஷேகியும்
நண்பனே அன்பினால் அனுதினமும்
நற்பரன் சாயலணியும் - இயேசு

5. அரசே! அடியார் அரும் சிரசே!
அருளே! இருளே அகன்றிடவே
பகரும் பரன் பதமே - இயேசு

6. மகிமை, மகிமை, மகிபருக்கே
அகமும் அனைத்தும் அதிபருக்கே
ஜெகமதில் படைத்தோம் - இயேசு

# Tamil Hymn No 116

## CONSTRAINING LOVE

பல்லவி

அன்பரின் நேசம் அளவிடலாகுமோ

அனுபல்லவி

அந்நியரெம்மை அணைத்த பேரன்பே - அன்

சரணங்கள்

1. அதிசயமாகவே ஆதியில் நினைந்து
ஆதிபரனெமை அழைத்ததினாலே - அன்

2. மண்ணில் மாயக் கன்னலில் மாளா
தெண்ணியே என்னைக் கண்ணீர் சொரிந்தீர் - அன்

3. நித்திய மீட்பை நீசருக்கீந்திட
கெத்செமனேயில் கலங்கி வீழ்ந்திரோ - அன்

4. பிலாத்துவின் முன்னே பேதையெனக்காய்
விலங்குடனேகி இலங்கலானீரோ - அன்

5. கள்வனென் நாமம் வள்ளலணிந்தீர்
உள்ளமுருகுதே உன்னத அன்பே - அன்

6. மூவுலகிறைக்கு முள்முடி தானோ
தூசியெனக்கினி பொன்முடி யேனோ - அன்

7. அன்பரைச் சேர்க்க வந்திடும் நேரம்
இன்பமாய் என்னையும் ஏற்றுக்கொள்வீரே - அன்

# Tamil Hymn No 117

## THANK-OFFERING

பல்லவி

ஆனந்தமாய் வானவன் பாதம் பாடி மகிழ்வோம் அனைவரும்
தானங்களைத் தந்த நல் இயேசு நாதனைப் புகழ்வோம்

சரணங்கள்

1. அன்புடன் பணிவோம் - அன்பரை
கன்மலையைக் கனிவுடனே நினைந்து பாடிடுவோம்
நன்னயமாய் நவ வரங்கள் நமக்கருளியதால் - துதித்து - ஆன

2. கரங்களை விரித்து – சுத்த
நரரூபம் ஆனவனே நண்பருக்கிரங்கி
தரவேணும் ஆசிகளை மைந்தர் மகிழவே – துதித்து - ஆன

3. நித்திய மகிமை – விண்ணிலே
புத்திரர்க்குப் புதுமையாகப் புண்ணயனருளி
நித்தமுமே முக்தியிலே பக்தரை அணைப்பார் - துதித்து - ஆன

4. என்ன மகிமையே - இன்பமே
அன்னை தந்தை யாவரிலும் அரியவின்பமிதே
உன்னதனே உமதடியை உணர்ந்து பாடிடுவோம் - துதித்து - ஆன

5. கர்த்தனைப் புகழ – கருணை
சக்தியுள்ள நாவிருந்தால் எத்தனை மகிமை
அத்தனுமை அனுதினமும் பாடுவதினிமை – துதித்து - ஆன

6. உப்பரிகையிலே – சாலேமின்
தற்பரனின் சாயலுடன் நின்றிலங்கிடுவோம்
முத்துக்களின் வாசலதில் சுற்றி ஏகிடுவோம் - துதித்து - ஆன

# Tamil Hymn No 118

## HIS BLESSED PASSION

கண்ணிகள்

1. ஆரிவராரே? கனவினில் அலறுவதிவராரோ?
காரிருளதிலே ஆ – ஆ –
மனம் நோகுதே காயம் சாடுதே
அகம் வாடுதே முகம் மாறுதே

2. தேடுவதேனோ யூதரும் தொலைத்திடும் வகையேனோ?
சேதமற்றோரிவர் ஆ – ஆ –
ஜேகதீசனே, மெய்த்தீபனே
என் ஜீவனே, ஏக ரூபனே

3. வேண்டுதல் கேளீர் பாவிக்காய் வேண்டிடும் தொனி கேளீர்
விண்ணவனே இவர் ஆ – ஆ –
அண்ணலே, விண் மன்னனே
கண்ணீரேகுதே கரம் சோருதே

4. பலியாவோரிவரோ, பாவத்தின் பலனிவர் மேல் தானோ!
அலறாயோ மனம் ஆ – ஆ –
பலச் சாரமே வடிந் தேகுதே
பலியாகவோ இவர் பாரிலே

5. தொல்லைகளடைந்தோ கொல்கொதாவில் மரமீதறைந்தோ
கள்வனன்றோ இவர் ஆ – ஆ –
உதிரமுடன் ஜல மோடுதே
உள்ளம் பாவிக்காய் உருகிடுதே

6. பாடுகள் சகித்தோ பகைவரின் பாவங்களை யெடுத்தோ
பரிகரித்தீரோ ஆ – ஆ –
மனமாற்றவும் எமை மீட்கவும்
பலியானதால் நிதம் வாழ்த்துவோம்

# Tamil Hymn No 119

## LOVER OF MY SOUL

பல்லவி

இயேசுவே என் நேசமுள்ள ஆத்ம நேசரே – என்னை
க்ஷேமமாக வேகம் வந்து சேர்த்துக் கொள்வாரே

அனுபல்லவி

ஆசையவரே, எந்தன் ஆத்மநாதரே! - இயேசு

சரணங்கள்

1. முட்களுள்ளே நிற்கும் லீலிப் புஷ்பம் போலவே - இங்கு
மூர்க்கர் என்னை உருக்கமின்றி நெருக்கினாலுமே
அன்பரவரே இயேசு இன்பமாகுமே - இயேசு

2. இத்தரையில் இயேசு வெனக் கினிய கிச்சிலி – உலகில்
புத்திரருள் உத்தமரே முழுதும் என் கலி
புதுமையாகவே அவர் பிரபை வீசுதே - இயேசு

3. நேசமென்னும் கொடி எந்தன் மேல் பறக்குதே – என்னை
சேதமின்றி மீட்கவே என் அண்டை நிற்கிறார்
ஓசை கேட்குதே என் ஆசை அதுவே - இயேசு

4. மரையின் குட்டி போலவே என் அரிய அன்பரே – அவர்
மலைகள் மேடு மீதிலேறித் துள்ளி இன்பமாய்
அலைந்திடா தென்னை அணைத்திடுகிறார் - இயேசு

5. மாரி காலம் சென்று மழை பெய்தொழியுதே – மகா
மாட்சியாகப் புஷ்பங்களின் காட்சி தோணுதே
ஆட்சிக்கொள்ளுமேன் - வந்து சேர்த்துக் கொள்ளுமேன் - இயேசு

# Tamil Hymn No 120

EXALTATION

பல்லவி

ஸ்தோத்திரம் சாற்றிடுவோம் புகழ்ந்தேற்றுவோம் - பரனை

சரணங்கள்

1. ஏற்ற இத்தருணம் ஊற்றுவோம் இதயம்
தேற்றிடற்கு ஏற்ற நாதனை ஏற்றியே புகழ்வோம் - ஸ்தோ

2. கருணாகரப்பரமா காதலெம்மில் கொண்டோ
தாரணியில் தாசனாகத் தாழ்மையானீரோ - ஸ்தோ

3. புறஜாதியானோரைப் புறம்பாக்க எண்ணாதே
உறவாடுதற்கு உன்னதத்தில் உரிமையீந்தாரே - ஸ்தோ

4. ஆசீர்வாதங்கள் ஆசையோடெம்மில்
கூசிடாமல் ஈசனீந்த நேசமுணர்ந்து - ஸ்தோ

5. பறக்கும் அம்புகள் எமை வதைத்திடாமலே
உறங்கிடாது ஊக்கமுடன் உகந்தணைத்தாரே - ஸ்தோ

6. ஆவியின் அருளீந்து தாவி நமைச் சேர்த்து
பூவிகளெமை அன்பிலொன்றாய் ஆகுமருளீந்தார் - ஸ்தோ

# Tamil Hymn No 121

## REDEEMING LOVE

பல்லவி

என்ன தான் பதில் செய்வேன் கண்டிடும் வேளை
அன்னையே பதில் கூறும் செய்வேனிவ் வேழை

சரணங்கள்

1. எண்ணொணாப் பாவத்தால் உம்மை வாதித்தேனையா
மன்னித்தீர் என்னையும் மாதயவதாகவே - என்ன

2. அண்டினேன் பாதமே ஆண்டுகொள்ளுவீரே
நன்றியால் பொங்குதுள்ளம் என்ன பதில் செய்வேன் - என்ன

3. நானிலம் தன்னிலே நிந்தையாகினாலுமே
நாதனே! நான் விடேன் நசரேயன் பாதமே - என்ன

4. ஏதுக்கும் உதவா ஏகலித்த ஏழை யான்
ஏற்றீரோ என்னையும் சேர்த்தீரோ மந்தையில் - என்ன

5. இன்னிசைக் கேட்டாலும் இன்பமுண்டோ பாவியில்
விண்ணெனைச் சேர்க்கவுயிர் சிலுவையில் விடுத்தீர் - என்ன

6. கன்னத் தறையையும் கனமான குருசையும்
அன்பாலோ சகித்தீர் அன்பனே, அன்பனே - என்ன

# Tamil Hymn No 122

## ETERNAL BLISS

பல்லவி

மகிழ்வோம் இயேசுவில் மகிழ்வோம் - பரன்
மகிமை யுற்றுமே மகிழ்வோம்

அனுபல்லவி

மகிழ்வோம், மகிழ்வோம், மகிழ்வோம், மகிமையில் மகிழ

சரணங்கள்

1. வானில் யாவரும் மகிழ - இயேசு
வாரும் என்றுமே பகர
மாறுவோர்க் கொரு சிகரம் - மன
தாரத் தற்பரனருள
மகிமை, கனமும், மகிமையில் மிகவும் மகிழ - மகிழ்

2. சுத்த ஜீவியமுடைய – தேவ
புத்திரர் துலங்கிடவே
சர்வ சிருஷ்டிகளுடைய – மா
கர்மங்களன்றகல
மகிழும், தினமும், மகிபரின் தினமும் வரவே - மகிழ்

3. அடிமையானவர் கூடி – பரன்
அளித்த பொன் முடி சூடி
ஆயிரமாண்டுகளாக – கடம்
மாறியே அரசாள
மயிலும், குயிலும், ஆடும் - புலியுடன் வாழ - மகிழ்

4. வானம் பூமியுமகல – நவ
வானம் பூவுமே நிகழ
சாபம் பாவமும் சகல – கடும்
ரோக மோடியே மறைய
சுகமும், ஜெயமும், சகலரும், சுகித்து, மகிழ - மகிழ்

5. பொன்னால் வீதிகளுடைய – அரும்
சொல்லால் உரைப்பதற்கரிய
மின்னும் வச்சிர வொளியே நரர்
கண்டு நடந்திடு மருளே
கண்ணீர், கவலையும், நண்ணா நகரினில் மகிழ - மகிழ்

6. பளிங்கு போல் ஜீவ நதியே - இரு
கரையும் ஜீவனின் மரமே
பசியும் தாகமுமில்லையே – அங்கு
புசிக்க ஜீவனின் கனியே
புசிப்போம், ருசிப்போம், இயேசுவில் நித்தியம் மகிழ - மகிழ்

7. சுத்த ஆவியும் சுதனும் - செய்த
மீட்பின் செயலைப் பரனும்
மற்றும் தூதர் கணமும் - அங்கு
உற்று உளம் மகிழ
போற்றிப் புகழ்வோம், நூதன செயலில் மகிழ - மகிழ

# Tamil Hymn No 123

## COVENANT KEEPING LORD

பல்லவி

இன்னும் சந்தேகிப்பேனோ ஜீவனுள்ள தேவனை நான்

அனுபல்லவி

ஈசாக்கு ஆபிரகாம் யாக்கோபின் தேவன் அல்லோ
வாக்கு மாறாதவராம் நம்பினோரைக் காப்பவராம்
அல்லேலூயா துதி - இன்னு

சரணங்கள்

1. ஏழை எந்தனை மீட்டு வேண்டிய கிருபை ஈந்து
வெளிச்சத்தின் பிள்ளையாக ஜீவிக்கக் கிருபை செய்து
இருளின் தூதனின் அஸ்திரங்கள் அணுகாமல் காத்தார்
அல்லேலூயா! துதி - இன்னு

2. பாவம் அனைத்தும் நீக்கி நீதிக்குப் பிழைக்கும்படி
பாவியின் பாவங்களை பாரக் குருசினில் தீர்த்தார்
அப்பா பிதாவென்றிடும் ஆவியையும் ஈவாய்த் தந்தார்
அல்லேலூயா! துதி -- இன்னு

3. சமாதான காரணராம் நடு மதிலைத் தகர்த்தவராம்
அந்நியமான என்னை அண்டி வந்து காத்தவராம்
மாறாத மீட்பரை நான் என்றென்றும் துதித்திடுவேன்
அல்லேலூயா! துதி - இன்னு

4. சத்திய மென்னும் கச்சை நீதியென்னும் மார்க்கவசம்
ஆயத்த பாதரட்சை விசுவாசக் கேடகமும்
ரட்சண்யத் தலைச்சீராவும் ஆயுதங்களாகத் தந்தார்
அல்லேலூயா! துதி - இன்னு

# Tamil Hymn No 124

## ONWARD MARCH

பல்லவி

செல்வோம் செல்வோம் வீரரே
ஜெயவேந்தன் தீரரே

அனுபல்லவி
சீரடைந்து பாரில் மக்கள் நேரடைய நேர்மையுடன்
தீவிரமாய்த் தியாகத்துடன் செல்வீர் நீர் சேவை செய்ய – செல்

சரணங்கள்

1. பாரும் பரன் கைப்பணி – பாதாளத்திலாகுதே
பாதை காட்டும் மேய்ப்பனின்றி – ஆத்துமாக்களலையுதே
பகருமே சுவிசேஷம் பாய்ந்து – செல்லும் வீரரே - செல்

2. நரரின் வினை பெருகுதே – நாச புரம் நெருங்குதே
நாட்கள் தோறும் செடியில் நில்லா – கொடிகள் யாவும் உலருதே
நாணுதே சிருஷ்டியும் - நசரேயன் பேரில் செல்லுமே - செல்

3. விருந்துசாலை பாருமே - இருந்துண்போரைக் காணோமே
வீதிகளில் அலைந்து நிற்போர் - வீட்டுள் விரையச் செய்யுமே
நிரம்பவே சாலையும் - தீவிரம் செல்லும் வீரரே - செல்

4. கேட்டின் மகன் கூட்டத்தை - கூட்டுவோமன்பருக்கே
ஆட்டுக் குட்டியானவரின் - சாட்சியைக் கூறிடுவோம்
கட்டும் அரைக் கச்சையதை – கையிலெடுக்கும் பட்டயத்தை - செல்

5. ஆத்துமாக்கள் சேர்க்க இரத்தம் - சிந்திடப் பின்னடையோம்
ஆத்துமா சரீரம் ஆவி – பாத்திரர்க்கு அளித்துமே
தத்தமுடன் இத்தினமே – சத்தியத்தைச் சாற்றிடுவோம் - செல்

6. எதிர்க்கும் பேயை நசுக்குவோம் - பதுங்கிட்டாலும் பயப்படோம்
ஏதேனில் ஏவைமாதை – ஏய்த்தவனைத் துரத்துவோம்
ஏற்றுவோம் ஜெயக்கொடி - இயேசுவின் நாமத்தில் செல்லுவோம்-செல்

# Tamil Hymn No 125

## ON THAT CROWNING DAY

பல்லவி

ஜீவ கிரீடம் சூடும் நேரம் என்னவோ இன்பம் - விண்ணில்
ஜீவனுள்ளோர் கூடும் வேளை என்ன பேரின்பம்

சரணங்கள்

1. ஏகமாக அகில சிருஷ்டிகளும்
தாகமாக தவித்தெதிர் நோக்கும்
மகா தினமது வரவே மகிமை கிரீடங்கள் பெறவே - ஜீவ

2. அம்மினதாபின் ரதம் போல
அம்பரன் அழைத்திட வரவே
சம்பூரண சந்தோஷம் சமுகமதில் பெற்றுறவே - ஜீவ

3. மின்னும் சுரர் கின்னர கீதம்
விண்ணினின்று தொனித்திடும் நேரம்
மண்ணினின்றேகும் தூயர் மன்னருடன் மகிழ்வடைந்து - ஜீவ

4. பதி, தன, ஜனம் கனத்தை விட்டவரும்
கதி பரன் மலர் பாதம் என்றவரும்
பரிகாசங்கள் அவமானம் பசி தாகமுமடைந்தவரும் - ஜீவ

5. சற்று நேர வற்றிடு மின்பம்
பற்றிடாத கற்புடையவரும்
கர்த்தனளிக்கும் பலனைக் கருத்தாக முன்வைத்தவரும் - ஜீவ

# Tamil Hymn No 126

## BEHOLD HE COMETH

பல்லவி

வருகிறாரே வானபரன் வானம் விட்டெமையழைக்க
வருகிறதைப் பாரும்

அனுபல்லவி

வானோர்களும் ஆர்ப்பரிக்க அன்பருமதிசயிக்க
வருகிறதைப் பாரும்

ஆனந்தமே! ஆனந்தமே! ஆர்ப்பரிப்போம் ஆனந்தமே

சரணங்கள்

1. தூதர் பல கூட்டருமாய் தூய சங்கம் சூழ்ந்தவராய் வருகிறதைப் பாரும்
   தூய ஆடைதான் தரித்து தூய்மையின் சாயலணிந்து வருகிறதைப் பாரும்
   துதித்திடுவோம், துதித்திடுவோம், உன்னதனைத் துதித்திடுவோம்

2. எக்காளமது தொனிக்க அக்களிப்புடையராய் வருகிறதைப் பாரும்
   மக்களுக்குத் தாமருளும் பரிசுகளுடையராய் வருகிறதைப்பாரும்
   அல்லேலூயா! அல்லேலூயா! அன்பருக்கே அல்லேலூயா

3. மானிலத்தில் பரிதபிக்கும் பாவமற்ற மைந்தருக்காய் வருகிறதைப் பாரும்
   மலினமற்று மாண்டவரை மண்ணில் விடாதரவணைக்க வருகிறதைப் பாரும்
   மகிமையிது, மகிமையிது, மகிமை காணும் மகிமையிது

4. கருணையின் காலம் முடிந்து கிருபையின் வாசலடைக்க வருகிறதைப் பாரும்
   வாருமென் றெமையழைத்து தருணமில்லையென்றுரைக்க வருகிறதைப் பாரும்
   ஆனந்தமே! ஆனந்தமே! அன்புடையோர்க்கானந்தமே

5. கல்வாரிமலைதனிலே காயங்களடைந்தவர் தாம் வருகிறதைப் பாரும்
   காதலெம்மில் வைத்ததினால் கஸ்திகள் சகித்தவர் தாம் வருகிறதைப் பாரும்
   களித்திடுவோம், களித்திடுவோம், கண்டவரைக் களித்திடுவோம்

# Tamil Hymn No 127

PRAISE

சரணங்கள்

1. தேவாதி தேவனே மகத்துவா - ஸ்தோத்திரம்
தேசிகர் போதனே ஜீவா - ஸ்தோத்திரம்

பல்லவி

வந்தனம் தந்துமைச் சொந்தமாய்ப் போற்றுவேன்
இந்த வேளை தனில் வந்தருள் ஈகுவாய்

2. ஈனப்பாவி யெந்தன் மீட்பா - ஸ்தோத்திரம்
ஈனச் சிலுவையை எடுத்தாய் - ஸ்தோத்திரம் - வந்

3. வியாகுல நேரத்தில் நேயனே - ஸ்தோத்திரம்
வியாதிப் படுக்கையில் சகாயனே - ஸ்தோத்திரம் - வந்

4. ஆலோசனை தரும் ஞானமே - ஸ்தோத்திரம்
அல்லல்கள் தீர்த்திடும் வல்லவா - ஸ்தோத்திரம் - வந்

5. மாலை மயங்கையில் ஜோதியே - ஸ்தோத்திரம்
காலை சமயத்திலென் ஜீவனே - ஸ்தோத்திரம் - வந்

6. அன்பர் விட்டோடினும் மாறிடா – நண்பனே
கொண்டாயுன் ரத்தத்தால் கொற்றவா - ஸ்தோத்திரம் - வந்

7. துன்ப மகோரமாய்ச் சூழ்ந்திடும் - நேரத்தில்
இன்பமாக என்னை ஏற்றவா - ஸ்தோத்திரம் - வந்

# Tamil Hymn No 128

## NATIVITY

பல்லவி

இயேசுதானே பெத்தலையின் வாசன்
எனை மீட்க வந்த குருநாதன்

அனுபல்லவி

கனமேவு கானானின் வாசன்
காட்டிடையர் வணங்கும் நேசன் - இயேசு

சரணங்கள்

1. கருணாகரப் பரம தேவா
காதல் கொடுத்திடவும் வா வா
ஆதார முன்னை யன்றி யாரே
ஆ! குடில் வந்த பவநாசா - இயேசு

2. கோடா கோடி தூதர்கள் போற்ற
குவலயம் வந்தனீரோ கோனே
அவலன் அழிம்பழிக்கத் தானோ
அன்பாலே தேடி வந்த தேனே - இயேசு

3. மங்கா உடு வழியினாலே
மா ஜோதிடர் பின்னாலே
மன்னன் ஏரோது மனங்கலங்க
மகிழ்ந்து உதித்த மனுவேலே - இயேசு

4. காதல் எனில் கொள்ளவும் தானோ
காபிரியேல் உரைத்த விண்கோனே
நாதம் வானிலுரைக்கத் தானோ
வேதம் எனக்களித்த தேனே - இயேசு

5. மா சீயோனின் மலைவாசம்
மண மங்கையாளின் நேசம்
என் ஆத்ம நேசரின் தாகம்
எந்நாளும் உள்ளத்தில் சோகம் - இயேசு

# Tamil Hymn No 129

## COMFORT

கண்ணிகள்

1. அன்பரென் நேசரே உம்மண்டையில்
   இன்பமாக உந்தன் பாதை யோட
   நீரே வழியும் சத்தியமும் ஜீவனுமே

2. துன்பப்பெருக்கிலே சோர்ந்திடேனே
   அன்பரறியாமல் வந்திடாதே
   கண்மனிப் போல் நீர் காத்திடுவீர் கனிவுடன்

3. சுற்றிலும் சத்துரு சூழ்ந்திடினும்
   வியாகுலம் என்னை விரட்டிடினும்
   ஆ நேசரே உம் இன்ப சத்தம் ஈந்திடுவீர்

4. ஈனச் சிலுவையில் ஏறிட்டீரோ
   எந்தனுக்காய் கஷ்டப்பட்டிட்டீரோ
   துன்ப மூலமாய் எய்திடுவேன் இன்பக்கானான்

5. செந்த ஜீவனை நீர் என்னிலீந்து
   அன்பிலிணைத்தீரே வல்லமையால்
   எந்தன் ஜீவனை மற்றோருக்காய் ஈந்திடவே

6. மாயையான இந்த லோகமதில்
   மாய்ந்தழியும் இம்மாந்தரன்பு
   நேற்றுமின்றென்றும் மாறிடீரே என் நேசரே

7. வஞ்சனையான இப்பார்தலமே
   வஞ்சிக்குமே மிகத் தந்திரமாய்
   வாஞ்சித்திடேனே மோசமான இப்பார்தலத்தை

# Tamil Hymn No 130

## THE SAVIOUR GREAT

பல்லவி

கோடா கோடி ஸ்தோத்திரம் பாடி
கிறிஸ்துவின் அன்பை ருசிப்போமே

அனுபல்லவி

சேற்றிலிருந்து தூக்கி எடுத்துத்
தேற்றி அணைத்துக் காத்துக்கொண்டாரே – தேவசுதன் - கோடா

சரணங்கள்

1. பாவியை மீட்கப் பரன் சித்தங்கொண்டார்
   பரலோகம் துறந்து பாரினில் பிறந்தார்
   பரமனிவ் வேழையைத் தேடி வந்தாரோ
   பாதம் பணிந்தேன் பதில் ஏதுமுண்டோ - பூவுலகில் - கோடா

2. தேவனின் சித்தம் செய்யும்படியாய்
   தாசனின் கோலம் தாமெடுத் தணிந்து
   தற்பரன் நொறுக்கச் சித்தங் கொண்டாலும்
   தம்மைப் பலியாய்த் தத்தம் செய்தாரோ - எந்தனுக்காய் - கோடா

3. ஆடுகளுக்காய் உயிர்தனைக் கொடுத்து
   கேடுவராது காக்கும் நல் மேய்ப்பர்
   இன்றுமென் மேலே வைத்த நேசத்தால்
   என்றென்றும் நன்றி கூறித் துதிப்பேன் - இறையவனை - கோடா

4. தாவீது கோத்திரச் சிங்கமாய் வந்தும்
   சாந்தத்தால் என்னைக் கவர்ந்து கொண்டாரே
   தாழ்மையான ஆட்டுக் குட்டியுடனே
   தங்கியிருப்பபேன் சீயோன் மலையில் - நித்தியமாய் - கோடா

5. குயவனின் கையில் களிமண்ணைப் போல
   குருவே நீர் என்னை உருவாக்குமையா
   மாசற்ற மணவாட்டியாய் என்னைக்
   காத்துக் கொள்ளும்படி கருணை கூர் ஐயா-ஏழையென்னை - கோடா

# Tamil Hymn No 131

## HE EMPTIED HIMSELF

பல்லவி

தேவாதி தேவனின்நேச குமாரனிப்
பாடுகள் தாங்குவதேன் - இப்பாரதில்

சரணங்கள்

1. ஆகாயப் பறவைக்கும் ஆறிடக் கூடுமுண்டே
யாவையுந்தான் படைத்த – கர்த்தாவுக்கு
போக்கிடந்தானில்லையோ - இம்மண்ணதில் - தேவா

2. மரிப்போமென்ற சீஷரு மறுத்து விட்டோடினாரோ
மாபெரும் பாரத்தினால் - மயங்கையில்
ஆற்றுவார் தானில்லையோ - இப்பூவிலே - தேவா

3. ஆயிரமாயிரம் பேரிலு மழகுள்ளோன்
அந்தக்கேடடைந்திப்போ – பார்ப்பதற்கு
அழகற்றுத் தோன்றுவதேன் - பிலாத்துமுன் - தேவா

4. சர்வ ஞானத்தி னூற்றாம் தயாபரனான தேவன்
தாமொன்றும் பேசா தோராய் - தாழ்மையுருவாய்
தயங்கி நின்றயருவதேன் - போர் வீரர் முன் - தேவா

5. பொல்லாத மானிடரின் மூர்க்கமதிகமையோ
தொல்லையில்லாப் பரனை – ஆ – ஆ – ஆ – ஆ
கொல்வதுதான் நீதியோ – என் தெய்வமே - தேவா

# Tamil Hymn No 132

## INVITATION

பல்லவி

யே கோ வா – எங்களுக்கிரங்கி
இந்நேர மீதிலிங்கு – வா – வா – வா

சரணங்கள்

1. வந்தோம் உன் பாதம் மைந்தர்கள் யாமே
சந்ததம் உன்னருள் ஈந்திடுவாயே
விந்தை நாதனே! வந்தனம் தந்தோம் - வா – வா – வா

2. கேருபீன் சேராபீன் மத்தியிலிருந்து
சுத்தர், சுத்தர், சுத்தர் என்பதைக் கேட்கும்
பக்தர்கள் பரனே இவ்வேளை மத்தியில் - வா – வா – வா

3. பொல்லாத பாவம் போக்கவே பாரில்
வல்லவா நீரே வன் கொலையானீர்
கொல்கொதா நாதா! குருவே! இப்போ – வா – வா – வா

4. மரணத்திற்கதிபன் மங்கையை ஏய்த்த
மாதோஷம் நீக்கின மகிமைச் சொரூபா
மங்களம் உமக்கே மகத்துவ தேவனே – வா – வா – வா

# Tamil Hymn No 133

## WORSHIP

பல்லவி

பாடிடுவோம் ஒன்றாய்க் கூடிடுவோம்
பரன் பாதம் பணிந்து கனிவுடனே

சரணங்கள்

1. புண்ணியர் மிகப் புதுமையுடன்
புகலவொண்ணா இரட்சை தந்தார்
போற்றி யேற்றி வாழ்த்திடுவோம்
புனிதனை நாம் பூவினிலே - பாடி

2. பக்தர்கள் நாம் ஆவதற்கு
பரன் தாமே சிலுவை சுமந்தார்
சுத்தராய் நாம் சோபித்திலங்க
சுத்த ஆவி ஈந்ததாலே - பாடி

3. நிந்தை சோதனை அவமானங்கள்
நேரினும் நாம் சோரா தோட
நேயன் தாமே நிந்தை சுமந்தார்
நேயரே நாம் ஆனந்தமாய் - பாடி

4. மாய லோக வாழ்வை வெறுத்து
மாசற்றோராய் ஜீவிப்போர்க்கு
மகிமையான சொர்ண வீட்டை
மகிபன் இயேசு ஈந்திடுவார் - பாடி

# Tamil Hymn No 134

## EXALTATION

பல்லவி

கருணையின் தேவா! சுதி தரும் மூவா!
கர்த்தா! உமக்கே ஸ்தோத்திரம்

அனுபல்லவி

பரலோகனே – பவ நாசனே
பரனே – கரனே – உமை
கண்டு மகிழ்ந்திடவே எமக்காசை
கருணா நிதியே காத்திடுவாயே - கரு

சரணங்கள்

1. வல்லமை ஞானம் நீதி நிறைந்த
வள்ளலே உமக்கே ஸ்தோத்திரம்
வரந்தாருமே – வந்து காருமே
வந்தோம் - தந்தோம் - உந்தன்
சுந்தரக் கரத்தினில் மைந்தர்களெமையே
வருவாய் - தருவாய் அருள் மாரியை யிப்போ - கரு

2. பலியாக உமையே பாவிக்காய் ஈந்த
பரனே உமக்கே ஸ்தோத்திரம்
புறம்பானீரோ – புவிமீதிலே
புகழ்வேன் - மகிழ்வேன் - உந்தன்
பொற்பாதம் பணிந்துமே ஆனந்தக் களிப்புடன்
பொல்லா உலகின் இன்பத்தை வெறுத்து - கரு

3. நித்ய மணாளா! நிர்மல நாதா!
நேசரே உமக்கே ஸ்தோத்திரம்
நினையா நேரம் வருவீரையா
நிதமே – விழிப்பாய் - உமைச்
சந்திக்க ஆயத்த மாயிருந்திடவே
நேசா ஜெபிக்க ஏவுதல் தாரும் - கரு

# Tamil Hymn No 135

## HIS FAITHFULNESS

பல்லவி

உமை நம்பினோர் மாண்டதில்லை மாண்டதில்லை மாண்டதில்லை

சரணங்கள்

1. துன்பங்கள் பலவாய் நெருங்கி வந்தாலும்
   தொல்லைகள் எம்மை அணுகி வந்தாலும்
   காக்க வல்லவர் காக்க வல்லவர் காக்க வல்லவர் காக்க வல்லவர்

2. சிங்கத்தின் குட்டிகள் தாழ்ச்சியுற்றாலும்
   பங்கம் வராதென்னைக் காத்திடுவீரே
   ஓங்குமே பெலன் ஓங்குமே எமைத் தாங்குமே துயர் நீங்குமே

3. நிறுத்திடுவீ ரென்னைக் களங்கமில்லாமல்
   பொறுத்தெந்தன் குறைகள் யாவையு மகற்றி
   காப்பீரே என்னைக் காப்பீரே சுத்தம் செய்வீரே முத்தி சேர்ப்பீரே

4. தரகை போல் நின்று இலங்கின சுத்தர்
   பாதை விட்டோடி மறுத்து வீழ்ந்தாலும்
   பாதை காட்டவும் பாதுகாக்கவும் பாதஞ்சேர்க்கவும் வல்லவா

5. மாட்சியிலே இன்னும் வந்திடுவீரே
   மகிமையிலே என்னைச் சேர்த்துக் கொள்வீரே
   மன்னவர் நீரே நல்லவர் இன்றும் நல்லவர் என்றும்நல்லவர்

# Tamil Hymn No 136

## CONDESCENSION

சரணங்கள்

1. பாவியை மீட்கப் பாரினில் வந்த பரிவு தானீதோ
பாலகனாகி ஆவடை குடிலில் பார்த்திபனே அரசே
ராஜ - கோல மிதுவாமோ
தேவ – கோலமிதுவாமோ – தினம் தோத்திரம்

பல்லவி

தினம் தோத்திரம், தோத்திரம், தோத்திரமே ஜெய
ராஜனாய் வந்த தேவனுக்கே

2. ஆதியிலே பிதாவுடனிருந்த அற்புத வார்த்தை யிதோ
ஏதுமற்ற ஓர் பாலகனாயும் மாதிர மீதினிலே
ஐயா ஏங்கியழுதிடவோ
புல்மீ – தேங்கியழுதிடவோ - தினம்

3. மானிடரெவரும் காணவொண்ணாத மகிமையின் நித்தியரே
கானிடை ஆயரும் கண்டு களிக்க காட்சியீந்தீரோ
ஏழை – மானிடர்மீதன்போ
பரனே – மானிடர்மீதன்போ - தினம்

4. மரண பயத்தின் அடிமையிலாகி மாண்டு கிடந்த எனை
அரவணைத்தேயும் ஜீவனையீந்திட அடிமையானீரோ
இயேசுவே – அதிசயமீதன்றோ
யார்க்கும் - அதிசயமீதன்றோ - தினம்

5. உழையும் சேற்றினில் அலைந்த பாவிமீதன்பு ஏனையா
துரோகஞ் செய்து தூஷித்த இந்த தோஷியை ஏனையா
குருவே – தேடினதேனையா
எனையும் - தேடினதேனையா - தினம்

6. விண்டலமெல்லாம் தாழ்மையினாலே விடுத்து வந்தாலும்
அண்டசராசரவகிலமுமின்று அகமகிழ்வதென்னே
ஐயா – ஆனந்தங் கொள்வதென்னே
பாவியும் - ஆனந்தங் கொள்வதென்னே - தினம்

# Tamil Hymn No 137

JOURNEY UNTO ZION

பல்லவி

ஏகிடுவோம் சீயோன் நகர்
இயேசுவையே நோக்கிக்கொண்டு

அனுபல்லவி

ஏதமில்லா ஜீவியத்தில்
ஏகோபித்து என்றென்றுமே - ஏகி

சரணங்கள்

1. பாரமான யாவற்றையும்
பாவத்தையும் தள்ளவிட்டுப்
பாரினில் முன்னோடிச் சென்ற
பக்தர்களின் பாதை சேர்ந்து - ஏகி

2. சத்திய மரைக்கசைத்து
நீதியை மார்பிலிழைத்து
சத்துருவினம்பைத் தடுக்க
தரித்து விஸ்வாசத்தையும் - ஏகி

3. ஆயத்தத்தைப் பாதமிட்டு
ஆவியின் பட்டயமெடுத்து
அண்ணலீந்த ரட்சண்யத்தை
ஆவலாய்த் தலைக்கணிந்து - ஏகி

4. தண்ணீர்த் தடாகமுண்டு
தாவியோடும் நதிகளுண்டு
தாகமடைவோ ரெல்லாம்
தாராளமாய்ப் பருகிடவே - ஏகி

5. சிங்கம் புலி கரடி
சீறும் துஷ்ட மிருகமங்கே
சென்றிடவோ மார்க்கமில்லை
செல்லுவோமே தீவிரமாய் - ஏகி

6. தீட்டுள்ளவன் செல்லாத ஓர்
திவ்யமான பாதையிது
தீவிரமாய்ச் சென்றிடுவோம்
தூயரெல்லாம் ஆனந்தமாய் - ஏகி

# Tamil Hymn No 138

## ALL SUFFECIENT

பல்லவி

இயேசு மாத்திரம் போதும் - பூலோகத்திலே

அனுபல்லவி

என்னேசரைப் போல
வேறாரையும் காணேன் - என் - இயேசு

சரணங்கள்

1. தந்தை தாயாருமென்னைக் கைவிடுவார்
எந்தையாம் இயேசு என்றும் கைவிடார் என்னை - இயேசு

2. துக்கம் துன்பம் நோவு தொல்லையிலும்
தக்க துணை தந்து தாங்கிடுவாரவர் - இயேசு

3. ஆபத்தில் என்னயல் நின்று காக்கும்
அண்ணல் இயேசு அன்றி ஆருமுண்டோ பாரில் - இயேசு

4. தேனின் மதுரம் அவரின் சத்தம்
தெவிட்டாத இன்பம் தருமே என்றும் அது - இயேசு

5. முற்று மழகு நிறைந்தோரவர்
பற்றுதலுள்ளோர்க்கு வெற்றி தருமெந்தன் - இயேசு

6. வாக்குத் தவறாத தூயனவர்
காக்கும் கருணை நிறைந்த கர்த்தனவர் - இயேசு

7. மாயையாம் யாதும் விரும்பமாட்டேன்
நேயமாய் நித்தமவரில் ஜீவிப்பேன் நான் - இயேசு

# Tamil Hymn No 139

THANKS-OFFERING

பல்லவி

இயேசு பரனை எங்களின் ராஜனை
ஏத்தியே போற்றியே வாழ்த்திடுவோம்

அனுபல்லவி

இகபர சுகத்தை ஏழைகளெமக்கு
இலவசமாய் அவரீந்தாரே - இயேசு

சரணங்கள்

1. காசினியில் கரிசனையாய் வந்து
கஷ்டத்தைச் சகித்தார் கர்த்தர் தாமே
பாசமாகப் பாடுவோம் நாமே
மேசியாவின் நாமத்தையே - இயேசு

2. மாண்டுபோன் மாந்தரை மீட்க
மகிதலம் வந்த நம் மகிபனையே
மாசில்லாமல் ஆசையோடு
நேசரில் நாம் மகிழ்ந்திடவே - இயேசு

3. மரண பயத்தால் நடுங்கின நம்மை
மகிமையால் நிறைத்துமே மகிழச் செய்தார்
சேவையே புரிவோம் இயேசுவின் நாமம்
சிறந்து இலங்கிச் செழித்திடவே - இயேசு

4. தாசரைப்போல தாழ்மையை அணிந்து
நேசரை நேயமாய் பின்பற்றுவோம்
வேஷத்தை ஒழித்து வேதனில் நிலைத்து
வேதாளம் நடுங்கவே ஜெயித்திடுவோம் - இயேசு

5. தாவி வரும் பாவியை ஒருபோதும்
தள்ளாத ரட்சகன் ஜீவிப்பதால்
தாமதமேனோ பாவியே வாராய்
தயாபரனண்டை சேர்ந்திடவே - இயேசு

6. மேகமீதினில் மேசியா வருவார்
வேகமாய் நம்மைச் சேர்த்திடவே
வேறுருபமாய் மாறுவோம் நாமே
மேலோகத்திலென்றும் ஜீவிக்கவே - இயேசு

# Tamil Hymn No 140

## HIS HUMILIATION

பல்லவி

ஆசை இயேசு ராஜனின் கோலம் - ஆச்சரியமே

சரணங்கள்

1. அழகுடன் சௌந்தரியமில்லை
அவரைப் பார்க்க ரூபமுமில்லை - ஆசை

2. இளங்கிளையோ துளிர்க்கும் வேரோ
என்னரும் நேசர் எழும்பும் கோலம் - ஆசை

3. துக்கம் நிறைந்தோர் பாடு சகித்தோர்
தொல்லை சுமந்தோர் கைவிடப்பட்டோர் - ஆசை

4. ஆடுகளைப் போல் நாம் வழிவிட்ட
அக்கிரமம் முற்றும் தூக்கிச் சுமந்தோர் - ஆசை

5. ஏழையென் ரோகம் ஏற்ற தழும்போ
என்னரும் நேசர் தம்முடலெல்லாம் - ஆசை

6. நெருக்கப்பட்டாலும் ஒடுக்கப்பட்டாலும்
நேசர் தம் வாயைத் திறக்கவில்லையே - ஆசை

7. வார்த்தையினாலுல காக்கி வைத்த பிதா
வாதைக்குட்படுத்த வாஞ்சித்தாரோ உம்மை - ஆசை

8. அலகை வென்றதும் அடிமையானதும்
பலவான்களை நீர் பங்கிட்டுக்கொள்ளவோ - ஆசை

## HE WHO KEPT WILL KEEP

பல்லவி

காப்பார், உன்னைக் காப்பார்
காத்தவர் காப்பார் இன்னும் இனிமேல் காத்திடுவார்
கலங்காதே மனமே - காத்திடுவார்

சரணங்கள்

1. கண்டுனை அழைத்தவர் கரமதைப்பார் அவர்
கைவிடாதிருப்பார்
ஆண்டுகள் தோறும் உனக்கவர் அளித்த ஆசிகளை
எண்ணிப்பார்
எண்ணிப்பார், எண்ணிப்பார், எண்ணிப்பார்,
என்று மதை எண்ணிப்பார் - காப்

2. மீட்கப்பட்டவர்க்கு வாக்குப்படி இன்பக் கானான்
அளிக்கவில்லையோ
இப்போ நினிவேயை நிர்மூலம் செய்வதென்று பின்னும்
இரங்கவில்லையோ
இல்லையோ, இல்லையோ, இல்லையோ,
மிக அன்பா யிரங்கவில்லையோ - காப்

3. வீழ்ச்சியில் விழாதுனைக் காப்பதற்காய் விரைவாய் வந்து
சேர்ப்பவரும்
சிற்சில வேளையில் சிட்சையினாலுனைக் கிட்டியிழுப்பவரும்
ஜெயமும், கனமும், சுகமும்,
இரக்கமாயுனக் களிப்பவரும் - காப்

4. தாயினகட்டிலே உன்னைத் தனக்காய் தாம்
தெரிந்தெடுத்தவரே
மாயையிலாகாது தாங்கியணைத்து மந்தையிற் சேர்த்தவரே
அவரே, அவரே, அவரே,
அன்பு கொண்டு மணந்தவரே - காப்

5. ஆதரவாய்ப் பல ஆண்டுகளில் பரனடைக்கலமாயிருந்தார்
காதலுடனவர் கைப்பணி செய்திடக் கனி வுடனாதரித்தார்
தரித்தார், தரித்தார், தரித்தார்
பரிசுத்தத்தி லலங்கரித்தார் - காப்

# Tamil Hymn No 142

## THE BRIDE OF THE LAMB

பல்லவி

சீயோன் மலையதிலே சிங்காரக் குன்றதிலே
சிறப்புடன் நிற்கிறவளாரோ? – தன்
மீட்பரைச் சாற்றுபவள் யாரோ?

அனுபல்லவி

ஆட்டுக் குட்டிக்குமாய் அன்பர் செய்கைக்குமாய்
ஓயாமல் போற்றுபவள் தானே - சீயோ

சரணங்கள்

1. களங்கமில்லாதவளாம் கன்னிகை தானவளாம்
கர்த்தனுக் கேற்றவளிவளாம் அவள்
காதல் எந்நாளும் அவர்மேலே
காந்தன் வரவுக்காய் காத்திருந்தவளே
கற்புடையவளே – பாரில் - சீயோ

2. ஆட்டுக்குட்டியின் பின்னே சென்றவள் தானிவளே
அண்ணல் இயேசுவின் சித்தம் தானே – எல்லா
நாளும் செய்தவளிவளே
அழகவள் பாதமே, மலையதின் மீதிலே
ஆ! ஆ! அதின்பமே – வானில் - சீயோ

3. வாயிற் கபடமில்லை வஞ்சனை தானுமில்லை
ஆடை பிரகாசமாயணிந்தாள் - தன்
காதலன் ரத்தத்திலே தோய்த்தாள்
தன் தேவ நாமமே நெற்றியில் தோணுதே
ஆ! அலங்காரமே – ஆ, ஹா! ஹா! - சீயோ

4. மணவறைதானதிலே மறைந்திடுவாளவளே
மன்னன் அழைக்கும் தொனியோடே – மிக
மாண்புடன் வாழுவாளவளே
வா என் மணாளியே – என்பாரந்நாளிலே
செல்லுவேன் நானுமே – ஆ, ஆமென் - சீயோ

# Tamil Hymn No 143

## PRAYER FOR HIS GRACE

பல்லவி

இயேசுவே கருணாகரா நின்
ஆசி கூறுமே - யிந்நேரம்

சரணங்கள்

1. தாசர்களின் ஆறுதலே தாழ்மையுள்ளோர் தாரகமே
தாவி வந்தும் பாதம் பணிந்தோம்
தயாபரா கிருபை தாரும் - இயேசு

2. தேசமெல்லாம் புலம்பிடுதே - நாசமெங்கும் பரம்பிடுதே
நேசரேயும் பாசகரத்தை
நீட்டி எம்மை ஆதரிப்பீர் - இயேசு

3. ஆதி அன்பு குறைந்தோரெல்லாம் ஆவலாய் முன்னேறிச்
ஆவி மழை யூற்றிடுமிப்போ
அன்பிலே நிறைந்து மகிழ - இயேசு

4. விசுவாச துரோகமெங்கும் வேகமாகத் தோன்றிடுதே
வேதனை மெய் விசுவாசமோங்க
வேண்டுமே ஞானத்தினாவி - இயேசு

5. வாக்கு மாறா தேவா வாரும் வல்லமையால் நிறைக்கவே நீரும்
வெல்லவே பொல்லாத பிசாசை
வீரமா யெதிர்த்து நின்று - இயேசு

# Tamil Hymn No 144

## CONFIDENCE

பல்லவி

நம்பி வந்தேன் திருவடியே சரணம்
நானிலமீதினிலே இயேசு ராஜனின் நாமத்திலே

சரணங்கள்

1. பாசமாய் ஜீவனைக் கொடுத்து - கோரப்
பாவத்திலிருந்தெம்மை விடுத்து
காசினிமீதில் நேசமதாக
காத்து வருகின்ற கர்த்தாதி கர்த்தா - நம்பி

2. தூரத்திலிருந்தெமை யழைத்து – பரன்
தூய்மையின் சாயலையணிய
தொங்கினார் கல்வாரி மூன்றாணி மீதினில்
தூதருக்கில்லாத மேன்மையை யளித்திட - நம்பி

3. நம்பினோரைக் காக்குந் தேவன் - பகல்
இரவு கண்ணுறங்கிடா மூவன்
நாடிடுவோமே, நன்மையைப் பெறவே
நல்லவரென்றென்றும் ஜீவிப்பதாலே - நம்பி

4. வாடாத ஜீவகிரிடமும் - பரன்
மகிமையும், நீதியின் முடியும்
சூடிடுவாரே சுத்தர்கள் சேர்ந்து
பாடிடுவாரே பரன் துதியென்றும் - நம்பி

5. கைவேலையல்லாத மனையில் - நிதம்
வாழ்வோமே சேர்ந்தங்கு விரைவில்
ஆளுவோமே நாம் அன்பரோடென்றும்
அகமகிழ்ந்தே யுகாயுகமென்றும் - நம்பி

# Tamil Hymn No 145

## ENTIRE SURRENDER FOR HIS OPERATION

பல்லவி

வருவீரே விரைவாக
தருவீரே அருள்மாரி வேகம் அன்பாக

சரணங்கள்

1. பரலோக நாதா பரிசுத்த தேவா
நரலோக மக்களெம்மை
கரங்களால் காப்பீரே உந்தனன்பால் - வருவீரே

2. பாவியாமென்னைப் பரனே நீர் அழைத்தீர்
தாவியே சேர்த்தணைத்தீர்
ஜெபித்திட இயேசுவின் நாமத்திலே - வருவீரே

3. தந்தையே என்னைத் தாழ்த்தினேன் பாதம்
உந்தன் மகிமைக்கென்றே
எந்தனை என்றுமண்டிச் சேர்த்திட - வருவீரே

4. கிறிஸ்துவின் அன்பால் நிறைந்து நான் ஜீவிக்க
பிறனுக்கானதை நோக்க
மரித்தோனாய் என்னையே முற்றும் தாழ்த்த - வருவீரே

5. எல்லாவற்றிற்கும் மேலாக உயர்ந்த
வள்ளல் நீர் என்னைத் தாழ்த்தி
உன்னத மகிமை தன்னிலே சேர்க்க - வருவீரே

# Tamil Hymn No 146

## GRATEFUL PRAISES FOR THE NEW YEAR

பல்லவி

இயேசு நாதனைப் போற்றிடுவோம் --புகழ்ந்து
நாதனைப் போற்றிடுவோம் --புகழ்வோமே

சரணங்கள்

1. ஆ ஆ ஆனந்தம் அன்பர் சந்நிதியில்
ஆசீர்வாதமென்றும் பெருகிறதே
ஆதை நிறைந்தக மகிழ்ந்துமே
ஆடிபணிந் தடியவருமை - இயேசு

2. கருணையினாலெமை அலங்கரித்திடவும்
கனிந்து துணை தினமும் புரிந்திடவும்
வரும் பெரும் வினைகளனைத்தும்
அறும்படி அருளினதினால் - இயேசு

3. வருடம் முழுவதிலும் வழுவவிடாது
வாழும் வழிகளிலே வளரச் செய்து
பலமுடைய புயமுடனே
பரன் பராபரித்திடவே - இயேசு

4. பாதையில் பாடுகள் பலுகிவந்திடினும்
வாதை பிணி எமை வருத்திடினும்
அதைரியம் அணுகிவரினும்
அனுதினமும் துதித்திடுவேன் - இயேசு

5. அன்பின் அனுதினம் அடியவர் நிலைத்திட
அண்டி நடத்திடும் ஆண்டிதிலும்
அநாதியும் அந்தமும் நீரே
அநாதையின் சொந்தமும் நீரே - இயேசு

# Tamil Hymn No 147

## HE IS RISEN

பல்லவி

ஏனோ! தேடுறீர்கள் தேடுறீர்கள் ஜீவ தேவனை –
வைத்த கல்லறையிலே

சரணங்கள்

1. உன்னதனின் மன்னவனாம் முன்னதாகவே
சொன்னாரே மூன்றாம் நாளில் உயிர்ப்பதாகவே – தாமும்
ஜெயிப்பதாகவே – ஏனோ!

2. பூதலத்தில் யாவையும் படைத்த தேவனை
பூமியும் தாங்குமோ தன் சிருஷ்டி கர்த்தனை – மகா வல்ல
தேவனை – ஏனோ!

3. தீர்க்கருரை செய்திருந்த நீதிச் சூரியனாம்
வீரனாக எழுந்தார் காத்தோர் நாணவே – காவல் செய்தோர்
நாணவே – ஏனோ!

4. நம்பிக்கையாமே நமக்குப் பார்தலத்திலே
நாமும் எழும்புவோம் அவ்வண்ணல் போலவே - இயேசு
ராஜன் போலவே - ஏனோ!

5. சேனையின் தலைவனும் உன்னத ராஜனும்
ஆனாரே வெற்றியால் சபைக்குச் சிரசும் - நம்மை
விண்ணில் சேர்ப்போரும் - ஏனோ!

6. ரூபித்தனரே நமக்குத் தேவ சுதனென்றும்
தூய்மையின் ஆவியாலே வென்றதினாலும் - சாவை
ஜெயித்ததினாலும் - ஏனோ!

7. ஸ்தோத்திரம் துதி என்றும் எம் இயேசு நாதருக்கே
பாத்திரமற்ற நமக்கீந்தார் ஜீவனும் - ஜடம் சாவாமை
தன்னும் - ஏனோ!

# Tamil Hymn No 148

## GRACIOUS NAME

பல்லவி

இயேசென்னும் நாமம் என் நாவுக்குச் சுகிர்தம்
நூனிலம் தனில் என் அரணே – ஆ

அனுபல்லவி

தீருமென் குறைவும் தீதுகள் குறையும்
தீருமென் திகலும் உரைக்கவும் பெயரும் - இயே

சரணங்கள்

1. சிந்தைகள் பாரங்கள் யாவையும் நீக்கிடும்
சஞ்சலம் யாவுமே அகற்றும் - ஆ
பந்தனை ஜெயித்து வந்தெனை அணைக்கும்
பந்தனை அழித்து சந்தோஷம் அளிக்கும் - இயே

2. வெவ்வேறு பாஷையைப் பேசிடச் செய்திடும்
வெவ்வேறு நாவினால் துதிக்க – ஆ
வேந்தனே நமக்கு ஈந்ததும் இதுவே
வேந்தனை அண்டினோர்க்காறுதல் இதுவே - இயே

3. பேய்களும் நீங்கும் பொல்லாவியும் அகன்றிடும்
நோய் பிணி யாவுமே தொலையும் - ஆ
ஆதிசயம் நடக்கும் அற்புதம் பெருகும்
ஆதிசயப் பெயரும் என்றென்றும் ஜெயிக்கும் - இயே

4. பயங்கர சர்ப்பத்தைப் பயமின்றி எடுக்கவும்
மயக்கிடும் நஞ்சை ஜெயிக்குமே – ஆ
தயங்கி நிற்பவரை தாங்கிடும் பெலனே
தயங்கி வந்தவரை ஆற்றிடும் பெயரே - இயே

5. ஆ என்ன இன்பம் என் ஆண்டவர் பெயரில்
ஆனந்தமே அதன் நினைவில் - ஆ
தேனிலும் இனிமை பேதைக்கு மகிமை
தேனிலும் இனிமை ஏழைக்கும் உரிமை - இயே

6. வணங்குவார் யாவரும் வானிலும் பூவிலும்
தொனித்திட இயேசுவின் நாமம் - ஆ
மடங்குமே முழங்கால் அடங்குமே துடுக்கும்
மடங்கு மெய்பெயரும் நடுங்குமே அவர்க்கு - இயே

# Tamil Hymn No 149

## REQUESTS

பல்லவி

ஜீவஞான இயேசு நாதனின் சேவடி பணிவோமோ நாம்

அனுபல்லவி

ஜீவனை ஈந்த ஜீவாதிபதியை
ஜீவிய நாளெல்லாம் பணிவுடனே நாம் - ஜீவ

சரணங்கள்

1. வெள்ளம் போல வந்திட்ட அலையை விலக்கியே மீட்டீரே
   உள்ளம் போல நேசித்தார் எமை
   கள்ளம் நிறைந்த இப்பார்தல மீதில் - ஜீவ

2. போஷிக்கும் கரம் ஆசிக்கும் கரம் புனிதா நீர் ஈந்திடுமே – ஆ ஆ
   நேசிக்கும் எம்மில் உம் ஆனந்த மாரியை
   பாசமா யித்தினம் தந்து அளித்திடும் - ஜீவ

3. காதலனே நானிலம் தனிலேயும் தாசர்கள் ஓங்கிடவே – ஆ ஆ
   ஆர்வலனே உன் நன்மைகள் ஈந்து
   சீர்பாலனம் செய்திடுவாய் எம்மில் - ஜீவ

4. திங்களொளியே மங்கிடா மதியே தினமுமைத் துதித்திடவே- ஆ ஆ
   பங்கமில்லா உம் பாதத்தைத் தேட
   பாதகர் எமையே பரிசுத்தம் செய்தீர் - ஜீவ

5. காத்திராத தினமதில் நீரே கர்த்தரே வருவீரே – ஆ ஆ
   ஆவி ஆத்மா எம் மாமிச முற்றும்
   மாசற்றதாக மகிமையில் சேர்க்க - ஜீவ

# Tamil Hymn No 150

## IN HIM IS LIFE

பல்லவி

அரசே வருவீர் - எங்கள் மனது மகிமையிலே
நிதமும் மகிழ்ந்திட

சரணங்கள்

1. அரசர்க் கோர் குமாரனும் இவரே
அம்புவியடர்ந்த திராட்சையும் இவரே
வெம்பிடு வோர்க்கு வேருற விவரே
விந்தை யாதாரமே சுந்தரக் கரமெ - அரசே

2. துன்பம் துயரம் தொடர்ந்திடும் நேரம்
தோன்றிடும் தபனக் கிருபை ப்ரகாசம்
இன்பம் தருமென் இயேசுவின் நேசம்
இறையாரருளே வரையாள் துரையே - அரசே

3. பாதகர் பகடி செய்திடும் வேளை
பக்தருக்காகக் கொடுத்தீரே தோளை
பரிசுத்தராகத் தொலைத்தீரோ அலகை
பரலோக சுகம் பாரி லெமக்கீய - அரசே

4. சங்கீத மேளம் எங்கும் முழங்க
சாலேமின் ராஜ்யம் நீடுழி வாழ்க!
பொங்கும் வதன பூமியில் யாம் மகிழ
புவியாரணமே எமக்காருயிரே - அரசே

5. அல்லல் தொலைக்கும் செல்வக் குமாரா
அலகை அடக்கும் அற்புத வீரா
அல்லேலூயா துதி ஆண்டவருமக்கே
அடியாருமையே அடிபணிந்தோமே - அரசே

# Tamil Hymn No 151

## CHRIST'S LOWLINESS

பல்லவி

தூதர்கள் பாடுவதேனோ! - இந்த
வேளையில் நாதங்கள் ஏனோ! தேவ

அனுபல்லவி

புவியெங்கும் மகிமைக் காட்சியிதருமை
மாட்சிமை யாமிது வானோர்க்கும் இனிமை - தூத

சரணங்கள்

1. பூமியிலே சமாதானம் - இந்த
புல்லரின் மீதினில் பிரியம் - என்றும்
உதித்தனர் இன்றும் புதியதோர் பாலன்
ஜெனித்தனர் தீர்த்திட தேசத்தின் சாபம் - தூத

2. கந்தைத் துணியிலே தூங்கும் - மாட்டு
மந்தையின் மத்தியில் தங்கும் - சுதன்
சுந்தரப் பாலன் ஏங்குவதேனோ!
விந்தையாம் இவர்க்கிந்தப் பாடுகள் ஏனோ! - தூத

3. உலகத்தின் மீட்பருக்கிடமோ – குடில்
வல்ல தேவனுக்கிது தகுமோ - இந்த
சொல்லுதற்கரிய அன்பிது வலிதே
பொல்லாங்கராம் நம்மில் அன்புதான் பெரிதே - தூத

4. அடிமையின் ரூபமிதேனோ! – எமை
ஆட்கொள்ள வந்ததினாலோ - இந்த
படிமிசை எவரும் பகருதற்கரிதே
பாதகரா மெமக் காயிந்தப்பாடோ - தூத

5. அதிசய மானவர் தானோ – எமக்
காலோசனைக் கர்த்தராமோ - இவர்
வல்லமைத் தேவனோ புல்லணை மீதிலோ
சொல்லரும் சமாதானமீய வந்தாரோ - தூத

# Tamil Hymn No 152

EVEN ME

பல்லவி

தேடினீரோ என்னையும்என்னையும் என்னையும் நீரோ

அனுபல்லவி

உன்னத அன.பே உயிர்தரும் இன்பே
மன்னா உம் அன்புக்கோர் இணையுண்டோ பாரில் - தேடி

சரணங்கள்

1. நிறுத்திடவோ தூயனாய் தூயனாய் தூயனாய் என்னை
நிர்மலா உமைப்போல் நீதியைத் தரிக்க
என்னதான் நன்மையை என்னில் கண்டீரோ - தேடி

2. கண்டிடவோ அன்பனே அன்பனே அன்பே உம் செயலை
சண்டாளனாமிப் பாவியானுமக்கு
தயாபரா என் செய்வேன்? என்ன மா தயவோ - தேடி

3. வந்தனீரோ ஜீவனை ஜீவனை ஜவீனை ஈய
ஏழை யென் மீதே இரங்கினதாலே
பிராண நாதா பாரா தளித்தீரோ உயிரை - தேடி

4. வென்றிடவோ துரோகியை துரோகியை துரோகியை உமக்காய்
அன்னையே துன்பம் அனைத்தையும் சகித்தீர்
மன்னவா உம்மையல்லால் மண்ணதில் யாலோ - தேடி

5. துதித்திடுவேன் என்றுமே என்றுமே என்றுமே உமை நான்
கதி தந்தெனையும் கடைக்கணித்தீரே
கர்த்தனே கரையில்லாக் கருணையீந்தீரே - தேடி

# Tamil Hymn No 153

## EXALTATION

பல்லவி

ஸ்தோத்திரம் துதி பாத்திரா – உம்மை
இன்றும் என்றும் துதித்திடுவேன்

அனுபல்லவி

காத்தீரே என்னைக் கருத்தாக
வழுவாமல் என்னை உமக்காக
எடுத்தீர் என்னையும் உமக்காக
கொடுத்தீர் உமையும் எனக்காக - ஸ்தோ

சரணங்கள்

1. வல்ல வான ஞான வினோதா
துதியே துதியே துதித்திடுவேன்
எல்லாக் குறைவும் தீர்த்தீரே
தொல்லை யாவும் தொலைத்தீரே
அல்லல் யாவும் அறுத்தீரே
அலையும் எனையும் மீட்டீரே - ஸ்தோ

2. நம்பினோரைக் காக்கும் தேவா
துதியே துதியே துதித்திடுவேன்
அம்புவி யாவும் படைத்தீரே
அம்பரா உந்தன் வாக்காலே
எம்பரா எல்லாம் ஈந்தீரே
நம்பினோர்க்குந்தன் தயவாலே - ஸ்தோ

3. கண்ணின் மணிபோல் காத்தீரே எம்மைத்
துதியே துதியே துதித்திடுவேன்
அண்ணலே உந்தன் அருளாலே
அடியாரைக் கண் பார்த்தீரே
மன்னா எமக்கும் நீர் தானே
எந்நாளும் எங்கள் துணை நீரே - ஸ்தோ

4. தீயோன் அம்புகள் தாக்காதே எம்மைத்
துதியே துதியே துதித்திடுவேன்
தேவே நீர் உந்தன் சிறகாலே
தினமும் மூடிக் காத்தீரே
தீதணுகாதும் மறைவினிலே
தேடியுமதடி தங்கிடுவேன் - ஸ்தோ

5. அல்லேலூயா தோத்திரமே
துதியே துதியே துதித்திடுவேன்
அகில சிருஷ்டிகளும் துதிக்க
அடிமை துதியா திருப்பேனோ
அல்லும் பகலும் நித்தியமாய்
அன்பே உமையே துதித்திடுவேன - ஸ்தோ

# Tamil Hymn No 154

## EXTOL HIM

### பல்லவி

பார்ப்பேனே என் நேசரை நான்
ஆர்ப்பரிப்பேன் நானு மந்நாள்

### அனுபல்லவி

தீர்த்தார் என் கண்ணீர்கள் யாவும்
சாற்றுவேன் நான் துதியே, துதியே - பார்

### சரணங்கள்

1. பாரில் எந்தன் பாவம் தீர்த்தார்
பரத்தில் எந்தன் ஆவல்தீர்ப்பார்
அகத்திலே சந்தோஷமளித்தார்
இகத்தலென்றும் துதியே துதியே - பார்

2. ஆயிரங்களிற் சிறந்தோர்
ஆத்துமாவின் நேசரவர்
ஆபத்திலென் தோழனவர்
நாமத்திற்கே, துதியே, துதியே - பார்

3. எண்ணிறந்த தூதர் கூட்டம்
விண்ணினின்று போற்றும் நாளில்
அண்ணல் இயேசின் அடிபணிந்து
பணிந்து சொல்வேன் துதியே, துதியே - பார்

4. மண்ணின் சாயல் மாறியானும்
மகிமை யேறி மாசற்றோனாய்
மன்னனோடு மணவறையில்
மகிழ்வேன் என்றும் துதியே, துதியே - பார்

# Tamil Hymn No 155

## UNFATHOMABLE LOVE

பல்லவி

அன்பே அன்பே அன்பே
ஆருயிர் உறவே
ஆனந்தம் ஆனந்தமே

சரணங்கள்

1. ஒரு நாளுந் தயை கண்டேனையா
அந்நா ளெனை வெறுத்தேனையா
உம் தயை பெரிதையா – என்மேல்
உம் தயை பெரிதையா. - அன்பே

2. பரலோகத்தின் அருமைப் பொருளே
நரலோகரி லன்பேனையா
ஆழம் அறிவேனோ - அன்பின்
ஆழம் அறிவேனோ. - அன்பே

3. அலைந்தேன் பலநாள் உமையு மறியா
மறந்தே திரிந்த துரோகியை
அணைத்தீர் அன்பாலே - என்னையும்
அனைத்தீர் அன்பாலே. - அன்பே

4. பூலோகத்தின் பொருளின் மகிமை
அழியும் புல்லின் பூவைப்போல்
வாடாதே ஐயா - அன்பு
வாடாதே ஐயா. - அன்பே

5. இப்பாரினில் உம் அன்பின் இனிமை
இயம்பற்கியலாதாகில் யான்
இசைக்கவும் எளிதாமோ - பரத்தில்
இசைக்கவும் எளிதாமோ. - அன்பே

# Tamil Hymn No 156

## LONGING FOR HIS APPEARING

பல்லவி

நேசரே வர இன்னும் தாமதமேன்
தேடிடும் என் மனம் வாடிடுதே

சரணங்கள்

1. காத்திருந் தென்மனம் கலங்குவதாலே
   கர்த்தனே காலமும் கடந்திடலாச்சே - நேசரே

2. யுத்தங்கள் பாவங்கள் பெருகுவதாலே
   சுத்தர்கள் கூட்டமும் தேடுவாச்சே - நேசரே

3. தாரகைபோல் சோபைவீசிய தாசரும்
   தாரணியாமீதில் தயங்கி வீழ்ந்தாரே - நேசரே

4. லீபனோன் போன்ற உம் ரூபத்தை காண
   ராஜனே நீர் தேடும் மானைப்போலானேன் - நேசரே

5. உன் மணவாளனெங்கே யென்றுலகம்
   என்னை நிந்திப்பதை நீர் அறியீரோ - நேசரே

6. இலவச பரிசுத்தம் எமக்களித்தோனே
   சீயோனின் மாதென்னைத் தேடிடுவீரோ - நேசரே

# Tamil Hymn No 157

## HOLY HOLY HOLY

பல்லவி

பரிசுத்தர் பரிசுத்தரே – பரன்
இயேசு கிறிஸ்துவே ஜீவாதிபதியே
பரிசுத்தர் பரிசுத்தரே

அனுபல்லவி

பரிசுத்தமில்லாமல் பராபரனே உமைத்
தரிசிக்கமாட்டர் ஓர் போதும் ஒருவரும் - பரி

சரணங்கள்

1. கிருபாசனப்பதியே
திருவருள் தனை ஈந்தெமைத் தேற்றியே காத்திடும்
கிருபையினாலடியார் உம்மை நிலைத்திட
கேதமில்லாத நின் தாழ்மையை ஈந்திடும் - பரி
2. பரிசுத்தர் பரிசுத்தரே – நீர்
பரிசுத்தரே யெனச் சேராபீன் பாடிடும்
மகிமையால் நிறைந்த இப்பரிசுத்தமாமிதை
மானிடரா மெமக்கீந்திட விரும்பிய - பரி

3. பாடுகள் சகித்ததினால்
பரலோகத்தில் சேர நம் பாதையைத் திறந்தீர்
பரிசுத்தமா மலங்கார நல் வஸ்திரம்
பாடுகள் சகித்து நாம் அணிந்திட விரும்பிய - பரி

4. சமாதன காரணரே – நம்மில்
ஆவியை ஊற்றியே சமாதான மீந்திட்ட
சமாதான நிறைவினால் பரிசுத்தராகிய
கறைதிரையில்லா மணவாட்டியை விரும்பிய - பரி

5. ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் - தூய
ரூபம் நாமணிய எம் சாயல் நீர் ஏற்றதால்
ஸ்தோத்திர பாத்திரனே அதிகாலையில்
தூய உம் சமூகத்தில் நான் மகிழ்ந்திடுவேன் - பரி

# Tamil Hymn No 158

## LET US ALL PRAISE HIM

சரணங்கள்

1. ஸ்தோத்திரம் பாடிப் போற்றுவேன்
ஸ்தோத்திரம் இயேசு ராஜனுக்கே
ஆதியு மந்தமு மில்லோனே
அருபனே உமக்கென்றும் ஸ்தோத்திரம்

பல்லவி

அல்லேலூயா அல் - லேலூயா
பொற்கரனே ஓமெகாவே

2. பொன்னகர் மன்னன் பூவில் வந்தாரே
புல்லணை மீதிலே ஸ்தோத்திரம்
பட்சமுற்று எந்தன் பாரம் தீர்த்த
பெத்தலை வாசனே ஸ்தோத்திரம் - அல்

3. மாயமாம் உலகை மறந்து நானும்
மன்னவா உம்மன்பில் மகிழ்ந்திட
மயங்காமல் நீர் தாரணியில்
மனுவான அன்புக்காய் ஸ்தோத்திரம் - அல்

4. மங்களேமே சீயோன் மணாளா!
மாறாத பூரண சீராளா!
மங்கிடா நித்திய வாசனே!
மாசற்ற அன்புக்காய் ஸ்தோத்திரம் - அல்

5. அமரர் போற்றும் அழகுள்ளோனே
அருபியே சொருபியே ஸ்தோத்திரம்
அளியும் ஆதி அன்பையே
வழியில் விரைந்து செல்லவே - அல்

# Tamil Hymn No 159

## MY ROCK

பல்லவி

ஏறெடுப்பேன் எந்தன் கண்களை – நேராய்
எனக்கொத்தாசை வரும் பர்வதம் மேல்

சரணங்கள்

1. வானம் பூமியும் படைத்த தேவன்
வல்லமையில் சிறந்தவரே
சொல்லிடற்கரிய துன்பத்திலும்
இன்பந் தந்து தேற்றி அணைப்பார்
ஏன் பயமினி இவ்வுலகில் - ஏறெ

2. உண்மை மாறா மகத்துவ தேவன்
உயர் கன்மலைமேல் அடிகள் நிறுத்தி
கண்ணின் மணிபோல் காப்பேனென்றார்
கவலையேனினி கடந்து செல்வோம்
கண் விழிப்புடன் கானம்பாடி - ஏறெ

3. ஞானத்தில் சம்பூர்ணராம் தம்
ஜனத்தின் குறைவறிந்தவரே
ஆபத்திலே தாங்குவாரே
ஆதரிப்பார் அரியபரனே
கருணையின் கண் உடையவரே - ஏறெ

4. உலகின் முடிவுவரையும் இருப்பார்
உண்மையான தோழனவரே
கண்ணுறங்கார் காப்பவரே
அண்ணலையே தோத்தரிப்பேன்
ஆசைக்கேற்ற நேசரவரே - ஏறெ

5. பிதாவின் முன்னாசாரியனாய்
நிற்கிறா ரென்றும் என் இயேசு
வேண்டுதல்கள் செய்கிறாரே
ஏறெடுப்போம் மகிமையவர்க்கே
என்றென்றும் நன்றியுடனே - ஏறெ

# Tamil Hymn No 160

## PRAISE

பல்லவி

தூய தூயாவேதோத்திரம்
உமக்கென்றும் தோத்திரம்
இன்றும் என்றும் தோத்திரம்

சரணங்கள்

1. அந்நியனாய் இருந்து
   அன்மையுமை வெறுத்த
   என்னையும் மீட்டதேனோ
   என்னையும் மீட்டதேனோ - விந்தையாம் விந்தையிதே - தூய

2. சுத்திகரித்து என்னைத்
   தூய ஊழியம் செய்யச்
   சுத்த ஆவி ஈந்தீரோ
   சுத்த ஆவி ஈந்தீரோ – அற்புதம் அற்புதமே - தூய

3. நோய்ப் பிணி யாவுந்தீர
   நேயா உம் ஆதரவால்
   காயங்கள் சகித்தீரோ
   காயங்கள் சகித்தீரோ - என் சொல்வேன் ஆ! என் சொல்வேன் -தூய

4. ஏன்தான் இவ்வன்பெனக்கோ
   ஏதுமில்லாத என்னில்
   என்னதான் கண்டிரோ நீர்
   என்னதான் கண்டிரோ நீர் - அண்ணலே என் அண்ணலே - தூய

5. வருவீர் எம்மை எடுக்க
   துரையே உம் தாசர்களும்
   தரிசிக்க தேவன் முகம்
   தரிசிக்க தேவன் முகம் - ஆனந்தம் ஆனந்தமே - தூய

6. தோத்திரம் ஏறெடுப்பேன்
   பொங்குதென் பாத்திரமே
   துதியே துதியுமக்கே
   துதியே துதியுமக்கே என்றுமே என்றென்றுமே - தூய

# Tamil Hymn No 161

## LOVE UNSPEAKABLE

பல்லவி

அன்பிதேனோ அன்பிதேனோ
அன்னையே கூறுமே – அன்பிதேனோ

சரணங்கள்

1. அன்னையே பதில் கூறுமே யெனக்காக இத்தனை பாடதேன்
அற்ப துாசியாமென்னைத் தேடி வந்ததேனையா - அன்

2. பரத்திலே சுர துாதரின் சுரமண்டலத் தொனி மத்தியில்
நிர்ப்பந்தனா மேழையின் கூப்பிடுதல் கேட்டீரோ - அன்

3. துரோகியாய்க் கொடும்பாதையில் நடந்தோடியபெரும் பாவியை
துாஷித்த இவ்வேழையை நேசித்தீரோ துய்யனே - அன்

4. மகிமையும் மகாமேன்மையும் கனமான நல்ல பதவியும்
கிருபையாய் இவ்வேழைக்கு அளிக்க வந்தீரோ பரா - அன்

5. பூவிலே பெருங் கஷ்டமும் பசி தாகமு மவமானமும்
பாவியாம் இப்பேதைக்காய் தாங்கினீரோ அன்பரே - அன்

6. தாய் தந்தை போலாதரித்து என் வேண்டுதல் யாவும் கேட்டுமே
தாங்கியென்னைக் காத்தீரே அற்புத சொரூபனே - அன்

7. சோதனை மிகக் கூடினும் கடும் வேதனை மிகக்சூழினும்
சொந்தமாக ஏற்றவர் தேற்றினீரோ என்னையும் - அன்

# Tamil Hymn No 162

## GLORY IN THE HIGHEST

பல்லவி

மா மகத்வம் தேவனுக்கே
மண்ணிலே சமாதானமே
மனுஷரில் என்றும் பிரியமே

சரணங்கள்

1. ஆதியுமானவர் அரும்பெரும் தேவனும்
   மனுவுருவாகவே வந்தாரே
   ஆதி ஜோதியான மாமணி - மா

2. உதித்தாரே பாலனாய் உரைத்த முன் சொல்படி
   சிறியதோர் பெத்லகேம் ஊரிலே
   உண்மை வாய்ந்த தேவனானவர் - மா

3. கந்தைத் துணியுமாய் ஆதரவற்றோராய்
   ஆ குடில் வாடியில் தங்கினார்
   சொந்தமான யாருமற்றோராய் - மா

4. நல்லதோர் செய்தியாம் பாரினில் யாவர்க்கும்
   வல்லதோர் மீட்பரே தோன்றினார்
   எல்லையில்லா நல்ல செய்தியாம் - மா

5. ஜெயஞ் சிறந்தோங்குமே இயேசுவின் நாமத்தில்
   பேயையும் வென்றாரே வேந்தனார்
   ஜே ஜே ஜெயம் எங்குமே - மா

# Tamil Hymn No 163

## HE SUFFERED FOR ME

பல்லவி

என் தேவனே ஏன் என்னை கை விட்டீரோ
என்றழவும் இயேசுவுக் கிடையாச்சோ

சரணங்கள்

1. ஆ! எந்தன் பாவமோ அறைபடச் செய்ததோ
அவமானச் சிலுவைதனில் - ஐயோ! - என்

2. அப்பன் சமுகம் ஆனந்தித்தவராம்
அடியாரை மீட்பதற்காய் பாடோ - என்

3. அன்பினாலோ இப்பாவியை மீட்க
ஆதரை வந்தனீரோ – நாதா - என்

4. கேரூப் சேராபீன் மகிமையும் துதியும்
வெறுத்தீரோ என்னை எண்ணி அன்பால் - என்

5. பேயின் கோரம் முற்றுமழித்து
பேதைகளை யுயர்த்த - வந்தீர் - என்

6. இரங்கினீரோ இப்பாவிகள் மீதில்
இறையே யுமைத் துதிப்போம் - நாளும் - என்

7. வானோர்களின் அரும் செல்வக்குமாரா
அடியாரும் ருசிக்க செய்தீர் - அன்பில் - என்

# Tamil Hymn No 164

## SURRENDER

பல்லவி

ஏழையை மீட்ட இயேசுவே சுவாமி
அடிமை சரண் புகுந்தேன்

அனுபல்லவி

நீசனா மென்னைத் தேடினீரோ
காசினியி லன்பு கூர்ந்து - ஏழை

சரணங்கள்

1. எம் பாவம் போக்க எடுத்தீர் இறைவா
   ஈனக் கோலமதை
   என்ன தானிதற் கீடு செய்குவேன்
   அன்னையே விளம்புவீரே. - ஏழை

2. தூரமாய்க் கிடந்தே தொல்லைகளைடைந்தே
   தூயா உமை மறந்தேன்
   தூக்கினீர் என்னைச் சேற்றினின்றே
   தேற்றினீரும் மாவியாலே. - ஏழை

3. விண்ணை நீர் மறந்தீர் விரோதியாமெனையே
   விண்ணில் சேர்த்திடவே
   வேண்டுதல் கேளும் வேந்தனே
   அருள் தேவனே சகாயனே. - ஏழை

4. பாவத்தின் கூலி மரணமாம் பயத்தை
   ஜெயித்தவர் இயேசு கோமான்
   ஜீவனும் சமாதான மீந்து
   தேவனின் சமுகமீந்தார். - ஏழை

5. மாயமாம் உலகின் வேஷத்தை வெறுத்தேன்
   மன்னா உம் அன்பினாலே
   சொன்னீரே மகிமையில் சேர்ப்பதாய்
   உன்னதா உம் வாக்கை நம்பி. - ஏழை

# Tamil Hymn No 165

## PRAISE HIM

சரணங்கள்

1. புண்ணியர் புதுமையைத் தேடி
எண்ணி நான் கவிகளைப் பாடி
மண்ணில் வந்தோனை நாடி
அண்ணலைத் தோத்திரிப்பேனே
கண்ணியால் மீட்டு விட்டீரே

பல்லவி

மகிமை மகிமை மா அருமை
மனுவேலனை என்றும் நானே
மனப்பூர்வமாய் துதிப்பேனே

2. உழையும் சேற்றினிலிறங்கி
அலையும் பாவிகட்கிரங்கி
மலையான பாவங்கள் போக்கி
தொலையாது கரங்களில் தூக்கி
நிலையாக நிறுத்தின தேவா - மகி

3. பொங்குதென் பாத்திரமே
மங்களம் - சாற்றுவேனே
பங்கம் வராதெனைக் காத்தீர்
எங்கும் புகழ்வேனே சாற்றி
மங்கா தெரிவதால் தீபம்
துங்கனைப் பாடுவேன் கீதம் - மகி

4. மேசையா சேவை தானே
ஆசை எந்நாளும் கோனே
நேச வெள்ளம் பெருகுதே
பாச உள்ளம் விரியுதே
தூசி எதைச் செய்குவேனே
நேசரின் பின் செல்வேனே - மகி

5. நித்தம் நித்தம் நித்தியம்
உத்தமர் யாவரும் போற்ற
சுத்த தூதருடன் சேர்ந்து
சுத்தர் சுத்தரென்று சாற்ற
கர்த்தரைப் பாடுவ தெவ்விதம்
எத்தனை நாவினால் துதிப்பேன் - மகி

# Tamil Hymn No 166

## HIS SACRIFICE

பல்லவி

தியாக மெனக்கோ நாதா – என்
ஜீவனில் நாயகா
ஏழையென் தாரகா

சரணங்கள்

1. அன்பினா லெமை மீட்பதற்காய்
அன்னை உமை வெறுத்தீர் - என்னையும்
விண்ணில் சேர்க்க எண்ணிக் கொண்டோ
மன்னா என்னைக் கண்டீர் - தியா

2. பாதகர் பலர் பரிகசிக்க
மௌனமானீரோ – வீணராய்
வாதினாலே மாளுவோரை
வெல்லும் தயையீதோ - தியா

3. சோதனை உமை சூழும் வேளை
வெறுத்தாரோ சீஷர் - பாவிக்காய்
கொல்கொதாவில் செல்லும் வேளை
தனிமையானீரோ - தியா

4. சாய்க்கவும் தலை வைக்கவுமிடம்
வாய்க்கா தலைவானேன்-தயங்கி
மாயையில் அமிழ் வோரையும்
மார்பில் அனணக்கவோ - தியா

5. என்றும் நீர் எமைச் சேர்ப்பதற்கோ
ஏதுமற்றீரோ – எந்தையே
இப்பேரன்பிற் கென்ன செய்வேன்
பேசும் ஏதும் செய்வேன் - தியா

# Tamil Hymn No 167

## SUFFERING

பல்லவி

உமக்கேன் பாடோ? உமக்கேன் பாடோ ?
எம்மில் பாசம் வைத்ததினாலோ ?

சரணங்கள்

1. பகைவன் எனையே பரனே உமக்காய்
பலியால் வெல்லவுமோ
பலியால் வெல்லவும் தானோ - உம

2. ஜனனம் முதலாய் மரணம் வரையும்
கஸ்தி சகித்தீரோ
கஸ்தி சகித்தீரோ அன்பால் - உம

3. குரூர வதைகள் அறிந்தும் பரனே
உருகிச் சுமந்தீரோ
உருகிச் சுமந்தீரோ எனக்காய் - உம

4. கன்னத்தறையும் காடியுறையும்
கருதி ஏற்றதேன்
கருதி ஏற்றதேனோ - உம

5. நேசர் தள்ளவும் நீசர் கொல்லவும்
கொடுத்தீரே உமையே
கொடுத்தீரே உமைத்தானே - உம

6. சுகத்தை யுரிந்தோன் அகத்தை வென்ற
ஜெயத்தை மறப்பேனோ
ஜெயத்தை மறந்திடுவேனோ - உம

7. கிரயம் கொடுத்த துரையே கோனே
உரிமை யமக்கன்றோ
உரிமை யுமக்கன்றோ யான் - உம

# Tamil Hymn No 168

## OH TO BE LIKE THEE

பல்லவி

இயேசுவைப் போலே ஆக
தூசி நான் ஆசிக்கிறேன்

அனுபல்லவி

ருசித்திட்டதால் ஏழை
கருத்துடன் துதித்திட வருவீர் என் அரசே ஸ்தோத்திரம்

சரணங்கள்

1. அன்பே உம் ஆதரவைக்
கண்டேன் நான் ஒன்றுமில்லை
தந்திடுவீர் உந்தன்
தாழ்மையை எப்போதும் தாசன் நான் உமக்கே – ஸ்தோத்திரம்

2. எப்படியாலும் உந்தன்
சொற்படியே செய்திட
அப்பனே எப்போதும்
தப்பாமல் காத்தென்னைத் தாங்கிடுவீரோ – ஸ்தோத்திரம் - இயேசு

3. ஆசை கிசைந்த எந்தன்
நேசரைக் கண்டடைந்தேன்
தோத்திரம் தோத்திரம்
துதியுமக்கென்றுமே தோத்திரம் துதியே – ஆமென் - இயேசு

4. எல்லா துதிகளையும்
சொல்ல இயலேன் ஐயா
ஏழை நான் பாடி என்
ஆவலைத் தீர்த்திட இரங்கிடுவீரோ - ஸ்தோத்திரம் - இயேசு

# Tamil Hymn No 169

## CEASELESS PRAISE

பல்லவி

தேவ தாயபரனைத் - துதிப்பதில்
ஓய்வதில்லை இனிமேல்

சரணங்கள்

1. அற்புத கரத்தைக் கொண்டடியாரைக் காத்தணைத்தார்
   அனுதினம் சாற்றிடுவேன் அன்பருக்குத் தோத்திரமே - தேவ

2. அண்டி நெருங்கினோரை இன்று வரையும் தாங்கி
   அன்றன்று வேண்டிறதை அன்புடன் அளித்து வைத்தார் - தேவ

3. கண்ணிகளுக்குத் தப்பி கண்மணி போல என்னை
   எண்ணியே ஆதரித்த ஏகனையே தோத்திரிப்பேன் - தேவ

4. அன்னை தந்தையின் மேலாய் ஆதரித்தாரே தாங்கி
   என்னைத் தன் சொந்தமாக ஏற்றுக்கொண்டார் தோத்திரமே - தேவ

5. மன்னவன் இயேசு தாமே மகிமையில் தோன்றுகையில்
   மணவாட்டியாக நானும் வானத்திலே சோந்திடுவேன் - தேவ

6. எப்படிப் போற்றுவேனோ என்னரும் நேசரையே
   ஏத்தியே எப்பொழுதும் தோத்திரங்கள் ஏறெடுப்பேன் - தேவ

# Tamil Hymn No 170

## MY LONGING DESIRE

பல்லவி

எப்போ காண்பேனோ இயேசுவையே நான்
எப்போ காண்பேனோ - என் இயேசுவையே

சரணங்கள்

1. வெண்மை கலந்த செம் பொன் ரூபம்
   அன்பிலே பூர்ண புருஷன் - எப்

2. பொன் மயமாம் அவரின் சிரசும்
   இன்பமாம் நண்பர் அரசும் - எப்

3. கருமை நிறமே தலையில் மயிரும்
   அருமையே அன்பர் அழகும் - எப்

4. இனியதேன் கூடொழுகு தேனில்
   இனிமையே தொனி தன் வாயில் - எப்

5. அவர் கைப்பணியோ பொன்னின் வளையம்
   அவரிலே நாமும் இணைய - எப்

6. சௌந்தரியமே அவரின் உருவம்
   சொந்தமே எனக்கென் அரசன் - எப்

# Tamil Hymn No 171

## WHY DRAW BACK?

பல்லவி

எந்தன் சேயே இனி ஏன் பின்னாய்ப் போகிறாய்?
எந்தன் சேயே!

அனுபல்லவி

தாங்குவேன் நானே வா உன்னைத் தா எந்தன் சேயே!
வீணாய் ஏன் அலைவான் - வா
தேடினேன் உன்னையே தா - எந்தன்

சரணங்கள்

1. உனக்காக இப்பாடுகட்குள்ளானேன் - உனக்காக
வா எந்தன் மகனே வா இன்றைக்கே – உனக்காக
மாறா துன் மனமோ? ஓ!
ஆறாதென் அகமே – வா - எந்தன்

2. அடித்தாரே என்னையும் மிதித்தாரே - அடித்தாரே
ஆக்கினை அளித்தார் தாங்கினேனே – அடித்தாரே
ஏனோ எனக்கிவை யேன்?
அன்பினால் உனக்காயே - எந்தன்

3. பாவ இன்பம் உனக்குப் பெரிதாச்சோ - பாவ இன்பம்
பாதகர் பலனோ பயன் தருமோ – பாவ இன்பம்
பாராய் என் கரத்தைப் பார்
தாறேன் என் இன்பத்தை – வா - எந்தன்

4. தேடி வந்தேன் உன் பேரில் பாசத்தாலே - தேடி வந்தேன்
தேற்றுவேன் உனையே ஏற்றுக்கொள்வேன் - தேடி வந்தேன்
திகையாதே மகனே வா
பகையேனே நீயே வா - எந்தன்

5. விட்டுப் போகேன் இந்நிலையில் உன்னை யான் - விட்டுப் போகேன்
வீசுவேன் கொடியைப் பாசமாய்த்தான் - விட்டுப் போகேன்
வீட்டினுள் இழுப்பேன் வா
நிச்சயம் சேர்ப்பேன் பார் - எந்தன்

# Tamil Hymn No 172

## I WILL PRAISE HIM

பல்லவி

நிதம் தோத்திரம் செய்குவேன் தேவ குமாரா
ஞானா என் மணவாளா – தினமே

சரணங்கள்

1. இந்நாள் வரையும் காத்த கரமே
   ஜீவா நிதமும் போற்றுவேன்
   இன்றும் துதி ஏற்றுவேன் - நிதம்

2. துன்பம் துடைத்தே தூக்கி எடுத்தே
   தூயா எமையும் சேர்த்தீரே
   தூய்மை யாக்கி வைத்தீரே - நிதம்

3. மண்ணின் மயலில் மாண்ட என்னை
   கண்ணின் மணிபோல் கா்த்தீரே
   அன்னை போல அணைத்தீரே - நிதம்

4. பொல்லாங்கன் போா் செய் தெதிர்த்த போதும்
   தேவா எனக்காய் ஜெயித்தீரே
   வேண்டுதல்கள் செய்தீரே - நிதம்

5. கொந்தளிப்பாலே படவில் அலைகள்
   குமுறியெழுந்து ஆழ்த்தையில்
   கடலை அதட்டி மீட்டவா - நிதம்

6. பாவத்தின் சாபம் யாவும் நீக்கி
   ரோகம் எல்லாம் ஏற்றவா
   என்றென்றும் நான் போற்றுவேன் - நிதம்

# Tamil Hymn No 173

## GRATITUDE

பல்லவி

அன்பரே உமக்கென்றும் துதி
ஆனந்தம்! பரமானந்தம்!

சரணங்கள்

1. நேசித்தீரோ பாசமாகத்
தோஷம் என்னில் நீக்கிடவே
நேயன் உம்மைப் போற்றிடுவேன்
ஆசை உம்மேல் ஊற்றிடுவேனே - அன்பரே

2. தேடினீரோ பாவியென்னைப்
பார்தலத்தின் தாழ்விடத்தில்
சேற்றினின்று தூக்கினீரோ
சேயனென்றும் பேருமிட்டீரோ - அன்பரே

3. வானலோகத் தேனிலரிய
தானகீதம் வாயிலீந்தே
தேனே அன்பில் தேங்கிடற்கே
ஆன மகிமையை அளித்தீரே - அன்பரே

4. பாளயத்தின் வேறதான
கோலமுற்ற காட்சி கண்டே
ஆவலாயும் அன்பில் ஏழை
தாவி நிற்க ஆவியீந்தீரே - அன்பரே

5. பூதலத்தோர் தூஷித்தாலும்
காதலா நீர் ஆன கோலம்
ஆயிரங்களிற் சிறப்பே
அண்ணலே யென் ஆசையீந்தேனே - அன்பரே

6. தேவலோக ஜீவ தருவே!
தாகந்தீர்த்த ஜீவ நதியே!
நேசமாயும் அன்பர் உள்ளம்
நீடூழி காலமே களிப்பாரே - அன்பரே

# Tamil Hymn No 174

## PRAISES

பல்லவி

தோத்திரம் துதியே சாற்றுவோமென்றும் நிதியே தினமே – கதியே

சரணங்கள்

1. பாடித் துதிப்பேனே பலியாமதையே படைப்பேனே
பரனே குருவே அரசே அரணே பணிவாய்ப் பாடுவேனே - தோத்
2. போற்றித் துதித்தானே தாவீதரசன் முழுமனதாய்
பொருளே அருளே இருளே அகல போற்றி வாழ்த்துவேனே - தோத்
3. பாதம் தொழுவோமே பரனை நினைத்தார் மிகப் பரிவாய்
பதிலேதறியேன் பதியே உமை நான் பணிவாய்ப் பாடுவேனே - தோத்
4. அரசே வருவீரே ஆவல் தீரத் திருமுகமே
தருவீர் ஒரு மா மகிமை தனக்கேயுயர்ப்பீர் போற்றுவேனே - தோத்
5. காத்தீர் எனை நீரே கருணைக் கடலாயளித்தீரே
கதியே தருவாய் திருவே மகிமை கதித்துப் பாடுவேனே - தோத்

# Tamil Hymn No 175

## PROMISE

பல்லவி

மறப்பேனோ நான்
உனக்காயுயிர் கொடுத்தேன் மானே! – உனையே

அனுபல்லவி

தாய் தன் சேயை மறந்தாலுந்தான்
மறப்பேனோ உன்னை நான் மாதே! - மறப்

சரணங்கள்

1. அடியும் சகித்தேன்
   கொடும் பாதகர் செய்த கொடிய வதையும் - அடி
   மடியும் போதும் நினைத்தேன் உனை நான்
   மறப்பேனோ உன்னை நான் மாதே! - மறப்

2. வெறுத்தாரெனையும்
   வெகுதுரோகமதா யென் நேசமதையும் - வெறு
   வெறுமையானேன் பாரில் உனக்காய்
   மறப்பேனோ உன்னை நான் மாதே! - மறப்

3. பசியும் மறந்தேன்
   மிகத் தாகமதாய் நான் சோகம் அடைந்தேன் - பசி
   பாசமுன்னிலே வைத்ததாலே
   மறப்பேனோ உன்னை நான் மாதே! - மறப்

4. நினைத்தேன் உனையே
   எந்தன் உதிரமதை நான் சொரியும் வேளையே – நினை
   அணைப்பேனோ என் அன்பினாலே
   மறப்பேனோ உன்னை நான் மாதே! - மறப்

5. வருவேனே நான்
   என தரண்மனை யதிலே சேர்க்க வருவேன் - வரு
   வாடாதே யென் அன்பே யகலாய்
   மறப்பேனோ உன்னை நான் மாதே! - மறப்

# Tamil Hymn No 176

## UNCHANGEABLE LOVE

பல்லவி

அன்பே - மாறிடாத் திரு அன்பே - எனைத்
தாங்கிடும் தேவன்பே

சரணங்கள்

1. மாளும் வேளை என்னையும் தேடின அன்பே
மயக்கின அன்பே அணைத்து பேரின்பமே
வாழ்த்துவேன் துதியுமக்கே - அன்பே

2. பாதுகாத்தீர் அரசே இதுவரை யெனையும்
பயங்கர துன்பம் பல்கி வந்தாலும்
தாங்கினீர் அன்பினாலே - அன்பே

3. சோரும் போதும் எனக்கும் திருமுகம் காட்டி
சொல் தவறாது சொந்தம் பாராட்டி
ஜொலித்திட ஜெயமளித்தீர் - அன்பே

4. ஆழம் நீளம் உயரம் அன்பதின் அகலம்
அறிந்திடற்காயோ அழைத் தீரென் அன்பே
ஆச்சரியமே தளிப்பேன் - அன்பே

5. வானம் பூமியகலும் அன்பது நிலைக்கும்
வார்த்தையினாலே வரைந்திடலாமோ
வானவர் அன்பதையே - அன்பே

6. பொங்குதே யென்னிதயம் புதுரசத்தாலே
போற்றுவேன் நாதா யாதொன்றுமியலேன்
தோத்திரம் தோத்திரமே - அன்பே

# Tamil Hymn No 177

## SOLACE

பல்லவி

அன்பின் மயமேஇ உமையே உமையே அண்டினேனே

அனுபல்லவி

ஆருயிர் உறவே! அரும் பெரும் துணையே!
ஆறுதல் உமதண்டையே - அன்பின்

சரணங்கள்

1. ஒரு நாளேனும் உறங்கா துறங்கா துவந்து காத்தே
உயிர் கொடுத்தனையே உயர்த்திட எனையே
உயர்த்திட எனையுமக்கே - அன்பின்

2. இன்ப இசையே இறைவா இறைவா ஈந்நு அணைத்தீரே
இந்நிலவுலகில் இடர் புயல் வரினும்
இன்பமே உந்தன் தொனியே - அன்பின்

3. நம்பினவரை தயவாய் தயவாய் தாங்கும் கரமே
நாள் முழுவதிலும் நன்மையே தொடர
நன்றியுடன் துதிப்பேன் - அன்பின்

4. பதினாயிரம் பேர் தனிலும் தனிலும் அரிய அன்பே
கதிதந்தெனையே கடைக் கணித்திடவே
பாரினில் யாருமில்லையே - அன்பின்

# Tamil Hymn No 178

## WHEN SHALL I GO OVER THERE?

பல்லவி

எப்போ சேர்வேன் விண் வீட்டிலே
எப்போ சேர்வேனோ என் வீட்டில்

சரணங்கள்

1. தேவன் எனக்காய் பணித்த செம்மை சேர்மனையில்
சேர்வேனே என்னுள்ளம் மகிழ
நேசர் எனக்காய் நிற்கிறார் ஏற்றுக்கொள்ளவே - எப்போ

2. இன்பம் கமழும் இன்னிசையாம் இன்பர் சமுகமே
என்றுமே இயேசென்னும் பெயரே
அன்புடனே நான் சாற்றுவேன் ஆசை தீரவே - எப்போ

3. ஏறெடுப்பேன் தோத்திரங்கள் என்றும் என்றென்றும்
ஏத்தியே துதி கனம் துதியே
ஏழையானும் சாற்றிடவே தேவனளித்தாரே - எப்போ

4. தேவ கிருபை கிருபை இதுவே கிருபை எனவே நான்
கீதங்கள் தினம் தினம் இசைத்தே
நீடூழியாய் அன்பின் மலர் நேசர்மேல் தூவ - எப்போ

5. தொனிக்குதே யென்னுள்ளம் நன்றித் துதியின் நாதமே
நினைக்கும்போ தெனதன்பர் நகரே
எப்போ சேர்வேனெந்தன் வீட்டில் என் நெஞ்சயருதே - எப்போ

# Tamil Hymn No 179

## THE LAND THAT IS FAIRER THAT DAY

### சரணங்கள்

1. ஜோதி தோன்றும் ஓர் தேசமுண்டு
விசுவாசக் கண்ணால் காண்கிறோம்
நம் பிதா அழைக்கும் பொழுது
நாம் அங்கே வசிக்கச் செல்லுவோம்

பல்லவி

இன்பராய் ஈற்றிலே மோட்சக் கரையில் நாம் சந்திப்போம்
இன்பராய் ஈற்றிலே மோட்சக் கரையில் நாம் சந்திப்போம்

2. அந்தவான் கரையில் நாம் நின்று
விண்ணோர் கீதங்களைப் பாடுவோம்
துக்கம் யாவும் அற்று மகிழ்ந்து
சுத்தரின் ஆறுதல் அடைவோம் - இன்ப

3. நம் பிதாவின் அன்பை நினைத்து
அவரில் மகிழ்ந்து பூரிப்போம்
மீட்பின் நன்மைகளை உணர்ந்து
அவரை வணங்கித் துதிப்போம் - இன்ப

4. அந்த மோட்சக்கரை அடைந்து
வான சேனையுடன் நாம் களிப்போம்
நம் தொல்லை யாத்திரை முடித்து
விண் கிரீடத்தை நாம் தரிப்போம் - இன்ப

5. சாவற்றோர் பூரிக்கும் தேசத்தில்
சந்திப்போம் பாடுவோம் ஆளுவோம்
துக்கம் நோவழிந்த ஸ்தலத்தில்
க்ஷேமமாய் நாம் இளைப்பாறுவோம் - இன்ப

6. அங்கே நம் இரட்சகர் என்றென்றும்
ஆளுகை செய்து வீற்றிருப்பார்
துக்கம் நோய் சாவுகள் நீங்கிடும்
தேவன் நம் கண்ணீரைத் துடைப்பார் - இன்ப

7. தூதர் சூழ்ந்து நின்று பாடுவார்
கேட்டு நாம் யாவரும் மகிழ்வோம்
பக்தர் அங்கே முடி சூடுவார்
ஓர் முடி அங்குண்டு எனக்கும் - இன்ப

8. என் உற்றார் போய் விட்டார் முன் அங்கே
ஆயின் நான் மீளவும் சந்திப்பேன்
இவர் கூட்டத்தில் நான் விண்ணிலே
ஓய்வற்ற பேரின்பம் கொள்ளுவேன் - இன்ப

9. ஏழைக்கும் மாளிகை இங்குண்டு
என்று நல் மீட்பர் அழைக்கிறார்
மாந்தர் யாவர்க்கும் இடமுண்டு
எல்லோரும் வாருங்கள் என்கிறார் - இன்ப

# Tamil Hymn No 180

## BE NOT UNTHANKFUL

பல்லவி

எந்தனுள்ளமே எந்தனுள்ளமே
தேவனின் செயல் மறவாதே – தாமுனக்காய்
செய்த தொன்றும் மறவாதே

சரணங்கள்

1. வீணாகவே மாளும்போது மீட்க வந்தாரே
ஈனனுன்னை விண்ணதில் சேர்க்க ஜீவனீந்தாரே
தோத்திரி மனமே தூயவனடியை
தேவனின் செயல் மறவாதே – உன் - எந்

2. அன்பிலாது நீ அந்நியனாய் வாடித் தயங்கையில்
அண்டனாரே அண்ணல் இயேசு உனக்காய் இன்பமீந்தாரே
அளித்திடு உன்னையே அன்பர் அடியில்
தேவனின் செயல் மறவாதே – உன் - எந்

3. ஊணும் உன்னத ஈவும் உடையும் உனக்களித்தாரே
உண்ணையாமே உன்னதன் வாக்கே தேவ சேயர்க்கே
ஊற்றிடுன் துதியை உள்ளங்கனிந்தே
தேவனின் செயல் மறவாதே – உன் - எந்

4. கேட்கவில்லையா கெதசெமனேயில் நேசர் ஜெபத்தையே
வேண்டுதல்கள் செய்திடும் தொனி கேள் வேதனையுடன்
செவிசாய் என் மனமே உனக்காயழுதார்
தேவனின் செயல் மறவாதே – உன் - எந்

5. வருவேனென்றவர் காலமாச்சே தாமதமேனோ
வானத்திலே காகளம் கேட்கும் நேரமெது தானோ
வாழ்த்திடுன் பரனை வாஞ்சையுடனே
தேவனின் செயல் மறவாதே – உன் - எந்

# Tamil Hymn No 181

## HE CAME DOWN

பல்லவி
உன்னதத் ததிபன் உலகினில் உதித்தாரே
உண்மையிதே அன்புதான் - புவியோர்மேல்
சரணங்கள்

1. பாவத்தின் சாபக்குழியில் அமிழ்ந்த
மானிடர் மேலன்பிதோ
மயக்கிய தென்னையும் மாபெருங் கிருபையே
என் செய்வே னிவ்வன்பிற்கே - உன்

2. ஆருமற்றவனாய்ப் பாரினில் திரிந்தே
காரிருளில் அலைந்தேன்
தாரகை யெனவே தடுத்ததுன் கிருபையே
என் செய்வே னிவ்வன்பிற்கே - உன்

3. நோய் பிணி யாவும் நேயனே சுமந்தே
நீர் பரிகாரியானீர்
ஏழை யான் பெறவே ஈந்ததுன் கிருபையே
என் செய்வே னிவ்வன்பிற்கே - உன்

4. லௌகீக மாய வலைதனில் வீழ்ந்தே
ஐயனே அழிந்திடாதே
கல்வாரி காட்டியே காத்ததுன் கிருபையே
என் செய்வே னிவ்வன்பிற்கே - உன்

5. தோத்திரம் தாவீது கோத்திரா உமக்கே
நேத்திரம் போல் காத்தீரே
தோத்திரம் பாடவே சேர்த்ததுன் கிருபையே
என் செய்வே னிவ்வன்பிற்கே - உன்

# Tamil Hymn No 182

## HIS COMPASSION

பல்லவி

தயவே - மா தயவே
மனுவேலரசனின் தயவே

சரணங்கள்

1. மனுஜென்ம மீட்பிற்காய்ப் போகிறேன்
பவ வினை தீர்க்கவே போகிறேன்
பலியாய் எனைப் படைப்பேனே
எனவே பரன் துணிந்தாரே - தய

2. பாவ விருளதனில் நான் மாண்டே
திருவருள் தனை வெறுத்தேனே
கிருபையாய் எனை நினைத்தாரே
பரலோகமே துறந்தாரே - தய

3. லோகத்தின் பதவியில் போயே
மாயையாம் வலைதனில் வீழ்ந்தேன்
ஜீவனை ஈந்தவ ரன்பால்
சேயனாய் அணைத்தழைத்தாரே - தய

4. தூதர்கள் சேவையுந்தானோ
கீதமுமோ மறந்தாரே
பாவமாகத் துணிந்தாரே
நீதியை நான் அணிந்தேனே - தய

5. பாவத்தின் கோலமதாகி
ரோகமும் சாபமும் நீக்கி
தேவனின் சாயலுமாக்கி
ராஜரீகம் அளித்தாரே - தய

# Tamil Hymn No 183

## ONWARD MARCH

பல்லவி

சேனையினதிபனவர் ஜெயமெடுத்தார்
முன் செல்லுவோமே

அனுபல்லவி

ஜெயமெடுத்தவரால் ஆனந்தமாய்
முன் செல்லுவோமே - சேனை

சரணங்கள்

1. யாதுக்கும் நாம் அஞ்சோம் - எம் வீரன் இயேசுவால்
பாதுகாத்திடும் வல்லதேவனே - ஆனந்தமாய்
முன் செல்லுவோமே - சேனை

2. நோய்பிணி வந்தாலும் எம் ஜீவன் அவரிலே
நேயமாய் அவர் தாங்கி நாட்டுவார் - ஆனந்தமாய்
முன் செல்லுவோமே - சேனை

3. பேயின் கோட்டை யாவும் நாம் தகர்ப்போம் இயேசுவால்
ஜெயத்திற்காயவர் ஜீவனீந்தாரே - ஆனந்தமாய்
முன் செல்லுவோமே - சேனை

4. இன்பம் யாதும் வேண்டாம் எம் இன்ப இயேசுக்காய்
துன்பம் தாங்கிடப் பெலனளித்திடுவார் - ஆனந்தமாய்
முன் செல்லுவோமே - சேனை

5. மோட்ச பாக்கியம் யாவும் தாம் வெறுத்தாரே எமக்காய்
மாட்சியிலெம்மைச் சேர்த்துக் கொள்வதற்காய் - ஆனந்தமாய்
முன் செல்லுவோமே - சேனை

6. வைப்போமெங்கள் ஜீவன் எம் இயேசின் சேவைக்காய்
அன்பினாலெங்கள் உள்ளம் பொங்குதே - ஆனந்தமாய்
முன் செல்லுவோமே - சேனை

# Tamil Hymn No 184

## NEW JERUSALEM

பல்லவி

தேவாட்டின் காந்தையே – அதோ
துலங்குதே பிரபை இலங்குதே மகிமை
விளங்குதே இனிமை

சரணங்கள்

1. தன் மணவாளனுக்காய் தன் ஜீவ தேவனுக்காய்
   தன்னைத்தான் ஆயத்தஞ் செய்தவள்
   தேவ மகிமை அவளில் வீசுதே ஆ! வினோதமே - தேவா

2. ஜெயவீரர் நகரமே ஜெயங்கொண்டோர்க்குரிமையே
   ஜெயமே அத்தேசக்கீதமே
   தேவனே தம் ஜனத்தின் கூடவே என்றும் வாழுவார் - தேவா

3. பன்னிரு வாசலும் பொன்னான வீதியும்
   மின்னுதே பன்னிருவர் நாமமே
   மேன்மை சேர்பளிங்கின் பிரபையும் தேவசோபையே - தேவா

4. தேவாலயம் அதில் தேவாதி தேவனே
   தேவப் பிரபையே வெளிச்சமே
   புதிய புவியோர் அதில் நடக்கவே மகிழ்ந்திலங்கவே - தேவா

5. என்று நான் சேர்வேனோ என் இன்ப வீட்டிலே
   இராக்காலமில்லா நகரிலே
   ஜோதியாக வாழுவேன் நிதம் தேவ சமுகமே - தேவா

# Tamil Hymn No 185

## PRAISE HIM

பல்லவி

ஆனந்தமாய்ப் பாடுங்கள் அற்புத அற்பதனை
சகல சிருஷ்டிகள் யாவும் பணிந்து – அகில சிருஷ்டிகரை

சரணங்கள்

1. சென்ற காலம் - ஜெயத்தொனியுடனே எங்குமே ஜொலித்தார்
   ஏழைகட்காக மாபெலன் சொரிந்தார்
   ஏத்தியே தோத்திரிப்போம் - எந்நாளும்
   இயேசு மகிபனையே - ஆன

2. போகையிலும் - வருகையிலும் எம் தோழனாமவரே
   போதனை அளித்து போம் வழி கொடுத்து
   போஷித்த எம் துரையை – நாம் துதிப்போம்
   இயேசு மகிபனையே - ஆன

3. ஆறுதலும் - ஆதரவும் எம் ஆத்ம நாயகனும்
   ஆசைக்கிசைந்து வேண்டுதற்கிரங்கி
   யாவையுமே அளித்தார் – நாம் துதிப்போம்
   இயேசு மகிபனையே - ஆன

4. வந்திடுவார் – வாஞ்சைகள் தீர வானத்திலெமக்காய்
   வாழ்த்துவோமே நாம் அன்பரின் துதியை
   வல்லவர் தேவனென்றே – ஆர்ப்பரிப்பாய்
   இயேசு மகிபனையே - ஆன

5. காலா காலம் - கர்த்தரின் முகமே கண்டிடும் கிருபை
   காதலனளித்தார் காத்திராதெமக்குக்
   கனிவுடனே துதிப்போம் - எந்நாளும்
   இயேசு மகிபனையே - ஆன

# Tamil Hymn No 186

## NEW GRACE

பல்லவி

புதிய கிருபை புதிய கிருபை
புதிய கிருபை ஈந்தாய் - எந்தாய்

சரணங்கள்

1. புதுமையாய் எம்மைப் புதுப்பியும் நாதா
பதியே கதி நீர் தானையா
பரிசுத்த மா மலங்காரத்துடனே
தரிசிக்க தயை செய் நாதா - புதிய

2. அன்பனே உம்மை அனுதினம் போற்ற
நண்பனே நான் இனி மறவேனே
துன்பம் நிறைந்த பாரினில் பரனே
இன்பம் நீர் ஒன்றே தானன்றோ - புதிய

3. சாத்தானை ஜெயிக்க சக்தி அருள்வாய்
சுத்தன் யானாக நின் சித்தம் செய்வாய்
சத்திய பரனே! நித்திய குருவே!
சுத்தர்க்கு அருள் தரும் தருவே! - புதிய

4. எக்காளம் தொனிக்கையில் இயேசு பரனே
அக்களிப்புடன் ஆகாய மீதில்
துக்கங்கள் ஒழிய தூயா உம்முடனே
தூய்மையாய் விரைவேன் நானன்றோ - புதிய

5. எங்கும் நிறைந்த ஜோதி பிதாவே
துங்கவனே! எம் மங்களனே!
மணவாட்டியாக மகிழ்ந்து நான் ஜொலிக்க
மன்னா நீர் வந்தாசீர் தாரும் - புதிய

# Tamil Hymn No 187

## HIS DECISION

### பல்லவி

அன்பினரசே போகிறேன் மனு ஜென்மம் மாள்கிறதே
பூவின் ஜென்மமும் அழிகிறதே

### அனுபல்லவி

நம் கையின் பலனல்லவோ
படு பாதகனால் பல பாடுக்குள் ஆனாரே
ஆ! தந்தை நம் மனம் நோகுதே
படைப்பே ன்னைத் தானே

### சரணங்கள்

1. தேவ பிரபையும் போச்சே பேய்க்குமடிமையாச்சே
மனு ஜென்மத்தினின்பம் போச்சே
எந்தை நான் என் செய்குவேன்?
என் ஜீவனுமோ என் ஜீவனும் தான் பெரிதோ
ஏதாகிலும் நின் சித்தமே
செய்வேன் விடை கொடுமே! - அன்

2. சுந்தரனாமே ஏதேனிலிருக்கையிலே
முழு ஆட்சியும் வகிக்கையிலே
நம் ஆசைக்கேற்றவனே
பல நன்மைகளும் வெகு நற்குணமுடையவனே
ஆ என்னவோ! நிலைமை இப்பொழுதே
பார்க்க பரிதாபமே - அன்

3. இனிய தொனியாமே கனிவுடன் பேசுகையில்
நம்மோடு சம்பாஷிக்கையில்
இன்பமானவனே
இழந் தானே ஓ! இழந்தானே இவைகளையும்
இனித் தாமதமின்றிப் போகிறேன்
இன்பமினக்கினி ஏன்? - அன்

4. வேண்டா மெனக்கினியே மேன்னையும் மகிமையுமே
தேவ தூதரின் புகழ்ச்சியுமே
வேகமாய்ப் போவேன்
வெறுத்திட்டாலும் ஜனம் வெறுத்திட்டாலும் தானே
என் ஆசையே நின் எண்ணமே
என்றுமே செய்திடவே - அன்

5. எடுப்பேன் மனுக்குலத்தை சேர்ப்பேன மேன்மையிலே
தேவ சாயலுமாக்குவேனே
என் அன்பு மாறிடாதே
ஏதேனிலே சென்ற பேயையும் நசுக்கிடுவேன்
என்றென்றுமாய் நம்மோடுமே
ஏகனாகிடவே - அன்

# Tamil Hymn No 188

## JESUS

கண்ணிகள்

1. நாட்களோ நெருங்குதே
   காலமோ கிட்டிச் சேருதே
   எப்போ நான் காண்பேன் என் இயேசுவை நான்
   என் இன்பமவரே - ஓ!
   எப்போ என் கண்ணால் காண்பேனோ

2. பாவிக்காய் வந்தவர்
   மாண்புடன் தொண்டு செய்தவர்
   பங்கம் பாடுகள் எங்கும் சகித்தார்
   ஆ! பாதகர் தானே - ஓ!
   பயமின்றி வாதை செய்தாரே

3. உருவத்தில் சுந்தரன்
   குணத்திலே பரிபூரணன்
   துன்பம் வந்தாலும் உண்மையாம் தோழன்
   ஓ! குரூர வதையோ - ஓ!
   உடலில் எனக்காய்பட்டாரோ

4. இதயமும் இளகுதே
   இன்பரின் அன்பை எண்ணவே
   இன்றுமென்றென்றும் ஒன்றான தேவன்
   என் நேசரேசுவை - நான்
   சேர என் ஆசை பொங்குதே

5. கரமதின் காயத்தை
   கண்டெப்போ முத்தஞ் செய்வேனோ
   கட்டியணைப்பேன் ஆசை தீரவே
   ஆ! காதல் கொண்டோனை - ஓ!
   காண இவ்வென்ன பாக்கியமோ

# Tamil Hymn No 189

## THANKS GIVING

பல்லவி

போற்றிடுங்கள் சாற்றிடுங்கள் தேவ சுதனை
ஓயாமல் எங்கள் நாயகனை

சரணங்கள்

1. சர்வத்தையும் படைத்தோன் சர்வ வல்லவன்
சாவையும பேயையும் நோயையும் ஜெயித்தார் - ஜெயித்தார்
பாடுங்கள் ஏத்துங்கள் நேசரையே இன்றுமென்றுமே
ஓயாமல் எங்கள் நாயகனை - போற்

2. இன்று வரை எம்மில் அன்பைச் சொரிந்தார்
இன்னலும் துன்பமும் கன்மமும் போக்கி - போக்கி
ஜீவன் சுகம் பெலம் தந்நு எம்மைக் காத்துப் போஷித்தார்
இயேசுவை இன்றுமே துதிப்போம் - போற்

3. சஞ்சலங்கள் மத்தியில் தஞ்சமானவர்
நெஞ்சமும் அஞ்சிடா கெஞ்சுதல் கேட்டார் - கேட்டார்
என்றென்றும் ஏத்துவோம் தேவ நாமம் எங்குமோங்கவே
எப்போதும் இயேசு ஜெயித்தவரே - போற்

4. ஜீவ வாசல் திறந்தார் நேசர் எமக்காய்
இன்பமும் கீதமும் அகமதில் அளித்தார் - அளித்தார்
இன்றுமே பாடுவோம் எங்களுக்காய் மாண்ட பரனை
எப்போதும் நன்றியுடையவராய் - போற்

5. தோத்திரம் தோத்திரம் ஏறெடுப்போமே
துதியுங்கள் துதியுங்கள் துதியுங்கள் பரனை - பரனை
பூலோகமே உங்கள் உன்னதனை உண்மையுடனே
தோத்திர பாத்திரனவரே - போற்

# Tamil Hymn No 190

## WHY DELAY?

பல்லவி

இன்னமும் தாமதமேன் - கிருபையின் தொனி ஒலிக்குதே

அனுபல்லவி

மின்னல் போல ஆயுள் போகுமே
பின்னே பின்னே யென உரைப்பதேன்
இந்நாளும் இயேசுவைச் சேருமே
இனி இன்னமும் தாமதமேன்

சரணங்கள்

1. யௌவனமும் போகுமே அழகுமதனோ டழியுமே
யாதொரு வாதமும் கூறாதே
சாத்தானின் வலைக்குள்ளாகாதே
வாருமே பரன் பாதமே
பணிவாய் வந்து சேர்ந்திடுமே - இன்

2. தருணமுமிதுவே தயாபரன் கரம் தோன்றுதே
தாவியே உன் அண்டை வந்தாரே
பாவியே இவ்வன்பைப் பாருமே
பாதகனாகவே மாண்டாரே
அந்தப் பாடுக ளுனக்காயே - இன்

3. உன்னையே அழைக்கிறார் உன் நிலைமை முற்றும் அறிவாரே
முன்னான உன் வினை தீர்க்கவும்
பின்னாக முற்றிலும் காக்கவும்
மண்ணான உன்னை விண் சேர்க்கவுமவர்
மாண்டாரே கல்வாரியில் - இன்

4. வேண்டாமென்னும் எண்ணமோ? வேகமாய் வாசலும் மூடுமே
வேதனை தான் உந்தன் பங்கையோ
வெறுத்தாலோ இந்தப் பாக்கியமோ
இயேசுவே உன் பாரம் தீர்க்கவோ
எழுந்து முன்னே சென்றிடாயோ - இன்

# Tamil Hymn No 191

## LOVE CAPTIVATING

பல்லவி
என்னவோ என் தேவ அன்பே
மயக்குதே என்னையே – ஆ

சரணங்கள்

1. நாளுக்கு நாளாய் நன்மைக்காளாய்
நம்பினோரைக் கிருபைகளால் - ஆ - ஆ - ஆ
தாங்கினாரே போற்றுவேன் - என்றுமே - என்

2. அன்பே உம்மை அறியாதோனாய்
தின்மைகளில் தீதாய்ப் போனேன் - ஆ - ஆ - ஆ
ஆதரித்தீர் அன்னையே அன்பிதோ - என்

3. குரூரமான குருசும் தானோ
துரோக வதையும் எனக்காய்த்தானோ - ஆ - ஆ - ஆ
துரையே சகித்தீர் தூசி நான் என் செய்வேன் - என்

4. மேலோகத்தில் ஏழைக்காக
மேன்மையான வீட்டைச் செய்தீர் - ஆ - ஆ - ஆ
என் செய்வேனிவ் வன்பிற்கே எந்தையே - என்

5. எப்போதும் நின் சித்தம் தானே
ஏழை செய்யக் கிருபை மிகவே - ஏ - ஏ - ஏ
இயேசுடீவ நீர் ஈயுமே - என்னிலே - என்

# Tamil Hymn No 192

## COME UNTO ME

பல்லவி

பார் என மகனிப்பாடே உனக்காக
ஆ - ஆ - ஆ - என் மகனே
சகித்தேன் உனக்காக

சரணங்கள்

1. இனியேனோ தினமும் தீதாய்ப் போகிறாய்
இனிய இவ்வழைப்பையே வீணாய்க் களைவாய்
இனிமேல் செய்வேனெனவே சொன்னாய்
இனியும் உனையே நீ வஞ்சித்தாய் - பார்

2. பாவப் பாரம் உனையே பாழாக்கிறதே
நவ நவ இன்பமும் நயங் காட்டுகிறதே
நய வசனிப்பால் ஏமாற்றுகிறதே
நலமே மகனே செவி சாயாதே - பார்

3. அழிவே உனையே அடுத்து நிற்கிறதே
அனுதினம் உனையது பயங்காட்டுகிறதே
ஆ! ஆ! வந்திடு அருமை மகனே
வா வா உனையே ஆதரித்திடவே - பார்

4. கிருபைக் காலம் விரைவாயப் போகும்
அருமையாமுன் ஆத்ம மீட்பும்
துரிதமா யென்னண்டை சேரும்
அணைப்பே னுணையே நானே இன்றும் - பார்

# Tamil Hymn No 193

## HE IS BORN

பல்லவி

என்னவோர் விந்தையிதே?
தேவன் மா தேவன்
ஜெனித்தார் எம்மைப்போலே - அற்புத தேவன்

சரணங்கள்

1. விட்டாரே விண்ணை அன்பினாலே
மாட்டுத் தொழுவம் தாமே தெரிந்தார்
நம்மை நேசித்த நேசத்தாலே - என்ன

2. கன்னிகையின் நற்பாலனவர்
முன்னுரைப்படி நம்மை மீட்கவே
உதித்தார் அற்புதம் அற்புதமே - என்ன

3. தாழ்மையின் ரூபமேன் இவர்க்கோ?
வாழ்வதின் மேன்மை தாமே தரிக்க
தருணமவர்க்கு இல்லாமலோ - என்ன

4. ஆச்சரியம் தூதர் வானத்திலே
ஆசையாயத் துதி சாற்றுகிறாரதோ
கேளுங்கள் விந்தையாம் விந்தையிதே - என்ன

5. செல்லுவோம் நாமே தீவிரமாய்ச்
சேவை புரிவோம் இயேசுவுக்கென்றும்
எம்மை நேசித்த நேசத்தாலே - என்ன

# Tamil Hymn No 194

## BLISS

பல்லவி

வாழுவேன் அன்பர் நாடதில் ஆர்ப்பரிப்புடன்
வாஞ்சையுடன் காத்த எந்தன் ஆவல் தீர்த்திட்டார்
வாழுவேன் இன்ப நாடதில்

சரணங்கள்

1. என்ன இம்மேன்மை! ஏன் பேர்க்காய்த் தானோ
என்னென்னை இன்பம் என் சொந்தமானதோ
ஏத்துவேன் என் உள்ளமதினால் - துதி
என்றும் என்னை மீட்ட அன்பைக் கூறுவேன் - நிதம் - வாழு

2. அன்பே மகிமை அன்பே நான் காண
அன்பே உம் சாயல் என்னில் தரித்தீரே
ஆனந்தததத்தால் சாற்றிடுவேன் நான் - துதி
அன்பே உள்ளமதில் பொங்கிச் சாடுதே - எனில் - வாழு

3. கைவேலையல்லா கனமான வீடே
கைவசமாக்க அருள் என்னிலீந்தீரே
காதலா நின் நன்றி கூறுவேன் - தினம்
காலா காலங்களாய்ப் பாடிடுவேன் நான் - புகழ் - வாழு

4. நின் கிருபை தேவா என்றென்றுமாக
இவ்வேழைக் காண இதயந் திறந்தீரே
இன்பமாகப் போற்றிடுவேன் நான் - இனி
இன்னோர் அண்ணலெனக் கெங்குமில்லையே – வேறு - வாழு

5. உம் ரூபம் தானே என் பிரியம் தேவே
உம்மோடு சேர என் நெஞ்சு பொங்குதே
உன்னதா உம் மேன்மை எத்தனை - மகா
ஊற்றுவேன் நிதம் என் உள்ளமதை நான் - நிதம் - வாழு

# Tamil Hymn No 195

## BEHOLD THE SON OF GOD

பல்லவி

தேவசுதனிவரோ - ஓ - ஓ - ஓ - இவர்
அந்தக் கேடடைந்தவர்
அந்தோ! கேடடைந்தவரோ - இவர்

சரணங்கள்

1. மாசில்லா மேனி வாடுதே
   பாதகர் பரிகாசம் செய்யவும் பாடு சகித்தவரே
   மா பாவமாகவும் வாதை செய்தனரே - தேவ

2. யூதர்களாலே துரோகமே
   மூர்க்கமாகவே செய்தனரதோ! ஏன் சகித்தவரோ?
   பூலோகர்க்காகவே துன்பமிதேனோ - தேவ

3. நண்பர்களாலே நன்மையோ
   நன்றியாய்த் துதி செய்வாரில்லையோ? ஆ! பரிதாபமே
   ஆ! நானிலந்தனில் ஏனிந்தக் கேடோ! - தேவ

4. தேவ சமுகம் போனதோ
   தேசமும் முழு சிருஷ்டியும் வெகுவாய் தவிக்கிறதே
   வேதாகமமதின் மா பெரும் பொருளே - தேவ

5. அன்பின் சொரூபம் நையுதே
   ஆயிரம் பதினாயிரங்களிலும் சிறந்தவரே
   என் ஆத்துமாவுக்கு என்றும் நல்லவரே - தேவ

# Tamil Hymn No 196

## THANKFULNESS

பல்லவி

அன்பிதோ அன்பிதோ அன்பிதோ - என்னை
அழைத்தீரரசே அருளாலே

சரணங்கள்

1. நாறிக்கிடந்த என் நாற்றத்தை நீக்கியதும் கிருபை
நாசமணுகாமல் பாது காத்தணைத்து மந்தையில் சேர்த்துக்
கொண்டீரே - அன்

2. சுத்த ஜலத்தினால் சுத்திகரித்து என்னைத் தமக்காய்
மீறிப்போகும் எந்தன் சிந்தை அகற்றித் தம் சித்தத்தைச் செய்யச்
செய்தீரே - அன்

3. ஆவியீந்து எந்தன் காயம் தன் பரிசுத்தாலயமாய்
ஆதி தேவன் என்னைச் சொந்தமாக்கிக் கொண்டார் என்ன
பேரின்பமெனக்கே - அன்

4. தூய ஜீவியம் இப்பூலோகத்திலே யானும் நடத்த
தூய கீதமுடன் தூயருடன் பாட ஏழைக்கும் கிருபை செய்தீரே

5. உம்மைச் சந்தித்திட தூயா உம் சாயலெனக்கருளும்
உன்னதங்களிலே என்றும் உம்மோடொன்றாய்த் தங்கிடத் தயவருளும்

# Tamil Hymn No 197

## WHO WILL GO FOR ME?

பல்லவி

என் ஜனம் அழிகிறதே - ஆ
எனக் கார்தானோ போவார் பூவிலே - சேவை செய்ய

சரணங்கள்

1. தீமை செய்யும் தீயோர் அதிகம்
   ஜீவனீவார் யாருமே இல்லையே - என்

2. லோக இன்பம் பாவ நேசம்
   துரோக சிந்தை மேற்கொண்டு விட்டதே - என்

3. தேவ அன்பை அறியார் அநேகர்
   வேத வசனம் வாஞ்சிப்பாரில்லையே - என்

4. மாயையதிலே தயங்கிறாரே
   மாளுவோரை மீட்போருமில்லையே - என்

5. அனலில்லாத சபைகள் அநேகம்
   ஆத்துமாவைக் கொல்வோருமதிகம் - என்

6. அழிவே வழியில் சந்தித்திடுதே
   அந்தோ! அந்தோ! இக்காட்சி பாருமே - என்

7. யாரோ யாரோ போவாரெனக்காய்
   ஆத்துமாக்கள் சேர்க்க ஜீவனுக்காய் - என்

# Tamil Hymn No 198

PRAISE

பல்லவி

போற்றுவோமே போற்றுவோமே
எம் தேவரீரை இவ்வேளையிலே - நன்றியுடனே

சரணங்கள்

1. துங்கவன் இயேசுவே தூயா உமக்கே
துதிகள் சாற்றிடுவேன்
மங்கா புகழும் மகிழ்ந்துபோற்றி எங்கும் துதித்திடுவேன்
கங்குல் அற எங்குமெ ஒளி
மங்கிடாமலே தங்கிடவேணும் - போற்று

2. ஆழ்ந்த சேற்றினில் அமிழ்ந்த எம்மையே
அணைத்து எடுத்தோனே
ஆழி தன்னிலெம் பாவம் எறிந்த
அன்னை உத்தமனே
அன்றும் இன்றும் என்றும் துதிப்பேன்
மன்னவனையே மண்ணதினிலே - போற்று

3. பாவம் போக்கியே கோபம் மாற்றிய
ரோகம் தொலைத்தோனே
துரோகி என்னையே சுத்திகரித்த
தூய வேந்தனே
தூயாநேயா காயம்மாற்றிய
கருணாநிதியே பரிகாரியே - போற்று

4. பாரில் என்னையே பிரித்தெடுத்தோனே
தாவிவந்தோனே
அகமதினிலே ஆவி ஈந்திட
அருள் நிறைந்தவனே
தரிசனம் தந்த தேவனே
பரிசுத்தமாய் பாரில் ஜீவிக்க - போற்று

5. பூரணர் ஆகவே பூவில் வாழ்ந்திட
கிருபை அளித்தோனே
புகழை விரும்பேன் மகிழ்வேன் தினமே
மகிமை செலுத்திடுவேன்
கோனே தேனே கோதில்லாதோனே
கானம் பாடியே துதித்திடுவேன் - போற்று

# Tamil Hymn No 199

## THE LORD INVITES YOU

### பல்லவி

அழைக்கிறார் அழைக்கிறார் இதோ
நீயும் வா உந்தன் நேசர்
ஆவலாய் அழைக்கிறார் இதோ - நீயும்

சரணங்கள்

1. பாவத்தை யேற்றவர்
பலியாய் மாண்டவர்
கல்வாரியின் மேட்டினில்
கண் கொள்ளாத காட்சியே
கண்டிடும் வேண்டிடும்
பாவப்பாரம் நீங்கிடும் - அழை

2. நோயையும் ஏற்றவர்
பேயையும் வென்றவர்
நீதிபரன் உன் நோயை
நிச்சயமாய்த் தீர்த்தாரே
நோயுற்ற உன்னையே
நேயமாய் அழைக்கிறார் - அழை

3. துன்பம் சகித்தவர்
துயரடைந்தவர்
இன்னலுற்ற உன்னையே
அண்ணல் இயேசழைக்கிறார்
துன்புறும் நெஞ்சமே
துரிதமாய் நீ வாராயோ - அழை

4. அந்தக் கேடடைந்தார்
அழகற்றுத் தோன்றினார்
சொந்தமாகச் சேர்த்திட
இந்தப் பாடடைந்தாரே
நிந்திக்கும் உன்னையும்
சந்திப்பார் நீ வாராயோ - அழை

5. கல்லறை திறக்க
காவலர் நடுங்க
கஸ்திகளடைந்தாரே
கட்டுகளறுத்தாரே
உயிர்த்தார்இ ஜெயித்தார்
உண்டு மீட்புனக்குமே - அழை

6. சாந்த சொரூபனே
சத்திய வாசனே
வஞ்சமற்ற வாயனே
வந்தனைக்கும் நேயனே
தஞ்சமே தன்னையே
தந்துனை யழைக்கிறார் - அழை

# Tamil Hymn No 200

## LET US PRAISE HIM

பல்லவி

போற்றிடுவோம், போற்றிடுவோம்
எங்கள் அண்ணலாம் இயேசுவை நாம்
போற்றிடுவோம், போற்றிடுவோம்
எங்கள் இயேசுவை நாம்

சரணங்கள்

1. இன்பமளித்தாரே - ஓயாததோர்
   துய்யா, துய்யா, துய்யா
   உள்ளமதனில் கனிந்து பணிந்து
   துதிகள் சாற்றிடுவோம் - போற்

2. துன்பம் தொலைத்திடா - பாதைகளில்
   தெம்மை, எம்மை, எம்மை
   அன்பாலனுகிக் கானகந்தனில்
   அரண் அளித்திட்டாரே - போற்

3. பாதையினிருளில் - நெருங்கிடும்
   கிருபை, கிருபை, கிருபை
   தந்து தழுவி அருகிலிருந்து
   அருள் சொரிந்திட்டீரே - போற்

4. அன்பின் உருபியே - முழுவதும்
   அன்பே, அன்பே, அன்பே
   அந்நியமான என் உள்ளத்தில் அன்பையே
   நிறையச் செய்தீரே - போற்

5. தாங்கிடும் கரமெ - அடியாரை
   எங்கும், எங்கும், எங்கும்
   அங்கங்கும் ஓங்கியே எங்களைக் காத்ததால்
   துங்கனைப் போற்றிடுவோம் - போற்

# Tamil Hymn No 201

## ALL OF GRACE

பல்லவி

கிருபையே - உன்னை
இந்நாள் வரையும் காத்தது - என்
கிருபையே

சரணங்கள்

1. பாதையில் கஷ்டம் அணுகிடும்போது
பங்கம் வரா மலுன்னைத் தாங்கினேன்
பெலம் ஈந்தேன் கரத்தால் தூக்கினேன் உனை நான்
எந்தன் அன்பினால் உன்னை நிறுத்த - கிருபை

2. சோதனையாலே சோர்ந்திடும்போது
சொந்தமென நான் உன்னைச் சந்தித்தேன்
ஜோதியை உன் முன்னில் ஜொலித்திட செய்திட்டேன்
ஜெயக் கீதங்கள் பாட வைத்திட்டேன் - கிருபை

3. ஏகனாய் நீயும் சஞ்சலத்தாலே
ஏங்கும் போது உன் அண்டை வந்திட்டேன்
ஏற்ற நல்துணையை ஈந்திட்டேன் அல்லோ நான்
என்றும் உன்னை நான் சொந்தமாக்கினேன் - கிருபை

4. ஜெயமான பாதை சென்றிடச் செய்தேன்
செப்பமாக உன் கரம் பிடித்தேன்
ஜெய ஜெய கீதங்கள் தொனித்திடச் செய்தேனே
சேவை செய்யவும் கிருபை தந்தேனே - கிருபை

5. என்றென்றுமாக என் கிருபை காட்ட
கொண்டேன் உன்னை இம்மண்ணில் பிரித்து
என் அரும் மகனே காப்பேனே உன்னை நான்
உன் தந்தை நான் உன்னை விடேனே - கிருபை

# Tamil Hymn No 202

## HE WILL SAVE YOU

பல்லவி

வருவீர், நீர் வருவீர் - தோழரே
காலமில்லையே உமக்கு - இன்று வருவீர்

சரணங்கள்

1. துன்பமே உலகிலே
   ஓ! வா, நீ மாள்வானேன்
   உன்னையே ஆ! உன்னையே
   அழைக்கிறார் உன் ஆண்டவரே - வருவீர்

2. தீயிலே இப்பூமியே
   ஆ, ஆ, ஆ! தீய்ந்து போகுமே
   நம்பாதே, ஓ! நம்பாதே
   நாடாயோ உன் ஆண்டவரை - வருவீர்

3. புல்லாமே பூலோகத்தார்
   ஓ, ஓ, ஓ! வாடிப் போவாரே
   பார்த்திடாயோ, பார்த்திடாய்
   பாதை காட்டும் ஆண்டவரே - வருவீர்

4. நியாயவிதி செய்யும் நாள்
   ஓ! பார், உன் அண்டை நிற்குதே
   நினைப்பாய், ஓ! நினைப்பாய்
   நின் கதி ஆ! என்னவாகுமோ - வருவீர்

5. வருவாரே வேகத்தில்
   ஆ, ஆ! தம் தாசருக்காய்
   வந்திடாயோ! வந்திடாய்
   தாசன் நீயும் ஆகிடுவாய் - வருவீர்

# Tamil Hymn No 203

## PERFECTION

பல்லவி

கிருபா பூரணமே! திரியேகாம்பரமே!
தனிமுதல் இறைவா! தேன் நிறை மலரே
தினம் தினம் ஸ்தோத்திரமே - ஆ – ஆ

சரணங்கள்

1. வருத்தத்தால் சுமந்த பாரமெல்லாம் அகற்றி
கருத்தாய் நினைத்தீர் கரத்தினில் வரைந்தீர்
கருணா சமுத்திரமே - ஆ - ஆ
கரை புரண்டோடும் கனிரச நேசம்
அளவிட முடியாதே - ஆ – ஆ - கிருபா

2. மலர்ந்த முகத்துடன் நான் அனந்த நாளும் பாட
நிந்தை உமிழ்நீர் தாங்கினீர் முகத்தில்
பஞ்சை எந்தனுக்காய் - ஆ - ஆ
உன்னத அடைக்கலத்தில் என்னை வைத்தீர்
மகிழ்ந்தே ஸ்தோத்திரிப்பேன் - ஆ – ஆ - கிருபா

3. பாட இயலாதே தேடும் பொருள் உந்தனின்
அனுதின சகாயம் ஆச்சரிய விடுதலை
அந்தந்தச் சமயங்களில் - ஆ - ஆ
ஆர்ப்பரிப்புடனே ஸ்தோத்திரிப்பேனே
அதிசயம் அதிசயமே - ஆ – ஆ - கிருபா

4. வனாந்தரத்திலும்மைப் பின்பற்றின நேசம்
நினைத்தீர் எந்தன் துரோகம் மறந்தீர்
ஆதரவுடன் அழைத்தீர் - ஆ - ஆ
தாரகமே உந்தன் பூரணம் தருவீர்
மேகமதில் உயர - ஆ – ஆ - கிருபா

5. எக்காளம் தொனிக்க தேகமும் மீட்புறவே
தவித்த பரிசுத்தர்கள் மனங்களிக்க
சேர்த்திட வருவீரே - ஆ - ஆ
இயேசு மணவாள ராஜனும்முடனே
என்றென்றும் வாழ்ந்திடுவேன் - ஆ – ஆ - கிருபா

# Tamil Hymn No 204

## THE LIFE WAS GIVEN FOR ME

பல்லவி

ஜீவன் ஈந்தாரல்லவோ, மீட்க என்னையோ
தேவ சுதனோ!

சரணங்கள்

1. ஆச்சரியமே! கேளும் தோழரே
   தேவ தேவனே தியாகமானாரே
   ஆ! அரிய தம் கிருபையால் தாம் எனையே தேடி வந்தவர் - ஜீவன்

2. கல்வாரியிலே இக்காட்சி பாருமே
   கர்த்தன் இயேசுவே தொங்குறாரதோ
   ஆ! எனது பாரமதை தாம் குருசில் சுமந்து தீர்த்தவர் - ஜீவன்

3. தேகம் முற்றுமே காயமுற்றவர்
   தீர்க்கவே கொடும் நோயை முற்றுமே
   சாபமதாலான பெரும் வாதைகளைத் தாமே தொலைத்தவர் - ஜீவன்

4. அன்பினாலதோ தம் மேன்மை வெறுத்தாரோ
   அன்னை போலவோ அணைத்தார் என்னையோ
   ஆச்சரியமே பூவிலே காணாதோர் அரும் வினோதமே - ஜீவன்

5. என்ன செய்வேனோ என் இன்ப இயேசுக்காய்?
   இன்னும் தாழ்த்தியே வைப்பேன் சேவைக்காய்
   எந்நாளும் தம் தயவால் தாங்கியே அரவணைப்பவர் - ஜீவன்

## JOIN IN HIS PRAISE

பல்லவி

துதி ஓயாமல் செலுத்திடுவேன் - பரி
சுத்தராம் இயேசு எனக்கே - புவி
எங்கும் அவர் நாமம் முழங்க

சரணங்கள்

1. பாவ வலையில் மாளும் பாவியே!
   வா இவ்வேளையே துதிக்க உன் பரனை
   பார்! அதோ பார்! உன் நேசர் தொங்குறார்
   பாதகரின் தீர்ப்பை தன்னில் தாங்கியே தாம் மாள்கிறார் - துதி

2. நோயால் வாடியே மாயும் ரோகியே!
   தேவ சுதன் உன் நோய் சுமந்தனரே
   பார்! அதோ பார்! கல்வாரியிலே
   சாபம் நீக்க பாவமாகி ஈந்தாரே தன் ஜீவனை - துதி

3. ஆதி அன்பிலா வீழ்ந்த பேதையே
   வா என்னுடனே துதிக்க உன் நேசரை
   தாழ்த்தினாரே உன் தேவன் உனக்காய்
   பாதாளம் வரையும் சென்றே ஜெயித்தார் உன்னாசையால் - துதி

4. ஆதரவின்றி வாடும் தோழனே!
   பார் உன் நேசரே நிற்கிறார் உன் அண்டையே
   கைவிட்டாலும் தன் கர்த்தன் கையிலே
   கருத்துடன் தனதாவி ஈந்ததால் ஜெயித்தாரே - துதி

5. வானம் புவியும் வாழும் சிருஷ்டியும்
   வாழ்த்திடாயுன் மீட்படுத்திடுதே
   அல்லேலூயா வென்றார்க்கும் தொனியே
   அம்பரம் நின்று கேட்குமந்நாளிலே நாம் சேர்வோமே - துதி

# Tamil Hymn No 206

## PRAISING

பல்லவி

மா தூயனைத் துதித்துப் பாடுவோம் - இங்கும் எங்குமே
அருள் நிறைந்திடக் கிருபை பெருக
அன்பரைத் துதிப்போம் - இன்றும் என்றுமே

சரணங்கள்

1. இடைவிடாமலே துதிகள் சாற்றிட
அன்பாலே நம்மை அணைத்தார்
கடைசி நிமிஷமும் கைவிடார் நம்மையே
முடிவு வரை நம்மை நடத்துவார் - மா

2. இயேசுவின் சுபாவமே நம்மில் உருவாக
இந்த நேரமே தாழ்த்துவோம்
அன்பின் ஆழத்திலே அனுதினம் செல்லுவோம்
மண்ணோர்க்கு நல் நிருபமாகுவோம் - மா

3. சுயாதீனமாகவே சொர்க்கத்தில் ஜீவிப்போம்
சுந்தர நாட்டை அடைவோம்
ஓயாத சந்தோஷம் ஓர் நாளும் குன்றாதே
நேயனோ டென்றும் விண்ணில் தங்குவோம் - மா

4. தயாளன் இயேசுவைத் தினமும் போற்றுவோம்
சதா காலமும் சேவிப்போம்
நிறைவான தேவனே குறைகள் தீர்ப்பாரே
கறை திரை இல்லாமல் காப்பாரே - மா

# Tamil Hymn No 207

## INVITATION

பல்லவி

நண்பனே அவரண்டை இன்றே நீ வருவாய்
சொந்தக் குமாரனாய் ஆக்குவாரே
உன் தந்தை தான் இயேசுவல்லோ!

சரணங்கள்

1. நற்குல ஜாதியை நாடிடுவாய்
தேற்றுவார் அவர் தம் வார்த்தையாலே
திரு ரத்தமே கொண்டு இருதயங் கழுவி
அருகே வைத்துக்கொள்வார் - ஜனமே - நண்

2. ஜீவிய நாளெல்லாம் போகிறதே
பாவத்தின் அடிமையாய்க் கடந்திடாதே
அன்பரைச் சேர்ந்திடும் அனுக்ரக காலம்
அறிந்து வந்திடுவாய் - உடனே - நண்

3. சாற்றிய வாக்கெல்லாம் மாற்றிட்டாயே
காட்டிய அன்பெல்லாம் இழந்திட்டாயே
பரம அழைப்பதையே திரும்பவே பெறுவாய்
விரும்பி வந்திடுவாய் - மகனே - நண்

4. ரோகியே நோய் யாவும் தீர்த்திட்டாரே
வாக்கவர் பெலத்தையே பிடித்திடுவாய்
கல்வாரிச் சிலுவையில் தொல்லைகள் தொலைத்த
அருமை இயேசுவண்டை - வருவாய் - நண்

5. ஆருயிரீந்த வெம் அன்பரையே
பாரினில் வாழ்த்துவோம் நன்றியுடன்
கண்ணிமைப் பொழுதினில் மறுரூபமாகி
விண்ணில் மறையச் செய்வார் – எமையே - நண்

# Tamil Hymn No 208

## SECOND COMING

பல்லவி

தேவ தூதரோடே வானில் தோன்றிடுவார்
ஆரவாரத்தோடே அவர் வந்திடுவார் - எமக்காய்

சரணங்கள்

1. காகள சத்தமே மேகத்தில் முழங்க
   ஏகமாய் எழுந்து இயேசுவைச் சேருவோம் - விரைவுடன் - தேவ

2. கல்லறை திறந்து மரித்தவர் எழும்ப
   வல்லமை விளங்க நாமுமே கூடுவோம் - மகிமையாய் - தேவ

3. மண்ணில் மீதிலே எண்ணொணாப் பாடுகள்
   இனிவரும் மகிமைக் கிணையாமோ சபையே - எழும்புவீர் - தேவ

4. மகிமை வஸ்திரமே மணவாட்டி சபைக்கு
   மணவாளன் தருவார் அன்று நாம் அணிவோம் -மகிழ்வுடன் - தேவ

5. ஆயத்த மானவர் அன்பரேசுவுடன்
   அன்றருந்திடுவோம் மாபெரும் விருந்து - இன்பமாய் - தேவ

# Tamil Hymn No 209

## JESUS THE WONDERFUL

பல்லவி

ஆனந்தம், ஆனந்தமே, மா அதிசயமே
சோபிதனே! பூரணமகிபா! கிரீடாலயனே!

சரணங்கள்

1. சந்தோஷமுடன் துதி செய்திடுவேன்
தாவீது ராஜன் புதல்வா - ஜீவனோடெழுந்த முதல்வா
சோர்விலும் தாழ்விலும் பாதுகாத்தீர்
பரவசமாகிடுவேன் - ஆன

2. பூலோகத்தார் எமை ஏசினாலும்
பூதங்கள் சதி செய்தாலும் - தீவிரமாய்ப் பாதுகாத்தீர்
பாய்ந்து ரட்சித்தீர் படுமோசத்திலும்
புகழ்ந்துமைப் பாடிடுவேன் - ஆன

3. கூன், குருடுகள், முடம் சுகமாக
குஷ்டரோகம் சுத்தமாக - பேய் அகன்றிட மரித்தோர் எழும்ப
ஊமையர் பேசிட செவிடர் கேட்க
பேரருள் வள்ளலே வா - ஆன

4. அற்புதம் அடையாளம் செய்திடுமேன்
தற்பரா தயாகரத்தாலே - இப்புவியோர் உமைக்காண
மேலான காரியம் செய்திடவே
மேசையா வந்திடுமே - ஆன

# Tamil Hymn No 210

## JESUS CALLS

பல்லவி

சந்தோஷமாய் இயேசுவண்டை ஓடிவா நீ
ஓ! பாவியே - இந்நேரமே

சரணங்கள்

1. ஆவலுடன் மேவிடுமே - ஆனந்தம்
ராஜன் இயேசு மீட்பாரே
வருந்தி அழைக்கிறார் உன்னையே - சந்

2. சஞ்சலத்தால் நெஞ்சம் நொந்த - தோழனே
தாங்கிடுவார் தயவுடன்
தருண மிதுதனில் வாராயோ - சந்

3. பாவ உலகம் மாயமாமே - நம்பாதே
பாவம் நீக்கப் பாரிலே
இயேசுவைப் போல் யாருமே இல்லையே - சந்

4. பாவம் அவர் தோளில் அன்றோ - சுமந்தார்
பாவமும் உன் ரோகமும்
சாபமும் அகற்றியே நீக்கினார் - சந்

5. எப்போ திரும்புவாய் என்றவர் - ஏங்குகிறார்
காத்திடவே கருணையால்
கரங்கள் விரித்தவர் நிற்கிறார் - சந்

6. அழிவின் பாதை விரைந்தே ஏகும் - மைந்தனே
ஜீவ பாதை சேர்ந்திட
உருகிய மனதாய் அழைக்கிறார் - சந்

7. வாஞ்சையுடனே வந்திடாயோ - நண்பனே
மோட்ச இன்பம் பெற்றுமே
நீடூழி காலமாய் வாழுவாய் - சந்

# Tamil Hymn No 211

## KEPT BY HIM

பல்லவி

தேவ தேவனார் புதிய கிருபை
ஜெகமதில் ஈந்தனரே
அல்லேலூயா! ஜெயம்

சரணங்கள்

1. கின்னர கீதமே முழங்க
அண்ணலாம் இயேசுவைத் துதிப்போம்
ஆனந்தமாய் இன்றே, ஆர்ப்பரித்து நின்றே - தேவ

2. சென்ற வாழ்நாளெல்லாம் காத்தே
ஜெயத் தொனியோடெம்மைச் சேர்த்தே
தேடிய நல் தேவை, நாடிடுவோம் நாமே - தேவ

3. நோய் பிணி யாவையும் அகற்றி
தாயினும் மேலெமை அணைத்தே
ஆதரித்த அன்பை, காதலிப்போம் நாமே - தேவ

4. பாவத்தின் சோதனையாலே
லோகத்தோடேயழியாதே
காத்த பெருங்கிருபை சேர்த்ததே நற்பரனை - தேவ

5. கல்வாரி பாதையில் தொடர்ந்தே
நான் வல்லமையோடினி நடந்தே
அல்லலின்றியேக, நல்கினீரும் கிருபை - தேவ

6. தோத்திரம், தோத்திரம் துதியாம்
பாத்திரமா மலர் அணிய
மாட்சி மிகக் கொண்டேன், பாட்டினாலே வென்றேன - தேவ

# Tamil Hymn No 212

## BRIDE'S DAY

பல்லவி

ஆனந்தமான நாளதிலே இயேசு வருவார்

சரணங்கள்

1. வானவருடனே தூயர்களும் - மேசியா இயேசுவுடன்
   பொன்னொளி மணிபோல் அனைவரும் மின்னிட
   இன்னிசைக் கீதங்கள் விண்ணதில் முழங்கிட
   ஓங்குமே பேரானந்தம் - ஆஹா! - ஆனந்தமே - ஆன

2. ஆர்வமுடன் மனத்தூய்மையுடன் - அன்பனைச் சந்ததமும்
   சிந்தனை செய்திட்ட சுந்தர மாது சபா
   நாயகியாம் சீயோன் நாதனைச் சந்திக்க
   பொங்குமே மங்களமே - ஆஹா! - ஆனந்தமே - ஆன

3. தந்தை தாய் இனம் ஜனம் பந்துமித்ரர் -பந்தம் யாதுமின்றியே
   அந்தர மீதினில் அன்பரோடுறவாடி
   அனுதினம் மனமகிழ்ந்ததிகனி ஈந்தோர்கள்
   கண்டானந்தம் நிரம்ப - ஆஹா! - ஆனந்தமே - ஆன

4. நானிலத்தில் நாதன் வரவை - நாடித் தேடி வாடினோர்
   நலமுடன் வானில் எக்காளம் தொனிக்கும் நேரம்
   கவலை ஒழிந்து கண்ணீர் கரமதால் மறைந்திட
   கானங்கள் பாடிடுவோம் - ஆஹா! - ஆனந்தமே - ஆன

5. ஆதி அப்போஸ்தலர் கண்டனரே -அன்பரும்மோடிருந்தே
   காதலா நாங்களோ ஆவியின் கண்களாலே
   மா மணவாளனாக மனோரம்மியமாய்க் கண்டு
   ஆவலோடோடி வந்தோம் - ஆஹா! - ஆனந்தமே - ஆன

# Tamil Hymn No 213

## WONDERFUL LOVE

பல்லவி

ஆ! இன்ப நேசர் இயேசுவின்
அதிசய அன்பிதாம்
பார்த்திடாயோ கல்வாரியில்

சரணங்கள்

1. பாவ உலகத்தின் காட்சி
பார்த்தே மனம் பதைத் துருகி
எந்தனை மீட்கவே சொந்த உதிரத்தைச்
சிந்தி மீட்டவரே - ஆ!

2. நாடிய உமதன்பில் தவறேன்
தேடிய நன்மையை மறவேன்
பாடியே தோத்திரம் கோடி யுகங்களாய்
ஏற்றுவேனுமக்கே - ஆ!

3. ஆத்தும வேதனையாலே
அழுதே புலம்பிய தூயர்
ஆவலுடன் சேரும் தேசமதிலுமென்
பங்கை ஈந்திட்டீரே - ஆ!

4. ஓட்டம் ஜெயத்துடனோடி
ஒளியாம் ஜீவனேசுவைப் போல்
வீசும் ஒளியதில் வீரமாய் நடந்தோர்
கிரீடம் சூடிடுவார் - ஆ!

5. மாறாத அன்பின் சொரூபி
மா வாதையாலெமை வென்றீர்
கொல்கொதாவில் ஜெயம் அல்லேலூயா துதி
ஆசை நேசருக்கே - ஆ!

# Tamil Hymn No 214

## THY GREATNESS

பல்லவி

என் தேவனே! என் இன்பனே!
நான் வந்தேன் உம் மகிமையைக் கேட்டே

சரணங்கள்

1. கானானின் தேசமே சேயர்கள் பெறவே
கருத்தாயும் கரம் விரித்தீர்
கரையோரம் நிற்கையில் கடலையும் பிரித்தீர்
காரிருள் மயமாய் நிழலாயுமிருந்தீர் - என்

2. அண்டின சாமுவேல் கண்டு நின் மகிமை
கொண்டாடச் செய்தீரே
மன்றாடும் அடியேன் கண்டானந்திக்கவே
அண்டினேன் குருவே கண்பாரு மெனையே - என்

3. எலியாவின் நாளிலே பலியதின் மீதிலே
வெளியாகத் தீ பொழிந்தீர்
அழியாதும் பெலமே ஒழியாதும் வரமே
மொழியுமும் மனமே அளியுமும்மருளே - என்

4. ஜாதிகள் நடுங்க பாவிகள் அடங்க
பாதாளம் நடுநடுங்க
ஜெயஞ் சிறந்தெழுந்தீர் சாத்தானுமொடுங்க
வந்தேன் என் குருவே நீர் எனக்கிரங்க - என்

5. ஒருநாள் நீர் என்னிலும் தயை கூர்ந்து துரையே
ஒத்தாசை செய்தீரே
இந்நாள் நின் கரமே நீட்டிடும் எனக்கே
எந்நாளும் உமையே கொண்டுயர்த்திடவே - என்

# Tamil Hymn No 215

## ETERNAL PRAISE

பல்லவி

அன்பனையே வாழ்த்துவோ மென்றென்றுமே நித்தியமாய்

சரணங்கள்

1. இவ்வுலகில் யாருண்டு உம்மையல்லால்
   என் தாயாரும் தந்தையும் நீரே
   வாழ்த்துவேன் போற்றியே புகழுவேன்
   புகழுவேன் எந்தன் நேசரையே – நித்தியமாய் - அன்ப

2. யாதுமற்ற பாவியாம் எந்தனுக்காய்
   நல் ஜீவனைத் தந்தென்னை மீட்டீர்
   நன்றியுடனே நான் போற்றுவேன்
   போற்றுவேன் எந்தன் இயேசுவையே – என்றென்றுமாய்- அன்ப

3. பிள்ளைகளின் அப்பமல்லோ சுகமாம்
   பரிவாகப் பகர்ந்தீர் தயவாய்
   பராபரா உம்மையே துதிப்பேனே
   துதிப்பேனே என் நாள் முழுதும் -ஓயாமலே - அன்ப

4. சென்ற காலம் க்ஷேமமாய்ப் பாதுகாத்து
   சேதம் வராமலே தாங்கி
   நேத்திரம் போலவே என்னையும்
   என்னையும் இரத்தத்தால் மூடினீர் –உம் பெலத்தால் - அன்ப

5. வானத்திலே தேவா நீர் தோன்றுகையில்
   பரிசுத்தமாய் நான் உம்மைக் காண
   ஆவியால் என்றுமே காத்திடும்
   காத்திடும் என் ஆத்துமாவை – நீர் உமக்காய் - அன்ப

# Tamil Hymn No 216

## HE SUFFERED

பல்லவி

என் மனமே! கேள், உன் பரன் தானே
வேதனையாலே மாண்டாரே
ஆ! ஆ! ஏன் இது ஏனோ!
ஓ! ஓ! எனக்காகத் தானோ!

சரணங்கள்

1. துயரத்தினால் வரும் தொனியே
பூங்காவினிலே கேட்கிறதே
உன் நேசர் இயேசு தானே
மிக வேண்டுதல் செய்கிறாரே - என்

2. நீங்கிடுமே இந்தப் பாத்திரம்
நான் பருகுவதாலே மாத்திரம்
நின் சித்தமானதாலே
நான் செய்வேன் என்றுரைத்தாரே - என்

3. தாகமானேன் நான் வெகுவாய்
என அலறினாரே அவர் பலமாய்
உன் தேவன் தானே பாராய்
இன்றைக்கே மனதுருகாய் - என்

4. உலகமும் எதிர்த்திடும் சமயம்
எனை உற்றவர் மறந்திடும் தருணம்
'என் தந்தையே ஏன் மறந்தீர்'
என அழுதாரே எம்பரனே - என்

5. மன்னிக்க வேண்டும் என் பரனே
இவரறியாமற் செய்வது எனக்கே
என உருக்கமாகத் தானே
தேவ அன்பினால் கேட்டாரே - என்

6. யாவையும் தானடைந்தாலும்
பரன் யாவையும் முடித்தேனென்றாரே
மா பாவியான நானே
யாவும் படைக்கிறேனவர் பாதமே - என்

# Tamil Hymn No 217

## HE WILL HEAL YOU

பல்லவி

வந்திடுவீரே ரோக பிணியால்
வாதையிலான மாந்தர்களே

சரணங்கள்

1. வந்திடும் சாபம் யாவும் தீர்க்க
சிந்தினார் தம் குருதி சிலுவையிலே
உந்தன் நோய்கள் யாவும் சுமந்தார் - ஆ
பிந்திடாமலே வா - வந்

2. இயேசென்னும் நாமம் தீர்க்குமென் நோயும்
தேவ சேயர் கை கண்டௌஷதமே
தேடுவாயோ நேசர் முகமே – ஆ
ஏற்பார் உன்னையுமே - வந்

3. வாடிடும் காய வேதனை நீங்க
வாக்களித்த வல்ல பரனிவரே
வார்த்தையுரைத்தே வாதை தீர்த்தார் - ஆ
நம்பியே நீ வா - வந்

4. பார் அவர் மேனி வாரினாலே
பாவிக்காய் வாதை அடைந்ததுவே
பாரில் நீயும் ஆரோக்கியமாய் - ஆ
வாழ்ந்து ஜீவிக்கவே - வந்

5. வல்லமையாலுன் தொல்லைகள் தீரும்
வல்ல தேவன் மாண்டார் அதற்காக
எல்லோருமே வாரும் இன்றைக்கே – ஆ
அல்லல் தீர்ந்திடவே - வந்

# Tamil Hymn No 218

## ARISE

பல்லவி

எழுந்து செல்லும் வீரரே காலமாயிற்றே
மேலே நோக்கிப் பார்த்திடும் இதோ நேரம் விடியுதே

சரணங்கள்

1. இராக்காலமும் கடந்ததே, எழும்பும் தோழரே
இனியுமேன் தரிப்பதேன், போர் புரிவீரே
இயேசு ராஜன் வரவின் காலம் சமீபமென்று அறிந்ததாலே
எழும்புவீர் ! எழும்புவீர் ! - எழு

2. மாரி மழை இல்லாதே தேசம் வாடுதே
அலறுமின் ஜெபியுமின் விழித்து வேண்டுமின்
அட்டதிக்கும் ஆவி மழையின் சோனாமாரி பெய்து பெருக
எழும்புவீர் ! எழும்புவீர் ! - எழு

3. பாவமின்னும் பெருகுதே பாரும் தோழரே
பகருவீர் நரர்க்குமே பரனின் செய்தியே
பாதை காட்டும் மனுஷரின்றி அலைகிறாரே பரிதாபமே
எழும்புவீர் ! எழும்புவீர் ! - எழு

4. உலக சிந்தையாகவே கறைகள் நிறையுதே
உணருமின், உதறுமின் உலக இன்பமே
உம்மைத் தேடி வந்திடுவார் உன்னதனாம் எங்கள் இயேசு
எழும்புவீர் ! எழும்புவீர் ! - எழு

5. யாரே இன்று கேட்பாரோ காலம் செல்லுதே
தரித்திரீர் எழும்புவீர் தேவ சபையோரே
கர்த்தர் தந்த தாலந்தினால் கனிவாய் வேலை
செய்தீரோ நீர்?
எழும்புவீர் ! எழும்புவீர் ! - எழு

# Tamil Hymn No 219

## PRAISES

பல்லவி

எல்லோரும் கூடுங்கள் உன்னதன் சந்நிதியில்
உச்சிதமாய்த் துதிக்க

சரணங்கள்

1. எந்நாளும் எம்மிலே சொன்ன சொற்படியே
தன் தயவாலவர் தாங்கியதால்
அன்னையாமவரை இன்னிசையதினால்
அன்புடனே துதிப்போம் - மிக
இன்பமாய் அடிபணிந்தே - எல்

2. அற்புதமாகவே தற்பரன் நம்மையே
நிர்ப்பந்த நிலையினின்றேற்றியதால்
போற்றுவோம் என்றுமே ஏத்துவோம் துதியே
சாற்றுவோம் தோத்திரமே – மிக
இன்பமாய் அடிபணிந்தே - எல்

3. தூதரும் கண்டிடா தூய நற்பணியை
தூசியா மடியாரும் செய்வதற்காய்
துப்புர வுண்மையாய் எப்போதும் நடக்க
அப்பன் அருளியதால் - மிக
இன்பமாய் அடிபணிந்தே - எல்

4. நித்திய காலமாய்ச் சுத்தரைக் கண்டிடக்
கர்த்தர் நமக்கருள் செய்ததினால்
பாத்திரமற்றோர் நாம் தோத்திரம் சொல்லுவோம்
காத்திரா நன்மைகட்கே – மிக
இன்பமாய் அடிபணிந்தே - எல்

# Tamil Hymn No 220

## MY BELOVED

பல்லவி

எங்கே, எங்கே யான் தேடுவேனோ!
என் ஆத்தும நேசரை நான் - ஆ
எங்கே தேடுவேனோ!

சரணங்கள்

1. பூரண சொரூபனாம் புவியிலுதித்தவர்
துஷ்டராலே வதைக்கப்பட்டார்
உருவம் வாடி உடல் மாறியதால்
முகத்தை மறைத்தேன் துரோகியே நான்
எங்கே தேடுவேனோ! - எங்கே

2. அன்றோர் நாளிலே பாவப் பிணியினால்
அன்பாமவரை மறந்திருந்தேன்
அன்னை போலக் கண்டு எடுத்தார்
என்ன இன்ப நேசரவர்
எங்கே தேடுவேனோ! - எங்கே

3. அழகிற் சிறந்தவர், அன்புக்கேற்றவர்
ஆத்துமாவுக் கினியவராம்
அருகிலிருந்து ஆற்றும் துணைவர்
அருமை இரட்சகர் இயேசுவல்லோ
எங்கே தேடுவேனோ! - எங்கே

4. வாயின் வாசனை கமழும் இன்பமாய்
வாக்கில் கபடோ காணாதோராம்
வலிமை வாய்ந்த வல்ல சுதனாம்
வருவேனினி யென்றுரைத்தவராம்
எங்கே தேடுவேனோ! - எங்கே

5. கேளும், கேளும் என் அரிய நண்பரே
தேனினிய நேசரவர்
தேசமெங்கும் கேட்டுமறியா
தெய்வ சுதனாம், என் பிரியன்
எங்கே தேடுவேனோ! - எங்கே

# Tamil Hymn No 221

## SING HIS PRAISE

பல்லவி

நாம் நன்றியோடே ஒன்று கூடிப்
பாடுவோம் - மகிபனையே

சரணங்கள்

1. அருணோதயம் போல் அவனியில் உதித்தார்
அற்புதத் திருமறையானவரே
அருள் நிறைந்தவராய், இருளதை நீக்கிடவே
அன்பு மயமாகியே - நாம்

2. துதியால் மிகுந்த தூதர்கள் பாட
புல்லணையமர்ந்த பொற்பாலகனை
மகிதலம் ஓங்கிடும் மன்னர்கள் தேடிடவே
மகிமை துலங்கிட்டதே - நாம்

3. மனுவானவராய் மாண்புடையதிலே
மறை புகழ் தீர்க்கர் உரை மாறிடாது
மாந்தர் மேல் பாசமாய் தாழ்மை உருவெடுத்தார்
சாந்தமுள்ள காந்தனாம் - நாம்

4. சிறையாயிருந்த மாந்தரை யெடுக்க
சகல நோய் பிணிகளும் நீக்கிடவே
சிறுமையுற்றோருக்குச் சுவிசேஷமறிவித்திட
சுதனவதரித்தனரே - நாம்

5. திரு ஆதரவாய்த் திருப்பணி செய்ய
திருச்சபை தினம் தினம் ஓங்கிடவே
திங்கள் ஒளி போல் தங்கிடத் திரு வரங்கள்
எங்கும் ஜொலித்திடவே - நாம்

# Tamil Hymn No 222

FORGIVEN

பல்லவி

இத்தனை தயவோ என்பால் என் பரனே
எத்தனை பாவமோ மன்னித்து மறந்தீர்
இத்தனை தயவோ என்பால்

சரணங்கள்

1. துன்ப மனமும் துரோகியின் சிந்தையும்
மூர்க்க உருவாய் பூவிலே வசித்தேன்
உன்னதா நின் கிருபை எனக்கோ?
அன்னையாயோ ஆதரீத்தீர்! - இத்

2. பாவி நானே பராபரா உம்மையே
பாதகரால் வாதிக்கக் கொடுத்தேன்
அன்பின் உருவே அரிய குருவே
என்னையோ நீர் இரங்கி மீட்டீர்? - இத்

3. அன்பே இனியும் இனியவும் தயவும்
என்றும் மாறா ஏழையானிருக்க
மன்னா என்னையே அண்டி அணைப்பீர்
மாறேன் இனி என் ஆணை உமக்கே - இத்

4. தேவ தேவா! திரித்துவ மூவா!
வேதனையோ ஏழைக்காய் சகித்தீர்
தேசம் எங்கும் தேட உம்மையே
தேகம் உருக வாதை அடைந்தீர் - இத்

5. ஒன்றென் வாஞ்சை கேட்டிடுவீரே
நின்னைப் போலப் பாடுகள் சகிக்க
நின் முகத்தைக் காட்டும் எனக்கே
நீடூழியாய்ப் பணிந்து துதிக்க - இத்

# Tamil Hymn No 223

## CHOSEN ONE

பல்லவி

மனுவேலின் மணவாட்டியாகத்
தெரிந்தெடுக்கப்பட்டவளே நீ!
வானோர்களும் வாஞ்சையோடு
காத்திருக்கும் சுந்தரி!

சரணங்கள்

1. அழகினால் உன் மனதையே மயக்கிடாதே மாதே! நீ
   காத்திடுவாயே ஆதி அன்பைக் காத்திடுவாயே
   கறைகள் ஒன்றும் அணுகாதே மறைவா யெதையும் செய்யாதே
   மணவாளனின் வருகையில் விழிப்பாய் அவரைக் காணவே - மனு

2. இதயம் என்றும் அவருக்கே, வேறெதையும் விரும்பாதே
   இப்போதுன்னையே சுத்தம் செய்வாய் இப்போதுன்னையே
   இராப்பகலோ அறியாயே இராஜன் வரவின் வேளையே
   இனிதான அந்நாளையே தினமும் சிந்தித்திடுவாயே - மனு

3. பார்வை பரனில் மாத்திரம், பரிசுத்தம் உன் நேத்திரம்
   பங்கம் இல்லாதே, அன்பிலே ஓர் பங்கம் இல்லாதே
   படபடப்பாய் நடவாதே, பாதையதனில் வழுவாதே
   நீ வாஞ்சிக்கும் நேசர் வருவார், அதுவரை நீ மறைந்திரு - மனு

4. செய்யும் யாவும் அவருக்கே, மெய்யும் மனமும் வைப்பாயே
   தூய்மையாகவே என்றென்றுமாய்த் தூய்மையாகவே
   கையின் வேலை யாவுமே துய்யன் பார்க்கச் செய்வாயே
   மெய்யாகவே உன்னையே அணைப்பாரே அந்நாளிலே - மனு

5. பூரணத்தின் சொரூபியாய், புதுமையாம் மணாளியாய்
   பூரிப்பாய் அன்றே, வானத்திலே பூரிப்பாய் அன்றே
   புது எருசலேமிலே துலங்குவாய் அந்நாளிலே
   துதியால் நிறைந்தென்றுமாய் மகிழுவாய் சந்தோஷமாய் - மனு

# Tamil Hymn No 224

## HE IS COMING

பல்லவி

வானில் தோன்றுவார் நம் இயேசு ராஜனாம்
ஆ! நாமும் செல்வோமே

சரணங்கள்

1. புவியிலானோர் புலம்புவார், சுத்தரானோர் மகிழுவார்
கூடுவோம் பாடுவோம் வானத்திலன்பருடன்
குறைகள் நீங்கிக் கறைகள் மாறும் சுத்தர் வாருமே - வா

2. அன்பர் முகத்தைக் காண்போமே, இன்பர் மார்பில் சார்வோமே
அருந்தவே விருந்திலே அரிய கிருபை செய்தாரே
அருமையாம் எம் நேசர் நம்மை மீட்டார் தமக்காயே - வா

3. நொடியில் துன்பம் நீங்குமே, கொடிய பேயும் அழியுமே
முடியுமே முடிவிலே அடியாரும் தரிப்போமே
விடியும் வேளை காணும்படியே பணிவோமவருக்கே - வா

4. சீயோன் மலையும் காணுதே, ஜீவ நதியும் தோணுதே
இனிமையே எங்குமே இன்பரானோர் நாட்டிலே
இனி நாம் என்றும் கனிவாய் அன்பில் முழுகிக் களிப்போமே- வா

5. நீடுழியாய் வாழுவோம் நித்தியமாய்ச் சேவிப்போம்
நிலைப்போமே நிறைவுடன் நீடித்த நன்றியுடன்
நீசரான நம்மை மீட்டார் துதிப்போம் என்றுமே - வா

# Tamil Hymn No 225

PRAISING

பல்லவி

ஏகமாய் இயேசுவின் நாமத்தைப் புகழ
ஏற்ற தருணமிதுவாமே
வல்லவ தேவனைத் துதிப்போம்

சரணங்கள்

1. பாவத்தில் ஆழ்ந்த பாவியாம் எம்மைப்
பண்புடன் பலியால் மீட்டனரே
பாடுவோமே நாம் பரமனின் செயலைப்
பார்தல மீதினிலே - ஏக

2. காலா காலங்கள் கர்த்தரின் பெலமும்
கருணைக் கரமும் காத்ததுவே
காதலனீந்தார் பரிசுத்த ஆவி
கனிவாய்ப் பாதை செல்ல - ஏக

3. உன்னத அழைப்பின் உயர்வதை உவந்தே
உலகில் வசிப்போம் உண்மையுடன்
ஊழியம் செய்வோம் ஊக்கமுடனே
உள்ளம் உருகிடுதே - ஏக

4. பரிசுத்தமாகப் பாரினில் வாழ
பரமன் கிருபை பகர்ந்தனரே
தூதரும் காணாத் தூய நற்பணியைத்
துங்கன் ஈந்திட்டாரே - ஏக

5. பணிந்திடுவோமே திருச்சித்தம் செய்ய
திரு மா மறையின் முறைப்படியே
ஏத்துவோமே நாம் உன்னதன் பெயரை
என்றென்றுமாய் நினைந்தே - ஏக

# Tamil Hymn No 226

## CHRISTMAS

பல்லவி

ஆதி சுதன் மனுவானார் - அதிசயம்
அல்லேலூயா கீதம் பாடிடுவோம்

சரணங்கள்

1. விண்ணவர் துதி சாற்ற
மண்ணுலகோர் மகிழ்ந்து கொண்டாட
உன்னத பரனுக் கொப்பில்லா மகிமை
உள்ளம் கனிந்து சாற்றிடுவோம் - ஆதி

2. மேசியா இவர்தானோ!
நம்மை மேய்க்க வந்த நரர் கோனோ
நேசமேயுருவாய்ப் பாசங் கொண்ட - நல்
நாதனை நாம் போற்றிடுவோம் - ஆதி

3. அல்லல்கள் யாவும் தொலைக்க
வல்ல பேயையும் நோயையும் ஜெயிக்க
ஆயர் குடில்தனி அங்கம் எடுத்ததால்
துங்க பரனையே வாழ்த்துவோமே - ஆதி

4. இத்தினமதில் நாம் கூடி
இன்னிசை பாலகனையே வாழ்த்தி
பெத்லகேம் நகர் சத்திர முதித்த
ராஜாதி ராஜனை உயர்த்திடுவோம் - ஆதி

5. சுந்தர வடிவாம் மைந்தன்
கந்தையே அணிந்தார் இது விந்தை
வந்தனம் துதி இன்றும் சாற்றுவோம்
சந்ததம் அவர்க்கென்றென்றுமே - ஆதி

# Tamil Hymn No 227

## JESUS

சரணங்கள்

1. என் ஜீவனின் அதிபதி இயேசு
என்னைத் தாங்கிடும் திருப்பதி இயேசு
நான் நம்பிடும் என் கதி இயேசு
அன்பின் நிதியாம் இயேசு

பல்லவி

போற்றிடுவேன் என் நேசரையே
போற்றிடுவேன் அன்பிதுவே
அற்புதனாம் இயேசு

2. நான் பாவியாயிருக்கையில் இயேசு
அன்பாலென்னை அணைத்தவர் இயேசு
வன் துன்பங்கள் அணுகாமல் இயேசு
என்றும் காத்தாரென்னை இயேசு - போற்

3. வன் கோட்டையும் அரணுமென் இயேசு
விண் பாட்டையும் அளித்தவர் இயேசு
தன் நாட்டிலும் சேர்ப்பவர் இயேசு
என் ஆண்டவராம் இயேசு - போற்

4. என் போக்கிலும் வரத்திலும் இயேசு
தன் கரத்தினில் மறைத்தவர் இயேசு
தன் வரங்களைச் சொரிந்தவர் இயேசு
என் தாபரமாம் இயேசு - போற்

5. மனுவாகவே வந்தவர் இயேசு
மனப் பாரத்தைச் சுமந்தவர் இயேசு
அனுதினமும் என்னண்டையில் இயேசு
எனதாதரவாம் இயேசு - போற்

6. அதிகாலையில் எழும்பையில் இயேசு
என்னை ஆவலாய்க் காப்பவர் இயேசு
முழு நாளிலும் என்னுடன் இயேசு
ஜெயமளிப்பவராம் இயேசு - போற்

7. மா தேவாதி தேவனாம் இயேசு
வெகு ஜோதியாயிருந்தவர் இயேசு
அன்பினால் புவி வந்தவர் இயேசு
இன்னும் ஜீவனுள்ளோர் இயேசு - போற்

8. தேவ முன்னிலை நிற்பவர் இயேசு
தேடும் யாவையும் ஈந்தவர் இயேசு
தேசமெங்கும் என் அடைக்கலம் இயேசு
தேவ சுந்தரனாம் இயேசு - போற்

9. என் ஆத்தும இன்பராம் இயேசு
என்னைக் காத்து நடத்திடும் இயேசு
பரலோகத்தில் காண்பதும் இயேசு
எனக்கெல்லாமுமாம் இயேசு - போற்

# Tamil Hymn No 228

WHEN SHALL I SEE HIM

பல்லவி

எப்போ காண்பேன் என்னை மீட்கவே
பாடு சகித்தவரை?

சரணங்கள்

1. சஞ்சலமும் அடைந்தார், மிஞ்சும் பட்டினியும் சகித்தார்
   கிஞ்சித்தேனும் நன்மை காணா தென்னையும் அறிந்தார் - எப்போ

2. சோபன உருவம் எல்லாமுமே இழந்தார்
   சோபித்திடவே ஏழையானும் தாதன் சந்நிதியில் - எப்போ

3. அங்கம் வாடினோராய், பங்கம் பாடுகளடைந்தார்
   அங்கு நானும் அண்ணலோடு ஆனந்தித்திடவே - எப்போ

4. இன்பமும் மறந்தார். பல துன்பமும் சுமந்தார்
   அன்பில் நானும் ஆழ்ந்து ருசித்து சோகமடைந்திடவே - எப்போ

5. இன்ப நேசரவர், மிக நேசம் பெருகினவர்
   என்று காண்பேன், கூறும் தோழரே, உள்ளம் வாஞ்சிக்குதே - எப்போ

# Tamil Hymn No 229

## HEARKEN OH LORD

பல்லவி

வேண்டுதல் கேளுமென் பரனே ஓ - ஓ
அடியேன் உம்மிலே மகிழ்ந்திடவே

சரணங்கள்

1. உம்மையல்லாதே வேறாரும் இல்லையே
   பூதல மீதினிலே
   கூவிடுதே என் உள்ளமதே
   உன்னதா இரங்கிடுமே - வேண்

2. மாறிடேனே ஓர் நாளிலு மென்றீர்
   ஆறுவேன் நான் இதிலே
   கூறிடுமே நின் வழி எனக்கே
   வேறிடமெனக் கில்லையே - வேண்

3. இந்நாள் வரையும் என்னுடனிருந்தீர்
   ஆதரவே அளித்தீர்
   அற்புதனே என்னைத் தள்ளிடீரே
   தவித்திடுமிவ் வேளையே - வேண்

4. நின் ஜனத்தாரின் கூக்குரலாலே
   உன்னதா! மனமிரங்கி
   அன்னையைப் போல் அரவணைத்தீர்
   இன்றைக்கென்னைக் கேட்பீரே - வேண்

5. மகத்துவனே! நீர் மாவருங் குருவே!
   மகிமையின் அதிபதியே!
   மகிதலமே ஆள்பவனே!
   மறவீரே எனை அரசே! - வேண்

# Tamil Hymn No 230

## WITH HEAVENLY HOST

பல்லவி

அணி அணியாம் தூதருடன்
பொன் மணிபோல் துலங்குவாரே

சரணங்கள்

1. தூதர் நாதம் எங்கும் முழங்க
தூயரெல்லாம் ஒன்று குழும (கூட)
துங்கன் இயேசுவின் இன்ப முகத்தைக்
கண்டு நாமும் மகிழுவோம் - அணி

2. மண்ணின் சாயல் மாறி நாமும்
அண்ணல் இயேசின் சாயலடைவோம்
விண்ணில் நமக்காய் பணிந்த மனையில்
மன்னனோடு வாழுவோம் - அணி

3. முத்து வாசல் ஏறிச் செல்வோம்
முத்தம் செய்வோம் பொன்னின் பாதம்
அத்தன் நம்மை அறிந்த அன்பால்
அறிந்து களிப்போம் அவரிலே - அணி

4. அந்த நாளை எப்போ காண்போம்
சுந்தரனை என்று சேர்வோம்
அந்தமில்லா அன்பினளவைக்
கண்டு மகிழ்வோம் நிறைவுடன் - அணி

5. நித்தியமே எந்தன் உரிமை
நிறுத்தினாரே சுத்த உருவாய்
நீசன் நானே என் செய்வேனோ
நீடுழியாய்ச் சேவிப்பேன் - அணி

# Tamil Hymn No 231

## PRAISE HIM

பல்லவி

ஸ்தோத்திரம் ஏற்றிப் போற்றுவோம் எங்கள்
தேவ தேவனை
கூடியே இன்பமாய் ஏக மனதுடனே – மகிபனை

சரணங்கள்

1. பாவத்தைப் போக்கிய தேவா - ஸ்தோத்திரம்
பாதையும், சத்தியமும், ஜீவனும் - ஸ்தோத்திரம்
ஞான குருவே! - ஸ்தோத்திரம்
மெய்யான புகலிடமே! - ஸ்தோத்திரம் - ஸ்தோ

2. நோய் பிணி யாவையும் சுமந்தாய் - ஸ்தோத்திரம்
நேத்திரம் போலென்னைக் காத்தாய் - ஸ்தோத்திரம்
பேரின்பனே! - ஸ்தோத்திரம்
பாய்ந்தோடும் ஔஷதமே! - ஸ்தோத்திரம் - ஸ்தோ

3. அல்லல்கள் யாவும் தீர்த்தாய் - ஸ்தோத்திரம்
பொல்லாத பேயையும் வென்றாய் - ஸ்தோத்திரம்
வல்லவனே! - ஸ்தோத்திரம்
தொல்லுலகில் எல்லாமுமே - ஸ்தோத்திரம் - ஸ்தோ

4. சோதனை வேளையில் ஜெயமே - ஸ்தோத்திரம்
சோர்ந்திடும் வேளையில் திடமே - ஸ்தோத்திரம்
சொல் தவறாய் - ஸ்தோத்திரம்
சந்ததமே சாற்றிடுவேன் - ஸ்தோத்திரம் - ஸ்தோ

5. பரிசுத்த ஜீவியம் அளித்தாய் - ஸ்தோத்திரம்
பரலோக பாக்கியம் ஈந்தாய் - ஸ்தோத்திரம்
சேர்த்திடுவீர் - ஸ்தோத்திரம்
விண் வீட்டில் மகிழ்ந்திடவே - ஸ்தோத்திரம் - ஸ்தோ

6. ஆதியும் அந்தமும் நீரே - ஸ்தோத்திரம்
அதிசய நடத்துதற்காகவும் - ஸ்தோத்திரம்
அல்லேலூயா! - ஸ்தோத்திரம்
என்றென்றும் ஆரணனே - ஸ்தோத்திரம் - ஸ்தோ

# Tamil Hymn No 232

## BEHOLD HE COMETH

பல்லவி

என்று காண்பேனோ என் நேச இயேசு ராஜனை! - நான்

சரணங்கள்

1. மேகமீதில் இன்ப ராஜன் இயேசுவும்
   காகளத் தொனியுடனே தோன்றும் வேளையில்
   போரில் ஜெயங்கொண்டோர் யாரும் கூடுவாரங்கே - என்று

2. தூயரான தாசர் ஆர்ப்பரித்துமே
   ஆவி ஆத்துமா சரீர மீட்பின் நாளிலே
   மன்னனேசின் மா மகிமை வண்ணம் மாறுவார் - என்று

3. ஆவலாய் விழித்து ஆசையாகவே
   ஆவியில் போராடி ஜெபித்த ஜெபவீரரை
   அண்ணல் இயேசும் ஆதரவாய் அணைத்துக்கொள்வாரே - என்று

4. வீரமாய் எதிர்த்துச் சோபித்தேகினோர்
   சொல்லொண்ணாத பாடுகளை மண்ணில் சகித்தோர்
   கண்ணிமைப் பொழுதிலவர் விண்ணிலேகுவார் - என்று

5. நேசத்தால் என் இதயம் பொங்கிப் பாயுதே
   நேசரே! நீர் வாருமென்ற ஒசை கேட்குதே
   பாசத்தால் நான் சோகமடைந்தேன் - ஆ! மணாளனே! - என்று

6. எல்லையில்லா மகிமை வீசும் தேசமே
   செல்லவே நீ ஆயத்தமா? ஓ! மணாளியே!
   வல்லமையாய் இயேசுவோடு சேர்ந்து ஆளவே - என்று

# Tamil Hymn No 233

LORD REVIVE US AGAIN

பல்லவி

அன்பனே அடியார் மேல் - ஆசி பொழிய வந்திடும்

சரணங்கள்

1. ஆவியின் பெருமாரி பொழிய, அன்பே அருள் புரியும்
உன்னத பெலத்தால் தேவா
உள்ளம் நிறைத்திடுமே - அன்

2. அற்புத அடையாளமதினால், வார்த்தை ஸ்திரப்படுத்தும்
பேயை ஜெயித்ததினால் தேவா
நோய்கள் நீங்கிடவே - அன்

3. கறை, திரை முதலான பாவம், சபையினின்றகல
குறைகளகற்றிடுமே தேவா
சிறந்திலங்கிடவே - அன்

4. பாரிலே உம்மைத் தேவனென்று ஜாதிகளறிய
பூர்வ நாட்களைப்போல் தேவா
பக்தரை எழுப்பும் - அன்

5. தியாகமே தம் மேன்மையாக, நேர்ந்த தாசர்களை
நிறைவாய் ஆவியினால் தேவா
அபிஷேகித்திடுமே - அன்

# Tamil Hymn No 234

## HEALING

பல்லவி

வந்திடுமே இயேசுவண்டை
நம் பாவம், ரோகம், சாபம் தீர்க்க
மாண்டாரே கல்வாரியில்

சரணங்கள்

1. ஞான வைத்தியனாம் - மிக அன்பாய்க் குருசினிலே
கடும் ரோகம் யாவையும் ஏற்றனரே
போக்கினார் பாவத்தை – நீக்கினார் நம் சாபமதை
உள்ளம் கனிந்து அழைக்கிறாரே - வந்

2. பாவம் பெருகினதால் - மிக நோய்கள் பரவியதால்
ஜனம் சோருதே தம் இளமையிலே
பாவத்தைத் தள்ளியே – மன்னிப்பை நீர் பெறுவதினால்
என்றும் மகிழ்ந்து வாழ்ந்திடுவீர் - வந்

3. வாவென்றே வெளியே – அதிகார சத்தமுடன்
தம் நேச லாசரை எழுப்பினாரே
கூறிய வார்த்தையே வென்றதே, அவன் மரணத்தையே
உம்மை உயிர்ப்பிக்க வலியதுவே - வந்

4. காருண்ய கரத்தால் - பல தீரா நோய்களையும்
கொடும் வாதை யாவையும் நீக்கினாரே
வாருமே யாவரும் - தாருமே உம் இருதயத்தை
சுகமடைந்து திரும்புவீரே - வந்

5. சாவை ஜெயித்திடவும் - எங்கும் தீமை வென்றிடவும்
வல்ல தேவ ஆவியை ஈந்தனரே
வெல்லுவோம் பேயையும் - இயேசுவின் திரு நாமத்தினால்
சென்று ஜாதியை மீட்டிடவே - வந்

# Tamil Hymn No 235

PRAISING

பல்லவி

பாடியே பரனைத் துதி மனமே – துதி மனமே
கொண்டாடித் துதி தினமே

சரணங்கள்

1.சென்ற நாளெல்லாம் கருத்துடன் காத்த நாதனைத் துதி மனமே
நாளுக்கு நாளாய் செய் பல நன்மைக்காய்
நாதனைத் துதி மனமே
ஆதரவாய் எம்மைக் காத்ததினாலே தேவனைத் துதி மனமே - பாடி

2.நானிலந்தனிலெம் பாவங்கள் போக்கிய நாதனைத் துதி மனமே
என்றும் எம்மேல் வைத்த மாறிடா அன்பிற்காய்
நாதனைத் துதி மனமே
கானகமதிலே ஜீவ ஊற்றான தேவனைத் துதி மனமே - பாடி

3.கிருபையாய் ஈந்த திருப்பலிக்காக நாதனைத் துதி மனமே
கோரமாய் வந்த நோய்களைத் தீர்த்ததால்
நாதனைத் துதி மனமே
தாபரமாய் எமைத் தாங்கியதாலே தேவனைத் துதி மனமே - பாடி

4.கஷ்டமானாலும் நஷ்டமானாலும் நாதனைத் துதி மனமே
பஞ்சம் பசியுடன் பங்கம் வந்தாலும் நாதனைத் துதி மனமே
ஜீவனானாலும் மரணமாலும் தேவனைத் துதி மனமே - பாடி

5.ஏகமாய் எம்மை அன்பினால் இணைத்த நாதனைத் துதி மனமே
அகமதை ஆவியால் ஆலயமாக்கிய நாதனைத் துதி மனமே
தூதரிலும் எமை மேன்மையாய் எண்ணிய
தேவனைத் துதி மனமே - பாடி

6.உன்னத அழைப்பால் எம்மையே தெரிந்த
நாதனைத் துதி மனமே
பெலமுள்ள கரமதில் செங்கோலுமாக்கிய
நாதனைத் துதி மனமே
நீடுழி காலமாய் சாலேமில் வாழ்த்திடத் தேவனைத் துதி மனமே - பாடி

# Tamil Hymn No 236

## DIVINE HEALING

பல்லவி

வாராயோ நீ தஞ்சமெனவே
தாங்கிடுவார் உன்னை அன்பாலே

சரணங்கள்

1. நோய்களைத் தீர்ப்பேனென்றார் - யேகோவா
திருமறை வாக்கிதுவே
வார்த்தை விடுத்தே வாதையகலுமென்ற
வாக்கிற்குச் செவி சாய்த்தே – நீரும் - வாரா

2. அற்புத அடையாளங்கள் முன் போல
இன்றும் விளங்கிடுதே
பேதமை நீக்கி ஐயமே அகற்று
அதிசய சுகம் பெறவே – நம்பி - வாரா

3. பக்தன் யவீரு வீட்டில் நம் இயேசு
அற்புதம் செய்தனரே
சாவையே வென்று ஜெயித்துமே உயிர்த்த
தேவனுக்கிணையில்லையே – அண்டி - வாரா

4. இறைவன் விலாவதிலே சிந்திய
உதிரமும் உந்தனுக்கே
என்றுமே மாறா வல்லமையான
இயேசுவின் நாமமதை – நாடி - வாரா

5. கல்வாரிக் குருசினிலே பெருகுதே
ஜீவனும் ஊற்றாக
தாவியே வாரும், மேவியே ஏற்பார்
தாமதம் செய்யாதே – தேடி - வாரா

# Tamil Hymn No 237

HOLY SPIRIT

பல்லவி

வாரும் பரம தேவா
எங்கள் மேலே ஆவியை ஊற்ற
தயவாய் இன்றருள்வீர் அபிஷேகத்தை

சரணங்கள்

1. இளைத்தவரை ஆற்றித் தேற்றுபவர்
ஈனக்குணங்களை நீக்குபவர்
மகிமையின் ஆவியால் அலங்கரித்து
ஏகமாய் இணைத்திடவே - வாரும்

2. ஆவியில் பிறவார் ராஜ்யமதில்
சேர்ந்திடாரென்பது வாக்கின் மொழி
மீட்கும் அந்நாளின் அச்சாரமதை
பொழிந்திடும் ஆசிப்போர் மேல் - வாரும்

3. ஆத்தும தாகம் குறைந்திடுதே
ஆவியின் பெலனும் குன்றிடுதே
மாமிசமானவர் யாவருக்கும்
அளித்திட வாக்கின்படி - வாரும்

4. பாடிடுவோம் புது நாவுகளால்
பேசிடுவோம் மறு பாஷைகளால்
பேசினார் அவரும் மகத்துவத்தைப்
பாவிகள் உணர்ந்திடவே - வாரும்

5. ஆவியில் அன்றவர் ஜெபித்திடவே
அசைந்ததே இடங்கள் வல்லமையாய்ப்
பேய் பிணி யகல இவ்வதிகாரத்தைச்
செலுத்திட உலகிதிலே - வாரும்

# Tamil Hymn No 238

RAPTURE

பல்லவி

இயேசு மகா ராஜன் வருவாரே
எக்காள நாதம் முழங்கிடுமே

சரணங்கள்

1. தேவாதி தேவனோ மேலோகில்
ஆ! மௌனமாகவே வீற்றுமே
கட்டளை எப்போ வரும் என்றே
இயேசு குமாரனும் நோக்குகின்றார் - இயேசு

2. ஏகமாய் வானிலும் பூவிலும்
ஏங்குதே தேவனின் சிருஷ்டியும்,
ஆத்தும மீட்பின் முடிவையே
சீயோன் மாதே! அங்கலாய்த்திரும் - இயேசு

3. தூதரோ வானிலே சூழ்ந்துமே
தூயரோ டாயத்தமாகவே
மாசில்லாக் கற்புள்ள கன்னியாய்
ஆயத்தமாயுன்னை ஆக்கினாயோ? - இயேசு

4. வாயிற் கபடமும் இல்லாதே
வஞ்சனை முற்றுமே நீக்கியே
வாக்கு மாறாத வள்ளலை
ஆனந்தமாய் எதிர் நோக்குமே - இயேசு

5. நாதனோ ஜெய கெம்பீரமாய்
வான் முழங்க ஒன்றாய்க் கூடுவார்
ஜெகமதில் ஜெயங் கொண்டவர்
ஜோதியாய் அவர் போல் ஆகுவார் - இயேசு

# Tamil Hymn No 239

## SON OF GOD

பல்லவி

தேவ குமாரன் இயேசு புவியில் வந்தார் - மானிடனாய்

சரணங்கள்

1. எல்லோரும் கூடியே போவோம்
சந்தோஷமாய் ஆராதிக்க
புல்லணையாம் முன்னணையில்
பிறந்திருக்கும் இப்பாலகனை - தேவ

2. கன்னிகை பாலனாம் இயேசு
இந்நாளினில் மீட்புக்காக
உதித்தனரே பெத்தலையில்
துதித்திடுவோம் விண் சேனையோடு - தேவ

3. நித்திய தேவனாம் இயேசு
மேலோகத்தின் மேன்மை விட்டு
தெரிந்தனரே கொட்டிலையே
அறிந்திடுவீர் இத் தாழ்மையையே - தேவ

4. அதிசயமாம் அவர் நாமம்
ஆலோசனைக் கர்த்தரவர்
மேசியாவாம் நம் இயேசுவையே
பணிந்திடுவோம் இத்தின மிதிலே - தேவ

5. ஆதரவற்றோரின் தஞ்சம்
மா துன்பத்திலே பேரின்பம்
தேற்றிடுவார் தயையுடனே
போற்றிடுவோம் இப்பாலகனை - தேவ

# Tamil Hymn No 240

INVOCATION

பல்லவி

என் தேவனே! என் அன்பனே!
வந்திடுவீர் வல்லமையாய்

அனுபல்லவி

ஆசிர்வாத நிறைவுடன்
அன்பே என்மேல் இறங்கிடும் - என்

சரணங்கள்

1. இரண்டோ மூன்றோ பேர்கள் எங்கே
உண்டோ அங்கே நானிருப்பேன்
என்றுரைத்த வாக்குப்படி
இன்று எமைச் சந்தித்திடும் - என்

2. கல்வாரியில் ஜீவன் தந்த
எங்கள் தேவா இயேசு நாதா
எங்களுள்ளம் உந்தனன்பால்
நிறைந்துமைத் துதித்திட - என்

3. அந்தோ! ஜனம் பாவங்களால்
நொந்து மனம் வாடுதையோ!
இன்ப முகம் கண்டால் போதும்
இருள் நீங்கி ஒளி காண்பார் - என்

4. ஆதரவாய் அன்றும் கரம்
நீட்டி சுகம் ஈந்த தேவா
ஆவலுடன் வந்தோர் பிணி
யாவும் தீரும் அருள் நாதா - என்

5. ஆதி அன்பால் தேவ ஜனம்
தாவி மனம் மகிழ்ந்திட
ஆவி, ஆத்மா, சரீரமும்
பரிசுத்தம் அடைந்திட - என்

6. ஆவலுடனும் வரவை
எதிர் நோக்கிக் காத்திருக்க
ஆவி வரம் யாவும் பெற்று
நிறைவுட னிலங்கிட - என்

# Tamil Hymn No 241

## LET US REJOICE

பல்லவி

1. ஆனந்தமாய் நாமே ஆர்ப்பரிப்போமே
அருமையாய் இயேசு நமக்களித்த
அளவில்லாக் கிருபை பெரிதல்லவோ
அனுதின ஜீவியத்தில்

சரணங்கள்

ஆத்துமாவே! என் முழு உள்ளமே
உன் அற்புத தேவனையே ஸ்தோத்திரி
பொங்கிடுதே என் உள்ளத்திலே
பேரன்பின் பெருவெள்ளமே

2. கருணையாய் இதுவரை கைவிடாமலே
கண்மணி போல் எமைக் காத்தாரே
கவலைகள் போக்கிக் கண்ணீர் துடைத்தார்
கருத்துடன் பாடிடுவோம் - ஆத்

3. படகிலே படுத்து உறங்கினாலும்
கடும் புயல் அடித்துக் கவிழ்த்தாலும்
கடலையும் காற்றையும் அமர்த்தியெமைக்
காத்தாரே அல்லேலூயா! - ஆத்

4. யோர்தானைக் கடந்தோம் அவர் பெலத்தால்
எரிகோவைத் தகர்த்தோம் அவர் துதியால்
இயேசுவின் நாமத்தில் ஜெயம் எடுத்தே
என்றென்றுமாய் வாழுவோம் - ஆத்

5. பரிசுத்தவான்களின் பாடுகளெல்லாம்
அதிசீக்கிரமாய் முடிகிறதே
விழிப்புடன் கூடித் தரித்திருப்போம்
விரைந்தவர் வந்திடுவார் - ஆத்

# Tamil Hymn No 242

## BLESS US

பல்லவி

கருணைக் கடலாம் - இயே... சுவே
கனிவுடனே - இப்போ இரங்கிடுமே – எங்கள்

சரணங்கள்

1. வாரும் வல்லமையாய், தாரும் வரங்களை
வர்த்திக்க வேணும் விஸ்வா... சத்தை
புகழ்ந்திடவே திரு நா...மத்தை – எங்கள் - கரு

2. தாரகமற்ற தரணியோரை
தாமதமின்றியே மீட்...டிட
எழுந்திடுமே இந்நே...ரமே – எங்கள் - கரு

3. அப்போஸ்தல காலம் போல
அற்புதங்கள் அடையா...ளங்கள்
அதிசய நாமத்தில் ஓங்...கிட – எங்கள் - கரு

4. முடவர் குதிக்க, ஊமை துதிக்க
செவிடர், குருடர், கூ...னரும்
சுகமடைந்து உமைப்பா....டிட – எங்கள் - கரு

5. கன்னிகையாக, கறைகளின்றி
மன்னன் தோன்றும் வே...ளையில்
பறந்திடவே சபை மே....கத்தில் - எங்கள் - கரு

6. தயாகரமே! தஞ்சம் நீரே
தியாகமே மேன்மையாம் தா... சரை
அபிஷேகித்து உபயோ...கியும் - எங்கள் - கரு

# Tamil Hymn No 243

## THOU ART MY REFUGE

பல்லவி

இயேசு நாதா – ஜீவ தேவா
தஞ்சம் நீரே, என் கதி வேறாரில்லையே

சரணங்கள்

1. உம் ரூபமே என் வாஞ்சையே – என்றும் கண்டானந்திக்க
நன்றியால் உள்ளம் பொங்கி வழிந்திடுதே - இயேசு

2. ஏதுமற்ற பாவியாமென் - தீவினை நீக்க வந்தீர்
தரணியில் மீட்க வேறாரும் காணேனே நான் - இயேசு

3. உம் சாயலை என்னில் காண – அன்பின் ஆவியைத் தந்தீர்
உன்னதா என்றும் முன்னேறியே செல்லுவேன் - இயேசு

4. அன்னையே நீர் ஆதரவாய் - எந்தன் துயர் நீக்கினீர்
இன்பமாய் என்றும் துன்பத்தை மேற்கொள்ளுவேன் - இயேசு

5. துன்பத்திலும் பேரின்பமே – தூய சமுகத்திலே
துதி கொண்டாடி இன்றும் என்றும் புகழ - இயேசு

# Tamil Hymn No 244

## REJOICE

பல்லவி

சீயோனே! ஆர்ப்பரி
சிருஷ்டி கர்த்தரான உந்தன்
சர்வ வல்ல தேவனை

சரணங்கள்

1. சென்றதாம் பாதைகளிலே
சேதமே யாதுமணுகா(து)
கண்மணி போலக் காவல் செய்தோனை
நன்றியுடன் பாடுவோம் - சீயோ

2. நீக்கினார் பாவப் பாரமே
போக்கினார் சாபம் யாவுமே
தாழ்த்தியே நீசக் கோலமதாகித்
தன் ஜீவனை ஈந்தாரே - சீயோ

3. ஆதரவற்ற நேரத்தில்
ஆறுதலில்லா வேளையில்
அன்பாலணைத்து ஆறுதலீந்த
அன்பனைப் போற்றிடுவோம் - சீயோ

4. நிந்தையில் சோதனையிலும்
வந்ததாம் தொல்லைகளிலும்
மாண்டவரோடு மாளாமல் எம்மை
ஆண்டவர் ஆதரித்தார் - சீயோ

# Tamil Hymn No 245

## HE SHALL APPEAR

பல்லவி

தேவ எக்காளம் தொனிக்கவே
தேவாதி தேவன் தோன்றுவார்

சரணங்கள்

1. முன் மறைந்த அருமையானோர்
முதல் வருவார் இயேசுவுடன்
பின்பு நாமும் அண்ணலோடு
இன்பமடைவோம் என்றுமென்றும் - தேவ

2. அன்பர்களோ ஆனந்தமாய்
இன்முகமே கண்டிடுவார்
மின்னல் போல இன்னல் தொலைய
இன்பமே இனி என்றுமென்றும் - தேவ

3. பூரணரே பறந்திடுவார்
பொன் முடியும் தரித்திடுவார்
பாரிடத்தின் பாடு சகித்தோர்
பாடி மகிழ்வோம் என்றுமென்றும் - தேவ

4. ஆயிரமாம் தூதர் சூழ
அடியாரும் அரசாள
அல்லேலூயா ஆர்ப்பரித்தே
ஆளுவோமே என்றுமென்றும் - தேவ

5. ஆருயிரே ஆதரையில்
ஆண்டுகளோ கடந்திடுதே
என்று காண்பேன், எந்தனுள்ளம்
எண்ணி எண்ணி ஏங்கிடுதே - தேவ

# Tamil Hymn No 246

## PRAISING FOR HIS KEEPING

சரணங்கள்

1. போற்றித் துதிப்போம் எம் தேவ தேவனை
புனித இதயமுடனே
நேற்றும், இன்றும், என்றும் மறா
இயேசுவை நாமென்றும் பாடித் துதிப்போம்

பல்லவி

இயேசு வென்னும் நாமமே – என்
ஆத்துமாவின் கீதமே என் நேசரேசுவை
நான் என்றும் ஏத்தி மகிழ்ந்திடுவேன்

2. கோர பயங்கரமான புயலில்
கொடிய அலையின் மத்தியில்
காக்கும் கரங்கொண்டு மார்பில் சேர்த்தணைத்த
அன்பை என்றும் பாடுவேன் - இயேசு

3. யோர்தான் நதிபோன்ற சோதனையிலும்
சோர்ந்தமிழ்ந்து மாளாதே
ஆர்க்கும் ஜெயத்தொனியோடே
பாதுகாத்த அன்பை என்றும் பாடுவேன் - இயேசு

4. தாய் தன் பாலகனையே மறப்பினும்
'நான் மறவேன்' என்று சொன்னதால்
தாழ்த்தி என்னையவர் கையில் தந்து
ஜீவபாதை என்றும் ஓடுவேன் - இயேசு

5. பூமியகிலமும் சாட்சியாகவே
போங்களென்ற கட்டளையதால்
ஆவி, ஆத்துமாவும் தேகம் யாவுமின்று
தந்து தொண்டு செய்குவேன் - இயேசு

# Tamil Hymn No 247

## COME HOLY SPIRIT

பல்லவி

பரிசுத்தாவியானவரே எங்கள் மீதினிலே - இறங்கி
வல்லமையாகக் கிரியை செய்யும்

சரணங்கள்

1. பெந்தெகொஸ்தின் தினமதிலே
வந்திறங்கியே சீஷர்களை
சந்தித்ததுபோல் ஏழைகள் மீதும்
எந்தையே அமர்ந்திடுவீரே - பரி

2. பற்பல பாஷைகள் பேசிடுவோம்
தற்பரன் மாண்பினை உரைத்திடுவோம்
அற்புத அடையாளம் செய்திடப் பாரில்
சொற்படி அருள் மாரி பொழிவீர் - பரி

3. பேயின் சக்தி தகர்ந்திடவே
நோயின் பெலனும் அகன்றிடவே
சோரும் உள்ளங்கள் உணர்ந்தெழும்பிடவே
தாரும் ஓர் அபிஷேகம் தயவாய் - பரி

4. ஆதியன்பு குறைந்திடுதே
ஆதிக் கிரியை மறைந்திடுதே
ஆத்துமாக்கள் மாள்வதைக் காண
ஆறுதல் இல்லையே சுவாமி - பரி

5. ஆவியால் உம் அன்பதையே
ஆழ்ந்து ருசிக்க அளித்திடுமே
அனலில்லாத அனுபவம் நீங்க
அன்பரே! இரங்கிடுவீரே - பரி

# Tamil Hymn No 248

## PRAISE HIM

பல்லவி

தூய தூய தேவனை நாம்
போற்றி யேற்றிப் புகழ்ந்திடுவோம்

சரணங்கள்

1. ஸ்தோத்திர கீதங்கள் முழங்கிடுதே – அல்லேலூயா
அல்லேலூயா! துதி ஸ்தோத்திரமே
பாவமாம் சேற்றினில் புரண்டதாம் எம்மையே
பாசமாய் இரங்கியே ரட்சித்தாரே - தூய

2. நன்றியால் உள்ளங்கள் நிறைந்திடுதே – அல்லேலூயா
அல்லேலூயா! துதி ஸ்தோத்திரமே
எத்தனை துன்பங்கள் துயரங்கள் பெருகினும்
இத்தனை கருணையால் தாங்கிடும் மா - தூய

3. ஆதரவளித்திடும் ஆருயிரே – அல்லேலூயா!
அல்லேலூயா! துதி ஸ்தோத்திரமே
கோரமாய்ச் சோதனை சூழ்ந்திடும் வேளையில்
மாறா தம் வார்த்தையால் தேற்றுவாரே - தூய

4. ஆவியிற் பாடியே அகமகிழ்வோம் - அல்லேலூயா
அல்லேலூயா! துதி ஸ்தோத்திரம்
மேலோக பாக்கியம் எண்ணிடும் வேளையில்
மா பரமானந்தம் பொங்கிடுதே - தூய

5. அன்பின் மணாளனே வந்திடுவார் - அல்லேலூயா
அல்லேலூயா! துதி ஸ்தோத்திரமே
பூரண பரிசுத்த வான்களோடேகியே
பரம சீயோனில் நாம் வாழ்ந்திடுவோம் - தூய

# Tamil Hymn No 249

## HIS KEEPING POWER

சரணங்கள்

1. உன்னதமானவரின்
உயர் மறைவிலிருக்கிறவன்
சர்வ வல்லவரின் நிழலில் தங்குவான்
இது பரம சிலாக்கியமே

பல்லவி

அவர் செட்டையின் கீழ் அடைக்கலம் புகவே
தம் சிறகுகளால் மூடுவார்

2. தேவன் என் அடைக்கலமே
என் கோட்டையும் அரணுமவர்
அவர் சத்தியம் பரிசையும் கேடகமாம்
என் நம்பிக்கையும் அவரே - அவர்

3. இரவின் பயங்கரத்துக்கும்
பகலில் பறக்கும் அம்புக்கும்
இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும்
நான் பயப்படவே மாட்டேன் - அவர்

4. ஆயிரம் பதினாயிரம்
பேர்கள் உன் பக்கம் விழுந்தாலும்
அது ஒரு காலத்தும் உன்னை அணுகிடாதே
உன் தேவன் உன் தாபரமே - அவர்

5. தேவன் உன் அடைக்கலமே
எந்தப் பொல்லாப்பும் உன்னைச் சேருமோ?
ஒரு வாதையும் உன் கூடாரத்தையே
அணுகாமலே காத்திடுவார் - அவர்

6. உன் வழிகளிலெல்லாம்
உன்னைத் தூதர்கள் காத்திடுவார்
உன் பாதம் கல்லில் இடறாதபடி
தங்கள் கரங்களில் ஏந்திடுவார் - அவர்

7. சிங்கத்தின் மேலும் நடந்து
வலுசர்ப்பத்தையும் மிதிப்பாய்
அவர் நாமத்தை நீ முற்றும் நம்பினதால்
உன்னை விடுவித்துக் காத்திடுவார் - அவர்

8. ஆபத்திலும் அவரை நான்
நோக்கிக் கூப்பிடும் வேளையிலும்
என்னைத் தப்புவித்தே முற்றும் இரட்சிப்பாரே
என் ஆத்தும நேசரவர் - அவர்

# Tamil Hymn No 250

## THE HIGH PRAISES OF GOD

சரணங்கள்

1. ஆண்டவர் எம் இயேசுவை – ஆயிரம் துதிகளாலும்
ஆர்ப்பரித்துப் போற்றிட நாம் ஆயத்தமல்லோ
ஆவியின் சந்தோஷமே எமக்களித்தாரே

பல்லவி

ஆதியும் நீரே, என் அந்தமும் நீரே
மாறிடா நேசரே எந்தன் இயேசுவே

2. எண்ணில்லா எம் துன்பங்கள் - எங்கு போய் ஒழிந்ததோ
எம்முள்ளந்தான் நன்றியால் நிறைந்து பொங்குதே
ஏகமாய் எல்லோரும் கூடி ஸ்தோத்திரிப்போமே - ஆதி

3. சுயாதீன ஆவியால் சிலர் - சத்தியம் விட்டோடினும்
சக்தியீந்து சாட்சியாக இன்றும் நிலைக்க
பக்தியில் வைராக்கியம் எமக்களித்தாரே - ஆதி

4. இயேசு எம் பட்சம் நிற்க – ஈன சாத்தானும் தோற்க
ஆர்ப்பரிப்போடாராவாரம் எங்கும் தொனிக்க
அல்லேலூயா வல்லமையாய்ப் பாடிடுவோமே - ஆதி

5. இடுக்கமான வழியே - இன்பக் கானான் ஏகவே
இன்னும் அவரோடு கூடப் பாடு சகிப்போம்
இன்றும் என்றும் இயேசுவோடு ஆட்சி செய்வோமே - ஆதி

6. உன்னத மா தேவனின் - உயர்ந்த செட்டைகளின் கீழ்
தஞ்சமென அஞ்சிடாமல் தங்கி வாழுவோம்
தீங்கு நாட்கள் தீவிரம் எம் முன் நெருங்கிற்றே - ஆதி

7. எருசலேமே! ஆர்ப்பரி – சீயோனே! நீ கெம்பீரி
ஆயிரம் பதினாயிரம் விண் தூதருடனே
ஆசை மணவாளன் இயேசு தாம் வருகிறார் - ஆதி

# Tamil Hymn No 251

## ON ZION

பல்லவி

சீயோன் மலையில் தேவ மகிமை எங்கும் வீசுதே
சர்வ வல்ல தேவன் அரசாளுகின்றார்

சரணங்கள்

1. பெருவெள்ளத்து இரைச்சலைப் போல்
பலத்த இடி முழக்கங்கள் போல்
புதுப்பாட்டின் தொனி அங்கு ஒலிக்கின்றதே
மகிமைப் படுகின்றார் பரமபிதா - சீயோ

2. அங்கே மலைமேல் நிற்கின்றார்
ஆட்டுக் குட்டியான வரும்
அவரோடிணைந்து பிதா நாமம் நெற்றியில்
அணிந்து நிற்கின்றார் பரிசுத்தர் கூட்டமே - சீயோ

3. வாயில் கபடமும் இல்லை
ஆடைதனில் கறையுமில்லை
மானிடர் மத்தியில் முதற் பலனிவர்கள்
இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர் - சீயோ

4. அருமை இயேசுவின் பின்னே
அலைந்து நடந்த பாதங்கள்
மலையின் மீதிலே நின்று ஜொலிக்கின்றதே
அவர்கள் அப்போஸ்தல ஊழியரே - சீயோ

5. சர்வ பூமியே! பயத்துடன் கேள்
சத்திய சுவிசேஷத்தையே
நித்திய சந்தோஷம் நிறைவாய்ப் பெறவே
நீயும் வந்திடுவாய் தருணமிதுவே - சீயோ

# Tamil Hymn No 252

## ALMIGHTY HEALER

சரணங்கள்

1. தேவா இயேசு இரட்சகா!
தேவா சர்வ வல்லவா!
தேவா இயேசு நாயகா!
தேவாதி தேவா மா நேசரே!

பல்லவி

கனிவுடன் இரங்குமே – கரமதை நீட்டுமே
சுகமதை நீர் ஈயுமே – நம்பியே நான் நிற்கிறேன்

2. பாவ பாரம் ஆழ்த்தையில்
அன்பால் தேடி வந்தீரே
பாய்ந்து மாளா ரட்சித்தீர்
ஏழைக்கு ஆறுதல் நீரே நாதா - கனி

3. நோய்கள் யாவும் ஏற்றவர்
பேயை முற்றும் வென்றவர்
காயம் அடைந்திடவே
சாவையும் முற்றுமே ஜெயித்தனரே - கனி

4. காருண்ய மா வைத்தியரே
திவ்விய ஔஷதம் நீரே
சாபம் தீர்த்திடவே
மா சாபமாகித் தீர்ந்தீர் நீரே - கனி

5. ஆத்தும இன்ப நேசரே!
மாற்றீர் ஆணை யென்றுமே
மேவியே வந்திடுவோரை
தாவியே நீர் அணைத்தாதரிப்பீர் - கனி

# Tamil Hymn No 253

## CHRIST MY ALL

பல்லவி

எந்தக் காலத்திலும் எந்த நேரத்திலும்
நன்றியால் உம்மை நான் துதிப்பேன்
இயேசுவே உம்மை நான் துதிப்பேன் துதிப்பேன்
எந்த வேளையிலும் துதிப்பேன்

சரணங்கள்

1. ஆதியும் நீரே - அந்தமும் நீரே
ஜோதியும் நீரே - என் சொந்தமும் நீரே - எந்த

2. தாய் தந்தை நீரே - தாரகம் நீரே
தாபரம் நீரே - என் தஞ்சமும் நீரே - எந்த

3. வாழ்விலும் நீரே - தாழ்விலும் நீரே
வாதையில் நீரே - என் பாதையில் நீரே - எந்த

4. வானிலும் நீரே - பூவிலும் நீரே
வாரியில் நீரே - என் வாஞ்சையும் நீரே - எந்த

5. துன்பத்தில் நீரே - இன்பத்தில் நீரே
தொல்லையில் நீரே - என் வல்லவர் நீரே - எந்த

6. ஞான வைத்தியராம் - ஔஷதம் நீரே
ஆத்ம நேசராம் - என் அன்பனும் நீரே - எந்த

7. ஞானமும் நீரே - கானமும் நீரே
நாதனும் நீரே - என் நீதியும் நீரே - எந்த

8. ஆறுதல் நீரே - ஆதாரம் நீரே
ஆசையும் நீரே - என் ஆனந்தம் நீரே - எந்த

9. மீட்பரும் நீரே - காப்பவர் நீரே
மேய்ப்பரும் நீரே - என் மேன்மையும் நீரே - எந்த

10. தேவனும் நீரே - ஜீவனும் நீரே
ராஜனும் நீரே - என் சர்வமும் நீரே - எந்த

# Tamil Hymn No 254

## ZION

சரணங்கள்

1. பூரண வடிவுள்ள சீயோனிலே
பாரினில் ஜெயங்கொண்ட பரிசுத்தரே
ஆர்ப்பரிப்போடு கீதங்கள் பாட
ஆனந்தம் பொங்கிடுமே

பல்லவி

சீயோன்! சீயோன் சிகரம்!
சீயோன் தூய்மையின் சிகரம்
எருசலேம் பரம நகரம்
ஏகுவோம் என்றென்றும் வாழவே

2. தூய பிதாவின் தேசமதில்
நேயர்கள் அவர் முகம் கண்டிடுவார்
கண்ணீர்கள் யாவும் தேவனே துடைப்பார்
கவலைகள் ஒழிந்திடுமே - சீயோ

3. பளிங்கு நதியின் இரு கரைகளிலே
பன்னிரு கனிதரும் விருட்சமுண்டே
பரமனின் அன்பால் நிறைந்தவர் பாடும்
பாட்டிற்கோர் இணையில்லையே - சீயோ

4. கற்புள்ள கன்னிகை கறையற்றவள்
கருத்துடன் ஆட்டுக்குட்டியானவரை
மகிழ்வுடன் நித்தம் பின் சென்றதாலே
மகிபனோ டாட்சி செய்வாள் - சீயோ

5. நகரத்தின் மூலைக்கல் மகிபனேசு
நானில மெங்கும் அவர் ஒளி வீசுதே
சீயோனைப் பணிந்து தேவாதி தேவன்
சீக்கிரம் வெளிப்படுவார் - சீயோ

# Tamil Hymn No 255

## THE LORD IS MY SHEPHERD

பல்லவி

கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறாரே
தாழ்ச்சி அடையேன் என்றுமே

அனுபல்லவி

அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து
அமர்ந்த தண்ணீரண்டை நடத்துகிறார்

சரணங்கள்

1. ஆத்துமாவைத் தேற்றும் நேசரென்னை
ஆனந்தத்தால் நிறைக்கிறாரே
மகிமையின் நாமத்தின் நிமித்தம் அவர்
தம் நீதியின் பாதையில் நடத்துகிறார் - கர்த்தர்

2. மரணப் பள்ளத்தாக்கில் நடந்திடினும்
மாபெரும் தீங்குக்கும் அஞ்சேன்
கர்த்தர் என்னோடென்றும் இருப்பதாலே
அவர் கோலும் தடியும் என்னைத் தேற்றிடுமே - கர்த்தர்

3. சத்துருக்கள் முன்பில் எனக்காகப்
பந்தி யொன்றாயத்தஞ் செய்தார்
என்னைத் தம் எண்ணெயால் அபிஷேகித்து
என் பாத்திரம் நிரம்பியே வழியச் செய்தார் - கர்த்தர்

4. ஜீவன் என்னில் உள்ள காலம் வரையும்
நன்மை கிருபை தொடரும்
கர்த்தரின் வீட்டில் நான் களிப்புடன் துதித்து
நித்திய நாட்களாய் நிலைத்திருப்பேன் - கர்த்தர்

# Tamil Hymn No 256

## LEAD ME THROUGH

பல்லவி

என்னை மறவா இயேசு நாதா
உந்தன் தயவால் என்னை நடத்தும்

சரணங்கள்

1. வல்ல ஜீவ வாக்குத்தத்தங்கள்
வரைந்தெனக்காய் ஈந்ததாலே ஸ்தோத்திரம்
ஆபத்திலே அரும்துணையே
பாதைக்கு நல்ல தீபமிதே - என்னை

2. பயப்படாதே வலங்கரத்தாலே
பாதுகாப்பேன் என்றதாலே ஸ்தோத்திரம்
பாசம் என்மேல் நீர் வைத்ததினால்
பறிக்க இயலாதெவரு மென்னை - என்னை

3. தாய் தன் சேயை மறந்து விட்டாலும்
மறவேன் உன்னை என்றதாலே ஸ்தோத்திரம்
வரைந்தீரன்றோ உம் உள்ளங்கையில்
வல்லவா எந்தன் புகலிடமே - என்னை

4. திக்கற்றோராய்க் கைவிடேனே
கலங்கிடீரே என்றதாலே ஸ்தோத்திரம்
நீர் அறியா யாதும் நேரிடா
என் தலை முடியும் எண்ணினீரே - என்னை

5. உன்னைத் தொடுவோன் என் கண் மணியைத்
தொடுவதாக உரைத்ததாலே ஸ்தோத்திரம்
அக்கினியின் மதிலாக
அன்பரே என்னைக் காத்திடுமே - என்னை

6. உனக்கெதிராய் எழும்பும் ஆயுதம்
வாய்த்திடாதே என்றதாலே ஸ்தோத்திரம்
பறந்திடுதே உம் நாமத்திலே
பரனே எனக்காய் ஜெயக்கொடியே - என்னை

7. என்னை முற்றும் ஒப்புவித்தேன்
ஏற்று என்றும் நடத்துவீரே ஸ்தோத்திரம்
எப்படியாயினும் வருகையிலே
ஏழை என்னைச் சேர்த்திடுமே - என்னை

# Tamil Hymn No 257

## COME HOLY SPIRIT

பல்லவி

வாரும் - பரிசுத்தாவி – தணலாய்த் தாவி
தாரும் ஓர் மாரி

சரணங்கள்

1. காத்திருந்த தாசர் மீதில் - கர்த்தனே நீர் இறங்கினீர்
இந்த வேளை வந்திறங்கி – உந்தன் அருளைப் பொழிகுவீர்

2. மாரியின்றி மாளுகின்றோம் - மகிபனே கண் பாருமே
காலங்களும் கடந்திடுதே – நெருங்குதே உம் வருகையும்

3. அக்கினி நாவும் வல்ல வாக்கும் - உன்னத பெலனும் நல்குவீர்
ஆவி ஆத்மா சரீரம் முற்றும் தூய்மையாகத் துலங்கவே

4. அன்புடனே அழைக்கிறோமே – வந்திடுவீர் வல்லமையாய்
அன்பினாலே உள்ளம் நிரம்ப – அடியாரை அபிஷேகிப்பீர்

5. மீட்புறும் அந்நாளிலன்றோ – மன்னன் இயேசின் சாயலாய்
மறுரூபத்தின் ஆவியாலே – மாறுவோம் மறுரூபமாய்

# Tamil Hymn No 258

## SAVIOUR BORN

பல்லவி

வானபரன் இயேசு ராஜன் அவனியில்
மானிடனாய் ஜெனித்தார் - வல்ல

சரணங்கள்

1. தோத்திரக் கீதம் மேய்ப்பரும் கேட்க
தூதர்கள் வானில் துதி சாற்ற
புல்லணை மீதினில் பாலகனாய்
பிறந்தவர் தான் இவரே - வான

2. மானிடர் பாவம் போக்கிடும் பலியாய்
மானில மீதில் உதித்தாரே
சாவையும் பேயையும் நோயையுமே
ஜெயித்தவர் தான் இவரே - வான

3. மேய்ப்பனில்லாத ஆடுகள் போல
மேதினி மீதில் அலைந்தோமே
மேய்த்திடும் மீட்பராய் வந்துதித்த
மேசியா தான் இவரே - வான

4. அன்புடன் தம்மை அண்டிடுவோரை
ஆதரவாக அணைப்பாரே
அன்னையும் தந்தையும் போல் விளங்கும்
ஆண்டவர் தான் இவரே - வான

5. இம்மானுவேலன் தன் திருப்பாதம்
இன்பமுடனே பணிவோமே
தோத்திரம் பாடியே போற்றிடவே
பாத்திரர் தான் இவரே - வான

# Tamil Hymn No 259

## WONDERFUL LOVE

பல்லவி

ஸ்தோத்திரம் பாடியே போற்றிடுவேன்
தேவாதி தேவனை, ராஜாதி ராஜனை
வாழ்த்தி வணங்கிடுவேன்

சரணங்கள்

1. அற்புதமான அன்பே - என்னில்
பொற்பரன் பாராட்டும் தூய அன்பே
என்றும் மாறா தேவ அன்பே
என்னுள்ளம் தங்கும் அன்பே! - ஸ்தோ

2. ஜோதியாய் வந்த அன்பே - பூவில்
ஜீவன் தந்து என்னை மீட்ட அன்பே
தியாகமான தேவ அன்பே
திவ்விய மதுர அன்பே! - ஸ்தோ

3. மாய உலக அன்பை - நம்பி
மாண்ட என்னைக் கண்டழைத்த அன்பே
என்னை வென்ற தேவ அன்பே
என்னில் பொங்கும் பேரன்பே! - ஸ்தோ

4. ஆதரவான அன்பே - நித்தம்
அன்னை போல் என்னையும் தாங்கும் அன்பே
உன்னத மா தேவ அன்பே
உள்ளங் கவரும் அன்பே! - ஸ்தோ

5. வாக்கு மாறாத அன்பே - திரு
வார்த்தை யுரைத்தென்னைத் தேற்றும் அன்பே
சர்வ வல்ல தேவ அன்பே
சந்ததம் ஓங்கும் அன்பே! - ஸ்தோ

# Tamil Hymn No 260

## CALVARY

பல்லவி

அந்தோ! கல்வாரியில் - அருமை இரட்சகரே
சிறுமை அடைந்தே தொங்குகிறார்

சரணங்கள்

1. மகிமை மாட்சிமை மறந்திழந்தோராய்
கொடுமைக் குருசைத் தெரிந்தெடுத்தாரே
மாய லோகத்தோடழியாது யான்
தூய கல்வாரியின் அன்பை அண்டிடவே - அந்தோ

2. அழகுமில்லை சௌந்தரியமில்லை
அந்தக்கேடுற்றார் எந்தனை மீட்க
பல நிந்தைகள் சுமந்தாலுமே
பதினாயிரம் பேரிலும் சிறந்தவரே - அந்தோ

3. முள்ளின் முடியும் செவ்வங்கி அணிந்தும்
கால் கரங்கள் ஆணிகள் பாய்ந்தும்
குருதி வடிந்தவர் தொங்குகிறார்
வருந்தி மடிவோரையும் மீட்டிடவே - அந்தோ

4. அதிசயம் இது இயேசுவின் தியாகம்
அதினும் இன்பம் அன்பரின் சிநேகம்
அதை எண்ணியே நிதம் வாழுவேன்
அவர் பாதையை நான் தொடர்ந்தேகிடவே - அந்தோ

5. சிலுவைக் காட்சியைக் கண்டு முன்னேறி
சேவையே புரிவேன் ஜீவனும் வைத்தே
என்னைச் சேர்த்திட வருவேனென்றார்
என்றும் உண்மையுடன் நம்பி வாழ்ந்திடுவேன் - அந்தோ

# Tamil Hymn No 261

## SECOND COMING

சரணங்கள்

1. மேகமீதில் தோன்றிடுவார்
எக்காளத் தொனியுடனே
வேகமாக இயேசுதான் வருவார்
ஏகமாய்ச் சுத்தருடன்

பல்லவி

ஆ! ஆனந்தம் பேரானந்தம்
ஆனந்த நாளதுவே
அல்லேலூயா ஆர்ப்பரிப்போடு
அன்பரைச் சேர்ந்திடுவோம்

2. மண்ணின் சாயல் மாறியே நாம்
விண் சாயல் அடைந்திடுவோம்
அண்ணல் இயேசு ஆவலைத் தீர்த்தே
கண்ணீரைத் துடைத்திடுவார் - ஆ!

3. சொல்லொண்ணாத பாடுகளை
எண்ணாது சகித்தவரை
காணும் வேளை அன்புடன் இயேசு
அணைத்தே அகமகிழ்வார் - ஆ!

4. ஏகமாக சிருஷ்டிகளும்
மிக ஏங்கித் தவித்திடுதே
தேவ மைந்தர் வெளிப்படுவாரே
பூமியின் முதற்பலனாய் - ஆ!

5. ஜெயங்கொண்ட பரிசுத்தரே
சீயோனின் சிகரமதில்
தூய ஆட்டுக்குட்டியுடனே
நேயராய் இலங்கிடுவார் - ஆ!

# Tamil Hymn No 262

## UNCHANGING CHRIST

பல்லவி

நேற்றும் இன்றென்றுமே - மாறிடார் இயேசுவே
நம்பியே வாருமே - அன்பரினண்டையே

சரணங்கள்

1. வானமும் பூமியும் - நிலை மாறினாலுமே
வல்லவர் வாக்கொன்றும் - ஓர்காலும் மாறாதே - நேற்று

2. உந்தனுக்காகவே - உயிர்தனை ஈந்தவர்
உன்னதன் இயேசு தாம் - உன் நோயை ஏற்றவர் - நேற்று

3. பாவமும் சாபமும - ரோகமும் தீர்த்திடும்
பாய்ந்தோடும் கல்வாரி - ஊற்றண்டை வாருமே - நேற்று

4. வார்த்தை யுரைத்திட - பார் உருவாகிற்றே
வார்த்தையினாலே - உன் வாதைகள் நீங்குமே - நேற்று

5. அற்புத தேவனே - அழைக்கிறார் உம்மையே
தவறாது நிறைவான - சந்தோஷம் ஈகுவார் - நேற்று

# Tamil Hymn No 263

## HE KNOWS THE WAY

பல்லவி

நான் செல்லும் பாதை என்
நேசர் அறிவாரே
நாசம் அணுகாமல் காப்பாரே

சரணங்கள்

1. மரணப் பள்ளத்தாக்கிலும் நான்
வரும் எத் தீமைக்கும் அஞ்சேன்
கருத்தாய்க் காத்திட வாக்குத் தவறிடா
வல்ல ஓர் தேவன் உண்டெனக்கு - நான்

2. கண்ணீரின் பள்ளத்தாக்கல்லோ - இது
தண்ணீரில்லாப் பாலையன்றோ
கண்ணீரை மாற்றியே சந்தோஷம் பொங்கிடும்
தண்ணீர் தடாகமாய் மாற்றுவார் - நான்

3. பாடுகள் சகித்த இயேசு – அவர்
நடந்த பாதை இதல்லோ
ஓடியே வீரனாம் இயேசுவை நோக்கியே
பாடுவேன் நம்பிக்கையுடனே - நான்

4. மண் வாழ்வின் இன்பம் வெறுத்தேன் - மேல்
விண் வாழ்வின் இன்பத்தைக் கண்டே
துன்பங்கள் மூலமாய்ச் சுத்தரானோருடன்
பொன் நகரம் சேர்ந்து வாழுவேன் - நான்

5. ஆதரவாய் இடைகட்டி – என்னை
ஆனந்தமாயோடச் செய்தார்
ஆவி அச்சாரத்தால் புத்திர சுவிகாரம்
ஆளுகையும் அன்று பெறுவேன் - நான்

6. மங்கள கீதம் முழங்க – சபை
எங்கும் துதிகளைச் சாற்ற
எங்களின் மன்னவன் மங்கிடா நீதியின்
செங்கோலும் ஓங்குமே நித்தியமாய் - நான்

# HIS WONDERFUL NAME

பல்லவி

இயேசு கிறிஸ்துவின் நாமமிதே
இனிமையாமே இன்பமதுவே
ஏழைக்கும் ஆறுதலே

சரணங்கள்

1. நாமம் அதிசயமே தேவதாசரின் புகலிடமே
நானிலந்தனிலே யாவரும் வணங்கிடவே
நாதன் இயேசின் நாமமதையே நன்றியுடன் புகழ்வோம் - இயேசு

2. அளிப்பேன் யாவையுமே என் நாமத்தில் என்றனரே
அழிக்க வலியவனை வல்லமையுண்டதிலே
களிப்போம் வல்ல நாமமதிலே கனிந்தே பாடிடுவோம் - இயேசு

3. நோய்கள் நீக்கிடவும் நவ பாஷைகள் பேசிடவும்
சர்ப்பங்களை எடுக்க சக்தி ஈந்ததுவும்
உத்தமர்கள் போற்றிப் புகழும் கர்த்தரின் நாமமிதே - இயேசு

4. சாவுக்கேதுவான கொடும் நஞ்சதைப் பருகிடினும்
சேதப்படுத்தாதே காக்க வல்லதுவே
நாதன் ஈந்த தைலமெனவே நமக்காய் ஊற்றுண்டதே - இயேசு

5. பாவ விருளதனைப் போக்கும் புண்ணிய நாமமதாய்
பாரில் இறங்கினாரே தேவனின் அன்பிதுவே
இயேசு கிறிஸ்து நேசரிவரே ஆசைக்குகந்தவரே - இயேசு

# Tamil Hymn No 265

## EVEN SO COME LORD

சரணங்கள்

1. ஆசை மணாளனே! ஆமென் நீர் வாருமே
   ஆவி மணாளியும் -- அழைக்கும் ஓசையே

பல்லவி

ஓ! ஓ!! வேகம் வாருமே—எம் கர்த்தனே நீர்
ஆ!ஆ!!ஆவல் பெருகுதே
அல்லேலூயா கீதங்கள் பாடிப் பறந்து செல்வோமே

2. சுத்தப் பிரகாசமாம் தூயரின் நீதியாம்
   சித்திரத் தையலாம் --தேசுடை அணிந்தாள் - ஓ!

3. பிதாவின் நாமமே –நெற்றியில் ஏற்றவள்
   புதிய பாட்டுடன் -- சீயோனில் நிற்கிறாள் - ஓ!

4. குற்றம் குறைகளும் -- மற்றும் கறைகளும்
   அற்ற மகிமையைப் --பெற்ற சபையதோ - ஓ!

5. எப்போ நான் காண்பேனோ? – என் ஆசை ஏறுதே
   பொற்பரன் இயேசுவைக் --கண்டு களிக்கவே - ஓ!

6. பரிசுத்த ஆவியால் - மறுரூபமாகியே
   திரியேக தேவனை - சேவிக்க நித்தியமாய் - ஓ!

# Tamil Hymn No 266

## WHY DELAY

சரணங்கள்

1. தாமதமேனோ அழைக்கிறாரே
ஓ! திரும்பியே வந்திடுவாய் - நீ
பாவத்தின் இன்பம் தள்ளிடுவாய் - இதோ
நாட்களும் சென்றிடுதே

பல்லவி

அழைக்கிறார் - கனிவுடன் - வா
அலையாது இயேசு ஆயனண்டை
நீ மேய்ச்சலைக் கண்டடைவாய்

2. வாழ்வு நிழல் போல் சாய்ந்திடுதே
பாழ் உலகின் மாயையிலே – ஓ!
அழிவே அடுத்து வந்திடுதே – அவர்
அழைப்பையே அறிந்திடுவாய் - அழை

3. சீர்குலைந்தலையும் மானிடரை
நேர் பாதை சேர்த்திடுவார் - ஆ!
பார் உன் மீட்பரின் இரட்சிப்பையே – ஓர்
போதும் நீ இழந்திடாதே - அழை

4. ரோகத்தினாலே வாடுவதேன்?
மரித்தாரே உனக்காக – நீ
விரைவாய் இன்றே அண்டிடுவாய் - ஆம்
பெறுவாய் சுகமதையே - அழை

5. மோட்சத்தின் பாக்கியம் எண்ணிடாயோ
அக்காட்சியைக் கண்டிடாயோ – தாம்
பட்சமாய் உன்னை ஏற்றுக்கொள்ள – நல்
அட்சயன் அழைக்கிறாரே - அழை

# Tamil Hymn No 267

## EVERLASTING GRACE

பல்லவி

தேவ கிருபை என்றுமுள்ளதே
அவர் கிருபை என்றுமுள்ளதே
அவரைப் போற்றி துதித்துப் பாடி
அல்லேலூயா என்றார்ப்பரிப்போம்

சரணங்கள்

1. நெருக்கப்பட்டோம் மடிந்திடாமல்
கர்த்தர் தாம் நம்மைக் காத்ததாலே
அவர் நல்லவர், அவர் வல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே - தேவ

2. சத்துரு சேனை தொடர்ந்து சூழ்கையில்
பக்தனாம் தாவீதின் தேவன் நமக்கு
முன் சென்றாரே, அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே - தேவ

3. அக்கினி சோதனை பட்சிக்க வந்தும்
முட்செடி தன்னில் தோன்றிய தேவன்
பாதுகாத்தாரே, அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே - தேவ

4. காரிருள் போன்ற கஷ்டங்கள் வந்தும்
பாரினில் அவர் என் பாதையில் ஒளியாய்
என்னை நடத்தினார், அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே - தேவ

5. வெள்ளம் போல் நிந்தை மேற்கொள்ள வந்தும்
வீரன் நெகேமியா ஆவியை அளித்தே
திட நம்பிக்கை தைரியமும் ஈந்தாரே
அவர் கிருபை என்றுமுள்ளதே - தேவ

6. நித்திய தேவனாம், சத்திய பரன் தான்
நித்தமும் நம்முடன் இருப்பதாலே
அவர் நல்லவர், என்றும் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளதே - தேவ

# Tamil Hymn No 268

## HIS ETERNAL PURPOSE

பல்லவி

மகிபனையே அனுதினமே
மகிழ்வுடனே துதித்திடுவேன் - தினம்

சரணங்கள்

1. என்னை அன்பில் இணைத்திடவே
கண்டீர் பூவுருவாகு முன்னே
ஜோதியாய் தேவ மகிமையைப் பெறவே
தேவன் என்னைத் தெரிந்தெடுத்ததினால் - மகி

2. தூதராலும் செய்யவொண்ணா
தூய பணியை அற்புதமாய்
தூசி யானும் செய்திடக் கிருபை
தூயன் கிறிஸ்து சொரிந்தனரே - மகி

3. ஜீவியத்தின் போர் முடித்தே
நீதியின் கிரீடம் சூடிடுவேன்
ஜீவன் ஈந்த இயேசு நல் மேய்ப்பர்
ஜோதியின் கிரீடமும் சூட்டிடுவார் - மகி

4. அழைத்தாரே சுவிசேஷத்தினால்
அடைய தேவ சாயலதை
பயத்துடனே பரிசுத்தமதையே
பாரினில் பூரணமாக்கிடுவோம் - மகி

5. ஆவலுடனே காத்திருந்தே
சேவையே புரிவோம் இயேசுவுக்காய்
ஆசை இயேசு மணவாளன் வருவார்
சீயோனில் எம்மைச் சேர்த்திடவே - மகி

# Tamil Hymn No 269

## JESUS MY ALL

சரணங்கள்

1. எந்தன் ஆத்தும நேசரே என் உள்ளமே
உந்தன் அன்பதை நாடிடுதே
உம்மைப் போல் ஒரு நேசரைக் காண்கிலேன் பூவிலே
உயிர் தரும் இன்பமே நீர்

பல்லவி

அல்லேலூயா பாடிடுவேன்
அகமகிழ்ந்தும்மைத் துதித்திடுவேன்
என்னாசையும் நீரே ஜீவனும் நீரே
மன்னா என் மறைவிடமே

2. பெற்ற தாயினும் அன்பு மிகுந்தவரே
உற்ற தந்தையிற் சிறந்தவரே
ஏற்றுக் கொண்டென்னைப் பாரினில் ஆதரவளித்திட
மற்றோர் எனக்கில்லையே - அல்

3. உனக்காகவே யாவையும் செய்திடுவேன்
என வாக்குத்தத்தம் செய்தவர்
எனக்காகவே தன் திரு மைந்தனை ஈந்தவர்
தனதகம் மாற்றுவாரோ? - அல்

4. பாவசாபத்தின் குழியினில் வீழ்ந்துமே நான்
பரிதபிக்கையில் ரோகத்தினால்
பரிவோடென்னைக் கரமதை நீட்டியுயர்த்திடப்
பரன் மனதிரங்கினீரே - அல்

5. திரு ஆலயமாய் எந்தன் காயமதை
உருவாக்கினீர் ஆவியினால்
மறுரூபமாய் ஏகுவேன் ஆகாய மீதினில்
மகிமையின் நாளதிலே - அல்

# Tamil Hymn No 270

## CHRIST HEALS

பல்லவி

அன்புடனே அருகினிலே
அழைக்கிறார் அருள் நிறைவே
தாங்கிடுவார் தயவுடனே
தருணமே தள்ளிடாதே

சரணங்கள்

1. கல்வாரி தனிலே காயங்கள் அடைந்த
கர்த்தராம் இயேசு கனிவுடனே
கலங்குவதேனோ கருணைப் பிரவாகம்
கரமதை நீட்டியே சுகமீவாரே - அன்

2. பாவத்தினாலே சாபத்திற்காளாய்
பாதையே தவறி மாள்கையிலே
பாவத்தைப் போக்கும் பலியாக வந்த
பாவமில்லாத தேவாட்டுக் குட்டி - அன்

3. மரணத்தின் கூரை மரணத்தால் வெல்ல
மனுவாக வந்த மன்னவனார்
மா சாபம் நீக்கச் சாபமதாகி
மானிடர்க்காகவே பிணையானாரே - அன்

4. வார்த்தை யுரைத்தே வாதைகள் தீர்க்கும்
வல்லவர் இயேசு நாமமிதே
வாக்கு மாறாரே போக்குவார் நோயை
வந்திடுமே ஏற்ற நேரமிதே - அன்

5. ஆசைக்கிசைந்த இயேசென்னும் நேசர்
ஆவலுடன் அழைக்கிறாரே
ஆதரை மீதில் ஆறுதல் செய்யும்
அன்பரின் பாதத்தை அண்டிடுமே - அன்

# Tamil Hymn No 271

## JESUS MY LIGHT

சரணங்கள்

1. ஆர்ப்பரித்தென்றும் அகமகிழ்வேனே
   ஆனந்தமாய்ப் பாடுவேன்
   ஆண்டவர் அடியார்க் கருளிய அளவில்லா
   ஆசிகளை நினைந்தே

பல்லவி

நான் புகழ்ந்திடுவேன் அவர் நாமத்தையே
என் ஆவல் தீர நிதம் பாடிடுவேன்
ஒப்பில்லாத நேசரின் திரு நாமம் அரணே
எப்போதும் தங்கும் புகலிடமே

2. கண்மணி போல கடந்த நாட்களிலே
   கருத்தாய்ப் பாது காத்தனரே
   காற்றையும் கடலையும் கடந்து நான் சென்றிட
   கிருபை ஈந்ததினால் - நான்

3. பலவித நாசம் பயங்கர மோசம்
   பலமாய்ச் சோதனை சூழ்கையில்
   பரிசுத்தமாக இப்பாதையில் ஓடிட
   பரனேசு செய்ததினால் - நான்

4. 'திகையாதே, நான் உன் தேவன்' என்றுரைத்தே
   திருவாய் மலர்ந்தென்னைத் தேற்றினாரே
   திசையறியாது தியங்கையில் பாதையில்
   தீபம் என் இயேசு தானே - நான்

5. அன்பரின் இன்ப நாமத்தைப் புகழ
   ஆயிரம் நாவுகள் போதுமோ
   ஆதியும் அந்தமும் ஆச்சரியமேயிவர்
   நீதியின் சூரியனே - நான்

# Tamil Hymn No 272

## KNOCKING AT THE DOOR

பல்லவி

வாசலண்டை நின்று ஆசையாய்த் தட்டும்
நேசர் இயேசுவுக்குன் னுள்ளம் திறவாயோ ?

அனுபல்லவி
பாவியை ஒருபோதும் தள்ளாத நேசர்
வாவென்று உன்னை அழைக்கிறாரே - வாச
சரணங்கள்

1. ஆதரிப்பார் ஆருமில்லையென்றெண்ணி
ஆதரை மீதனில் அலைந்திடுவாயோ ?
காணாத ஆட்டைத் தேடி வந்த மேய்ப்பர்
கண்டுன்னை மந்தையிற் சேர்த்திடுவார் - வாச

2. அற்ப வாழ்வை நித்திய வாழ்வு என்றெண்ணித்
தற்பரன் தயவைத் தள்ளிடலாமோ ?
நினையாத நேரம் மரணம் சந்தித்தால்
நித்தியத்தை எங்கு நீ கழிப்பாய் ? - வாச

3. பாவத்தினால் சாப ரோகத்தால் தொய்ந்து
மாயையில் ஆழ்ந்து மடிந்திடுவானேன் ?
பாவத்தைப் போக்கிடும் தூய உதிரத்தின்
ஜீவ ஊற்றில் மூழ்கி மீட்புறாயோ ? - வாச

4. மனம் மாறி மறுபடி பிறந்திடாயாகில்
மகிபரின் ராஜ்ஜியம் காணக்கூடுமோ ?
பிறந்தாலோ ஜலத்தாலும் ஆவியாலும் மெய்யாய்
பிரவேசிப்பாய் தேவ ராஜ்ஜியத்தில் - வாச

5. வழியும் சத்தியமும் ஜீவனும் இயேசு
வாசலும் மேய்ப்பனும் நாதனும் இயேசு
இயேசு வல்லால் வேறு இரட்சிப்பு இல்லையே
இரட்சண்ய நாள் இன்றே வந்திடாயோ - வாச

# Tamil Hymn No 273

## JESUS PRAYER IN GETHSEMANE

பல்லவி

பாரீர்! கெத்செமனே பூங்காவிலென் நேசரையே
பாவி யெனக்காய் வேண்டுதல் செய்திடும்
சத்தம் தொனித்திடுதே

சரணங்கள்

1. தேகமெல்லாம் வருத்திச் சோகமடைந்தவராய்த்
தேவாதி தேவன் ஏக சுதன் படும் பாடுகள் எனக்காயே - பாரீர்!

2. அப்பா இப்பாத்திரமே நீக்கும் நின் சித்தமானால்
எப்படியுமும் சித்தம் செய்ய என்னைத் தத்தம் செய்தேன்
என்றாரே

3. இரத்தத்தின் வேர்வையாலே மெத்தவுமே நனைந்தே
இம்மானுவேலன் உள்ளமுருகியே வேண்டுதல் செய்தனரே - பாரீர்!

4. மும்முறை தரைமீதே தாங்கொண்ணா வேதனையால்
முன்னவன் தாமே வீழ்ந்து ஜெபித்தாரே பாதகர் மீட்புறவே - பாரீர்!

5. அன்பின் அருள் மொழியால் ஆறுதல் அளிப்பவர்
துன்ப வேளையில் தேற்றுவாரின்றியே நொந்து அலறுகின்றார் - பாரீர்!

6. என்னையும் தம்மைப் போல மாற்றும் இம்மா நேசத்தை
எண்ணி யெண்ணியே உள்ளம் கனிந்து நான் என்றும்
புகழ்ந்திடுவேன் - பாரீர்!

# Tamil Hymn No 274

## THE UNSEARCHABLE LOVE

பல்லவி

மதுர கீதமே ஆ! ஆ! ஆ!
மகிழ்ந்து பாடுவோம்

சரணங்கள்

1. அளவில்லாத அன்பின் நல் உருவம்
அன்பர் இயேசுவிலே தினம் கண்டோம்
அருளினாலே ஆனந்தமாக
ஆர்ப்பரித்தே பாடுவோம் - மதுர

2. ஆதிலோகமதின் அஸ்திபாரம்
மேவு முன்னதாக நம் நாமம்
தாவி நினைவாய் சீயோனிலே
ஜீவனுக்காய் வரைந்ததால் - மதுர

3. பாவியாய் உளை சேற்றினில் அமிழும்
வேளை யெம்மைத் தாமரவணைத்தே
ஜீவனூற்றியே சாவை நீக்கியே
தேவ சுதராய்ச் சேர்த்ததால் - மதுர

4. ஜீவனுள்ள கற்களாய் அவரில்
சேர்த்துக் கட்டிடச் சீயோன் நகரில்
அனுக்ரகித்தார் ஆவியாலே
அபிஷேகித்தார் ஆனந்தம் - மதுர

5. கீதம் பாடிட வேறொன்று மில்லையே
நாதன் இன்ப நாமமதல்லால்
வேதமும் ஜீவ நாதமும் பிர
சாதமும் இயேசு வானதால் - மதுர

# Tamil Hymn No 275

## MY ANCHOR SECURE

பல்லவி

சீயோனிலே என் திட அஸ்திபாரம் கிறிஸ்துவே - அவர்
நான் என்றும் நம்பும் கன்மலை

சரணங்கள்

1. கலங்கிடுவேனோ? பதறிடுவேனோ?
கர்த்தரில் விசுவாசம் இருக்கையிலே
அசையா என் நம்பிக்கை நங்கூரமே
இயேசுவில் மாத்திரமே - சீயோ

2. புயலடித்தாலும் அலைமோதினாலும்
எவர் எனக்கெதிராய் எழும்பினாலும்
எனக்கு எட்டாத உயரத்திலே
எடுத்தவர் நிறுத்திடுவார் - சீயோ

3. வியாதினாலே காயம் வருந்தி
வாடியே மரண நிழல் சூழினும்
விசுவாசத்தின் கரத்தாலவர்
வாக்கை நான் பற்றிடுவேன் - சீயோ

4. மா பரிசுத்த விசுவாசத்தாலே
மா பரிசுத்த ஸ்தலம் ஏகிடவே
திரை வழியாம் தம் சரீரத்தினால்
திறந்தாரே தூய வழி - சீயோ

5. நான் விசுவாசிப்போர் இன்னாரென்றறிவேன்
என்னையே படைத்திட்டேன் அவர் கரத்தில்
முடிவு வரை என்னை நடத்திடுவார்
முற்றுமாய் இரட்சிப்பாரே - சீயோ

# Tamil Hymn No 276

## THANKFULNESS

சரணங்கள்

1. ஏகோபித்து பாடிடுவோம்
இம்மானுவேலனின் நாமத்தையே
ஏத்திடுவோம் துதி சாற்றிடுவோம்
இன்னோர் புதியாண்டு ஈந்ததினால்

பல்லவி

அல்லேலூயா! அன்பருக்கே
ஆனந்த நாதங்கள் ஏறெடுத்தே
ஆவலுடன் தூயராமவரை
ஆர்ப்பரிப்போம் நன்றியால் நிறைந்தே

2. பர்வதம் மாறினும் குன்றுகளும்
தன்னிலை விட்டகன்றேகிடினும்
மன்னா நின் கிருபை என்னை விட்டு
மாறிடா தென்றும் தற்காத்ததினால் - அல்லே

3. கொண்டல் எழுந்தலை மோதிடவே
கண்டமிழ்ந்த சீஷன் பேதுருவை
மீண்டெடுத்த அன்பின் விண்கரத்தை
வேண்டி நின்றே துதி பாடிடுவோம் - அல்லே

4. மாராவின் நீரை மதுரமாக்கும்
மா பெரும் வல்லமையால் நிறைத்தே
காசினியில் கசப்பான என்னை
தேனே இனிமை செய் தற்பரனை - அல்லே

5. வெள்ளமாய் நிந்தைகள் ஏறி எம்மை
மேல் விழுந்தே அழிக்காமல் இன்ப
உள்ளமதில் வைத்து காத்த அன்பின்
வள்ளலாம் இயேசுவை வாழ்த்திடுவோம் - அல்லே

6. எக்காளத்தின் தொனி தான் முழங்க
எண்ணிலா தூதர்களோடு வரும்
மன்னவனாம் இயேசு தன் முகத்தின்
மா மகிமை அன்று நாம் பெறுவோம் - அல்லே

# Tamil Hymn No 277

## THE DAY SPRING FROM ON HIGH

பல்லவி

அல்லேலூயா! அல்லேலூயா!
அல்பகலாய் நாம் ஆர்ப்பரிப்போம்

சரணங்கள்

1. ஆதரையில் அவர் பாதை தனில்
ஆதரவாய்க் கண்ணோக்கியதால்
அனுதினமும் பாடிடுவோம்
அன்பரின் கிருபையதை நினைந்தே

2. அகிலம் தரா சமாதானமருள்
அருணோதயம் நம்மைச் சந்தித்ததால்
ஆவலுடன் ஸ்தோத்திரிப்போம்
ஆருயிர் இயேசுவின் அடிபணிந்தே

3. தேவனின் புத்திரராகிடவே
தேவன்பை உள்ளத்தில் ஊற்றியதால்
துதித்திடுவோம் தூயவராய்த்
துங்கவன் இயேசுவை நிதம் நினைந்தே

4. சோதனை பாடுகள் நிந்தைகளில்
சோர்ந்திடா தெமக்குப் பெலனளித்தே
தாங்கினாரே தன் கரத்தால்
தற்பரன் இயேசுவை நிதம் நினைந்தே

5. வருகையின் நம்பிக்கையால் மகிழ்ந்தே
வாழ்ந்திட எமக்குக் கிருபையீந்தார்
எந்த வேளை வந்திடினும்
சந்திக்க ஆயத்தமாகிடுவோம்

# Tamil Hymn No 278

## GRATITUDE

பல்லவி

ஆத்துமமே ! என் உள்ளமே!
ஆண்டவரை நீ தினம் துதிப்பாய்
அன்பினால் உன்னை அழைத்தவரை

அனுபல்லவி

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாய்
நன்மைகளீந்துன்னை வளர்த்தவரே - ஆத்து

சரணங்கள்

1. ஜீவனைக் கொடுத்துன்னை மீட்டவரே – தூத
ஜீவ போஜனம் சொரிந்தீந்தவரே
ஜீவனுள்ளோர்க்கு நீ சாட்சியாய் நின்றிட
ஜீவனால் நிறைந்துன்னைக் காத்தவரே - ஆத்து

2. நடத்திய வழிகள் நோக்கிடுவாய் - அவர்
நல்கிய கிருபைகள் நினைத்திடுவாய்
ஆபத்தில் அடைக்கலம் ஆறுதல் இன்னலில்
அளித்தவர் அருமை இயேசுவல்லோ! - ஆத்து

3. பார்வோனின் சேனைகள் தொடர்ந்த போதும் - உயர்
யோர்தானின் அலைகள் புரண்ட போதும்
அக்கினி மேக ஸ்தம்பமாய் நின்றவர்
அரணும் உன் கேடகமாயிருந்தார் - ஆத்து

4. தூதரும் அறியாத தூதுகள் ஈந்துன்னைத்
தாசனாய் உயர்த்தினார் தாரணியில்
பாதகனாய் அலைந்தே அழிந்த உன்னைத்
தேடிய கரங்கண்டு வாழ்த்திடுவாய் - ஆத்து

5. ஆவியின் வரங்கள் ஜொலித்திடவே – புது
ஜீவனின் ஊற்றுகள் சுரந்திடவே
சுவிசேஷக் கொடியும் பறந்திடவே உன்னில்
ஜெயதொனி கீதங்கள் முழங்கிடவே - ஆத்து

# Tamil Hymn No 279

## HE THAT KEEPETH ISRAEL

பல்லவி

எனக் கொத்தாசை வரும் பர்வதம் நேராய்
என் கண்களை ஏறெடுப்பேன்

சரணங்கள்

1. வானமும் பூமியும் படைத்த
வல்ல தேவனிடமிருந்தே
எண்ணுக் கடங்கா நன்மைகள் வருமே
என் கண்கள் ஏறெடுப்பேன் - என

2. மலைகள் பெயர்ந்த கன்றிடினும்
நிலைமாறி புவியதிர்ந்திடினும்
மாறிடுமோ அவர் கிருபை யெந்நாளும்
ஆறுதல் எனக்கவரே - என

3. என் காலைத் தள்ளாட வொட்டார்
என்னைக் காக்கும் தேவன் உறங்கார்
இஸ்ரவேலைக் காக்கும் நல் தேவன்
இராப் பகல் உறங்காரே - என

4. வலப் பக்கத்தில் நிழல் அவரே
வழுவாமல் காப்பவர் அவரே
சூரியன் பகலில் சந்திரன் இரவில்
சேதப் படுத்தாதே - என

5. எத்தீங்கும் என்னை அணுகாமல்
ஆத்துமாவைக் காக்கு மென் தேவன்
போக்கையும் வரத்தையும் பத்திரமாகக்
காப்பாரே இது முதலாய் - என

# Tamil Hymn No 280

## ONWARD TO ZION

பல்லவி

சீயோனின் பாதையில் சேர்ந்திடும் வீரரே
செல்லுவீரே அதிவேகமாய்

சரணங்கள்

1. காரிருள் பூமியை மூடிடுதே
கர்த்தனின் வருகை சமீபமாகுதே
காத்து நிற்கும் தேவ சேயராம் உம்மிலே
கர்த்தரே தன் ஒளி வீசுவார் - சீயோ

2. கொந்தளித்தே ஜனம் மாறிடுதே
சந்ததமாய் நிந்தைகள் ஏறிடுதே
சொந்தமாய் மீட்டவர் அன்பினால் தந்த மா
சந்தோஷமாம் நதி மூழ்கியே - சீயோ

3. காசினியில் உன்னைத் தாய் மறப்பாளோ
ஆயினும் எந்நாளும் நான் மறந்திடேன்
கைத்தலம் தன்னிலும் கண்மணி போலுமே
காத்திடுவேனென்றார் வாக்கதே - சீயோ

4. ஜோதியாய் உன் நீதி சூரியன் போலும்
ஜொலிக்குமே இரட்சிப்பு தீவட்டி போலும்
கீதமும் நாதமும் கேட்டிட உன்னிலே
ஆதிபரன் இயேசு ஆக்குவார் - சீயோ

5. சீயோன் கோபுரம் ஒளி வீசிடும் நகர்
நேயரே அதோ நீர் நோக்கிடுவீரே
தூதர்கள் கோடியாய்த் துதித்திடும் தொனியைக்
கேட்டு நீர் செல்லுவீர் ஆவலாய் - சீயோ

# Tamil Hymn No 281

## SECOND COMING

பல்லவி

இயேசு மகா ராஜன் வான – மேக ரதம் மேல் வரும் நாள்
ஆவலுடன் நோக்கிடுவோம் - ஆயத்தமாய்க் காத்திருப்போம்

சரணங்கள்

1. தூதரார வாரமுடன்
தேவ எக்காளம் தொனிக்க
தேவனாம் பிதா தாமும் ஆவலாய்க்
காத்து நிற்கிறார் அந்த நாளினாய் - இயேசு

2. கல்லறையில் நின்று சுத்தர்
வல்லமையால் தாம் எழும்ப
கண்ணிமை நேரம் மண்ணில் ஜீவிப்போர்
விண்ணில் மாறுவோர் அண்ணல் போலவே - இயேசு

3. ஆதி மேன்மை காத்தவராய்
அன்பில் பரிசுத்தருமாய்
அருள் நிறைவுடன் கறை திரையில்லா
மகிமை சேர் மணவாட்டியாகுவோம் - இயேசு

4. தேவ புத்திரர் தோன்றுதற்காய்
ஞாலமெல்லாம் தான் தவிக்க
பூர்ணர் யாவரும் பறந்திடுவாரே
புலம்பி வீழ்வாரே பூவிலாயினோர் - இயேசு

5. சீயோன் ராஜன் சுத்தர்கட்கு
ஜெய கிரீடங்கள் தான் தரிப்பார்
அந்த நாளில் நீ அங்கிருப்பாயோ?
அன்பர் உன்னையே அழைத்து நிற்கிறார் - இயேசு

# Tamil Hymn No 282

## THE MIGHTY ONE

சரணங்கள்

1. கர்த்தரைப் பாடியே போற்றிடுவோமே
கருத்துடன் துதிப்போம் இனிய நாமமதை
கடலின் ஆழம் போல் கருணையோடிரக்கம்
கரையில்லை அவரன்பு கறையற்றதே

பல்லவி

இயேசு நல்லவர் இயேசு வல்லவர்
இயேசுவைப்போல் வேறு நேசரில்லையே

2. கொடுமையோர் சீறல் பெருவெள்ளம் போல
அடிக்கையில் மோதியே மதில்களின் மீதே
பெலனும் இவ்வேழைக்கும் எளியோர்க்கும் திடனாய்
வெயிலுக்கு ஒதுங்கும் விண் நிழலுமானார் - இயேசு

3. போராட்டம் சோதனை நிந்தை அவமானம்
கோரமாய் வந்தும் கிருபையில் நிலைக்க
தேவ குமாரனின் விசுவாசத்தாலே நான்
ஜீவித்து சேவிக்கத் திடமளித்தார் - இயேசு

4. கல்லும் முள்ளுகளுள்ள கடின பாதையிலே
கலக்கங்கள் நெருக்கங்கள் அகமதை வருத்த
எல்லையில்லா எதிர் எமக்கு வந்தாலும்
வல்லவர் இயேசு நம்முன் செல்கிறார் - இயேசு

5. சீயோனைச் சிறப்புடன் சேர்த்திட இயேசு
சீக்கிரம் வரும் நாள் நெருங்கி வந்திடுதே
முகமுகமாகவே காண்போமே அவரை
யுகாயுகமாகவே வாழ்ந்திடுவோம் - இயேசு

# Tamil Hymn No 283

## HE CONQUERED DEATH

சரணங்கள்

1. அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா கீதம் பாடிடுவோம்
வல்லவர் இயேசு மரித்து உயிர்த்து
மரணத்தை வென்றதினால்

பல்லவி

அல்லேலூயா அல்லேலூயா
வெற்றி கொண்டார்ப்பரிப்போம்
அல்லேலூயா அல்லேலூயா
முற்றுமாய் ஜெயித்தாரே

2. கல்லறையும் திறந்திட
காவலாளரும் பயந்திட
சொல்லியபடியே தாம் உயிர்த்தெழுந்தார்
அல்லேலூயா ஆனந்தம் - அல்லே

3. இடிந்ததே விழுந்ததே
இடைநின்ற பகைச் சுவரதே
தேவனின் சந்நிதி சேர்ந்திடவே நாம்
திரையும் கிழிந்ததே - அல்லே

4. புதியதோர் பாதையையும்
வகுத்தாரே அவர் மரணத்தால்
பாதாளம் வரையும் சென்றவர் எழுந்தார்
வேதாளம் நசுங்கவே - அல்லே

5. மரித்தும் நான் ஜீவக்கிறேன்
பரிகரித்தேன் சாவை என்றாரே
உலகின் முடிவு வரையும் இருப்பேன்
உங்களோடென்றனரே - அல்லே

# Tamil Hymn No 284

## HE BELIEVED EVEN ME

சரணங்கள்

1. என்னையும் இயேசுவே விஸ்வாசித்தீர்
அன்பினாலே தேடிக் கண்டெடுத்தீர்
பாரினில் பாவத்தில் ஆழ்ந்த வேளை
பார்த்தீர் கடைக் கணித்தே அணைத்தீர்

பல்லவி

ஆ! இயேசுவே என்றென்றும் நேசித்தீரோ
நீசனென்னையும் விஸ்வாசித்தீரோ - இம்
மாய உலகத்தில் மாண்ட என்னை
மண்ணின் சாயல் நீக்கி மாற்றிடவோ

2. ஆபிரகாமை அழைக்கு முன்னே
அற்புதமாம் அவன் சந்ததியை
மேவி விஸ்வாசித்தே ஓர் கானானை
மேதினி மீதில் உண்டாக்கினீரே - ஆ!

3. யாக்கோபின் சந்ததி அழியாது
காத்திடவே ஞானக் கன்மலையாய்
மேய்ப்பராய் நின்றவர் தாகம் தீர்த்தே
தாய் போல் நடந்து விஸ்வாசித்தீரே - ஆ!

4. நான் உம்மைக் காணுமுன் நீர் கண்டீரே
நான் அல்ல நீரே விஸ்வாசித்தீரே
மேலோகில் உம் அன்பர்க்காய் வைத்தவை
ஏழை யானும் பெறவே அருள்வீர் - ஆ!

5. ஆனந்தமே பரலோகத்திலே
ஆச்சரியமே பரன் மீட்டதினால்
கானங்கள் பாடிக் களிப்புடனே
கர்த்தரை நித்தம் விஸ்வாசிப்பேனே - ஆ!

# Tamil Hymn No 285

## CALVARY'S GLIMPSE

பல்லவி

அதோ கல்வாரியின் காட்சி கண்டிடுதே - இப்போ
உந்தன் உள்ளம் உருகிடாதோ

சரணங்கள்

1.பாவ கோலமாகத் தொங்குகிறார் - நீசனான
உன்னை அவர் மீட்டிடவே - பாவ
சாபம் நீக்கிடவே ரோகம் ஏற்றிடவே
உன்னை அழைக்கிறாரே - அதோ

2.தாக மேறியவர் வாடுகிறார் - உன்னைத்
தானே அன்பாய் நோக்குகிறார் - ஆவலாய்
அவரின் தாகம் தீர்த்திடவே நீயும்
தேடி வந்திடாயோ - அதோ

3.தேகமெல்லாம் காயமாகியதே - உந்தன்
ரோகமேற்றதினாலல்லவோ - பாசமாய்
அவர் பாதத்தை நாடியே வருவாய்
ஆவலாய் அழைக்கிறார் - அதோ

4.பாதகரின் கொடும் துரோகமதை - என்
பிதாவே மன்னியு மென்றுரைத்தார் - பொல்லாக்
காதகனாம் உன்னை மீட்டுக் கொள்வதற்காய்
கர்த்தன் இயேசு தொங்குகிறார் - அதோ

5.பூமி எங்கும் இருள் மூடியதே - தந்தை
தாமும் தம் வதனம் மறைத்தனரே - உன்னைத்
தேவ ஆசனத்தில் ஏற்றுக் கொள்வதற்காய்த்
தாமே சம்மதித்தாரே - அதோ

# Tamil Hymn No 286

## ZION’S SONG OF VICTORY

பல்லவி

கேட்டிடுதே ஜெயக் கீத தொனி
தேவ ஆலோசனை நிறைவேறும் வேளையே

சரணங்கள்

1. ஆதரையில் பரன் இயேசுவைக் காணவே
ஆவலாய்த் தூயர்கள் ஏகமாய்த் தவிக்க
அண்ணலாம் இயேசு ஆர்ப்பரிப்போடு
ஆயிரமாயிரம் தூதர்கள் சூழ
விண்ணினின்றிறங்கியே வந்திடுவார் - கேட்

2. கன்னிகையாகவே கறை திரை யில்லாதே
கற்புடனே தன்னைக் காத்து நிற்கும் சபை
காந்தையின் கண்ணீர் யாவும் துடைக்க
காயங்கள் பட்ட தங்கக் கரத்தால்
காந்தனாம் இயேசுவே வந்திடுவார் - கேட்

3. ஆரிவர் சீயோன் அம்மலை மேல் நிற்போர்
பாரிடம் நடுங்கிட மாதிரம் வென்றவர்
இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்
ஆட்டுக்குட்டியின் ஆத்தும நோவின்
ஆதிப்பலனாய் மீட்கப்பட்டோர் அன்றோ - கேட்

4. சீயோனில் பூரண சுத்தர்கள் நிற்கிறார்
ஜோதியாய்த் தேவ ஆட்டுக்குட்டியுடன்
பாரில் பிதாப் போல் ஜீவித்ததாலே
யாரும் அறியாப் பாட்டினைப் பாடிப்
பிதாவின் முகமவர் கண்டிடுவார் - கேட்

# Tamil Hymn No 287

## PRAISING

பல்லவி

கர்த்தராம் இயேசுவைத் துதிப்போம்
கரம் குவித்தவரை இன்றென்றுமே

சரணங்கள்

1. சென்ற நாட்களிலெல்லாம் சீர்கரத்தாலே
   சேர்த்தவர் கண்மணி போல் அணைத்தாரே
   திருப்பத மலரென்றும் துதித்திடுவோம் - கர்த்

2. சோதனையாலுள்ளம் சோர்ந்திட்ட வேளையில்
   சொரிந்தனரே பெலன் கிருபையில் நிலைக்க
   தூயனைத் துதித்தென்றும் வாழ்த்திடுவோம் - கர்த்

3. பாதையில் பாடுகள் பல்கிய நேரத்தில்
   ஆதரித்தாரவர் வார்த்தையின் பெலத்தால்
   சிநேகத்தின் ஆழத்தை நினைத்திடுவோம் - கர்த்

4. பாரங்களாலுள்ளம் பதைத்திட்ட வேளையில்
   ஆற்றினாரே அன்பின் தூதுகள் அளித்தே
   அண்ணலைத் துதித்து நாம் பாடிடுவோம் - கர்த்

5. தேற்றுவாரின்றியே தியங்கின வேளையில்
   தாயினும் மேலவர் ஆறுதலளித்தார்
   தந்திடுவோம் துதி என்றென்றுமே - கர்த்

6. நானுனக்காய் யுத்தம் செய்திடுவே னென்று
   நவின்றவர் எந்தன் கரம் பிடித்தாரே
   நாதனை என்றும் நாம் துதித்திடுவோம் - கர்த்

# Tamil Hymn No 288

## BIRTH OF CHRIST

சரணங்கள்

1. தேவதேவன் பாலகனாய்த்
தேவ லோகம் துறந்தவராய்
மானிடரின் சாபம் நீக்க
மாநிலத்தில் அவதரித்தார்

பல்லவி

அல்லேலூயா! அல்லேலூயா!
அற்புத பாலகன் இயேசுவுக்கே

2. பரம சேனை இரவில் தோன்றி
பாரில் பாடி மகிழ்ந்திடவே
ஆ நிரையின் குடில் சிறக்க
ஆதவனாய் உதித்தனரே - அல்லே

3. ஆயர் மனது அதிசயிக்க
பேயின் உள்ளம் நடுநடுங்க
தாயினும் மேல் அன்புள்ளோராய்
தயாபரன் தான் அவதரித்தார் - அல்லே

4. லோகப் பாவம் சுமப்பதற்கோ
தாகம் தீர்க்கும் ஜீவ ஊற்றே
வேதம் நிறைவேற்றுதற்கோ
ஆதியாக அவதரித்தீர் - அல்லே

5. தாரகையாய் விளங்கிடவோ
பாரில் என்னை நடத்திடவோ
ஆருமில்லா என்னைத் தேடி
அண்ணலே நீர் ஆதரித்தீர் - அல்லே

# Tamil Hymn No 289

## CONSECRATED MINISTRY

சரணங்கள்

1. ஏசுவின் ஊழியம் செய்திட யாவரும்
ஏகமாய்ச் சேர்ந்து இறங்கிடுவோம்
சந்தோஷக் கீதங்கள் பாடிக்கொண்டே நாமும்
சகித்திடுவோம் சிலுவை

பல்லவி

பாக்கியமே பெரும் சிலாக்கியமேயிது
ஊக்கமாய் ஊழியம் செய்திடுவோம்
நோக்கியே செல்லுவோம் நித்தமும் இயேசுவை
வாக்கவர் ஈந்தனரே

2. நாடும், நகரமும், வீடும், கலை, செல்வம்,
தாயும், தந்தையும், சகோதரரும்
உன்னதனுக்காய் வெறுத்தவர் மாத்திரம்
உண்மை அப்போஸ்தலரே - பாக்

3. நரிகளுக்கும் பறவைகளுக்குமோர்
தங்கி தாபரிக்கத் தலமுண்டே
தலை சாய்த்திடவும் நாதன் இயேசுவுக்கோ
தலமில்லை பூவிலே - பாக்

4. கஷ்டமோ நஷ்டமோ நிந்தைகளோ நிதம்
துஷ்டரால் நேரும் கொடும் விபத்தோ
பஞ்சம் பசி தாகம் ஏது அடைந்தாலும்
சஞ்சலம் நாம் அடையோம் - பாக்

5. நானெங்கிருப்பேனோ அங்கிருப்பாரவர்
நானிலத்தில் எந்தன் சேவை செய்தோர்
நான் வரும் நாளில் அவர்க்குப் பிரதிபலன்
நல்குவேன் என்றனரே - பாக்

# Tamil Hymn No 290

## JOY OF HEAVEN

பல்லவி

ஆஹா என்ன இன்பம் பரலோக இன்பம்
இன்ப இயேசு அளித்தனரே
அளவிற்கடங்கா புத்திக்கும் எட்டிடா
அன்பைக் கூற நாவும் போதுமோ

சரணங்கள்

1. நீசத் துரோகி எந்தனைப் பாசமாய் ஏற்றீரோ நீர்
   பாவ உளையினின்றே தூக்கி எடுத்தீரோ நீர் - ஆஹா

2. நாச புரி நோக்கியே விரைந்து சென்ற என்னை
   பாசம் வைத்தேன் உந்தனில் என்று கூவி அழைத்தீரோ நீர் - ஆஹா

3. நெரிந்த நாணல் என்னை முறிந்திடும் தருணம்
   பரிந்து பேசி அன்பால் நிலையாய் நிறுத்தினீரே - ஆஹா

4. எச்சரிப்பின் சத்தத்தைத் தள்ளி விட்ட போதிலும்
   அன்பின் சவுக்கடியால் சேர்த்தன்பாய் ஆதரித்தீர் - ஆஹா

5. காரிருள் சூழும் வேளை கலங்கித் தவிக்கையில்
   காத்து நீர் என்னைத் தேற்றிக் கருத்தாய் ஆதரித்தீர் - ஆஹா

6. பிராண நாதா உந்தனை என்று நான் கண்டிடுவேன்
   ஆருயிர் நேசா உம்மைக் காண ஆசை பொங்குதே - ஆஹா

7. அழைப்பின் சத்தம் கேட்க நாட்கள் அதிகமாமோ
   நேசர் மார்பில் சாய்ந்திட வாஞ்சை பெருகிடுதே - ஆஹா

8. ஆகாய மேகந்தனில் சேர்ந்திடும் நேரந்தனில்
   ஆனந்தம் ஆனந்தமே என்றென்றும் ஆனந்தமே - ஆஹா

# Tamil Hymn No 291

## DIVINE REST

சரணங்கள்

1. சர்வ வல்லவரைப் போற்றிப் பாடுவோம் - நாம்
போற்றிப் பாடுவோம் - நாம் இன்றுமென்றுமாய்
சென்ற நாளெல்லாம் நம்மைக் காத்திட்டாரே
சர்வ வல்லவரைத் துதித்திடுவோம்

பல்லவி

எல்லாக் கனம் மகிமையும் அவர்க்கே
நாம் செலுத்திடுவோம் நாம் செலுத்திடுவோம்
எல்லாத் துதிக்கும் நல் பாத்திரரை
நாம் சேர்ந்து போற்றிடுவோம்

2. பாவப் பாரத்தால் இளைத்திருந்த என்னைப்
பரன் தேடினீரோ என்னைத் தேற்றவே
பூவில் எங்கும் காணாப் பேரின்ப
இளைப்பாறுதலைப் பெற்றிடச் செய்தீர் - எல்லா

3. மாய லோக அன்பில் மாண்டிருந்த என்னை
மா தயவால் மீட்டுக் கண்டெடுத்தீரே
மெல்கிசேதேக்கின் அபிஷேகத்தினால்
எந்தன் உள்ளம் இளைப்பாறச் செய்தீரே - எல்லா

4. நிந்தை பரிகாசம் பாடு சகித்தோராய்ப்
பாளயப் புறம்பே தள்ளப்பட்டோராய்
நம் பிதாவின் சித்தம் செய்திடவே
இளைப்பாறுதல் நமக்கீந்தனரே - எல்லா

5. யோர்தானைப் போலத் துன்பம் எதிர்த்தாலும்
யோசுவாவின் தேவன் நம்மோடிருப்பதால்
யோர்தானின் கற்கள் நின்றது போல்
நிற்போம் இளைப்பாறித் தைரியமாய் - எல்லா

6. சீயோன் ராஜா வானில் வேகம் வருவதால்
அல்லேலூயா பாடி ஆர்ப்பரிப்போமே
அன்பர் இயேசு நேசர் நமக்காய்
ஆவலோடு எதிர் நோக்கி நிற்கிறார் - எல்லா

# Tamil Hymn No 292

## THE MOST HOLY NAME

பல்லவி

இயேசுவின் நாமத்திலே
விசுவாசம் வைத்திடுவார்
நாசம் அடையாது
நித்திய ஜீவன் பெற்றென்றும் வாழ்ந்திடுவார்

சரணங்கள்

1. வானத்தின் கீழே பூமியின் மேலே
வல்லவர் பெயரே யல்லால்
வேறில்லை மாளும் மாந்தரை மீட்க
வெற்றி தரும் அவர் திருப்பெயரே - இயேசு

2. வான்தலம் துறந்து பார்தலம் வந்தே
வன் கொலையாகிடவும்
ஆதாமின் ஏதம் யாவும் அகற்ற
அன்னையின் ஆவியில் வந்த பெயரே - இயேசு

3. ஊற்றுண்ட தைலம் இயேசுவின் நாமம்
உள்ளத்தை வென்றிடுமே
ஊழியம் செய்ய ஜீவிக்க அவர்க்காய்
ஊக்கமே அளித்திடும் திருப்பெயரே - இயேசு

4. பேயையும் துரத்தும் நோயையும் அகற்றும்
யாவையும் அளித்திடுமே
சோர்ந்திடும் வேளை தாங்கிடும் நம்மை
சொந்தமெனக்கவர் திருப்பெயரே - இயேசு

5. சிலுவையைச் சகித்து மூலைக்கல்லாகி
சீயோனில் நிற்கும் பெயரே
மூவுலகோரின் முழங்கால்கள் யாவும்
முடங்கச் செய்திடும் திருப்பெயரே - இயேசு

# Tamil Hymn No 293

## THE GREAT HIGH PRIEST

சரணங்கள்

1. கிருபை இரக்கம் நிறைந்தவோர்
   கிருபாசனம் ஆ! தோன்றிடுதே
   தருணம் ஏதும் என்கிலும் நல்ல
   சகாயம் பெற்றிட ஏற்றதுவே

பல்லவி

கிருபையே பெருகுதே
கல்வாரியினின்றும் பாய்ந்திடுதே
என்னுள்ளம் நன்றியால் பொங்கி வழியுதே
என்ன என் பாக்கியமிதே

2. நம்மைப்போலவே சோதிக்கப்பட்டும்
   நாதனோர் பாவமுமற்றவராய்
   நாளும் நம் குறைகள் கண்டுருகும்
   நல்ல ஆசாரியர் நமக்கண்டே - கிருபை

3. நம் பெலவீனத்தில் அவர் பெலன்
   நல்கிடுவார் பரிபூரணமாய்
   நாடுவோமே மாறாக் கிருபையை
   நமக்காயே அவர் ஜீவிப்பதால் - கிருபை

4. வானங்களின் வழியாய்ப் பரத்தில்
   தானே சென்ற இயேசுவாமெமது
   மா பிரதான ஆசாரியரைப்
   பற்றிடுவோம் நோக்கி நம்பிக்கையை - கிருபை

5. பிதாவண்டை சேரும் சுத்தருக்காய்
   சதா பரிந்து பேசியே நிற்போர்
   இதோ எம்மையே முற்று முடிய
   இரட்சிக்க வல்லமை யுள்ளவரே - கிருபை

# Tamil Hymn No 294

## SECOND COMING

பல்லவி

காகளத்தொனி வானில் முழங்கிடவே
காத்திருக்கும் சுத்தர் பறந்திடுவார்

சரணங்கள்

1. இயேசு தான் மேகத்தில் தோன்றிடும் நாள்
என்ன பேரின்பம் தேவ தாசருக்கு
ஆனந்தம் பொங்கியே அன்பராம் இயேசுவின்
இன்ப முகம் முத்தம் செய்திடுவோம் - காக

2. பாரில் பலியாய் ஜீவன் வைத்தோர்களாய்
சொல்லொண்ணாப் பாடுகள் சகித்தவராய்
தியாகத்தின் மேன்மையைப் பயத்துடன் நாம்
காத்ததால் தேவராய் மாறிடுவோம் - காக

3. கன்மலை வெடிப்பினில் உத்தமியாய்
கண் விழிப்புடன் ஜெப வாஞ்சையோடு
கறை திரை இல்லா மணவாட்டியாக
கற்புடன் இன்பர் அன்பைக் காத்துக்கொள்வோம் - காக

4. சீயோனின் காந்தையைச் சேர்த்திடவே
சிங்காசனத்தில் தம்மோடாள்வதற்காய்
சீக்கிரம் வருவேனென்றுரைத்தவரைச்
சேர்ந்திடுவோம் நொடிப் பொழுதினிலே - காக

# Tamil Hymn No 295

## WHEN THE BRIDEGROOM APPEARS

பல்லவி

நவ எருசலை மணவாளன்
நடு வானில் தோன்றிடுவார்
இதுவரை இருந்த துன்பமில்லை
எமக்கென்றுமே ஆனந்தம்

சரணங்கள்

1. தள கர்த்தனாம் இயேசு நின்று
பலன் ஈந்திடுவார் அன்று
அவர் ஆவியினால் புதுப் பெலனடைந்து
ஜெய வீரராய் நின்றிடுவோம் - நவ

2. நிதம் ஜெபத்துடன் வாஞ்சையாக
அவர் வருகையை எதிர் நோக்கிப்
புது எருசலேமாய்த் தூய நகரமதாய்
நாம் இணைந்திடுவோம் அவரில் - நவ

3. புவி மீதினில் சரீர மீட்பு
என்று வருமெனக் காத்திருக்கும்
நாம் மகிழ்ந்திடவே அவர் வந்திடுவார்
மணவாட்டியாய் மாறிடுவோம் - நவ

4. ஜீவ ஒளி வீசும் கற்களாக
சீயோன் கிரிதனிலே சேர்க்க
அருள் சுரந்திருந்தார் நாமம் வரைந்திருந்தார்
அவர் மகிமையில் ஆர்ப்பரிப்போம் - நவ

5. தேவ தூதர் எக்காளமுடன்
ஆரவாரத் தொனி கேட்க
அவர் கிருபையினால் மறுரூபமாக
நம்மைத் தம்முடன் சேர்த்திடுவார் - நவ

# Tamil Hymn No 296

## THE SPIRITUAL ROCK THAT FOLLOWS

பல்லவி

கர்த்தரின் கிருபை என்று முள்ளதே - அவர்
கருணைக்கு எந்நாளும் கரையில்லையே

சரணங்கள்

1. அன்பின் அகலமும் நீளமும் உயரமும்
ஆழமும் அறிந்திட ஆவியால் அளித்தார்
அடிமையின் நுகமெந்தன் தோளின்றெடுத்தே
ஆனந்தத்தாலென்னைப் பாடிடச் செய்தார் -கர்த்

2. தாவீதுக் கருளின மாறாத கிருபைகள்
தாசனெனக் களித்தார் இயேசுவுக்குள்
தம் நித்திய நோக்கத்தால் தெரிந்தெடுத்தாரே
தவறாது செய்ததை நிறைவேற்றுவாரே -கர்த்

3. கழுகு தான் கட்டின கூட்டினைக் கலைத்தே
கனிவுடன் குஞ்சுகள் மீதசைவாடி
காப்பது போல் நிதம் காத்தென்னைத் தமது
கண்களினாலவர் நடத்துவதாலே -கர்த்

4. கால் மிதிக்குமிடம் யாவையும் அளிப்பேன்
காத்திடுவே னெனதாணை யென்றாரே
கன்மலை கிறிஸ்து என் பின் தொடர்வதினால்
கலங்காதே திடனுடன் முன் செல்லுவேனே -கர்த்

5. அழைத்தனரே அவர் சீயோனில் சேர்க்க
அன்பினால் சீர்ப்படுத்தி ஸ்திரப்படுத்தி
வழுவிடா வழிகளில் காப்பேனென்றவரே
பழுதில்லாமல் தம்முன் நிறுத்திடுவாரே -கர்த்

# Tamil Hymn No 297

## THOU ART MY ALL

சரணங்கள்

1. ஏழை யெனக்காய் எல்லாம் முடித்த
ஏசுவே நேசத்தால் ஏற்றுக்கொண்டீர்
என்னிலோர் நன்மையும் இல்லையே ஏகனே
எல்லாமும் கிருபையே

பல்லவி

அலைபோல் அருள் ஆழிபோல் அன்பு
அனுதினம் எனக்களிக்கிறீர்
அல்லேலூயா! அல்லேலூயா!
அல்லும் பகலும் நான் பாடிடுவேன்

2. சோதனையாலே சோரும் போதுள்ளம்
சார்ந்திடுவேன் உந்தன் சாட்சிகளில்
சாத்தானை ஜெயிக்க சத்தியத்துடனே
சக்தியுமளிப்பீரே - அலை

3. களிமண் போல கர்த்தனே உந்தன்
கைகளிலென்னைக் கையளிக்கிறேன்
கண்மணி போலவே காப்பீரிக் கானிலே
கலங்கிடுவேனோ நான்? - அலை

4. நீரே என் வாஞ்சை நீரே என் தஞ்சம்
நீரோடையாய் அகந் தாகந் தீர்ப்பீர்
நீதி சமாதான சந்தோஷத்தாலுள்ளம்
நிறைத்திடுவீரையா - அலை

5. வந்திடுவீர்! இந் நம்பிக்கையாலே
எந்தையே என்னுள்ளம் துள்ளிடுதே
மந்தையின் மா பெரும் மேய்ப்பரை வானிலே
சந்திப்பேன் ஆயத்தமாய - அலை

# Tamil Hymn No 298

## HE WILL DO FOR YOU

பல்லவி

ஆணிகள் பாய்ந்த கரங்களை விரித்தே
ஆவலாய் இயேசுன்னை அழைக்கிறாரே

சரணங்கள்

1. பார்! திரு மேனி வாரடி யேற்றவர்
பாரச் சிலுவை தனைச் சுமந்து சென்றனரே
பாவமும் சாபமும் சுமந்தாரே உனக்காய்
பயமின்றி வந்திடுவாய் - ஆணி

2. மயக்கிடுமோ இன்னும் மாயையின் இன்பம்
நயத்தாலே உந்தனை நாசமாக்கிடுமே
உணர்ந்திதையுடனே உன்னதனண்டை
சரண் புகுவாய் இத்தருணம் - ஆணி

3. கிருபையின் வாசல் அடைத்திடு முன்னே
மரணத்தின் சாயலில் இணைந்திடுவாயே
உருவாக்கியே புது சிருஷ்டியில் வளர
கிருபையும் அளித்திடுவார் - ஆணி

4. பரிசுத்த ஆவியால் பரமனின் அன்பினை
பகர்ந்திடுவாருந்தன் இருதயத்தினிலே
மறுரூப நாளின் அச்சாரமதுவே
மகிமையும் அடைந்திடுவாய் - ஆணி

5. இயேசு வல்லாது இரட்சிப்பு தரவோர்
இரட்சகர் வேறு இகமதிலுண்டோ
அவர் வழி சத்தியம் ஜீவனுமாமே
அவரே யுன் நாயகரே - ஆணி

# Tamil Hymn No 299

## WHO ARE THESE ON ZION?

சரணங்கள்

1. யாரிவர்கள் பாடுவோரே
யாருமறியாப் புதுப்பாட்டினை
ஆசை இயேசுவின் பின் சென்றோரிவரே
அனுதினம் பாடு சகித்தோர்

பல்லவி

அல்லேலூயா சீயோனிலே
ஆனந்தமாய் பாடுகிறார்
அன்பினால் ஜீவனை வைத்ததினாலே
அன்பரின் திரு முகம் காண்பார்

2. சாந்தமாய் ஆட்டுக்குட்டி போல் சித்தம்
தாமே வெறுத்த சாட்சியுள்ளோர்
சீரிய சேவை செய்ததினாலே
சீயோனிலென்றும் நின்றிடுவார் - அல்லே

3. தாதையின் நாமம் நெற்றியிலேற்று
தீதில்லா வார்த்தை நாவிலுள்ளோர்
தேவ சிங்காசனம் முன் நிற்கும் இவர்கள்
தேசுயர் தேவ ஊழியரே - அல்லே

4. மாந்தரினின்றும் மாநிலம் நின்றும்
மாண்புறு முதற்பலன் மீட்படைந்தோர்
காசினி மீதிலே கறை திரை யில்லாத
கற்புள்ள கன்னியரிவரே - அல்லே

5. வனப்பு வாய்ந்த வடபுறத்தில்
வல்லமையால் உயர் பர்வதமாம்
வான் புவி மகிழ்வுடன் நோக்கும் சீயோனே
மகா ராஜன் திருநகரம் - அல்லே

# Tamil Hymn No 300

## FAITH

பல்லவி

விசுவாச வீரரே விழித்தெழும்புவீரே
வீரன் இயேசுக்காய் போர் புரியவே – ஏகமாய்

சரணங்கள்

1. விசுவாசத்தால் அலகையை வெல்வீர்
   விசுவாச கேடகத்தை எடுத்தே
   வேதாள வேந்தனை ஜெயித்தோராய் சிங்காசனத்திலே
   வீற்றிருந்து இயேசு ஆட்சி செய்வதால் - விசு

2. விசுவாசத்தால் எரிகோ வீழ்ந்ததே
   விசுவாச வீரர் துதி தொனியினால்
   விசுவாசத்தால் கடல்கள் பாதையாக மாறிப் போயிற்றே
   வன் மலையினின்றும் வெள்ளம் பாய்ந்ததே - விசு

3. விசுவாசத்தால் நோய் பேய் அகன்றதே
   விசுவாசத்தாலே நீயும் பெறவே
   விசுவாசத்தாலே இளைப்பாறுதல் நீ பெற்று மகிழ
   விரைந் தேசு உன்னைத் தேடி வந்தாரே - விசு

4. பாருருவாகும் முன் விசுவாசத்தின்
   மா பெருங் கிரியை நித்ய வார்த்தையால்
   முடித்த வல்ல தேவனின் சொல்லொண்ணா மா மகிமையை
   இன்று விசுவாத்தால் நீர் காண்பீரே - விசு

5. விசுவாசத்தின் ஆதியும் அந்தமாம்
   இயேசுவை நோக்கி நேராய் ஓடியே
   விசுவாசத்தால் உலகை இயேசுவுக்கு சொந்தமாக்குவோம்
   வாக்குரைத்தவர் நம்மண்டை நிற்கிறார் - விசு

# Tamil Hymn No 301

## PERFECT LOVE

சரணங்கள்

1. மாறிடார் எம் மா நேசரே – ஆ
மாறாதவர் அனபெந் நாளுமே
கல்வாரி சிலுவை மீதிலே
காணுதே இம் மா அன்பிதே

பல்லவி

ஆ! இயேசுவின் மகா அன்பிதே
அதின் ஆழம் அறியலாகுமோ
இதற்கிணையேதும் வேறில்லையே
இணையேதும் வேறில்லையே

2. பாவியாக இருக்கையிலே – அன்பால்
பாரில் உன்னைத் தேடி வந்தாரே
நீசன் என்றுன்னைத் தள்ளாமலே
நேசனாக மாற்றிடவே - ஆ!

3. உள்ளத்தால் அவரைத் தள்ளினும் - தம்
உள்ளம்போல நேசித்ததினால்
அல்லல் யாவும் அகற்றிடவே
ஆதி தேவன் பலியானாரே - ஆ!

4. ஆவியால் அன்பைப் பகர்ந்திட – தூய
தேவனின் விண் சாயல் அணிய
ஆவியாலே அன்பைச் சொரிந்தார்
ஆவலாய் அவரைச் சந்திக்க - ஆ!

5. நியாயவிதி தினமதிலே – நீயும்
நிலையாகும் தைரியம் பெறவே
பூரணமாய் அன்பு பெருக
புண்ணியரின் அன்பு வல்லதே - ஆ!

6. பயமதை நீக்கிடுமே – யாவும்
பாரினிலே சகித்திடுமே – அது
விசுவாசம் நாடிடுமே – அன்பு
ஒருக்காலும் ஒழியாதே - ஆ!

# Tamil Hymn No 302

## EMMANUEL

பல்லவி

மா மகத்வம் விண்ணதிலே
மண்ணிதிலே சமாதானம்

சரணங்கள்

1. விண்ணைத் துறந்து இம் மண்ணிலிறங்கியே
முன்னனை மீதினிலே
தன்னிகரில்லாத தேவ சுதனிவர்
கன்னிகையிற் பிறந்தார் - மா

2. தாழ்மையின் ரூபமும் ஏழையின் கோலமும்
பாழ் நரர்க்காய் எடுத்தே
வாழ்விக்க வந்திட்ட மெய்யொளியாயினார்
வாழ்த்தி வணங்கிடுவோம் - மா

3. வான் புவி யாவையும் படைத்த தேவனை
வைக்குமிடம் குடிலோ
வாருமே தாழ்த்தியே தாரும் உம் உள்ளத்தை
வைக்க இப்பாலகனை - மா

4. மானிடர் மீதவர்க்கேன் இந்தப் பாசமோ
மாமிசத்தில் வரவே
மண்ணுருவானோரை மாசற்றோராக்கிட
மன்னுருவாய் ஜெனித்தார் - மா

5. இன்னிசை முழங்க இம்மானுவேலனை
இந்நிலத்தே துதிப்போம்
இரட்சகன் மேல் துதி தோத்திரம் சாற்றியே
இன்றென்றும் பாடிடுவோம் - மா

# Tamil Hymn No 303

## THE MYSTERY OF HIS RICHES

பல்லவி

நன்றியால் பாடிடுவோம்
நல்லவர் இயேசு நல்கிய எல்லா
நன்மைகளை நினைந்தே

சரணங்கள்

1. செங்கடல் தனை நடுவாய்ப் பிரித்த
   எங்கள் தேவனின் கரமே
   தாங்கியதே இந்நாள் வரையும்
   தயவாய் மா தயவாய் - ஆ - நன்றி

2. மரணத்தை நீக்கியே ஜீவனை அருளிய
   மாபெருங் கிருபை
   மாநிலத்தோர்க் கீந்தாரேசு
   சுவிசேஷ ஒளியால் - ஆ - நன்றி

3. உயிர்ப்பித்தே உயர்த்தினார் உன்னதம் வரை
   உடன் சுதந்தரராய் இருக்க
   கிருபையின் மகா தானமது வருங்
   காலங்களில் விளங்க - ஆ - நன்றி

4. அழைக்கப்பட்டோரே நீர் உன்னத அழைப்பினை
   அறிந்தே வந்திடுவீர்
   அளவில்லாத் திரு ஆக்கமிதனை
   அவனியோர்க் களிப்பீர் - ஆ - நன்றி

5. சீயோனைப் பணித்துமே கிறிஸ்தேசு இராஜனாய்
   சீக்கிரம் வருவார்
   சிந்தை வைப்போம் சந்திக்கவே
   சுந்தரன் முகமே - ஆ - நன்றி

# Tamil Hymn No 304

## IN THE HOLY CITY OF GOD

பல்லவி
ஜெயத்தின் கீதம் பாடிடுவோமே
சீர் புது சாலேமிலே

சரணங்கள்

1. தேவன் நம்மோடு வாசஞ்செய்வாரே
திருக் கரத்தாலெம் துயர் துடைப்பாரே
துக்கமில்லையே துன்பமில்லையே
துதியின் கானமே தொனித்திடுமே - ஜெய

2. இரத்தினக் கல்லைப் போல் ஒளி வீசும்
இராக்காலமில்லா இன்ப நகரில்
ஈராறு முத்து வாசல்களுண்டே
இதுவே மணவாட்டியாம் சபையே - ஜெய

3. சந்திரர் சூரியர் வேண்டுவதில்லையே
சர்வ வல்ல தேவ மகிமையுண்டதிலே
சுந்தர ஆட்டுக்குட்டியாம் விளக்கே
சந்ததம் ஆலயமுமிவரே - ஜெய

4. அப்போஸ்தலரின் பன்னிரு பேர்கள்
அஸ்திபாரத்தின் கற்களிலுண்டே
ஒப்பில்லா இயேசு மூலைக்கல்லாகி
இசைத்ததினால் விலையேறப் பெற்றோர் - ஜெய

5. தீட்டும் திருடும் தீச் சொல்லும் தீங்கும்
திளைத்தவர் அதினுள் கடந்திடுவாரோ
தேவாட்டுக் குட்டியின் ஜீவாகமமதில்
நாமமுள்ளோரே அதில் நடப்பார் - ஜெய

6. தாகமுள்ளோரே வருவீரே ஜீவ
தண்ணீரின் ஊற்றில் பருகி மகிழவே
ஜெயிப்போரே யாவும் சுதந்தரிப்பாரே
தேவனின் புத்திரராகிடுவார் - ஜெய

# Tamil Hymn No 305

## TODAY IS YOUR SALVATION

பல்லவி

இயேசுன்னை அழைக்கிறார் - இன்ப சத்தம் கேளாயோ?
இன்னமுமே தாமதமேன்? இரட்சண்ய நாளிதுவே

சரணங்கள்

1) கல்வாரி குருசினிலே கள்வரின் மத்தியிலே
குருதி சிந்தி கிரயமீந்தார்
கர்த்தன் இயேசுந்தனுக்காய் - இயேசு

2) கிருபை வெளிப்பட்டதே கிறிஸ்தேசின் பிரசன்னத்தால்
சுவிசேஷமே ஈந்ததுவே
ஜீவனும் அழியாமையும் - இயேசு

3) பாவ ஜீவியத்தை நீ பற்றிடுவாயோ இன்னும்
பரிகரிப்பார் பாவத்தையும்
சாபம் மரணத்தையும் - இயேசு

4) மாநிலத்தின் இன்பங்கள் மாறிடுமே அழிந்தே
மாய்ந்திடாதே வாஞ்சிப்பாயே
மன்னவன் இயேசுவையே - இயேசு

5) ஆதரவில்லாதவர் அண்டினால் இயேசுவையே
ஆனந்தமும் ஈந்திடுவார்
அன்பர் சமாதானமும் - இயேசு

6) ஜீவாகமமதில் உம் நாமம் பதித்திடுவார்
ஜீவ கிரீடம் தானளிப்பார்
ஜீவனுடன் வாழவே - இயேசு

# Tamil Hymn No 306

## I SURRENDER ALL
சரணங்கள்

1. பலிபீடத்திலென்னைப் பரனே
படைக்கிறேனே இந்த வேளை
அடியேனைத் திரு சித்தம் போல
ஆண்டு நடத்திடுவீர்

பல்லவி

கல்வாரியின் அன்பினையே
கண்டு விரைந் தோடி வந்தேன்
கழுவும் உம் திரு இரத்தத்தாலே
கறை நீங்க இருதயத்தை

2. நீரன்றி என்னாலே பாரில்
ஏதும் நான் செய்திட இயலேன்
சேர்ப்பீரே வழுவாது என்னை
காத்துமக்காய் நிறுத்தி - கல்

3. ஆவியோடாத்மா சரீரம்
அன்பரே உமக்கென்றும் தந்தேன்
ஆலய மாக்கியே இப்போ
தாசீர்வதித்தருளும் - கல்

4. சுயமென்னில் சாம்பலாய் மாற
சுத்தாவியே அனல் மூட்டும்
ஜெயம் பெற்று மாமிசம் மாய
தேவா அருள் செய்குவீர் - கல்

5. பொன்னையும் பொருளையும் விரும்பேன்
மண்ணின் வாழ்வையும் வெறுத்தேன்
மன்னவன் இயேசுவின் சாயல்
இந்நிலத்தே கண்டதால் - கல்

# Tamil Hymn No 307

## PRAISE

பல்லவி

மா மகிமை கர்த்தனாம் இயேசு
மன்னவனைத் துதிப்போம்

சரணங்கள்

1. அற்புதமாய் இதுவரையும்
அடியாரை நடத்துவதால்
ஆனந்தமாய்ப் பாடிடுவோம்
ஆர்ப்பரித்து தோத்திரிப்போம் - மா

2. கிருபை மிக துதிகளினால்
பெருகிட அனுதினமும்
பரிசுத்தர் நாம் சேர்ந்து ஒன்றாய்
கரம் உயர்த்தி வாழ்த்திடுவோம் - மா

3. சத்துருவின் சதி வினைகள்
முற்றிலும் முறியடித்தார்
எத்தனை தானிடர் வரினும்
சத்தியத்தைச் சாற்றிடுவோம் - மா

4. கிருபை வரம் சபையினிலே
ஜொலித்திட ஜெபித்திடுவோம்
வருகையின் நாள் நெருங்கிடுதே
வரங்களினால் நிறைந்திடுவோம் - மா

5. வசந்த கால சுவிசேஷத்தின்
வாசனை வீசிடுதே
அயர்ந்திடாது ஆவலுடன்
அவர் வரவை நோக்கிடுவோம் - மா

# Tamil Hymn No 308

## NONE BUT JESUS

சரணங்கள்

1. ஆனந்தமாக அன்பரைப் பாடுவேன்
ஆசையவ ரென்னாத்துமாவிற்கே
ஆசிகளருளும் அனந்தனந்தமாய்
ஆண்டவர் இயேசு போல் ஆருமில்லையே

பல்லவி

இயேசுவல்லால் இயேசுவல்லால்
இன்பம் இகத்தில் வேறு எங்குமில்லையே
இயேசுவல்லால் இயேசுவல்லால்
இன்பம் வேறு எங்குமில்லையே

2. தந்தை தாயுமுன் சொந்தமானோர்களும்
தள்ளிடினும் நான் தள்ளிடுவேனோ
தாங்கிடுவேனென் நீதியின் கரத்தால்
தாபரமும் நல்ல நாதனுமென்றார் - இயேசு

3. கிறிஸ்து இயேசு பிரசன்னமாகவே
கிருபையும் வெளியாகினதே
நீக்கியே சாவினை நற்சுவிசேஷத்தால்
ஜீவன் அழியாமை வெளியாக்கினார் - இயேசு

4. ஒப்பில்லாத நம்பிக்கை சந்தோஷமும்
தப்பறு தேசின் கிரீடமாகவே
அப்போஸ்தலர் தம் ஊழியத்தாலே
ஆதி விஸ்வாசத்தில் வளர்ந்திடுவோம் - இயேசு

5. அழுகையின் தாழ்வில் நடப்பவரே
ஆழிபோல் வான் மழை நிறைக்குமே
சேர்ந்திட சீயோனில் தேவனின் சந்நிதி
ஜெயத்தின் மேல் ஜெயம் அடைந்திடுவோம் - இயேசு

# Tamil Hymn No 309

## ABUNDANT PEACE AND GRACE

சரணங்கள்

1. நான் உன்னத அழைப்பால் தெரிந்தெடுத்தே
உம்மை எனக்காய்ப் பிரித்தெடுத்தேன்
பரிசுத்தமாவதால் கீழ்ப்படிவதினால்
பரதேசிகளானவரே

பல்லவி

கிருபை கிருபை கிருபை பெருக
தேவ சமாதானம் உம்மில் பெருக
ஜீவ நம்பிக்கை ஈந்திட இரக்கத்தினால்
உம்மை ஜெனிப்பித்தேனே

2. நித்திய நோக்கம் உம்மில் நிறைவேறிட
இரத்தத்தால் முற்றும் கழுவினேனே
நித்திய ஆவியால் அபிஷேகம் செய்து
சத்திய சுவிசேஷம் தந்தேன் - கிருபை

3. பொன்னை அக்கினியால் புடமிடுவது போல்
விசுவாசத்தைப் பரிசோதித்தேன்
மனம் கலங்கிடாதே உள்ளம் சோர்ந்திடாதே
உம்மில் கிருபையை ஊற்றிடுவேன் - கிருபை

4. மகா பரிசுத்தரான ஆசாரியரே
நீங்கள் மனுஷரால் தள்ளப்படினும்
முன் அறிவின்படி தெரிந்தெடுக்கப்பட்டு
பூவில் ஜீவிக்கக் கிருபை செய்தேன் - கிருபை

5. பெரிதல்ல இப்பத்து நாள் பாடுகளே
எந்தன் திரு முகம் நோக்கிடுவீர்
மரணம் வரையும் உண்மையா யிருந்தால்
தருவவேன் ஜீவ கிரீடத்தையே - கிருபை

# Tamil Hymn No 310

## ARISE AND SHINE

பல்லவி

விழித்தெழும்பி வேகம் செல்லுவோம் சபையோரே
இதோ மணாளன் இயேசு வருகிறார்

சரணங்கள்

1. இராக்காலமும் செல்லுதே பகல் சமீபமாகுதே
இருளின் கிரியை யாவையும் அகற்றுவோம்
ஒளியின் ஆயுதங்களைத் தரித்து வீரமாய்
ஓயாது போர்புரிந்து சேருவோம் - விழி

2. தேசம் பாஷை ஜாதிகள் ஒன்றோடொன்றெதிர்க்குதே
தேவ அன்பும் நம்பிக்கை தணியுதே
ஜீவ வசனத்தை மேலே உயர்த்திக் கொண்டே
ஜோதிகளாய்ப் பூவில் துலங்குவோம் - விழி

3. உரைத்த அவர் வார்த்தைகள் யாவும் நிறைவேறுதே
யூதரும் தம் நாட்டை மீண்டும் பெறவே
சீயோனின் வேலையும் சீக்கிரம் முடியுதே
சீராய் நேராய் நடந்து செல்லுவோம் - விழி

4. தலைகளை உயர்த்துவோம் நம் இரட்சிப்பு நெருங்குதே
நிலையான நகரம் வேறிங்கில்லையே
நித்திய கன மகிமைக் கிணையாகுமோ
இக்கால பாடு துன்பம் யாவுமே - விழி

5. சற்று நேர ஜீவியம் இங்கழிந்திடும் கூடாரமே
உற்றதோர் கைவேலையற்ற வீடங்கே
ஏகமாய் புது பெலந்தரித்துத் தீரமாய்
சோராதே ஜீவன் வைத்து வாருமே - விழி

# Tamil Hymn No 311

## JESUS INVITES YOU

பல்லவி

தாமதமேனோ தருணமிதே
தள்ளிடாதே வருவாய் இயேசு பரன்
தாங்கிடுவார் உன்னையே

சரணங்கள்

1) காயங்கள் காட்டி கன்மலை கிறிஸ்து
கனிவுடன் உன்னை அழைக்கிறாரே
கர்த்தரின் மாறிடா அன்பினை ருசிக்க
கல்வாரி அண்டையில் வந்திடுவாய் - தாம

2) காணாத ஆட்டைப் போல் நீ அலைவானேன்
கானக வழிதனில் ஆருமின்றி
தேடி வரும் இயேசு மேய்ப்பரின் சத்தமே
கேட்டவர் வார்த்தைக்கு கீழ்ப்படிவாய் - தாம

3) மண்ணில் உன் சரீர ரோகங்கள் மாற்ற
புண்ணியர் இயேசுன்னை அழைக்கிறாரே
எண்ணிடாதவரின் வல்லமை ருசிக்க
விண்ணவர் கரத்தில் நீ வந்திடுவாய் - தாம

4) கிறிஸ்துவின் மரண சாயலில் இணைய
பிறந்திடுவாய் ஜல ஸ்நானத்தினால்
பூரணனாக வளர்ந்திடத் தேவ
சாயலைத் தரிப்பாய் அபிஷேகத்தால் - தாம

5) நேற்றும் இன்றென்றும் மாறிடா நேசர்
மாற்றிடுவாரோ தம் வார்த்தையதை
குற்றம் குறைகள் யாவும் அகற்றியே
முற்றும் முடிய உன்னை இரட்சிப்பாரே - தாம

# Tamil Hymn No 312

## A GREAT NATION

பல்லவி

துதி கன மகிமை இயேசுவுக்கே - தூய
நாமமதைப் புகழ்ந்தேத்திடுவோம்

சரணங்கள்

1. ஜெயத்துடனே நம்மை நடத்தினாரே - உயர்
நன்மைகளால் முடிசூட்டினாரே
நன்றியால் நிறைந்துள்ளம் பொங்கி வழிந்திடுதே
நாதனைப் புகழ்ந்திடுவோம் - துதி

2. மாலை நிழலது சாய்வது போல் - மாறி
மாய்ந்திடுதே இக வாழ்வதுவே
மங்கிடாதோர் நல் சுதந்திரம் வானுலகில்
வைத்தவர் அழைக்கிறாரே - துதி

3. பாரில் எம்மை அவர் பிரித்தெடுத்தே - பெரும்
ஜாதியாக்கி உபதேசத்தினால்
மாதிரத்தோர்க்குயர்: சுவிசேஷம் ஈந்திட
மன்னவன் கண்டனரே - துதி

4. நிறுத்திடவே தம்முன் நிர்மலராய் - திரு
சரீரத்தின் வழியாம் மரணத்தினால்
நம்பிக்கையின் சுவிசேஷத்தில் நிலைத்திட
அம்புவி தனில் அழைத்தார் - துதி

5. சேர்த்திடவே பூவில் சீர் பலனை - தேடி
கூட்டிட சீக்கிரம் வந்திடுவார்
சீயோனே பார் உந்தன் வேலை முடிந்திடுதே
சிந்தை செய்தானந்திப்பாய் - துதி

# Tamil Hymn No 313

## THE ROOT OF DAVID

சரணங்கள்

1. உன்னத தேவனுக்கே மகிமை
உலகில் சமாதானமாமே
காரிருள் நீங்கிடக் காசினி மீதிலே
கதிரொளியாய் ஜெனித்தார்

பல்லவி

அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா துதியவர்க்கே
அல்லேலூயா துதியவர்க்கே

2. மானிடர் மேலிவர்க்கன்பிதுவோ
மனுக் கோலமாய் மனுவேலனார்
மாட்சிமை யாவையும் துறந்தே இவ்வுலகில்
மாணொளியாய் ஜெனித்தார் - அல்லே

3. தாரகையென அவர் தோன்றிடவே
நேர் பாதையில் நடத்திடவே
தற்பரன் கிருபையும் சத்திய மீந்திட
தன் ஒளியாய் ஜெனித்தார் - அல்லே

4. வாழ்த்துவோம் பாலகன் இயேசு பரன்
வல்ல தேவனின் ஏக சுதன்
வாஞ்சித்தாரே எம்மில் வாசம் செய்திடவே
வாணொளியாய் ஜெனித்தார் - அல்லே

5. தாவீதின் வேரிவராய் அவனின்
ஜெய ராஜ்யம் ஸ்தாபிக்கவே
தாசனின் ரூபமாய் தாரணி மீதிலே
தான் உதித்தார் ஒளியாய் - அல்லே

# Tamil Hymn No 314

## THE MEDIATOR

சரணங்கள்

1. கல்வாரியில் காணும் இவர் யார்
சொல்லொண்ணாத துயர் அடைந்தோர்
உலகத் தோற்ற முதல் இவரே
அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி

பல்லவி

இவர் தாமே இவர் தாமே
கல்வாரி மலையின் மீதே
ஜீவன் வைத்த தேவ அன்பே

2. நித்திய பிதா இவரோ
சத்தியமும் கிருபையுமாய்
தாகம் தீர்க்கும் ஜீவ நதியோ
தவீது கோத்திரம் தந்த விளக்கோ - இவர்

3. அழைக்கப்பட்டோர் ஆணையாலே
அடைய நித்திய சுதந்தரமே
அன்பு நிறைந்தோர் பெறுவதற்கே
அழிவில்லா தேவ மத்தியஸ்தரோ - இவர்

4. மரித்து உயிர்த்து மாறாதவராய்
மா பிரதான ஆசாரியராய்
முற்று முடிய இரட்சை தரவே
முதல்வன் முன்னே பரிந்து நிற்போர் - இவர்

5. சீயோன் மலைமேல் நிற்போர் இவரே
சிறந்த நேசர் இவரே காண்பீர்
சேவிப்போமே திரு முகத்தை
தினமும் கண்டு அவரில் மகிழ்ந்தே - இவர்

# Tamil Hymn No 315

## THE MAN CHILD

பல்லவி

காணீர் அற்புதம் வானத்திலே
மணி மாதிவளோர் பெரும் அதிசயமே

சரணங்கள்

1. சூரியனை அணிந்தவளாய்
தேவனின் நீதியை தரித்தவளாய்
கிறிஸ்தென்னும் சந்திரன் சாட்சியிலே – நின்று
கிருபையிலே நிதம் நிலைப்பவளே - காணீர்

2. தலையினிலே பன்னிரண்டு
தாரகையின் முடி வீசும் ஒளி
ஆவியினால் நீதிக்குட்படுத்தும் - திரு
அப்போஸ்தலரது ஊழியமே - காணீர்

3. தேவ புத்திரர் வெளிப்படவே
வேதனைக் கொண்டவள் அலறுகிறாள்
யாவையும் ஆளுமோர் ஆண்மகவை – அவள்
ஈன்றிடும் வேளையே வந்ததினால் - காணீர்

4. விண்ணுடு நேர் சுத்தரையே
வீழ்த்தி தன் வாலாலோர் வலுசர்ப்பமே
விழுங்கிட ஆவலாய் ஆண்மகவை – அது
விழிப்புடன் அவள் முன்னே நிற்கிறதே - காணீர்

5. ஜெயமெடுத்தோர் ஆண்மகவாய்
சேர்த்திட தேவ சிங்காசனத்தே
கிறிஸ்துவின் நிறைவென்னும் பூரணமே- வர
விசுவாசத்தில் இணைந்தோங்கிடுவோம் - காணீர்

# Tamil Hymn No 316

## HE LIVES FOR YOU

சரணங்கள்

1. ஜீவனின் ஊற்றாமே இயேசு பரன்
தீர்த்திடுவார் உந்தன் தாகமதை
பாவங்கள் ரோகங்கள் சாபங்கள் போக்கிட
பரிவாய் அழைக்கிறார்

பல்லவி

வல்லவரே இயேசு நல்லவரே
மிக அன்பு மிகுந்தவரே
இயேசு வல்லவரே அவர் நல்லவரே
உனக்காகவே ஜீவிக்கிறார்

2. ஆருமற்றவனாய் நீ அலைந்தே
பாவ உளைதனிலே அமிழ்ந்தே
மாய்ந்திடாது உன்னைத் தூக்கி எடுத்தவர்
மந்தையில் சேர்த்திடுவார் - வல்ல

3. வியாதியினால் நொந்து வாடுவதேனோ
நேயன் கிறிஸ்து சுமந்ததனை
சிலுவை மீதினில் தீர்த்ததாலே இனி
சுகமடைந்திடுவாய் - வல்ல

4. பரனின் அன்பதை அகமதிலே
சொரிந்து தன் திரு ஆலயமாய்
மாற்றியே தம்மைப் போல் தேவ சாயலாக்கி
மகிமை சேர்த்திடுவார் - வல்ல

5. வானமும் பூமியும் மாறிப் போயினும்
வாக்கு மாறாத ஓர் வல்ல மீட்பர்
காப்பார் வழுவாது உள்ளங் கையில் வைத்தே
கலங்கிடாதே நீ வா - வல்ல

# Tamil Hymn No 317

## BEGOTTEN OF GRACE

பல்லவி

போற்றிடுவோம் புகழ்ந்திடுவோம்
பொற்பரன் இயேசுவையே
புவியில் அவர்போல் வேறில்லையே

சரணங்கள்

1. தந்தையைப் போல் தோளினிலே
மைந்தரெமைச் சுமந்தவரே
எந்நாளுமே அவர் நாமமே
இந்நிலத்தே நாம் துதித்திடுவோம் - போற்றி

2. கன மகிமை புகழுடைய
கருணையால் ஜெநிப்பித்ததாலே
கனலெரியின் சோதனையில்
கலங்கிடுமோ எம் விசுவாசமே - போற்றி

3. ஞாலமெல்லாம் கண்டதிசயிக்க
ஆவியின் அபிஷேகத்தாலே
ஏக சரீரமாய் நிறுத்த
இணைத்தனரே நம்மைத் தம் சுதராய் - போற்றி

4. ஆதி அப்போஸ்தல தூதுகளால்
அடியாரை ஸ்திரப்படுத்தி
கேதமில்லா ஜெயமளித்தே
கிறிஸ்துவின் நற்கந்தமாக்கினாரே - போற்றி

5. சீயோனே மா சாலேம் நகரே
சீரடைந்தே திகழ்வாயே
சேவிப்பாயே உன் நேசரையே
சிறப்புடனே இப்பார்தலத்தே - போற்றி

# Tamil Hymn No 318

## HE AROSE

பல்லவி

உயிர்த்தெழுந்தார் இயேசு ஜெயித்தெழுந்தார்
உன்னத வல்லமையால் எழுந்தார்
முன்னுரைப்படி எழுந்தார்

சரணங்கள்

1. கல்லறை திறந்திடவே
பெருங்கல்லது புரண்டிடவே
கர்த்தர் உயிர்த்தெழுந்தாரே
கானம் பாடி மகிழ்ந்திடுவோம் - உயிர்

2. தேடுவதேனினியும்
ஜீவ தேவனைக் கல்லறையில்
தேவனின் வன் கரத்தாலே
விண் தேகத்தோடே உயிர்த்தார் - உயிர்

3. மரணத்தின் கூர் எங்கே
பாதாளத்தின் ஜெயமெங்கே
மரணத்தைப் பரிகரித்தாரே
பரிசுத்தராய் உயிர்த்ததினால் - உயிர்

4. நித்திரை யடைந்தோரிலே
இவர் முதற்பலனானவரே
நித்திய நம்பிக்கையாலே
நிறைத்தே நிதம் நடத்துகிறார் - உயிர்

5. மகிமையின் ஆவியினால்
மண்ணின் சாயலை மாற்றுவதால்
மாறியே கண்ணிமை நேரம்
மகிமையோ டுயிர்த்திடுவோம் - உயிர்

6. ஜீவன் எம் இயேசுவிலே
வைத்து ஜீவியம் செய்திடும் நாம்
ஜீவனில் ஆளுகை செய்தே
ஜீவ நாதனை சந்திப்போமே - உயிர்

# Tamil Hymn No 319

## GOD DWELLETH WITH MEN

பல்லவி

இதோ மனுஷரின் மத்தியில் தேவாதி தேவனே
வாசம் செய்கிறாரே

சரணங்கள்

1. தேவன் தாபரிக்கும் ஸ்தலமே
தம் ஜனத்தாரின் மத்தியிலாம்
தேவன் தாம் அவர்கள் தேவனாயிருந்தே
கண்ணீர் யாவையும் துடைக்கிறாரே - இதோ

2. தேவ ஆலயமும் அவரே
தூய ஒளிவிளக்கும் அவரே
ஜீவனாலே தம் ஜனங்களின் தாகம் தீர்க்கும்
சுத்த ஜீவ நதியும் அவரே - இதோ

3. மகிமை நிறை பூரணமே
மகா பரிசுத்த ஸ்தலமதுவே
என்றும் துதியுடனே அதன் வாசலுள்ளே
எங்கள் பாதங்கள் நிற்கிறதே - இதோ

4. சீயோனே உன் வாசல்களை
ஜீவ தேவனே நேசிக்கிறார்
சீர் மிகுந்திடுமிச் சுவிசேஷந்தனை
கூறி உயர்த்திடுவோம் உனையே - இதோ

5. முன்னோடியாய் இயேசு பரன்
மூலைக்கல்லாகி சீயோனிலே
வாசஞ் செய்திடும் உன்னத சிகரமதை
வாஞ்சையோடு நாம் நாடிடுவோம் - இதோ

# Tamil Hymn No 320

## THE FIRST BORN AMONG MANY BRETHREN

சரணங்கள்

1. அன்பில் என்னை பரிசுத்தனாக்க
உம்மைக் கொண்டே சகலத்தையும்
உருவாக்கியே நீர் முதற்பேறானீரும்
தந்தை நோக்கம் அநாதியன்றோ

பல்லவி

என் இயேசுவே நேசித்தீரோ
எம்மாத்திரம் மண்ணான நான்
இன்னும் நன்றியுடன் துதிப்பேன்.

2. மரித்தோரில் முதல் எழுந்ததினால்
புது சிருஷ்டியின் தலையானீரே
சபையாமும் சரீரம் சீர் பொருந்திடவே
ஈவாய் அளித்தீர் அப்போஸ்தலரை. - என்

3. முன்னறிந்தே என்னை அழைத்தீரே
முதற்பேறாய் நீர் இருக்க
ஆவியால் அபிஷேகித்தீர் என்னையுமே
உம் சாயலாய் நான் வளர. - என்

4. வருங்காலங்களில் முதற்பேறாய்
நீர் இருக்க நாம் சோதராய்
உம் கிருபையின் வார்த்தையை வெளிப்படுத்தி
ஆளுவோம் புது சிருஷ்டியிலே - என்

5. நன்றியால் என் உள்ளம் நிறைந்திடுதே
நான் இதற்கென் பதில் செய்குவேன்
இம்மகா நோக்கம் முற்றுமாய் நிறைவேறிட
என்னை தந்தேன் நடத்திடுமே - என்

# Tamil Hymn No 321

## THE LOVE OF CALVARY

பல்லவி

கல்வாரி அன்பிதோ அழைக்கிறதே
தள்ளிடாதே தருணமிதே

சரணங்கள்

1. மாயமாம் உலகம் மாய்ந்திடுமே
மாறிடார் நேசர் இயேசுவே
தாயினும் மேலன்பு தந்திடவே
தற்பரன் கரம் நீட்டி அழைக்கிறாரே - கல்வாரி

2. காரிருள் பூமியை மூடிடுதே
காலமோ நெருங்கியே சேர்ந்திடுதே
காயங்கள் ஏற்றவர் நோய்களையே
கருணையுடன நீக்க அழைக்கிறாரே - கல்வாரி

3. பூமியில் புண்ணியர் புதுமையிதே
பூரணனாய் உன்னை மாற்றுவதே
மானிடர்க்கோர் திட சாட்சியாக
மன்னவன் இயேசுன்னை நிறுத்துவாரே - கல்வாரி

4. தாய் தந்தை சேயரும் மாறிடுவார்
தானொரு நாளும் மாறாத நேசர்
தவித்து நிற்கும் உன்னைத் தயவுடனே
தம்மிடத்தில் அவர் அழைக்கிறாரே - கல்வாரி

5. பாவ சாபம் நிறை சரீரமிதை
தேவனின் சாயலில் மறுரூபமாய்
தாம் வரும் நாளினில் மாற்றி உன்னை
தம்முடன் மகிமையில் சேர்த்திடுவார் - கல்வாரி

# Tamil Hymn No 322

## A THOUSAND TONGUES TO SING

பல்லவி

கர்த்தர் எம் இயேசுவை ஸ்தோத்திரம் செய்தென்றும்
கிருபையில் பெருகிடுவோம்

சரணங்கள்

1. ஆயுட்காலம் வரை துதி பாடிடுவோம்
ஆவியால் அபிஷேகித்தாரே
அன்பரைப் போற்றி கீதங்கள் சாற்றிடவே
ஆயிரம் நாவுகள் போதுமோ - கர்த்தர்

2. ரோகத்தாலே மிக தேகம் வருந்திடுகில்
ஏசு வந்தெமதருகினிலே
பொற்கரம் நீட்டித் தொட்டவர் ஜீவனையும்
அற்புத சுகமும் அளிப்பார் - கர்த்தர்

3. திரைப் போல இப்பாதையின் மறைவிடத்தே
விரிவாய் வைத்த கண்ணிகளில்
சரிந்து எமது கால்கள் சிக்கிடாதே
விரைந்து அவர் காப்பதாலே - கர்த்தர்

4. பாடிப் பறந்து நாம் ஆவியில் உயர்ந்திடவே
புது பெலன் தந்து நிறைக்கிறாரே
ஜீவனுள்ள நற்கற்களாய் இணைந்தவரில்
நவ எருசலேமாகிடுவோம் - கர்த்தர்

5. எண்ணவோ யாதுமில்லாத எம்மை யிந்த
மண்ணுலகமே தோன்றிடுமுன்
சிந்தையில் வரைந்தே சீர் பொருந்தியுயர்
சீயோனிலே ஆளச்செய்வார் - கர்த்தர்

# Tamil Hymn No 323

## WORK OF GRACE

### பல்லவி

கிருபையிதே தேவ கிருபையிதே
தாங்கி நடத்தியதே
இயேசுவிலே பொன் நேசரிலே
அகமகிழ்ந்தே நாம் ஆனந்திப்போம்

### சரணங்கள்

1. ஆருயிர்அன்பராய் எங்களுடனே
ஜீவியப் பாதையிலே -- இயேசு பரன்
அனுதினமும் வழி நடந்தே
அவரதுநாமத்தில் காத்தனரே - கிருபை

2. வார்த்தையினால் அவர் தீர்த்தார் எந்தன்
வியாதியும் வேதனையும் -- வைத்தியராய்
இயேசுவல்லால் சார்ந்திடவோ
இகமதில் வேறெமக் காருமில்லை—கிருபை - கிருபை

3. அன்பின் அகலமும் நீளம் உயரமும்
ஆழமும் அறிந்துணர—அனுக்கிரகித்தார்
கிறிஸ்துவிலே ஒரு மனையாய்
சிருஷ்டித்தே நிறுத்தினார் அவர் சுதராய் - கிருபை

4. நல்ல போரட்டம் போராடி ஜெயித்தே
நித்திய ஜீவனை நாம் - பற்றிடவே
விசுவாசத்தில் நிலைத்திடுவோம்
அசையாது அழைப்பினைக் காத்துக் கொள்வோம் - கிருபை

5. ஆவியும் மணவாட்டியும் ஆவலுடன்
வாருமென்றழைக்கின்றாரே—வாருமென்பீர்
சீயோனேநீபார்உனக்காய்
நாயகன் இயேசு தாம் வெளிப்படுவார் - கிருபை

# Tamil Hymn No 324

## APPEARING FOR THE SANCTIFIED

சரணங்கள்

1. இராஜாவாய் இயேசு தூதர்கள் சூழ
மேகமதில் தோன்றும் நாள்
வேகமாய் நெருங்கி வந்திடுதே நாம்
ஏகமாய் எழும்புவோம்

பல்லவி

பரிசுத்தமாக்கப் பட்டோரே ஒன்றாய்
பறந்து வந்திடுவீர்
பாவமில்லாமலே காத்திடும் நமக்காய்
பரன் இயேசு வந்திடுவார்

2. கர்த்தருக்குள்ளே நித்திரையானோர்
காகளம் தொனிக்கவே
கண்ணிமைப்பொழுதில் கல்லறையில் நின்று
வல்லமையாய் வருவார் - பரி

3. இயேசுவுக்காக இகத்தின் இன்ப
சுகங்களை வெறுத்தே
சிலுவை சுமந்த சுத்தருக்காகவே
சீக்கிரம் தோன்றிடுவார் - பரி

4. ஜீவ கிரீடம் சூடிடுவோமே
ஜீவனை ஊற்றிய நாம்
தேவ சித்தமே செய்தோர் பெறவே
ஜெய வேந்தனாய் வருவார் - பரி

5. காயங்கள் கண்டு ஆனந்தத்தாலே
கண்ணீர் சொரிந்திடுவோம்
காலாகாலங்களாய் கல்வாரி நேசத்தை
கருத்தாய்ப் பாடிடுவோம் - பரி

# Tamil Hymn No 325

## JEHOVAH - JIREH

பல்லவி

யேகோவாயீரே – யாவுமெனக்காய் முடித்தீரே
லோக ஸ்தாபனம் முதலே
கிறிஸ்து இயேசுவிலே – முன்
அறிந்து அழைத்தவரே

சரணங்கள்

1. ஆபிரகாமுக்காய் தேவ பர்வதத்தில்
ஆயத்தமாக்கி நீர் வைத்ததோர் ஆட்டைப்போல்
தாயின கட்டில் யான் சேயனாய்த் தோன்று முன்
தற்பரனே யாவும் கருதி வைத்தீர் - யேகோ

2. கானகமதிலே என்னைப் பின் தொடர்ந்தே
ஞானக் கன்மலையாய் தாகங்கள் தீர்ப்போரே
வான மன்னாவாய் உம் மாறிடா வார்த்தையால்
மாற்றுகிறீர் மண்ணின் சாயல் என்னில் - யேகோ

3. பாரிலென் கரங்கள் போரினில் ஜெயிக்க
நீரே உம் நித்திய புயத்தால் தாங்கியே
ஆனந்தத் தைலத்தால் என் உள்ளம் வழிய
ஆன்பரே நீர் அபிஷேகிக்கிறீர் - யேகோ

4. அன்பரே உம்மிலே அன்பு கூர்ந்தோருக்கு
ஆயத்தமாக்கிய அனந்த நன்மைகள்
கண்கள் கண்டதில்லை கேட்டறிந்ததில்லை
காண யான் ஆவியால் கருணை செய்தீர் - யேகோ

5. அந்த நாள் வரையும் எந்தனைக் காப்பீரே
எந்தையே உமக்காய் சொந்தமா யளித்தேன்
சந்ததம் நிலைக்கும் சீயோன் பர்வதம் போல்
என்றும் கிருபையினால் இருப்பேன் - யேகோ

# Tamil Hymn No 326

## HE SUFFERED JOYFULLY

பல்லவி

குருசினில் தொங்கினீர் குருதியும் சிந்தினீர்
குரு இயேசு நாதா நீர் கொல்கொதாவில்

சரணங்கள்

1. கால் கரங்களில் ஆணிகள் பாய்ந்தே
கண்கள் அயர்ந்தே தாகத்தால் தொய்ந்தே
ஏனோ இத்தனைப் பாடுகள் ஏற்றீர்
என் பாவம் போக்கிட வந்ததாலோ - குரு

2. தலை சாய்க்க உலகில் தலமில்லை என்றே
திருவாய் மலர்ந்த தேவகுமாரா
சிலுவைதான் உமக்கு தலைசாய்க்க இடமோ
பலியாகி மீட்டிட வந்ததாலோ - குரு

3. கறையேதுமற்ற கன்னிகையாக
திருச் சபையை முன் நிறுத்துதற்காயோ
நிந்தை சுமந்தீர் சந்தோஷத்தோடே
நிர்மலா கொல்கொதா ஏகினீரோ - குரு

4. தேகமதிலே வாதையடைந்தே
பாதகரின் பாவம் ஏற்றவராய்
தேவனோடென்னையும் சேர்த்திட வொன்றாய்
தேவாட்டுக்குட்டியாய் வந்தீரோ நீர் - குரு

5. நிலையில்லா பொன் வெள்ளி இவையாவினாலல்ல
விலையேறப் பெற்ற உதிரத்தால் மீட்டே
விலையேறும் சீயோனின் சுதராக்க நீரே
அலைந்தோரை அணைத்திட வந்ததாலோ - குரு

# Tamil Hymn No 327

## HE SATISFIES

பல்லவி

இன்ப இயேசுவின் இணையில் நாமத்தைப் புகழ்ந்து
இகமதில் பாடிட தருணமிதே
இயேசுவைப் போல நல் நேசரில்லை
இன்றும் என்றென்றும் அவர் துதி சாற்றிடுவேன்

சரணங்கள்

1. நித்தியமான பர்வதமே உந்தனில் நிலைத்திருப்பேன்
நீங்கிடாதென்னை தோளின் மேல் சுமந்தே
நித்தம் நடத்துகிறீர்
என்னையும் உம் ஜனமாய் நினைந்தே - ஈந்தீர்
உன்னத வெளிப்படுத்தல் நிறைவாய். - இன்ப

2. பாவத்தில் வீழ்ந்து மாயையிலே ஆழ்ந்து நான்மாள்கையிலே
பரிந்து தேவ அன்பினைக் காட்டியே
பட்சமாய் பார்த்தெடுத்தீர்
பாரில் பரிசுத்தராகுதற்காய் - மிக
பரலோக நன்மைகளால் நிறைத்தீர். - இன்ப

3. மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுமாப்போல்
என் ஆத்துமா உம் பொன் முகம் காணவே
வாஞ்சித்துக் காத்திடுதே
வானிலும் இந்தப் பூவிலும் நீர் - என்
வாஞ்சைகள் தீர்ப்பவராய் நினைந்தே. - இன்ப

4. சீயோனிலே நீர் சிந்தை வைத்தீர் சேர்த்தொன்றாய் கட்டுதற்காய்
திவ்வியபிஷேகம் தந்தெமை நிறுத்தி
சேர்த்தீரே சுத்தருடன்
சேதம் வராமலே கரத்தினால் - உம்மை
சேவிப்போம் நித்திய நித்தியமாய் - இன்ப

5. ஆர்ப்பரிப்போட ஸ்தோத்திப்போம் அன்பரை உளம் கனிந்தே
ஆளவில்லாத ஜீவனை அளித்தே
அற்புத ஜெயம் ஈந்தீரே
அல்லேலூயா துதி கனம் மகிமை - உம்
நாமத்திற்கே நிதம் சாற்றிடுவோம் - இன்ப

# Tamil Hymn No 328

## ETERNAL SON OF GOD

பல்லவி

தேவசுதனிவரே ஆகுடில் தனை
தேடி வந்தாரே

சரணங்கள்

1. ஆதியில் நித்ய பிதாவுடன் இருந்த
அழிவில்லாத மெய் தேவ சுதன்
அன்னையினும் மேலாய் அன்பு கொண்டதினால்
அவதரித்தார் ஏழை கோலமதாய் - தேவ

2. கிருபை சத்தியம் நிறைந் துதித்தனரே
உருவாய் இயேசென்னும் நாமத்திலே
பரனின் பூரண கிருபை தான் இவரே
கிருபையின் மேல் கிருபை நாம் பெறவே - தேவ

3. கந்தை பொதிந்திவர் புல்லணை மீதிலே
சுந்தர பாலனாய் துாங்குகிறார்
சொந்தமே நமக்கிந்த தாழ்மையின் ராஜன்
வந்தனர் எம்மையும் வாழ்விக்கவே - தேவ

4. மரணத்தின் அதிகாரி பிசாசை
மரணத்தால் அவர் அழித்திடவே
இருளை நீக்கிட இவர் உதித்தனரே
அருணோதயமாய் அவனியிலே - தேவ

5. சர்வ சிருஷ்டியின் காரணரிவரே
சாவினை ஜெயித்துயர் முதற்பலனாய்
சரீரமாம் சபையின் அரும் சிரசாய்
தந்திட வந்தாரே தாரணியில் - தேவ

# Tamil Hymn No 329

## EVERLASTING PRIESTHOOD

சரணங்கள்

1. வந்திடுவீர் தேவா வல்லமையாய்
தந்திடும் எழுப்புதல் ஆவியினால்
சிந்தையில் மெல்கிசேதேக் முறைமை
சந்ததம் நிலைத்திட அருள் புரிவீர்

பல்லவி

ஊற்றிடுவீர் தேவ அன்பினையே
சுத்தர் உள்ளம் உயிர்த்திடவே
எம்மை மாற்றிடும் அபிஷேகத்தால்

2. ஜீவனின் முடிவில்லாதவரே
தேவ குமாரனைப் போன்றவரே
சோதனையில் அழியாதெமையே
சோர்ந்திடாதே நிலைக்க வருவீர் - ஊற்

3. தந்தையும் தாயும் சகோதரரும்
சந்ததி ஏதுமில்லாதவர் நீர்
எந்தையே உம்மைப் போல் மாற்றிடவே
ஈந்திடும் வெளிப்படுத்தல் இகத்தில் - ஊற்

4. தேவகுமாரனும் பாடுகளால்
ஜீவனை ஊற்றி கீழ்ப்படிந்ததினால்
தாரணியில் அவர் போல் நிலைக்க
தந்திடும் மெல்கிசேதேக் முறைமை - ஊற்

5. நித்தியமான ஆசாரியரே
சத்திய வெளிப்படுத்தல் நிறைவாய்
பெற்று நாம் நித்திய ஆசாரியராய்
கர்த்தனம் இயேசுவுடன் நிலைக்க - ஊற்

# Tamil Hymn No 330

## SCEPTRE FROM ZION

பல்லவி

சீயோனே சீயோனே
ஜெகதலம் நின்றும் மனிதரில் நின்றும்
முதற்பலனாய் மீட்கப் பட்டனையே

சரணங்கள்

1. பெருவெள்ளத் திரைச்சல் போல் வல்லமையுடனே
பலத்த இடி முழக்கம் போல் ஜெயத்தெனியே
பரமண்டலமெல்லாம் கேட்டதிசயிக்கும்
சுரமண்டலத்தின் ஓசை இதுதானோ - இன்ப - சீயோ

2. கறையேதுமில்லையே கற்புடைமையினாலே
கபடும் உன் அதரங்கள் அறிந்ததுமில்லையே
களங்கமில்லா தேவ சிங்காசனம் முன்பில்
கன மகிமையோடேனின் றிலங்குகிறாய் - என்றும் - சீயோ

3. வல்லமையுயர் செங்கோல் உன்னிலிருந்தல்லவோ
வசித்திட அவரின் தலமும் நீ அல்லவோ
வானவர் சிந்தை உந்தன் மனதில் வரைந்ததாலே
வல்ல பிதாவின் முகம் காண்கிறாயே - சதா - சீயோ

4. ஆதி அப்போஸ்தல தூதுகளால் பரன்
வேத முன்னில் நின்றே விளங்கி வந்திடுதே
சீயோனே உனது சிறப்பினை வெறுத்த
தீயோர்கள் நாணும் நாள் நெருங்கிடுதே – வேகம் - சீயோ

5. உன்னத தேவனில் உயர் பெலன் கொள்வோரின்
அகமதில் வகுத்தாரே உன் பெரு வழிகள்
சீயோனே உனது பாட்டினாலே முடி
சூட்டிடுவாய் இயேசு நாயகனை – பாடி - சீயோ

# Tamil Hymn No 331

## LOOK TO CALVARY

சரணங்கள்

1. பாரக்குருசில் பரலோக ராஜன்
பாதகனைப் போல் தொங்குகிறாரே
பார் அவரின் திரு இரத்தம் உன்
பாவங்கள் போக்கிட பாய்ந்திடுதே

பல்லவி

வந்திடுவாய் இயேசுவண்டை
வருந்தியே அழைக்கிறாரே
வாஞ்சைகள் தீர்ப்பவரே - உன்
வாதைகள் நீக்குவாரே

2. இருதயத்தின் பாரம் அறிந்து மெய்யான
இளைப்பாறுதலை அளித்திடுவாரே
இன்னுமென்ன தாமதமோ
இன்றே இரட்சிப்படைய வருவாய் - வந்

3. சிலுவையின் மீதில் சுமந்தனரே உன்
சாப ரோகங்கள் தம் சரீரத்தில்
சர்வ வல்ல வாக்கை நம்பி
சார்ந்து சுகம் பெறவே வருவாய் - வந்

4. நித்திய வாழ்வு பெற்றிட நீயும்
நித்திய ஜீவ ஊற்றண்டை வாராய்
நீசனென்று தள்ளாதுன்னை
நீதியின் பாதையில் சேர்த்திடுவார் - வந்

5. இயேசுவின் நாமம் ஊற்றுண்ட தைலம்
இன்பம் அவரின் அதரத்தின் மொழிகள்
இல்லையே இந் நேசரைப் போல்
இகமதில் வேறோர் அன்பருனக்கே - வந்

# Tamil Hymn No 332

## HIS GRACE IS BETTER THAN LFE

பல்லவி

எந்தன் ஜீவனிலும் மா அருமை
உந்தன் கிருபை கிறிஸ்தேசுவே
அந்தமே யில்லா அன்பின் ஆழமதை
எண்ணி நான் துதித்திடுவேனே

சரணங்கள்

1. சந்தோஷமுடன் துதி சாற்றிடுவேன்
சந்ததம் நல்கிடும் நன்மைகட்காய்
நாவினாலே திரு நாமத்தைப் போற்றிட
நாட்களும் போதுமோ நானிலத்தில் - எந்தன்

2. இகமதிலென் பெலன் குறைந்திடினும்
அகமதில் உம் பெலன் பெருகுவதால்
கழுகினைப் போல் புது வாலிபம் என்னுள்ளில்
கிருபையால் அனுதினம் வளர்ந்திடுதே - எந்தன்

3. கோதுமை மணி மண்ணில் மாய்வது போல்
சேவையில் ஜீவனை ஊற்றிடினும்
தேவா நின் கிருபையின் ஊற்றென்னில் பாய்வதால்
சோராது நிறைபலன் ஈந்திடுவேன் - எந்தன்

4. அற்புதமாய் என்னை அழைத்தவரே
அற்பமான எந்தன் சரீரத்தினை
தற்பரனே உந்தன் சாயலாய் மாற்றிடும்
ஒப்பற்ற சுவிசேஷம் ஈந்திட்டீரே - எந்தன்

5. கிருபையின் பூரணர் வெளிப்படும் நாள்
மகிமையாய் நெருங்கியே வந்திடுதே
சீர்பொருந்தி அவரோடு நாம் சீயோனில்
சேர்ந்தொன்றாய் வாழுவோம் நித்தியமாய் - எந்தன்

# Tamil Hymn No 333

## HIS CONDESCENSION

சரணங்கள்

1. தேவ மைந்தன் இயேசு கிறிஸ்து
   துதிக்குப் பாத்திரரே
   தோன்றினாரே தாழ்மையின் உருவாய்
   தூயராம் தீர்க்கர் உரைப்படியே

பல்லவி

ஆனந்தமாய் நாம் ஆர்ப்பரிப்போம்
அல்லேலூயா மகிமை
அற்புதர் இயேசுவுக்கே

2. ஞானம் நீதி பரிசுத்தம் மீட்பும்
   ஆன திரு சுதனே
   வானவரின் சாயல் நாம் அணிய
   மானிட ரூபம் தரித்தவரே - ஆன

3. பாவம் போக்கும் பலியாக தமையே
   பாரினில் ஈந்தனரே
   மாநிலத்தோர் வானிலத்தோர்
   மகிழ்வுடன் வணங்கிடும் நாமமுள்ளோர் - ஆன

4. பேயின் சக்தி மாய்த்திட தேவ
   சேயன் மரித்தாரே
   தியாகத்தின் மா மேன்மையின் உயர்வை
   நாயகன் நானிலம் அறியச் செய்தார் - ஆன

5. அல்லேலூயா மகிமையும் கனமும்
   ஆளுகையும் இவர்க்கே
   ஆசையுடனே பணிந்திடுவோமே
   அதிசயமாய் நம்மை மீட்டவரே - ஆன

# Tamil Hymn No 334

## MY MAKER IS MY HUSBAND

சரணங்கள்

1. என் சிருஷ்டிகரே என் நாயகரே
   என்னையும் இரத்தத்தினால் கழுவி
   கன்மலையாம் உம்மேல் என்னை நிறுத்தியே
   கலங்கிடா வன் விசுவாசம் தந்தீர்

பல்லவி

இயேசு மணாளா எப்போ வருவீர்
ஏழை என் ஆவலை தீர்த்திடவே
தேசு நிறைந்த உம் பொன் முகம் கண்டிட
மாசில்லாதோனாக வாஞ்சிக்கிறேன்

2. பாவத்தில் மூழ்கி மாள்கையிலே
   தேவாவியா லென்னில் ஜீவனீந்தர்
   மேவி உயிர்ப்பித்து என்னையும் உம்மோடு
   சேர்த்தீரே உன்னத ஸ்தானத்திலே - இயேசு

3. மண்ணான சரீரம் மாறிடவே
   விண் சாயலை அது பெற்றிடவே
   தப்பில்லாத நல் உபதேசமீந்திட
   அப்போஸ்தலரை அனுக்கிரகித்தீர் - இயேசு

4. முன்னோர்கள் கண்டிடா பொக்கிஷமே
   கண்டேன் கிருபையை உம்மிலே நான்
   அண்ணலாம் இயேசுவே சொல்லொண்ணா பாடுகள்
   நண்ணிடினும் அழியாது காத்தீர் ! - இயேசு

5. அளவில்லா ஐசுவரியத்தின் நிறைவே
   விலையேறப் பெற்ற நற்பொக்கிஷமே
   அழிவற்றோனாய் உம் முகம் காணும் வேளையில்
   ஆனந்தத்தால் மகிழ்ந்தார்ப்பரிப்பேன் - இயேசு

# Tamil Hymn No 335

## SELF DENIAL

சரணங்கள்

1. உம்மைப் பின் செல்லவே என்னையும் இயேசுவே
உவந்து இத்தரையிலே ஏகனாய் அழைத்தீர்
உன்னதமான அழைப்பினை உணர்ந்தே
உத்தமரே நான் கீழ்ப்படிவேன்

பல்லவி

முற்றுமாய் பலியாய் இதோ – என் இயேசுவே
தத்தமாய் படைக்கிறேனே
ஏற்றுக் கொண்டென்னை உம் சித்தம் போல் நடத்தி
மாற்றும் சம்பூரணனாய்

2. தன் ஜீவன் வெறுத்தே தன் குருசெடுத்தே
என்னைப் பின் பற்றிடாதோன் என் சீஷன் அல்லவே
என்றுரை செய்தீரே மாறா இவ்வாக்கினை
இன்று நான் கேட்டே வந்திடுவேன் - முற்று

3. மாமிசத்தின்படி எவரையும் அறியா
மறந்தவனாய் அதின் மேன்மையும் துறந்தே
சர்வ வல்லவரே இப்புது சிருஷ்டியில்
சார்ந்திணைந் தோங்கி வளர்ந்திடுவேன் - முற்று

4. கிறிஸ்துவின் சிந்தையே ஆயுதமாகவே
தரித்துமே மனதில் மரித்தவனாகவே
கிருபையின் நிறைவே அழைத்தீர் முன் அறிந்தே
திருச்சித்தம் செய்யவே வெறுத்தெனையே - முற்று

5. சீயோனின் வழியே இடுக்கமும் நெருக்கமே
சோர்ந்திடாதே அதினூடே பின் பற்றுவேன்
நேசரின் முகத்தின் ஒளியிலே நடந்தே
அசையாத பர்வதம் போல் நிலைப்பேன் - முற்று

# Tamil Hymn No 336

## HIS PRECIOUS BLOOD

சரணங்கள்

1. கல்வாரியின் கருணையிதே
காயங்களில் காணுதே
கர்த்தன் இயேசு பார் உனக்காய்
கஷ்டங்கள் சகித்தாரே

பல்லவி

விலையேறப் பெற்ற திரு ரத்தமே - அவர்
விலாவினின்றுப் பாயுதே
விலையேறப் பெற்றோனாய் உன்னை - மாற்ற
விலையாக ஈந்தனரே

2. பொன் வெள்ளியோ மண்ணின் வாழ்வோ
இவ்வன்புக் கிணையாகுமோ
அன்னையினும் அன்பு வைத்தே
தம் ஜீவனை ஈந்தாரே - விலை

3. சிந்தையிலே பாரங்களும்
நிந்தைகள் ஏற்றவராய்
தொங்குகிறார் பாதகன் போல்
மங்கா வாழ்வளிக்கவே - விலை

4. எந்தனுக்காய் கல்வாரியில்
இந்தப் பாடுகள் பட்டீர்
தந்தையே உம் அன்பிதையே
சிந்தித்தே சேவை செய்வேன் - விலை

5. மனுஷனை நீர் நினைக்கவும்
அவனை விசாரிக்கவும்
மண்ணிலவன் எம்மாத்திரம்
மன்னவா உம் தயவே - விலை

# Tamil Hymn No 337

## THOU ART MY ALL

சரணங்கள்

1. திரியேக தேவனைத் துதித்திடுவோம்
நிதம் அவர் நாமத்தை உயர்த்திடுவோம்
நீடித்த நாட்களாய் நிறைத்தெம்மையே
நித்தமும் நடத்துவார்

பல்லவி

மீட்பரும் நீரே மேய்ப்பரும் நீரே
மேன்னையும் மகிமையுமே
மாறிடா நல் இயேசுவே

2. பாவத்தில் ஜீவித்த காலத்திலே
பரிவுடன் இரட்சிக்க வந்தவரே
நீங்காது விசுவாசப் பாதையிலே
தாங்கினீர் உம் தயவால் - மீட்ப

3. சோதனை சூழ்கையில் ஜெயக்கொடியாய்
சோர்ந்திடும் உள்ளத்தில் மா பெலனாய்
தனிமையில் ஏற்றதோர் தோழனுமாய்
கனிவாய் கரம் பிடித்தீர் - மீட்ப

4. அபிஷேகம் செய்து எம் சிரசதனை
ஆனந்த சந்தோஷத்தால் நிறைத்தே
அகமதில் இன்பக் கீதம் அளித்தே
மகிமையில் முடி சூட்டுவீர் - மீட்ப

5. எக்காள நாதம் வானில் முழங்க
ஏகிடுவார் சுத்தர் இயேசுவுடன்
ஆழிவற்றோராய் அவரோடிணைந்தே
ஆளுவோம் சீயோனிலே - மீட்ப

Tamil Hymn No 338

## EMMANUEL

பல்லவி

இயேசு இரட்சகர் ஏழையாக
இத்தரை மீதில் வந்துதித்தார்

சரணங்கள்

1. வான் வெளி தனில் விண் தூதர்கள் கூடியே
இன்னிசை முழக்க முன்னணையில்
இன்னல்கள் போக்கும் மாந்தர்க்கு ஒளியாய்
அன்பர் அவதரித்தார் - பூவில் - இயேசு

2. பார்தலம் வரவே பரன் துறந்தனரே
பாவ நிவாரண பலியிவரே
பாசம் வைத்ததினால் எளியோர் தாழ்மையினை
பரிவாய் கண்ணோக்கிடவோ – மிக - இயேசு

3. பெத்தலை பதியாம் தேவ குமாரன்
மெல்கிசேதேக்கின் முறைமையிலே
நிலைத்திடும் நித்திய ஆசாரியரிவர்
தொல்லுலகில் உதித்தார் - இந்த - இயேசு

4. தேவனின் மகிமை சாயலை யிழந்தே
ஜீவனற்றவராய் மாள்கையிலே
நாடியே மேவி ஜீவனையளித்த
நல்ல சமாரியனே – ஏற்ற - இயேசு

5. இம்மானுவேலன் உன்னத மைந்தன்
இன்றுமென்றும் நம் மோடிருப்பார்
பணிவுடன் தேவசித்தமே செய்ய
படைத்திடுவோம் அவர்க்கே முற்றும் - இயேசு

# Tamil Hymn No 339

## ZION, A MIGHTY FORTRESS

பல்லவி

என்னை அழைத்த மா தேவ தயவை
என்றும் புகழ்ந்திடுவேன்

அனுபல்லவி

கன்மலை கிறிஸ்துவே கண்டேன் உம்மிலே
கிருபையின் நிதியே - என்னை

சரணங்கள்

1. கைவிடேனே உன்னை என்றும் என் உள்ளங்
கைகளில் வரைந்திட்டேனே
கண்மணி போல் காவல் செய்குவேன் என்றதால்
கனிவுடனே துதிப்பேன் - என்னை

2. தீயோனெமக் கெதிராய் உருவாக்கிடும்
ஆயுதங்கள் அறவே
வாய்த்திடாதே புது சக்தியால் நிறைத்தென்றும்
ஜெயத்துடன் நடத்துகிறீர் - என்னை

3. அநாதியாய் உம்மிலே மறைந்திருந்த
அநந்த ஞானமதை
என்னில் விளங்கிடச் செய்யும் இக்கிருபையை
எண்ணியே துதித்திடுவேன் - என்னை

4. தேவ மகிமையின் நம்பிக்கையதிலே
ஜீவியம் செய்திடவே
முற்றுமாய் உம்மிலே தேறினோனாய் நிலை
பெற்று வளர்ந்திடுவேன் - என்னை

5. ஆனந்தமும் அகமகிழ்வும் ஆர்ப்பரிப்பும்
ஆன சுகம் பெலமும்
ஞானமும் சீயோனின் மா வல்ல அரணும் பொன்
னேசுவே நீரெனக்கு - என்னை

# Tamil Hymn No 340

## HOLY IN LOVE

சரணங்கள்

1. மாறாத நித்திய நோக்கத்தால் இயேசுவே
மண்ணில் எம்மைப் பிரித்தே
மங்கா உந்தனின் சேவை எங்கும் செய்திடவே
துங்கவனே எம்மைக் கண்டீர்

பல்லவி

அன்பிதுவே அன்பிதுவே – என்னை
அழைத்த மா அன்பிதுவே
அன்பில் பரிசுத்தனாய் என்னை நிறுத்த பிதா
நினைத்த பேரன்பிதுவே

2. பாடுகள் சகிக்க தேவ ஜனத்தோடே
பரனே அன்பாய் அழைத்தீர்
வீடும் நாடும் இனம் ஜனம் யாவும் மறந்து நாம்
இயேசுவே உம்மைப் பின் செல்ல - அன்பி

3. சந்தோஷத்தோடே எம் ஜீவனை ஊற்றிட
சுவிசேஷ சேவையிலே
நிந்தை அவமானம் தொல்லைகள் துன்பங்கள் துக்கங்கள்
உந்தனுக்காய் சுமந்தே - அன்பி

4. தூதரும் பெற்றிடா தூய நல் சேவையை
தாசர் எமக்களித்தீர்
திவ்ய தூதுகள் அளித்தே சபையை வளர்த்திட
தந்தீர் அப்போஸ்தலரை - அன்பி

5. பூவில் பிதாக்களைப் போல் ஜீவித்தோரெல்லாம்
பொற்பரன் இயேசுவுடன்
சீயோன் சிகரமீதில் நின்று ஆளுகை செய்யும் நாள்
சீக்கிரம் வந்திடுதே - அன்பி

# Tamil Hymn No 341

## WHY THESE SUFFERINGS

பல்லவி

இயேசுவே ஏனோ இந்தக் கோரப் பாடுகள் - ஈன
சிலுவை மரமீதில் எனக்காகவோ எனக்காகவோ

சரணங்கள்

1. எந்தன் பாவ சாபத்தைப் போக்கும் பலியாகவோ
இந்தப் பாடுகள் சகிக்க நினைந்தோ
அந்தக் கேடடைந்தீர் சாந்த ரூபனே - இயேசு

2. நோய்கள் யாவும் தீர்க்கவே நேயா திருமேனியில்
காயம் ஏற்றீரோ உம் ஜீவன் ஈந்தீரோ
நாயகரே என்றும் நான் உம் சொந்தமே - இயேசு

3. சதா காலங்களாய் நான் ஜீவ தண்ணீரூற்றிலே
தாகம் தீர்க்கவோ ஆனந்தங் கொள்ளவோ
தாகமானேனென்றீர் சிலுவையிலே - இயேசு

4. பஸ்கா ஆட்டுக்குட்டியாய் பாரில் இரத்தம் சிந்தியே
யாவும் ஆயிற்றென்று ஜீவன் வைத்தீரோ
பரிசுத்தனாக மாற்ற என்னையே - இயேசு

5. நீதியால் நிறைந்து நான் சூரியனாக சோபிக்க
நித்திய பிதாவே நீர் பாவமானதால்
இந்த சூரியன் முகம் தான் மறைந்ததோ - இயேசு

6. நாதா நீர் சகித்த இப்பாடுகளை எண்ணியே
நான் இகத்திலே உமக்கென் செய்குவேன்
நான் இதோ என்னையே தத்தம் செய்கிறேன் - இயேசு

# Tamil Hymn No 342

## FOR ZION'S SAKE

பல்லவி

என்னரும் சீயோனே உன்னில் நான் சேர்ந்திட
என்னகம் வாஞ்சையாய் காத்திடுதே
என்று நான் காண்பேன் உன் தேவ மகிமையை
அன்று என் ஆவலும் தீர்ந்திடுமே

சரணங்கள்

1. சீயோனே உன்னில் பிறந்தோரின் நாமமே
சீரிலங்க உன்னதன் நினைந்தே
உன் தொகையதனை எண்ணி ஸ்திரமாக்கி
இன்னமும் மென்மேலும் உயர்த்துவார் - என்னரும்

2. உன்னிமித்தம் தம்மை அண்ணகராக்கினோர்
உத்தம ஸ்தானமும் கீர்த்தியுமே
என்றும் அழியாத மேன்மையுறும் நாமம்
பெற்றுன்னில் ஆளுகை செய்திடுவார் - என்னரும்

3. பூதலத்தோரின் பாவங்களை எண்ணாது
ஒப்புரவாக்கியே கிறிஸ்துவிலே
ஒப்பில்லாத இவ்வுபதேசத்தை உந்தன்
அப்போஸ்தலரிடம் ஈந்தனரே - என்னரும்

4. சீயோனே உன்னை நேசித்த சுத்தர் பலர்
ஜீவனை பலியாய் வார்த்தனரே
இக்கால பாடுகள் உந்தன் மகிமைக்கு
எக்காலமும் இணையாகிடுமோ - என்னரும்

5. தேவ சித்தமே சம்பூரணமாய் இயேசு
செய்ததினாலே உம் நாயகனே
வந்திடுவாரே உன் வாஞ்சைகள் தீர்த்தென்றும்
சொந்தமாய் உந்தனைக் கொண்டிடவே - என்னரும்

6. மெல்கிசேதேக்கின் முறைமையிலே வந்த
நித்தியமான ஆசாரியரே
நெற்றியில் தாதையின் நாமம் தரித்தொன்றாய்
சீயோனே உன் மீதில் வீற்றிருப்பார் - என்னரும்

# Tamil Hymn No 343

## FILL ME WITH THY GRACE

சரணங்கள்

1. இன்றும் என்றும் மாறிடாத இயேசுவே
ஜீவனீந்தீரல்லோ அன்பினால்
திவ்ய வாக்குத்தத்தம் தந்தெம்மை ஸ்திரப்படுத்தி
நின் கிருபையாலே நிறைத்திடுவீரே

பல்லவி

இயேசுவே என்னை நீர் ஆசீர்வதியும்
சௌக்யமீந்திடும் நான் நம்பி வந்தேனே.

2. அன்பினால் சகேயுவை அழைத்துமே
அன்று இரட்சிப்பளித்திட்டீரே
இன்று யான் பெறவே உம் மாறிடா சந்தோஷமே
நின் கிருபையாலே நிறைத்திடுவீரே. - இயேசு

3. ரோகிகளின் ஏற்ற நல்ல வைத்தியரே
தேகமதில் காயமேற்றீரே
என்னை சுகமாக்க நின் வன் கரத்தை நீட்டியே
நின் கிருபையாலே நிறைத்திடுவீரே. - இயேசு

4. வாவென்று அழைத்த வல்ல சத்தமே
லாசரை உயிர்ப்பித்ததுவே
என்னை உயிர்ப்பிக்க அவ்வல்ல வாக்குரைத்துமே
நின் கிருபையாலே நிறைத்திடுவீரே. - இயேசு

5. யாவுமெனக்காய் முடித்த இயேசுவே
யாருண்டு இப்பாரில் உம்மைப்போல்
உம் மகிமை சாயல் இம்மண் சரீரம் பெற்றிட
நின் கிருபையாலே பூரணனாக்கிடும் - இயேசு

# Tamil Hymn No 344

## WHO IS LIKE UNTO HIS PEOPLE

பல்லவி

எந்தன் உள்ளமே உந்தன் இயேசுவின்
எண்ணில்லாத நன்மைகட்காய் துதிப்பாய்

சரணங்கள்

1. நீதியின் வன்கரத்தாலே தாங்கியென்
ஜீவித பாதையிலே
நித்தம் கிருபையினால் முடி சூட்டினார்
நிதம் அவர்க்கே துதியே - எந்தன்

2. என்கால்களை மானின் கால்கள் போலாக்கி
உன்னத ஸ்தலங்களிலே
ஜெயத்துடன் என்னை நடத்துவதாலே
நேயர்க்கென்றும் துதியே - எந்தன்

3. யாருண்டு எம் நிகர் தம்மை யுவந்தே
கொண்டதினால் சொந்தமாய்
யாவையும் செய்து முடித்தார் எமக்காய்
சாற்றிடுவோம் துதியே - எந்தன்

4. துன்பத்தின் வாயிலினூடே நடத்தி
பொன்னகர் சேர்ப்பவராய்
இன்முகம் காட்டி முன் நடத்துவதாலே
தந்திடுவோம் துதியே - எந்தன்

5. அன்பால் நிறைந்த சாலேமே! சீயோனே!
உன் மணவாளன் இதோ
வந்திடுவார் உன்னை சேர்க்கும் பொன்னாளை
நினைந்தவரைத் துதிப்பாய் - எந்தன்

# Tamil Hymn No 345

## HE CAME TO RESTORE

பல்லவி

தேடி வந்தார் தேடி வந்தார் தேடி வந்தாரே
தேவ சேயனாம் அன்பின் ரூபமாய் - இயேசு
தேடி வந்தாரே

சரணங்கள்

1. காரிருள் சூழ்ந்த பாவ உலகின்
   வாரிதியில் அழியா
   தாரகையாய் நின்று நேர் வழி காட்டிடும்
   மா வரும் இரட்சகராய் - தேடி

2. தேடுவாரின்றியே ஓடி அலைகையில்
   மேடுகள் மீதினிலே
   கூட்டி நல் மேய்ப்பராய் மந்தையிற் சேர்த்து ஈ
   டேற்றிட நினைந்தவராய் - தேடி

3. பாரஞ் சுமந்தே உள்ளம் நொந்தோரை
   பரிந்து ஏற்றிடவும்
   போக்கிடவும் வினை நீக்கிடவும் தேவ
   ஆக்கினை ஏற்றவராய் - தேடி

4. ஆழி போல் ஆழ்ந்த அவர் தனத்தால்
   தாழ்ந்தோரை வாழ்விக்கவே
   ஏழ்மையின் கோலமே பூண்டவராயிந்த
   பாழுலகந்தனிலே - தேடி

5. ஜீவனுள்ள மா நம்பிக்கை யீயும்
   சீயோனின் தூதுகளால்
   நித்தியரான பிதாவின் நற்சாயலில்
   நித்தம் வளர்ந்திடவே - தேடி

# Tamil Hymn No 346

## CHRIST AND THE CHURCH

பல்லவி

தன் மணவாளனுக்காய் அலங்கரிக்கபட்டதோர்
பொன்னொளி நேர் புரியாய் புதிய எருசலேமே
நன் மணவாளியாக இறங்கிடுதே - இறங்கிடுதே

சரணங்கள்

1) பன்னிரு அஸ்திபாரம் அப்போஸ்தலர் தீர்க்கரே
தன்னிகரில்லா கிறிஸ்து மூலைக்கல்லாகவே
வச்சிரக் கல்லைப் போல பிரபையும் வீசுதே
வசித்திடுவார் தேவன் நிதமதிலே - தன்

2) தேவ மகிமையே அதிலொளி வீசுதே
தேவாட்டுக்குட்டி அதின் மங்கிடா விளக்கே
இராக்காலமேயில்லாத இன்பரின் நகரே
இணையற்ற கர்த்தரின் கைப்பணியே - தன்

3) ஆட்டுக்குட்டியின் ஜீவ புஸ்தகமதிலே
நாமமுள்ளோரே சதா அதில் வசிப்பவரே
அருவருப்பானது மெத் தீட்டுள்ள தொன்றுமே
பிரவேசிப்பதில்லையே இனி அதிலே - தன்

4) கறை திரை குறை ஏதும் அறவே அற்ற சபை
தரித்து நின்றிலங்குதே கிறிஸ்துவின் மகிமை
திருவசனத்தினாலும் பரிசுத்த ஆவியாலும்
மறுரூபமானதோர் கண்மணியே - தன்

5) கிருபையினால் பிறந்த புதிய எருசலேமே
திருசித்தம் செய்தென்றுமே நின்றரசாளுமே
கிறிஸ்துவின் பூரணமே நிறை அலங்காரமே
நினைக்க அருமையே தன் ஜெயத்தினையே - தன்

# Tamil Hymn No 347

## HE'S COMING FOR THEM

சரணங்கள்

1. காலையிலோ மாலையிலோ நள்ளிரவோ நடுப்பகலிலோ
அருணோதயத்திலோ அஸ்தமனத்திலோ
நினையாத வேளை இயேசு வருவார்

பல்லவி

காண்போமே நாம் காண்போமே நாம்
நாயகன் இயேசுவின் பொன் முகமே

2. பாவமில்லா ஆவலுடன் பார்தலத்தில் பரன் இயேசுவுக்காய்
பாடுகள் பாரங்கள் யாவும் சுமந்தெதிர்
பார்த்திடும் தூயருக்காய் வருவார் - காண்

3. சோதனையில் வேதனையில் சோர்வினில் துன்பம் துயர் தனிலும்
நோவினில் சாவினில் ஜீவனை வைத்தோர்க்கு
ஜீவ கிரீடம் தர வருவார் - காண்

4. அன்பினிலே கன்னிகையாய் கற்பினிலே கறை யற்றவராய்
ஆதியப்போஸ்தல ஊழியத்தால் ஒன்றாய்
ஆன சாலேமுக்காய்த் தோன்றிடுவார் - காண்

5. மேதினியில் ஆதியன்பால் தேவசித்தமே செய்தவரெல்லாம்
தேவக் குமாரனின் சோதரராய் சீயோன்
மீதினில் நின்றிட வந்திடுவார் - காண்

6. எத்தனையோ சுத்தர்கள் தம் சேவை முடித்துமே பூரணராய்
உத்தம நம்பிக்கையால் உறங்க மண்ணில்
சீயோனே! தாமத மேன் இனியும் - காண்

# Tamil Hymn No 348

## THE WORD OF HIS POWER

சரணங்கள்

1. நேசர் இயேசு அழைக்கும் சத்தம்
கேட்டிடாயோ சிலுவையில்
அன்பினாலே ஜீவனை ஈந்தே
சொந்தமாய் உன்னை மாற்றவே

பல்லவி

வந்திடுவாய் நீ அவர் பாதமே
தந்திடுவாய் உன் உள்ளமதையே
உந்தனை இன்றே ஏற்றுக் கொள்வாரே

2. அவரின் நாமம் உயர் அரணே
ஆவலா யோடி சுகிக்கவே
பெறவே திவ்ய கிருபை நிறைவாய்
வருவாய் இதுவே தருணமே - வந்தி

3. நெகிழ்ந்த கைகள் திடனடைய
தளர்ந்த கால்கள் நிமிர்ந்திட
குருடரும் தம் பார்வை பெறவே
அவரின் வார்த்தை வலியதே - வந்தி

4. மங்கி யெரியும் திரியை அணையார்
நெரிந்த நாணலை முறியாரே
தகர்ந்த உள்ளம் இணைந்து பாட
பகர்ந்திடுவார் அன்பினையே - வந்தி

5. பாரில் உந்தன் வாஞ்சை தீர்த்தே
பரத்தின் இன்பம் அளிப்பாரே
நித்திய ஜீவ மொழிகள் கேட்க
சத்திய ரேசு அழைக்கிறார் - வந்தி

# Tamil Hymn No 349

## JEHOVAH-NISSI

சரணங்கள்

கர்த்தரை நான் எக்காலமும் ஸ்தோத்திரிப்பேன்
அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்

பல்லவி

1. கர்த்தருக்குள் எந்தன் ஆத்துமாவும்
களித்து மேன்மை பாராட்டிடுதே
ஒருமித்தே நாம் உயர்த்திடுவோமே
கருத்தாய் அவர் நாமமே - கர்த்த

2. தூய பரன் முகம் நோக்கிடுவோர்
சூரிய சோபையாய் மாறிடுவார்
ருசிக்க இன்பமே இயேசுவின் அன்பே
சுகிக்க நல்லவரே - கர்த்த

3. ஜீவனை யீந்தார் தம் சாவினாலே
வேதனை நீக்கினார் நோவினாலே
அற்புதமாய் எந்தன் ஜீவியமதையே
தற்பரன் மாற்றுகிறார் - கர்த்த

4. தேற்றி அப்போஸ்தல தூதுகளால்
மாற்றிடுவார் அவர் ரூபமதாய்
ஊற்றியவர் புது ஜீவன் எந்நாளும்
ஏற்றுவார் ஜெயக் கொடியே - கர்த்த

5. அக்கினயின் ஊடே நடந்திடினும்
விக்கினமின்றியே நான் துலங்க
ஆக்குவார் பொன்னினும் என் விசுவாசம்
மிக்கதோர் மகிமையதாய் - கர்த்த

6. சீயோனே உன் பெலன் தரித்திடுவாய்
வீற்றிடுவாய் எழுந்தெருசலேமே
உன் துயர் நீக்கிடும் இன்பமணாளன்
வந்திடும் வேளையிதே - கர்த்த

# Tamil Hymn No 350

## A SON IS GIVEN

பல்லவி

நமக்கொரு பாலகன் பிறந்தாரே
நமக்கோர் குமாரனும் கொடுக்கப்பட்டாரே
அதிசயமாமே அவரது நாமம்
மாமிசத்தில் வந்தவரே

சரணங்கள்

1. இறைமனு வேலனாய் கிருபையும் சத்தியம்
நிறைந்தவராய் நம்மோடிணைந்தவரே
சிறை கிடப்போரை விரைந்து இரட்சிக்கவே
நிறையன்பு கொண்டு நினைந்தவரே - நமக்கொரு

2. இளங்கிளை போலவே தழற்நிலந்தனினின்று
துளிர்விடும் வேரென வெளிப்படவே
ஒளிர்வுடை வேதனின் அருள் மொழியவரே
எளியவர் கோலமதேற்றவரே - நமக்கொரு

3. ஆகாயப் பறவையும் அடையுமோர் கூடுண்டே
அலைந்தோடும் நரிக்குமோர் குழியுமுண்டே
அனைத்தையும் வார்த்தையால் வகுத்த விண் சுதனோ
அவனியில் சாய்ப்பிட மற்றவரே - நமக்கொரு

4. நீதியிலும் சமாதானத்திலும் உயர்
இராஜனாய் ஆளுகை செய்திடுவோர்
மெல்கிசேதேக்கின் முறை வழி வருவோர்
மூலைக்கல்லென்றுமே சபையதற்கே - நமக்கொரு

5. மகிமையும் கீர்த்தியும் புகழ்ச்சியும் துதிமிகு
ஆதிபரன் இயேசுவின் நாமத்திற்கே
முடிவிடம் வரையும் இடரற நடத்தும்
திருவடிதனில் எமைப் படைத்திடுவோம் - நமக்கொரு

# Tamil Hymn No 351

## WALKING BY FAITH

சரணங்கள்

1. விஸ்வாசத்தின் ஆதியும் அந்தமான நல்
இயேசுவையே நோக்கி செல்லுவோம்
நேசித்தீரோ என்னையும் மீட்க உந்தன் கிருபையால்
விஸ்வாசப் பாதையில் முன் செல்லவே

பல்லவி

செல்லுவோம் முன் செல்லுவோம்
நாம் விசுவாசிப்போர் இன்னாரென்றறிவோம்
இயேசு நம் முன்னே செல்வதால் அஞ்சிடோம்
முற்று முடிய நம்மை நடத்துவார்

2. விஸ்வாசத்தினாலே உம் மகிமை காணவே
பரிசுத்தரே என்னை அழைத்தீர்
விஸ்வாசத்தினாலே நான் நித்தம் கண்டு உம் முகம்
விஸ்வாச பாதையில் முன் செல்லவே - செல்

3. பாரினில் அந்நியரும் யாதுமற்றோராய்
பரனே உந்தன் சித்தம் செய்யவே
திவ்ய அபிஷேகமே ஊற்றினீர் என் உள்ளத்தில்
விஸ்வாச பாதையில் முன் செல்லவே - செல்

4. நல்ல போர் செய்து எம் ஜீவன் வைத்துமே
நல்கிய விஸ்வாசம் காத்துமே
என் கீரிடம் பெறவே ஆவலோடெந்நாளுமே
விஸ்வாச பாதயில் முன் செல்லவே - செல்

5. விஸ்வாசத்தின் வீரரே சேர்ந்து வாருமே
விழித்துமே உம் தீபம் உயர்த்துமே
விண்ணில் இயேசு தோன்றும் நாள் வேகமாய் நெருங்குதே
விரைந்து ஏகுவோம் ஆனந்தமாய் - செல்

# Tamil Hymn No 352

## THE IMMORTAL SON OF GOD

பல்லவி

ஜெயமே ஜெயமே ஜெயம் அல்லேலூயா
கிறிஸ்தெழுந்தார் உயிர்த்தெழுந்தார்
சாவை வென்றெழுந்தார்

சரணங்கள்

1) மரணத்தின் கூர் ஒடித்தே
பாதளத்தின் சிறை அழித்தே
அழிவில்லா தேவ குமாரனாய் உயிர்த்தெ
எழுந்தனர் ஆர்ப்பரிப்போம் - ஜெய

2) மரணமில்லை யவர்க்கே
பரிகரித்தனர் சாவினையே
மரண பயமென்பதில்லையே இனியும்
பரன் உயிர்த்தெழுந்ததினால் - ஜெய

3) மகிமையின் ஆவியினால்
கிறிஸ்தேசு உயிர்த்ததினால்
தாழ்ச்சையுறும் என் சரீரத்தினை விண்
மாட்சியாய் மாற்றிடுவார் - ஜெய

4) நித்திய நம்பிக்கையால்
திரையேகிடச் செய்திடுவார்
ஆத்தும நங்கூரமே எந்தன் வாழ்வில்
ஜெயித்தோர் சிங்காசனமே - ஜெய

5) மகிமையுறும் சபையாய்
மகிழ்ந்தே தம்முன் நிறுத்திடவே
மணவாளன் இயேசுவே தோன்றுகையில்
மறைந்தேகுவார் அவர் சுத்தரே - ஜெய

# Tamil Hymn No 353

## CHRIST BREAKS YOUR FETTER

சரணங்கள்

1) கொல்கொதா மலையில் விலையேறப் பெற்ற
குருதியும் இயேசுனக்காய் - சொரிந்தே
கருணையின் தேவன் மரணமும் ருசித்தார்
உருகியே நினைந்துன்னையே

பல்லவி

அலையாதே வா மலையாதே வா
நிலையான கன்மலை இயேசுவண்டை

2) கானல் நீர் தேடும் மானைப் போல் நீயும்
நாணாது இன்பங்களால் அசையும்
நாணல் போல் வீணாய் அலைவாயோ உந்தன்
வாணாளும் வீணாகுதே - அலை

3) வியாதியினாலே தேகம் வருந்தி
வாடுவதேனியும் - நானுன்
பரிகாரியான கர்த்தர் என்றாரே
வைத்தியமும் ஔஷதமே - அலை

4) திரு இரத்தத்தாலே பரிசுத்தனாக்க
திறந்தாரே ஊற்றுனக்காய் - பரிந்து
உயிர் நீங்கும் மைந்தன் துயர் கொள்ளும் காட்சி
உருக்காதோ உன் உள்ளமே - அலை

5) அபிஷேகத்தாலே முறிப்பார் உன்தோளின்
அடிமை நுகந்தனையே – அவரில்
காணவே புதிய ஜீவனின் வழியே
கனிவாய் அழைக்கிறாரே - அலை

6) இணையில்லா நேசர் அணைத்தே இவ்வேளை
இளைப்பாறுதல் அளிப்பார் – வருவாய்
இத்தரை மீதில் ஜெயமான வாழ்வை
இத்தருணம் தருவார் - அலை

# Tamil Hymn No 354

## LIVE BEING CRUCIFIED

பல்லவி

இனி நான் அல்ல பிழைப்பதென்னிலே
கிறிஸ்தேசுவே என்னில் ஜீவிக்கிறார்

சரணங்கள்

1 அனுதினம் நான் சிலுவையிலே
அறையுண்டு ஜீவிக்கிறேன்
மரித்தவனாய் திரு சித்தமே
நிறைவேற்றுவதென் ஆகாரமே - இனி

2 கிறிஸ்துவுடன் மரணமதின்
சாயலில் இணைந்ததிலே
அபிஷேகத்தால் உயிர்த்தெழுந்தே
நவ ஜீவனிலே நடந்திடுவேன் - இனி

3 திரையகன்றே சரீரத்தில் மா
பரிசுத்த ஸ்தலம் வரவே
வெறுத்திடவே சுயமென்னிலே
தரிப்பேன் கிறிஸ்தின் சிந்தையதே - இனி

4 கிருபையிலே நிதம் நிலைத்தே
திருமுகம் தரிசிக்கவே
கிறிஸ்துவின் நல் நிறைவதனை
பெறவே விரைந்தே தொடர்ந்திடுவேன் - இனி

5 தம்மை பலியாய் சிலுவையிலே
தந்த இவ்வன்பினையே
நினைக்கையிலே அகந்தனிலே
எனக்கோர் மேன்மை வேறில்லையே - இனி

# Tamil Hymn No 355

## A UNIQUE PLACE FOR THE EUNUCHS

பல்லவி

மகிமையிலே இயேசு வெளிப்படுவார்
மகிழ்வுடன் காண்போமே அந்நாளிலே
சீயோனின் நற்பணி தீர்ந்திடுதே
நித்திய காலமாய் ஆனந்திப்போம்

சரணங்கள்

1. கர்த்தரால் மீட்கப்பட்டோர் சீயோனுக்கே
   களிப்புடன் ஏகிடுவார்
   மங்கிடா மகிழ்வே தங்கிடும் சிரசில்
   நீங்கிடும் சஞ்சலமே - மகிமையிலே

2. நேய பிதாவின் முகங் கண்டிடுவார்
   தூய அப்போஸ்தலரே
   ஆட்சி செய்வோர் சீயோன் மலையதில் இவரே
   ஆட்டுக்குட்டியுடனே - மகிமையிலே

3. அண்ணகரும் இகத்தில் அந்நியரும்
   ஆன சீயோன் சுதரே
   உத்தம ஸ்தானமும் கீர்த்தியும் அழியா
   நித்திய பெயர் பெறுவார் - மகிமையிலே

4. மகிழ்வுடன் அழுகையின் தாழ்வின் இருளில்
   வழியேகும் தூயவரே
   அழிவில்லா சீயோனின் தேவ சந்நிதியில்
   அகமகிழ்ந்தே துதிப்பார் - மகிமையிலே

5. வேதமும் வல்லமையும் சீயோனிலே
   நீதியின் ஆளுகையும்
   சொந்தமே நமக்கிந்த நித்திய மகிமை
   சந்ததம் அடைந்திடுவோம் - மகிமையிலே

# Tamil Hymn No 356

## ELSHADAI

பல்லவி

துதிப்போமே நாம் துதிப்போமே
துதித்தலே இன்பமே இயேசுவையே
துதி மிகு சாற்றுவோம் நேசருக்கே

சரணங்கள்

1. ஸ்தோத்திர பலியே சாட்சியாய் அவர்க்கே
   செலுத்தியே புதிய கிருபையில் பெருக
   சாற்றிடுவோம் துதியே – எந்நாளும் - துதி

2. தாயினைப் போல போஷித்து அணைக்கும்
   யெல்ஷதாவாய் கண் உறங்கிடா கர்த்தர்
   யாவரிலும் சிறந்தோர் – எமக்கு - துதி

3. ஜீவனோ சுகமோ துன்பமோ துயரோ
   கிறிஸ்துவின் அன்பினை விட்டகற்றிடுமோ
   முற்றுலும் ஜெயங்கொள்ளுவோம் -- அன்பாலே - துதி

4. நித்திய தேவ மகிமையை அடைய
   சத்தியத்தால் இடைக் கட்டியே அழைத்தார்
   நித்திய நம்பிக்கையே – பெருகுதே - துதி

5. ஆதி அப்போஸ்தல உபதேசத்தாலே
   தேவனின் சுதராய் விளங்கிடுவோர்க்கே
   நீதியின் சூரியனே – தோன்றிடுவார் - துதி

6. சீயோனே இன்ப எருசலேம் மனையே
   நாயகன் இயேசுவே உந்தனின் பதியே
   பாட்டினாலே துதிப்பாய் -- சீயோனின் - துதி

# Tamil Hymn No 357

## A STAR OUT OF JACOB

சரணங்கள்

1. இயேசுவே தேவனின் நேச குமாரன்
   பாசமும் அன்புமுள்ளோர்
   பாதையும் சத்தியமும் ஜீவனுமிவரே
   மாறிடா மீட்பருமே

பல்லவி

அல்லேலூயா மகிமை
வல்லவர் இயேசுவுக்கே
மாந்தரில் மாறா அன்பு கொண்டாரே
மகிபருக்கே மகிமை

2. தேவனின் தூய நற்சாயலிழந்தே
   கோபத்தின் பாத்திரரை
   தேடியே வந்து ஆக்கினை போக்கும்
   தேவாட்டுக் குட்டியிதோ - அல்லே

3. வந்தனரே தேவ சித்தமே செய்ய
   சொந்த சரீரத்திலே
   எந்தையின் தூய தாழ்மையின் மேன்மை
   சிந்தையில் தரித்திடுவோம் - அல்லே

4. இன்பத்திலும் வரும் துன்பத்திலும் நல்
   இம்மானுவேலனிவர்
   உன்னத அன்பில் காத்திடுவாரே
   உவந்தவர் கரமதிலே - அல்லே

5. யாக்கோபின் தாரகையாய் உதித்தோங்கும்
   யூத சிங்கம் இவரோ
   தாவீதின் வேரில் தோன்றுவோர் கிளையாய்
   இணையற்ற இரட்சகரோ - அல்லே

# Tamil Hymn No 358

## ALL MY SPRINGS ARE IN THEE

சரணங்கள்

1) எந்தன் ஊற்றுகளெல்லாம் உன்னிலே
இன்ப நகரமே உந்தனின் மேன்மையிதே
உன்னத தேவனின் வாஞ்சையும் நீயே
சொந்தமாய் அதில் வசிப்பாரே

பல்லவி

சீயோன் சிகரமதே சேர்வேன் எந்தன் நகரே
நிதம் வாஞ்சையிதே என் உரிமையிதே
நித்ய பிதாவின் பூரணமே

2) உன்னில் உதித்தவரின் உயர் நாமங்கள்
இன்னும் வரைந்திடவும் மகிழ்ந்துரைத்திடவும்
அன்பினில் பூரணராய் திகழ்ந்திடவே
சீயோனே உன்னைத் தெரிந்தாரே - சீயோ

3) உயர் அடைக்கலமாய் அரண்மனைகளில்
தூய நாமமே எங்கும் விளங்கிடுதே
நின்னையே நித்திய காலமாய் நினைப்போம்
கிருபையின் நிறைவாக - சீயோ

4) முற்றும் முதற்பலனாய் உனக்காகவே
மீட்டுக்கொண்டெனை உன் சுவிசேஷத்தினால்
மற்றெவர்க்கும் உரிமை எம்மில் இல்லையே
மாசற்ற சீயோன் உனக்கே - சீயோ

5) ஜெய கீதங்கள் உன்னில் நின்றிலங்குதே
தூய ஜீவியம் தேவ சிங்காசனமே
தேசுயர் தேவனின் மாட்சியில் மறைந்தே
மாண்புறு ஆட்சி செய்வோமே - சீயோ

# Tamil Hymn No 359

## A TRIUMPHANT LIFE

சரணங்கள்

1. நீதிமான்களின் கூடாரங்களில்
இராஜாவின் ஜெய தொனி
கெம்பீரத்தோடே முழங்கிடுதே
ஜெயித்தோர் ஜீவியமே

பல்லவி
நாம் முன் செல்லுவோம்
இயேசுவையே பின்பற்றுவோம்
நம் சேனையதிபன்
இயேசு யேகோவா நிசியே

2. எல்லாவிடத்தும் வெற்றி யெந்நாளும்
ஏசுவிலே சிறக்க
நீதியின் ஜெய பாதையிலே என்
தீபமாய் நடத்துவார் - நாம்

3. “இன்னல் இடர்கள் இப்பூவிலுண்டே
என்னை பின் செல்வோருக்கே”
என்றவரே இப்பாரிதை முற்றும்
வென்றார் ஜெயம் நமக்கே - நாம்

4. வீரராய் ஜெய ஜீவியம் பெற
சீராய் போர் செய்தவரே
மாறாத ஜீவ ஆற்றில் அருந்தி
தேறியோராய்த் திகழ்வார் - நாம்

5. நித்தம் நிலைக்கும் புத்திரனைப் போல்
இத்தரை ஆண்மகவாய்
சிங்காசனமே சேர்ந்திடுவாரே
சிந்தையில் ஜெயம் பெற்றோர் - நாம்

6. சீயோன் உனக்கே ஜெயம் எந்நாளும்
தீயோர் உன்னில் இல்லையே
சேவித்து உன்னை நேசித்து வென்றோர்
நின்றாளுகை செய்குவார் - நாம்

# Tamil Hymn No 360

## JESUS IS THE FOUNTAIN OF JOY

பல்லவி

அழைக்கிறார் அழைக்கிறார் இயேசு உன்னை
உனக்காய் ஜீவனை ஈந்தவர் அவரே
கனிவாய் அழைக்கிறாரே

சரணங்கள்

1) கல்வாரி மீதிலே மீறுதல் தொலைக்க
காயங்கள் அடைந்தனரே
வாதைகள் யாவும் போக்கிட வல்ல
வார்த்தையை நம்பியே வா - அழை

2) இதயம் நொந்து நொறுங்குண்டோரை
இகத்தில் தேற்றியவர்
கீலேயாத்தின் நல் ஔஷதமாக
காயங்களாற்றிடுவார் - அழை

3) ஏகனாய் நீயும் கானகவழியே
ஏகிடும் வேளையிலும்
மேய்ப்பனைப் போல இன்குரல் தந்து
மா தயவாய் அணைப்பார் - அழை

4) ஆவியினாலே அபிஷேகித்தே
ஆலயமாக்கிடவும்
நித்திய மகிமை பெற்றதில் வளர
சத்தியர் தயை அருள்வார் - அழை

5) இயேசுவே நித்திய ஜீவனும் வழியும்
சத்தியமுமானவரே
இயேசுவல்லாது பேரின்ப ஊற்றே
இப்பூவிலுனக்கில்லையே - அழை

# Tamil Hymn No 361

## HIS PURPOSE OF ME

பல்லவி

நித்திய காலமாய் இன்ப இயேசுவே
இணையில்லாத கீதங்களாலே
அன்பால் என் ஜீவியத்தில் தந்த நன்மைகளெல்லாம்
எண்ணியே துதியே சாற்றுவேன்

சரணங்கள்

1. நானிலந்தனிலே நாடியென்னில்
நாண்மதி போல நாட்டிய தயவை
நாவினால் கூறவும் நாட்களுமில்லையே
நாதனே நாட்கவி பாடுவேன் - நித்

2. வாரிதி போன்ற சோதனைகள்
காரிருளாக சூழ்ந்திடும் வேளையே
பாரினில் நித்தமும் கண்கள் என் மீதிலே
பரிவுடனே வைத்தே நடத்தினீர் - நித்

3. மகிமையதினின் மகுடமாய்
மகிதலத்தில் ஓர் திரு மனையாய்
மகிழ்ந்து ஆவியில் மாற நின் சாயலாய்
மகிபனே அருள் நல்குமே - நித்

4. முன்னானவையே நாடியே நான்
பின்னானவையே மறந்தும் இகத்தில்
தொடர வாஞ்சையாய் உம் நிறைவதனை
போராடுவேன் அதை அடையவே - நித்

5. முடிவில்லா உம் ஆண்டுகள் போல்
அடியாரில் நின் சிந்தையும் நிலையே
நின் மனம் போலவே மாற்றி எப்பாதையும்
சீயோனாய் விளங்கிடச் செய்யுமே - நித்

# Tamil Hymn No 362

## ANNOINT US NOW LORD

சரணங்கள்

1. ஆவியின் பெருமழை பொழிந்திடுமே தூய
   ஆவியே அழிவில்லா தேசிகரே
   அளவில்லா உமது ஜீவனை எமக்கு
   அளித்திட வருவீர் எமதரசே

பல்லவி

அபிஷேகித்திடுவீரே - அபிஷேகித்திடுவீரே
அடிமையின் நுகம் முற்றும் முறிந்திடவே - தேவா

2. அக்கினி நாவுகள் போல் வந்தனீரே – அன்று
   அமர்ந்திட காத்துமே நின்றவர் மேல்
   அனலுடை அருளே வடிவுடை யொளியாய்
   அடியவர் மீதில் வந்தமர்ந்திடுவீர் - அபி

3. ஆலயமாகவே எம் காயமெல்லாம் - இதோ
   ஆதீனமாயுமக்கே அளித்துவிட்டோம்
   அனுதினம் நிறைவாய் நவபெலமளித்தே
   அபிஷேகித் துயிர்ப்பீர் அதிபரே நீர் - அபி

4. செய்குவீர் அற்புதங்கள் அடையாளங்கள் - இன்றே
   நல்குவீர் தரித்திட வரங்களெல்லாம்
   புல்லரும் வரவே உபதேச ஒளியில்
   வல்லமை தருவீர் எளியவர்க்கே - அபி

5. ஏகமாய் இணைந்தபி ஷேகத்தினால் - ஒரே
   தேகமாம் முதற்பலன் சபையதுவை
   ஏகமாய்க் கூட்டிட பூவின் நற்பலனாய்
   வேகம் மணாளனே வருவதினால் - அபி

# Tamil Hymn No 363

## LOVE'S MEETING PLACE

சரணங்கள்

1. சிலுவை மரத்திலே கஸ்திபட்டீர்
   சிந்தி உம் உதிரத்தை இயேசுவே
   சிந்தையில் நினைந்து நீசன் என்னையும்
   சந்தித்தீர் கல்வாரியண்டையிலே

பல்லவி

மாசில்லா அன்பே கல்வாரியின் அன்பே
இயேசுவின் அன்பிதுவே
நேசித்து தோஷியைத் தம்மைப்போலாக்கும்
நேசரின் அன்பிதுவே

2. மாறாத பாவக்கறை போக்கவும்
   தீராத தாகங்கள் தீர்க்கவும்
   பேரருள் ஊற்றாய் திறந்தீர் விலாவை
   பேரன்பினாலே கொல்கொதாவிலே - மாசி

3. நேயனே உம் திருக்காயங்களால்
   தீயோனின் வினை தீர்த்தீரே
   வியாதியும் வேதனை சாபமும் மாய
   தூய தழும்புகள் ஏற்றவரே - மாசி

4. அந்தம் நிறை உந்தன் தேகமீந்தே
   அந்தோ ருசித்தீரே சாவினை
   உந்தன் மரணத்தின் சாயல் தரித்தே
   இந்நிலம் நின்சுதராய் திகழ - மாசி

5. சந்தோஷத் தோடே சகித்தீர் எல்லா
   நிந்தைகள் பாடுகள் யாவுமே
   சாந்தமுள்ள தேவ ஆட்டுக்குட்டியே
   காந்தையாம் உம் சபையை நினைந்தோ - மாசி

# Tamil Hymn No 364

## CHRIST THE ANNOINTED KING

சரணங்கள்

1. ஆனந்தமாகவே சீயோனின் மீதிலே
ஆட்டுக்குட்டியுடன் நின்றிடுவோர்
அன்பினில் தூயரே குற்றமில்லாதோரே
அனுதினம் இணைந்தொன்றாய் ஜொலித்திடுவார்

பல்லவி

சீயோனின் கானமே புதியதோர் கீதமே
ஜெயங் கொண்டோர் ஜீவியமும் இதுவாகுமே

2. ஊரினின் றேகனாய் இனத்திலிருவராய்
தெரிந்தபி ஷேகத்தால் அழைக்கப்பட்டோர்
பரிமிகு சீயோனின் ஒளியாய் விளங்கவே
திருவடிதனைத் தொடர்ந்தேகியவர் - சீயோ

3. அட்சயர் இயேசு போல் ஆசாரியர்களே
இலட்சத்து நாற்பத்து நாலாயிரர்
சாட்சியாய் பெற்றதாம் சர்வ கிருபையின்
மாட்சியுறு சிகரமீ தாட்சி செய்வார் - சீயோ

4. உத்தம ஸ்தானமும் நித்திய கீர்த்தியும்
சுத்தராம் சீயோனின் புத்திரர்க்கே
தத்தமாய் சேவையில் ஊற்றியே ஜீவனை
சத்தியமதின் மதிலாய் நின்றவரே - சீயோ

5. விந்தையாம் சீயோனின் நற்செய்தி கூறுவோர்
சுந்தர பாதங்கள் நிற்குமதில்
பார் உந்தன் தேவனே ராஜாதி ராஜனே
பரிபாலனம் செய்கிறார் எனக்கேட்குதே - சீயோ

6. சீயோனின் ராஜனாய் ஏற்றபிஷேகமே
சீர்மிகு மைந்தனே வீற்றிருப்பார்
செங்கோலும் ஓங்குமே நீதியாய் எங்குமே
நீங்கிடாததினின்று எந்நாளுமே - சீயோ

# Tamil Hymn No 365

## HE WILL SURELY COME

சரணங்கள்

1. மேகத்தில் இயேசு தோன்றிடுவார்
மாசற்றோராய் சேர்த்திடவே
மகிழ்ந்து அவரை சந்திப்போமே
மகிமை நிறைந்த அந்நாளிலே

பல்லவி

வருவார் இயேசு வருவார்
விரைந்து சீயோன் வேலையை முடித்தே
ஆளுவோமே நாம் யுகாயுகங்களாய்
அல்லேலூயா இன்ப இயேசுவுடன்

2. காகள நாதம் முழங்கவே
காண்போம் நாதன் பொன் முகமே
கண்ணிமைதனில் மாறுவோமே
கர்த்தன் இயேசின் ரூபமதாய் - வரு

3. பாடுகள் நிந்தை சோதனைகள்
யாவும் இகத்தில் அடைந்தோரெல்லாம்
மறந்து யாவும் நிறைந்த அன்பில்
மறைந்திடுவார் இயேசுவிலே - வரு

4. அவர் தாம் தரும் நல் பிரதிபலன்
அவருடனே வருமத்தினத்தில்
ஜெயங்கொண்டோரே சிங்காசனமே
சுதந்தரிப்பார் அந்நாளிலே - வரு

5. ஆவியும் நேயர் மணாளியும்
ஆவலுடனே வாரும் எனவே
அழைக்கும் சத்தம் கேட்டிடுதே
ஆமென் வாரும் இயேசுவே - வரு

# Tamil Hymn No 366

## THOU ART THE STRENGTH OF MY LIFE

பல்லவி

என் பெலனும் எந்தன் ஜீவனும் இயேசுவே
பொன் நாமம் போற்றிடுவேன்
இந்நிலம் உம்மையல்லால் நல் மேய்ப்பர் ஆருமில்லை
தன் ஜீவன் எனக்காய் தந்தவரே

சரணங்கள்

1. சந்தோஷமதினால் நிறைந்தென்னுள்ளமே
சந்ததம் பாடிடுவேன் கிருபையதை
உயர் பர்வதங்கள் சூழும் சாலேமைப்போல்
உம் கிருபை என்னை சூழ்ந்திடுதே - என்

2. அநாதி தேவனே உம் சிறகதின் கீழ்
வந்தடைந்தோர்க்கு நீர் ஜீவ ஊற்றல்லவோ
ஆன செல்வமும் நீர் ஞான வைத்யனும் நீர்
வான மன்னாவும் நீர் என் நேசரே - என்

3. பரிசுத்தழைப்பால் எனையும் பரனே
திருசித்தம் செய்யவே தெரிந்தெடுத்தீர்
வானவ தூதுரும் சேர்ந்து கண்ணோக்கிடும்
உன்னத சேவையும் அளித்தீரே - என்

4. வரைந்தீர் எனக்காய் உம் திரு சிந்தையில்
மறைந்திருந்த மா நித்திய நோக்கமே
மாறா அப்போஸ்தல நல் உபதேசத்தால்
பாரில் விளங்கிட முன் குறித்தீர் - என்

5. சீயோனில் சபையின் மூலைக்கல்லாகவே
தீயோனை வென்றுயர்ந்தீர் பரம் வரையும்
எப்போ நீர் வருவீர் என்றேங்கும் சபையை
தப்பாமல் சேர்க்கவே தோன்றிடுவீர் - என்

# Tamil Hymn No 367

## INCOMPARABLE KING

பல்லவி

நள்ளிரவில் இயேசு பெத்லகேம் புரியில்
நீசக் கோலமதாய் கன்னியில் பிறந்தார்

அனுபல்லவி

அல்லேலூயா மகிமை தேவாதி தேவ சுதன்
இரட்சகராய்ப் பிறந்தார் - நள

சரணங்கள்

1. ஏனோ இவர்க்கிந்தத் தாழ்மையோ
மானிடனாய் வரவே
தன்னிகரில்லாத ராஜனாய்
இந்நிலம் ஒளியாய் வந்தார் - நள்

2. ஆட்கொள்ளும் மா வினை போக்கிடும்
ஆட்டுக்குட்டி இவரே
அன்பினால் தேடி எப்பாவியும்
அணைக்க வந்த கோனோ - நள்

3. ஆளுகையும் அதிகாரமும்
தோளதில் உடையவரே
சரீரம் சபை சிறந்தோங்கவே
சிரசாய் உருவெடுத்தார் - நள்

4. மரணத்தின் அதிகாரியை
மாய்த்திடும் மா வீரனாய்
ஜீவனும் அழியாமை யாவுமே
ஈந்திட அவதரித்தார் - நள்

5. புவி முழங்கத் துதி சாற்றுவோம்
நவிந்து அவர் புகழை
தாழ்த்தியே அவரடி சேவிப்போம்
தாவீதின் சேயனிவர் - நள்

# Tamil Hymn No 368

## CRUCIFIED WITH CHRIST

சரணங்கள்

1. யாருண்டு இயேசுவே உம்மையல்லால்
பாரினில் நேசிக்கவே
தீராத தாகத்தை தீர்த்திடும் நல்
நீரோடையாய் அகம் வந்திடுமே

பல்லவி

ஒப்புவித்தேன் இயேசுவே
தப்பாதும் கைத்தலத்தில்
முற்றும் என் ஜீவியமே
மாறவே நின் சாயலாய்

2. அம்புவி தோன்றுமுன் கண்டனீரே
அம்பரன் உம் மூலமாய்
அன்பினில் தூயவனாய் என்னையும்
உம்முடன் நிறுத்த நினைந்தீரே - ஒப்பு

3. உம்மோடறையுண்டு நான் பிழைக்க
முற்றும் மரித்தவனாய்
மாறாத தேவ குமாரனே உம்
மா தூய விசுவாச மீந்தனீரே - ஒப்பு

4. சீராய் போராடியே சூடிடவே
நீதியின் கிரீடந்தனை
ஊற்றியே ஜீவனை அன்பினாலே
பெற்றிட ஜீவ கிரீடமதே - ஒப்பு

5. தேசுயர் நம்பிக்கையாய் உள்ளத்தில்
வாசஞ் செய்ய வந்தீரே
ஆவி ஆத்மாவோடென் தேகமதை
காப்பீர் கறை திரை இல்லாமலே - ஒப்பு

# Tamil Hymn No 369

## JERUSALEM THE GLORY OF ZION

பல்லவி

எழும்பி பிரகாசி! ஓ சபையே!
உன் ஒளி வந்ததுவே
ஏகமாய் உணர்ந்து உன் பெலன் தரிக்க
உற்றதோர் வேளையிதே

சரணங்கள்

1) காரிருள் கவருதே காசினியே
கதிரருள் மறைந்திடுதே
எவருமெக் கிரியையும் செய்திட இயலா
இராக்காலம் உனையே அடுத்து வந்திடுதே - எழு

2) ஆவியின் அருளால் மாறியதோர்
புதிய சிருஷ்டியும் நீயே
பெந்தெகொஸ்தின் உயர் ஜீவிய வழியே
மாந்தரும் அறிய உபதேச ஒளியில் - எழு

3) நேத்திரம் உயர்த்தியே நோக்கிடுவாய்
நித்தம் உன் மீட்பினையே
துயரடி துறந்தே துயிலிடம் எழுந்தே
துய்யதுன் உடையே காத்துக் கொள்வாயே - எழு

4) சத்திய ஜீவியோர் நடந்திடவே
உத்தம வழி உன்னிலுண்டே
மெல்கிசேதேக்கின் நல் முறைமையில் மலர்ந்த
ஞாலத்தில் உயர்ந்த சபையும் நீ அல்லவோ - எழு

5) நீதியின் புரமே! எருசலேமே!
சீயோனின் அருள் உந்தன் ஒளியே
கிருபையின் உருவாய் கிறிஸ்துவின் நிறைவாய்
திரு நகரமதாய் ஜொலித்திடுவாயே - எழு

# Tamil Hymn No 370

## HE PLEADS WITH YOU, COME

பல்லவி

வருந்தி அழைக்கும் தொனி கேட்டு
வந்திடுவாய் நல் இயேசுவண்டை
உன்னையும் தம்மைப் போல் மாற்றிடவே
தந்தாரே ஜீவனை சிலுவையிலே

சரணங்கள்

1) பாவத்தில் உழலும் நண்பனே நீ
மாயையை விட்டு விலகி வர
மா தோஷம் நீக்கியே மகிமை பெற
நேயனின் அருகில் வந்திடாயோ - வரு

2) புண்ணியம் புகலிடம் வேறில்லையே
பூவில் நீ வீணாய் அலைவதேனோ
மரணத்தை வென்றுமே உயிர்த்தெழுந்த
மா வல்ல இயேசுவே அழைக்கிறாரே - வரு

3) நண்பர்கள் உன்னையே தள்ளிடுவார்
நேசித்தவர்களும் கைவிடுவார்
இயேசுவோ என்றுமே மாறிடாரே
ருசித்திட அவரை அழைக்கிறாரே - வரு

4) பிறவாதோர் ஜலத்தாலும் ஆவியாலும்
பரலோகம் செல்லவே ஆவதில்லை
புது எருசலேம் நல் நகரமதில்
புத்திரராய் வர அழைக்கிறாரே - வரு

5) விண்ணிலே என்றும் இயேசுவுடன்
தேவ மைந்தனாய் நீ ஜீவிக்கவே
விசுவாசம் நம்பிக்கை அன்பிவையில்
நிலைத்து வளரவே கிருபை செய்வார் - வரு

# Tamil Hymn No 371

## AN ABLE GOD

பல்லவி

பொங்குதென் உள்ளம் நிறைந்தே - என்னேசுவே
பங்க மில்லா உம்மன்பினால்

அனுபல்லவி

ஆசையுடனே - நேசருமது
பாசக் கரத்தினுள் - பறந்திளைப்பாறுவேன் - பொங்

சரணங்கள்

1. பாடி புகழுதே என் அதரங்களும்
நாடி மகிழுதே என் அந்தரங்கமும்
நாடோறும் அளிக்கும் நின் கிருபைகளை
நாடுதென் ஜீவனும் நீடூழியாய் - பொங்

2. நிந்தையும் துயரும் சந்திக்கும் வேளையே
அந்தோ சூழ் இருளாம் சாவின் நிழல் தனில்
எந்தையே சீயோனின் கதிர்போல் விந்தையாம்
அந்தமுன் சோபையால் நடத்துவீர் - பொங்

3. மீட்சி செய்தவரே வீழ்ச்சியில் நின்றுமே
ஆட்சி செய்யவே நான் என்றும் உம்முடனே
மாட்சியில் மிகுநின் நேசக் கடாட்சத்தால்
காட்சியில் கொண்டீரே தூசியென்னை - பொங்

4. மேவியே யுலையில் பொன் வெள்ளி நிகராய்
லேவியின் சுதரை சுத்தி செய்பவரே
ஏவியே என்னையும் சுத்திசெய் துமைப்போல்
சேவிக்க ஆவியே! மாற்றிடுவீர் - பொங்

5. நற்கிரியை யென்னில் உற்பவம் செய்தீரே
தற்பரா! உமது நாள்வரை நடத்தி
சொற்படி வழுவா சந்நிதி வரவே
முற்றுமாய் ஏற்றென்னை ஆண்டிடுவீர்! - பொங்

# Tamil Hymn No 372

## THE CONSTRAINING LOVE

பல்லவி

இது மா தயவே நதிப் போல் எனது
இதயந்தனிலே பாய்ந்திடுதே
நிதியின் நிறைவென் இயேசு தானே
ஆதியும் அந்தமுமே

சரணங்கள்

1. கிறிஸ்துவின் அன்பே எந்நேரமெனையே
நெருக்கியே ஏவிடுதே
அவரன்றி யாதுமே எனக்கொன்றும் இயலா
அவரன்பின் அடிமையே நான் - இது

2 .“அனைத்தோரை மிகிலும் எனை நேசிப்பாயோ
நினைவாலும் வினையாலுமே”
எனக் கேட்கும் இயேசுவின் கனிவான தொனியே
தினமென்னை உருக்கிடுதே - இது

3. அழியாத அன்பால் அழைத்தாரே எனையே
பழுதில்லா தூயவனாய்
விழிப்போல என்னையும் விழைந்தாரே நிறுத்த
வழுவா தம் சந்நிதியில் - இது

4. துயரங்கள் வரினும் பெருந்துன்ப மெனினும்
உயர்வோ எத்தாழ்வெனினும்
கிறிஸ்தேசு அன்பினை விட்டிவை அகிலம்
பிரித்தென்னை மாற்றிடுமோ - இது

5. சுமந்தெந்தன் சிலுவைத் தொடரத் தம் அடிகள்
உவந்தே என்னையழைத்தார்
நயந்தே என் நேசரின் மாறாத தயவால்
ஜெயங்கொள்வேன் முற்றிலுமாய் - இது

# Tamil Hymn No 373

## THE NEW TESTAMENT MINISTERS

பல்லவி

தூயப் பிதாவின் திருமுகம் தரிசிப்போர்
சீயோனில் நிற்கும் ஊழியரே

சரணங்கள்

1. தாயும் தந்தையும் சோதரரனைத்தும்
தாபரித்திடும் எத்தலமதும் வெறுத்தும்
தம்மையோர் பானபலியாகவே வார்ப்பவர்
தரணியில் சேவைதனில் மணிப்போல மாய்பவர் - தூய

2. சுகந்த தூபமென புகைந்தே மறைபவர்
இகமதில் ஜெபத்தில் போராடி நிற்பவர்
உகந்ததோர் சேவையொன்றே அகந்தன்னில் கொண்டவர்
தகுமென திருச்சித்தம் செய்யத் தம்மைத் தந்தவர் - தூய

3. கிறிஸ்துவோடிணைந்த ஸ்தானாபதிகளே
திருவடிச் சுவட்டில் நடந்தே பின் செல்பவர்
பரிசுத்தர்க்கோர் முறையே அளித்த விஸ்வாசத்தை
கருத்துடன் காத்திடவே நற்போராட்டம் செய்பவர் - தூய

4. சரீரமாம் சபைக்காய் சந்தோஷத்துடனே
சரீரத்தில் பாடுகள் நிறைவேற்றும் தூயவர்
சிந்தையில் சத்தியராய் மெல்கிசேதேக்கைப்போல்
சந்ததமே புவிதனில் தந்தையராய் வாழ்ந்தவர் - தூய

5. அவரது அழைப்பை உணர்ந்து நற்சேவையில்
எவரே முன் வருவீர் அரும் உயிர் அளிக்க
வருவாரே மந்தையதின் மேய்ப்பராய்
தருவாரத்தினமதில் மகிமை கிரீடமே - தூய

# Tamil Hymn No 374

## THE INHERITANCE OF THE OVERCOMERS

சரணங்கள்

1. அல்பா ஒமெகாவும் ஆதி அந்தமானவர்
அல்பகலும் ஆவலுடன் ஏங்கும் சுத்தரை
அணைத்திடவே தோன்றிடுவார் மேகத்தில்
அணி அணியாய் தூதருடனே

பல்லவி

ஆனந்தம் இயேசுவுடனே
அன்பின் கீதங்கள் முழங்குதே
எங்கும் கிருபை பெருகுதே
தங்கும் தேவ மகிமையே

2. அன்பினில் குறைந்தோரெல்லாம் தவித்து புலம்புவார்
அன்பில் பரிபூரணரோ பறந்திடுவாரே
அவனியிலே யாதுமே இல்லாதோரே
அவரிலன்று அகமகிழ்வாரே - ஆன

3. கிறிஸ்துவுக்குள் ஜீவித்து மரித்தவரெல்லாம்
மறையருளும் சத்தியத்தில் மாண்ட யாவரும்
கறை திரைகள் குறைகளேதும் அற்றோரும்
மறைந்திடுவார் இமைப்பொழுதிலே - ஆன

4. அருஞ்சபையோர் ஆண்பிள்ளையாய் விளங்கிடுவாரே
அருணோதயம் போல் உதிக்கும் உத்தமியிவள்
கருணையதில் பிறந்தவராய் நின்றோரே
கிருபையினால் ஆட்சி செய்வாரே - ஆன

5. ஆசையுடன் கண்டவரை முகாமுகமாக
ஆலயத்தில் சேவிப்பாரே யுகாயுகமாக
அளவில்லா மா மகிமையதின் தேசமே
அவர்க்கருளும் சுதந்திரமாமே - ஆன

# Tamil Hymn No 375

## JESUS THE LOVER OF YOUR SOUL

சரணங்கள்

1. இரட்சண்ய நாளிது வந்திடாயோ
இரட்சகர் இயேசு உன்னாத்ம மீட்பர்
பட்சமாய் உன்னை அழைக்கும் சத்தம்
இட்சணம் கேட்டே அண்டிடுவாயே

பல்லவி

உனக்காய் மரித்தவர் இயேசு
உனக்காய் உயிர்த்தவர் இயேசு
தம்திரு நீதியாய் தரித்துன்னையே
தம்மைப்போல் மாற்றுவார் தரணியிலே

2. இக்கட்டில் உன் ஜெபம் கேட்டிடுவார்
கட்டிடுவார் உன் ஆறாக் காயங்களும்
மட்டில்லா இன்பம் ஈந்திட இன்னும்
தட்டிடும் மீட்பர்க் கிதயம் திறப்பாய் - உன

3. தேவாட்டுக் குட்டியாய் வந்தவரே
தேகமதிலுன் நோய்களேற்றதினால்
ஏகசுதன் தம் அத்தழும்புகளால்
சுகமே ஈவார் தம்மாணைப்படியே - உன

4. மேற்கொள்ளும் எவ்வித தோல்விகளும்
நாற்புறம் நித்தம் சூழும் பாவங்களும்
வேருடன் மாய்ந்தே வெற்றியோடேக
சீருடன் தம்மில் பேர் வாழ்வு பெறவே - உன

5. வானமும் பூமியும் மாறிடுமே
வானவரேசின் வார்த்தையோ நிலைக்கும்
வருவாய் விரைந்தே பெறவே கிருபை
வாரிதிப் போல பாயுதே உனக்காய - உன

# Tamil Hymn No 376

## I DELIGHT UNDER HIS SHADOW

சரணங்கள்

1. எத்தனை நாவினால் கர்த்தரைப் புகழ்வேனோ
   சுத்தரின் சபை நடுவில்
   இத்தனை கனிவுடன் காத்தார் கருணையில்
   தோத்திர பாத்திரரே

பல்லவி

ஆருயிர் அன்பருமென் ஆதரை மீதினிலென்
கிருபை இரக்கம் நிறை இயேசுவெனக்கே
மாறாத தரு நிழலே

2. பூதலம் அதிர்ந்து தன்னிடம் ஒழியுமே
   பூதங்கள் உருகிடுமே
   வாக்குத்தத்தங்கள் எனக்காய் வகுத்தவரோ
   மாறிடும் மானிடனோ - ஆரு
3. சேயினைச் சுமந்தே ஆற்றித் தேற்றிடுமெந்த
   தாயினும் சிறந்தவரே
   ஆயனின் காயங்களால் வரும் சுகமும்
   நேயோரின் உரிமையே - ஆரு
4. நாடியென் துறையே நேடியென் விருதினை
   ஓடி முன்னேகிடுவேன்
   ஈடில்லாதவரடி ஆவியில் தொடர்ந்தே
   பீடிகை வந்தடைவேன் - ஆரு
5. கிறிஸ்துவின் நிறைவே நற்சுவிசேஷத்தாலே
   இத்தரையில் அடைய
   சித்தங் கெண்டடியேனைக் கண்டழைத்தவரே
   சீர் பெற செய்திடுவார் - ஆரு
6. சீயோனின் மகிமை கண்களில் வீசிடுதே
   சிந்தையும் வாஞ்சையதே
   ஆசையாயடைய தம் சற்குணந்தனையே
   நேசருக் கொப்புவித்தேன் - ஆரு

# Tamil Hymn No 377

## ONETHING I HAVE DESIRED OF THE LORD

பல்லவி

ஒன்றே என் வாஞ்சையே பரனே
என்று உமது திருசாயல் காண்பேனோ!
வென்றீரே இயேசுவே அன்பாலே என்னை

சரணங்கள்

1. உமதாலயந்தனின் திருப்பாத பீடத்தில்
இதமாயென் வாழ்நாளெல்லாம் - வந்தென்
அகமெல்லாம் அருள் பொங்கும் விலையேறும் நின் திவ்ய
முகங்காண ஆசிக்கிறேன் - ஒன்றே

2. வறண்டே விடாய்த்துமே தண்ணீரில்லாத இவ்
உவர் நிலமாம் உலகில் - எந்தன்
தேகமும் ஆத்மாவும் ஏகமாயும்மீதில்
தாகம் கொண்டேங்கிடுதே - ஒன்றே

3. உமது முகத்தையும் உமது கிருபையும்
உமது மா வல்லமையும் - கண்டே
கலி நீங்கி மகிமையால் என்னுள்ளம் பொங்கியே
கவிபாட நாடிடுதே - ஒன்றே

4. பரலோகில் யாருண்டு இகலோகில் நீரொன்றே
பரிந்தன்பு கூர்ந்திடவே – நானும்
இணைந்தொன்றாய் உம்மோடே இனியும் கிட்டிச்சேர
துணை செய்வீர் தேவாவியே - ஒன்றே

5. திருச்சித்தம் செய்ததோர் இணையில் மனுவேலா
இருப்பீரே அந்தியம் வரை – என்னை
வழுவாமல் நடத்தியே நிறுத்தும் நீரும்மன்பில்
பழுதற்றோனாயும் முன்பில் - ஒன்றே

# Tamil Hymn No 378

## REIGNING IN LIFE

சரணங்கள்

1. கிறிஸ்துவென் ஜீவனுமே ஜீவனின் பெலனுமே
நித்தம் நீருரவுபோல் அற்புத ஜீவியமே
ஆதரைதனில் மிகும் பேரிளைப்பாறுதலை
ஆத்துமந்தனிலீயும் உன்னத பெலனே

பல்லவி

ஜீவனில் வாழுவேன் ஜீவனில் ஆளுவேன்
ஜீவனின் ஜோதியில் வீற்றிடுவேன்

2. மரணத்தின் பெலனதை மாய்த்திடும் திறனதை
கரங்களில் அளித்தாரே கிருபையின் செயலாலே
தருணமே தருமவர் தக்கதோர் பெலன்தனை
தரணியில் தரித்துமே ஜீவனடைவேனே - ஜீவ

3. மெழுகுபோல் உருகியே என் பெலனழிகையில்
கழுகு போலவரிலே காத்தமர்ந்திடுவேனே
அழிவில்லா ஜீவனின்மா செட்டைகளுயர்த்தியே
அதி வல்லமையுடனே பறந்துயர்ந்திடுவேன் - ஜீவ

4. தளராது காலேபினைப் போலத் திரும்ப பெலன்
வளர்ந்தே வாலவயதைப் போலத் திரும்பிடுதே
முகந்தனின் பிரபையே அகந்தனின் சுகமிதே
பகருமே பரிசுத்த ஆவியின் அருளே - ஜீவ

5. ஜோதிகளின் பிதாவின் பொன்முகம் நின்றிலங்கும்
சீயோனின் இன்பக்கதிர் நேயரின் ஜீவனல்லோ
நித்தியமிலங்குதே மெத்ததோர் ஜீவனாலே
சத்தியோர் கீதமென்றும் "கிறிஸ்துவென் பெலனே!" - ஜீவ

# Tamil Hymn No 379

## ZION THE PERFECTION OF BEAUTY

பல்லவி

மா மகா ராஜனின் திவ்விய நகரமே
மகிழ்வின் பூரணமே சீயோன் புரமே

சரணங்கள்

1. மாந்தரில் முதற்பலனாய் பிதாவுக்காய்
மாநிலம் வெறுத்தவாராய் - சுதனுக்காய்
மாண்மிகு மீட்பினை பெற்ற சீயோனிவரே
மா மேரு மீதினில் ஆளுவார் - மா

2. உருக்க இரக்கங்களால் நிறைந்துள்ளம்
சுரமண்டல இசையாய் - கேட்டிடுதே
புவியில் இயேசுவின் பாடுகளில் பங்குற்றோர்
நவிந்து கவியே பாடுவார் - மா

3. அண்ணகரே அரண்களாய் விளங்கிடும்
விண்ணவர் சிகரமிதே - மாணொளியாய்
உன்னத தேவனே தன்னுயர் அன்பினிலே
வன்னடைக்கலமாய் வாழுவார் - மா

4. தீவினை புரிந்துரைத்த தீயவரே
தீவிரம் திரும்புவாரே - நாணிடவே
திவ்வியோர் சீயோனில் தீபமாய் யுகாயுகம்
திங்களும் நாணவே சோபிப்பார் - மா

5. கிறிஸ்தென்னும் மூலைக்கல்லின் மேல் அப்போஸ்தலர்
அஸ்திபாரமாய் அமைந்தே - ஆவியினால்
பிதாவின் சிந்தையாய் சீயோனின் சிகரமாய்
ஜீவித்ததால் அவர் சேவிப்பார் - மா

# Tamil Hymn No 380

## THE NAME OF JESUS

சரணங்கள்

1. ஆத்தும நேசர் உன்னை அழைக்கிறார்
அவர் பாதம் அண்டிட இன்றே வந்திடாயோ
பொல்லாத மாய உலகமழியுதே
வல்லவர் இயேசு அழைக்கிறார்

பல்லவி

இயேசுவின் நாமம் வல்லமையுள்ளதே
இயேசுவின் நாமம் ஜெயமளிக்குமே
இயேசுவின் நாமம் சாவினை நீக்குமே
இயேசுவின் நாமம் ஔஷதமே

2. இரட்சண்ய பாதை தன் உதிரத்தினால்
இரக்கமுன் மீதிலே கொண்டதால் வகுத்தார்
இன்னமும் இந்த மாபெரும் இரட்சையே
இத்தருணம் நீ தள்ளிடாதே - இயேசு

3. மாயவலையில் சிக்குண்டு வீணிலே
அயர்ந்திடா அலைபோல் மயங்கி திரியும்
யாருமில்லாத உனையும் அணைத்திட
தாயுள்ளம் கொண்டோர் நிற்கிறாரே - இயேசு

4. தேவனின் இராஜ்ஜியம் காணவே இயலா
ஜலத்தினால் திரும்ப நீ பிறவாயாகில்
ஆவியினாலும் பிறந்திடுவதினால்
ஆகுமே அதினுள் சென்றிடவே - இயேசு

5. நித்திரை விட்டு எழும்பும் வேளையே
நினையாத நேரத்தில் வருவார் இயேசுவே
அவரை எந்த வேளையும் சந்திக்க
ஆயத்தமாக ஜீவிப்பாயே - இயேசு

# Tamil Hymn No 381

## THOU ART THE SPRING OF LOVE

சரணங்கள்

1. அற்புத அன்பிதே பொற் பரனேசுவே
பெற்ற பிதாவிலும் உற்றவர் எனக்கே – உம்மைப்
போற்றி யேற்றிப் புகழ்ந்திடுவேன் -- துதி
சாற்றி யூற்றி யுள்ளம் மகிழ்வேன்

பல்லவி

அன்பு பெருகும் சுனை நீரல்லவோ
அம்புவி தனில் அரசே
மாறா நின் தயவும் மா நேசமதும்
மறப்பேனோ! மறப்பேனோ!

2. நாலாம் ஜாமத்திலே நடுக்கடல் மீதே
நடந்து சீஷரைத் தேற்றிய இயேசுவே – எந்தன்
நாவாய் பொங்கும் அலை கடந்தே –கரை
நாடி சேரத் துணை வருவீர் - அன்பு

3. மெல்கிசேதேக்கினைப் போன்ற குமாரனே
நல்குவீர் தாழ்மையே நின் சித்தம் செய்யவே – தாரும்
தூய ஆவி அனுக்கிரகமே -- இன்னு
மீயுமென்னில் புது பெலனே - அன்பு

4. ஒளியில் இலங்கும் சுத்தர்களுடனே
எளியோன் எனக்கோர் பங்களித்தவரே –பரி
சுத்தஞ் செய்யப்பட்டோருடனே – நற்
சுதந்திரம் நான்பெறச் செய்யுமே - அன்பு

5. சீயோனின் சிறப்பே அன்பின் பூரணமே
சிந்திக்க ஆனந்தக் கண்ணீர் பெருகுதே –அதை
எண்ணியெண்ணி நிறைந்தன்பினால் --இன்னும்
எண்ணமில்லாத் துதி சொல்லுவேன் - அன்பு

# Tamil Hymn No 382

## HE IS THE EMMANUEL

சரணங்கள்

1. உலகத்தின் சுடரே இயேசு இரட்சகரே
   உவந்தே உதித்தார் மனு உருவாய்
   உரைத்திடுவோம் இந்நானிலம் மகிழ இந்நற்செய்தியே

பல்லவி

இவரே மனுவேலர் கிருபை சத்தியம் நிறைந்தோர்
இவர் நம் பாவங்கள் போக்கிடும் பலியாய்
திகழ்ந்த தேவாட்டுக்குட்டி

2. மரண விருளதின் தாழ்விருப்பவர்க்கே
   அருணோதயமாய் விளங்குமிவர்
   தெரிந்தனரே ஓர் புல்லணை பிறந்திட பாலகனாய் - இவரே

3. சுரக்கீதம் மறந்தே நீசரை நினைந்தே
   தரவே உயிரை மடிவோருக்கே
   அரூபியானோரே துயருற்ற நரரூபமாயினாரே - இவரே

4. திருசித்தம் புரிந்தே தேகமாம் திரையில்
   அறவே சுயமே அகற்றிடவே
   நிறைவேற்ற வேதவுரை யாவும் இறங்கினார் விண் துறந்தே - இவரே

5. அணிந்தகமதிலே தியாகம் தாழ்மையுமே
   பணிந்தே படைப்போம் மலரடியில்
   இகபர மெங்கும் கண்டிடா மகிமையின் மைந்தனிவர் - இவரே

6. ஆயனே மந்தையின் ஜீவனின் துரவும்
   நேயமாய் நாடும் நல் சமாரியனும்
   பரிசுத்தம் ஞானம் நீதியாய் வருபவரே நமக்கு - இவரே

# Tamil Hymn No 383

## THE SOUND OF THE LATTER RAIN

பல்லவி

அறுப்போ மிகுதியே ஆட்களும் குறையுதே
அறுப்புக்கு எஜமானவர் - தமதாட்கள்
அனுப்பிட ஜெபிப்போம்

சரணங்கள்

1. நித்திய நாசமதின் பாதையில் செல்லுவோர்க்கே
சத்தியம் கூறிடவே யாருமில்லையே
கர்த்தரின் கருணையை இத்தரையறியா
எத்தனையோ ஆத்துமாக்கள் அழிகின்றாரே - அறு

2. அந்தோ பாவங்களாலும் சாபரோகங்களாலும்
நொந்தே அனுதினமும் நலிவோருண்டே
எந்தையாம் ஏசுவின் மா அன்பும் வல்லமையும்
எங்கும் எவர்க்கும் கூறிட எவர் வருவீர் - அறு

3. பின்மாரியின்றி பூவின் நற்பயிர் மடியுதே
முன்மாரியின்றி மனம் வாடிடுதே
ஆவியின் கனிவுடன் போராடி ஜெபிப்போம்
செவியில் பெருமழையின் ஓசை கேட்குதே - அறு

4. ஏதுமே செய்யவொண்ணா இராக்காலம் அடுக்குதே
ஏகமாய்ப் பகல் அதின் கிரியை செய்வோம்
அப்போஸ்தலரின் உபதேசத்தின் ஒளியில்
இப்புவியோர் வந்திடவே விரைந்தழைப்போம் - அறு

5. கண்ணீரில் விதைப்பவர் கெம்பீரத்தோடறுக்க
மண்ணிலோர் பின்மாரியும் வந்திடுதே
ஞாலத்தில் இன்னுமவர் வேலை தாமதமேன்
காலம் இனியில்லை உணர்ந்தெழுந்திடுவோம் - அறு

# Tamil Hymn No 384

## NEW JERUSALEM, THE BRIDE OF CHRIST

பல்லவி

பூரணமிகு சோபையுற்ற புது எருசலேமே
பூவில் அகிலம் ஆதிப்பலனாய் மீட்கப்பட்டவளே
பூரணரவர்க்கே மணவாட்டியானவளே

சரணங்கள்

1. வல்ல தேவனினேக திருசெல்வ சுதனுக்கே - ஏது
சொல்லிலும் நிறையாத அலங்காரமேற்றனையே
தன்னிகரில்லா அன்பே அரணாகக் கொண்டவனையே
என்ன இன்பம் ஜோதி நீதி நிறைந்த நகரமே - பூரண

2. யாருமில்லையே நேசர் நல்ல இயேசு ஒருவரே - அவர்
தூய உதிரம் தானே உனைக் கொண்ட கிரயமே
மாய உலகினின்று மணந்தாரே சொந்தமதாய்
காயம் யாவும் நேயர் அன்பின் நித்திய பரிசமே - பூரண

3. வீரமாய் ஜெயிப்போரே உன்னில் தூயராய் விளங்க-மிக
தீரமாய் ஜெபிப்போரே அதின் வன்மதிலாகவே
அன்பினால் ஜீவன் வைத்தோர் அதில் ஆசாரியருமே
துன்பம் மாறி கண்ணீர் நீங்கும் விண்ணவர் பட்டணமே - பூரண

4. அஸ்திபாரமாய் தூய அப்போஸ்தலர் இருக்க - அதில்
இயேசு கிறிஸ்து தாமே தகும் மூலைக்கல்லவரே
ஆவியானவராலே அமைந்தாலயமிதுவே
அன்பில் குற்றம் யாவும் அற்ற மாசற்ற கன்னிகையே - பூரண

5. சீயோன் எருசலேமும் ஒரே நாளில் பிறக்குமே - அதில்
ஜெயங்கொண்டவரின் கீதம் பரம் கேட்க முழங்குமே
வாரும் இயேசுவே நீரே எனதாவல் பெருகுதே
தாரும் தீர வாஞ்சை சேரும் நாட்களும் தொலைவிலோ - பூரண

# Tamil Hymn No 385

## THE WORD OF HIS POWER

சரணங்கள்

1. மரித்தாரே உனக்காக குருசில்
   ருசித்தாரே மரணத்தின் கொடுமை
   முறிப்பாரே வரும் நோய்கள் விலங்குன்னில் அறவே
   கிறிஸ்தேசு ஜெய வேந்தரே

பல்லவி

வல்லமையுண்டே மிக அதிகாரமுண்டே
வல்லவர் வார்த்தையுயிர்ப்பித்திடுமே

2. குணமாக்கி கொடும் பேய்கள் அகற்றி
   ரணமாற கடுங்காயங் கழுவி
   நிண முள்ள ததுவாக்கும் ஆத்தும மதனை
   பணமின்றி விலையின்றியே - வல்ல

3. இரையாது இருந்திடுவென்றே
   திரையாழி யது நோக்கி மொழிந்த
   அதிகாரம் மிகக் கொண்ட அவர் வார்த்தையுனது
   விதி நீக்கி வலி போக்குமே - வல்ல

4. விசுவாசித்தால் இன்றே காண்பாய்
   விலையேறும் மகிமையின் செயலை
   இலையேதும் அவராலே இயலாத கிரியை
   மலையாதே சரணாகுவாய் - வல்ல

5. உருவேதும் ஒருபோதும் மறையா
   திருவார்த்தை பிழைப்பூட்டும் உனையே
   வருவாயே பரனேசு திருப்பாதம் விரைந்தே
   தருவாரே ஜெய முற்றுமே - வல்ல

# Tamil Hymn No 386

## JESUS THE ROSE OF SHARON

சரணங்கள்

1. இயேசுவே எனக்கிந்த இகமதிலே
அசைந்திடாதோர் நம்பிக்கையே
சார்ந்திடுவேனே மாறா வாக்கினிலே
சாற்றுவேன் அவர் புகழை

பல்லவி

நேசிக்க சிறந்தவரேசு எனக்கே
ஆசைக்குகந்தவரே - இன்ப
சாரோனின் ரோஜா அவரே

2. மரணமதின் கொடும் கரத்தினின்றே
கருணையாலென்னை விடுத்தே
அரவணைத்தவர் கரமே எனது
சரணம் தரணியிலே - நேசி

3. பெருகுதே எந்தன் அகந்தனிலே
கிருபை சாகரமெனவே
ஏற்றதோர் சமயம் சகாயமளித்திடும்
உற்றதோர் கிருபையிதே - நேசி

4. ஜீவனிலும் பெரிதவர் கிருபை
சீயோனைப் போல் உயர்ந்ததுவே
தாழ்மையுள்ளோரை வாழ்விக்கும் கிருபை
சூழ்ந்திடும் நிதமென்னையே - நேசி

5. பூரண கிருபையை அளித்திடவே
ஆரணர் இயேசு தோன்றிடுவார்
சாலேமின் மீட்புடனே பலனும் பெற்றிடும் நல்
காலமும் விரைந்திடுதே - நேசி

# Tamil Hymn No 387

## HE CONDESCENDED FROM HEAVEN

சரணங்கள்

1. பெத்தலை யேகிய பாலகனேசுவே
சத்திய திருவொளியே
இத்தனை தாழ்வினில் வீழ்ந்தவர் உயர
இத்தரை உதித்தனர் இரட்சகராய்

பல்லவி

அல்லேலூயா துதி சாற்றுவோம்
தாவீதின் சேயனாம் இயேசுவுக்கே

2. ஏழ்மையின் கோலமாய் முன்னணையிருந்தோர்
தாழ்மையின் உருவெடுத்தோர்
வாழ்விக்க நரரையும் தன் கிருபையினால்
பாழுலகம் நினைந்து இறங்கினாரே - அல்லே

3. பாவமும் ரோகமும் சாவதின் பயமும்
யாவையும் தொலைத்திடவே
மாமிசம் உதிரமும் கொண்டதோர் சுதனே
மானிடர்க்காகவே பிணையானாரே - அல்லே

4. கன்னியில் வந்தவர் எம்மையும் தமது
கன்னிகை சபையதுவாய்
கண்டிட ஆவியினால் அபிஷேகித்தே
கொண்டிட வந்தனர் மணவாளியாய் - அல்லே

5. போற்றியே பாடுவோம் பாலகனேசுவை
ஏற்றுவோம் அவர் புகழை
நேற்றுமின்றென்றுமாய் நம்முடன் நிலைக்கும்
உற்றதோர் இம்மானுவேலிவரே - அல்லே

# Tamil Hymn No 388

## VICTORIOUS LIFE

பல்லவி

ஜெய ஜீவியமே ஆ ஆ அற்புதமே
இயேசுவில் கண்டடைந்தேன் - நானே
தந்ததோர் ஜெயமே இந்த கானகமே
தம் கிருபை தனமே

சரணங்கள்

1. பாசமுற உம்மில் வென்றோர் உயர்த்தும்
மாசறு ஜெயக்கொடியே
நேசுறவே கேட்கும் ராஜனின் தொனியும்
தேசுற ஏறுதன்னில் - ஜெய

2. மாமிசமேயிதை சேவித்திடவே
பார்மிசை கடனாளியோ
மா துாய இரத்தத்தால் கொண்டவரவர்க்கே
மாத்திரம் சொந்தமே நான் - ஜெய

3. தாழ்த்தியே மேற்கொள்ளும் வல்லமையனைத்தும்
கீழ்ப்படுத்தும் செயலே
சாவினையே அறவே பரிகரித்தே
காவினில் தரும் ஜெயமே - ஜெய

4. சாலேமை சூழ்ந்துமே நிற்கும் மலைகள்
போலவர் கிருபைகளே
சோதனையில் வழுவாதென்னை ஜெயமாய்
சேர்க்கும் சிங்காசனமே - ஜெய

5. தாகமுள்ளோரே நீர் ஜீவநதியில்
ஏகமாய் பருகிடுவீர்
ஆகவே தம் ஜெயம் உம் உரிமையதாய்
வேகமாய் விரைந்திடுவீர் - ஜெய

# Tamil Hymn No 389

## ZION THE PERFECTION OF LOVE

சரணங்கள்

1. என்று வருவேன் சீயோன் புரமே
அன்று பெறவே எந்தன் மகிமை
வென்றோருடனே நின்று ஆளுவேன்
என்றென்றும் இயேசுவுடன் நின்று இணைந்தே

பல்லவி

தேவ மகிமையே இலங்கும்
நேய பிதாவின் சமுகம்
நித்தியம் அகிலவும் வீசும் - ஆ ஆ ஆ
சத்திய பரனின் சுபாவம்

2. அன்பின் நிறைவே தேவசாயலே
இன்பம் கமழும் சீயோன் மலையே
பண்பால் உயரும் இராஜன் நகரம்
விண்ணவர் தாபரமாய் என்றும் விளங்கும் - தேவ

3. ஜாதிகளையே ஆட்சி செய்யவே
ஜீவியந்தனில் செங்கோலுடையோர்
நீதி ஒளிரும் சீயோனதுபோல்
ஜோதி பிதாவின் திரு சிந்தை கொண்டவர் - தேவ

4. ஆணையதினால் ஆன சேவையே
ஆலயந்தனில் ஆற்றும் உரிமை
ஆசாரியராய் அடைந்தோர் இவரே
ஆட்டுக்குட்டியாமிவர் பாதந்தொடர்ந்தோர் - தேவ

5. சீயோன் அருளும் நல் வசனத்தால்
மீட்படைந்தோர் நற்பலன்களாய்
தேவ மகிமை சற்குணந்தனை
தரித்து பூரணராய் எங்கும் ஜொலிப்பார் - தேவ

# Tamil Hymn No 390

## HERE AM I, SEND ME LORD

சரணங்கள்

1. இயேசு சென்ற பாதை அதில் நீயும் செல்லவே
ஆசையாய் உன் ஜீவன் வைக்க வந்திடலாகுமோ
காசினியில் நிதம் திரு சித்தமே செய்யவே
சோர்ந்திடாதே அவர் சிலுவை சுமப்பாயோ

பல்லவி

நான் இதோ அனுப்பும் தேவா என்னை
என்றுன்னை தத்தமாய் தந்திடுவாய்
காலங்களும் வேளைகளும் ஏகமாய் சென்றிடுதே

2. கங்குல் சூழும் வேளை ஏகமாய் இப்பாதையில்
நிந்தையே உன் பங்காய் அவர் நிமித்தம் ஏற்பாயோ
பங்கம் பாடுகளில் திடனோடு நீ செல்வாயோ
எங்கும் அவர் நாமம் ஓங்கும் சாட்சியாவாயோ - நான்

3. தந்தை தாயுமுந்தன் உற்ற சோதரர் மற்றும்
இந்த மண்ணில் முற்றும் வெறுத்தவர் பின் செல்வாயோ
மண்ணில் மாயும் ஏது மணி போலவே மாயவே
எண்ணியே இச்சேவைதனில் ஜீவன் வைப்பாயோ - நான்

4. நல்ல போர் புரிந்தே விசுவாசம் காத்துமே
அல்லல்கள் நடுவே வீரனாகவே நிற்பாயோ
கன்னல்கள் நடுவே பொங்கி கிருபை பாயுதே
இன்னல் நீங்கும் அவர் திருமுகத்தின் சோபையால் - நான்

5. பாடுகள் சகித்தோர் இராஜரீகம் பூண்டுமே
பூரணராய் என்றும் அரசாட்சியே செய்குவார்
சாட்சியாக ஜீவன் வைத்ததால் அவர் இயேசுவின்
மாட்சியுற்றே அவர் தமின் சாயலாகுவார் - நான்

# Tamil Hymn No 391

## HE'S MY SONG

பல்லவி

என்னேசரேசு பரன் தம் துதி சாற்றுவேன்
என்னுயிருள்ளளவும் ஆ! ஆ!!
இன்பரின் நாமமல்லால் இன்பம் வேறில்லையே
இன்னமும் கனிந்துள்ளம் பாடிடுவேன்

சரணங்கள்

1. காலையில் களிப்பும் மாலையில் மகிழ்வும்
பாலையில் தெளிந்த ஜீவனின் துரவும்
தாழ்வினில் நினைந்திடும் தோழனும் விழைந்தே
வாழ்வினில் மங்கள கீதமுமே - என்

2. என் பெலவீனத்தில் தன் பெலனளிக்கும்
வன் கிருபையின் மா வற்றா சாகரமே
வென்றதே அன்பென்னை சொந்தமாய் அனைத்தும்
என்றுமாய் ஏற்றிட திரு சித்தமே - என்

3. நித்திய ஆவியால் புத்திரனாக்கியே
சத்தியமதினால் என்னிடை கட்டியே
உத்தம பாதையே ஏகிட ஜெயமாய்
தத்தமாய் தம் பெலனளிக்கிறாரே - என்

4. தூயவர் சாயலாய் மாற்றிடும் தூதுகள்
தூதரும் வியக்க சீயோனின்றளித்தார்
ஆதரையில் எந்தன் பாக்கியம் நினைக்க
ஆனந்தத்தால் உள்ளம் துள்ளிடுதே - என்

5. இயேசுவின் வதன சோபையில் வளர்ந்தே
ஆசையாய் அவரின் சேவையில் நிலைத்தே
சீயோனின் பொன்புரம் போலவே ஸ்திரமாய்
சீர் பெற தந்திட்டேன் பதந்தனிலே - என்

# Tamil Hymn No 392

## HIS ETERNAL SON

சரணங்கள்

1. வானாதி வானங்களே போற்றியே ஏற்றிடுங்கள்
   அநாதி தேவனின் ஏகசுதன்
   தன்னிகரற்றவர் முன்னுரைப்படியே
   மன்னுருவாகவே வந்துதித்தார்

பல்லவி

அல்லேலூயா துதித்து பாடுவோம்
சொல்லரும் தேவசுதன் இயேசுவை
புல்லோரின் மீட்பரிவரே

2. அன்னையைப் போன்றவரே இன்னல்கள் தீர்த்திடவே
   கன்னியில் பிறந்தார் விந்தையிதே
   மண்ணோரைத் தமது விண்மயமாக்குமோர்
   மாண்மிகு மருந்தாய் பிறந்தாரே - அல்லே

3. தாழ்மையின் உருவமாய் நீசரை நினைந்தோராய்
   ஏழ்மையின் ரூபமே ஏற்றதேனோ
   வாழ்விக்க தயவால் அழிவல் ஆழ்ந்தோரை
   தாழ்த்தியே தம்மையே வந்தனரே - அல்லே

4. தாவீதின் சுதனாக ஏதுமில்லாத எமின்
   தீதுகள் சுமந்த ஆட்டுக்குட்டி
   மறந்தே தம்மையே துறந்தே பரமே
   தெரிந்தார் ஆனிடை கொட்டிலையே - அல்லே

5. சத்தியம் கிருபையும் நிறைந்து சரீரத்தில்
   சித்தமே செய்திட வந்த சுதன்
   மெத்தலும் உலகின் ஆக்கினை போக்கிடும்
   உத்தம ரட்சகர் இவரல்லோ - அல்லே

# Tamil Hymn No 393

## HE CALLED EVEN ME

பல்லவி

கண்விழிப்போலென்னை கானகப்பாதையில்
கண்டீரோ இயேசு பரா
இதுகாறும் ஆட்கொண்ட கருணையின் பூமானே
துதியேறும் நின் நாமமே

சரணங்கள்

1. நிலையாக நிறுத்தவோ எனையே – பாச
வலைவீசி அலைந்தோனை அணைத்தே
நினைவாலும் செயலாலும் திருநோக்கம் நிறைவாக்க
விலையேறும் மகிமைக்காய் அழைத்தவரே! - கண்

2. அளவில்லா அபிஷேகம் தனிலே – உள்ளில்
அழியாத சிருஷ்டியாய் வளர
அளவில்லா அருள் பொங்கும் அலைபோல கிருபைகள்
அளித்தென்னை யுமக்கென்றே அழைத்தவரே! - கண்

3. பிரித்தென்னை உரியோனாய் உமக்கே – மாறா
பரிவோடு பரிசுத்தம் தரவே
பரிசுத்தர்க்களித்ததோர் உபதேசம் நிலைநாட்ட
புரிய நற்போராட்டம் அழைத்தவரே! - கண்

4. மறைவான திருமன்னா வருந்தி – நாளும்
நிறைவான ஜெயந்தன்னில் வளர்ந்தே
குறைவில்லா பிழையில்லா கறையில்லா மனையாக
பிறை போல உதித்தோங்க அழைத்தவரே! - கண்

5. கிறிஸ்தேசு உமைப்போல திகழ – என்றும்
மரித்தோனாய் உமக்கென்றே பிழைக்க
சிலுவையென் மகிழ்வாக அதில் மேன்மை மிகக்கொண்டே
சிரசாம் நின் சரீரமாய் அழைத்தவரே! - கண்

# Tamil Hymn No 394

## STANDING OF ZION

பல்லவி

அன்பர் இயேசுவின் அடிகள் இதோ
இன்ப சீயோனில் நிற்க
தேவ மகிமை ஜொலிக்கும் நகரே
ஜோதி பிதா உயர் தாபரமே

சரணங்கள்

1. மீட்கப்பட்டோர் சீயோனில் இயேசுவுடன்
மாட்சியுற்றே வருவாரே
ஆட்டுக் குட்டியவர் சொந்தமாகயிவர்
ஆனதாலே என்றும் இணைந்து நிற்கிறார் - அன்ப

2. பூவின் முதற்பலனாய் சீயோனுக்காய்
மீட்கப்பட்ட கூட்டத்தாரே
ஊரில் ஒருவராய் இனத்தில் இருவராய்
பாரில் சீயோன்தனில் பிறந்தோர் இவரே - அன்ப

3. வேதம் வரும் சீயோனாய் ஜீவித்தவர்
தேவ சிகரமுமாமே
ஆய அரண்களாய் துாய துருகமாய்
நேய நகரமாய் சிறந்து நிற்பவர் - அன்ப

4. மாறா அபிஷேகத்தால் சீயோனிலே
ராஜனாக நிற்பதாலே
சீயோன் அகிலமும் தேவ நதியாக
ஜீவன் பெருகுதே யுகா யுகங்களாய் - அன்ப

5. சீயோன் வெளிப்படவும் வேளையிதே
வேலையதும் தீர்ந்ததாலே
தந்தை முகங்கண்டு சிந்தை மகிழ்ந்தோராய்
சந்ததமே சேவை செய்தே வீற்றிருப்போம் - அன்ப

# Tamil Hymn No 395

## THE POWER OF RESURRECTION

சரணங்கள்

1. எல்லாம் தம் திவ்ய வல்லமையாம் - முற்றும்
சொல்லரும் வல்ல உயிர்ப்பிக்கும் செயலே
பரிசுத்த ஆவியின் அபிஷேகமே
பரிவோடு அருள் செய்வதாமே

பல்லவி

உயிர்ப்பிக்கும் வல்லமையே - நம்மை
உயிர்ப்பிக்கும் வல்லமையே
நிறைவான ஜீவனிதே - ஏது
மரித்தோரை உயிர்ப்பிக்குமே

2. வாராய் மரித்தோனே நீ வெளியே என
உரைத்ததோர் வல்ல இயேசுவின் சத்தம்
மரணத்தின் மாவினை மாய்த்திடுமே
கருணையின் செயல் இதுவாமே - உயிர்

3. மேவி கிறிஸ்துவை மரித்தவரில் - நின்றே
ஆவியால் மீண்டும் உயிர்ப்பித்த அவரே
திரு ஜீவனாம் இந்த அபிஷேகத்தின்
நிறைவாலே உயிர்மீட்சி செய்வார் - உயிர்

4. கிறிஸ்து இயேசுவின் பிரசன்னத்தால் - மாறா
கிருபையே முற்றும் வெளியாக்கி அதினால்
பகர்ந்தனர் ஜீவனை சுவிசேஷத்தால்
தகர்த்தென்றும் சிலுவையால் சாவை - உயிர்

5. சீயோன் தன் ஜீவ கிரணங்களே - வல்ல
ஜீவனின் மிக்க பூரணம் தனிலே
நிறைவோமே ஜீவனின் அழியாமையில்
மறைவோமே மறுருபராகி - உயிர்

# Tamil Hymn No 396

## JESUS THE SONG OF MY HEART

பல்லவி

எந்தன் இதயத்தின் தொனியாம்
அன்பரென் இயேசுவே
உந்தன் கனிமொழியே - மாறா (2)
உவந்து சாற்றிடுவேன் - நான் (2)

சரணங்கள்

1. இன்பநதியாய் இன்னல் அகற்ற
வந்தீர் என்னைத் தேற்றவே - அன்பே
பூரண கிருபை யாயுள்ளில்
பரவிப் பெருகுதே என்றும்
எந்தன் ஜீவன் ஊற்றியுந்தன்
சொந்தமாய் படைத்திட்டேனே – ஆ - எந்தன்

2. நேயமுடனே நாயனுமக்காய்
சேவைதனை புரிய - அன்பே
ஆவியின் அபிஷேகத்தாலே
அவனிதனில் அழைத்தீரே
என்னவோ! நின் நோக்கம் என்னில்
இன்னமும் நினைந்திடுவேன் - ஆ - எந்தன்

3. தேவசுதராய் தூய சபையாய்
மேதினியில் திகழ - அன்பே
அநாதியாய் நினைந்தோர் நீரே
அன்பரும் திரு சித்தம் போல
கேதமில்லா உந்தன் அன்பிற்
கேதும் யான் செய்யலாகுமோ – ஆ - எந்தன்

4. நாட்கள் நொடியில் கடந்து செல்லுதே
மீட்பர் நீர் வருவீர் - அன்பே
திரையாம் தேகம் வழியேகி
பரிசுத்தரும் மறைகின்றார்
வேண்டும் நாதா வேலையாட்கள்
வேண்டுதற் கிரங்கிடுவீர் – ஆ - எந்தன்

5. சீயோன் மீதிலே ஆவல் கொண்டநல்
ஜீவியமுடையோர் - அன்பே
சிறந்திலங்கும் திருநாளை
சிந்தித்தால் என்ன மா மகிமை
ஆமென் இயேசுவே நீர் வாரும்
ஆவலாய் ஏங்குதே சபை – ஆ - எந்தன்

# Tamil Hymn No 397

## JESUS THE LIFE GIVER

பல்லவி

நல்லாயனாம் இயேசுவென்னும்
நாமத்தில் வந்துதித்தார்
நலிந்தோரை நானிலத்தே
நயந்து இரட்சிக்கவே பிறந்தோர்

சரணங்கள்

1. ஆடுகள் போல் வழிதப்பியே அலைந்தே
   தேடுவார் இன்றியே மாள்பவரை
   நாடியே நானிலம் தேடியே வந்துமே
   மீட்கவே நாட்டம் கொண்ட நல் மேய்ப்பரே - நல்லா

2. சத்தியம் கிருபையுமாய் உதித்தவரே
   நித்திய பிதாவென்னும் நாமமுளளோர்
   சேருமே பெத்தலை பாருமிப்பாலனை
   தீர்ப்பாருன் இதயத்தின் தாகந்தனை - நல்லா

3. இரட்சகர் இயேசுவே வந்தார் இத்தரையில்
   மாட்சிமை சுரர் துதி துறந்தவராய்
   என்னவோர் அன்பிதே மானிடர் மீதிலே
   தன்னிகரற்ற பாலகன் பிறந்தார் - நல்லா

4. சரீரமாம் சபையின் அரும் சிரசாய்
   பாரினில் ஆகிடவே பிறந்தார்
   சுத்தராய் அன்பிலே தம்முன்பில் நிறுத்த
   சித்தமும் சிந்தையதில் கொண்டவரே - நல்லா

5. வியாதியும் வேதனை துன்பமும் சுமந்த
   பாவ நிவாரண பலியவரே
   வழியும் இவரே சத்தியமும் இவரே
   அழிவில்லா ஜீவன் அளிப்பவரே - நல்லா

# Tamil Hymn No 398

## PRAYING FOR THE OUTPOURING

பல்லவி

முடிவேயில்லா உம் ஆண்டுகள் போல் இயேசுவே
அடியாரிலே நின் திரு கிருபை
நீடித்தே நிலைத்திடுதே

சரணங்கள்

1. மருவில் நீர் நீரோடையாய்
வருவீர் என் தாகந்தீர்ப்பீர்
நின் ரூபம் நோக்க மனம்
இன்னும் காவினில் கதறிடுதே - முடி

2. அரசே நின் அபிஷேகத்தால்
சிரசாய் தீர்ந்தீரே சபையின்
ஜீவனின் மா பெலனாய்
ஜீவ ஆவியே எழுந்தருள்வீர் - முடி

3. பகரும் நின் வரங்களையே
உகந்தும்மில் ஸ்திரப்படவே
அப்போஸ்தலர் காலம் போல்
இப்போ சந்திப்பீர் எழுப்புதலால் - முடி

4. தற்பரா நின் சிறப்புரைக்க
அற்புதங்கள் நடைபெறவே
உவந்தும்மை சேவிக்க
நவ ஜீவியோர் எழுப்பிடுமே - முடி

5. நற்பிதாவின் திருகுணங்கள்
நிறைந்த புரியே சீயோனே
சொந்தமாய் கொள்ளதனை
தந்த காலங்கள் இன்னுமெத்தனை - முடி

# Tamil Hymn No 399

## CALLED UNTO ZION

பல்லவி

உன்னிலுண்டே இன்சீயோனே
வன் கிருபையின் நிறைவே
எண்ணியெண்ணியே நான் நின்னை இம்மண்ணிலே
என்றும் எந்தன் உள்ளம் ஏங்குதே

சரணங்கள்

1. தூய தேவனுக்காய் - இன்ப
நேய ஆட்டுக்குட்டிக்குமாய்
மானிடர் மாநிலம் யாவினின்றேயிவர்
மாறிடா மாசில்லா மீட்பினை பெற்றவர் - உன்

2. தேவ சித்தம் என்றும் - அதை
வேத ஆணையாய் ஏற்றுமே
தேக மதில் புரிந்தே திரையொழித்துமே
தேவனின் சுதராய் சீயோனில் விளங்குவார் - உன்

3. தந்தையர் அவரே - அந்த
சிந்தையே தம்மிலுடையோர்
விந்தையாம் மெல்கிசேதேக் முறைமையினாலே
தந்தையின் வதனம் கண்டுமே சேவிப்பார் - உன்

4. இப்புவிதனிலே - மேவி
ஒப்புரவாக்கும் பணியில்
பானமாய் ஜீவனை சேவையில் வார்த்ததால்
பங்குமாய் ஆனதோர் ஒப்பில்லா சீயோனே - உன்

5. சீயோனின் உயர்ந்த வல்ல
சீர்பெறும் கொத்தளங்களாய்
ஜீவித்தோர் சாட்சிகள் பின்தலைமுறையோர்க்கு
சிறந்தே விளங்கும் விண்ணதில் சுடர்களே - உன்

# Tamil Hymn No 400

## GOD SHALL VISIT HIS PEOPLE

சரணங்கள்

1) கல்வாரியின் காட்சியே காண்பீரே காண்பீரே
கஸ்திகளடைந்துமே ஜீவனைத் தந்தாரே
பாவ பாரம் ரோகம் யாவும் போக்கவே உம் இயேசுவே
யாகமாய்த் தீர்ந்தாரே குருசின் மீதிலே

பல்லவி

அழைக்கிறார் இதோ (2)
இயேசுவல்லாது புவியில் வேறு புகலிடமுண்டோ

2) இன்னமும் அழைக்கிறார் தாமதம் செய்வதேன்
இன்பரின் கிருபையின் வாசலும் மூடுதே
உந்தன் ஜீவன் மீட்பு கொள்ள என்ன ஈடு செய்குவீர்
இந்த நல் நேரமே சிந்தை செய்குவீர் - அழை

3) நெஞ்சம் நொந்து வாடியே சஞ்சலம் கொண்டோரே
மிஞ்சும் ரோகத்தாலே நீர் நொந்துமே மாள்வதேன்
தஞ்சம் இயேசு உந்தன் பேர்க்காய் ஏற்றாரே தழும்புகள்
கெஞ்சுதல் கேட்பாரே அஞ்சி நிற்பதேன் - அழை

4) இயேசுவின் நற்சாயலாய் மாறவே நீருமே
நேசமாய் தம் தூதுகள் கேட்கவே செய்வாரே
பெந்தெகொஸ்தின் ஆவியாலே ஜீவன் உம்மில் பாயவே
சந்திப்பார் சந்ததம் வந்திடுவீரே - அழை

5) ஆதிகாலம் போலவே ஜொலிக்கவே வரங்களும்
ஆதிசபை போலவே ஒலிக்கவே ஜெபங்களும்
இயேசுவின் வருகையும் சமீபாகும் காலமே
சோர்ந்திடா சேவையில் சேர்ந்து வாருமே - அழை

# Tamil Hymn No 401

## HE IS EVERYTHING TO ME

பல்லவி

எண்ணிலடங்குமோ நின் நன்மைகள் இயேசுநாதா
எண்ணியே நன்றியாலே என்றென்றும் புகழ்வேன்

சரணங்கள்

1. ஜீவனின் அதிபதியே – நீரெனக்கு
ஜீவனில் ஆட்சி செய்யவே
ஜீவியக் காலமகிலும் –என்னேசுவே
ஜீவித்து துதி சாற்றுவேன் - எண்

2. நீர் மகா தேவனல்லவோ – வான்புவியில்
நீர் எந்தன் தேவனல்லவோ
ஔஷதமானவரும் நீர் – என்னேசுவே
சௌக்கிய காரணரும் நீர் - எண்

3. நன்மைக்காய் யாவும் நிகழ -- இன்னமுமேன்
என்னகம் துயர் கொள்வதோ
நின் மாறா நிர்ணயமிதே – என்னேசுவே
என்னிலே நிறைவேற்றுமே - எண்

4. மாட்சியில் வருவீர் நீரே – என் சரீர
மீட்பினை யளித்திடவே
தேட்டம் உம் கிருபையிலே – என்னேசுவே
நாட்டும் அத்தினம் வரையும் - எண்

5. இத்தரை ஓட்டம் முடித்து - யாத்திரையின்
அக்கரை தனை யடைந்தே
சீயோனில் இணைந்தும்முடன் - என்னேசுவே
சேவையே தொடர்ந்திடுவேன் - எண்

# Tamil Hymn No 402

## GOD'S GREATEST GIFT TO MAN

சரணங்கள்

1. கிருபை சத்தியமும் நிறைந்தவராய் - இதோ
திரு மகவானார் இயேசுவே
இருள் மேவுமுலகின் அலகினை அழிக்க
அருள் ஒளியாகப் பிறந்தார்

பல்லவி

வாருமே முன்னனை சேருமே
மா தேவ பலனாய்
இயேசு நமக்காகப் பிறந்தார்

2. அனாதயர்க் கபயம் அளிக்கும் இரட்சகரே
அநாதியாய்ப் பரம் இருந்தோர்
அநாதி சிநேகத்தால் மனுக்குலம் மீட்டிட
மனுவேலனாகப் பிறந்தார் - வாருமே

3. தழற்புவியதிலே தம்மையவர் தாழ்த்தியே
அழிவுற்றோரை ஈடேற்றிட
அழிவில்லா இரட்சகர் ஏழையுருவெடுத்தே
அழுது பெத்தலைப் பிறந்தார் - வாருமே

4. தயாபரப் பிதாவே தரித்திரர் எமக்காய்
தயவுடன் தந்த தனமே
சிறப்புடன் சீயோனின் அரசனாய் வருவோர்
சிறுமையுற்றோராய்ப் பிறந்தார் - வாருமே

5. நிறைந்தபிஷேகத்தால் வருங்கன மகிமை
திரு சுதனிவர்க் களிப்போம்
பதினாயிரங்களில் எமக்கவர் சிறந்தோர்
பதியே நம் மணவாளனே - வாருமே

# Tamil Hymn No 403

## BEHOLD OF CALVARY

பல்லவி

தூய கல்வாரியில் சாய்ந்துயிர் ஏகிடும்
நாயகன் இயேசுவுக்கு ஏன் இந்தப் பாடுகள்

சரணங்கள்

1. வெம் பாவ காரணமே கொல்கதா காட்சியாமே
நம்புவோர் எவருங்குண்டே - ஜீவன் பெறவே உயர்ந்தோர்
அம்பரனார் கொடுங்குருசில் - குருதி
செம்பொன் மேனி நின்று சொரிந்தார் - தூய

2. மும்முறை தாழவீழ்ந்தே வேண்டுதல் செய்தவரே
மூவுலகந்தனை திரு வாக்கினாலே தாங்குவோரே
மூன்று ஆணிகளில் தொங்கியே – மரித்தார்
மூவரி லொன்றான இவரே - தூய

3. நாட்டமுடன் நன்மைகள் செய்தலைந்த பாதங்கள்
நடுங்கிய சீடருக்காய் அலைமேல் சென்ற பாதங்கள்
நாடி நம்மை வந்தப் பாதங்கள் - மரத்தில்
நாட்டியறை யுண்ட பாதங்கள் - தூய

4. காயங்கள் ஏற்றதாலே வேதனை கொண்டவரே
பாயும் செங்குருதி கொண்டே கழுகி பாவங்கள் நீக்கி
துய்யராக மாற்ற நினைந்த - சிலுவை
மெய்யனின்றி மீட்பரில்லையே - தூய

5. அன்பினால் ஜீவனையே வைத்திட வந்ததாலே
அந்தம் மிகு அவர் முகம் அந்தக் கேடடைந்திடவே
இந்தக் கோரப் பாடடைந்தாரே – தமது
மந்தைக்காக ஜீவன் வைத்தாரே - தூய

# Tamil Hymn No 404

## COME HOLY SPIRIT

பல்லவி

வான்புறாவே எங்கள் மீதில் வந்தமர்ந்திடும்
வன் செட்டைகள் விரித்தே எம் அச்சமெல்லாம் அகல
வன் செயலாய் வந்திறங்கிடும் - எம்மில்

சரணங்கள்

1. ஆவியின் அக்கினியால் தகித்திடவே
அனலுள்ள இருதயம் அளித்திடுமே
அன்பினால் அனைத்தோடும் கனலடைய
அனுதினம் அருள்மாரி சொரிந்திடுமே
ஊற்றிடுமே உமதாவியை
மாற்றிடுமே உம்மைப்போலவே - வான்

2. சோர்ந்திடும் உள்ளங்கள் உணர்வடைய
மாய்ந்திடும் சரீரங்கள் உயிரடைய
ஆண்டிடும் சக்திகள் அகன்றோடவே
அண்டி வரும் எமக்கு நின் ஜெயம் தருமே
ஊற்றிடுமே உமதாவியை
மாற்றிடுமே உம்மைப்போலவே - வான்

3. பற்பல பாஷைகள் மகிழ்ந்துரைக்க
அற்புத திருவன்பை புகழ்ந்துரைக்க
நற்செய்கையாம் நவ சிருஷ்டியிதில்
பொற்பரனே வளர்ந்திட பொழிந்திடுவீர்
ஊற்றிடுமே உமதாவியை
மாற்றிடுமே உம்மைப்போலவே - வான்

4. நேசரே நினைத்திடா வேளை வருவீர்
சேர்த்திட தூயவரை உமதுடனே
வேளையும் காலமும் சாயுமுன்னே
வேலையிது தீர கனிந்திறங்கிடுமே
ஊற்றிடுமே உமதாவியை
மாற்றிடுமே உம்மைப்போலவே - வான்

# Tamil Hymn No 405

## HE'S STANDING AT THE DOOR

பல்லவி

இயேசு என் உள்ளத்தில் வாசஞ்செய்ய
ஆசையாய் கேட்கிறாரே
மெய் சமாதானமே இன்றளிப்பார்
ஐங் காயங் கொண்டவரே

சரணங்கள்

1. பாவத்தின் இன்பங்களும் - உலகின்
மாயையின் காட்சிகளும்
அழிவில் உன்னை ஆழ்த்திடும் வேளை
தோழனே எங்கு செல்வாய் - இயேசு

2. தம்மண்டை வந்திடுவோர் - நிச்சயம்
கண்டடைவார் இரட்சையே
ஆக்கினையெல்லாம் ஏற்றவர் மீதில்
போக்கிட மரித்தாரே - இயேசு

3. மரணம் இன்றுன்னையே – சந்திக்கும்
தருணம் என் செய்குவாய்
அண்டிடுவாயே மாண்டிடும் முன்னே
ஆண்டவர் இயேசுவையே - இயேசு

4. ரோகத்தால் வாடுவதேன் - அதனை
தேகத்தில் சுமந்தாரே
ஜீவனின் ஊற்றாய் வீற்றிட உள்ளில்
ஈ வேளை ஏற்றுக் கொள்வாய் - இயேசு

5. மரித்தெழுந்தவரின் - சாயலை
தரித்ததில் வளர
பரிசுத்தமும் அவர் நிறைவும்
உரிமையாம் உனக்கே - இயேசு

# Tamil Hymn No 406

## SONG OF LOVE AND VICTORY

பல்லவி

என்ன செய்குவேன் இன்ப இயேசுவே
என்னையும் நேசித்தீரோ
அன்னையே அலைபோல் அன்பிதோ பொங்குதே
அனந்த ஸ்தோத்திரமே

சரணங்கள்

1. ஞானக் கன்மலையாம் கிறிஸ்தெனக்கே
பானமானீர் பாதையதிலே
போஷித்தென்னையும் வான மன்னாவால்
ஷேமமாய் சேர்ப்பீரே ஆத்துமமதையே – ஆ ஆ ஆ ஆ - என்ன

2. வீசிப் பறக்குதே நேசக் கொடியே
நீசனான எந்தன்மீதிலே
ஜெகந்தனிலே நின் நாமமுயர
ஜெயத்தின் கொடியே நாட்டியே மகிழ்வேன் - ஆ ஆ ஆ ஆ - என்ன

3. ஜீவனூதியே பின்மாரி மழையாய்
தேவ ஆவி பொழிந்திடுவீர்
இதுவரையும் இவ்விக மறியா
அதுபோல் நதியாய் பாய்ந்துமே வருவீர் - ஆ ஆ ஆ ஆ - என்ன

4. ஆக்கமாகும் உந்தன் சபையதுவை
சேர்க்கும் வேளை நெருங்கிடுதே
நீதியதிலே நின் முகங் கண்டுமே
நிதமும் உமது சாயலாய் மாறுவேன் - ஆ ஆ ஆ ஆ - என்ன

5. பாரில் பரிசுத்தர் ஆவல் மிகவே
பார்த்து பார்த்து ஏங்கி நிற்கிறார்
தீரவில்லையோ சீயோனின் வேலையே
வாருமென் இயேசுவே தீர்ப்பீரே வாஞ்சையே - ஆ ஆ ஆ ஆ -என்ன

# Tamil Hymn No 407

## MESSIAH IN MANGER

பல்லவி

பாரிடத்தில் நாடி நம்மைத் தேடிவந்த இயேசுவை
பாடிப் பாடி துதி சாற்றுவோம்
மேசியாவுக்கோ இந்த நீசக் குடிலோ
ஓசன்னா! ஓசன்னா!! உன்னதத்திலே

சரணங்கள்

1. அன்பினைப் பாருமே தேவனின் செயலே
மானவர் பாவம் சுமப்போர்
தேவாட்டுக் குட்டியாய் - மெய்யான பலியாய்
ஜீவன் வைத்திடவே - வந்தனரே - பாரி

2. சாவையும் நோவையும் பேயையும் யாவையும்
மாய்த்திடும் அதிபதியே
கல்வாரி தனிலே - தொல்லுலகோருக்காய்
அல்லல்களுறவே - நினைந்தவர் - பாரி

3. சீயோனில் இராஜனாய் வீற்றிட உற்றார்
சேயனாய் வரவென்னவோ
அன்பினாலல்லவோ - இந்நிலையாகவோ
மன்னுருவாகவே தெதிந்தாரே - பாரி

4. தம்மைப்போலாக்கவே நம் துயர் போக்கவே
இம்மையில் இறங்கினாரே
கண்ணீர் பெருகுதே - அவ்வன்பை யெண்ணியே
கொண்டுள்ளம் நன்றியால் - சேவிப்போமே - பாரி

5. இன்னும் இவ்வுலகில் நாமேதுமில்லையே
இன்பராம் இயேசுவின்னியே
போதும் அவ்வன்பிதே - நம் ஜீவன் யாவுமே
நாதன் அவருக்கே - சொந்தமன்றோ - பாரி

# Tamil Hymn No 408

## THE WORK OF GRACE

பல்லவி

தேவ ஆவியால் மேவி எந்தனில்
ஜீவனாகும் நின் கிருபை
பாவ நாசனே இயேசு ராஜனே
பகர்ந்தீர் பரிவுடனே

சரணங்கள்

1) காரிருள் சூழும் லோக மாய்கையில்
ஆருமற்றோனாய் அலைந்தேன்
விலைமதியா உம் தூய உதிரத்தால்
விலையேறப் பெற்றவன் நான் - தேவ

2) மாசில்லாத உம் மாகிருபையால்
மானிடர் பெற மகிமை
ஆன குறைகளும் போக்கிடவே யாவும்
ஆனீர் கொல்கதா பலியாய் - தேவ

3) இன்பாகுமே இக் கிருபையே
இன்னலில் என்னை நடத்தும்
முன்னும் பின்னுமாக தாங்கி நடத்துவீர்
இன்னும் வல்லமை யளித்தே - தேவ

4) நல்ல மெல்கிசேதேக்கின் அம்முறை
நல்கியே அந்தம் வரையும்
விசுவாசந்தனில் வளர்ந்தோங்க வென்னில்
வாசஞ் செய்யும் கிருபையே - தேவ

5) அழைத்தீர் சீயோன் அதில் சேர்த்திட
பழுதற்றக் கிருபையால்
வழுவாது என்னை விழிப்போல காப்பீர்
அழிவற்றோனாய் உமக்கே - தேவ

# Tamil Hymn No 409

## LET'S RUN OUR RACE

சரணங்கள்

1. மேகம் போல் திரள் சாட்சிகள் - சூழ்ந்திடவே
ஏகமாய் ஓட்டம் தொடர்வோம்
ஏகனாம் இயேசுவை எண்ணி ஏகோபித்தே
ஏகிடுவோம் சீயோன்புரம் நோக்கியே நாம்

பல்லவி

ஆதியும் அந்தமும் இயேசுவல்லோ
நீதியும் நிறைவும் அவரல்லோ
எம் விசுவாசந்தனையே - தம்மிலே
மென்மேலும் பெருகச் செய்வார்

2. பாவங்கள் பாரங்களையும் - பின் தள்ளியே
பாரினில் சீராய் செல்லுவோம்
பாடுகள் சகித்த இயேசுவைப் பார்த்துமே
பதறாதே ஏகிடுவோம் அந்தம் வரை - ஆதி

3. ஓட்டம் முடித்தே தமது - சுதந்திர
தேட்டம் தனையே பெறவே
கூட்டமாய் சுத்தரே காத்து நிற்கிறாரே
நாட்டமுடன் நாடி நாமும் சேருவோமே - ஆதி

4. மா விசுவாச வழியே - திறந்தவர்
மாசில்லா மார்க்கம் ஓடவே
மா திடனுடனே மகிமை சேரவே
மா நிலமே மறந்துமே ஓடிடுவோம் - ஆதி

5. சீயோனும் எருசலேமும் - பணித்தவர்
சேர்த்திட வேகம் வருவார்
சேர்ந்திடும் உள்ளங்கள் உணர்ந்து எழும்பி
சேர்ந்து சேவை செய்திடவே வந்திடுவீர் - ஆதி

# Tamil Hymn No 410

## THE DEAD SHALL RISE

சரணங்கள்

1. ஆகாய முகிலின் மீதினில் தோன்றுவார்
ஆர்ப்பரிப்புடனே தூதர்கள் சூழவே
ஆவலாய் அவர்க்காய் காத்திருந்தோருக்காய்
ஆதரையே நோக்கி இயேசு இறங்கி வருவார்

பல்லவி

நினையா நேரந்தனிலே நித்தியர் இயேசு வருவார்
நித்திரையை விட்டெழும்பும் நேரமாயிற்றே
நீதியதின் ஆயுதங்கள் தரித்து இருப்போம்

2. தூளதில் தூங்கிடும் தூயவர் துரிதம்
துன்பங்கள் துறந்தே மண்ணினின் றெழும்ப
ஜீவனோடிருக்கும் தேவனின் சுதரே
ஜோதிமயமாகி விண்ணில் பறந்தே செல்லுவார் - நினை

3. மண்ணின் மகிமையும் தம்மானமேவையும்
அண்ணல் இயேசுவுக்காய் இந்நிலம் வெறுத்தோர்
கண்ணிமைப் பொழுதில் சேரவே அவரை
கண்ணீரெல்லாம் கர்த்தர் தாமே கரத்தால் துடைப்பார் -நினை

4. அப்போஸ்தலரவர் அஸ்திபாரத்தின் மேல்
செப்பமாய் அமைந்தே சீர்பெற வளர்ந்தோர்
இப்புவியதினின் றுயர்த்தி நித்தியம்
தப்பிடாது தம்முடனே இருத்த வருவார் - நினை

5. மகாமகிமையாம் சீயோன் சாலேமையும்
வேகா வேகமுடன் ஏகமாய் அடைந்தே
யுகாயுகங்களாய் இணைந்தவரிலே
முகாமுகமாகக் கண்டு சேவையே புரிவோம் - நினை

# Tamil Hymn No 411

## MY DESIRE IS THY WAY

பல்லவி

ஸ்தோத்திரம் இயேசு பரா இத்தருணம்
ஸ்தோத்திரம் செய்திடுவோம்
மாதுரிய கீதமுடன் சாற்றுவோம் உமதன்பை
மாதிரத்தில் நீரெம் ஜெயமே

சரணங்கள்

1. கண்களின் மாட்சியாம் அதிலே
   கண்டெடுத்தீர் எம்மையே
   கானலோ வேனலோ மானிலமதிலே
   ஆனதோர் உம் வழியே - ஸ்தோ

2. ஆருயிர் இயேசுவே ஒளியாய்
   சேருவீர் காரிருளில்
   நேரிடும் சோதனை துன்பங்கள் நடுவே
   நேமியே கருணை செய்வீர் - ஸ்தோ

3. காத்திருந்த சுத்தர் பலரும்
   இத்தரை நீங்கினாரே
   சித்தமே யாம் செய்து யாத்திரை தொடர
   அத்தனே அபிஷேகிப்பீர் - ஸ்தோ

4. எம்மையும் மாட்சிக் கென்றழைத்தீர்
   செம்மை மிகும் மொழியால்
   உம் திரு சாயலில் எந்நாளும் வளர
   இம்மையில் கிருபை செய்வீர் - ஸ்தோ

5. சிந்தையில் இயேசுவின் நிகராய்
   சந்ததம் வாழ்ந்தவரே
   சீயோனாய் சேர்ந்திடும் நாளிதோ வருதே
   சந்தாபம் தீர்ந்திடுதே - ஸ்தோ

# Tamil Hymn No 412

## GOD'S GREATEST GIFT

சரணங்கள்

1. வருவீர் பெத்தலைக்கே வாழ்த்திட கனிந்துள்ளம்
   தருவீர் துதிகளே பாக்களுடனே
   பாரீர் இத்தேவசேயர் நரர்க்காய் கொண்ட அன்பை
   பாரெங்கும் சொல்லி புகழ் சாற்றிடுவோம்

பல்லவி

ஓசன்னா உன்னதங்கள் பாட
மேசியா மனுவாகினார்
அற்புத தானமே இயேசுவே நமக்கு
தற்பரன் தயவென்னவோ

2. காணாதலைந்த எம்மை பாலையில் கண்டெடுத்த
   காருண்ய வாரியிதோ முன்னணையிலே
   காயந்தனிலே தேவ தூய சித்தமே செய்ய
   காயங்களடைந்திட ஏகினாரே - ஓச

3. மரணவிருளதில் மாய்ந்திடும் மாந்தர் தனை
   மருவி மீட்கக் கொண்ட கோலமிதுவோ
   மேருவாய் நின்ற சாப ரோகங்கள் தீர இவர்
   ஆருமற்றவரான கோமகனோ - ஓச

4. கன்மலையான இவர் கன்னியிற் பிறந்தவர்
   கன்மங்கள் போக்க வந்த ஜீவ ஒளியே
   கன்னியாய் சபைதனை தம்முன்னில் நிறுத்தவோர்
   இன்மனமுடைய நல் ஆயனிவர் - ஓச

5. பாதையும் சத்தியமும் ஜீவனும் இவரல்லோ
   யாவையும் வார்த்தையினால் வகுத்தவரே
   பார்மிசையதிலவர் இயேசென்னும் பெயர்தனில்
   பார் மகிழ்ந்திட பாலனாய் பிறந்தார் - ஓச

# Tamil Hymn No 413

## HIS GRACE SURROUNDS ME

பல்லவி

ஆசிக்கு தென்னுள்ளம் இயேசுவே உமக்காய்
ஆத்தும நேசர் நீரே
ஆதரை மீதெங்கும் வேறாரும் காண்கிலேன்
ஆதரவளிப்பவரே

சரணங்கள்

1. சேற்றினில் மாண்டதான பாவியான என்னையும்
   ஏற்றினீர் கரைதனிலே
   தேற்றினீர் ஆத்துமத்தை மாற்றியே மா பாரங்கள்
   ஊற்றினீரே அபிஷேகமே - ஆசி

2. மாமிசமதிலே முள்போல தீரும் ரோகங்கள்
   மாய்த்திட பலுகிடுதே
   மாசில்லா கிருபையின் சாகரம் தனிலுடன்
   மகா விசுவாசம் நல்குவீர் - ஆசி

3. மலையோ அலையோ நிலையில்லாத வழியோ
   மலைப்பேனோ கண்டதையே நான்
   மலைகளினாலே சூழும் சாலேம் நகர்போலென்னை
   மலையாக சூழும் கிருபை - ஆசி

4. உந்தனின் பரிசுத்தம் இரக்கம் தாழ்மையுமே
   எந்தனின் வாஞ்சையதுவே
   தந்திடும் அனுதினம் கிருபை வல்லமையும்
   எந்தையே யும்மோடு நடக்க - ஆசி

5. நினையா நேரந்தனில் வருவீர் சேர்த்திடவே
   மனையாம் உம் சபையதுவை
   அனைத்து என் கண்ணீர்தனை துடைப்பீரன்னாளிலே
   வினை யாவும் ஒழிந்திடுமே - ஆசி

# Tamil Hymn No 414

## THEY SHALL SEE HIS FACE

சரணங்கள்

1. சீயோனெம் அரணும் சீயோனெம் கோட்டையும்
   சீயோனெம் இராஜாவின் நகரமே
   சென்றதில் சேர்ந்திடும் நாட்களும் தூரமோ
   அன்று பிதாவுடன் நின்றிடுவோம்

பல்லவி

லட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்கள்
அட்சயர் இயேசுவுடன் - இதோ
புதிதோர் பாட்டுடன் சீயோன் கிரிதனில்
ஜோதியாய் வீற்றிடுவார்

2. இல்லையே வாயினில் ஏதுமே வஞ்சனை
   நல்லதோர் நற்பலனானவரே
   சொல்லரும் ஸ்தானமாம் சீயோனாம் அம்மலை
   செல்லவே நித்தமும் நயந்தவர் - லட்

3. ஒப்பற்ற பிதாவின் அற்புத பண்புகள்
   தப்பற தம்மிலே கொண்டவரே
   செப்பமாய் சேவையில் ஜீவனை பானமாய்
   எப்போதும் ஊற்றியே மறைந்தவர் - லட்

4. கோதுமை மனிப்போல் வித்திட்ட ஜீவனை
   மேதினியில் யாவும் வெறுத்தவர்
   தாதனின் தன்ரூபம் கண்டு களித்துமே
   பாதமே சேவிப்பார் நீடுழியாய் - லட்

5. சீயோனின் கோபுரம் கொத்தளங்கள் எல்லாம்
   சென்று நாம் சுற்றியுலாவிடுவோம்
   சர்வ வல்ல தேவன் பாலனம் செய்திடும்
   சாற்றுதற்கரிய பொன்புரியே - லட்

# Tamil Hymn No 415

## HE TRIUMPHED OVER DEATH

பல்லவி

கிறிஸ்தேசு உயிர்த்தெழுந்தார்
மரித்தோரில் முதற் பலனாகியே
பாதாளம் நடுங்கிட வேதாளம் ஒடுங்கிட
ஆதவன் ஜெயித்தெழுந்தார்

சரணங்கள்

1. மரணமதின் முள்ளினை முறித்தார் தம் மரணத்தால்
அறவே அகற்றவே அடிமையின் நுகந்தனை
வெற்றி வேந்தர் எழுந்தார் - கிறிஸ்தேசு

2. எழுந்த இயேசு இராஜனே - அழிவை காண்பதில்லையே
வீழ்ந்தோரை வழுவாது நிறுத்த தம் முன்னிலையே
ஆழ்ந்த அன்பு உடையோர் - கிறிஸ்தேசு

3. மா பரிசுத்த ஆவியால் - மரித்தோரினின்றெழுந்தார்
நேசமுள்ள சரீரம் சபையதின் சிரசாக
ஆசித்தே வென்றெழுந்தார் - கிறிஸ்தேசு

4. யாவையும் தமது திரு – பாதங்கட்கு கீழ்ப்படுத்தும்
ஆவியின் செயலாலே அழிவினை அழிப்பவர்
சாவை நீக்கும் மருந்தே - கிறிஸ்தேசு

5. ஜீவனின் அதிபதியாய் சபையின் அரும் சிரசாய்
ஜோதியாய் நடந்தவர் அதன் இடைதனிலென்றும்
கேதம் போக்க எழுந்தார் - கிறிஸ்தேசு

6. ஆவியும் மணவாட்டியும் - வாரும் கர்த்தாவே எனவே
ஆதரைதனில் அவர் வரும் வேளை நெருங்குதே
ஆமென் வாரும் என்பீரே - கிறிஸ்தேசு

# Tamil Hymn No 416

## I HAVE NONE BUT THEE

சரணங்கள்

1. அநாதியாய் எந்தன் அடைக்கலம் நீரே
அநாதி நேசத்தால் நேசித்தோர் நீரே
அநாதி சிறகின் மறைவில் வந்தடைந்தே
அநாதி காலமாய் சுகிப்பேனே

பல்லவி

ஜீவனின் பெலனும் இயேசுவே நீர்
சீயோனில் இராஜனும் இயேசுவே நீர்
சுத்திகரிப்பீரே இயேசுவே உமக்காய்
சேவிக்க எந்தன் ஜீவ காலமெல்லாம்

2. வறண்ட கானகமாம் இந்த புவியே
இருண்ட பாதையே நான் கடந்திடவே
நிறைவின் தேவனே குறைகளகற்றுவீர்
நிறைந்த நதியாய் தாகம் தீர்ப்பீர் - ஜீவ

3. சிலுவை நோக்கியே உம்அடி தொடர
வல்லமை தாருமே இயேசுவே எனக்கே
நேசிக்க இகத்தில் வேறாரும் அறிகிலேன்
நீரன்றி பரத்தில் யாருமில்லை - ஜீவ

4. தேவனின் சித்தமே செய்ய வந்தனீரே
தேகமாம் திரையதை ஒழித்து சென்றனீரே
நாதனே உமது சித்தந்தனை செய்யவே
வேதனே அருள்வீர் கிருபையே - ஜீவ

5. என் கண்கள் நோக்கிடுதே எப்போ வருவீர்
என் ஆவல் தீருமே உம்முகம் காண்க
மகிமை இலங்கும் சீயோனின் மலையதில்
மாட்சியில் இயேசுவோடாட்சி செய்வேன் - ஜீவ

# Tamil Hymn No 417

## JESUS THE ETERNAL SON OF GOD

பல்லவி

அதிசய குமரன் - கிறிஸ்தேசு இரட்சகன்
இருள் தனில் அருள் ஒளியாய் தோன்றினார்

சரணங்கள்

1. பரம் விட்டு தரணியில் வர நினைந்தவரே
   நர ரூபம் அணிந்தனரே
   மருள்வினை மாய்த்திட தளர்வினை நீக்கிட
   மரணம் தனையே உவந்தார் - அதி

2. கருணையும் கிருபையும் இரக்கம் தாழ்மையுமே
   உருவாக அமைந்த இவர்
   அரூபியாய் இருந்தோர் சொரூபியாய் பிறந்தே
   அருவி போல் இகத்தில் வந்தார் - அதி

3. நரிக்குமோர் குழியுண்டே பறவைக்கோர் கூடுண்டே
   மரி மைந்தர்க் கிடமில்லையே
   பரிந்து ஏற்றிடவே அமிழ்ந்தோரை கரையே
   தெரிந்தனர் ஓர் குடிலே - அதி

4. திருமனையாகும் பரிசுத்த சபையதுவை
   நிறுத்தவே தம் முன்னிலையே
   சந்தோஷமுடனே சகித்திட சிலுவை
   வந்தனர் விந்தையிதே - அதி

5. இவரே எம் நாயகனும் இவரே ஆயனுமே
   இவரே இம்மானுவேலனே
   இவரடி பணிந்தே புகழ் முடி சூட்டவே
   வருவீரே பரிசுத்தரே - அதி

# Tamil Hymn No 418

## FAITH THE PERFECTION OF THE FATHER

பல்லவி

விளங்குமென் விசுவாசம்
மிளிறும் பொன்னது போல்
ஒளிர் மிகும் பரிசோதனையிலே - நின்று

சரணங்கள்

1. அக்கினியூடே நடந்திடும் வேளை
இக்கட்டில் அழியாதென் விசுவாசமே
தக்கநல் கிருபைகள் - மிக்கவே அளித்தென்னை (2)
எக்கணம் ஜெயமாய் ஜொலிக்க செய்வாரே (2) - விள

2. கால் தடுமாறி சறுக்கிடும் நேரம்
மெல்ல கை தாங்கியவர் நடத்தினாரே
நல்லதோர் துணையென இயேசுவே எந்தனையே
வல்லதாம் புயத்தால் நிறுத்திடுவாரே - விள

3. சாவின் நிழலதில் நடப்பினும் நானே
ஆவியே நடத்துவார் தீபமதாய்
ஜீவிக்க அனுதினம் வல்லதோர் பெலன்தனை
மேவியே அருள்வார் அபிஷேகத்தாலே - விள

4. வாண்டலம் மீதில் விண்ணுடுவானோர்
மண்டலம் வீழ்ந்திடும் வேளையிதே
மாண்டிடா அளித்தென்றும் தம் திரு வசனங்கள்
ஆண்டென்னை நடத்தி ஜெயம் தருவாரே - விள

5. மாறுமோ சீயோன் பூவதிர்ந்தாலும்
மாசுறுமோ சபை சோதனையில்
மாவல்ல அரணுண்டே காத்திட விசுவாசம்
மாவரும் ஜீவியம் இயேசுவில் அடைந்தேன் - விள

# Tamil Hymn No 419

## ZION THE PERFECTION OF THE FATHER

சரணங்கள்

1. சீயோனின் புரமே உன்னத வாசமே
சேவிப்போம் கண்டவர் பொன்முகமே
நேசிப்போம் உவந்தே சேவிப்போம் அவர்போல்
ருசித்தே பிதாவின் அன்பை யுகங்களாய்

பல்லவி

சீயோனின் மாமலையே - தாதையின் பூரணமே
நவ்வியதோர் கவியே - மகிழ்ந்தே
நவின்றே துதி சாற்றுவோம்

2. தாழ்மையின் வழியே கண்ணீரோடேகியோர்
வாழ்வினை அவர்க்காய் அளித்தவரே
ஆழ்ந்தவர் அன்பிலே நீடூழி நிலைத்தே
அழிவற்ற முடிசூடி ஆனந்திப்பார் - சீயோ

3. தாயும் தந்தையுடன் மக்கள் மற்றெவரும்
தாயகம் தனையும் துறந்தவரே
அண்ணகராகவே அவனியில் திகழ்ந்தோர்
அரண்களாய் சீயோன்தனில் விளங்குவார் - சீயோ

4. தேகத்தின் பாடுகள் ஏகமாய் சுமந்தே
தேகமாம் சபைக்காய் சகித்தவரே
அப்போஸ்தலரவர் சத்தியம் அதனை
அஸ்திபாரமாகத் தம்மில் அடைந்தவர் - சீயோ

5. பிதாவைப் போலவே இயேசுவின் சிந்தையாய்
பிதாக்களாகவே ஆக்கப்பட்டோர்
பூரணவடிவம் சீயோனின் சிகரம்
பூரண சுதந்திரமே அவர்க்கன்றோ - சீயோ

# Tamil Hymn No 420

## JESUS IS CALLING YOU

பல்லவி

வாராயோ தஞ்சம் இயேசுவண்டை சேராயோ
பாராய் உணக்காய் பாடு சகித்தோர்
கேளாய் அவரழைத்திடும் தொனியே
வாரயோ !நீ கேளாயோ !

சரணங்கள்

1. காலங்கள் மாய்கையிலே கழியுதே
கனா போல் நீங்கிடுதே
காரிருள் உந்தனை மூடி வருதே
கர்த்தரின் பதம் வருவாய் - வாரா

2. நோயதின் வேதனையால் அனுதினம்
நொய்து நீ வாடுவதேன்
நேயவர் ஆ!தழும்பேற்றார் அதினால்
நீயுமே சுகமடைவாய் - வாரா

3. இரத்தத்தை சிந்தினாரே உந்தனையே
சுத்தனாய் ஆக்கிடவே
சத்துருவாகிய உன்னை தமது
புத்திரனாக மாற்றுவார் - வாரா

4. தண்ணீரின் முழுக்கினாலே கழுகியே
விண்ணதின் ஆவியினால்
மன்னவன் இயேசுவின் சாயல் தரித்தே
அன்பிலே வளர்ந்திடுவாய் - வாரா

5. இந்நிலம் வந்திடுவார் எந்நேரமோ
சொந்தமே ஆனவர்க்காய்
சிந்தையே செய்த்டுவாய் நண்பனே நீ
இந்த வேளையில் வருவாய் - வாரா

# Tamil Hymn No 421

## WHOM SHALL WE FOLLOW

பல்லவி

பரிசுத்தர் பரிசுத்தர் இயேசுவே நீர்
தரிசித்தும் பாதந்தனை துதி சொல்லுவோம்
கரிசனையோடெம்மை கைத்தலந்தனிலே
பரிவுடன் சுமந்தீர் அன்பே நீர் – பரிசுத்தர்

சரணங்கள்

1. சோதனையதிலெமக்கோர் ஜெயக்கொடியே
வேதனையதிலுற்ற ஒப்பற்ற துணையே
மேதினிதனில் பெறும் சீயோனின் வழியாய்
வேதனே எம்மிலே ஜீவிக்கிறீர் - பரி

2. கங்குல் தனிலே கலிபோக்கிட கனிந்தே
நீங்கிடாது சீயோனின் தீபமாய்த் திகழ்ந்தீர்
பங்குறும் தினம் வரை உம் சாயலதிலே
பாங்குடன் காப்பீரே காசினியில் -- பரி

3. இத்தரை ஒழித்துமே அத்திரை கடந்தே
இத்தரையதில் தூயர் நித்திரை யுறவே
சத்தியரே நீர் வருவீரே எக்கணமோ
நித்திய மகிமையை அடைந்திடவே - பரி

4. யாவையும் எமக்காக செய்து முடிப்பீரே
யாரிலும் சிறந்தவர் இயேசுவே எமக்கே
யாவே தம் மகிமையை கண்டதால் உம்மிலே
யார் பின்னே ஏகுவோம் நீரன்றியே - பரி

5. துயிலெழும் காலமிதே ஆவியால் நிறைந்தே
உயிரடைந்தவர் சேவை செய்திட வருவீர்
அதி சுதந்திரம் பெறும் காலை விடியுதே
பதியிவர் சபையுனக்கோர் உறவே - பரி

# Tamil Hymn No 422

## MOTHER LIKE GOD

சரணங்கள்

1. விந்தையே மண்ணிலே என்னவோர் அன்பிதே
விண்தூதர் வானிலே பாடுகின்றாரே
ஏனோ இம்மானுவேல் மன்னுருவானாரே
மானவரை தேடி வந்ததாலோ

பல்லவி

ஆச்சரியமே இவர் நாடியே நம்மையே
ஆநிரை குடிலை வந்தடைந்தாரே
அற்புதமே இந்த தாழ்மையின் கோலமே
தற்பரனின் சுதன் இயேசு இரட்சகரே

2. ஏகினார் பெத்தலை ஏசென்னும் நாமத்தில்
தாகத்தை தீர்த்திடும் ஜீவ நதியாய்
கேதமில்லாதோர் ஜீவியமீந்திட
ஏகசுதன் மகவானார் இதோ - ஆச்ச

3. வியாதிக்கோர் ஔஷதம் சாவிலெம் ஜீவனும்
வியாகுலத்தில் உற்ற தோழன் இவரே
யெல்ஷதாவாம் இவர் கண்ணுறங்கா தெம்மை
ஏற்று தம் மடியில் சுமப்பவர் - ஆச்ச

4. பாலகனாய் வந்தோர் ராஜனாய் வருவார்
பாவனரை சேர்க்க தம்முடனென்றும்
பாடுகள் நிந்தைகள் தம் பங்காய் கொண்டோர்க்கே
பாலனமீந்திட வந்திடுவார் - ஆச்ச

5. வாழ்த்துவோம் இத்தினம் வானவ சேயனை
தாழ்த்தியே சேவிப்போம் தம் மலர் பாதம்
ஏழ்மையாய் வந்தாரே சீயோனின் ராஜனே
புகழ்ந்து அவ்வன்பை என் சொல்லுவோம் - ஆச்ச

# Tamil Hymn No 423

## I WILL GUIDE YOU WITH MINE EYES

பல்லவி

கண்மணி போல உன்னை
கண்மலர்ந்து காப்பேனே
கண்ணுறல் பாதைதனில்
கண்ணால் நடத்துவேனே

சரணங்கள்

1. வாக்குத்தத்தங்களில் நான் உண்மையுள்ளவரே
ஆக்குவேன் திருநோக்கம் உந்தனில் தானே
தக்கதோர் உறுதுணை காவினில் நானே
மிக்கதோர் கிருபையின் சாகரமாமே - கண்

2. வான்புவி ஒழிந்தாலும் என் ஆணை உனக்காய்
இன்னமும் நிலைக்குதே விண்மதியாக
என்னைப் போல் துணையேதும் இல்லையே மானே
உன்னையே உள்ளங்கைகளில் வரைந்தேனே - கண்

3. இரத்தமே சொரிந்துன்னை மீட்டவர் நானல்லோ
சித்தமே செய்ய ஆவி தந்தேன் பாராயோ
நித்திய மொழிகளால் தேற்றிடுவேனே
சத்தியர் எந்தன் முகம் நோக்குவாய் தேனே - கண்

4. ஆவியின் ஊழியமாம் தூயவர் சபையில்
மேவியே பங்கடைய கிருபை செய்தேனே
சேவிக்க சாலேமதில் அழைத்தேனே கேளாய்
தாவியே வருவாய் என் வாக்கை நம்பிடுவாய் - கண்

5. நினையாத நேரந்தனில் வந்திடுவேனே நான்
மனையாம் சபைதனையே சேர்க்க என்னுடனே
அனைத்து உன் துயர்தனை போக்கிடுவேனே
உனை எந்தன் துணையென மாற்றிடுவேனே - கண்

# Tamil Hymn No 424

## THE PATH OF ZION

சரணங்கள்

1) இயேசு என் மீட்பரே சென்ற இவ்வழியே
இடுக்கம் நெருக்கமல்லோ ஆ ஆ ஆ
இன்னலும் கன்னலும் இம்மண்ணில் உண்டல்லோ
இதுவே சீயோனின் பாதையே

பல்லவி

தேவனின் பிரபையே சீயோனின் சிறப்பே
சேருவேன் என்றதிலே
முகமுகமாய் பிதாவின் முகம் கண்டுமே
யுகாயுகங்கள் சேவிப்பேன்

2) நிந்தையும் கந்தையும் விந்தையின் கோலமே
எந்தையின் வழி எதுவோ ஆ ஆ ஆ
அந்தம் அழிந்தாலும் சொந்தம் ஒழிந்தாலும்
சந்ததம் சிந்தையே சீயோனே - தேவ

3) ஏகனாய் ஏங்கியே ஏகி இகந்தனில்
சோகத்தால் அகம் மடினும் ஆ ஆ ஆ
கையுறையாகவே வைத்தேன் என் ஜீவனை
வைகறை தோன்றிடும் வரையும் - தேவ

4) இயேசுவோ டேகமாய் என்றிலங்கிடுவேன்
சீயோனின் முடிதனிலே ஆ ஆ ஆ
தூயவர் அடிகள் தொடர்ந்து தாதையின்
நேயத்தின் நிறைவில் வருவேன் - தேவ

5) மெல்கிசேதேக்கின் நல் முறைமையில் வந்ததாம்
மூலைக்கல் இயேசுவைப்போல் ஆ ஆ ஆ
அப்போஸ்தலர் தமின் காலடி சுவடே
அஸ்திபாரம் திருச்சபைக்கே - தேவ

# Tamil Hymn No 425

## CHRIST IS PLEADING FOR YOU

பல்லவி

வாரும் தோழனே – தூய இயேசு இதோ தொங்குறார்
சேரும் இந்தக் காட்சி காண
உருகாதோ உந்தன் உள்ளமே

சரணங்கள்

1. கல்வாரியிலே கொடும் சிலுவை மரத்தில் மாண்டாரே
அல்லல் போக்கும் தூய
வல்ல இரத்தம் உனக்கபயமே
சொல்லில் அடங்குமோ நல்ல நேசர் பாடுகளே - வாரும்

2. குஷ்டம் நீக்கியே சுகமாக செய்த கரங்களே
குன்மம் தனை போக்கி
குணமாக்கும் திருகரங்களே
குருதி சிந்திடும் குரு யேசின் கரங்களே - வாரும்

3. மன்னியும் என்றார் தமக் கின்னல் செய்தோர்க் கிரங்கவே
இன்னும் மனமேவி
மன்னிப்பேக தயை செய்குவாரே
இன்னும் தாமதமேன் கனிந்தே கண்ணோக்கிடுவாய் - வாரும்

4. ஞானஸ்நானத்தில் தரித்தவரின் மரண சித்தமே
ஞான ஒளியான
ஞான வேத கிறிஸ்தேசுவின் நல்
ஞானமெய்தியே ஞால இன்பம் நீக்கிடுமே - வாரும்

5. உய்து ஆவியே அருள் - உய்து வாழ ஜீவன்ல்
மெய்யாய் மனமெய்து சித்தம்
செய்து ஜெயம் அடையவே
உய்த்து நோக்குமே மெய்யனேசின் காயங்களே - வாரும்

# Tamil Hymn No 426

## ABUNDANCE OF HIS GRACE

சரணங்கள்

1. கிருபை கிருபை கிருபை இதுவே
கிருபாசனமாம் கிறிஸ்தேசு இவரே
கிருபையும் சகாயமும் பெறவே இவ்வேளையே
கிறிஸ்துவினண்டை தைரியமாக சேருவோம்

பல்லவி

அல்லேலூயா ஆனந்தமாய் ஆர்ப்பரிப்போமே
அல்லல் போக்கும் மா சாகரமே
ஆதரையில் என் பாதங்கள் வழுவாது காத்திடவே
அற்புதமாய் கிருபையை அளிக்கிறாரே

2. மலைகள் தகர்ந்தே ஒழிந்தே போயினும்
நிலைக்குதே மருவினில் அவர் கிருபை
விலையேறும் கிருபையின் மாறா வாக்குத்தத்தங்கள்
அலைப்போல அடுத்தெம்மை தொடர்ந்திடுதே - அல்லே

3. ஜீவனின் மிகிலும் பெரிதே கிருபை
ஜீவனாகும் கிறிஸ்தேசு சொந்த மெனக்கே
ஜோதியவர் முகந்தனின் சோபையதில் நடந்தே
வேதனவர் திருசாயல் அடைந்திடுவேன் - அல்லே

4. ஜீவனின் நிறைவே வெளியாகிடவே
சாவினையே போக்கினாரே தம் மரணத்தால்
ஊழிகாலம் உரைப்போமே கிருபையின் தனமே
ஊக்கமுடன் சாற்றுவோம் இப்பரன் செயலே - அல்லே

5. கிருபை நிறைவாய் விரைந்தே வருவார்
தருவாரே அவரவர் பிரதிபலனை
மறுருபமாகியவர் திருமுகம் காண்போமே
மருவிலே எமக்கேதும் ஆசையில்லையே - அல்லே

# Tamil Hymn No 427

## JESUS I COME

பல்லவி

கண்டேன் இதோ நான் கல்வாரியின் அன்பை
விண்ணதின் ஆவியின் உகந்த சேவையே உமக்காய் செய்யவே
வந்தேன் இதோ நான் வந்தேன் இதோ நான்

சரணங்கள்

1. கண்ணீரதின் தாழ்வரையதினில்
நண்ணியே கடந்திட வரினும்
அண்ணலே உமதரும் பாடுகள்
எண்ணி எண்ணியே நான் திடனடைந்திடுவேன் - கண்

2. சேவிக்கவே புவியினின்றழைத்தீர்
கூவியே அழிவிலா மொழியால்
ஆவியின் திருப்பணி யதனை
ஆணையால் அளித்தீர் இணைந்திட உம்மிலே - கண்

3. தேறியோராய் எவரையும் நிறுத்த
பாறையாம் பரனும்மில் மனையாய்
என்னிலே அளவில்லா உமது
வல்லமை பெருக கிருபையே பகர்ந்தீர் - கண்

4. மெல்கிசேதேக் நல் முறைமையிலே
செல்லவே சளையது சிறந்தே
நல்லதோர் முன்னோடியாகவே
வல்ல தேசிகரே திரை கடந்தனீரே - கண்

5. சாலேமதாய் சபை வெளிப்படுமே
சாந்தன் உம் குணங்களின் நிறைவாய்
சீயோனும் இணைந்ததனுடனே
சீர் மணவாளியாய் விளங்கும் நாள் அதுவே - கண்

# Tamil Hymn No 428

## THE CROSS OF CALVARY

சரணங்கள்

1. யாரிவர் கொல்கதா மேட்டினிலே
கோர சிலுவையின் மீதினிலே
யாருமற்றவராய் ஏற்றுமே வேதனை
அறையுண்டாரே இரட்சகரே

பல்லவி

முன்னோனே பொன்முடி மன்னவனே
முள்முடி தான் உந்தன் பங்கானதோ
மூன்றாணிகள் மீதில் தொங்கினீரே

2. நன்மையே செய்திட்ட நற்கரங்கள்
தின்மையை தாங்க அறையுண்டதோ
தேவனின் வன்கரமாய் இகம் வந்தோரே
வேதனை கைகள் ஏற்றதுவோ - முன்

3. வேதனை சோதனை சாவதனை
மேதினி மீதினில் சுமந்தோராய்
கேதமில்லாததோர் தேவகுமாரனே
பாதகன் போல மாண்டனரே - முன்

4. மாவல்ல தேவனின் ஏகசுதன்
நாவதால் சொல்லரும் நற் பலியாய்
பாவனராக்கிட நம்மையும் தம்மைப்போல்
பாரக்குருசில் தொங்குகிறார் - முன்

5. கன்மலைகளும் பிளந்திடுதே
கல்லறைகளும் திறந்திடுதே
கல் மனமே குலுங்காயோ நீ இன்னுமே
கண் துஞ்சி இயேசு ஜீவன் விட்டார் - முன்

# Tamil Hymn No 429

## GLORIOUS JERUSALEM

சரணங்கள்

1. மகிமையால் நிறைந்ததோர் புது சாலேம் நகரே
வகித்திடுவாயே மணவாட்டியின் நிலையே
அகிலத்தில் அவர் சித்தம் செய்ததால் நீயே
மகிபனாம் யேசு உந்தன் மணவாளனாமே

பல்லவி

இணையில்லா பிரபையால் புகழ் அடைந்தாயே
இணைந்தாயுன் மணவாளன் இயேசுவினோடே
துணையாகும் உன்னிலவர் வாசம் செய்வாரே
எருசலேமே நவ எருசலேமே

2. திருப்பரன் குணங்கள் உன் அலங்காரமாமே
அருமையாம் அவர் சிந்தை மகிமையுமாமே
அருந்துயர் பாடுகள் நின் உடையாகுமாமே
தருமவர் ஜெயம் உந்தன் கொடியாகுமாமே - இணை

3. அசைவில்லா மூலைக்கல்லாம் யேசுவின் மேலே
இசைந்ததால் திருமனை நீயாகுவாயே
ஆசையுடன் சேவிப்பாயுன் நேசரை நீயே
வீசிடுதே அவர் அன்பின் கொடி உந்தன் மேலே - இணை

4. கறைதிரை குறையற்ற மாசற்ற சபையே
மறைந்தே கன்மலைதனில் தங்கும் புறாவே
உறைவிடம் உனக்குண்டோ இத்தரையதிலே
நிறைந்தவர் பூரணமாய் இலங்குகிறாயே - இணை

5. தன்னிகரில்லாததோர் உன்னத நகரே
பன்னரு கற்கள் உந்தன் விலையேறும் குணமே
கன்னிகையாக உன்னை காத்ததினாலே
பொன்புரியாகி அதில் மகிழ்கொள்ளுவாயே - இணை

# Tamil Hymn No 430

## WHEN WILT THOU COME

பல்லவி

ஆசை மணாளா நேச கண்ணாளா
என்று நீர் வருவீர் சோபிதந்தனிலே
ஏங்குதே எந்தன் உள்ளமே

சரணங்கள்

1. நாட்களும் புல்லின் பூவைப்போல் உதிர
நாதனே தாமதமும் ஏன்?
நானிலம் ஏங்குதே தவிக்கிறார் தூயவர்
நாயகனே வருவீர் - ஆசை

2. எக்காளம் முழங்கும் அக்கணமதிலே
அக்களிப்புடன் தூயவர்
எக்கண நொடியில் மறுரூபமாகியே
அக்கரை தனில் சேருவார் - ஆசை

3. தேகமாம் அழிவின் போர்வையை களைந்தே
கேகமாம் நித்திய வீடைத
ஏகமாய் தரிக்க ஆவலாய் நிற்கிறார்
வேகம் வாரும் மணாளனே - ஆசை

4. அப்போஸ்தலரவர் நல் உபதேசத்தால்
ஒப்புரவான சபையே
எப்போதும் உமது சந்நிதி நிறுத்த
ஒப்பில்லா நேசர் வருவீர் - ஆசை

5. உயிரும் உடலும்போல் சீயோனும் சாலேமும்
துயர் நீங்கி மகிழ் கொள்ளவே
அயராது கண்களும் நோக்கி நின்றிடுதே
உயர் மணவாளா வாரீரோ? - ஆசை

# Tamil Hymn No 431

## I AM MY BELOVED'S

சரணங்கள்

எந்தன் நேசர் இயேசு எனக்குடையவரே
சொந்தம் நான் அவருக்கே இவ்வான்புவியிலே
இன்பங்களின் ஊற்று உண்டவரிலே
அன்புடனே தேற்றியே அனைப்பவரே – எந்தன்

பல்லவி

1. ஆரங்கள் கொண்டுமே அலங்கரித்தே - என்னை
தீராத நேசத்தால் நடத்துகிறார்
வாரும் என் நேசரே மான்மரை போலவே
தீரும் என் சோகங்கள் நேசத்தினால் - எந்தன்

2. வெண்மையும் சிவப்பும் என் நேசர்தானே - இந்த
மண்ணதில் யாருண்டு தன்னிகராய்!
எண்ணில்லா மாந்தருள் என் நேசர் இவரே
கண்கொள்ளா மாட்சிமை உற்றவரே - எந்தன்

3. சந்திரன் போலவே மாவெழிலும் - சபை
இந்திரன்போல் சோபையேறிடுதே
உற்றதோர் தேவாட்டுக்குட்டியின் காந்தையாய்
வீற்றிடுவேன் அவர் சிங்காசனம் - எந்தன்

4. தண்ணீர்கள் அன்பினை அணைத்திடுமோ - இதை
தண்டிடுமோ பெரும் வெள்ளங்களும்
முத்திரை நான் அவர் நெஞ்சம் புயத்திலும்
மித்திரன் எனக்கு யாத்திரையில் - எந்தன்

5. நேசத்தின் பாத்திரம் நான் அவர்க்கே – என்மேல்
வீசிடுதே அன்பதின் கொடியே
என்னுள்ளம் பொங்குதே நன்றியால் நிறைந்தே
என்றென்றும் சாற்றுவேன் ஸ்தோத்திரமே - எந்தன்

# Tamil Hymn No 432

## THE UNCHANGING CHRIST

பல்லவி

வான்புவி அகிலமும் மாறி மறைந்திடினும் (2)
வாக்குரை செய்தவரோ மாறிடாரே (2) - என்றும்

சரணங்கள்

1. விக்கினம் எனை அணுகாது அரணும்
அக்கினி மதிலுமவர்
போக்கினிலும் வரத்திலும் என் மீதவர் கண்களே
நீக்கிடாது பதித்தென்னைக் காப்பவர் - வான்

2. ஆபிரகாமுக்கு ஓர் கானானதுவும்
மேவியோர் சந்ததியதும்
வாக்குத்தத்தம் செய்த தேவன் வாக்கு மாறவில்லையே
எக்காலமும் உண்மையுள்ள தேவனே - வான்

3. கைவிடேன் உனை என வாக்கு செய்தவர்
கைத்தலந்தனில் வரைந்தோர்
அந்தியம் வரை என்னுடனே தந்தை என இருந்தே
சந்ததம் கை தாங்கி என்னை செல்பவர் - வான்

4. நேற்றும் இன்றும் என்றென்றும் மாறா இயேசுவே
மாசற்ற புகலிடமே
வழுவாது என்னை தேவ சந்நிதியில் தம்மைப்போல்
பழுதற்றோனாய் நிறுத்த வல்லவர் - வான்

5. அவரிடத்தில் தந்த யாவும் எனக்காய்
பரிந்து காத்திடுபவர்
சீயோன் மலையதுபோல அசையாது நிலைக்கும்
தூய பரனவர் திரு வார்த்தைகள் - வான்

# Tamil Hymn No 433

## FILL IS WITH THY SPIRIT

சரணங்கள்

1. ஆதி அப்போஸ்தல நாட்களைப்போல் - தேவா
மேதினி மீதினில் உம்மாவியை
ஊற்றியே உள்ளங்கள் உயிர்பெற
உன்னதா இந்நேரம் வந்திடுவீர்

பல்லவி

வந்திடுவீர் தேவா வந்திடுவீர்
வல்லமையால் நிறைக்க - இவ்வேளை
ஆவியின் கனியும் வரங்களும்
ஜொலிக்க செய்திடுவீர்

2. அக்கினி நதியாய் பாய்ந்திடுவீர் - இன்றே
போக்கிட எனது மாசுகளும்
ஆக்கிட உம்திரு தூயவனாய்
தக்கதோர் வல்லமை தந்திடுவீர் - வந்தி

3. அந்திய நாட்களில் என் ஆவியை - எல்லா
சந்ததி மீதினில் பகருவேன்
என்று வாக்குத்தத்தம் அளித்தீரே
இன்று அதை நிறைவேற்றுவீரே - வந்தி

4. தேகமிக்கூடாரம் களைந்திட்டே - நானும்
வேகம் உந்தனுடனே இருப்பேன்
ஏகமாய் உம் திரு சாயலதாய்
ஆகவே தாரும் பின்மாரியினை - வந்தி

5. சீயோன் எருசலேம் ஆயத்தமோ? - தேவா
சீக்கிரம் சேர்த்திட வந்திடீரோ ?
பார்த்து பார்த்துமே என் கண்கள் இதோ
சோர்ந்திடுதே தீரா வாஞ்சையினால் - வந்தி

# Tamil Hymn No 434

## ZION MY INHERITANCE

சரணங்கள்

1. நீதியும் தேவ ஜோதியும்
வேதமாய் விளங்கும் புரமே
தேவனும் தேவ ஆட்டுக்குட்டியும்
தேவ தாசரோடிலங்குகிறார்

பல்லவி

என்னவோ! சீயோனின் மகிமை - நின்று
என்றென்றும் வீசிடுதே
எண்ணியே அதன் வாஞ்சையினால்
மண்ணில் மறைகின்றார் நேயவரே

2. பூவியில் இயேசு போலவே
ஆவியில் பிதாவின் முகமே
மேவியே கண்டோர் சீயோன்தனிலே
சேவிப்பார் அவரை கண்டுமே - என்ன

3. ஏகனாய் இக லோகத்தில்
ஏதுமற்றே சேவை புரிந்தோர்
ஏகமாய் தேவ தாசருடனே
வேகம் பெறுவார் தம் சுதந்திரமே - என்ன

4. யாரிவர் இதோ சீயோனில்
யாரும் கற்றிராத கீதமே
ஆற்றுவோர் பல பாடுயேற்றவர்
சாற்றுவார் தனை கீதமதுவாய் - என்ன

5. என்று சேருவேன் சீயோனில்
அன்று சூடவே மகுடமே
நின்று தேவனின் மா மகிமையாய்
தோன்றுவேன் முடிவிலா யுகமாய் - என்ன

# Tamil Hymn No 435

## WARNING TO ZION

பல்லவி

விலையேறும் சீயோன்தனின் சுதராக அழைத்தேனே
நிலையில்லா உலகினின்றே
விலையேறும் தூதுகள் உவந்துனக்களித்தேன்
நிலையாகும் கிருபையுடன்

சரணங்கள்

1. நேத்திரம் கனிந்தே ஆத்துமம் உருகி
நிதமுமே துயரடைவாய்
நதிப்போல் உன் இதயமென் சமுகத்தில் ஒழுகவே
பதி என்னில் தரித்திடுவாய் - விலை

2. சிறை ஏகும் உனது சுதர்தனை நினைந்து
சுனை என கரைந்திடுவாய்
தெருக்களில் இடறியே கிடக்குதே சத்தியங்கள்
பரிசுத்த ஸ்தல கற்களாம் - விலை

3. பானிய பலியும் போஜன பலியும்
மனிதரில் அற்றுப்போயிற்றே
மனந்தனில் சிந்தனையே திரு சீயோனே செய்குவாய்
இனிகாலம் இல்லை உனக்கே - விலை

4. கறை திரை குறையும் உலவும் உல்லாசமும்
சபைதனில் வெளிப்படுதே
எனது மணாளியாம் எனது ஆலயமென
மனமதில் நினைத்தாயில்லை - விலை

5. அவரவர்க்களிக்கும் பிரதிபலனுடனே
விரைந்து நான் வெளிப்படுவேன்
மதில் நீயே சீயோனின் காவல்காரர் உன்மீதிலே
மனந்தெளிந் தெழும்பிடாயோ? - விலை

# Tamil Hymn No 436

## ELSHADAI

பல்லவி

யெல்ஷதாவாய் கண்மணிபோல எம்மைக் காத்தீரே
வல்ல தேவன் நீர்தானல்லவோ - இகத்தில்
அல்பகல் உம் துதி சாற்றுவோம்

சரணங்கள்

1. நானே யுனக்கு வல்ல அரணும்
நானிலத்தில் தாகந்தீர்க்கும் உரவென்றீரே
கானான் கரையே சேரும் வரை ஜெயமாய்
வானாகாரமீந்து போஷிப்பீர் - யெல்ஷ

2. நாடி எம்மையே பார்தலத்திலே
தேடிவந்த நல்லதோர் சமாரியன் நீரே
நேடி மரத்தில் சொரிந்தீரே உதிரம்
மடிவோர் எம்மை வாழ்விக்கவே - யெல்ஷ

3. மாட்சி மிகவே காட்சியளித்தீர்
முட்செடியில் மோசேக்கு அநாதி தேவனாய்
ஆட்சி செய்வோமே ஜீவித்தே யுகங்களாய்
இரட்சகர் இயேசு உம்முடனே - யெல்ஷ

4. மாறிடாத உம் மா கிருபையால்
தேறியே உம்மிலே உந்தன் நிறைவடைந்தே
மாறிடுவோமே மகிமையின் சாயலாய்
மறுமையின் புத்திரருமாய் - யெல்ஷ

5. தேவசித்தமே செய்ய அழைத்தீர்
தேகமதில் திருச்சித்தம் செய்த சுதன்போல்
ஏக ஆவியால் ஆடிப்பாடி மகிழ்வோம்
ஆகமனம் அடுத்திடுதே - யெல்ஷ

# Tamil Hymn No 437

## THE BLOOD THAT GIVES VICTORY

சரணங்கள்

1. எந்தன் இயேசு நாதனே
   உந்தன் ரூபமே இதுவோ
   அந்தக் கேடடைந்தீரே - எந்தனுக்காக

பல்லவி

இயேசுவின் இரத்தம்
ஜெயம் தரும் வல்ல இரத்தம்
மாற்றிடும் இரத்தம்
மாசற்றோராய் நம்மையும் - தம்மைப் போல்

2. கொல்கொதாவைக் காண்கையில்
   லோக மோகம் குப்பையாமே
   அன்பின் ஆழம் நீளமும் - ஆச்சரியமாமே - இயேசு

3. கண்கள் துஞ்சும் வேளையே
   கண்டீர் எம்மை அன்பினாலே
   உள்ளம் கரைந்தோடிற்றே - வெள்ளமாய்த் தானே - இயேசு

4. உந்தன் திவ்ய சபையை
   சிந்தையதில் கொண்டதாலே
   தந்தீர் உந்தன் ஜீவனை - உம் சாயலாக்க - இயேசு

5. கல்வாரியின் கஸ்திகள்
   காவினில் எம் கீதமாமே
   காண்கிலேம் வேறன்பினை - இவ்வன்பிற்கீடாய் - இயேசு

# Tamil Hymn No 438

## THE RIVER OF GLADNESS

பல்லவி

இன்ப இன்ப நதியே - பரிசுத்த ஆவியே
அன்பினால் எம் உள்ளங்களை நிறைத்திடுமே
இன்னும் இன்னும் உம்மிலே ஆழ்ந்து நிலைத்திடவே
சொன்ன போல் இறங்கும் விண் தூய ஆவியே

சரணங்கள்

1. காய்ந்து போன எலும்புகள் உயிரடைய
பாய்ந்து ஜீவன் அளித்திடுமே
ஓய்ந்து போன அனுபவம் மலர்ந்திடவே
ஆய்ந்து எமக்கருள் செய்யுமே - இன்ப

2. அக்கினியால் சாம்பலாக தகித்திடவே
தக்கதோர் சமயம் இதுவே
நீக்கிடவே கறை திரை குறைகளெல்லாம்
ஆக்கிடவே உந்தன் சாயலாய் - இன்ப

3. விந்தையாகும் நின் சரீரம் சபையதுவை
சந்தியும் நல் வரங்களாலே
உந்தனது மகிமையில் வளர்ந்தோங்கவே
எந்தையே கிரியை செய்யுமே - இன்ப

4. ஆதி அப்போஸ்தலரவர் உபதேசங்கள்
மேதினியில் உயிர் பெறவே
நீதியும் சத்தியம் நிறை சாலேம் புரத்தின்
பாதைக்குமோர் தீபமாகுதே - இன்ப

5. மெல்கிசேதேக் ஆகும் பரிசுத்த ஆவியே
நல்குவீர் நின் முறைமையதை
தொல்லுலகில் சேவை செய்ய பலர் எழும்ப
வல்ல அபிஷேகம் ஊற்றுமே - இன்ப

# Tamil Hymn No 439

## BEHOLD HE COMETH

சரணங்கள்

1. இதோ - வான் முகில் மீதேறி வருவார்
விண் தூதர்கள் சூழ்ந்திட வருவார்
எண்ணில்லாத சுத்தருடன்
கண்ணிமை நேரத்தில் வெளிப்படுவார்

பல்லவி

அல்லேலூயா அல்லேலூயா
எம் இயேசு வருகின்றார்

2. மண்ணில் - மரித்த தூயர் உயிர்த்தெழும்ப
பாரில் உயிருள்ளோர் மறுரூபமடைய
அழிவென்பதே இனி இல்லையே
வாழ்வோமே நீடூழி காலங்களாய் - அல்லே

3. மீண்டும் - வருவேன் என்று சொல்லி சென்றவர்
வரும் வேளை நெருங்கி வந்திடுதே
சுத்தர் இன்னும் சுத்தமாவீர்
சத்திய தீபம் உயர்த்திடுவீர் - அல்லே

4. கறையேதும் இல்லாத தம் சபையை
மணிவறையதில் மறைத்திட நினைந்தே
அருமை இயேசு மணவாளனாய்
வருவாரே புவி நோக்கி அதிவேகமாய் - அல்லே

5. சீயோன் சாலேம் அதெம் வாசஸ்தலமே
சர்வ வல்ல தேவனின் தாபரமே
சேர்ந்ததிலே சேவை செய்ய
சோகத்தால் சோருதே எம்முள்ளமே - அல்லே

# Tamil Hymn No 440

## HEALED BY HIS STRIPES

சரணங்கள்

1. அவர் தழும்புகளால் குணமாகினேனே
அவரே சுமந்தார் எந்தன் நோவை
அவர் பாடுகளால் அதின் பெலன் அழித்தார்
அரியதோர் வைத்தியரே

பல்லவி

குணமானேன் நான் குணமானேன்
இயேசுவின் தழும்புகளால்

2. பன்னிரு ஆண்டுகள் கொடும் நோயதினால்
இந்நிலம் வருந்தி வந்த மாதை
‘மகளே திடன்கொள் சுகமானாய்’ எனவே
மொழிந்த மா நேசரிவர் - குண

3. ‘சித்தமுண்டெனக்கு சுத்தமாவாய்’ என
சத்தியர் தொட்டுமே குஷ்டம் போக்கி
சந்தோஷம் பகர்ந்த இயேசு என்னும் மருந்தே
சந்ததம் எனக்கும் அவர் - குண

4. புதினெண்ணாண்டுகள் கூனியாயிருந்த
அணங்கை நிமிரச் செய்த அவர்
சாத்தானின் தலையை நசுக்கின வல்லவர்
சக்தியுமே எனக்களித்தார் - குண

5. திருவாக்கை நம்பி வருவீர் ஜனமே
மருவில் யாருண்டு இயேசுவல்லால்
தருவீர் இதயம் பூரணமாய் அவர்க்கே
இவருந்தன் இரட்சகரே - குண

# Tamil Hymn No 441

## GOD EVER OUR REFUGE

சரணங்கள்

1. யுகாயுகமாகவே புகலிடம் நீரே
உகந்தென் சகாயம் வரும் பர்வதம் நீரே - இகமதில்
அகம் நிறைந்தென்றும் நன்றியால் பாடுவேன்

பல்லவி

எந்தன் இயேசுவே நின் திருப்பாதங்கள்
இந்தப் பாரில் ஏற்ற சரணமதே
அந்தி வேளை சூழும் கணந்தனிலே
எந்தையே என்னோடிரும்

2. நோவில் சுகம் தரும் என் ஔஷதமும் நீரே
சாவிலும் நித்திய ஜீவனாய் இருப்பவரே - முடிவில்லா
ஆவியின் பெலத்தால் என் இடைகட்டுவீர் - எந்த

3. கிறிஸ்துவின் நிறைவாய் வளர்ந்து பெருக
ஸ்திரமாய் சத்தியம் அளித்து நடத்துகிறீர் - கிருபைகள்
அஸ்திபாரம் நீரே ஆதரவும் நீரே - எந்த

4. குற்றம்குறை அற்றோராய் காப்பீர் உம் பெலத்தால்
மாசற்ற சபையாய் உம்திரு சாயலிலே - மகிமையின்
உற்ற பதி நீரே இகபரத்திலே - எந்த

5. சீயோன் மணவாளனே சீக்கிரம் வருவீர்
சீலத்தால் நிறைந்து நின்மனை காத்திடுதே - தவித்துமே
சீயோனும் சாலேமும் இணைந்த சபையாய் - எந்த

# Tamil Hymn No 442

## JESUS A CLUSTER OF CAMPHIRE

பல்லவி

வருவீர்! உள்ளம் தருவீர்! தேவக்குமரன் பாதம் பணிவீர்!
பார்தனிலே பரிவுடனே பரம்பொருள் உதித்தார் தயவென்னவோ!

சரணங்கள்

1. மலைமீதில் அலையும் ஆடுகளைப்போல்
நிலையில்லா உலகினில் அலைவோரையே
விலையேறும் உதிரமே சிலுவையில் சொரிந்தே
விலையேறும் சுதராக்க மனுவாகினார் இதோ - வருவீர்

2. மருதோன்றி மலராம் இயேசு இவரே
மருவில் நாடி வந்த மேசியா இவரே
திருசித்தம் புரியவே சுரலோகம் துறந்தார்
வருவோமே தருவோமே நமைமுற்றும் இவர்க்கே - வருவீர்

3. சமாதானப் பிரபுவாம் நேசர் இயேசுவே
மனமேவி வந்த நல்ல சமாரியனே
தானமாய் கிருபையை ஈனராம் நமக்கே
கனிவாக தரவே ஆகுடிலிடை பிறந்தார் - வருவீர்

4. இடையவர் ஞானியோர் அடிபணிந்த
இடைவில்லா ஜெயம் நல்கும் திருவடிகள்
இடையான நாமந்தனில் ஜெனித்தாரே ஜெகத்தில்
இடையின்றி உயர்த்துவோம் உளமெல்லாம் உவந்தே - வருவீர்

5. தாவீதின் வங்கிஷத்துத் தாரகை இவர்
தாவீது கோத்திரத்தின் சிங்கமும் இவர்
தாவீதின் திறவுகோல் தோள்மீதில் ஏற்றவர்
தாவீதின் செங்கோலும் ஆட்சியும் இவர்க்கே - வருவீர்

# Tamil Hymn No 443

## I SEEK YOU WITH TEARS

பல்லவி

கண்ணீரோடே கர்த்தாவே உந்தன் முகம் தேடுவேன்
தண்ணீர்த்தடாகமாய் மாறுதென் கண்களும்
விண்ணப்பம் கேட்டிடுமே

சரணங்கள்

1. நள்ளிரவெழுந்தெந்தன் உள்ளத்தை
வெள்ளம்போல் ஊற்றுவேன் உம்பாதத்தில்
தள்ளிடுவீரோ எந்தன் வேண்டுதல்
தாழில்லையே நின் தயைக்கென்றுமே - கண்

2. துருத்தியில் என் கண்ணீர் யாவையும்
இருத்தி கருத்துடன் காண்கிறீர்
விருதாவாகாதென் கண்ணீருமே
கிருபையால் என்னையே தாங்குமே - கண்

3. கூடாரமாம் நின் சந்நிதியிலென்
கூக்குரல் வந்தெட்டிடுதே நிதம்
கூரிருள் கண்ணீர் பள்ளத்தாக்கிலே
சூரிய சோபையாய் நடத்துவீர் - கண்

4. கண்ணீரில் விதைத்த விதைகளை
மண்ணில் நற்பலனாக மாற்றுமே
விண்ணில் நீர் வெளிப்படும் வேளையில்
கண்ணிமைதனில் உமை காணவே - கண்

5. இம்மண்ணில் மறையும் இப்பாடுகள்
விண் நித்ய மகிமைக்கீடாகுமோ?
கண்ணதின் மணிபோல என்னையே
நண்ணியே வழுவாது காப்பீரே - கண்

# Tamil Hymn No 444

## GOD THE BEAUTIFUL ZION

சரணங்கள்

1. சீயோனிலே கண்டிடும் திவ்ய
கோபுரம் அரண்களை எண்ணியே
சுற்றி உலா உவந்தே வருவோம்
சாற்ற பின் சந்ததிக்கே

பல்லவி

சீயோனே! வடிவுள்ள சீயோனே!
சோபிதமாய் ஜொலித்திடுதே திருபிதாவின் குணசீலங்கள்
சேர்ந்திடுவோம் என்றதிலே நின்றிடவென்றும்
சீயோனே! வடிவுள்ள சீயோனே!

2. தேவன் உயர்கோட்டையாய் உன்னில்
வேதம் ஒளியுமாக திகழ
கேதமில்லா பொன் முகந்தனையே
மோதத்தால் முத்திடுவோம் - சீயோ

3. ஊரிலொன்றும் வம்சத்தில் இருவர்
நேர்ந்தே தெரிந்து கொள்ளப்பட்டவர்
பாரினின்றும் மனுஷரிலிருந்தும்
முற்பலன் ஆனோர் இவர் - சீயோ

4. ஆட்டுக்குட்டி இயேசுவின் பின்னே
ஆசித்தலைந்த சுத்தர் பாதங்கள்
ஆட்சி செய்ய நின்றிலங்கிடுதே
ஆர்ப்போடு சீயோனிலே - சீயோ

5. இன்னான் இன்னான் வந்துன்னில் பிறந்தோர்
என்றுன்னில் தொகை எழுதிடுவார்
இன்சீயோனில் பாலனம் புரிய
தன்மாட்சி தந்திடுவார் - சீயோ

# Tamil Hymn No 445

## IN JESUS YOUR REST

பல்லவி

சோகத்தால் சோர்ந்திடும் சோதரா சேருவீர்
நேசரின் மார்பினிலே
ஆசையுண் இயேசுவில் நேசமுசிப்பாறுதல்
நாசலோகில் உனக்குண்டே

சரணங்கள்

1. கல்வாரி சிலுவையில் உன்னை இரட்சிக்க
கஸ்தி மிக்கவே பட்டோராய் தொங்குகின்றார்
காயத்தில் ஏற்றுமே வரும் பிணிகள் - அவர்
காயத்தால் தீர்த்தனரே - சோக

2. பாவத்தால் நேர்ந்த உந்தன் ரணம் ஆறவே
தேவ ஆக்கினை அடைந்திட உவந்தனரே
ஆவதில்லை இந்த இரட்சகரைப்போல் - மகா
பாவனரைக் காணவே - சோக

3. வேளையும் காலங்களும் கடந்திடுதே
நாளை யுண்டென்று உறுதியாய் உரைக்கலாமோ?
சிநேகிதனே தருணமும் இதுவே - இதை
சிந்தித்து வந்திடாயோ? - சோக

4. ஸ்நானத்தில் அவருடன் இணைந்ததிலே
சுயம் மாய்த்திட பெறுவாயே கிருபைதனை
வேளையிதே பெற அபிஷேகமே - உன
துள்ளத்தைத் திறந்திடாயோ? - சோக

5. வழியும் சத்தியமும் ஜீவனேசுவே
அழிவுள்ள தொல்லுலகிலே எல்லாம் அவரே
ஆழியாம் அவரில் உன் ஆசிகளெல்லாம் - பெற
விழைந்து வந்திடாயோ? - சோக

# Tamil Hymn No 446

## BLESS THE LORD, O MY SOUL

பல்லவி

துதிசெய் என் மனமே உன் பரனேசுவை
தினம் தினம் நினைந்தவர் உபகாரங்கள்
மகத்வ கிரியை உன்னில் செய்த அவரை
ஓ! உள்ளமே துதிப்பாய் எந்நாளுமே!

சரணங்கள்

1. ஆருமில்லாத இந்த கானக வழியில்
சீரிய தோழனவர் - அல்லேலூயா!
“கைவிடேனே நான் கணப்பொழுதேனும்
கைத்தலம் மறைத்துனையே” - என்றாரே - துதி

2. வாக்குமாறாதவராய் வாக்குத்தத்தங்களை
வகுத்தாரே உந்தனுக்காய் - அல்லேலூயா!
ஆக்குவார் யாவையும் உரைத்தது போல
நோக்கத்தை நிறைவேற்றுவார் - ஆ மனமே! - துதி

3. ஆவியால் கட்டினாரே சேர்த்துனதிடையே
அன்பில் நீ நடந்திடவே - அல்லேலூயா!
துன்பங்களூடே பொன்னகர் ஏக
தன் பெலன் தருகிறாரே - எந்நாளும் - துதி

4. நேசரின் வருகையே விரைந்து வந்திடுதே
ஆசையாய் விழித்தெழுவாய் - அல்லேலூயா!
மணவாளன் வரவின் ஓசை ஒலிக்குதே
இனியில்லை காலம் உனக்கே - இவ்வுலகில் - துதி

5. நீதியின் புரமாகும் சத்தியநகரம்
ஜோதியாய் இலங்கிடுதே - அல்லேலூயா!
தன் மணவாளனின் நன்மணவாளியாய்
எந்நாளும் விளங்கிடுவாய் - ஓ மனமே! - துதி

# Tamil Hymn No 447

## POWER OF FAITH

பல்லவி

காண்பீரே நீர் தேவ மகிமை
மாண்புறும் தன் கிரியைகளை
விசுவாசிப்பவரால் கூடாததொன்றில்லை
இயேசுவின் வார்த்தையை நம்பிடுவீர்

சரணங்கள்

1. வான்புவி தோன்றும் முன்னவர் கிரியை
மண்ணுயிர்க்காகவே முடித்தனரன்றோ
இனியுமே உமக்காய் செய்வதொன்றிலையே
அனைத்துமே பெறுவாய் விசுவாசத்தால் - காண்

2. சித்தமுண்டெனக்கு நின் பிணி போக்க
சுத்தமாகிடுவாய் என்றவர் வார்த்தை
சத்தியமாகுமே இத்தரையதிலே
நித்திய மருந்தல்லோ இயேசு தானே - காண்

3. சொல்லிட ஆகும் ஆணையால் நிலைக்கும்
எல்லாமே அவரின் வார்த்தையால் நிகழும்
கூறிடுவீரே நீரும் அம்மொழிகள்
நேரிடும் அதுபோல் இஷணமே - காண்

4. ஆவியின் பெலத்தால் உயிர்த்தெழுந்தவரே
அழித்தாரே குருசில் தீயோனின் சதியே
பரிகரித்திடுமே அவர் திரு நாமம்
பாவங்கள் சாபங்கள் நோய்களுமே - காண்

5. “ஜீவிக்கிறேன் நான் என்றென்றுமாக
சீயோனின் மாறிடா ராஜனாய்- என்றார்
இன்றுமே உமக்கும் உயிரளிப்பாரே
நின்றதை பெறுவாயே விசுவாசத்தால் - காண்

# Tamil Hymn No 448

## PREVILEGE OF THE OVERCOMERS

பல்லவி

ஜெயஜீவியமே கண்டோம் இயேசுவிலே
விசுவாசத்தால் இப்பாரை முற்றும் வென்றிடுவோமே
எத்தோல்வி என்பதே எமக்கு இல்லையே
எந்நாளும் ஜெயகீதம் பாடிப்பாடி சென்றிடுவோம்

சரணங்கள்

1. ஜெயித்து நாம் சுதந்தரிபோமே
யாவும் அவரின் வார்த்தை போலவே
மறைவுள்ள மன்னா புசித்துமே
நிறைந்த ஜெயஜீவியத்தில் ஆட்சி செய்வோமே - ஜெய

2. ஜெயித்து நாம் தம் ஆலயத்திலே
ஜெய கெம்பீர தூணாய்த் தீருவோம்
நம் தேவ நாமமும் தன் நாமமும்
தம் திவ்ய நகர நாமமதும் பெற்று இலங்குவோம் - ஜெய

3. ஜெயித்து நாம் நல்லாட்சி செய்வோமே
ஜாதி ஜனங்கள் மீதிலென்றுமே
திறந்த வாசல் உண்டு நமக்கே
சிறந்த ஜீவியம் எந்நாளும் செய்துயர்ந்திட - ஜெய

4. ஜெயித்து நாம் தரித்திடுவோமே
ஜெயித்தோரின் வெண் வஸ்திரமதே
சிங்காசனம் சுதந்தரிப்போமே
சீர் மிகு தேவனோடு வீற்று ஆட்சி செய்வோமே - ஜெய

5. ஜெயிப்பவர் ஆண் மகவாகவே
உயருவார் தேவ சமுகமே
இத்தூயருக்காய் இயேசு தோன்றுவார்
இரவில்லாத நாட்டில் சூரிய சோபையாகுவார் - ஜெய

# Tamil Hymn No 449

## THE VOICE OF YOUR BELOVED

பல்லவி

பார் நேசரேசுவை
கேள் அவர் இன்ப சத்தம்
பேர் சொல்லி அழைத்தார் உன்னை அவர்
இப்பாரினில் உன்னை தம் சொந்தமதாய்

சரணங்கள்

1. காவினில் உன்னை கண்டெடுத்தே
கழுகியே தூய உதிரத்தால்
“ஆவியால் முத்தரித்தேனே, பார்
நீயும் என் சொந்தமானாயே” என்றனரே - பார்

2. வா என்னுடனே சார்ந்தென்னிலே
யாருமில்லை உனக்கென்னையல்லால்
எந்தனடிகள் பின் தொடர
அன்பால் உன்னை இழுத்திட்டேன் என்றனரே - பார்

3. கன்மலையதின் வெடிப்பிலே
கண்ணீர் நிறைந்த உன் கண்களுடன்
உந்தன் உருகும் ஜெபங்களை
தானும் கேட்கவே ஆவலாய் நிற்கிறாரே - பார்

4. அன்பு கூர்ந்துன்னில் தன்னைத்தானே
தந்தாரே முற்றுமாய் உனக்கென்றே
மாசு கறைகள் குறைகளும்
மாற்றி தூயதோர் சபையாய் நிறுத்திட - பார்

5. சீயோன் எருசலேமும் நீயே
சீர்மிகும் சோபன உத்தமியே
சேர்ந்து ஆளுகை தந்திடவே
சீயோன் ராஜன் இதோ, வேகம் வருகிறார்! - பார்

# Tamil Hymn No 450

## HIS FEET OUR REFUGE

பல்லவி

சேரீர், பரனேசு திருவடிகள்
அவை உந்தன் புகலிடம் - சேரீர்
அவை உந்தன் புகலிடமே
அங்கு காண்போமே நித்திய இளைப்பாறுதல்
நீங்கும் எந்தனின் பாரங்கள், கலி யாவுமே

சரணங்கள்

1. பாதபீடத்தண்டையில்
   பேரின்பம் காண்போமே நாம்
   நம் நேசர் பொன்மொழி கேட்குமிடமே
   எந்நாளும் நோக்கி தன் திருமுகமே - சேரீர்

2. கண்ணீரால் தம் பாதங்கள்
   நண்ணி நனைத்திடுவோம்
   வீசும் கமழ்கொண்ட தைலந்தனையே
   ஆசையாய் பூசியே பணிந்திடுவோம் - சேரீர்

3. நன்மைகள் செய்திடவே
   நடத்த பாதங்களை
   ஆணிகள் துளைக்க வான சுடர்கள்
   நாணியே தம்முகம் மறைத்தனவே - சேரீர்

4. அண்டின யாவருக்காய்
   வேண்டின பொற்பாதங்கள்
   நிற்கின்றனவே மாதூய ஸ்தலத்தில்
   மெல்கிசேதேக்கவர் முறைதனிலே - சேரீர்

5. சீயோனின் மாமலையில்
   நிற்கும் பொற்பாதங்களை
   சேர்ந்து நாம் சேவிக்கும் காலம் வருதே
   சோராது சேவையே புரிந்திடுவோம் - சேரீர்

# Tamil Hymn No 451

## MY LOFTY REFUGE

பல்லவி

எந்தன் உயர்ந்த கன்மலையே
என்றும் மாறா அடைக்கலமே
உன்னதா உம் மறைவினில் வந்தடைந்தேன்
உந்தன் நாமத்தை உயர்த்திடுவேன்

சரணங்கள்

1. மருவில் எனையே பின்தொடர்ந்து நல்
அருவியாய் என்னகம் தாகந்தீர்த்தீர்
கிருபையாய் மலைபோல் சூழ்ந்தெனை நிதமும்
அருமையாய் காத்தனீரே - எந்த

2. தனிமை வருத்தி தளர்ந்திட்ட போதும்
தேற்றுவோரின்றியே திகைத்த போதும்
இனிய உம் சுரமே உயிர்ப்பித்ததெனையே
கனிந்துமே பெலனீந்தீரே - எந்த

3. என் பெலன் விளங்கும் பூரணமாக
உன் பெலவீனத்தில் என்றுரைத்தீர்
கிலேயாதின் ஔஷதமாய் திகழ்ந்தீரே
இயேசுவே நீரெனக்கு - எந்த

4. தற்பரா உந்தன் சாயல் நான் அணிய
அற்பனாம் என்னையும் அபிஷேகித்தீர்
நிறுத்திடும் உம்மில் தேறினோனாக
நின் திரு சந்நிதியில் - எந்த

5. விரைவில் வருவீர் மகிமையில் நாதா
மறைந்தும்மில் உம்முடன் வெளிப்படவே
அர்ப்பணித்தேன் உம் கரமதிலென்றும்
பொற்பரா நடத்திடுமே - எந்த

# Tamil Hymn No 452

## MY HEART LONGS FOR YOU

பல்லவி

இயேசுவே உம் சாயல் காண
ஏங்குதே என் உள்ளம் இன்னும்
என்று சேர்வேன் உந்தன் சமுகம்
அன்றே தீருமே எந்தன் ஆவல்

சரணங்கள்

1. தொல்லை மிகுந்த இவ்வுலகில்
நல்ல துணையும் நீரல்லவோ!
இன்னும் நானும் அண்டைச் சேர
உன்னத பெலனை தாரும் ஐயனே - இயேசு

2. மாய உலகின் இன்பம் வெறுத்தேன்
தூயனே சமுகம் வரவே
ஆவி ஆத்மா தேகம் முற்றும்
அர்ப்பணித்தேனே எந்தன் தேவனே - இயேசு

3. உமது வேதம் எனது மகிழ்ச்சி
இரவும் பகலுமென் தியானமன்றோ!
உமது மகிமை காண மேலும்
கிருபை செய்வீர்! எந்தன் தேவனே - இயேசு

4. கானல் நீரைத் தேடி ஓடும்
மானைப் போல கதறுகின்றேன்
எந்தன் ஆத்மா உம்மைச் சேர
கிருபை செய்வீர்! எந்தன் தேவனே - இயேசு

5. பாரில் எந்தன் ஓட்டம் முடித்தே
பரத்தில் வாசம் செய்திடுவேன்
உமது சமுகம் சீயோன் அடைய
உதவி செய்வீர்! தேவ ஆவியே - இயேசு

# Tamil Hymn No 453

## ARISE O LORD, IN THINE STRENGTH

பல்லவி

உந்தன் பெலத்திலே தேவா எழுந்தருளும்!
உந்தன் மகத்துவத்தின் மேன்மையுடன்
உந்தன் பெலத்திலே தேவா எழுந்தருளும்!
உயர் பெலத்தினால் எம்மை நிறைத்திடும்!

சரணங்கள்

1. சர்வத்தையும் கீழ்ப்படுத்தும் வல்லமை - இன்றும்
அளிக்கவல்ல நாயகனே!
சகலமும் செய்தோராய் தைரியமாய் நின்றிட
சத்துவம் தாரும் ஐயனே! - உந்தன்

2. மரித்தோரை எழுப்பிடும் மா வல்லமை - எங்கள்
மத்தியில் நீர் விளங்கச் செய்வீர்
சோரும் மண்சரீரம், உள்ளம் உயிர்த்திட
தாரும் விண்ணபிஷேகமே - உந்தன்

3. மாராவின் நீர் இனிக்கச் செய்தனீர் - சுவை
மாற்றினீரே கானாவின் நீர்
பாழும் எம் குணமும் ஆகிட திவ்யமாய்
ஆட்கொள்ளும் சக்தியுடனே - உந்தன்

4. மெல்கிசேதேக் முறைமையிலே வந்த நீர் - நித்ய
புரோகிதனாய் விளங்குகிறீர்
காலைப்பனி சமம் உம் யௌவன ஜனம்
பாரில் நீர் பிறக்கச் செய்வீர் - உந்தன்

5. சாலேமில் ராஜரீகம் செய்குவீர் - நீதி
ஓங்கிட உம் ராஜ்யமெங்கும்!
ராஜாக்கள் பிரமிக்க ஜாதிகள் நடுங்க
சீயோனை சிறக்கச் செய்வீர்! - உந்தன்

# Tamil Hymn No 454

## WHEN SHALL I BE UP THERE IN ZION

பல்லவி

சீயோனே! சர்வ பூமியின் மகிழ்ச்சியும் நீயே
உன்னத தேவன் உந்தன் உயர் அடைக்கலம் -- உன்னில்
என்று நான் ஏகிடுவேனோ!

சரணங்கள்

1. ஆட்டுக்குட்டியின் பின்சென்றவர் சித்தமே
ஆதரையதில் செய்தவர்
மீட்கப்பட்டவராய் புவிஜனத்தினின்றும்
மகிழ்ந்துன்னில் சேர்ந்திடுவார் - சீயோ

2. உந்தன் நிமித்தமே வந்ததாம் பாடுகள்
நிந்தை துயரம் யாவுமே
விந்தையாய் கேட்குதே புதியதோர் நாதமாய்
சந்ததமாய் உன்னிலே - சீயோ

3. அண்ணகராய் இகம் சத்தியமதின் நல்
அரண்களாய் ஜீவித்தவரே
உத்தம ஸ்தானமும் நித்திய கீர்த்தியும்
பெற்றுன்னில் இலங்கிடுவார் - சீயோ

4. சிந்தையில் சுத்தராய் மாந்தரின் மத்தியில்
தந்தையாய் திகழ்ந்தவரே
ஓங்கும் நின் சிகரமதிலென்றுமாகவே
ஒப்பற்ற ஆட்சி செய்வார் - சீயோ

5. சொல்லரும் சீயோனே! உந்தன் மேல் வாஞ்சையாய்
சொந்தமாய் கொள்ள உன்னையே
சிறுமையடைந்துமே சிலுவை சுமந்துமே
சுத்தரும் ஏங்குகிறார் - சீயோ

# Tamil Hymn No 455

## HE WILL DESEND WITH A SHOUT

பல்லவி

ஆனந்த நாளதில் இயேசு வருவார்
ஆர்ப்பரிப்புடனே தூதர்கள் சூழ
எக்காளம் தொனிக்க வானங்கள் முழங்க
ஏகிடுவார் சுத்தர் இயேசுவுடன்

சரணங்கள்

1. கண்ணிமைக்கும் நேரந்தனிலே
   கன்னிகையாம் சுத்த சபையே
   விண்ணில் பறந்திடும் இயேசுவுடன்
   விண்வீட்டில் மகிழ்ந்திடவே - ஆனந்த

2. மண்ணதில் உறங்கிடும் சுத்தர்
   மண்ணதின் சாயலைக் களைந்தே
   விண்ணின் மகிமையை அணிந்தவராய்
   இணைவாரே மணவாட்டியாய் - ஆனந்த

3. இன்னல்கள் யாவையும் வென்றே
   கண் விழிப்புடனே நிற்கும்
   கண்மணியாம் திருச் சபைக்காக
   மின்னல் போல் தோன்றிடுவார் - ஆனந்த

4. பின்னானவைகளை மறந்தே
   முன்னானவைகளைத் தொடர்வோம்
   உன்னத தேவனின் விருதினையே
   வென்றிட நாம் விரைவோம் - ஆனந்த

5. விண்ணதின் இராஜாவாம் இயேசு
   சொன்ன வண்ணம் வருவாரே
   திண்ணமாய் சீயோனில் சேர்த்திடுவார்
   என்றும் தம்மோடாளவே - ஆனந்த

# Tamil Hymn No 456

## I WILL NOT FORGET THEE

சரணங்கள்

1. உலகத் தோற்றம் முன்னென்னையும்
உன்னத தேவனே தெரிந்தெடுத்தீரே
என்னில் நீர் செய்திடும் கிரியைகளை நான்
எண்ணியே மகிழ்ந்தும்மை துதிப்பேனே

பல்லவி

மன்னா உம் தயை என்னில் பெரிதல்லோ
என்னரும் துணையானீரே
"மறவேன் உன்னை நான்" என்றுரை செய்தவா!
மாறா உம் அன்பால் நடத்தும்

2. இந்த வனாந்தர பாதையிலே
இன்னல்கள் பலவாய் சூழ்ந்திட்ட வேளையில்
இன்புறும் மொழியால் என்னையும் தேற்றியே
இன்ப கரம் கொண்டு நடத்தினீர் - மன்னா

3. "விலக்குவேன் உன் வியாதி" என
வாக்குரை செய்தெந்தன் வைத்யருமானீரே
"யெகோவா ரொ.ஃ.பேக்கா" நீர் என்றும் எனக்கு
என்னில் உம் ஜீவனும் பெருகுதே - மன்னா

4. தேவா உம் ஆவியால் நடத்தியே
தேவபுத்திரனாய் என்னையும் மாற்றினீர்
மண்ணாம் என் சரீரம் மகிமை பெற்றுமே
விண்சாயல் அடைய செய்திடுவீர் - மன்னா

5. ஆவியின் வரங்கள் நிறைந்தோராய்
ஆண்டவர் இயேசுவில் பூரணராகி நாம்
ஆவலுடனவர் வரவை நோக்கியே
ஆமென்! எம் இயேசுவே வாருமென்போம் - மன்னா

# Tamil Hymn No 457

## THE BLOOD OF CALVARY

சரணங்கள்

1. கோர சிலுவை மீதினில் இயேசுவே
கொடூர மரணம் ஏற்றீரே
கொல்கதாவில் இரத்தமும் சொரிந்து
கொடுமையும் சகித்தீரல்லோ

பல்லவி

கல்வாரி இரத்தத்தினால் - என்னை
கழுவியே சுத்தம் செய்யும்
கறை நீங்கி முற்றிலும் பரிசுத்தனாய் மாற
கல்வாரி வந்திட்டேன் நான்

2. மாறா பாவக் கறைகள் போக்கவே
மாசற்ற இரத்தமே சிந்தினீரே
மாசற்றோனாய் நானும் முன் நிற்கவே
மன்னிப்பைத் தாரும் ஐயா - கல்வாரி

3. ஆவி ஆத்மா சரீரம் முற்றுமாய்
ஆதீனமாகவே ஒப்புவித்தேன்
ஆலயமாய் ஆவியால் நிரப்பி
ஆசீர்வதியுமையா - கல்வாரி

4. தேவ சித்தமே செய்திட தேகத்தில்
ஏகமாய் பாடுகள் சகித்தீரே
ஜீவன் வைத்து உம் அடி தொடர
ஜீவனால் நிறைப்பீரையா - கல்வாரி

5. ஜீவனும், புதிதும் ஆன மார்க்கமே
ஜீவனை ஊற்றியே திறந்தீரே
ஜீவ பலியாய் படைத்த என்னையும்
சீயோனில் சேர்ப்பீரையா - கல்வாரி

# Tamil Hymn No 458

## THE SPIRIT FROM ABOVE

சரணங்கள்

1. வந்திடுமே தூய மகிமையின் தேவா!
சந்ததம் எம்மிலே வசித்திடவே
உந்தனின் திரு மனையாய் திகழ்ந்திடவே
எம்மையும் முற்றுமாய் ஆண்டிடுவீர்!

பல்லவி

உன்னத ஆவியே! இறங்கிடுவீர்!
உன்னத அன்பினை ஊற்றிடுமே!
உன்னத பெலனால் உயிர்ப்பித்து எம்மையும்
உன்னதா உம்மைப் போல் மாற்றிடுமே

2. பெந்தெகொஸ்தே நாளில் இறங்கிய தேவா
தேற்றுவீர் சபையை ஆவியினால்
விந்தையாம் பரிசுத்த ஆவியை ஊற்றியே
மந்தையை மகிழ்விக்க இரங்கிடுவீர் - உன்னத

3. ஆவியை மழைபோல் ஊற்றிடும் தேவா!
ஆவியின் வரங்களைப் பொழிந்திடுமே
ஆதி அப்போஸ்தலர் காலம் போல் இன்றுமே
ஆவியின் எழுப்புதல் அனுப்பிடுவீர் - உன்னத

4. மரணத்தை ஜெயித்திட்ட மா வல்ல இயேசுவே
மரித்தோரில் முதற்பலன் ஆனவரே
மரித்தோரை உயிர்ப்பிக்கும் பரிசுத்த ஆவியின்
மா வல்ல சக்தியை எமக்கருள்வீர் - உன்னத

5. சரீரமாம் சபையின் சிரசான நேசரே
தரிப்பியும் சாயலை ஆவியினால்
மறுரூபமடைந்து யாம் மகிபனை சந்திக்க
மகிமையின் ஆவியே உதவி செய்வீர் - உன்னத

# Tamil Hymn No 459

## ON ZION WITH THE BELOVED

சரணங்கள்

1. மாசில்லா சுத்தராய் காசினி மீதினில்
   மாண்புறும் சேவை செய்தவர்
   ஆசையோடேசுவை பின்சென்றோரிவரே
   சீயோனில் நின்றிலங்குவார்

பல்லவி

சீயோனில் கேட்குதே ஆ ! ஜெயகீதமாய்
தூயவர் ஜீவியமதே
அன்பருடனிவர் என்றென்றும் ஆளுவார்
அல்லேலூயா ! அல்லேலூயா !

2. மாநில இன்பமும், மாந்தரின் பந்தமும்
   யாவையும் வெறுத்தவராய்
   தேவசித்தமே செய்து தந்தையானோரே
   தேவனால் மேன்மையுறுவார் - சீயோன்

3. பஞ்சம் பசியுமாய், நிந்தை துயருடன்
   பாரினில் பாடு சகித்தோர்
   சேவிப்பார் தாதன் முகம் கண்டு நித்யமாய்
   சேவையில் ஜீவன் வைத்ததால் - சீயோன்

4. அப்போஸ்தலரவர் நல் உபதேசத்தை
   தப்பற போதித்தவராய்
   சீருடன் போர் புரிந்தவர் பாதங்களே
   சீயோனில் நிற்குமென்றுமே - சீயோன்

5. சிந்தையில் சுத்தராய் இப்பூவில் இயேசுவை
   சேவித்த சுத்தரவர்க்காய்
   சீயோனின் வேலை தீர்த்து மகிமையிலவர்
   சீக்கிரம் வெளிப்படுவார் - சீயோன்

# Tamil Hymn No 460

## THE KING OF ZION COMES

பல்லவி

சீயோனில் நாதம் முழங்கவே
சீயோனின் ராஜா வருகின்றார்

அனுபல்லவி

அல்லேலூயா! அல்லேலூயா!
மகிழ் கொண்டாடி பாடிடுவோம்
அல்லேலூயா! அல்லேலூயா!
காண்போம் நம் இயேசுவையே - சீயோனி

சரணங்கள்

1. கண்ணீர், கவலைகள், வேதனைகள்
கர்த்தரைக் கண்டிட ஒழிந்திடுமே
நீங்கிடும் இகமதின் பாடுகளே
நித்திய மகிமையை ஈந்திடுமே - சீயோனி

2. மண்ணதில் ஜீவனை மாய்த்த சுத்தர்
பொன்னைப் போல் புடமிடப்பட்டவரே
விண்ணின் சாயல் நித்யம் தரித்தவராய்
இயேசுவின் பொன்முகம் கண்டிடுவார் - சீயோனி

3. தேகத்தில் பாடுகள் வென்ற சுத்தர்
ஏகமாய் மறுரூபமாயிடுவார்
யுகாயுகம் இயேசுவோடாளவே
மேகமீதில் வேகம் பறந்திடுவார் - சீயோனி

4. ஜெயங்கொண்டோர் சாலேமின் வீதிகளில்
ஜெயத்தொனி கீதங்கள் முழக்கிடுவார்
மகிமையின் கிரீடங்கள் சூடினோராய்
மகிமாசனத்திலே வீற்றிடுவார் - சீயோனி

5. சீயோனின் நற்பணி தீர்ந்திடவே
மகிமையின் கர்த்தரே வெளிப்படுவார்
“ஆமென் கர்த்தாவே நீர் வாரும்” என்போம்
ஆவலாய் இயேசுவை சந்திப்போமே - சீயோனி

# Tamil Hymn No 461

## I'LL COVER THEE IN THE SHADOW OF MY HAND

சரணங்கள்

1. பரிசுத்தரும் எந்தன் மீட்பருமானவரே
பரிசுத்த நாமத்தை துதித்திடுவேன்
வரைந்துமே உமதன்பின் உளங்கையதில்
வழுவிடாதெனையுமே காத்ததினால்

பல்லவி

எந்தன் தேவனே! உம்மைப் போற்றுவேன்
உந்தன் அன்புக்கோர் இணையில்லையே
"மறைப்பேன் என் கரமதின் நிழலினால் உன்னையே
மறந்திடேன் நானே உன் துணை" என்றீரே

2. காரிருள் போல் சூழ்ந்த சோதனை வேளையதில்
காருண்ய கரமதால் தாங்கினீரே
ஆதரவற்ற இவ்வாதரையிலே
ஆதரவளித்தென்னைத் தேற்றினீரே - எந்தன்

3. சிலுவையில் சுமந்தெந்தன் வியாதியும் வேதனையும்
போக்கினீர் சாபமும் மரணமுமே
விசுவாசத்தின் நல்ல போர் புரியவே
திடனளித்தீர் திவ்ய கரமதினால் - எந்தன்

4. அழைத்தீரே என்னை உந்தன் திருசித்தம் செய்திடவே
அபிஷேகித்தீர் உமதாவியினால்
மாறிடவே யான் முற்றும் முதற்பலனாய்
மாசற்ற உபதேசம் ஈந்தனீரே - எந்தன்

5. குயவன் கை களிமண் போல் படைத்தேனும் கரத்திலென்னை
உருவேற்றிடும் உந்தன் சாயலதை
எந்தன் நேசரேசுவே எப்போ வருவீர்?
ஏங்குதென்னுள்ளம் நின் முகம் காணவே - எந்தன்

# Tamil Hymn No 462

## GIVE ME THE SPIRIT OF PRAYER

பல்லவி

ஜெப ஆவி அருளும் தேவா
ஜெப தீபம் என்னிலும் எரிந்திடவே
ஜெப சிந்தை தாரும் தேவா
ஜெயித்து நான் உம்முடன் வீற்றிடவே

சரணங்கள்

1 நொறுங்குண்ட இதயத்தை ஊற்றிடுவேன்
நருங்குண்ட ஆவியில் அமர்ந்திடுவேன்
கருத்துடன் வேண்டுதல் செய்திட யான்
திருப்பாதம் அனுதினம் அண்டிடுவேன் - ஜெப

2 இரத்தமும் வேர்வையாய் சிந்தினீரே
கர்த்தா நீர் ஊக்கமாய் வேண்டுகையில்
இராப்பகல் உம்மண்டை ஜெபித்திடவே
வரம் தர இயேசுவே இரங்கிடுவீர்! - ஜெப

3 விரும்பிடும் நன்மையை நான் செய்திட
கிருபையை நல்கிடும் என் தேவனே
வெறுத்திடும் தீமையை வென்றிடவும்
ஊற்றிடும் என்னிலும் ஜெப ஆவியை - ஜெப

4 மண்ணிலே வாழ்ந்திடும் நாள் வரையும்
கண்ணீரைத் தண்ணீராய் ஊற்றிடுவேன்
உன்னதா! உந்தனின் மனமிரங்கி
விண்ணப்பம் கேட்டென்னை ஆசீர்வதியும் - ஜெப

5 எக்காள நாதமும் கேட்டிடவே
விழித்துமே ஜெபித்து நான் காத்திருப்பேன்
பழுதற்ற தூயா உம்மை சந்திக்க
வழுவாமல் காப்பீர் உம் திருவடியில் - ஜெப

# Tamil Hymn No 463

## REST IN ME THROUGH THY SPIRIT

சரணங்கள்

1. ஆவியை மழை போல் பொழிந்திடவே
ஆவியாம் கர்த்தரே இறங்கிடுவீர்!
ஆவியின் வல்லமையை தந்திடவே
ஆவியாய் என்னிலே அமர்ந்திடுவீர்

பல்லவி

ஊற்றிடுவீர் தேவா உமதன்பையே
தேற்றிடுவீர் எந்தன் ஆத்துமாவை
வீற்றிடுவீர் என்னில் ஆவியாலே
மாற்றிடுவீர் என்னை உம் சாயலாய்

2. ஊற்றியே அபிஷேகம் வாக்குரைத்தே
தேற்றினீர் சீஷரை உமதன்பினால்
ஆறுதல் அளித்தென்னை திடப்படுத்தும்
தேற்றரவாளனே இறங்கிடுவீர் - ஊற்றி

3. ஆவியின் வரங்களைப் பொழிந்தருளி
அனலுள்ள ஜீவியம் மலரச் செய்யும
ஆலோசனை தந்து வழி நடத்தி
ஆவியில் அடியேனை ஆட்கொள்ளுவீர்! - ஊற்றி

4. ஜீவனால் மரணத்தை பரிகரித்தே
கிறிஸ்துவை மரித்தோரில் எழுப்பினீரே
சகலமும் ஜெயித்து நின் சமுகம் நிற்க
சத்துவம் அளிப்பீரே ஜீவாவியே! - ஊற்றி

5. கறை திரை குறைகளை களைந்தென்னிலே
கிறிஸ்துவின் நிறைவதில் வளரச் செய்யும்
பறந்து நான் உம்முடன் வீற்றிடவே
மறுரூபப் படுத்துவீர்! பரனாவியே - ஊற்றி

# Tamil Hymn No 464

## I SURRENDER MYSELF TO YOU

சரணங்கள்

1. நிலையில்லா உலகினில் அலைந்ததாம் நீசனென்னை
   நேசரே தேடியே கண்டெடுத்தீர்
   நினைந்தென்னை வரைந்தீரே உம் சிந்தையில்
   நீடுழியாய் உம்மை சேவிக்கவே

பல்லவி

பரிசுத்தரே! நின் திருக்கரத்தில்
படைக்கிறேன் தத்தமாய் எனையுமக்கே
மாறா நின் நோக்கமும் நிறைவேற்றியே
மாற்றிடும் நின் சாயலாய்

2. "உம் சித்தம் செய்வதென் ஆகாரம்" என்றனீரே
   போதியும் நின் சித்தம் யான் செய்யவே
   புதுப்பியும் மனதை உம் ஆவியினால்
   ஜீவ பலியாயென்னை ஒப்புவித்தேன் - பரி

3. "பூவில் உபத்திரமுண்டு திடன் கொள்ளுங்கள்" என்றீரே
   இகமதில் வரும் இடர்துயர் யாவுமே
   இனிவரும் மகிமைக்கு இணையாகுமோ?
   பானபலியாயென்னை ஒப்புவித்தேன் - பரி

4. "நான் பரிசுத்தர், பரிசுத்தராயிருங்கள்" என்றீர்
   பரிசுத்தமாக்கும் நின் வசனத்தினால்
   கறைதிரையற்ற பரிசுத்தனாகிட
   ஆவி ஆத்மா தேகம் ஒப்புவித்தேன் - பரி

5. "இதோ ! சீக்கிரம் நான் வருகிறேன்" என்றவரே
   என்று நான் காண்பேன் நின் திருமுகமே
   மறுரூபம் அடைந்தும்மோடேகிடவே
   மகிபனே எனையுமக்கொப்புவித்தேன் - பரி

# Tamil Hymn No 465

## BELOVED JESUS WILL COME

சரணங்கள்

1. நேசர் இயேசுவே வந்திடுவார்
தேவ இரகசியம் வானிலே தோன்றுமே
தேவ சேயராய் ஏங்கும் சுத்தரே
தேவ சிங்காசனம் சேர மறைந்தேகுவார்

பல்லவி

என்ன ஆனந்தம்! பேரின்பம்!
என் நேசரைக் காண்பேன் நான்
கண் இமைக்கும் பொழுதினில்
விண் மகிமையை அடைவேனே

2. இக லோகத்தின் பாடுகளே
இனி வெளிப்படும் மகிமைக்கு இணையோ?
இம்மை துன்பங்கள் வெல்லும் சுத்தரே
இனிவரும் நல்ல பலன் நோக்கி ஓடுவார் - என்ன

3. பூவில் கர்த்தரில் மரித்தோரெல்லாம்
சாவை ஜெயித்தோராய் வேகம் எழும்புவார்
மண்ணின் சாயலை பூவில் களைந்தே
விண்ணின் சாயலாக வான்தனிலே ஜொலிப்பார் - என்ன

4. தூய ஆவியால் நடத்தப்பட்டோர்
தூயர் கிறிஸ்துவின் நிறைவினை அடைவார்
சத்ய சாட்சியாய் ஓட்டம் ஜெயித்தோர்
நித்ய ஜீவகிரீடம் சூடிடவே மறைவார் - என்ன

5. அன்பில் குறையற்ற பரிசுத்தரே
அன்பர் சமுகத்தில் யுகாயுகம் வாழுவார்
அன்பின் நேசரின் அடி தொடர்ந்தோர்
இன்பமுகம் கண்டு சீயோன்தனில் ஆளுவார் - என்ன

# Tamil Hymn No 466

## MY GRACE IS SUFFECIENT FOR THEE

சரணங்கள்

1. கிருபையின் பூரணராம் இயேசுவே
   கிருபையினால் என்னை அழைத்தவரே
   பகர்ந்துந்தன் மாறிடா கிருபையை என்னிலே
   பரிவுடன் நிதமும் காத்தனீரே

பல்லவி

எந்தன் இயேசுவே நீர் என்றும் நல்லவர்
உந்தன் கிருபை நிதம் புதிதென்னிலே
"என் கிருபை போதும் உனக்" கென்றுரைத்தீரே
உம் கிருபையே அதெந்தன் வாஞ்சையே

2. கனலெரி சோதனையால் தியங்கி
   கலங்கியே அகமதில் சோர்ந்த வேளை
   சகாயமேகும் நல் கிருபையை அளிக்கும்
   கிருபாசனமாய் நீர் தோன்றினீரே - எந்தன்

3. நோயால் மிக தேகம் வருந்துகையில்
   நேயனே உம் திருக்கரம் நீட்டியே
   நானுந்தன் பரிகாரி - யென மொழிந்துமே உம்
   ஜீவனும் பெலனும் ஈந்திட்டீரே - எந்தன்

4. அளவில்லா அபிஷேகம் பகர்ந்தென்னிலே
   புதியதோர் சிருஷ்டியாய் மாற்றினீரே
   மாறா நல் உபதேசம் ஈவாய் அளித்தீரே
   தேறியோனாய் யானும் மாறிடவே - எந்தன்

5. கறையற்ற மணவாட்டி சபையதுவை
   விரைந்துமே சேர்த்திட மணவாளனாய்
   வரும்வேளை தரிசிக்க உம் திருமுகமே
   தருவீர் உம் கிருபையை கனிவுடனே - எந்தன்

# Tamil Hymn No 467

## LOVE OF CALVARY

சரணங்கள்

1. கால்வாரியின் அன்பின் வெள்ளமே
   கரைபுரண்டுஓடுதென்னிலே
   கல் நெஞ்சையும் நொறுக்கிஉருவாக்கிடும்
   நல் நதியாய் பாயுதென்னிலே

பல்லவி

ஆஹா! இயேசுவின் மாறாஅன்பிதே
அதின் இன்பத்தைசொல்லஆகுமோ?
அது தூய ஜீவதேவஅன்பே
எந்தன் உள்ளத்தில் தங்கும் அன்பே

2. தண்ணீரில்லாபாலைஎன்னிலும்
   தேவநதியும் அன்பாய் பாயுதே
   என் வறட்சியைமாற்றிசெழிப்பாக்கிடும்
   விண் ஊற்றாய் பொங்குதென்னிலே - ஆஹா!

3. கல்வாரியின் கோரபாடுகள்
   எந்தன் உள்ளத்தைஉருக்கிடுதே
   என் சிலுவையைசுமந்துசேவைசெய்யவே
   தேவஅன்பும் உள்ளில் பொங்குதே - ஆஹா!

4. பின் மாரியாம் ஜீவத் தண்ணீரே
   எந்தன் உள்ளத்தைநிரப்பிடுதே
   நற் பலனாய் என்னையும் மாற்றிடவே
   விண் மழையாய் பொழிந்திடுதே - ஆஹா!

5. கல்வாரியின் அன்பின் ஆழமே
   நல்லநேசரின் மாறா ஜீவனே
   விண்மயமாய் மாற்றிசீயோன்தனிலே
   நிர்மலராய் நிறுத்திடுதே - ஆஹா!

# Tamil Hymn No 468

## LORD, I WILL SERVE THEE

சரணங்கள்

1. சிலுவையை சுமந்தும்மை பின் செல்லவே
இயேசுவே என்னையும் அழைத்தீரே
கல்வாரி மலையில் ஜீவனை இழந்துமே
நல்லதோர் வழியை வகுத்தீரே

பல்லவி

முற்றுமாய் பலியாய் படைக்கிறேன்
உந்தனின் திருப்பாதத்தில்
ஏற்றுக்கொள்ளும் என்னை இயேசுவே
உம் சித்தம் நிறைவேற்றிடும்

2. இகமதில் துன்பங்கள் சூழ்ந்திடினும்
அகமதில் இன்பமே பெருகுவதால்
மகத்தான சேவையை ஆசையாய் செய்திட
தக்கதோர் வேளையை ஈந்திட்டீரே - முற்று

3. நேசரே உம் அடிச் சுவடுகளை
நேசித்து தொடர்வேன் என் வாழ்வினிலே
இயேசுவே உம் திரு கரங்களில் பெற்ற நல்
சேவையை நிறைவேற்ற வாஞ்சிக்கிறேன் - முற்று

4. ஜீவனை இழந்தீரே சிலுவைதனில்
சீஷனாம் எளியேன் எனக்காகவே
ஜீவனை வெறுத்தும் சிலுவையை சகித்தும்
இயேசுவே உம்மையே சேவிப்பேன் நான் - முற்று

5. தேகத்தில் நின் சித்தம் நிறைவேற்றியே
வேகமாய் உம்மண்டை வந்திடுவேன்
ஏகமாய் உம்முடன் சீயோனில் இணைந்துமே
யுகாயுகமாக சேவை செய்வேன் - முற்று

# Tamil Hymn No 469

## HE PERFORMETH ALL THINGS FOR ME

சரணங்கள்

1. “யாவே”நீர் எந்தனின் நல் மேய்ப்பரல்லவோ
   என்றும் நீர் எனக்கு ஜீவ ஊற்றல்லவோ
   “யாவையும் உனக்காய் செய்குவேன்” என்றோனே
   பாரில் என் தஞ்சம் என்றும் நீரல்லவோ

பல்லவி

யாதொன்றும் செய்திட யான் இயலேன்
நீரன்றி பாரினில் இயேசுவே
உந்தன் பெலத்தினால் யாவும் செய்திடுவேன்
உமதாவியினால் ஜெயங்கொள்வேன்

2. சிலுவை மீதினில் சொரிந்தே உதிரம்
   விலையாய் நல்கினீர் என் பாவம் போக்கிட
   உந்தன் தேகமதில் காயங்கள் ஏற்றீரே
   எந்தன் சாப ரோகமும் நீக்கிடவே - யாதொ

3. அன்பினில் தூயனாய் குற்றமில்லாதோனாய்
   அம்புவி தோன்றுமுன் கண்டீரே உம்மிலே
   அன்பரே உம்முடன் என்றும் யான் நின்றிட
   ஆவியின் பெலமதை ஈந்தனீரே - யாதொ

4. அஸ்திபாரமாகும் அப்போஸ்தலரையும்
   அளித்தீரெமக்காய் ஈவாய் அன்பினாலே
   தூய ஆலயமாய் சேர்த்து பணித்திட
   தூயராம் மூலைக்கல்லாம் உம்முடனே - யாதொ

5. சீயோனும் சாலேமும் இணைந்த சபையாய்
   சீலத்தால் நிறைந்தே ஏங்கித் தவிக்குதே
   சீர்மிகு சுத்தரை சேர்த்திட உம்முடன்
   சீயோனின் ராஜனே வேகம் வாருமே - யாதொ

# Tamil Hymn No 470

## JESUS WILL GATHER HIS OVERCOMERS

பல்லவி

கர்த்தராம் இயேசு ஆகாயமீதினில்
சுத்தராம் ஜெயித்தோரை சேர்த்திடுவார்

அனுபல்லவி

ஆர்ப்பரிப்போம் ! அக மகிழ்வோம்
ஆண்டவர் இயேசுவை கண்டிடுவோம்
ஆளுகையும் அழியாமையும் அடைந்து
ஆண்டவர் இயேசுவுடன் வாழ்ந்திடுவோம்
அல்லேலூயா ! அல்லேலூயா ! - கர்த்த

சரணங்கள்

1. இருளதும் மறைந்து பகல் நெருங்கிடுதே
மருவினில் நித்தரை தெளிந்திடுவோம்
இரட்சிப்பின் பூரணம் அருகில் வந்திடுதே
இரட்சகர் ஒளிதனில் நடந்திடுவோம் - கர்த்த

2. விருதினை பெறவே நியமித்த பாதையில்
கிருபையில் நிலைத்துமே ஓடிடுவோம்
புரிந்து நற்போரினை விசுவாசம் காத்துமே
விரைந்திடுவோம் பொற்கிரீடம் சூடவே - கர்த்த

3. கறைதிரை அறவே சிந்தையதில் சுத்தராய்
மறைவோமே பரிசுத்தர் இயேசுவிலே
முறைப்படி சித்தமே தேகத்தில் செய்து நாம்
திரை ஏகுவோம் விண் மகிமையிலே - கர்த்த

4. கிறிஸ்துவில் மரித்த பரிசுத்தர் பலரும்
மரணத்தை ஜெயித்துமே உயிர்த்திடுவார்
மரிக்காதிருக்கும் பரிசுத்தரெல்லாம்
மறுரூபமடைந்தே பறந்திடுவார் - கர்த்த

5. கிருபையில் பிறந்த சீயோனும் சாலேமாய்
திருச்சித்தம் செய்து நாம் நிலைத்திடுவோம்
கிறிஸ்துவின் நிறைவில் யுகாயுகம் மகிழ்ந்தே
கிறிஸ்துவோடாட்சி செய்திடுவோம் - கர்த்த

# Tamil Hymn No 471

## THE MARVELLOUS GRACE OF GOD

பல்லவி

எந்தன் ஜீவனுள்ள நாளெல்லாம்
எந்தன் தேவனைத் துதித்திடுவேன் - அவர்
அதிசயக் கிருபையை எண்ணியே மகிழ்ந்தே
அன்பரைப் போற்றிடுவேன்

சரணங்கள்

1. அம்புவி தோன்றுமுன் கண்டென்னையே
தம் நித்ய கிருபையால் அழைத்திட்டாரே
தூய்மையும் குறையில்லா அன்புள்ளோனாய்
தூயரின் சந்நிதி நிறுத்திடுவார் - எந்தன்

2. கானகப் பாதையில் வழிநடத்தி
வான மன்னாவினால் போஷித்தாரே
ஞானக் கன்மலையாம் கிறிஸ்தேசுவே
பானமாய் அகமதின் தாகந்தீர்த்தார் - எந்தன்

3. சோதனையாம் தீயில் நடந்த வேளை
நாதனாம் இயேசுவே துணையானாரே
வேதனையாம் நோயில் புரண்ட போது
போதிய கிருபையை எனக்களித்தார் - எந்தன்

4. பரிசுத்த ஆவியால் நிறைத்தென்னையே
பரமனின் ஆலயமாக்கினாரே
அற்பமான எந்தன் சரீரத்தினை
அற்புதச் சாயலாய் மாற்றிடுவார் - எந்தன்

5. கிறிஸ்துவில் வளர்ந்தென்றும் கிருபையிலே
மறுரூபமாகுவேன் மகிமையிலே
பூரண வடிவுள்ள சீயோனிலே
பூரணர் இயேசுவோடாட்சி செய்வேன் - எந்தன்

# Tamil Hymn No 472

## THE LOVE OF CALVARY

பல்லவி

கல்வாரி அன்பை நான் தியானிக்கையில்
கல்மனமும் என்னில் உருகிடுதே
நல் நேசர் இயேசுவே உம்முடன் யான்
சிலுவையில் அறைந்திட ஒப்புவித்தேன்

சரணங்கள்

1. என் பாவ சாபமும் ரோகங்களும்
நின் திரு மேனியில் ஏற்றிடவோ
கொலை மரமாம் அந்த சிலுவை தனில்
கொலை செய்யப்பட்டோராய் தொங்கினீரே! - கல்வாரி

2. கள்வரின் மத்தியில் அறையப்பட்டும்
முள்முடி சூடியே, துயரப்பட்டீர்!
முகந்தனில் உமிழ்ந்துமே அடிக்கப்பட்டீர்
மூன்றாணி மீதினில் ஜீவனீந்தீர்! - கல்வாரி

3. பதினாயிரம் பேரில் சிறந்த நேசர்
பாதகனைப் போல ஆக்கப்பட்டீர்!
தழும்புகள் தோன்றவே காயப்பட்டீர்
அழகையும் இழந்தீரே எனக்காகவோ! - கல்வாரி

4. விலையேறப் பெற்ற உம் திரு இரத்தத்தை
விலா வினின்று நீர் வடித்தீரல்லோ!
விலையேறப்பெற்ற நல்சபை ஆக்கவே
தலையானீர் ஜீவனை ஈந்ததாலோ! - கல்வாரி

5. குருசதில் பலியானீர் முற்றிலுமாய்
குரு இயேசுநாதா நீர் எனக்காகவோ?
குருசதில் மரித்து நான் பிழைத்திடுவேன்
குருவே உம் சாயலை அடைந்திடுவேன் - கல்வாரி

# Tamil Hymn No 473

## I COME TO DO THY WILL

சரணங்கள்

1. "உம் சித்தம் செய்ய நான் வருகின்றேன்
உலகில்" என்ற என் நேசரைப் போல்
உவந்தே என்னையும் அர்ப்பணித்தே
உன்னதனின் சித்தம் செய்திடுவேன்

பல்லவி

இயேசுவே உம் திரு சித்தமே என்னில்
முற்றுமாய் நிறைவேற்றும்
ஒப்புவித்தேன் உம் கரத்தில்
ஏற்றென்னை நடதடதிடும்

2. தம் திரு சிந்தையில் வரைந்ததாம்
தற்பரனின் திரு சித்தமதை
ஆயத்தம் செய்த என் தேகமதில்
ஆதரையில் யானும் செய்திடுவேன் - இயேசு

3. ஆவியை ஈந்தவர் ஆலயமாய்
ஆக்கியதாம் எந்தன் காயமதில்
பரிசுத்தமதை பூரணமாய்
பயத்துடன் நிறைவேற்றிடுவேன் - இயேசு

4. பாரினில் பாவம் விட்டோய்ந்தவனாய்
பாடுகளின் சிந்தை தரித்தோனாய்
முன்னோடியாய் சென்ற இயேசுவின் நல்
திருவடிகளை பின் தொடர்வேன் - இயேசு

5. ஜீவனாம் கிறிஸ்து வரும் நாளதில்
ஜீவன் வைத்தே சித்தம் செய்தோருடன்
ஜீவனில் ஆளுகை செய்திடவே
ஜீவபலியாய் படைக்கின்றேன் யான் - இயேசு

# Tamil Hymn No 474

## JESUS WILL APPEAR IN THE SKY

பல்லவி

எக்காள நாதம் தொனித்திடும் நேரம்
இயேசுவே வானில் தோன்றிடுவார்
ஆர்ப்பரிப்புடனே மேகத்தில் ஏறியே
பரிசுத்தர் எல்லாம் மறைந்திடுவார்

சரணங்கள்

1. வருவேன் சீக்கிரம் என்றுரைத்தோர்
வந்திடுவார் தாமதமின்றியே
ஆவலாய் காத்திடும் சுத்தரெல்லாம்
ஆனந்தமாய் அவர் முகம் காணுவார் - எக்காள

2. வான்புவி அகிலமும் நிலைமாறியே
வானவர் சத்தத்தினால் அதிர்ந்திடுதே
அசையாது அழைப்பினில் நின்றவரோ
அசைவில்லா ராஜ்யம் பெற்றிடுவார் - எக்காள

3. இன்னல்கள் இடர் புயல் வீசிடுதே
இப்பூவில் இயேசுவை பின்செல்வோருக்கே
விசுவாசம் காத்து நற்போர் செய்தவர்
விண்மயமாகியே பறந்துயர்வார் - எக்காள

4. ஆவியின் அபிஷேகத்தால் நிறைந்தே
அப்போஸ்தலரின் திரு சேவையதால்
மாசற்ற மணவாட்டியாய்த் தீர்ந்தவர்
மகிமையில் மணவாளனோடேகுவார் - எக்காள

5. சீயோனின் வேலையதும் தீர்ந்திடுதே
சாலேமின் மீட்பதுமே நெருங்கிடுதே
சீர்மிகு சுத்தரை சேர்த்திடவே
சீயோனின் ராஜனேசு வருவார் - எக்காள

# Tamil Hymn No 475

## MY UNCHANGING REFUGE

சரணங்கள்

1. என் உள்ளம் நன்றியால் நிறைந்தே
   என் தேவனில் மகிழ்ந்திடுதே
   மாறிடா அடைக்கலம் நீரே என்றும் என் தஞ்சமும் நீரே
   உம் சிறகதின் நிழலில் மறைத்தென்னைக் காத்தனீரே

பல்லவி

நீரே என் கீதமும் பெலமும்
நீங்கிடா மறைவிடம் நிழலும்
இயேசுவே நீர் எந்தன் ஜீவனின் ஊற்றே
என்றுமென் புகலிடமே

2. சேய் போல என்னையும் சுமந்தே
   தாய் போல அரவணைத்தீரே
   கானகமாம் இந்த புவியில் கலங்கியே தவித்ததாம் வேளை
   கண்ணுறங்காதெனையே கருத்துடன் காத்தனீரே - நீரே

3. மலை போல இன்னல்கள் பெருகி
   அலை போல சீறி வந்திடினும்
   அளவில்லா கிருபைகள் பகர்ந்தே அசைந்திடாதெனையுமே ஸ்திரமாய்
   அண்ணலே நிலைநிறுத்தி அற்புத ஜெயமீந்தீரே - நீரே

4. குருவே நீர் என்னையும் அழைத்தீர்
   திரு சித்தம் செய்யவே இகத்தில்
   களி மண்ணைப் போல உம் கரத்தில் கர்த்தனே கையளித்திடுவேன்
   உருவாக்கிடும் எனையே உந்தனின் திரு சாயலாய் - நீரே

5. எக்காளம் தொனித்திடும் நேரம்
   இக்காலப் பாடுகள் தீரும்
   ஏகிடுவேன் உந்தன் சமுகம் கண்டிடுவேன் உந்தன் வதனம்
   ஏங்கிடுதென் உள்ளமே ஆனந்த நாளதுவே - நீரே

# Tamil Hymn No 476

## MATCHLESS LOVE

சரணங்கள்

1. சிலுவையில் உதிரம் சிந்தினீர் இயேசுவே
   சீர்குலைந்தலைந்த எனக்காகவோ
   சுமந்துந்தன் மீதினில் பாவமும் சாபமும்
   பலியானீரோ ! பலியானீரோ !

பல்லவி

இம்மகா அன்பிற்கே இணையொன்றும் இல்லையே
இவ்வுலகினிலே என் நேசரே
ஜீவ பலியாய் எனைப் படைக்கிறேனே
ஜீவாதிபதி உமக்கே

2. உம் திரு மேனியில் காயங்கள் அடைந்தீர்
   என் வினைகளெல்லாம் தீர்த்திடவோ !
   நோய் பிணி யாவுமே போக்கிட ஏற்றீரோ
   தழும்புகளோ ! தழும்புகளோ ! - இம்

3. காடியும் ருசித்து முடிந்ததென்றுரைத்து
   காவினில் ஜீவனை துறந்தீரல்லோ
   யாவையும் எனக்காய் முடித்ததால் இயேசுவே
   கலங்குவேனோ ! கலங்குவேனோ ! - இம்

4. சகித்தீரே நிந்தைகள், பாடுகள், துக்கங்கள்
   சந்தோஷத்துடனே குருசினிலே
   தூய்மையாய் சபையை, உம் முன்பில் நிறுத்த
   மகிமையிலே ! மகிமையிலே ! - இம்

5. நித்திய ஆவியால் உத்தம பலியால்
   சுத்த மனதை நீர் எனக்களித்தே
   சத்தியரே உம்மை நித்தமும் சேவிக்க
   சீயோனிலே ! சீயோனிலே ! - இம்

# Tamil Hymn No 477

## LORD SEND US THE LATTER RAIN

சரணங்கள்

1. பின்மாரி மழையை அனுப்பும் தேவா
முன் மாரி பொழிந்த நாட்களைப் போல்
ஆவியின் எழுப்புதல் அனுப்பிடுவீர்
அற்புத அடையாளம் செய்திடுமே!

பல்லவி
தேற்றரவாளனே விண் ஆவியே
ஊற்றிடும் உம் திரு ஜீவன் எம்மிலே
விண்ணதின் சாயலாய் உருவாக்கியே
உன்னதர் இயேசுபோல் மாற்றிடுமே

2. வருந்திடும் ஆத்மாவை மகிழச் செய்வீர்
மருண்டிடும் உள்ளங்களைத் திடப்படுத்தும்
மாண்டிடும் சரீரமும் உயிர்பெறவே
மகிமையின் ஜீவனை அளித்திடுவீர். - தேற்றர

3. கலங்கிடும் சோதனை வேளைதனிலே
பலமுள்ள விசுவாச ஆவி ஈந்திடும்
அலை போல எழும்பிடும் ஆபத்தினிலே
மலை போல நின்றிடவே பெலன் தாருமே! - தேற்றர

4. கூவியே அழைத்திடும் உள்ளந்தனிலே
தாவியே அமர்ந்திடும் இஷணமே
சேவிக்க உமதன்பில் மூழ்கியே யாம்
மேவிடும் பரிசுத்த ஆவி எம்மிலே. - தேற்றர

5. ஆத்மாவில் அக்கினி எரியச் செய்யும்
ஆவியின் வரங்களை ஜொலிக்கச் செய்யும்
நற்கனியாம் தேவ அன்பினிலே
நன் மணவாட்டியாய் மாற்றிடுவீர் - தேற்றர

# Tamil Hymn No 478

## LORD SEND US THE LATTER RAIN

பல்லவி

வானிலோர் தேவ எக்காளம் முழங்கிடவே
வானவர் இயேசுவே வெளிப்படுவார்
பூவிலோர் தேவ இரகசியம் நிகழவே
புவினின்று பரிசுத்தர் பறந்திடுவார்

சரணங்கள்

1. மண்ணிலே கர்த்தரில் மரித்தவரோ
மகிமையின் ஆவியால் உயிர்பெறுவார்
இகமதில் ஜெயித்த நல் சுத்தரோ டேகமாய்
இமை நேரந்தனில் மறுரூபமாவார் ! - வானி

2. பாரினில் சிலுவையை சுமந்தவரோ
பரமனின் அடிதனை தொடர்ந்திடுவார்
பரலோக விருதினை வென்றிடும் தூயரே
பரனேசின் திருவடி அடைந்திடுவார் - வானி

3. விசுவாச வீரராய் போர் புரிந்தோர்
விசுவாச ஆவியால் ஜெயம் பெறுவார்
அசையாது விசுவாச பாதையில் ஓடினோர்
அசையாத சீயோன் மலைப்போல் நிலைப்பார் ! - வானி

4. பரிசுத்த ஆவியால் நடத்தப்பட்டோர்
கறை திரை குறையற்ற கன்னியாவார்
நிறைவான சரீரமாம் சபையாய் தேறினோர்
கிறிஸ்துவின் மணவாட்டியாய் திகழ்வார் ! - வானி

5. கிறிஸ்துவின் அன்பினில் வளர்ந்திடுவோம்
சீயோனும் சாலேமாக தேறிடுவோம்
"சீக்கிரம் வாரும்" என்று அழைத்திடுவோமே
சீயோனின் இராஜாவை நாம் சந்திப்போமே ! - வானி

# Tamil Hymn No 479

## SUN OF RIGHTEOUSNESS, ARISE ON ME

பல்லவி

1. வானாதி வானங்களும் கொண்டிடா மகிமை
வான்மையும் நிறைந்ததோர் அன்பின் வள்ளலே!
வானிலும் புவியிலும் ராஜரீகம் செய்யும்
அநாதி தேவனே! என் அடைக்கலமே!

சரணங்கள்

ஜீவன் என்னில் உள்ள காலமெல்லாம்
தேவனை துதித்திடுவேன்
நீதியின் சூரியனாம் இயேசுவே!
உதித்திடும் என் மீதிலே

2. தாழ்வதின் நிலையினில் அடியேனை நினைந்தே
வாழ்விக்க வந்த எந்தன் ராஜராஜனே!
தாழ்மையுள்ளோர்க்கு பல கிருபைகள் ஈந்திடும்
வன் செயல்தனை நாவால் சொலல் ஆகுமோ? - ஜீவன்

3. ஆடுகள் போலவே நல் வழியறியாமலே
அலையும் மாந்தர்க்கு நீர் ஜீவமார்க்கமே
பேதையாயினும் எங்கும் திசைக் கெட்டுப் போயிடா
போதனையீந்து எனை நடத்திடுமே - ஜீவன்

4. நித்திய விவாகத்திற்கென்னை நியமித்தீர்
புத்திர சுவிகார ஆவி ஈந்தீரே
சத்திய வசனத்தால் மறுரூபமடைந்தே
நித்திய மணவாளன் உமை சந்திப்பேன் - ஜீவன்

5. சீரியராகும் உந்தன் சபையதை சேர்த்திட
சீயோனின் ராஜனே ! நீர் வேகம் வாருமே
வானோரின் நடுவினில் உம் புகழ் பாடுவேன்
ஆனந்த கண்ணீர் அன்று சொரிந்திடுவேன் - ஜீவன்

# Tamil Hymn No 480

## EVERLASTING LOVE

சரணங்கள்

1. நேசரே உம் நேசம் நினைக்கையில்
நெஞ்சம் உருகிடுதே
நீசனாம் என்னையுமே பாசத்தால் ஏற்றுக்கொண்டீர்
அநாதி சிநேகத்தினால் காருண்யத்தால் இழுத்தீர்

பல்லவி

நானல்ல நீரே ! தெரிந்தெடுத்தீரே
என்னையும் உந்தன் அன்பினால்
பிரிக்க இயலாதே யாதொன்றினாலுமே
இவ்வன்பினின்றும் இயேசுவே!

2. பாவம் போக்கி பரிசுத்தனாக்கி - உம்
சந்நிதியில் நிறுத்தி
பரிசுத்தம் நீதியோடும் இயேசுவே உம்மையே யான்
சேவிக்க அழைத்தீரன்றோ ஜீவிய காலமெல்லாம் - நான

3. மாறிடா உம் சிநேகத்தால் மாற்றினீர்
எந்தன் சாபமெல்லாம்
உம் திரு சித்தம் போலே அழைத்தீரே எனையுமே
ஆசீர்வதித்திடவே ஆதரை மீதினிலே - நான

4. ஊற்றினீர் எம் உள்ளத்தில் உம்மன்பை
உன்னத ஆவியினால்
உன்னத உபதேசம் ஊழியருமே ஈவாய்
உன்னதா உவந்தளித்தீர் உந்தனின் சாயலடைய - நான

5. “வந்திடுவேன் சேர்த்திட உந்தனை”
என்றுரைத்துச் சென்றீரே
உந்தனின் வாக்கதையே எண்ணியே நேசத்தினால்
தவிக்குதே எந்தன் உள்ளமே வாரும் வேகம் இயேசுவே! - நான

# Tamil Hymn No 481

## EVERLASTING LOVE

பல்லவி

எந்தன் வாஞ்சை இன்றுமென்றும் நீரே
எனதன்பின் ஆண்டவரே
ஆலோசனைக் கர்த்தர் உம்மை
எந்தன் கண்கள் நோக்கிடுதே - இயேசுவே

சரணங்கள்

1. வேண்டுதலின் ஆவியையும்
விண்ணப்பத்தின் கிருபையையும்
வருந்திக் கேட்கும் என்னிலே
ஊற்றிடும் பின்மழையாய் - அன்பினால் - எந்தன்

2. உபத்திரவத்தின் மத்தியில்
சமாதானம் ஆண்டிடவே
துன்பங்களில் மகிழ
உயிர்ப்பியும் நீர் என்னையும் - ஆவியால் - எந்தன்

3. நற்கனியாய் துலங்க
நற்கந்தமாய் வீசிட
எழுப்பிடும் வாடையையே
வீசிடும் தென்றலையே - தயவாய் - எந்தன்

4. வரங்கள் கிரியை செய்திட
வல்லமை ஈந்திடுமே
வருகையில் யான் நின்றிட
கிருபையில் பூர்ணனாக்கிடும் - இப்போதே - எந்தன்

5. எக்காள தொனியதிலே
மறுரூபம் அடைந்திடவே
ஏங்குதே எனது உள்ளம்
அன்பினில் நிறுத்திடுமே - என்னையே - எந்தன்

# Tamil Hymn No 482

## WE WILL REIGN WITH JESUS IN ZION

சரணங்கள்

1. சீயோனில் தூயராய் உம்முடன் நின்றிடவே
   சீயோனின் ராஜாவே எம்மையும் அழைத்தீரே
   தூய பிதாவின் முகம் என்றும் தரிசிக்க
   தூயதோர் சேவையும் எமக்கும் அளித்தீரே

பல்லவி

சீயோனிலே ஆனந்தமாய் ஜெயக்கீதம் பாடி நிற்போம்
ஆட்டுக்குட்டியாம் எம் இயேசுவுடன் ஏகமாய் ஊழியரே
இலட்சத்து நாற்பத்து நாலாயிரர் ஆளுகை செய்திடுவோம்

2. தாயின் வயிற்றினில் எம்மையும் பிரித்தெடுத்தே
   தாதைக்காய் முதற்பலனாகவே மாற்றினீரே
   தாயகம் தனையும் வெறுத்திட செய்துமே
   தூய சுதன் உமக்காகவே மீட்டெடுத்தீர் - சீயோ

3. ஜீவனை பலியாய் இம்மண்ணில் மாய்த்திடவே
   ஜீவனின் ராஜாவே எமக்கும் துணையானீர்
   சீயோனின் பாதையில் சிலுவை சுமந்து
   ஜீவக்கிரீடமும் பெறவும் வாக்குரைத்தீர் - சீயோ

4. சீயோனில் பிறந்து பூவினில் அண்ணகராய்
   சீலமாய் சேவையில் நிற்கவும் வரமளித்தீர்
   சீயோனின் மூலைக்கல் உம்முடன் இசைத்து
   ஜீவனாம் உம் அன்பின் நகரமாய் பணிவீர் - சீயோ

5. பிதாவின் சிந்தையில் என்றும் எம் இயேசுவைப் போல்
   பிதாக்களாகவே உம் அன்பால் மாற்றினீரே
   தூய நகரமாம் சீயோனாய் விளங்கி
   தூயராய் இயேசுவோடென்றுமே ஆட்சி செய்வோம் - சீயோ

# Tamil Hymn No 483

## LORD I WILL SERVE THEE

சரணங்கள்

1. என் யேசு நாதா ! உம் தியாக அன்பினை
இன்னமும் தியானம் செய்கையிலே
என்னையே பலியாய் சிலுவையில் படைத்தே
பணிந்துமே நிதமும் சேவை செய்வேன்

பல்லவி

அர்ப்பணித்தேன் என்னையும் இயேசையா!
உம்திரு காணிக்கையாய் - முற்றிலும்
நற்பணி புரிந்திட திரு சித்தம் செய்திட
நற்திரு பாதமே வந்தடைந்தேன்

2. என் யேசு நாதா ! நீசனாம் எனக்காக
உம் முழு ஜீவனை ஈந்தீரல்லோ
இம் மகா தியாகத்தின் மேன்மையை நினைந்து
என் ஜீவ நாளெல்லாம் சேவை செய்வேன் - அர்

3. என் யேசு நாதா ! பாடுகளின் சிந்தையை
ஆயுதமாகவே தரித்திடுவேன்
நல்லதோர் போரினை புரிந்திட இகமதில்
நின் விசுவாசத்தை தொடர்ந்திடுவேன் - அர்

4. என் யேசு நாதா ! மரணத்தை ருசித்தீரே
என்னையும் மகிமையில் நிறுத்திடவோ
ஜீவனை வெறுத்தும் மரணத்தை சுமந்துமே
ஜீவனின் பாதையில் தொண்டு செய்வேன் - அர்

5. என் யேசு நாதா ! தேசத்தை கிழித்துமே
ஏழைக்கும் ஜீவனாம் வழி திறந்தீர்
என்றென்றும் சீயோனில் உம்முடன் நின்றுமே
மகிமையின் சேவையை தொடர்ந்திடுவேன் - அர்

# Tamil Hymn No 484

## I WILL OFFER SACRIFICES OF PRAISE

சரணங்கள்

1. இயேசுவே நீரே எந்தன் புகலிடமே
புவி மீதெங்கும் ராஜன் நீரல்லவோ
அதிசய செயல்களை நிதம் நினைந்தே
அகமகிழ்ந்தும்மை என்றும் உயர்த்திடுவேன்

பல்லவி

அருள் தாரும் என் தேவனே இருள் சூழும் இவ்வுலகில்
அனுதினம் நான் உம்மைத் துதிப்பேன்
ஸ்தோத்திர பலிகள் செலுத்திடுவேன்

2. கொடும் ரோகமோ பெலவீனங்களோ
மரண நிழல் என சூழ்ந்திடினும்
மாற்றினீர் மாராநீரை மதுரமாக
இயேசுவே நீரே எந்தன் வைத்தியரே - அருள்

3. இளம்பயிரில் மழை போல உபதேசத்தால்
பிதாவே என்றழைத்திட அபிஷேகத்தால்
பயம் யாவும் அகற்றியே திடனளித்தீர்
ஞானம் நீதி பரிசுத்தம் மீட்பும் நீரே - அருள்

4. இந்தப் புவியில் யான் பரதேசியன்றோ
நிலையான நகரம் எனக்கில்லையே
நேர்த்தியான இடங்களில் பங்கடைந்தேன்
இயேசுவே நீரே எந்தன் சுதந்திரமே - அருள்

5. கண்ணீரோடு விதைப்பவர் நிறைபலனை
கெம்பீரத்தோடறுக்கும் வேளை வருதே
நேசரே உம் வருகையின் தினமதில் யான்
ஆசையாய் உம்முகம் கண்டானந்திப்பேன் - அருள்

# Tamil Hymn No 485

## I HAVE COME SEEKING THY GRACE

சரணங்கள்

1. இயேசுவே! எந்தன் கிருபாசனபதியே
   கிருபை நிறை பூரணரே
   இரக்கம் பெற ஏற்ற சகாயம் செய்யும்
   உந்தன் கிருபையை அடைய நாடி வந்தேன்

பல்லவி

ஜீவனிலும் பெரிதே கிருபை
ஜீவனின் அதிபதியே
ஜீவனில் நான் உம்முடன் ஆளுகை செய்யவே
ஜீவ நாளெல்லாம் நடத்திடும் ஜெயமாய்

2. பாவியாய் பாழுலகினில் அலைந்த என்னை
   தேடி வந்தீர் உம் அன்பினாலே
   என் இதயமதை இரத்தத்தால் கழுவி
   உம் ஆவியால் நிறைத்தீர் கிருபையினால் - ஜீவ

3. மலைகள் விலகி புவி நிலைமாறினும்
   "மாறிடாதே என் கிருபை" என
   வாக்குரைத்த உம் திரு வார்த்தையதில்
   வளர்ந்தென்றுமே நிலைப்பேன் கிருபையினால் - ஜீவ

4. வரைந்தீர் உந்தன் திருசிந்தையில் எனக்காய்
   மறைந்திருந்த மா நோக்கமதை
   நிறைவேற்றவே இதோ சரணடைந்தேன்
   கறை திரையற்றோனாகுவேன் கிருபையினால் - ஜீவ

5. மன்னவா பாரில் உம்மைப் போல் மாறிடவே
   நீதியில் உம் முகம் காணுவேன்
   சீயோன் ராஜனே உந்தன் மகிமையிலே
   சேவிப்பேன் நித்திய காலமாய் கிருபையினால் - ஜீவ

# Tamil Hymn No 486

## MY JESUS, MY LIFE, MY ALL

பல்லவி

என் ஜீவனாம் என் இயேசுவே
என்று நான் உம்மைக் கண்டிடுவேன்
காணவும் ஏங்குதே எந்தன் உள்ளம்
சீக்கிரம் வாருமே என்னைச் சேர்க்க

சரணங்கள்

1. பரிசுத்தர் பரிசுத்தர் என தூதர்
ஓயாமல் துதிப்பதைக் கேட்டிடவும்
கிருபை கிருபை என தூயோர்
நன்றியால் சொல்வதைக் கேட்க ஆசை - என்

2. தம்முயிர் ஈன்ற என் பரமனின்
பாதத்தை என்றென்றும் நான் பணிவேன்
காயங்கள் அடைந்த என் நேசரின்
பொன்முகம் கண்டிட ஏங்குகின்றேன் - என்

3. பொற்தள வீதியில் உலாவிட
பொற்பரன் சமுகம் நானும் சேர
மண்ணதின் மாயையை ஒழித்துமே
விண் நகர் வந்திட தவிக்கின்றேன் - என்

4. செல்வமும் தேசமும் உறவினர்
ஒன்றுமே வேண்டாமிவ்வுலகினில்
உமது மகிமை என்றும் காண
சீயோனில் சேர்த்திடும் சீக்கிரமாய் - என்

5. ஜோதியாய் விளங்கும் சுத்தர்களின்
ஜொலித்திடும் மாளிகை பல உண்டு
நீசனாம் எனக்கும் கிருபையாலே
உண்டங்கே மாளிகை நிச்சயமே - என்

6. எக்காள நாதமும் முழங்கிட
கிருபையாலே நானும் பறந்திட
மன்னனின் மனையில் ஒன்றாய்ச் சேர
சீக்கிரம் வாருமே என்னைச் சேர்க்க - என்

# Tamil Hymn No 487

## WE SHALL,SEE OUR LOVING JESUS

சரணங்கள்

1. கெம்பீர சத்தமே வானில் முழங்கிட
   ஏகிடுவோமே நாம் தூயருடன்
   இக்காலப் பாடுகள் யாவும் ஒழிந்துமே
   எக்காலம் விண்ணிலே மகிழ்ந்திடுவோம்

பல்லவி

அன்பரெம் இயேசுவைக் கண்டிடுவோம்!
அல்லேலூயா கீதம் முழக்கிடுவோம்
வானவர் சாயலை என்றும் தரித்துமே
வான்தனில் மகிமையில் ஜொலித்திடுவோம்

2. இகத்தின் மேன்மையை தூசியாய்த் துறந்தே
   அகத்தில் கிறிஸ்துவைத் தரித்திடுவோம்
   தேகத்தில் பாடுகள் நித்தம் சகித்துமே
   மகிமை அணிந்தே சோபிப்போமே - அன்ப

3. இம்மண்ணில் சோதனை நிந்தையை ஜெயித்தே
   இயேசுவின் அடிகளைத் தொடர்ந்திடுவோம்
   கண்ணீரில் விதைத்த நாம் கெம்பீரத்தோடறுக்க
   இன்புறும் விண்புரி பறந்திடுவோம் - அன்ப

4. தேவனின் ஆவியால் நடத்தப்பட்டோராய்
   தேவனின் சுதராய் வளர்ந்திடுவோம்
   தேவனின் சித்தமே தேகத்தில் செய்துமே
   தேவனின் ராஜ்யத்தில் பிரவேசிப்போம் - அன்ப

5. சீயோனும் சாலேமாய் ஏக சரீரமாய்
   சிரசாம் இயேசுவில் நிறைவடைவோம்
   சிங்காசனம் வென்று ஆளுகை செய்திட
   சீயோனின் ராஜாவை சந்திப்போமே - அன்ப

# Tamil Hymn No 488

## FILL US WITH POWER FROM ZION

சரணங்கள்

1. தேவரீர் மகிமையாய் எழுந்திடுவீர்
இரங்கியே சீயோனின் புத்திரர்க்கே
வாஞ்சிக்கிறோமே உம் சாயலை நாம்
தந்திடுவீரே நின் தூய்மைதனை

பல்லவி

சீயோனின் வல்லமை ஈந்திடுவீர்
பரிசுத்தர் இயேசுவே இரங்கியே நீர்
உன்னதா உம் முகம் கண்டிடவே
சுத்த இருதயம் சிருஷ்டியுமே

2. ஊரில் ஒருவராய்த் தெரிந்தெடுத்தீர்
இனத்தில் இருவராய்ப் பிரித்தெடுத்தீர்
நானே உன் நாயகர் என்றுரைத்தீர்
சீயோனுக்கென்றுமே பெயர் குறித்தீர் - சீயோ

3. உத்தமரென்றுமே உவந்தளித்தீர்
உன்னத ஊழியம் எமக்களித்தீர்
பொழிந்திடுவீரே மா கிருபைதனை
தாழ்மையாய் உம்மையே சேவித்திட - சீயோ

4. ஆனந்த தைலத்தால் அபிஷேகித்தே
சஞ்சலம் தவிப்பும் போக்கிடுமே
நித்திய மகிழ்ச்சியெம் தலையினிலே
சீயோனின் பாதையில் ஏகிடவே - சீயோ

5. சீயோனைக் கட்டித் தம் மகிமையிலே
சீக்கிரமாய் வாரார் சுத்தருக்காய்
மகிமையடைந்து நாம் நிர்மலராய்
சீயோனில் என்றுமே நின்றிடவே - சீயோ

## THE CHIEFEST OF TEN THOUSAND

பல்லவி

பதினாயிரம் பேரிலும் சிறந்தவர் நீரே
அதிசயமே உந்தன் நாமமே
மன்னருள் மன்னவனே நன்றியால் துதிப்பேனே
என்னையும் புயங்களால் சுமந்தீரே

சரணங்கள்

1. பறந்து காத்திடும் பட்சியைப்போல்
விரைந்தீர் என்மேல் நீர் ஆதரவாய்
சூழ்ந்தீரே எனையுமே அக்கினிமதில் போல்
தீங்கினால் துயருறேன் ஓர் நாளுமே - பதினாயிரம்

2. வானத்தின் பலகணிகள் திறந்தே
வர்ஷியும் என்னில் ஆசீர்வாதங்கள்
வஸ்திரத் தொங்கலால் ஆலயம் நிறைத்தீர்
வாரும் என் தேவா என்னை நிறைத்திட - பதினாயிரம்

3. நாதா நின் அடிகளை நான் தொடர
நானில மீதெங்கும் சாட்சியாக
ஆவியின் பெலமதை இரட்டிப்பாய் ஈயுமே
ஜீவனும் அருமையாய் எண்ணிடேனே - பதினாயிரம்

4. உம் சித்தம் போல் நடத்தும் தேவனே
என்னிடை கட்டும் தூய ஆவியே
சித்தமாய் நீர் நடத்தும் வழியேகியே
சுத்தாங்கம் அடைந்திட வாஞ்சிக்கிறேன் - பதினாயிரம்

5. உதித்திடும் வானில் விடிவெள்ளியே
அதிகாலையும் இதோ வந்திடுதே
சீக்கிரம் தீருமே பத்து நாள் பாடுகள்
சிருஷ்டிகரே நீரே என் நாயகரே - பதினாயிரம்

# Tamil Hymn No 490

## O I WANT TO BE LIKE THEE

பல்லவி

இயேசுவே உம்மைப் போல் ஆக வாஞ்சிக்குதே என்னுள்ளம்

அனுபல்லவி

என் ஆவி ஆத்துமா சரீரம் முற்றும் படைத்துவிட்டேன்
என்னை ஏற்றுக்கொள்ளும் ஐயனே - இயேசு

சரணங்கள்

1. பாவம் அறியாது பாவமே செய்யாதிப்
பாரிதில் ஜீவித்தீரே
பரிசுத்தர் உம்மைப் போல் ஜீவிக்கவே
பெலமதைத் தாருமையா - உந்தன் - இயேசு

2. உபத்திரவம் உண்டு உலகினிலே என்றீர்
உலகத்தை வென்றேன் என்றீர்
உம்மைப் போல் உலகினை ஜெயித்திடவே
பெலமதைத் தாருமையா - உந்தன் - இயேசு

3. தலைசாய்க்க தலமில்லை தரணியில் உறவில்லை
நிலையில்லா பூவில் என்றீர்
நானும் உம்மைப் போல தியாகம் செய்ய
பெலமதைத் தாருமையா - உந்தன் - இயேசு

4. சிலுவை சுமந்தென்றும் என்பின் வராதவன்
அல்ல என் சீஷன் என்றீர்
உம் சித்தப்படி உந்தன் சேவை செய்ய
பெலமதைத் தாருமையா - உந்தன் - இயேசு

5. சீயோன் மலையதில் சிறந்தே இலங்கிடும்
தேவாட்டுக்குட்டி நீரே
சீயோனில் உம்முடன் நானிருக்க
உம்மைப் போல் மாற்றும் ஐயா - என்னை - இயேசு

# Tamil Hymn No 491

## BELIEVE TO SEE HIS GLORY

பல்லவி

விசுவாசிப்பீர் தேவஜனமே - இன்றே
தேவனின் மகிமையைக் காண்போம்

அனுபல்லவி

ஆதியும் அந்தமும் இயேசுவின் நாமமே
ஆசீர்வதித்திடும் அற்புத நாமமே - விசு

சரணங்கள்

1. ஆள்கின்ற பாவத்தின் கறை திரைகளும்
காணாமல் மாய்ந்திடுமே இயேசுவின் இரத்தத்தால்
வானிலும் பூவிலும் உயர்ந்த நாமமே
மாவல்ல இரட்சிப்பையே நல்கிடுமே - விசு

2. மாறாத நோய்களும் தீராத வியாதியும்
மாறிடும் இஷணமே கல்வாரி ஜீவனால்
மரித்தும் ஜீவிக்கும் இயேசுவின் நாமமே
மாண்டோரை உயிர்ப்பிக்கும் நிச்சயமெ - விசு

3. சீறும் கடலையும் முற்றும் அமர்த்தியே
தேற்றினார் சீஷரையே ஜீவனின் வார்த்தையால்
சர்வமும் ஜெயித்த வல்லவர் நாமமே
மாற்றிடும் சோதனைகள் யாவையுமே - விசு

4. மண்ணோரை விண்ணோராய் மாற்றிட இயேசுவே
மண்ணிலே மரித்துமே ஜீவனாய் உயிர்த்தார்
சாவினை ஆவியால் வென்றதோர் நாமமே
சாவாமை அளித்திடும் அற்புதமாய் - விசு

5. தேகத்தை கிழித்தும் இரத்தத்தைச் சிந்தியும்
திறந்தார் புதியதோர் ஜீவனின் மார்க்கமே
மகா பரிசுத்தர் மாறாத நாமமே
சாலேமில் சீயோனிலே சேர்த்திடுமே - விசு

# Tamil Hymn No 492

## THOU ART MINE

பல்லவி

சாரோனின் ரோஜாவாம் என் திவ்விய நேசரே
என் சொந்தம் நீர்தானல்லவோ!
உம்மைப் போல் நேசிக்க யாருண்டு பூவினில்
நன்றியால் நிறைந்துள்ளம் பாடுவேன்!

சரணங்கள்

1. வனாந்தரத்திலென் வழியாய் வந்தீர்
வான் திறந்து ஆசீர் நல்கினீரே
பின்னானவைகளை மறந்து
முன்னானவைகளைத் தொடர்வேன்! - சாரோனின்

2. தீங்கு நாளில் என்னைக் கூடாரத்தில்
மறைத்து கிருபையாய்க் காத்தீரன்றோ
கன்மலையாம் உம்மில் மறைந்து
வன்செயலை என்றும் கூறுவேன்! - சாரோனின்

3. அக்கினி சோதனை வந்த வேளை
சிநேகத்தால் தழல் என்னில் எரியச்செய்தீர்
ரோகத்தால் வாடிய வேளையில்
வார்த்தையால் சுகமதை ஈந்தீரே! - சாரோனின்

4. பரிசுத்தாவியால் நிறைத்தென்னையே
பரிசுத்த ஆலயமாக்கினீரே
பரிசுத்தர் உம்மைப் போல் ஜீவிக்க
பரிசுத்தர் உபதேசம் நல்கினீர்! - சாரோனின்

5. குற்றம் குறை யாவும் போக்கிடுவீர்
முற்றும் என்னை மாற்றும் உம் சாயலாய்
விண்ணில் நீர் வெளிப்படும் வேளையில்
முகா முகமாய் உம்மைக் காணுவேன்! - சாரோனின்

# Tamil Hymn No 493

## HE WILL COME QUICKLY

சரணங்கள்

1. ஆரவார எக்காளத் தொனியுடனே - நடு
ஆகாயத்தில் இறங்கிடுவார்
ஆவலோடே காத்து சுத்தராய் ஜீவித்து நாம்
அவரோடே இருந்திட பறந்திடுவோம்

பல்லவி

வந்திடுவார் அதி சீக்கிரமாய் - இயேசு
தந்திடுவார் தூய பிரதிபலனை
செய்திடவே திருச் சித்தமதையே
முற்றும் அர்ப்பணித்திடுவோம்

2. நினையா நேரத்தில் இயேசு வந்திடுவார் - தம்முன்
நிறுத்தும் மகிமை சபைக்காய்
கனையிருளின் காலம் வருமுன் வருகையை
நினைத்து ஜெபத்துடன் விழித்திருப்போம் - வந்திடு

3. கஷ்டம் நிந்தை இடுக்க நெருக்கங்களும் - பல
நஷ்டங்களைச் சகித்தோரெல்லாம்
துஷ்டனையே வென்று சிங்காசனமடைந்து தம்
இஷ்டமாய் யுகாயுகம் ஆண்டிடுவோம் - வந்திடு

4. அழுகையின் தாழ்வை உருவ நடந்தே - நாம்
அழியா ஊற்றாய் மகிழ்வோம்
வழுவாமல் சீயோன் சிகரில் காணப்பட
கழுகு போல் புதுபெலன் அடைந்திடுவோம் - வந்திடு

5. ஜீவனையுமே ஊற்றி நாம் சந்தோஷமாய் - அவர்
சேவை என்றும் செய்திடுவோம்
சீயோனையே கட்டி தமது மகிமையில்
சேர்த்திடச் சீக்கிரமே வெளிப்படுவார் - வந்திடு

# Tamil Hymn No 494

## GRAVEN IN HIS IMAGE

சரணங்கள்

1. ஆயிரம் நாவுகள் போதுமோ புவியில்
ஆத்தும நேசரே போற்றிட உம்மையே
முடிவேயில்லா உம் ஆண்டுகள் போலவே
இணையில்லா கிருபை நிலைத்திடுமென்னிலே

பல்லவி

“கைவிடேன் உன்னை நான்” என்றுரைத்தவரே
கைத்தலம் வரைந்தீரன்றோ
அசைந்திடா சீயோன் பர்வதம் போலவே
இசைந்தும்மில் நிலைத்திருப்பேன்

2. பாருருவாகுமுன் பார்த்தீரே பரனே
பாரினில் நீரல்லால் வேறாருமில்லையே
பரிசுத்த அழைப்பால் அழைத்தீரே என்னையும்
பரிசுத்தருடன் நற்சுதந்திரம் பெறவே - கைவிடேன்

3. பகர்ந்தீரென் உள்ளத்தில் உன்னத பெலனை
தகர்த்திட தீயோனின் வல்லமை யாவுமே
அகந்தனில் பொழிந்தீர் அளவில்லா அன்பினை
இகந்தனில் தொடர உம் திருவடிகள் - கைவிடேன்

4. நிந்தையாம் ஆழியும் அமிழ்த்திய வேளையே
சோதனையாம் தீயில் வெந்தழிந்துப் போகா
பாய்ந்துந்தன் சிறகின் மீதினில் தாங்கியே
பட்சமாய் என்னை உம் மந்தையில் கர்த்தீரே - கைவிடேன்

5. சீர்மிகு சுத்தரைச் சேர்த்திட வானிலே
சீயோனைப் பணிது சீக்கிரம் வருவீர்
சீர்பொருந்தி உந்தன் சந்நிதி நின்றிட
ஸ்ரீயேசு ராஜனே தயை கூறுமென்னிலே - கைவிடேன்

## HIS GRACE

சரணங்கள்

1. கிருபை பொருந்திட அருளென்னில் பொழிந்து
கிருபைமேல் கிருபை அடையச்செய்வீர்
கிறிஸ்துவே உந்தன் சாயலாய் மாற
கிருபை நிறைவாய் ஊற்றிடுமே

பல்லவி

நான் இருப்பது உந்தன் மாறாத கிருபை
நிர்மூலமாகாததும் கிருபையே
அற்புதமே நீர் நடத்திடும் பாதை
அளித்திடுமே புதுக் கிருபைகளை

2. கலங்கி பயத்தினால் அமிழ்ந்திடும் பொழுது
கரம் நீட்டி பிடித்து அரவணைத்தீர்
கருத்துடன் உறங்காமலே காத்த
கிருபாசனமே உம்மைத் துதிப்பேன் - நான்

3. சிலுவை சுமந்து என் பாவசாபம் போக்கிட
சிறுமையும் அடைந்து மரித்தவரே
தேவரீரே உந்தன் கிருபையே போதும்
தழும்புகளினால் குணம் அடைந்தேன் - நான்

4. அடர்ந்து சோதனைகள் வேதனைகள் பெருக
தொடர்ந்திடும் சத்துரு வெள்ளம்போலவே
பறந்திடும் ஜெயக்கொடி ஆவியாலே
மறைந்து கிருபையில் ஜீவிப்பேனே - நான்

5. மகிமை சந்நிதியில் சுத்தனாக நிறுத்த
மிகுந்த கிருபையும் உடையவரே
மறுரூபமாக மாறியே வானில்
மகிழ்ந்து உம்முகம் தரிசிப்பேனே - நான்

# Tamil Hymn No 496

## JESUS, YOU ARE MY COMFORT

சரணங்கள்

1. எந்தன் இயேசுவே நீரே எனக்காறுதல்
உந்தன் பாதம் காத்திருப்பேன்
கானகமாம் பாதையிதில்
கலங்கிடாது நிதம் முன்னேறுவேன்

பல்லவி

இம்மட்டும் யான் ஜீவிப்பது
உம் தயவு அல்லவோ இயேசு நாயகா!
உம் சிறகதின் கீழில் மறைவேனே
தீங்கென்னை அணுகாது காத்திடுவீரே

2. கைவிடேன் நான் உன்னை என வாக்குரைத்தவா!
மெய்யாய் உம்மைப் பின்பற்றுவேன்
துன்பம் துயர் சூழ்ந்திடினும்
இன்பமுகம் காட்டி தேற்றிடுவீரே! - இம்

3. உம்மால் ஒரு சேனையினுள் பாய்ந்து செல்லுவேன்
தேவனாலே மதிலும் தாண்டுவேன்
சத்துருவின் சதிகளை
சத்தியர் உம் பெலனால் ஜெயித்திடுவேன் - இம்

4. களிமண் போல் உம் கரத்தில் தத்தம் செய்கிறேன்
களிம்பு நீங்க சுத்தம் செய்குவீர்
விண் சாயலை என்னில் ஈந்து
மண் சாயலை முற்றும் மாற்றிடுவீரே! - இம்

5. ஏதுமில்லா ஏழையை நீர் கண்டெடுத்தீரே
என்ன செய்வேன் உம் அன்பிற்கீடாய்
நித்தம் திருமுகம் கண்டு
நீடுழியாய் உம்மைச் சேவித்திடுவேன் - இம்

# Tamil Hymn No 497

## GOD HATH SHINED OUT OF ZION

சரணங்கள்

1. சர்வ பூமியின் மகிழ்ச்சியாம் சீயோனே!
மகா ராஜனின் இன்ப நகரமே!
பரிபூரண வடிவுள்ள சீயோனில்
மகா தேவன் நித்தியம் பிரகாசிப்பார்

பல்லவி

பரமண்டல கீதங்கள் தொனிக்குமே
சுரமண்டல ஓசையும் முழங்குமே
பரலோக ராஜன் இயேசுவுடன்
பரமானந்தம் சீயோனில் அடைந்திடுவோம்

2. மனத்தாழ்மையும் சாந்தத்தின் சொரூபியாய்
மலையாம் சீயோன் மீதினில் இயேசுவே
பரிபூரண அழகுள்ள சீயோனில்
கிறிஸ்தேசு நித்தியம் பிரகாசிப்பார் - பர

3. குரூசை நித்தமும் சுமந்திட்ட சீஷரே
குரு இயேசுவின் வழிகளைத் தொடர்ந்தவர்
திருவடிதனில் ஜெயித்திட்ட தாசரே
நிர்மலராய் நித்தியம் பிரகாசிப்பார் - பர

4. ஜீவ பலியாக மாய்ந்திட்ட சுத்தரே
தேவ சேவையில் தந்தையராய் ஆனோரே
தாதை நாமமே தரித்துமே சீயோனில்
பரிசுத்தரே நித்தியம் பிரகாசிப்பார் - பர

5. சீயோன் ராஜனே சீக்கிரம் வந்திடுவார்
சீயோன் சுதராய்க் கீர்த்தியைப் பெற்றிடுவோம்
பரிபூரணர் இயேசுவின் முகம் கண்டு
பூர்ண சுத்தராய் நித்தியம் பிரகாசிப்போம் - பர

# Tamil Hymn No 498

## WE WILL REIGN WITH JESUS

சரணங்கள்

1. மகிபனாம் இயேசுவே தோன்றுவார் வானில்
மாசில்லா சுத்தரைச் சேர்த்திடவே
கண்ணிமைதனிலே மறுரூபமடைந்தே
விண்ணிலவரோடு மறைந்திடுவார்

பல்லவி
எக்காளம் தொனிக்கும் நேரம்
இயேசுவைக் காண்போமே நாம்
அல்லல்கள் யாவும் மறந்தே
ஆளுவோம் என்றென்றுமாய்

2. புற்றிடும் கனலெரி சோதனை வேளை
புதுமையென்றெண்ணியே திகையாமலே
கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும் நாளில்
பாடுகள் சகித்தோரே மகிழ்ந்திடுவார் - எக்காளம்

3. விசுவாச வீரனாம் இயேசுவை நோக்கி
விசுவாச வீரராய்ப் போர் செய்தவர்
அழியாத மாசற்ற வாடாததுமாம்
சுதந்திரம் பெற்றென்றும் வாழ்ந்திடுவார் - எக்காளம்

4. கிறிஸ்துவின் அன்பினில் நிதம் நிறைந்தோராய்
சோர சிநேகத்தில் நிலை நின்றவர்
கிறிஸ்துவின் நாளில் இதயத்தில் ஸ்திரமாய்
பிழையற்ற சுத்தராய்த் திகழ்ந்திடுவார் - எக்காளம்

5. சீயோன் சாலேமதின் வேலையும் தீர்த்தே
சீயோனின் இராஜனே வெளிப்படுவார்
கர்த்தரின் முகமே நித்தமும் கண்டே
சுத்தரே நித்தியம் சேவிப்பாரே - எக்காளம்

# Tamil Hymn No 499

## ETERNAL GOD IS MY REFUGE

சரணங்கள்

1. யாவையும் எனக்காய் முடித்த இயேசுவே உம்மைப் போல்
பாரில் நேசிக்க வேறாரும் காண்கிலேன் யான்
மாறிடா உந்தனின் அன்பினை இசைக்கவும் எளிதோ
மறவேன் என்றுமே உம் நாமத்தை எண்ணியே துதித்திடுவேன்

பல்லவி

யெகோவா நிசியாம் இயேசுவே
ஜெயத்தோடென்னை நடத்திடுவீர்
அநாதி தேவனே அடைக்கலம் நீரே
அநாதி நோக்கம் என்னில் முற்றுமாய் நிறைவேற்றுமே

2. காரிருள் போன்ற சோதனை வேதனை சூழ்ந்த நேரம்
கர்த்தர் தீபமாய் வந்தென்னை ஆதரித்தர்
கண்ணீரின் தாழ்வதை உருவ நடந்திட்ட வேளை
தண்ணீர் தடாகமாய் மாற்றிடவே ஜீவ ஊற்றுமானீரே - யெகோவா

3. தேசமும் பாஷை ஜாதிகள் யாவுமே கொந்தளித்தே
தேவ ஜனத்தையும் அழித்திட எழும்பினாலும்
சத்துருவின் வல்லமை முற்றுமாய் அழித்திட தேவரீர்
சர்வ வல்லமையாய் எழும்பினீரே! சந்ததம் உம்மைத் துதிப்பேன்

4. புவியில் தேவபக்தியும் உண்மையும் குறைந்திடுதே
ஆதிக்கிரியையும் அன்புமே தணிந்திடுதே
பயபக்தியுடன் இரட்சிப்பை நிறைவேற்ற என்னிலே
ஆவியின் பெலமதை ஈந்திடுமே இரட்டிப்பாய் ஈந்திடுமே- யெகோவா

5. சுத்தரின் மீட்பின் நாள் இதோ வேகமாய் நெருங்கிடுதே
"உயர்த்திடுவீர் உம் சிரசரை" என்றுரைத்தீர்
நல்ல போர் புரிந்தென் ஓட்டமும் முடித்திட ஜெயமாய்
வல்லவரே என்னை ஒப்புவித்தேன் வல்லமை தந்திடுமே - யெகோவா

## ETERNAL GOD IS MY REFUGE

பல்லவி

இயேசுவே நீர் பெரியவரே!
பாரினில் உமக்கொப்பாய் தேவனுண்டோ?
பரத்தினில் உம்மையல்லால் வேறாருமில்லையே
இகத்திலும் நீர் என் தஞ்சம் இயேசு நாதா!

சரணங்கள்

1. வறண்ட பாலையை வளமாக மாற்றி
புரண்டதாம் அலையை அமர்த்தினீரே!
காய்ந்ததாம் கோலாம் எனை நீர் எடுத்து
கரமதில் ஆயுதமாக்கினீரே - இயேசு

2. அநாதி சிநேகத்தால் சிநேகித்தேன் என்றீர்
அன்பென்னும் கயிற்றால் கட்டினீரே!
காருண்ய கரத்தால் இழுத்துக் கொண்டீரே!
கருணையின் கடலாம் கர்த்தரே நீர் - இயேசு

3. உனக்கு எதிராக உருவாகும் ஆயுதம்
வாய்க்காதே போம் என்று உரைத்தீரன்றோ?
கர்த்தாவே நீர் என்மேல் பிரியமாயிருப்பதால்
சத்துரு என்னை ஜெயிப்பதில்லை - இயேசு

4. என் கருவை உந்தன் கண்களால் கண்டீரே
என்னிலே திருநோக்கம் நிறைவேற்றிடும்
மன்னவா! உந்தனின் சாயலை அடைந்திட
மண்ணிதில் ஏழையான் ஏங்குகின்றேன் - இயேசு

5. மணாளன் இயேசுவே! தோன்றுவீர் வேகத்தில்
மணவறையதினில் மறைந்திடுவேன்
உந்தனின் மார்பில் சார்ந்துமே மகிழ்ந்து
உம்முடன் வாழுவேன் என்றென்றுமாய் - இயேசு

# Tamil Hymn No 501

## JESUS THE SUMMIT OF GRACE

சரணங்கள்

1. கல்வாரி சிலுவையில் திரு இரத்தமே
   கிருபையின் நிறைவாகப் பாய்ந்திடுதே
   கர்த்தரின் அன்பின் நல் ஜீவனுமே
   கருணையாய் அளவின்றி வழிந்தோடுதே

பல்லவி

கிருபையின் சிகரமாம் இயேசுவே
மறைவிடம் ஏழைக்கும் நீரல்லவோ
திருப்பாதம் அண்டையே தாழ்த்திடுவேன்
கிருபாசனம் உம்மை அடைந்திடுவேன்

2. நம் பாவ சாபத்தின் மரணமதை
   சிலுவையின் மரணத்தால் பரிகரித்தார்
   ஜீவனும் அழியாமை யுகாயுகமாய்
   ஈந்திடும் நேசரின் மா கிருபை - கிருபை

3. நம் வியாதி பெலவின நேரந்தனில்
   அவர் மாறா பெலன் தாமே விளங்கிடுமே
   கல்வாரி ஜீவனால் குணமடைய
   அற்புத கிருபையும் வெளிப்படுதே - கிருபை

4. பாரினில் பாதகர் அந்நியராய்
   அலைந்திட்ட நமக்காக மரித்தனரே
   மகிமையில் அவருடன் நிறுத்திடவே
   மரணத்தை ருசித்தாரே கிருபையினால் - கிருபை

5. ஜீவனும் புதிதான வழிதனையே
   திறந்தாரே பரிசுத்தர் மரணத்தினால்
   சீயோனின் பாதையில் ஜெயம் அடைய
   இரக்கமும் கிருபையும் பெருகிடுதே - கிருபை

# Tamil Hymn No 502

## SPRING UP, O WELL

சரணங்கள்

1. ஊற்றுத் தண்ணீரே பொங்கிவா பொங்கிவா
ஊள்ளத்தினின்றோடும் நதியாய் வா
ஊம்மிலுண்டே எங்கள் ஊற்றுகளெல்லாமே
ஊற்றிடும் ஆவி என்றெ பாடுவோம்

பல்லவி

எழுப்புதல் அடைந்து எழும்பிடுவோம்
கழுகு போல் பறந்து உயர்ந்திடுவோம்
புது பெலனை நாம் பெற்றிடுவோம்
புதுப்பித்து ஆவியில் அகமகிழ்வோம்

2. பாவ சாபங்கள் நோய்களும் நீங்கியே
ஆவியாலே சுத்தமாகிடவே
வல்ல அபிஷேகம் பலமாயிறங்க
பொல்லாங்கன் நுகம் முற்றும் முறியும் - எழுப்புதல்

3. வனாந்தரமாம் வாழ்க்கையும் செழிக்கும்
வான் திறந்து பின்மாரி ஊற்றிட
அளவில்லா தேவ அன்பினில் மூழ்கியே
ஆவியின் கனியையும் கொடுப்போம் - எழுப்புதல்

4. பற்றியெரியும் அக்கினி சோதனை
சுற்றியே நெருங்கி வந்திடினும்
அக்கினியின் ஆவி வல்லமை பெறவே
ஆகிடும் எல்லாம் ஜெயமாகவே - எழுப்புதல்

5. மரித்தோரையும் எழுப்பும் வல்லமை
மரண சரீரம் மாற்றிடுமே
நிறைந்திடுவோமே ஆனந்த தைலத்தால்
விரைந்து அவர் முகம் காணவே - எழுப்புதல்

# Tamil Hymn No 503

## AWAKE, O CHURCH

சரணங்கள்

1. விழித்தெழும்பிடுவாய் திருச் சபையே!
   விலையினை ஈந்துன்னை கிறிஸ்து தன் சொந்தமாக்கினாரே
   உரைத்ததாம் அவர் திரு வார்த்தைகள் நிறைவேறுதே
   விரைந்துமே உணர்ந்தெழுந்திடுவாய்

பல்லவி

ஜெயவேந்தனாய் இயேசு முன்செல்கிறார்
ஜெயவீரராய் என்றும் முன்னேறுவோம்
நல்ல போர் புரிவோம் கிறிஸ்துவின் சேனையாய்
சர்வ வல்லவராலே ஜெயம் பெறுவோம்

2. விண்ணதின் சத்துவம் அசைந்திடுதே
   மண்ணிதில் இடுக்கண்கள் நாள்தோறும் பெருகி வந்திடுதே
   பயம் நீங்கி மீட்பரின் சந்நிதி நின்றிடவே
   ஜெபத்துடன் நிதம் விழித்திடுவாய் - ஜெய

3. சத்தியம் புவியில் புரண்டிடுதே
   சுத்த ஸ்தலத்தின் கற்கள் வீதியதில் விழுந்தது போல்
   சுத்தருக்களித்த நல் உபதேசம் காத்திடவே
   சீருடன் போர் புரிந்தில் - ஜெய

4. வருகையின் நம்பிக்கை பலர் இழந்தே
   கிருபையின் ஆவியை நிந்திக்கும் கொடிய காலமிதில்
   தெளிவுடன் மனமதின் அரைகட்டி காத்திருந்தே
   அளித்திடும் கிருபை பெற்றிடுவாய் - ஜெய

5. சீயோன் உன் பெலனைத் தரித்திடுவாய்
   எருசலேமே உந்தன் அலங்கார வஸ்திரம் தரிப்பாய்
   மணவாளன் வருகிறார் மனை உன்னைச் சேர்த்திடவே
   மணவாட்டியே என்றும் மகிழ்வாய் - ஜெய

# Tamil Hymn No 504

## YOU ARE MY SHIELD OF HELP

சரணங்கள்

1. எந்தன் ஆத்தும நேசர் இயேசுவே
உந்தன் மாறா நேசம் நினைக்கையில்
என் உள்ளம் நன்றியால் பொங்கிடுதே என்றுமே
என் ஆவி நித்தம் உம்மில் மகிழ்ந்திடுதே

பல்லவி

என் சகாயமாம் கேடகம் நீரே
மகிமை பொருந்திய பட்டயம் நீரே
வாக்கு மாறா வல்லவா இரட்சகரும் நீரல்லோ
வழுதிடாது என்னைக் காப்பீரே

2. கோரமான சாபக் குழியிலும்
உளையான பாவச் சேற்றினின்றும்
மீட்டெடுத்தென்னையும் கன்மலை மேல் நிறுத்தியே
நவகானமும் எந்தன் நாவிலீந்தீரே - என்

3. விக்கினங்கள் சூழ்ந்திட்ட வேளையில்
காத்தீரே உந்தன் செட்டையின் நிழலதில்
தீங்கு நாளில் எந்தன் கூப்பிடுதல் கேட்டுமே
கூடாரத்தின் மறைவில் பாதுகாத்தீரே - என்

4. வருங்காலங்களில் விளங்கிட உம்
மகா மேன்மையாம் கிருபையின் தானம்
உம் தூய ஆவியால் என்னையும் உயர்த்தினீர்
உன்னதம் வரை உம்மோடிருத்திடவே - என்

5. சீரிலங்கும் சீயோனின் வேலையும்
சீக்கிரமாய் தீர்த்துமே வருவீர்
சீர்பொருந்தி உந்தன் சாயலாக மாறிட
சீயோனின் ராஜனே உம் கிருபை தாருமே - என்

# Tamil Hymn No 505

## WONDERFUL LOVING GOD

பல்லவி

அதிசயமான தேவனே
ஆலோசனை தரும் கர்த்தரே
ஆசை உந்தன் மேல் மாத்திரம்
உம் அன்புக்கீடேதுமுண்டோ?

சரணங்கள்

1. தந்தை போல் சுமந்தவரே – தாயின்
கருவினில் காத்தவரே
உம்மாலாகாத காரியம் ஒன்றுமில்லை
உம்மை நம்பினோர் வெட்கியே போனதில்லை - அதிசயமான

2. நேசக்கொடி எந்தன்மேல் - வீசி
பாசமாய்ப் பறந்திடுதே
நீசன் என்னையும் பேர்சொல்லி அழைத்தீரன்றோ?
நித்தம் கிருபையினால் முடிசூட்டிடுவீர் - அதிசயமான

3. உலகில் உள்ளவனிலும் - என்னில்
இருப்பவர் பெரியவரே
உந்தன் வல்லமையால் ஜெயம் பெற்றிடுவேன்
கர்த்தர் என் முன்னே செல்வதால் கலங்கிடேனே - அதிசயமான

4. குயவன் கை களிமண்ணைப்போல் - தேவா!
உம்மிடம் ஒப்புவித்தேன்
உந்தன் மனதின்படி என்னை வனைந்திடுமே
எஜமானனே உமக்கு நான் அடிமையன்றோ! - அதிசயமான

5. சீயோனில் வாசம் செய்யும் - எந்தன்
இயேசுவை அடைந்திடவே
ஆசையாய் இலக்கை நோக்கியே ஓடிடுவேன்
வேகம் பந்தயப்பொருளைப் பெற்றிடுவேன் - அதிசயமான

## LORD POUR OUT THY SPIRIT

சரணங்கள்

1. அந்திய நாட்களில் யாவர் மேலும்
   ஆவியை ஊற்றுவேன் என்றவரே
   அளவில்லா உமது அபிஷேகத்தை
   அடியார் மீதினில் ஊற்றிடுவீர்

பல்லவி

பொழிந்திடுவீர் பரனாவியே
எளியவராம் எங்கள் மீதிலே
மகிமையில் மறுரூபம் அடைந்திடவே
அனுதினம் ஆவியால் உயிர்ப்பித்திடும்

2. கழுத்தினின்று நுகம் முறிந்திடவே
   முழு பெலனால் எம்மை ஆண்டிடுவீர்
   தோளினின்று சுமை நீங்கிடவே
   அமர்ந்திடும் பரிசுத்த ஆவி எம்மில் - பொழி

3. மாமிசத்தின் சிந்தை மரணமதை
   ஆவியின் சிந்தையால் ஆண்டிடுமே
   ஜீவனும் சமாதானம் நிலைத்திடவே
   ஜீவனின் ஆவியை பகர்ந்திடுமே - பொழி

4. கிறிஸ்துவோடெழுந்த நல் ஜீவியமே
   மரணத்தின் வல்லமையை ஒழித்திடுதே
   மரித்தோரில் கிறிஸ்துவை எழுப்பியதாம்
   பரிசுத்த ஆவியால் உயிர்ப்பித்திடும் - பொழி

5. அற்பமான மண்ணின் சரீரத்தினை
   அற்புதர் சாயலாய் உருவாக்கிடும்
   மறுரூபமாகிய விண்ணில் உயர
   மகிபனின் ஆவியால் நிரப்பிடுமே - பொழி

# Tamil Hymn No 507

## JOY IN SUFFERING

சரணங்கள்

1. பாடுபட்டோரையே சேர்த்திட வருவார்
பறந்து நாம் நேசரை சந்தித்திடவே
பாரினில் இயேசுவின் பாதங்கள் சென்ற
பாதைகள் தெரிந்து பின்தொடர்ந்திடுவோம்

பல்லவி

இக்காலப் பாடுகள் எளிதல்லோ – அது
இனிவரும் மகிமைக்கு ஒப்பாகுமோ
எக்காலமும் அவரோடு நாம் ஆண்டிட
ஏகுவோம் பெலன்பெற்று சிலுவையண்டை

2. கண்ணீரின் பாதையில் கலங்கிடும் தருணம்
கண்ணை நம்மேல் வைத்து நடத்தினாரே
கண்மணி போலவே காத்திடும் - ஞான
கன்மலை கிறிஸ்துவை சார்ந்திடுவோம் - இக்கால

3. நிந்தை அவமானம் எந்த மனுஷரால்
நிறைந்து வந்தாலுமே வருந்திடாது
கிறிஸ்துவின் நிமித்தமே பாக்கியமென்றெண்ணி
கிருபையில் மறைந்து நாம் மகிழ்ந்திடுவோம் - இக்கால

4. சோதனை தொடர்ந்திட பெருகிடும் நோய்களால்
வேதனை அனைத்தையும் சகித்திடவே
மேன்மையாய் உயிர்த்தெழ வாதிக்கப்பட்டுமே
மகிமையின் ரூபமதை அடைந்திடுவோம் - இக்கால

5. தேவனின் சித்தமே செய்திட நிறைவாய்
ஜீவனை ஊற்றியே சேவித்திடவே
சீர் மணவாளியாய் இயேசுவோடென்றும்
சீயோனும் சாலேமுமாய் ஜொலித்திடுவோம் - இக்கால

# Tamil Hymn No 508

## GOD DWELLS IN ZION

சரணங்கள்

1. சீயோனில் வசிக்கும் உன்னதனே
துதி உந்தன் புகலிடமே
சீயோனின் வாசல் உம் வாஞ்சையதே
துதி என்றும் செய்திடுவேன்

பல்லவி

நொறுங்கி நருங்கும் உள்ளத்தை தள்ளீரே
உகந்ததாம் பலியதுவே
நொறுங்கி நருங்கி வந்திடும் என்னையும்
ஆற்றியே தேற்றிடுவீர்

2. மோசேயின் கூடார மறைவினில்
மகிமையாய் வந்தவரே
மகிமையாய் என்னிலும் வந்நிடுமே
மறுரூபமாக்கிடவே - நொறுங்கி

3. துன்பத்துக்கீடாய் என் மீந்த நாட்கள்
இன்பமாய் மாற்றிடுமே
ஜீவிய நாளெல்லாம் மகிழ்ந்திடவே
கிருபையாம் நிறைத்திடுமே - நொறுங்கி

4. சிலுவையின் உன்னத மறைவினிலே
இனிய என் புகலிடமே
சோகத்தால் சோர்ந்திடும் வேளையிலும்
சிலுவை என் தஞ்சமதே - நொறுங்கி

5. சீயோனில் மகிமையும் காத்திடுதே
சீர்மிகும் சுத்தருக்காய்
சீக்கிரம் வந்தென்னைச் சேர்த்திடுமே
என்றென்றும் சேவிக்கவே - நொறுங்கி

# Tamil Hymn No 509

## JESUS MY LIGHT AND SALVATION

சரணங்கள்

1. நித்திய காலமாய் எந்தன் தேவனும் நீரே
நீடுழியாய் அடைக்கலமானவர் நீரே
உந்தன் மாறா கிருபையை நிதம் நினைந்தே
உள்ளம் கனிந்தும்மைத் துதிப்பேன்

பல்லவி

என் வெளிச்சமும் இரட்சிப்பும் நீரே
எந்தன் ஜீவனின் பெலனும் நீரே
இரக்கமும் கிருபையும் நிறைந்த என் இயேசுவே
இன்றும் என்றும்மைத் துதிப்பேன்

2. தேவனே என் இருள் யாவும் அகற்றிடவே
தேவரீர் என் விளக்கதை ஏற்றினீரன்றோ!
இரட்சண்யமாம் கேடகமும் எனக்களித்தே
காருண்யத்தால் உயர்த்தினீரே - என்

3. எண்ணெயால் என் சிரசையும் அபிஷேகித்தே
எந்தன் பாத்திரம் நிரம்பி வழியச் செய்தீர்
சத்துருவின் வல்லமைகள் முறிந்திடவே
பந்தியொன்றை ஆயத்தம் செய்தீர் - என்

4. பரிசுத்தனாக யானும் மாறிடவே
பரிவோடு அழைத்தீர் உம் சித்தப்படியே
பரிசுத்தமதையே பயத்துடன் யான்
நிறைவேற்ற தயை செய்குவீர் - என்

5. விழித்தெழும்புவோம் நாம் நித்திரை விட்டு
வேகம் நெருங்குதே நம் இரட்சிப்பும் இதோ
பரிசுத்தர் இயேசுவையே சந்தித்திடவே
பயபக்தியுடன் சேவிப்போம் - என்

# Tamil Hymn No 510

## JESUS MY STRNGTH AND LIFE

பல்லவி

என் இயேசுவே - என் ஜீவன் நீரல்லோ
என் இயேசுவே - என் பெலன் நீரல்லோ
சீயோனின் பாதையில் வெளிச்சம் நீரல்லோ
நேசர் உம்முகம் கண்டு என்றும் களிப்பேன்

சரணங்கள்

1. மரண இருளின் பள்ளத்தாக்கினிலே
மாண்டிடா என்னையும் தூக்கினீர் தயவாய்
ஜீவனின் பெலத்தால் நிறைத்தீரே இயேசுவே
நிதமே உம்முகம் கண்டு ஜீவிப்பேன் தேவா - என்

2. நீசன் என் குறைகள் யாவையும் மன்னித்தே
நேசர் உம் அன்பினை ஆவியால் அளித்தீர்
நித்திய ஜீவ வசனத்தின் பெலனை
நிதம் எனிக்கீந்தீர் சத்திய தேவா - என்

3. பாதையில் கால்கள் சறுக்கிடும் வேளை
தாங்கினீரே உம் கிருபையின் கரத்தால்
வியாதியால் தேகம் வாடியே போயினும்
ஆவியால் உயிர்ப்பித்தீர் என்னகம் தேவா - என்

4. காரிருள் போல சோதனை வரினும்
கர்த்தா உம் கிருபை சூழ்ந்ததே எனையும்
கால்களின் தீபமாய்ப் பாதையின் ஒளியாய்
மாறா உம் வாக்குகள் நிதமும் தோன்றிடுதே - என்

5. மங்கியே எரியும் கண்களைத் தீபமாய்
மாற்றிடும் தயவாய் என்னிலே நேசா
நீங்கிடா சூர்யனின் ஜீவனின் ஜோதியில்
சீயோனில் பிரகாசிப்பேன் யுகாயுகமாகவே - என்

# Tamil Hymn No 511

## BLESSINGS OF GOD'S LOVE

பல்லவி

அநாதி சிநேகத்தால் சிநேகித்தழைத்தே
அன்பின் காருண்யத்தால் இழுத்துக்கொண்டீர்
அன்புகூரும் உம்மாலே முற்றும் ஜெயங்கொள்ளவே
அளவில்லா உமதன்பை ஊற்றுவீர்

சரணங்கள்

1. பாவ உளைசேற்றிலே நோய்களினால்
பதறி அழுகையில் தூக்கியெடுத்தீர்
பட்சமாய் என்னையும் மன்னித்த பேரன்பிற்காய்
பரிசுத்தமாக ஜீவித்திடுவேன் - அநாதி

2. கோர பாடுகளையும் சகித்தோராய்
கொடூர மரணத்தை குருசில் ருசித்தீர்
கரையேயில்லாத கல்வாரியின் அன்பினை
கண்டு நான் அன்பிலே நடந்திடுவேன் - அநாதி

3. காற்றினாலே அலைபோல் அடிபட்டு
கலங்கி அலைந்ததாம் நீசனென்னையும்
அப்போஸ்தலரோடே சபைதனில் சேர்த்ததால்
அன்பினாழமதை உணர்ந்தறிவேன் - அநாதி

4. நித்தம் பகைக்கப்பட்டு தனிமையில்
நிந்தையால் தவிக்கையில் தேற்றியணைத்தீர்
நேசித்து என்னையென் நன்மைக்காய்ச் சிட்சிப்பதால்
நிதம் மகிழ்ந்தும்மில் நிலைத்திருப்பேன் - அநாதி

5. பாடுகளின் பாதையில் சோர்கையிலே
பறந்ததென்மேலுந்தன் நேசக்கொடியே
தேவ புத்திரராக வானில் உம்மைச் சந்திக்க
தேவ பெலத்தினால் நிறைந்திடுவேன் - அநாதி

# Tamil Hymn No 512

## REIGNING IN ZION

சரணங்கள்

1. சீயோனில் ஆளுகின்ற கர்த்தர் பெரியவர்
சேவித்து அவர் முகமே சுத்தர் காணுவார்
ஜீவிக்க இயேசுவைப் போலவே சாந்தமாக
ஜீவ தண்ணீர் ஊற்றினில் பருகி மகிழ்வோம்

பல்லவி

சீயோன் பர்வதம் மகா ராஜாவின் நகரம்
சர்வ பூமியின் மகிழ்ச்சி நம் சொந்தமே
சீரிலங்கி கிருபையால் இயேசுவோடென்றென்றும்
சீயோன் சிகரமதில் ஆட்சி செய்வோமே

2. கற்புள்ள மாசற்றோராய் முற்றும் ஜெயங்கொண்டு
சொற்படி ஆட்டுக்குட்டியின் பின்னே செல்பவர்
உற்றதோர் மெல்கிசேதேக்கின் முறைமையினாலே
பொற்பரன் எழில்மிகு சீயோனில் இருப்போம் - சீயோன்

3. தந்தையாய்த் தோளின்மீது நித்தம் சுமந்திடும்
மந்தைமேல் கவனம் வைத்து மேய்க்கும் தூயவர்
சிந்தையில் கிறிஸ்துவைப்போல் ஜீவனையே ஊற்றி
நிந்தைகளைச் சகித்தே மகிழ்ந்து செல்லுவோம் - சீயோன்

4. சீயோனைக் கட்டியே தமது மகிமையில்
சீக்கிரம் வெளிப்படுவார் சீயோன் ராஜனே
உத்தம ஸ்தானமும் கீர்த்தியும் அடைந்தோராய்
தத்தமாகப் பெற்ற நற்சேவையைத் தொடர்வோம் - சீயோன்

5. பூரண சற்குணராம் தூயப் பிதாவைப்போல்
பூரண பரிசுத்தராய் அன்பில் திகழ்ந்து
பலத்தின்மேல் பலம் அடைந்து சீயோனிலே நாம்
பூரணமாய் தேவ சித்தம் செய்து சேருவோம் - சீயோன்

# Tamil Hymn No 513

## THE LORD WHO DOETH GREAT THINGS

பல்லவி

பெரிய காரியம் செய்யும் தேவனே!
மண்ணாம் எனையும் நீர் நேசித்ததேனையா?
ஜெயத்தின் மேல் ஜெயமே எப்போதும் எனக்கு
ஜெயித்த இயேசு என்னோடிருப்பதினாலே

சரணங்கள்

1. யாவையும் எனக்காய் செய்து முடித்தீர்
யாருண்டு உம்மையல்லால் இயேசு நாயகா!
தாழ்வதில் ஏழை எனையும் நினைந்து
தள்ளிடாது சேர்த்ததுந்தன் கிருபையே! - பெரிய

2. என்னை இழுத்துக்கொள்ளும் ஓடி வருவேன் நான்
திராட்சரசத்திலும் உம் அன்பு இனியது
உந்தனின் நாமம் ஊற்றுண்ட தைலம்
உத்தமரே உம்மை நேசித்திடுவேன் - பெரிய

3. அக்கினியில் மலர்ந்த மலர் நானையா!
வெயிலாம் சோதனையில் வாடிடுவேனோ?
பாதாளம் போன்ற கொடிய அன்பினால்
பாதாளத்தின் வல்லமையை ஜெயிப்பேன் - பெரிய

4. என்னைப் பெலப்படுத்தும் கிறிஸ்துவினாலே
எல்லாம் செய்திட பெலன் உண்டு எனக்கு
சத்துரு சீறி வெள்ளம் போல் வந்தாலும்
சத்தியரே ஜெயக்கொடி ஏற்றுவீர் - பெரிய

5. தேவரீர் சகலமும் செய்ய வல்லவர்
செய்ய நீர் நினைத்தது தடைபடாது
வழுவாதெந்தனைக் காத்திடும் தயவால்
பழுதில்லாதுந்தன் முன் நிறுத்திடும் - பெரிய

# Tamil Hymn No 514

## MY REFUGE FOREVER

சரணங்கள்

1. என் தேவனே! என்றும் மாறிடா இரட்சணிய கன்மலையே!
   எளியோர்க்கு மறைவிடமானவரே!
   அளவில்லா கிருபையால் சூழ்ந்தெனையே
   அனுதினம் காத்ததினால் மகிழ்ந்தும்மைப் பாடிடுவேன்

பல்லவி

எந்தன் மீட்பரே! நல்ல மேய்ப்பரே!
என்றும் நல்லவர்! சர்வ வல்லவர்!
இன்றும் என்றும் மாறா இயேசுவே!
என்றும் என் தஞ்சம் நீரே

2. என் காலங்கள் உந்தன் கரமதில் இருப்பதால் அஞ்சிடேன் நான்
   எதிர்த்திடும் சத்துருவை வென்றிடுவேன்
   அதினதின் காலத்தில் சகலத்தையும்
   அருமையாய் செய்வதினால் நன்றியுடன் துதிப்பேன் - எந்தன்

3. புது பெலத்தினால் எந்தன் உள்ளத்தை நிறைத்தீர் உம் ஆவியினால்
   புதியதோர் சிருஷ்டியுமாக்கினீரே
   பூரண சுவிசேஷம் அளித்திட்டீரே
   பூரணனாய் உம்மிலே வளர்ந்தென்றும் நிலைத்திடுவேன் - எந்தன்

4. பெருவெள்ளம் போல் பல நிந்தைகள் பாடுகள் வந்தவேளை
   குருவே உம் கரமதில் தாங்கினீரே
   இகமதின் இன்னல்கள் இடர் யாவுமே
   அகமதை மாற்றியென்னை மகிமையில் சேர்த்திடுமே - எந்தன்

5. பரிசுத்தராய்த் தங்கள் ஜீவனை பலியாக தத்தம் செய்தோரை
   சேர்த்திட வருவீரே வான்மீதிலே
   தரிசிக்க பரிசுத்தனாய் உம்மையே
   தருவீர் உம் கிருபையையே ஒப்புவித்தேன் எனையே - எந்தன்

# Tamil Hymn No 515

## THE VISION OF THE CROSS

சரணங்கள்

1. சிலுவையின் கோரக் காட்சியைக் கண்டே
உருகுதே என் உள்ளம் உமதன்பினால்
கொல்கொதா மரணம் இயேசுவை எனது
கொடும் நெஞ்சை முற்றுமாய் மாற்றிடுதே

பல்லவி

என் ஆவி ஆத்துமா சரீரம் முற்றும்
பானபலியாய் படைக்கிறேன் நாதா
இன்னும் உம் சித்தம் செய்திட யானும்
சிலுவையில் மறைந்தும்மில் ஜீவிப்பேன் தேவா

2. உம் தேகமீதில் காயங்கள் ஏற்றீர்
என் பாவக்கறைகளை நீக்கிடவோ
உம் தேகம் உள்ளில் நொறுங்குண்டீர் முற்றும்
என் அக பாவங்கள் அழித்திடவோ - என் ஆவி

3. நேசரே எந்தன் பெலவீனம் ஏற்றீர்
என் நோயைக் குருசதில் சுமந்தீர் அல்லோ!
“நானே உன் பரிகாரி கர்த்தர்” என்றீரே
நல்லதோர் ஔஷதம் உம் இரத்தமே - என் ஆவி

4. சிலுவையின் இரத்தம் கல்லான எந்தன்
உள்ளத்தை மெழுகுபோல் மாற்றிடுதே
நல்லதோர் சேவை புரிந்திட யானும்
அர்ப்பணித்தேன் என்னை இயேசுமக்கே - என் ஆவி

5. என் ஜீவநாதா! ஜீவ நாளெல்லாம்
நன்மையும் கிருபையும் தொடர்ந்திடுமே
கர்த்தரின் வீட்டில் இரத்தத்தின் பெலனால்
கர்த்தாவே ஜீவனில் வாழ்ந்திடுவேன் - என் ஆவி

# Tamil Hymn No 516

## THE NAME OF JESUS

பல்லவி

இயேசுவின் நாமம் ஜெய நாமம்
நேசிக்க சிறந்ததோர் இன்ப நாமம்
சர்வத்தையும் ஜெயித்த உயர்ந்த நாமம்
சதாகாலம் ஜெயத்தோடே காக்கும் நாமம்

அனுபல்லவி

ஜெயம் ஜெயம் அல்லேலூயா
ஜெயம் ஜெயம் நமக்கே

சரணங்கள்

1. பாரங்கள் பாவங்களைப் போக்கும் நாமம்
பரிசுத்தமாகிடவும் கழுவும் நாமம்
சகல நோய்களையும் சிலுவையில் சுமந்த
சர்வாங்க சுகமதை தரும் நாமமே - இயேசுவின்

2. சாபமே நீங்கி ஆசீர்வாதம் பெறவே
சாத்தானின் கோட்டைகளையும் தகர்க்கும் நாமம்
சத்துருவின் சகல வல்லமையை ஜெயிக்க
சர்வாயுதவர்க்கம் தரித்திடுவோமே - இயேசுவின்

3. மண்ணதில் அதிசயம் காணச்செய்யும்
விண் புவியில் அதிகாரம் உடைய நாமம்
எல்லா முழங்கால்களும் முடங்கிடச் செய்திடும்
வல்லவரின் நாமமே அதிசயமே - இயேசுவின்

4. ஊற்றுண்ட தைலமவர் திவ்விய நாமமே
உத்தமரும் கன்னியரும் நேசிக்கும் நாமம்
ஊற்றிடும் தம் ஆவியால் ஜெயக்கொடி ஏற்றியே
உலகெங்கும் சாட்சியாய் மாற்றும் நாமமே - இயேசுவின்

5. கர்த்தரின் நாமமே பலத்த துருகம்
சுத்தர் ஓடி அதற்குள் சுகமாயிருப்பார்
ஜெபத்துடன் விழித்து இயேசுவையே கண்டிட
ஜெயங்கொண்ட ஆண்மகவாகிடுவோமே - இயேசுவின்

# Tamil Hymn No 517

## THE CREATOR OF THE HEAVEN AND EARTH

பல்லவி

வானமும் பூமியும் படைத்திட்ட தேவனே!
வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே
நீசனாம் எந்தனுள்ளில் வாசம் செய்திடவே
என்னிலே மேன்மை யாதொன்றுமில்லையே

சரணங்கள்

1. முட்செடி நடுவில் தோன்றிய உம் தயை
முட்செடியாம் என்னை அழியாக் காத்ததே
அக்கினி ஜுவாலையாய் மாற்றிடும் தேவா!
அற்புத சாட்சியாய் மாறுவேன் உமக்காய் - வானமும்

2. தாய் மறந்தாலும் மறந்திடேன் என்றீர்
தாயினும் மேலன்பு கொண்ட என் நேசரே!
வரைந்தீர் உம் உள்ளங்கையில் என்னையும்
மருவினில் சார்ந்திட போதும் நீர் எனக்கு - வானமும்

3. உலர்ந்து உயிரில்லா சிதறிய எலும்புகள்
உம் திரு வார்த்தையால் சேனையாய் மாறிற்றே
உலர்ந்த என்னிலும் உம் ஜீவன் ஊற்றியே
உயிர்ப்பித்து உந்தனின் சேனையாய் மாற்றுமே - வானமும்

4. சகலத்தையும் இதோ புதிதாக்கினேன் என்றீர்
சிருஷ்டிப்பின் வல்லமை கொண்ட என் நாதனே!
என்னையும் புதிதாக சிருஷ்டியும் இன்றே
சிருஷ்டிகரே! உம்மைப் போல யான் மாறவே - வானமும்

5. ஜெயிப்பவன் யாவையும் சுதந்தரிப்பான் என்றீர்
ஜெயித்தீர் சிலுவையில் சாத்தானை முற்றுமாய்
இயேசுவே! உம் ஜெயம் எந்தனின் சொந்தமே
ஜெயித்து வாழுவேன் யுகாயுகமாகவே - வானமும்

# Tamil Hymn No 518

## CHANGED IN THE TWINKLING OF AN EYE

சரணங்கள்

1. மேகமீதினில் இயேசு இராஜனே தோன்றிடுவார்
மாசில்லா பரிசுத்தரை சேர்த்திட வந்திடுவார்
கறை திரையற்ற நல் மணவாட்டியாய்
இணைந்திடுவோம் மணவாளனோடே

பல்லவி

விண்ணதின் சாயலைத் தரிப்போம்
கண்ணிமைப் பொழுதினிலே
முகமுகமாகவே கண்டவரை
யுகயுகமாய் சேவிப்போம்

2. இராக்காலமும் சென்று பகலும் சமீபமாகுதே
உணர்ந்தெழும்பிடுவோம் தீங்கு நாட்களும் நெருங்கிடுதே
இருளின் கிரியைகள் அகற்றியே நாம்
ஒளியின் ஆயுதங்கள் தரித்திடுவோம் - விண்ணதின்

3. விசுவாசமும் இதோ புவிதனில் குறைந்திடுதே
தேவ பக்தியும் அன்புமோ மாந்தரில் தணிந்திடுதே
மா பரிசுத்த விசுவாசத்தில்
தேவ அன்பில் என்றும் நிலைத்திருப்போம் - விண்ணதின்

4. பின்மாரியின் மழையினால் புதுபெலன் அடைவோம்
ஒளி வீசுவோம் சுடர்களாய் இருண்ட இவ்வுலகினிலே
ஆவியின் வரங்களால் நிறைந்தவராய்
ஆத்ம நேசருக்காய் காத்திருப்போம் - விண்ணதின்

5. சீயோன் சாலேமதின் வேலையே விரைவாய் முடித்தே
சீயோன் இராஜனவர் தம் மகிமையில் வெளிப்படுவார்
சிந்தையில் சுத்தராய் ஜீவித்தோராய்
சந்திக்க ஆயத்தமபகிடுவோம் - விண்ணதின்

# Tamil Hymn No 519

## HE IS THE ALPHA & THE OMEGA

பல்லவி அல்பா ஒமெகாவும் நீர் ஆதி அந்தமும் நீர்
அரும் பெரும் ஜோதியும் நீர்
சர்வ வல்லவர் நீர் சர்வ ஞானியும் நீர்
சந்ததமாய் உம்மைத் துதிப்பேன்

1. உம்மையே நம்பினோர்க் கெதிராய் வந்ததாம்
வல்லமைகள் அழித்தே
அதிசயமானவராய் செயல்தனில் வல்லவராய்
அதிசய கிருபையுமாய் ஜெயத்துடன் நடத்தினீரே - அல்பா

2. உலகும் மாம்சமும் மாயையின் இன்பமும்
சபைதனில் தோன்றிடுதே
பரிசுத்தமாகுதலை பயத்துடன் காத்துக்கொண்டு
ஆவியினால் நடக்க அன்பரே கிருபை செய்வீர் - அல்பா

3. “பலத்தால் பராக்கிரமத்தாலும் அல்ல – என்
ஆவியால் ஆகு” மென்றீர்
நிறைவான தேவனே நீர் குறையதை அகற்றிடுமே
உந்தனின் சாயலதை உருவாக்கிடும் என்னிலே - அல்பா

4. நெருக்கத்தின் நாளில் உம் கிருபையைப் புகழ
தஞ்சம் என் அடைக்கலம் நீர்
அதிசீக்கிரம் நீங்கிடும் இலேசான உபத்திரவம்
அளித்திடும் அதிகமான நித்திய கன மகிமையை - அல்பா

5. எமக்காய் விசேஷித்த நன்மையானதொன்றை
முன் நியமித்தீரன்றோ
மகிமையாய் இலங்கும் சீயோன் புது சாலேம் நகரமதில்
மகிபனாம் இயேசுவுடன் ஆளுவோம் என்றென்றுமாய் - அல்பா

# Tamil Hymn No 520

## PRAYER FOR THE ANOINTING

1. தேவ ஆவியே எம்மில் இறங்கிடுவீர்
எழுப்புதல் காலங்கள் நிறைவேறவே
வல்லமையால் நிரப்ப வரங்களால் நிறைக்க
பலத்துடன் வந்திடுவீர் தூய ஆவியே

பல்லவி அக்கினி அபிஷேகம் ஊற்றும் தேவா
அடிமையின் நுகம் முற்றும் முறியச் செய்வீர்
ஆரணர் இயேசு போல் யாமும் மாறிட
பூரணமாய் தேவ அன்பை உள்ளில் நிரப்பும்

2. தேவன்பு தணிந்திடும் காலமிதே
தேவன்பில்லாமலே ஜனம் மாறிடுதே
ஆதி அன்பு மலர அன்பால் சேவை செழிக்க
அன்பினாலே உள்ளங்களை நிரப்பிடுமே - அக்கினி

3. விசுவாசக் கிரியைகள் குறைந்திடுதே
விசுவாசமின்றி ஜனம் சோர்ந்திடுதே
விலையேறும் செயலை மகிமையாய் கண்டிட
விசுவாச ஆவி இன்று தந்திடுவீரே - அக்கினி

4. ஆவியின் சிந்தையதும் குறைந்திடுதே
லௌகீக துக்கங்களும் பெருகிடுதே
பரலோக சிந்தையை பாரினிலே தரிக்க
பரனாவியே எம்மை உயிர்ப்பித்திடும் - அக்கினி

5. ஆவி ஆத்துமா தேகம் சுத்திகரித்தே
மறுரூபமாகிட மகிழச் செய்வீர்
மணவாளன் இயேசுவை மகிமையில் சந்திக்க
மணவாட்டி எம்மையும் நீர் ஆயத்தம் செய்வீர் - அக்கினி

# Tamil Hymn No 521

## TRUSTING IN THEE

பல்லவி	தேவனே உம்மை நம்பினோர் மாண்டதில்லை
உம் வழிகள் ஆராய்ந்து முடியாதவை
உம் வார்த்தைகள் ஜீவனும் பெலனானவை

1. ஊழியம் செய்திடும் சொந்தக் குமாரனை
தந்தை தன் அன்பினால் கடாட்சிக்கும் வண்ணமே
என்னையும் நினைத்தீர் கருத்தாய் விசாரித்தீர்
ஐயனே ஏழையான் பாத்திரன் அல்லவே - தேவனே

2. பொய்யுரையாதவர் சத்திய தேவரீர்
வாக்குத்தத்தங்களை எனக்காயீந்ததால்
அடைக்கலமாக ஓடி வந்தேனே
நிறைவான ஆறுதல் என்னில் உண்டாகுதே - தேவனே

3. எல்லாவற்றையும் எல்லாவற்றாலும்
நிரப்பும் தேவனே நீரே என் வாஞ்சையே
கிறிஸ்துவின் நிறைவே வந்திடும்போது
குறைவானதெல்லாம் ஒழிந்தே போகுமே - தேவனே

4. வாழ்விலும் தாழ்விலும் மனரம்யமாகவே
சாட்சியாய் நின்றிட புதுப்பெலன் தாருமே
சுகந்தவாசனையாய் உகந்ததோர் பலியாய்
மனப்பூர்வமாக யான் தருகிறேன் என்னையே - தேவனே

5. கிறிஸ்து என் ஜீவன் மரணம் ஆதாயம்
ஜெயம் தரும் தேவனே என்றென்றும் ஸ்தோத்திரம்
மணவாளனே உம் முகம் காணும் நாளில்
ஆ என்ன இன்பமே மகா பேரின்பமே - தேவனே

# Tamil Hymn No 522

## COME TO THE CROSS

1. பாதகரின் பாவம் போக்கிடவோ
பாதகக் குருசைச் சுமந்தனரே
பாதகர் நம்மை பாவனராக்க
பாரக்குருசில் தொங்குகிறார்

பல்லவி
வருவாய் இந்நேரம் சிலுவையண்டை
தருவாய் உன்னிதயம் அவரிடமே
தருவார் உனக்குச் சமாதானமே

2. உன் மீறுதலுக்காய் நொறுக்கப்பட்டே
உன் பாவங்களுக்காய் காயப்பட்டார்
சமாதான சிட்சை தன் மீதில்கொண்டே
சமாதானகாரணர் தொங்குகிறார் - வருவாய்

3. முள்ளின் முடியும் சூடினோராய்
கள்ளரின் நடுவில் துடித்தவராய்
மடிந்திடும் உனக்கு மகுடமும் சூட
விடுவிப்பாரின்றி தொங்குகிறார் - வருவாய்

4. சிந்திய உதிரமும் உந்தனுக்கே
சிந்தனை செய்யாயோ இட்சணமே
சுந்தர மைந்தன் விரும்புவாரின்றி
அநதரமீதில் தொங்குகிறார் - வருவாய்

5. நித்தியமாய் உன்னைக் கொண்டிடவே
நித்திய ஜீவனும் தந்திடவே
தற்பரன் உனக்கு விடுத்திடும் அழைப்பை
தள்ளிடாதே இன்றே பெற்றிடுவாய் - வருவாய்

Tamil Hymn No 523

## AMAZING LOVE

பல்லவி
சாரோனின் ரோஜாவே பள்ளத்தாக்கின் லீலியே
உம் அன்பு எத்தனையோ ஆச்சரியம்
உம்மை மாத்திரம் நான் நேசித்திடுவேன் - அன்பே
உம்மையே நான் சேவித்திடுவேன்

1. தீமையை நன்மையாக மாற்றித்தந்தீரே
தீங்கொன்றும் அணுகாது அரணானீரே
கண்ணியில் வீழா கண்ணின் மணிபோல்
கண்ணை என்மேல் பதித்துக் காத்தீரே - சாரோனின்

2. நிந்தைகள் பழிகளும் சூழ்ந்திட்ட வேளை
நித்தமும் நெருக்கத்தால் தவித்த வேளை
"பயப்படாதே" எனறு நீர் தேற்றியே
பாசம் கொண்டு அணைத்தீரல்லவோ - சாரோனின்

3. கெர்ச்சிக்கும் சிங்கம்போல சாத்தான் வந்தாலும்
யூதா கோத்திர சிங்கம் என்னில் உள்ளதால்
போர்முனை நின்று போராடுவேன் நான்
ஜெயம் பெற்று உம்மை உயர்த்துவேன் - சாரோனின்

4. காண்டாமிருகத்தைப போல் பெலன் ஈயுமே
அதனைப் போல எந்தன் கொம்புயர்த்துவீர்
புது எண்ணெயால் அபிஷேகியும்
சத்துருக்கள் வெட்கம் அடைந்திட - சாரோனின்

5. நேசர் நீர் வரும் வேளை நெருங்கிடுதே
உம் பாதம் முத்தம் செய்து காத்திருப்பேனே
பரிசுத்தரே உம்மைப் போல் மாற்றியே
சேர்த்துக்கொள்ளும் உம்மோடு என்னையே - சாரோனின்

# Tamil Hymn No 524

## I WILL PRAISE THEE ALONE

1. நேற்றும் இன்றும் என்றும் மாறிடா இயேசுவே
நேத்திரம் போல் உந்தன் தயவால் காத்தீரே
“உலகின் முடிவு வரை இருப்பேன்
உங்களோ” டென்றுரைத்த வல்ல தேவனே
– உம்மையே துதித்திடுவேன்

பல்லவி
இயேசுவே நீரெந்தன் ஜீவ ஊற்றல்லவோ
நித்தம் நடத்தி தாகம் தீர்க்கும் கன்மலையே
உம் முகம் கண்டு நான் உம சாயல் அடைந்தே
உம்மையே என்றென்றும் சேவிப்பேனே

2. விசுவாச பாதையாம் பாலையாமதிலே
வந்ததாம் சோதனை வேதனை யாவுமே
தண்ணீர்த்தடாகமாய் மாற்றினீரன்றோ
தாங்கியே கரங்கொடுத்தணைத்தீரன்றோ
– கானக வழியதிலே - இயேசுவே

3. நல்ல சமாரியனாய் உற்ற சிநேகிதனாய்
நம் பெலவீனத்தில் பரிதவிப்பவர்
ஊற்றிடும் எண்ணெயும் திராட்சரசமும்
மாற்றிட அடிக்காயம் இரணமதயும்
– கீலேயாதின் தைலமாய் - இயேசுவே

4. நித்திய வாசியும் உன்னதரும் நீரே
சுத்தரும் மகத்துவமும் உள்ளவர் நீரே
பணிந்த ஆவியை உயிர்ப்பிக்கவும்
உடைந்த உள்ளமதைத் தேற்றிடவும்
– ஆவியால் அபிஷேகித்தீர் - இயேசுவே

5. சீயோன் மணவாளனே! சாலேமின் இராஜனே!
சீர் பலனைச் சேர்க்க சீக்கிரம் வருவீர்
நற்பலனாய் நானும் உம்மைச் சேர்ந்திட
அாப்பணித்தேன் என்னை உந்தன் சேவையில்
– நான் உந்தன் சொந்தம் என்றுமே - இயேசுவே

# Tamil Hymn No 525

## I WILL SEE THE FACE OF JESUS

பல்லவி

இயேசுவே உம் முகம் கண்டிடுவேன் - இனி
ஆசை வேறெனக்கில்லை இப்பூவிலே
நேசரே உம்முடன் மகிழ்ந்திடுவேன் - அன்று
மாசற்ற சுதந்திரம் நான் பெறுவேன்

1. சத்திய வசனத்தால் ஜெநிப்பித்தென்னை
புத்திரனாக்கினீர் அபிஷேகத்தால்
நித்திய கீர்த்தியை நான் பெறவே
உத்தம பாதையில் வழி நடத்தும் - இயேசுவே

2. கல்வாரி இரத்தம் என் ஔஷதமே
கர்த்தா உம் வார்த்தை என் ஜீவனல்லலோ
மரணத்தின் வல்லமையை அழித்தென்னிலே
அருளிய கிருபை தான் பெரிதல்லவோ - இயேசுவே

3. சோதனை வேதனை நிந்தைகளில்
சோர்ந்திடா உம் புதுபெலன் ஈந்தீரே
மற்றோர் ஒத்தாசையே அற்றுப்போயினும்
மாறா என் நேசரே துணையானீரே - இயேசுவே

4. தேவா உம் வழி யாவும் ஆச்சரியமே!
மாறா உம் வாக்குகள் சத்திமன்றோ!
உம் ஆலோசனை தந்து வழி நடத்தி
முடிவில் உம் மகிமையில் ஏற்றுக்கொள்வீர் - இயேசுவே

5. உன்னத தேவனின் உயர் மறைவில்
என்றென்றும் எந்தன் அடைக்கலமே
சர்வ வல்லவரின் நிழல் தனிலே
சரணமாய் யுகாயுகம் தங்கிடுவேன் - இயேசுவே

# Tamil Hymn No 526

## HIS NAME, A STRONG TOWER

1. என்றென்றும் வந்தடையும் கன்மலையும் இயேசுவே
எந்தனின் தாகம் தீர்க்கும் கன்மலையும் இயேசுவே
ஒளிமயமான எதிர்காலம் ஒன்றை நாடியே
உலகெல்லாம் அலைந்தலைந்து தேடியும் நான் காண்கிலேன்

பல்லவி கர்த்தரின் நாமமே பலமான துருகமே
நான் அங்கே ஓடியே சுகமாகத் தங்குவேன்
கர்த்தரின் செட்டையின்கீழ் அடைக்கலம் வந்ததால்
நிறைவான ஆறுதல் பலனும் அடைவேனே

2. கர்த்தரின் காருண்யம் அதெத்தனை பெரியதே
கர்த்தரின் சௌந்தரியம் அதெத்தனை பெரியதே
என் கண்கள் இராஜாவை மகிமையோடு காணுமே
தூரத்தில் உள்ள தேசமாம் சீயோனைக் காணுமே - கர்த்தரின்

3. உம்மிலே பெலனடையும் மாந்தர் பாக்கியவான்களே
உந்தனின் வீட்டில் வாசம் செய்வோர் பாக்கியவான்களே
அழுகையின் பள்ளத்தாக்கை நீரூற்றாக்கிக் கொள்ளுவார்
பெலத்தின் மேல் பெலனடைந்து சீயோன் வந்து சேருவார் - கர்த்தரின்

4. பகலின் வெயிலிலே எனக்கு நிழலானீரே
இரவின் இருளிலே என் வெளிச்சமாய் உதித்தீரே
தாழ்விலும் துயரத்திலும் என்னையும் நினைத்தீரே
உயர்விலும் உம்மைவிட்டு பிரிந்திடாமல் காத்தீரே - கர்த்தரின்

5. உந்தன் மறைவிடம் என் இளைப்பாறும் ஸ்தலம் அன்றோ
உந்தன் மறைவிடம் நான் உருவாகும் ஸ்தலம் அன்றோ
மணவாளனே நான் உந்தன் சாயலாக மாறுவேன்
மறுரூபமாகியே உம்மோடு வந்து சேருவேன் - கர்த்தரின்

Tamil Hymn No 527

## THE NAME OF JESUS

பல்லவி இயேசுவே உம் பாரெங்கும் அதிசயம்
இயேசுவே உம் வழிகள் மாந்தர்க்கு ஆச்சரியம்
இயேசுவின் இன்சத்தம் எந்தனின் இனிமையே
இயேசுவின் சமுகம் நித்திய பேரின்பம்

1. உம் ஜீவன் பலியாக்கி என் ஆத்துமாவை மீட்டீர்
உம் தழும்புகளால் குணமாக்கினீரே
எல்லா பயத்தினின்றும் விடுவித்தீரே
இயேசுவே உம் நாமத்தை என்றும் துதிப்பேன் - இயேசுவே

2. தேவரீர் இதுவரை என்னைக் கொண்டுவந்தீரே
தீயையும் தண்ணீரையும் கடந்துவந்தேன்
செழிப்பான ஸ்தலத்தில் கொண்டுவந்ததால்
செழிப்புள்ள நற்பலனை உமக்கென்றும் கொடுப்பேன் - இயேசுவே

3. கேட்கும் காதும் காணும் கண்ணும் உண்டாக்கினீரே
கேருபீன்கள் நடுவில் வசிப்பவரே
உந்தனின் இன்பசத்தம் என்றும் கேட்டு நான்
அன்பரின் இன்முகம் நித்தம் தரிசிப்பேன் - இயேசுவே

4. உலகராஜ்யம் ஒன்றொடொன்று தீங்கு செய்யுதே
பரலோகராஜ்யத்தின் சுதந்தரனானேன்
கிறிஸ்துவின் நல்ல போர்ச் சேவகனாய் என்றும்
கிறிஸ்துவின் நிமித்தம் தீங்கனுபவிப்பேன் - இயேசுவே

5. பரிசுத்தவான்களின் இராஜாய் வெளிப்படுவீர்
பிழை கறை திரை ஏதும் அற்றவராய்
பரிசுத்தம் மகிமை நிறைந்த சபையாகி
பரனேசுவோடெனறும் ஜீவனில் ஆள்வோம் - இயேசுவே

# Tamil Hymn No 528

## INFINITE GRACE

பல்லவி இயேசுவே உம் அளவில்லா கிருபை
என்னை நாள்தோறும் நடத்திடுதே

1. கிருபை பெற்றாயே நீ வாழ்க என்றுரைத்தீரே
நம்பி வந்தேன் உந்தன் கிருபையால் சூழ்ந்தீரே
மலைகள் விலகியே போய்விடினும்
மன்னவா! மாறாதே உம் கிருபை - இயேசுவே

2. யாக்கோபின் தேவனே! நீர் எந்தன் துணையே
யாருமில்லை உம்மைப்போல இவ்வுலகில்
நாச உலகம் என்னைத் தள்ளிட்டாலும்
நாதன் நீர் மாத்திரம் என் சந்தோஷம் - இயேசுவே

3. தேவரீர் எழும்புவீர் வல்லமையுடனே
சிதறியே ஓடுமே சத்துரு சேனைகள்
ஜெயம் ஜெயம் என்று ஆர்ப்பரித்து
ஜெயத்தின் நாதனைக் கொண்டாடுவேன் - இயேசுவே

4. நேசா! நீர் சகலமும் நன்மைக்காய் செய்குவீர்
சந்தோஷமாய் உந்தன் அடிகளைத் தொடருவேன்
விண்ணில் நீர் ஆயத்தம் செய்த மேன்மை
நாவினால் வர்ணிக்கக் கூடாதையா - இயேசுவே

5. பரனே! நான் என்று உம்மைக் கண்டு களிப்பேன்
பாரில் என் ஆசையும் சிந்தையும் அதுவே
பரலோகக் கானானை அடைந்து உந்தன்
பொன்முகம் காணுவேன் கிருபையினால் - இயேசுவே